==========
Language in India www.languageinindia.com **ISSN 1930-2940 Vol. 19:7 July 2019**
==========

A Historical Linguistic Study of Tamil Nouns

Prof. Rajendran Sankaravelayuthan
Amrita Vishwa Vidyapeetham, Coimbatore 641 112
rajushush@gmail.com

Dr. S. Tamilselvam
Lecturer, SRLC, CIIL, Mysore
tamilsrlc@gmail.com

==========

This monograph in Tamil investigates Tamil nouns on Historical Linguistic perspective. The monograph is organized into six chapters. They are briefly described below.

Chapter 1: Introduction

The introduction tells briefly about the aims and objectivities of the research work. Many researches have been undertaken to study the historical details of Tamil language. Tamil verbal bases have been studied from historical linguistic point of view by Rajendran. The present one aims to study nouns on historical perspective. This research does not study the historical development of nouns on the basis of demarcating the Tamil texts into old Tamil Texts, middle Tamil Texts and modern Tamil Texts. It simply studies the inflections and derivations of nouns in Sangam Tamil Texts and compares them with the present day Tamil pinpointing the difference between the two on historical linguistic perspective.

Chapter 2: The Earlier Studies on Tamil Nouns

There are many studies on Tamil nouns on historical perspective. They have been discussed here.

Nouns in Traditional Grammars

To start with the nouns in the Traditional grammar has to be discussed. This is done separately in the third chapter.

Dravidian Nouns

Shanmugarm (1971) studies nouns on comparative Dravidian perspective. He studies nouns under the headings gender-number, numbers, pronouns, inflectional increments, cases and

lexicon. The book gives an overall idea about nouns in Dravidian languages. He classifies nouns as follows:



Shanmugam reconstructs the gender-number suffixes of Dravidian languages based on principles of comparative linguistics.

He points out the following sixteen suffixes as denoting masculine gender in Tamil: *an, aan, ndan, njan, iyan, oon, anan, avan, ttan, kkan*. He mentions the following eleven suffixes as denoting feminine gender in Tamil: *aL, i, tti, cci, vi, mi, aaL, ooL, aatti, aaTTi, ani.* He lists twelve suffixes as indicating epicene plural: *ar, ir, var, nar, njar, avar, iyar, aar, oor, maar, anar, kaL, arkaL*

Under the heading 'numerals' Shanmugam reconstructs Dravidian numerals from one to ten. Next under the heading 'pronouns' he tries to reconstruct Dravidian Pronouns. He classifies pronouns into personal pronouns, indicative pronouns and interrogative pronouns. He talks about inflectional increment in Dravidian languages under the heading 'inflectional increment' (*caariyai* in Tamil). He lists *an, aRR, in, attu* as inflectional increments and discusses about their occurrence based on their function. He talks about 'cases' next. He analyses the case suffixes in Dravidian languages based on the principles of comparative linguistics. This is followed by a heading 'dictionary'. He divides this into two parts. In the first part, he discusses about nouns by classifying them as human nouns, animate nouns, inanimate nouns, numeral nouns, mass nouns, locative nouns, temporal nouns and abstract nouns. In the second part, he discusses about etymology of nouns.

Nouns in Tamil

Kamaleswaran (1974) studies nouns on historical perspective for his PhD work. He classifies the Tamil texts into Sangam texts, texts after Sangam period and discusses about the

nouns based on their formation. He divides nouns into inherent nouns and derived nouns. He classifies the inherent nouns into gender-number nouns, locative nouns and personal pronouns. He classifies the nouns derived from verbs into three types: 1) nouns derived by zero change, 2) nouns derived by internal change and 3) nouns derived by suffixation. The nouns derived without any suffixation and internal changes are considered as nouns derived by zero change. For example, the derivation of noun *aTi* 'beating' from the verb *aTi* 'beat' belongs to this category. The second category of nouns is derived by some change inside the verbs. For example, derivation of *ezuttu* 'letter' from the verb *ezutu* 'write' belongs to this category. The internal change may occur by the lengthening of vowel inside the verb (e.g. *keTu* 'become bad' > *keeTu* 'badness'), doubling the consonant inside the verb (e.g. *tiruTu* 'steal'> *tiruTTu* 'theft') and by change in the quality of consonant (e.g. *virumpu* 'like' > *viruppu* 'interest'. The internal change may be followed by the suffixation (*viruppu* + *am* > *viruppam* 'interest') The third category of nouns is derived from verbs by the addition of suffixes. For example, the formation of *ceyal*, *ceyti*, and *ceykai* from the verb *cey* by adding the suffixes *al*, *ti* and *kai* respectively belongs to the third category. He has classified the suffixes into different types based on the initial consonant of the suffixes: suffixes beginning with *k*, suffixes beginning with *c*, suffixes beginning with *t*, suffixes beginning with *p* and suffixes beginning with *n* and also suffixes beginning with vowels and other consonants. He explains the formation of nouns from verbs based on their conjugational category, syllabic pattern and on the terminal phonemes of the verbs. Next he discusses about the nouns marked for gender-number. He classifies the stems which take gender-number suffixes into 19 types and discusses about the suffixes added to them elaborately. Later he discusses about the historical details under 'historical notes'.

Nominal Composition

'Nominal Composition' by Vijayavenugopal (1979) is another research work worthy of being discussed here. He analyses nominal compounds using the transformational generative grammar approach which was current at that time. His analysis is influenced by the principles advocated by Botha (1968), Reibel (1963) and Fillmore (1968).

According to the theory the compound are formed from some deep structure. They are not formed just by juxtaposing nouns. For example, the compound *marappeTTi* 'wooden box' is not formed by mere juxtaposition of *maram* 'wood' and *peTTi* 'box'. They are combined based

on certain principles; *peTTimaram* does not give the meaing 'wooden box'. The compound is derived from some underlying structure which gives the relation between the nouns combined. For example, *kaaTTu yaanai* 'wild elephant' is derived from the underlying structure *yaanai kaaTTil vaazkiRatu* 'the elephant lives in forest'. The ambiguity found in the compounds can be explained if we take into consideration the underlying representations. For example, *tuNippai* 'cloth bag' can be interpreted in two ways: 'the bag made up of cloth' and 'the bag meant for keeping cloth'. Only the underlying representation can resolve this ambiguity.

According to Vijayavenugopal (1979), nominal compounds in Tamil are derived from their deep structure representations by transformation. For example the compound, *maNpommai* 'earthen-toy' is derived from the underlying sentence *oruvan pommaiyai maNNaal ceytaan* 'somebody made the toy in earth'. Accordingly he has classified the compounds into ten types out of which the 6th one is miscellaneous, 7th one consists of co-ordinate compounds, 8th one consists of figurative nominal compounds 9th one consists of idiomatic nominal compounds and 10th one consists of multinominal compounds. Here we are interested in his first six types of nominal compounds. As for as these compounds are concerned he takes the position that the constituents of a compound are related to each other by certain relations (which include case relations) established by an underlying verb. In the first class of nominal compounds, the second member is a subject and the first member is any one of the following: subject, ablative, instrument, purposive, locative, temporal, adverb, and verb. In the second class of nominal compounds, the second member is a cognate object and the first member is a subject or object or instrumental. In the third class of nominal compounds, the second member is subject and the first member is any one of the following: object, associative, dative, ablative, locative, temporal, adverb, cause and predicate. In the fourth class of nominal compounds, the second member is locative and the first member is subject or object. In the fifth class of nominal compounds, the second member is temporal and the first member is subject or object. The sixth class of nominal compounds contains the following subtypes: specific + generic, object + verb + (subject) *-i*, locative + verb + (subject) *-i* + verb and object + verb + (instrument) *-i*. The following table will exemplify his classification:

Sr. No	Class & Subclass	Compound (example)	Expansion of compound
1.1	Subject + Object	*kaakkak kuuTu* 'nest of crow'	*kaakkaa kuuTu kaTTiyatu* 'crow built nest'
1.2	Instrument + Object	*maN pommai* 'clay doll'	oruvan pommaiyai maNNaal ceytaan 'somebody made doll by clay'
1.3	Ablative + Object	*karumpuccaaRu* 'sugar-cane juice'	oruvan karumpiliruntu caaRRai eTukkiRaan 'someone extracts the juice from the sugar- cane'
1.4	Purposive + Object	*tuNippai* 'cloth bag'	*oruvan tuNivaittuk koLvataRkaaka piyai vaittirukkiRaan* 'someone is keeping a bag in order to keep cloth'
1.5	Locative + Object	*ndeRRiccuTTi* 'ornament (worn) on the fore-head'	*orutti ndeRRiyil cuTTi kaTTukiRaaL* 'someone (a woman) ties an ornament on the fore-head'
1.6	Temporal + Object	*matiya uNavu* 'noon meals'	*avarkaL matiyattil uNavaik koTukkiRaarkaL* 'they give meals in the noon'
1.7	Adverb + Object	*tappukkaNakku* 'wrong calculation'	*oruvan kaNakkut tappaakap pooTTaan/ceytaan* 'someone did the calculation/sum wrongly'
1.8	Verb (predicate) + Object	*kuTi taNNiir* 'drinking water'	*oruvan taNNiir kuTikkiRaan* 'someone drinks water'
2.1	Subject + Cognate object	*karaTip piTi* 'bear's hug'	*karaTi piTi piTittatu* 'the bear hugged'

2.2	Object + Cognate Object	*teeni vaLarttal* 'bee keeping'	*oruvan teeniyai vaLarkkiRaan* 'someone rears the bees'
2.3	Instrumental + Cognate Object	*uTal uzhaippu* 'physical labour'	*oruvan uTalaal uzhaikkiRaan* 'someone is working with (his) body'
3.1	Object + Subject	*paal maaTu* 'milk-cow'	*maaTu paal tarum* 'cow gives milk'
3.2	Sociative + Subject	*ndaaTTup paRRu* 'patriotism'	*paRRu ndaaTTooTu uNTu* 'there is love towards the country'
3.3	Dative + Subject	*teeL koTukku* 'sting of a scorpion'	*teeLukku koTukku uNTu* 'there is sting for the scorpion'
3.4	Ablative + Subject	*kuzhaayt taNNiir* 'tap water'	*taNNiir kuzhaayilirundtu varukiRatu* 'water comes from the tap'
3.5	Locative + Subject	*kaTal miin* 'sea fish'	*miin kaTalil vaazhkiRatu* 'fish lives in sea'
3.6	Temporal + Subject	*andti mandtaarai* 'a type of flower which blooms in the evening'	*mandtaarai andtiyil puukkum* '*mandtaarai* blooms in the evening'
3.7	Adverb + Subject	*teLi ndiir* 'clear water'	*ndiir teLivaaka irukkiRatu* 'the water is clear'
3.8	Cause + Subject	*paci mayakkam* 'fatigue due to hunger'	*paci eeRpTTataal mayakkam vandtatu* 'the fatigue came due to hunger'
3.9	Predicate + Subject	*aaTu catai* 'calf muscle'	*catai aaTum* 'muscle will move'
4.1	Subject + Locative	*paampu puRRu* 'serpent-hole'	*paampu puRRil tangkukiRatu* 'snake lives in hole'
4.2	Objective + Locative	*miTTaaykkaTai* 'sweetmeat shop'	*oruvan kaTaiyil miTTaay viRkiRaan* 'someone sells sweetmeat in shop'
5.1	Subject + Temporal	*mazhaikkaalam* 'rainy season'	*mazhai oru kuRippiTTa kaalattil peyyum* 'it will rain in a particular period'
5.2	Object + Temporal	*caappaaTTu ndeeram* 'lunch time'	*oruvan oru kuRippiTTa neerattil caappiTuvaan* 'someone will eat food at a particular time'
6.1	Specific +	*tamizhk kuTi*	*indta kuTi tamizh aakum* 'this clan is

	Generic	'Tamil clan'	Tamil'
6.2	Object + Verb + (Subject) –*i*	*uur cuRRi* 'wanderer'	*oruvan uuraic cuRRukiRaan* 'someone goes around the village'
6.3	Locative + Verb + (Subject) –i	*teru poRukki* 'rag picker'	*oruvan teruvil poRukku- kiRaan* 'someone picks up in the street'
6.4	Object + Verb + (Instrument) -i	*maN veTTi* 'spade'	*oruvan maNNai karuviyaal veTTinaan* 'someone cuts the earth with an instrument'

It is difficult to accept the deep structure representations posited by Vijavenugopal on the ground that there could be many sentential deep structures from which each compound can be derived and that some of them are very unnatural. Moreover the derivation from the sentential structures leaves open certain problems with regard to the deep-structure verbs, tense in verbs, gender of subject, etc. His positing of verb in past tense form for some compounds and in present tense or future tense form for some other compounds is questionable. Even the interpretation of an element as subject or object poses problem. For example, *veTTi* of *maN veTTi* can be interpreted as the subject as it can also be derived from the sentence *karuvi maNNai veTTum* 'the instrument cuts the earth'. Though we do not take up the transformational generative approach adopted by him as a whole, we can take into account certain insights given by him for our interpretive approach.

Morphology: Noun Morphology

'Morphology: Noun morphology' by Agastiyalingom (1984) lays linguistic foundation for noun morphology of Tamil. Noun morphology of Tamil elaborarted Agastiyalingom (1984) is discussed briefly below.

Classification of nouns

Nouns can be classified in different ways. Based on their formation, they can be classified as inherent nouns and derived nouns. Also nouns are classified traditionally into two types: arbitrary nouns and nouns based on some logic. Nouns can be classified based on how they function in language: personal nouns, pronouns, place nouns, concrete nouns, numeral nouns, common nouns, mass nouns, count nouns, plant names, kinship nouns, verbal nouns,

temporal nouns, abstract nouns, etc. Personal pronouns are classified into three: first person, second person and third person.

Nouns are distinguished as nouns marked for masculine gender, nouns marked for faminine gender, nouns marked for epicene plural. Agastiyalingom (1984) has listed the suffixes as suffixes marking masculine gender, suffixes marking faminine gender and suffixes marking epicene plural and tabulated them accordingly.

Word-formation in Modern Tamil with Special Reference to Administrative Terms

The PhD research work of Maraimalai entitled "Word-formation in Modern Tamil with special reference to administrative terms" need to be discussed here. Apart from introduction and conclusion he has ten chapters explaining the formation of administrative terms: word and word formation, thoughts on word formation, word formation through affixes, word formation through compounding, multi nominal compounds, compound words, other word formations, problems in word formation, standardization and word formation and language change.

A Reference Grammar of Classical Tamil

The research work entitled "A reference grammar of Classical Tamil" is another important work which needs to be elaborately discussed here. He bases his analysis and descriptions from Sangam texts. The book has ten sections. The second section and fourth sections are concerned with us. He has subdivided the section into ten as follows: Nouns, Pronouns, The Oblique Stem, Case Markers and Postpositions, The Particles, Adjectives and noun modifier, Numerals, Collective and Universals, Nominal Compounds and Adjectival Nouns and Appellative Nouns. In the fourth section, the subheadings relevant to our research are: past participial nouns, non-past participial nouns, negative participial nouns, verbal nouns, verbal nouns devoid of past tense, negative verbal nouns. All these sub sections are elaborately discussed quoting examples form Sangam Tamil texts. His data and analysis provides foundation to the present research work.

Word Formation in Tamil

The research work entitled "Word formation in Tamil" by Rajendran (2003, 2004) needs to be discussed elaborately here. His book (Rajendran 2004) contains ten chapters. The first chapter is on "Introduction". The second chapter is on "some basic notions". In this chapter, some basic notions on word formation are discussed. The third chapter is on "Standardization".

The fourth chapter is on "Productivity". The fifth chapter is on "Phonological Problems in Word formation". The sixth chapter is on "Syntactic and semantic problems in word formation". The seventh chapter is on "Parts of speech". The eighth chapter is on "Types of word formation in Tamil". The ninth chapter is on "Dimension of Word formation". The tenth chapter is on "Conclusion".

He discusses about formation of nouns form nouns, verbs and adjectives. He describes about formation of nouns by suffixes and prefixes. The formation of nouns from verbs has been divided into two:

1. Nominalization on non-tensed/non-negativized verb stems
2. Nominalization on tensed/negativized verb stems.

Nominalization on non-tensed/non-negativized verb stems is classified into four types:

1. Regular nominalization by suffixes *–al* and *–tal*
2. Irregular nominalization by suffixes *–am*, *pu*, *-vu* etc.
3. Irregular nominalization by phonological change
4. Nominalization without change of form

All the above mentioned types of nominalization are discussed elaborately in Rajendran (2003, 2004)

Nominalization on tensed/negativized verb stems is classified into three types:

1. Nominalization by *–atu*
2. Nominalization by *–mai*
3. Nominalization by third person gender-number markers

All the above mentioned types of nominalization are discussed elaborately in Rajendran (2003, 2004).

He has also discussed elaborately about the formation of compound nouns.

Compound words in Sangam literature

'Compound words in Sangam literature' by Lakshman (Lakshman 2009) is another important which need to be under review of literature. He has five chapters excluding introduction and conclusion. The first chapter is on 'Compound words in traditional grammar'. He classifies the traditional grammars into two and discusses about the compound words treated in those grammars. The second chapter is on "The structure of compound words and

classification". The third chapter is on "The structure and function of Compound words in Sangam literature". The fourth chapter is on "The expression of meaning in Compound words in Sangam literature". The fifth chapter is on "Compound words in Sangam literature and understanding of meaning'.

Chapter 3: Tamil Nouns in Traditional Grammars

An elaborate study is made here on treatment of nouns in traditional grammars like tolkaappiyam, nanuul, etc.

Chapter 4: Descriptive Study of Tamil Nouns

The descriptive study of Tamil nouns is made here. The inflection of nouns by case suffixes have been discussed by explaining the sandhi changes.

Chapter 5: Historical Linguistic Study of Tamil Nouns

This is the major chapter of this monograph. The word formation strategies in Sangam Tamil have been elaborately discussed. The strategies adopted in Sangam Tamil are compared with Modem Tamil and the historical changes have been explored. This is followed by a discussion on morphophonemics. The morphophonemcis of Sangam Tamil is studied elaborately and compared with the morphophonemics of modern Tamil and the changes are noted down. This is followed by a discussion on nouns in general. The pronouns in Sangam Tamil are compared with modern Tamil and the historical changes have been discussed. The inflectional bases in Tamil is studied and compared with the inflectional bases in modern Tamil. This is followed by a discussion on changes between Sangam Tamil and modern Tamil with regard to singular and plural distinction. A discussion on case suffixes and postpositions follows this. A comparison is made between the case suffixes and postpositions used in Sangam Tamil and modern Tamil and the historical changes are noted down. Next is on compound noun formation. The compound noun formation in Sangam Tamil is compared with compound noun formation in modern Tamil on historical linguistics perspective. A discussion on formation of nouns from adjectives follows this. The formation of de-adjectival nouns in Sangam Tamil is compared with the formation of de-adjectival nouns in modern Tamil on historical linguistics perspective. This is followed by a discussion on the derivation of nouns from verbs in Sangam Tamil and modern Tamil on historical linguistics perspective. Distinction is made between the participial nouns and

verbal nouns. The formation of participial nouns and verbal nouns in Sangam Tamil and modern Tamil has been studied on historical linguistics perspective.

Chapter 6: Conclusion

The last chapter is conclusion. A brief discussion about the previous chapters is made here pointing out the salient features and findings of the present research work.

வரலாற்று மொழியியல் அடிப்படையில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் ஆய்வு

(A Historical Linguistic Study of Tamil Nouns)

Prof. Rajendran Sankaravelayuthan

பேரா. சங்கரவேலாயுதன் இராசேந்திரன்

Amrita Vishwa Vidyapeetham, Coimbatore

rajushush@gmail.com

Dr. S.Tamilselvam

முனைவர் செ.தமிழ்ச்செல்வம்

Lecturer, SRLC, CIIL, Mysore

tamilsrlc@gmail.com

கோயம்புத்தூர்

ஆகஸ்ட், 2019

என்னுரை

"வரலாற்று மொழியியல் அடிப்படையில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் ஆய்வு (A Historical Linguistic Study of Tamil Nouns)" என்ற ஆய்வு "தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு (A Historical Linguistic Analysis Of Tamil Verbal Bases)" என்ற ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். தமிழ்ப் பெயர்ச் சொற்களுக்கு ஒரு வரலாற்று மொழியியல் ஆய்வை மேற்கொள்வதுதான் இதன் முக்கிய நோக்கமாகும். இவ்வாய்வு தமிழ்த் தரவுகளைப் பழந்தமிழ்த் தரவு, இடைக்காலத் தமிழ்த் தரவு, தற்காலத் தமிழ்த் தரவு என்று காலவாரியாகப் பகுத்துக்கொண்டு வரலாற்று அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைத் தர முயலவில்லை. மாறாகச் சங்ககாலத் தமிழ்த் தரவைக் கொண்டு பெயர்ச் சொற்களின் திரிபையும் ஆக்கத்தையும் ஆய்ந்து பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பை அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழ்த் தரவு அடிப்படையில் பெறப்பட்ட பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்புடன் ஒப்பிட்டு மாற்றங்களையும் இழப்புகளையும் புதுமைகளையும் வெளிக்கொணரும் அடிப்படையில் தான் இவ்வாய்வேடு அமைந்துள்ளது. கமலேஸ்வரன் அவர்கள் “Nouns in Tamil” என்ற தமது முனைவர் பட்ட ஆய்வேட்டில் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் ஆக்கத்தை வரலாற்று மொழியியல் அடிப்படையில் விரிவாக விளக்குகின்றார். எனவே அவருடைய ஆய்வு இவ்வாய்வேட்டில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. ராஜம் அவர்களின் “A Reference Grammar of Classical Tamil Poetry” இவ்வாய்வுக்குப் பெரிதும் உதவியது.

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

சுருக்கச் சொற்களும் விரிவுகளும்

சங்க காலம்

சுருக்கம்	**விரிவு**
அக	அகநானூறு
ஐங்	ஐங்குறுநூறு
கலி	கலித்தொகை
குறி	குறிஞ்சிப்பாட்டு
குறு	குறுந்தொகை
சிறு	சிறுபாணாற்றுப் படை
நற்/நற்ற்	நற்றிணை
நெடு	நெடுநல்வாடை
பட்	பட்டினப்பாலை
பதிற்	பதிற்றுப்பத்து
பரி	பரிபாடல்
புற/புற்	புறநானூறு
பெரும்	பெரும்பாணாற்றுப்படை
பொரு	பொருநராற்றுப்படை
மது	மதுரைக்காஞ்சி
மலை	மலைபடுகடாம்
முல்	முல்லைப்பாட்டு

பின்சங்ககாலம்

அக.நி.	அகராதி நிகண்டு
அரு.நி.	அரும்பொருள் விளக்க நிகண்டு
அஷ்ட	அஷ்டபிரபந்தம்

ஆ.நி.	ஆசிரிய நிகண்டு
ஆசாக்	ஆசாரக்கோவை
ஆலவா	திருவாலவாய்ப் புராணம்
ஆனைக்	திருவானைக்காப்புராணம்
இன்.வை	இங்கிலீஷ்வைந்திய சங்கிரம்
இராமநா	இராமநாடகம்
இலக்.அக	இலக்கியச்சொல்லகராதி
இலக்.கொ	இலக்கணகொத்து
இலக்.வி	இலக்கண விளக்கணம்
இறை	இறையனார் அகப்பொருள்
இன்.நாற்	இன்னாநாற்பது
இனி.நாற்	இனியவை நாற்பது
ஈடு	ஈடு முப்பத்தாயிரப் படி
உரி.நி	உரிசொல் நிகண்டு
ஏலா	ஏலாதி
ஐந்.ஐ	ஐந்திணை ஐம்பது
ஒழிவி	ஒழிவில் ஒடுக்கம்
கந்த	கந்தபுராணம்
கம்ப	கம்பராமாயணம்
கரு.அக	கருப்பொருள் அகராதி
கல்லா	கல்லாடம்
கலிங்	கலிங்கத்துப்பரணி

காஞ்சிப்பு	காஞ்சிப்புராணம்
குற்றா.தல	குற்றாலத் தல புராணம்
குறள்	திருக்குறள்
கூர்மபு	கூர்மபுராணம்
கைவல்	கைவல்ய நவநீதம்
கோ	திருக்கோவையார்
கோயிலொ	கோயில் ஒழுகு
கோயிற்பு	கோயிற் புராணம்
சங்.அக	சங்கத்தகராதி
சது	சதுரகராதி
சம்.அக	சம்பிராதாய அகராதி
சி.சி	சிவஞான சித்தியார்
சி.போ	சிவஞானபோதம்
சிந்தா.நி	சிந்தாமணிநிகண்டு
சில	சிலப்பதிகாரம்
சிவதரு	சிவதருமோத்திரம்
சிறுபஞ்ச	சிறுபஞ்சமூலம்
சீவ	சீவகசிந்தாமணி
சூளா	சூளாமணி
சேது.பு	சேதுபுராணம்
ஞானா	ஞானாமித்ரம்
தக்கயாக	தக்கயாகப்பரணி
தஞ்சைவாண்	தஞ்சைவாணன்கோவை

தண்டி	தண்டியலங்காரம்
தணிகை.பு	தணிகப்புராணம்
தமிழ்விடு	தமிழ்விடு தூது
தனிப்பா	தனிப்பாடல்
தாயு	தாயுமானசுவாமிகள்
திணை.நூற்	திணைமாலை நூற்றைம்பது
திரி	திரிகடுகம்
திவ்.இயற்	திவ்வியப் பிரபந்தம், இயற்பா
அலவா	திருவாலவாயுடையார்
திவா	திவாரகம்
தேவா	தேவாரம்
தொல்	தொல்காப்பியம்
தொன்வி	தொன்னூல்விளக்கம்
நந்தி	நந்திகலம்பகம்
நம்பி	நம்பியகப்பொருள்
நள	நளவெண்பா
நன்	நன்னூல்
நன்.விரு	நன்னூல்விருத்தி
நாம	நாமதீப நிகண்டு
நானார்த்த	நாநார்த்த தீபிகை
நாமதீப	நாமதீப நிகண்டு
நாலடி	நாலடியார்
நான்மணி	நான்மணிக்கடிகை
நீல	நீலகேசி

நீல	நீலகேசி
நேமி	நேமிநாதம்
பணவிடு	பணவிடுதூது
பதினொ	பதினொன்றாந்திருமுறை
பரத	பரத சாஸ்திரம்
பரி.அக	பரிபாஷை அகராதி
பழ	பழமொழி
பழ.அக	பழமொழி அகராதி
பாரத்	மகாபாரதம்
பிங்	பிங்கலநிகண்டு
பு.வெ	புறப்பொருள் வெண்பா
புக	திருப்புகழ்
பெரிய	பெரியபுராணம்
பெரியதி	பெரியதிருமொழி
பெருங்	பெருங்கதை
பெருந்த்	பெருந்தொகை
பொதி.நி	பொதிகை நிகண்டு
மணி	மணிமேகலை
மந்த்	திருமந்திரம்
மலை.அக	வைத்திய மலையகராதி
மறைசை	மறைசையந்தாதி
மலைவ்யா	திருமாமலை, வியாக்கியானம்
மாறனா	மாறனலங்காரம்

முக்கூடர்	முக்கூடர் பள்ளு
முத்தொள்	முத்தொள்ளாயிரம்
முது.காஞ்	முதுமொழிக்காஞ்சி
மூ.அ.	மூலிகை அகராதி
யாப்	யாப்பருங்கலம்
யாப்.வி	யாப்பருங்கலவிருத்தி
யாழ்.அக	யாழ்ப்பாணத்து மாணிப்பய் அகராதி
வாச	திருவாசகம்
வாய்	திருவாய்மொழி
வால	திருவாலவாய்ப்புராணம்
விளை	திருவிளையாடற்புராணம்
வினாயகபு/ வி.பு	வினாயகப்புராணம்
விறாலி	விறாலிவிடு தூது
விரசொ	வீரசோழியம்
வை.மூ	வைத்திய மூலிகை அகராதி

பிற

சுருக்கம்	**விரிவு**
கொவ	கொச்சை வழக்கு
கோகி	கோயம்பத்தூர் கிளைமொழி
செகி	சென்னைக் கிளைமொழி
தவ	தற்கால வழக்கு

பகி	பரவர் கிளைமொழி
பறைகி	பறையர்கிளைமொழி
பாகி	பாண்டிச்சேரி கிளைமொழி
புகி	புதுக்கோட்டை கிளைமொழி
பேவ	பேச்சுவழக்கு
தகி	தஞ்சைகிளைமொழி
திகி	திருநெல்வேலி கிளைமொழி
தெக	தென்னிந்தியக் கல்வெட்டு
தெகி	தென்னார்க்காடு கிளைமொழி
நாகி	நாஞ்சில் நாடு கிளைமொழி
வகி	வட ஆர்க்காடு கிளைமொழி
வவ	வட்டார வழக்கு
விஅ	வின்ஸ்லொவின் விரிவான தமிழ்-ஆங்கில அகராதி
வைவ	வைஷ்ணவர் வழக்கு
ஜாகி	ஜாஃப்னா கிளைமொழி

பொருளடக்கம்

வ.எண்	**தலைப்புகளும் துணைத்தலைப்புகளும்**	பக்க எண்
1	இயல்1: அறிமுகம்	31
2	இயல் 2: தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள்	39
2.1.	அறிமுகம்	39
2.2.	மரபிலக்கணங்களில் பெயர்கள்	39
2.3.	திராவிடப்பெயர்கள்	39
2.3.1.	ஆண்பால் ஒருமைப் பின்னொட்டுகள்	40
2.3.2.	பெண்பால் ஒருமைப் பின்னொட்டுகள்	41
2.3.3.	உயர்பால் பன்மை பின்னொட்டுகள்	42
2.4.	தமிழில் பெயர்கள்	45
2.4.1.	பூஜியப் பின்னொட்டு	50
2.4.1.1.	முதல் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	50
2.4.1.2.	இரண்டாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	51
2.4.1.3.	மூன்றாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	52
2.4.1.4.	நான்காம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	53
2.4.1.4.1.	நான்காம் வினைத்திரிபு வகுப்பில் மட்டும் வரும் வினைகளின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	54
2.4.1.4.2.	நான்காம் மற்றும் பத்னொன்றாம் வினைத்திரிபு வகுப்பில் வரும் வினைகளின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	58
2.4.1.5.	ஐந்தாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	65

2.4.1.6.	ஆறாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	94
2.4.1.4.7.	ஏழாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	94
2.4.1.4.8	எட்டாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	95
2.4.1.4.9.	ஒன்பதாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	96
2.4.1.4.10.	பத்தாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	96
2.4.1.4.11.	பதினொன்றாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	97
2.4.1.4.12.	பன்னிரண்டாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்	103
2.4.2.	நீட்சி	104
2.4.3.	இரட்டித்தல்	108
2.4.4.	இனமாற்றம்	111
2.4.5.	க்-இல் தொடங்கும் பின்னொட்டுகள்	116
2.4.6.	ச்-இல் தொடங்கும் பின்னொட்டுகள்	117
2.4.7.	த்-இல் தொடங்கும் பின்னொட்டுகள்	119
2.4.8.	ப்-இல் தொடங்கும் பின்னொட்டுகள்	120
2.4.9.	வ்-இல் தொடங்கும் பின்னொட்டுகள்	122
2.4.10.	பிற உயிர்கள் மற்றும் மெய்களில் தொடங்கும் பின்னொட்டுகள்	123
2.4.11.	பால்-எண் பெயர்கள்	129
2.4.12.	வரலாற்றுக் குறிப்புகள்	153
2.5.	தமிழில் தொகைப் பெயராக்கம்	156

2.5.1.	கூட்டாக்கம்	160
2.5.2.	சிக்கல்கள்	161
2.5.3.	கூட்டுக்களைப் பாகுபாடு செய்தல்	165
2.6.	சொல்லியல்:பெயரியல்	170
2.6.1.	பெயர் வகைப்பாடு	171
2.6.2.	பதிலிடு பெயர்களின் வகைகள்	171
2.6.3.	எண்பால் பகுப்பு	174
2.6.4.	ஆண்பால் பெயர்கள்	175
2.6.5.	பெண்பால் பெயர்கள்	175
2.6.6.	பலர்பால் பெயர்கள்	177
2.6.7.	உயர்வு ஒருமைப் பெயர்கள்	178
2.7.	ஆட்சி சொல்லுக்குச் சிறப்புக் குறிப்புடன் தற்காலத் தமிழில் சொல்லாக்கம்	179
2.7.1.	ஒட்டுவழிச் சொல்லாக்கம்	180
2.7.1.1.	முன்னொட்டு வழிச் சொல்லாக்கம்	180
2.7.1.2.	பின்னொட்டு வழிச் சொல்லாக்கம்	182
2.7.2.	இருபெயர்த் தொகைச் சொல்லாக்கம்	192
2.7.2.1.	தொகைச் சொல்லின் உறுப்புச் சொற்கள்	193
2.7.2.2.	ஆக தொக்கி நிற்கும் தொகை	194
2.7.2.3.	வினைத்தொகை ஒரு பெயரே	195
2.7.2.4.	இருபெயரொட்டுப் பண்புத்தொகையின் காலத்திற்கேற்ற மாற்றம்	197
2.7.3.	பல்பெயர்த் தொகைச் சொல்லாக்கம்	198
2.7.3.1.	பல்பெயர் வேற்றுமைத் தொகை	199
2.7.3.2.	பல்பெயர் பண்புத்தொகை	202
2.7.3.3.	பல்பெயர் வினைத்தொகை	203
2.7.3.4.	பல்பெயர் உம்மைத் தொகை	205
2.7.4.	கூட்டுச் சொல்லாக்கம்	207
2.8.	செம்மொழித் தமிழில் நோக்கீட்டு இலக்கணம்	209
2.9.	தமிழில் சொல்லாக்கம்	212
2.10.	சங்க இலக்கியக் கூட்டுச்சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்)	218
2.11.	சுருக்க உரை	222

3.	இயல் 3:மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்சொற்கள்	224
3.1.	முன்னுரை	224
3.2.	பெயர்ச் சொல்	225
3.3.	உயர்திணைப் பெயர்கள்	227
3.4.	அஃறிணைப் பெயர்கள்	230
3.5.	அஃறிணை விரவுப்பெயர்கள்	231
3.6.	பெயர்ச்சொல் வகைப்பாடு	232
3.7.	தெரிநிலை வினையாலணையும் பெயர்கள்	235
3.8.	குறிப்பு வினையாலணையும் பெயர்கள்	236
3.9.	தொகைப் பெயர்கள்	236
3.9.1.	தொல்காப்பியரின் அணுகுமுறை	236
3.9.1.1.	வேற்றுமைத் தொகை	236
3.9.1.2.	உவமைத் தொகை	237
3.9.1.3.	வினைத் தொகை	237
3.9.1.4.	பண்புத்தொகை	237
3.9.1.5.	உம்மைத்தொகை	238
3.9.1.6.	அன்மொழித் தொகை	239
3.9.1.7	தொகைச் சொற்களில் பொருள் சிறக்குமிடம்	240
3.9.1.8.	தொகைச் சொற்கள் ஒரு சொல் தன்மைய	240
3.9.2.	தொல்காப்பிய உரையாசிரியர்களின் பார்வை	241
3.9.2.1.	இளம்பூரணர் பார்வை	241
3.9.2.2.	சேனாவரையர் பார்வை	245
3.9.2.3.	நச்சினார்க்கினியர் பார்வை	247
3.9.3.	தொகைகளின் பொருள் விளக்கம் குறித்த ஒட்டுமொத்தமான பார்வை	248
3.9.4.	நன்னூலின் அணுகுமுறை	253
3.10.	சுருக்கவுரை	257
4.	இயல் 4: தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வு	259
4.1.	முன்னுரை	259
4.2.	பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பு	259
4.2.1.	பெயரின் திரிபு	260

4.2.2.	பெயர்ப் பகுதி	262
4.2.3.	திரிபுப் பகுதி	263
4.2.3.1.	த்து என்ற திரிபு ஒட்டுடைய திரிப்புப் பகுதி	264
4.2.3.2.	அற்று என்ற திரிபு ஒட்டுடைய திரிபுப் பகுதி	264
4.2.3.3.	மெய்யொலிகள் இரட்டிப்பால் உருவாக்கப்படும் திரிபுப் பகுதி	265
4.2.3.4.	மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதி	267
4.2.3.5.	ஒலி நிரவல் சாரிகைகள் இன், அன்	269
4.2.4.	எண் குறியீடு	270
4.2.5.	வேற்றுமைக் குறியீடு	271
4.2.5.1.	வேற்றுமை அடுக்குகள்	280
4.2.5.2.	வேற்றுமை உருபுகளும் சந்தி விதிகளும்	282
4.3.	சுருக்கவுரை	294
5.	**இயல் 5:** தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வு	295
5.1.	முன்னுரை	295
5.2.	சொல்லாக்க நெறிமுறைகள்	295
5.2.1.	சங்கத்தமிழ் சொல்லாக்க நெறிமுறைகள்	295
5.2.1.1.	தனிப் பகுதியைப் பயன்படுத்தும் நெறிமுறை	296
5.2.1.2.	பகுதிப் பிறழ்வு நெறிமுறை	296
5.2.1.3.	பின்னொட்டாக்க நெறிமுறை	296
5.2.1.4.	நீட்சி நெறிமுறை	309
5.2.1.5.	சொற்புறமை நெறிமுறை	309
5.2.2.	சொல்லாக்க நெறிமுறையில் வரலாற்று மாற்றம்	310
5.2.2.1.	தனிப் பகுதியை பயன்படுத்தும் நெறிமுறையில் வரலாற்று மாற்றம்	310
5.2.2.2.	பகுதிபிறழ்வு நெறிமுறையில் வரலாற்று மாற்றம்	310
5.2.2.3.	பின்னொட்டாக்க நெறிமுறையில் வரலாற்று மாற்றம்	311
5.2.2.4.	நீட்சி நெறிமுறையில் வரலாற்று மாற்றம்	313
5.2.2.5.	சொற்புறமை நெறிமுறையில் வரலாற்று மாற்றம்	313
5.3.	உருபொலியனியல்	314

5.3.1.	சங்காலத் தமிழில் உருபொலியனியல்	314
5.3.1.1.	பகுதிகளின் பண்பு	315
5.3.1.2.	பகுதிப் பிறழ்வு	317
5.3.1.2.1.	முதல் அசையில் உயிர் நீட்சியடைதல்	317
5.3.1.2.2.	முதலசையில் உயிர் குறுகுதல் அல்லது மெய் குறைதல்	317
5.3.1.2. 3.	மெய்கள் இரட்டித்தல் அல்லது வல்லினமாதல்	318
5.3.1.2. 3.1.	பகுதி வல்லுறும் இடங்கள்	319
5.3.1.2. 2.	பகுதி வல்லுறும் நிகழ்வுகள்	320
5.3.1.3.	பகுதி மற்றும் ஒட்டுக்களைக் கடந்த மாற்றங்கள்	332
5.3.1.3.1.	பகுதி ஈற்று நெட்டுயிர் உயிர்த்தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது	323
5.3.1.3.2.	பகுதி ஈற்று நெட்டுயிர் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது	325
5.3.1.3.3.	பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) உயிர்த்தொடக்க வருமொழியால தொடரப்படும் போது	330
5.3.1.3.4.	பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது	337
5.3.1.3.5.	பகுதி ஈற்று குற்றுயிர் உ உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது	344
5.3.1.3.6.	பகுதி ஈற்று குற்றுயிர் உ மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது	354
5.3.1.3.7.	பகுதி ஈற்று மெய் உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது	360
5.3.1.3.8.	பகுதி ஈற்று மெய் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது	365
5.3.2.	உருபொலியனியலில் வரலாற்று மாற்றம்	380
5.3.2.1.	பகுதிப் பிறழ்வில் வரலாற்றுமாற்றம்	380
5.3.2.2.	பகுதிகளுக்கும் ஒட்டுக்களுக்குமிடையில் ஏற்படும் உருபனியல் மாற்றதின் வரலாறு மாற்றம்	382
5.4.	பெயர்	388
5.4.1.	சங்கத்தமிழில் பெயர்	388
5.4.2.	தற்காலத் தமிழில் பெயர்	389

5.4.3.	மாற்றுப் பெயர்	390
5.4.3.1.	சங்கத்தமிழில் மாற்றுப்பெயர்	390
5.4.3.1.1.	மூவிட மாற்றுப்பெயர்கள்	390
5.4.3.1.2.	சுட்டு மாற்றுபெயர்கள்	391
5.4.3.1.3.	வினா மாற்றுப்பெயர்கள்	392
5.4.3.1.4.	சுட்டு மற்றும் வினா மாற்றுவடிவங்கள்	394
5.4.3.1.5.	எண்ணு மாற்றுப்பெயர்	397
5.4.3.2.	மாற்றுப் பெயர்களின் வரலாற்றுமாற்றம்	400
5.4.3.2.1.	மூவிட மாற்றுப்பெயர்கள் வரலாற்று மாற்றம்	400
5.4.3.2. 2.	சுட்டு மாற்றுபெயர்களின் வரலாற்று மாற்றம்	401
5.4.3.2.3.	வினா மாற்றுப்பெயர்களின் வரலாற்று மாற்றம்	402
5.4.3.2.4.	சுட்டு மற்றும் வினா மாற்று வடிவங்களின் வரலாற்று மாற்றம்	403
5.4.3.2.5.	எண்ணு மாற்றுப்பெயர்களின் வரலாற்று மாற்றம்	404
5.4.4.	திரிபுப் பகுதி	406
5.4.4.1.	சங்காலத்தமிழில் திரிபுப் பகுதி	406
5.4.4.1.1.	ஆக்கம்	406
5.4.4.1.2.	மூவிட மாற்றுப் பெயர்களின் திரிபுற்ற பகுதிகள்	407
5.4.4.1.3.	மூவிட மாற்றுப் பெயரலாத பெயர்களின் திரிபுப் பகுதிகள்	410
5.4.4.2.	திரிபுப் பகுதியின் வரலாற்று மாற்றம்	413
5.4.4.2.1.	மூவிட மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதியில் வரலாற்று மாற்றம்	413
5.4.4.2.2.	மூவிட மாற்றுப் பெயரல்லாத திரிபுப் பகுதியில் வரலாற்று மாற்றம்	415
5.4.5.	ஒருமையும் பன்மையும்	416
5.4.5.1.	சங்ககாலத் தமிழில் ஒருமையும் பன்மையும்	416
5.4.5.1.1.	ஆக்கம்	416
5.4.5.1.2.	பன்மை ஆக்க நுட்பம்	417
5.4.5.1.3.	பன்மை ஒட்டுகள் இல்லாத பன்மைப் பெயர்கள்	422
5.4.5.2.	ஒருமைப் பன்மையின் வரலாற்று மாற்றம்	422
5.4.6.	வேற்றுமை உருகளும் பின்னுருபுகளும்	423
5.4.6.1 .	சங்கத்தமிழில் வேற்றுமை உருபுகளும் பின்னுருபுகளும்	423
5.4.6.1.1.	ஆக்கம்	425

5.4.6.1.2.	வேற்றுமை உருபு அடையாளப்படுத்தாத எடுத்துக்காட்டுகள்	425
5.4.6.1.3.	வேற்றுமை உருபுகளும் பின்னுருபுகளும்	426
5.4.6.1.4.	ஆக்கநுட்பம்	427
5.4.6.2.	வேற்றுமை மற்றும் பின்னுருபுகளின் வரலாற்று மாற்றம்	498
5.4.7.	கூட்டுப்பெயர்கள்	512
5.4.7.1.	சங்காலத்தமிழில் கூட்டுப் பெயர்கள்	512
5.4.7.1.1.	கூட்டுப்பெயராக்கம் ஆக்கம்	515
5.4.7.1.2.	கூட்டுப்பெயரின் பொருள்கோள்	517
5.4.7.2.	கூட்டுப்பெயர்களின் வரலாற்று மாற்றம்	518
5.4.8.	பெயரடைப் பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்கள்	520
5.4.8.1.	சங்ககாலத் தமிழில் பெயரடைப் பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்கள்	520
5.4.8.1.1.	பெயரடைப் பெயர்களின் ஆக்கம்	521
5.4.8.1.2.	பெயரடைப் பெயர்களுக்கான இட-எண்-பால் விகுதிகள்	522
5.4.8.1.3.	பெயரடைப் பெயர்களின் ஆக்க நுட்பங்கள்	522
5.4.8.2.	பெயரடைப் பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்களின் வரலாற்று மாற்றம்	540
5.4.9.	வினையாலணையும் பெயர்கள்	550
5.4.9.1.	சங்கத்தமிழில் வினையாலணையும் பெயர்கள்	551
5.4.9.1.1.	இறந்தகால வினையாலணையும் பெயர்கள்	551
5.4.9.1.1.1.	இறந்தகால வினையாலணையும் பெயராக்கதிற்கான இட-எண்-பால் விகுதிகள்	552
5.4.9.1.1.2.	இறந்தகால வினையாலணையும் பெயராக்கதிற்கான ஆக்க நுட்பம்	552
5.4.9.1.2.	இறந்தகாலமல்லா/முற்றல்லா வினையாலணையும் பெயர்	562
5.4.9.1.2.1.	இறந்தகாலமல்லா/முற்றால்லா வினையாலணையும் பெயர்களுடன் இணையும் இடம்-எண்-பால் பின்னொட்டுக்கள்	563
5.4.9.1.2.2.	இறந்தகாலமல்லா/முற்றல்லா வினையாலணையும் பெயர்களின் ஆக்க நுட்பம்	563

5.4.9.1.3.	எதிர்மறைவினையாலணையும் பெயர்	574
5.4.9.1.3.1.	எதிர்மறைவினையாலணையும் பெயர்களின் உருவாக்கம்	575
5.4.9.1.3.2.	எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கச் சேர்க்கப்படும் இட-எண்-பால் பினொட்டுக்கள்	575
5.4. 9.1.3.3.	ஆக்க நுட்பம்	576
5.4.9.2.	வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்	583
5.4.9.2.1.	இறந்தகால வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்	583
5.4.9.2.2.	இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்	592
5.4.9.2.3.	எதிர்மறை வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்	603
5.4.10.	தொழிற்பெயர்	609
5.4.10.1.	சங்ககாலத்தமிழில் தொழிற்பெயர்கள்	610
5.4.10.1.1.	இறந்தகாலத் தொழிற்பெயர்	610
5.4.10.1.1.1.	இறந்தகாலத் தொழிற்பெயர்களின் ஆக்கம்	610
5.4.10.1.1.2.	ஆக்கநுட்பம்	611
5.4.10.1.1.2.1.	வெற்று வினையைப் பயன்படுத்தி	611
5.4.10.1.1.2.2.	பகுதி பிறழ்வு	612
5.4.10.1.1.2.3.	பின்னொட்டாக்கம்	514
5.4.10.1.1.2.4.	நீட்சி	621
5.4.10.1.1.2.5.	சொற்புறமை (periphrasis)	622
5.4.10.1.2.	இறந்தகாலமல்லா தொழிற்பெயர்	623
5.4.10.1.2 1.	ஆக்கம்	623
5.4.10.1.2 2.	ஆக்க நுட்பம்	624
5.4.10.1.3,	எதிர்மறைத் தொழிற்பெயர்	625
5.4.10.1.3.1.	ஆக்கம்	625
5.4.10.1.3.2	ஆக்க நுட்பம்	625
5.4.10.2.	தொழிற் பெயர்களின் வரலாற்று மாற்றம்	625
5.4.10.2.1.	உடன்பாட்டு/இறந்தகாலத் தொழிற்பெயர்களின் வரலாற்று மாற்றம்	626
5.4.10.2.2.	இறந்தகாலமல்லாத் தொழிற்பெயர்களின் வரலாற்று	637

	மாற்றம்	
5.4.10.2.3.	எதிர்மறைத் தொழிற்பெயர்களின் வரலாற்று மாற்றம்	638
5.5.	சுருக்கவுரை	639
6	இயல் 6: முடிவுரை	641
	நோக்கீட்டு நூல்கள்	656
	சங்க இலக்கிய நூல்கள்	656
	பிற நோக்கீட்டு நூல்கள்	658

இயல் 1

அறிமுகம்

தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வுகளும் வரலாற்று மொழியியல் ஆய்வுகளும் பல கோணங்களில் பல வடிவுகளில் வெளிவந்துள்ளன. வரலாற்று அடிப்படையில் தமிழ்ப் பெயர்சொற்கள் ஆயப்பட்டிருந்தாலும் ஒரு முமையான வரலாற்று மொழியியல் ஆய்வு இதுவரை வெளிவரவில்லை. இத்தகைய ஆய்வு தமிழுக்குத் தேவை என்ற எண்ணமே தற்போதைய ஆய்வுக்கு ஊக்கமாக அமைந்தது. "வரலாற்று மொழியியல் அடிப்படையில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் ஆய்வு (A Historical Linguistic Study of Tamil Nouns)" என்ற ஆய்வு "தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு (A Historical Linguistic Analysis Of Tamil Verbal Bases)" என்ற ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். தமிழ்ப் பெயர்ச் சொற்களுக்கு ஒரு வரலாற்று மொழியியல் ஆய்வை முழுமையாகச் செய்வதுதான் இதன் முக்கிய நோக்கமாகும். இவ்வாய்வு தமிழ்த் தரவுகளைப் பழந்தமிழ் தரவு, இடைக்காலத் தமிழ் தரவு, தற்காலத் தமிழ் தரவு என்று காலவாரியாகப் பகுத்துக்கொண்டு வரலாற்று அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைத் தர முயலவில்லை. மாறாகச் சங்ககாலத் தமிழ்த் தரவை வைத்துக் கொண்டு பெயர்ச் சொற்களின் திரிபையும் ஆக்கத்தையும் ஆய்ந்து பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பை அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழ் தரவு அடிப்படையில் பெறப்பட்ட பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்புடன் ஒப்பிட்டு மாற்றங்களையும் இழப்புகளையும் புதுமைகளையும் வெளிக்கொணரும் அடிப்படையில் தான் இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

பெயர்ச்சொல், வினைச்சொல் என்ற இருவகைச் சொற்களுக்கும் அடிப்படையாக இருப்பது வேர்ச்சொல் ஆகும் என்று வாதிடுவர். *மலர்* என்பது அடிச்சொல். இதுவே *மலர்கள்*, *மலரை*, *மலர்க்கு* என்று அமையும்போது பெயர்ச்சொல் ஆகின்றது என்றும் *மலரும்*, *மலர்ந்தது* என்று வரும்போது வினைச்சொல் ஆகின்றது என்று சுட்டிக்காட்டுவர். வடமொழியில் தாதுக்கள் என்று இவற்றை அழைப்பர். வேர்ச்சொற் கோட்பாடு எந்த அளவுக்குச் சரியானது என்பது இங்கு ஆயப்படவில்லை.

மேலும் தமிழ்ப் பெயர்ச்சொற்கள் குறித்த பின்வரும் கருதுகோள்கள் உள்ளன:

- தமிழ்ப் பெயர்ச் சொற்கள் அடிப்படையில் ஓரசைச் சொற்கள் ஆகும்.
- ஒன்றிற்கு மேற்பட்ட அசையுள்ள பெயர்ச் சொற்கள் யாவும் ஓரசைச் சொற்களில் இருந்து ஆக்க ஒட்டுகளால் ஆக்கப்பட்டவை ஆகும்.
- தமிழில் தற்போது பயன்படுத்தப்படும் பல பெயர்ச் சொற்கள் ஆக்கப்பட்ட சொற்களாகும்.
- பெயர்ச் சொற்களின் பொருண்மைகள் வரலாற்று அடிப்படையில் வடிவ மாற்றங்களையும் பொருண்மை மாற்றங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.
- பெயர்ச் சொற்களின் வடிவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவை மிகப் பெரிய அளவிலான மாற்றங்கள் அல்ல.
- பெயர்களுக்கும் வினைகளுக்கும் பொதுவான வேர்ச் சொற்களைக் குறிப்பிட இயலும்.

பெயர்கள் வேற்றுமைக்கும் எண்ணிற்கும் திரிபுறும். திரிபுற்ற ஒரு பெயர்ச்சொல் பெயர்ப்பகுதி, எண் மற்றும் வேற்றுமை என்ற மூன்று உருபன்களின் ஒலியனியல் உட்படுத்தம் ஆகும். இதைப் பின்வருமாறு வெளிப்படுத்தலாம்:

பெயர் (+ எண்) (+ வேற்றுமை)

ஒலியனியல் நிலையில் திரிபுற்ற பெயர் வடிவம் மேற்சொன்ன மூன்று உருபன்களையும் மெய்ப்படுத்தம் செய்யும் மூன்று உருபுகளை மட்டும் எப்பொழுதும் கொண்டிருப்பதில்லை. ஏனென்றால் பெயர்த் திரிபின் போது இலக்கண உருபன்களை மெய்ப்படுத்தம் செய்யும் எண் மற்றும் வேற்றுமைப் பின்னொட்டுகள் தவிர சொல் அல்லது இலக்கணச் செயல்பாடில்லாத சில ஒலியனியல் ஒட்டுக்களும் வரலாம். இவ்வொலியனியல் பின்னொட்டுகள் வெற்றுருபன்கள் (empty morpheme) எனப்படும். அதாவது அவை ஒரு உருபனை உருப்படுத்தம் செய்யாது. இலக்கண நூல்களில் இவ்வுருபனியல் பின்னொட்டுகள் சாரியைகள் (inflectional increments) எனப்படும். கட்டாய மற்றும் விருப்பு ஒலியனியல் பின்னொட்டுகள்/சாரியைகள் இவற்றுக்கிடையில் வேறுபாட்டைக் கருதலாம். நாம் கட்டாயத் திரிபு சாரியைகளைத் திரிபு (oblique) சாரியைகள் அல்லது திரிபு ஒட்டுகள் என்றும் கூறலாம். விருப்பு திரிபு சாரியைகளை ஒலி நிரவல் (euphonic) சாரியை அல்லது ஒலி நிரவல் பின்னொட்டுகள் என்றும் குறிப்பிடலாம்.

உள்ளுறை அமைப்பில் இரு இலக்கண உருபன்கள் (ஒன்று எண் ஆகவும் மற்றொன்று வேற்றுமையாகவும் வரும்) பெயர் உருபனுடன் வரும். ஒலியனியல் நிலையில் நான்கு வகையான உருபுகள் (பின்னொட்டுகள்) பெயர்ப் பகுதியுடன் சேர்ந்து வரும். அவை பின்வருவனவாகும்.

1. பன்மைப் பின்னொட்டு
2. திரிபு பின்னொட்டு (சாரியை)
3. ஒலிநிரவல் பின்னொட்டு (சாரியை)
4. வேற்றுமைப் பின்னொட்டு

பெயர் எண்ணுக்காகத் திரிபுறும்போது பன்மைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியில் சேர்க்கப்படும்.

பெயர்ப் பகுதி + பன்மைப் பின்னொட்டு

எ.கா.

வீடு- கள், எலி- கள்

பெயர் வேற்றுமைக்காகத் திரிபுறும்போது வேற்றுமைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியுடன் நேரிடையகவோ திரிபுப் பகுதியுடனோ சேர்க்கப்படும். பெயரின் திரிபுப் பகுதி பெயருடன் திரிபு ஒட்டைச் சேர்ப்பதனாலோ நிலை மொழியின் இறுதி மெய்யொலியை இரட்டுவதாலோ உருவாக்கப்படும். ஒலி நிரவல் சாரியை *இன்* (சில நேர்வுகளில் *அன்*) பெயர் அல்லது திரிபுப் பகுதிக்கும் வேற்றுமைப் பின்னொட்டுக்கும் இடையில் விருப்பாக வரும். இவ்வுருபன் அமைப்பொழுங்கைப் (morphotactics) பின்வருமாறு தரலாம்:

பெயர்ப்பகுதி / திரிபுப்பகுதி + (ஒலிநிரவல் சாரியை) + வேற்றுமைப் பின்னொட்டு

வீடு- கள்(-இன்)- ஐ > வீடுகளை/வீடுகளினை

கை-கள்(-இன்)- ஐ > கைகளை/கைகளினை

பெயர் அல்லது திரிபுப் பகுதியுடன் பன்மை, வேற்றுமை மற்றும் ஒலியன் ஒட்டுகளைச் சேர்க்கும்போது பல உருபொலியனியல் விதிகள் செயல்படும். எடுத்துக்காட்டாக இடைவெளியைத் (hiatus) தவிர்க்க *வ்* அல்லது *ய்* என்ற ஒலியன் வடிவு உடன்படுத்தியாகச் (glide) சொருகப்படும். இதைப்பற்றி இவ்வியலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பெயர்ப்பகுதி என்பது திரிபுப் பின்னொட்டுகள் சேர்க்கப்படாத பெயர் வடிவமாகும். இவ்வடிவில்தான் பெயர்கள் அகராதியில் பட்டியலிடப் பட்டுள்ளன. இவை எழுவாய் வடிவிலும் வரும். பெயர்ப்பகுதி தனியாகவோ கலப்பாகவோ வரலாம். பெயர்ப்பகுதி ஒரு பெயர் வேரைக் கொண்டிருக்கும் (எ.கா. *கல்*); ஒரு கலவைப் பெயர்ப்பகுதி ஒரு வேரையும் (எ.கா. ஒரு வினைப் பகுதியும்) ஒரு ஆக்க ஒட்டையும் (எ.கா. பெயராக்கப் பின்னொட்டு *ப்பு*) கொண்டிருக்கலாம்.

[பெ[வி படி] -ப்பு]

அல்லது அது ஒரு வேரையும் பால் பின்னொட்டையும் கொண்டிருக்கலாம்.

மாண-வ்-அன்>மாணவன்

மாண-வ்+இ > மாணவி

மாண-வ்-அர்> மாணவர்

தலை-வ்-அன்> தலைவன்

தலை-வ்-இ> தலைவி

தலை-வ்-அர் > தலைவர்

இதில் *-அன்* என்பது ஆண்பால் பின்னொட்டாகும். *-இ* என்பது பெண்பால் பின்னொட்டாகும். *-அர்* என்பது பலர்பால் (உயர்வுப் பன்மை) பின்னொட்டாகும். பல பெயர்ப்பகுதிகள் *அ* என்பதில் முடியும் வேரையும் பகுதியை உருவாக்கும் (stem forming) பின்னொட்டான *ம்* என்பதையும் கொண்டிருக்கும்.

மர-ம் > மரம்

பழ-ம் > பழம்

நில-ம்> நிலம்

திட்ட-ம்> திட்டம்

சில பெயர்கள் பெயர்ப்பகுதியுடன் திரிபுப்பகுதி (oblique stem) என்று அழைக்கப்படும் திரிபுப் பெயர் வடிவத்தையும் கொண்டிருக்கும். சில திரிபுப் பகுதியைக் கொண்டிருக்காது. திரிபுப்பகுதிக்கு நான்கு மடங்கு செயல்பாடும் சூழல் வருகையும் இருக்கும். மேற்சொன்ன எடுத்துக்காட்டில் காட்டியுள்ளது போல் முதலாவது, இப்பெயர் வடிவத்துடன் தான் வேற்றுமைப் பினொட்டுகள் சேர்க்கப்படுகின்றன; இரண்டாவது பெயரின் வடிவம்தான் பெயர் ஒரு அடையாகக் கிழமைச் செயல்பாட்டுடன் தலைமைப் பெயருக்கு முன்னால் வரும் வடிவமாகும்; மூன்றாவது இப்பெயர் வடிவம்தான் கூட்டுப்பெயர் கட்டுமானத்தில் முதல் பெயர்த் தனிமமாக வரும் வடிவமாகும். நான்காவது இப்பெயர் வடிவம்தான் பல பின்னுருபுகளுக்கு முன்வரும் வடிவமாகும். பெயர்கள் திரிபுப் பகுதியாக வருமா வராதா என்பதன் அடிப்படையிலும் திரிபு அடியாக வந்தால் அவற்றின் ஒலியனியல் வடிவம் அடிப்படியிலும் பெயர்களை நான்கு வகுப்புகளாக வேறுபடுத்திக் காட்டலாம்.

இவ்வாய்வு நூல் பின்வருமாறு ஆறு இயல்களாகப் பகுக்கப்பட்டுத் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய ஆய்வு விளக்கப்பட்டுள்ளது: 1. அறிமுகம், 2. தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள், 3. மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்ச்சொற்கள், 4. தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வு, 5. தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வு, 6. முடிவுரை.

முதல் இயல் அறிமுகமாகும். ‘‘தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள்” என்ற இரண்டாவது இயலில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய முக்கியமான முன்னோடியான ஆய்வுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இயல் "மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள்" என்பதாகும். இவ்வியலில் மரபிலக்கணங்கள் தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றி வெளிப்படுத்துகின்ற கருத்துகள் பற்றியும் அவைகளின் அணுமுறைகள் பற்றியும் பின்வரும் தலைப்புகளில் விளக்கப்படுள்ளது.

நான்காம் இயல் ''தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வு'' ஆகும். இவ்வியலில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றி இதுவரை வெளிவந்த ஆய்வுகள் பற்றிய சுருக்கம் தரப்படும். தமிழ்ச் சொற்களை உருபனியல் அடிப்படையிலும் தொடரியல் அடிப்படையிலும் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை என்ற முக்கியமான சொல் வகுப்புகளாகப் பகுப்பர். இவற்றில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளும் பன்மையை உணர்த்தும் ஒட்டும் ஏற்று வரும். மேலும் பெயர்கள் *ஆக, ஆய், ஆன* என்ற ஒட்டுக்களையும் ஏற்று வரும்.

ஐந்தாவது இயல் தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வாகும். இவ்வியல் தமிழ்த் தரவுகளைப் பழந்தமிழ் தரவு, இடைக்காலத் தமிழ் தரவு, தற்காலத் தமிழ் தரவு என்று காலவாரியாகப் பகுத்துக்கொண்டு வரலாற்று அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பெயர்ச்சொற்களில் ஏற்பட்ட மாற்றங்களைத் தர முற்படவில்லை. மாறாகச் சங்ககாலத் தமிழ்த் தரவை வைத்துக் கொண்டு பெயர்ச் சொற்களின் திரிபையும் ஆக்கத்தையும் ஆய்ந்து பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பை அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழ் தரவு அடிப்படையில் பெறப்பட்ட பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்புடன் ஒப்பிட்டு மாற்றங்களையும் இழப்புகளையும் புதுமைகளையும் விளக்குகின்றது.

ஆறாவது இயல் முடிவுரையாகும். இதில் இவ்வாய்வின் முடிவுகள் தொகுத்துத் தரப்படும்.

“வரலாற்று மொழியியல் அடிப்படையில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள் ஆய்வு” என்ற தலைப்பில் அமையும் இவ்வாய்வுக்கு முன்னோடியான ஆய்வுகள் என்று பல எண்ணிக்கையிலான கட்டுரைகளையும் நூல்களையும் குறிப்பிட இயலும். பெரும்பாலனவை நோக்கீட்டு நூல்களாகத் தரப்பட்டுள்ளன. மிக முக்கியமான நூல்களைப் பற்றி “தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள்” என்ற தலைப்பில் அமையும் இரண்டாம் இயலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெயர்ச்சொற்களை வரலாற்று மொழியியல் கோட்பாடுகள் அடிப்படையில் விளக்கும் இவ்வாய்வு தமிழ் வரலாற்று மொழியியல் விரிவான ஆய்வுக்குத் துணையாக அமையும். தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் அடிப்படையிலான முழுமையான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் இவ்வாய்வு ஒரு முன்னோடி ஆய்வாக அமையும்.

இயல் 2

தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள்

2.1. அறிமுகம்

தமிழில் பெயர்ச் சொற்கள் பற்றி மொழியியல் கோட்பாடு அடிப்படையிலான பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இவை பெயர்ச்சொற்களை மரபிலக்கணக் கோட்பாடுகள் அடிப்படையிலோ வருணனை மொழியியல் அடிப்படையிலோ வரலாற்று மொழியியல் அடிப்படையிலோ ஆகின்றன. இங்கு வருணனை மொழியியல் அடிப்படையிலும் வரலாற்று மொழியியல் அடிப்படையிலும் பெயர்ச்சொற்களை ஆயும் முக்கியமான ஆய்வுகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றைக் குறித்து ஒரு சுருக்கமான சீராய்வு விளக்கம் தரப்பட்டுள்ளது. இங்கு அவைகள் வெளியிட்ட காலம் அடிப்படையில் ஏறுமுகமாகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

2.2. மரபிலக்கணங்களில் பெயர்கள்

மரபிலக்கணங்களில் காணப்படும் பெயர்கள் பற்றிய விளகங்கள் மூன்றாவது இயலில் தெளிவாகக் கூறப்படுகின்றது. குறிப்பாகத் தொகையாக்கம் குறித்த மரபிலக்கணக்கள் மற்றும் உரையாசிரியரின் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

2.3. திராவிடப் பெயர்கள்

முன்னோடியான ஆய்வுகள் பற்றிக் கூறும் இவ்வியலில் சண்முகம் அவர்களின் (Shanmugam, 1971) திராவிடப் பெயர்கள் (Dravidian nouns) என்ற நூல் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். இவ்வாய்வு தமிழ்ப் பெயர்களைப் பிற திராவிடமொழிப் பெயர்களுடன் ஒப்பிடும் ஒரு ஆய்வாக அமைகின்றது. இந்நூலில் கூறப்படும் தமிழ்ப் பெயர் பற்றிய செய்திகள் தற்போதைய ஆய்வுக்குத் தேவையான பல செய்திகளைக் கொண்டுள்ளது.

இந்நூல் பால்-எண், எண்கள், மாற்றுப் பெயர்கள், சாரியை, வேற்றுமைகள், அகராதி என்ற தலைப்புகளில் திராவிட மொழிகளின் பெயர்களை ஆய்ந்து வரலாற்று மொழியியல் கருத்துக்களைத் தருகின்றது.

வகைபாடு என்ற தலைப்பில் சண்முகம் திராவிட மொழிகளில் பெயர்களின் வகைப்பாட்டை ஒப்புமை மொழியியல் அடிப்படையில் மறு உருவாக்கம் செய்யவும் விளக்கவும் செய்யும் போது தமிழ் மொழியில் பால்-எண் ஒழுங்குமுறையின் படிநிலை அமைப்புப் பின்வருமாறு வகைப்பாடு அமைவதாகக் குறிப்பிடுகின்றார்:



பால்-எண் என்ற தலைப்பில் சண்முகம் ஒப்புமை மொழியியல் அடிப்படையில் திராவிட மொழிகளின் பால்-எண் பின்னொட்டுக்களை மறு உருவாக்கம் செய்கிறார்.

2.3.1. ஆண்பால் ஒருமைப் பின்னொட்டுகள்

அன், ஆன், வன், நன், ஞன், இயன், ஓன், அனன், அவன், த்தன், க்கன் என்ற பதினொன்று பின்னொட்டுக்கள் தமிழில் ஆண்பாலைக் குறிப்பிடுவதாகக் குறிப்பிட்டுச் சங்க இலக்கியங்கியங்களிலிருந்து சான்றுகள் தருகின்றார்.

பின்னொட்டு	எடுத்துக்காட்டு	வருமிடம்
அன்	உழவ்-அன் >உழவன்	தொல்.1038, பத்.10.106

	மக்-அன் > மகன்	குற். 181.4
வன்	சிறு-வன் >சிறுவன்	தொல். 1025, குற். 45.4
	தலை-வன் > தலைவன்	பத்த்.10.569, நற்.300.9
நன்	விலை-நன் >விலைநன்	
	வினை-நன் > வினைநன்	புற.78.6, 137.13`
ஞன்	பகை-ஞன் > பகைஞன்	புற.180.7
	கிளை-ஞன் > கிளைஞன்	
இயன்	கம்ம்-இயன் >கம்மியன்	நற்ற்.94.4, பத்த்.6.521
ஓன்	கிழம்-ஓன் >கிழவோன்	தொல்.987, அக.356.13)
	அறம்-ஓன் > அறவோன்	சில.10.12
அனன்	பார்ப்ப்-அனன் > பார்ப்பனன்	தொல்.1021, நற்.321.4
அவன்	மன்ன்-அவன் > மன்னவன்	ஐங்.447, கல்.8.2
	தென்ன்-அவன் > தென்னவன்	அக.138.7
த்தன்	ஒரு-த்தன் > ஒத்தன்	கல்.60.9
க்கன்	சிறு-க்கன் > சிறுக்கன்	பெரி.திம்.1.4.2

2.3.2. பெண்பால் ஒருமைப் பின்னொட்டுகள்

அள், இ, த்தி, ச்சி, வி, மி, ஆள், ஓள், ஆத்தி, ஆட்டி, அனி என்ற பதினொன்று பின்னொட்டுக்கள் பெண்பாலைக் குறிப்பிடுவதாகக் குறிப்பிட்டுச் சங்க இலக்கியங்களிலிருந்து சான்றுகள் தருகின்றார்.

பின்னொட்டு	**எடுத்துக்காட்டு**	**வருமிடம்**
அள்	மக்-அள் >மகள்	தொல்.648, பத்.13.15
இ	தோழ்-இ > தோழி	தொல்.982, நற்ற்.46.4
	காதல்-இ >காதலி	ஐங்.71, குற்.120.2

த்தி	புலை-த்தி >புலைத்தி	குற்.330.1
	ஆய்-த்தி >ஆய்த்தி	கல்.108.9
ச்சி	ஆய்-ச்சி > ஆய்ச்சி	கல்.106.32, சில். 15.206
வி	மனை-வி >மனைவி	தொல்.1097.7
	துணை-வி > துணைவி	ஐங்.410
மி	சிறு-மி > சிறுமி	கல்.65.10, சில்.17.28.2
ஆள்	மாதர்-ஆள் >மாதராள்	சில்.17.38.2
	மடம்-ஆள் > மடவாள்	சில்.7.38.9
ஆட்டி	அரியல்-ஆட்டி >அரியலாட்டி	அக.245.9
	மூத்-ஆட்டி > மூதாட்டி	மண்.6.157
அனி	பாப்ப-அனி > பார்ப்பனி	சில்.30.69, மண்.13.5
ஐ	பரத்த்-ஐ > பரத்தை	அக.25.12
ஆத்தி	வண்ண்-ஆத்தி > வண்ணாத்தி	
	தட்ட்-ஆத்தி > தட்டாத்தி	

2.3.3. உயர்பால் பன்மை பின்னொட்டுகள்

அர், இர், வர், னர், ஞர், அவர், இயர், ஆர், ஓர், மார், அனர், கள் என்ற பின்னொட்டுக்கள் உயர்திணைப் பன்மையைக் குறிப்பிடுவதாகக் குறிப்பிட்டுச் சங்க இலக்கியங்களிலிருந்து சான்றுகள் தருகின்றார்.

பின்னொட்டு	எடுத்துக்காட்டு	வருமிடம்
அர்	பாண்-அர் > பாணர்	தொல்.1037, பத்.38.9

	ஆய்-அர் > ஆயர்	தொல்.967
இர்	கேள்-இர் > கேளிர்	புற்.42.17, பர்.20.87
	பெண்-இர் > பெண்டிர்	ஐ.13, பத்த்.5.11
வர்	தலை-வர் > தலைவர்	தொல்.985, அக. 245.7
	கள்-வர் > கள்வர்	தொல்.1202, குற்.127.6
னர்	வலை-நர்	குற்.117.6
	மகிழ்-நர்	
ஞர்	முனை-ஞர்	தொல்.1003
	அறி-ஞர்	பத்த்.6.481
அவர்	தென்-அவர் >தென்னவர்	புற்.380.5
	காதல்-அவர் > காதலவர்	அக.45.6, பற்.11.124
இயர்	கூவ்-இயர் >கூவியர்	பத்த்.4.377
	காழ்-இயர் > காழியர்	அக.45.82, சில்.5.24
ஆர்	பார்ப்ப்-ஆர்	தொல். 1453, புற். 34.3
	காரிகை-ய்-ஆர் > காரிகையார்	சில்.26.111
ஓர்	ஆடி-ய்-ஓர் > ஆடியோர்	தொல்.969
	வான் –ஓர் > வானோர்	தொல். 1453, புற். 34.3
மார்	ஐ-மார் > ஐமார்	புற்.342.5
	தோழி-மார் > தோழிமார்	அக.15.9
அனர்	பாப்ப்ப்-அனர் > பார்ப்பனர்	தொல்.1021
கள்	வாளி-கள் > வாளிகள்	பர்.9.54
	நோன்பி-கள் > நோன்பிகள்	சில்.10.124
அர்கள்	அரச்-அர்கள் > அரசர்கள்	கல்.253
பூரி-ய்-அர்கள்	பூரியர்கள்	திர்.919

“எண்கள்” என்ற தலைப்பில் சண்முகம் திராவிட மொழிகளின் எண்களைக் குறிப்பாக ஒன்று முதல் பத்துவரை உள்ள எண்களை ஒப்புமை மொழியியல் அடிப்படையில் மறு உருவாக்கம் செய்கிறார்.

அடுத்தபடியாக “மாற்றுபெயர்கள்” என்ற தலைப்பில் திராவிட மொழிகளின் மாற்றுபெயர்களை ஒப்புமை மொழியியல் அடிப்படையில் மறு உருவாக்கம் செய்கிறார். இவர் மாற்றுப் பெயர்களை மூவிடப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள், ஏவல் பெயர்கள் என்று பகுக்கின்றார். இவர் ஒப்புமை மொழியியல் ஆய்வுக்காகத் தமிழ் மொழியில் குறிப்பிட்டுள்ள மாற்றுப் பெயர்கள் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

மூவிடம்	திரிபுறாப்பகுதி	திரிபுற்ற பகுதி
தன்மை ஒருமை	யான், நான்	என் (கிழமை) என (கொடை) என்ன் எற்கு (கொடை) என்ன் (செயப்படுபொருள்)
தன்மைப் உட்படுத்தாப் பன்மை	யாம், நாங்கள்	எம் எங்கள்
தன்மை உட்படுத்தும் பன்மை	நாம்	நம்
முன்னிலை ஒருமை	நீ	நிந் நிற்கு (கொடை) உன் நின்
முன்னிலைப் பன்மை	நீம், நீங்கள், நீயிர், நீவிர், நீர்	நும், உம், உங்கள், நுங்கள்
படர்க்கை ஒருமை	தான்	தன்
படர்க்கைப் பன்மை	தாம், தாங்கள்,	தம், தங்கள்

'சாரியை' என்ற தமது ஐந்தாவது தலைப்பில் சண்முகம் திராவிட மொழிகளிலுள்ள சாரியை பற்றி விளக்குகிறார். தமிழில் *அன், அற்ற், இன், அத்து* என்ற சாரியைகளை அவை வருமிடம் அவற்றின் செயல்பாடு என்பதின் அடிப்படையில் விளக்கம் தருகின்றார்.

"வேற்றுமைகள்" என்ற தமது ஆறாவது தலைப்பில் சண்முகம் அவர்கள் திராவிட மொழிகளில் வரும் வேற்றுமை உருபுகளை ஒப்புமை மொழியியல் அடிப்படையில் ஆய்கின்றார்.

ஏழாவதாக "அகராதி" என்ற தலைப்பில் இரண்டு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டுப் பெயர்சொற்களை ஆய்கின்றார். முதல் பகுதியில் பெயர்களை இயல்பான மனிதப் பெயர்கள், விலங்குப் பெயர்கள், விலங்கல்லாப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், திரள் பெயர்கள், இடப்பெயர்கள், காலப் பெயர்கள், அருவப்பெயர்கள் எனப் பகுத்துச் செய்திகளைத் தருகின்றார். இரண்டாவது பகுதியில் பெயர்களின் சொற்பிறப்பியல் பற்றி விளக்குகின்றார்.

2.4. தமிழில் பெயர்கள்

கமலேசுவரன் அவர்களின் (Kamaleswaran, 1974) தமிழில் பெயர்கள் (Nouns in Tamil) என்ற முனைவர் பட்ட ஆய்வேடு இவ்வாய்வேட்டிற்கு மிக முக்கிய நோக்கீட்டு நூலாகவும் தரவாகவும் அமைகின்றது. இவர் தமிழ்ப் பனுவல்களை அல்லது இலக்கியங்களைச் சங்ககால நூல்கள், சங்கம் மறுவிய கால நூல்கள் என்று பிரித்துக்கொண்டு அவற்றில் வரும் பெயர்களை அவற்றின் ஆக்கங்கள் அடிப்படையில் ஆய்கின்றார். சங்கத் தமிழ் காலத்தைச் சார்ந்ததாய் அவர் பின்வரும் நூல்களைப் பட்டியலிட்டுள்ளார்: அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு,

குறுந்தொகை, சிறுபாணாற்றுப் படை, நற்றிணை, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை, மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு. சங்கம் மறுவிய கால நூல்களாகப் பின்வருவனவற்றைப் பட்டியலிடுகின்றார்: அகராதி நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, குற்றாலத் தல புராணம், திருக்குறள், கூர்ம புராணம், கைவலய நவநீதம், திருக்கோவையார், கோயில் ஒழுகு, கோயிற் புராணம், சங்கத்தகராதி, சதுரகராதி, சம்பிரதாய அகராதி, சிவஞான செட்டியார், சிவஞான போதம், சிந்தாமணி நிகண்டு, சிலப்பதிகாரம், சிவதருமோதிரம், சிறுபஞ்சமூலம், சீவகசிந்தாமணி, சூளாமணி, சேதுபுராணம், ஞானமித்ரம், தக்கயாகப்பரணி, தஞ்சைவணன் கோவை, தணியலங்காரம், தணிகைப் புராணம், தமிழ் விடு தூது, தனிப்பாடல் திரட்டு, தாயுமான சுவாமிகள், திணைமாலை நூறைம்பது, திரிகடுகம், திவ்வியப் பிரபந்தம், திருவாலவாயுடையார், திருவிளையாடற் புராணம், சேந்தன் திவாகர நிகண்டு, தேவாரம், தொல்காப்பியம், தொல்காப்பியச் சொல்லதிகாரம், தொன்னூல் விளக்கம், நந்திகலம்பகம், நம்பியகப்பொருள், நளவெண்பா, நன்னூல், நன்னூல் விருத்தி, நாம தீப நிகண்டு, நாநார்த்த தீபிகை, நாமதீப நிகண்டு, நாலடியார், நான்மணிக்கடிகை, நீலகேசி, நேமிநாதம், பணவிடுதூது, பதிநோரான் திருமறை, பரத சாஸ்திரம், பரிபாஷை அகராதி, பழமொழி, பழமொழி அகராதி, மகாபாரதம், பிங்கலநிகண்டு, புறப்பொருள் வெண்பா மாலை, திருப்புகழ், பெரியபுராணம், பெரிய திருமொழி, பெருங்கதை, பெருந்தொகை, பொதி நிகண்டு, பொருட்நிகண்டு, மணிமேகலை, திருமந்திரம், வைத்திய மாலையகராதி, மறைச்சையநாதி, திருமாலை வியாகரணம், மாறனலங்காரம், முக்கூடற் பள்ளு,

முத்தொள்ளாயிரம், முதுமொழிக் காஞ்சி, மூலிகை அகராதி, யாப்பருங்கலம், யாப்பருங்கல விருத்தி, யாழ்ப்பாணத்து மாணிப்பய் அகராதி, திருவாசகம், திருவாய்மொழி, திருவாலவாய்ப்புராணம், விநாயகபுராணம், விறலி விடு தூது, வீரசோழியம், வைத்திய மூலிகை அகராதி. இவை மட்டுமன்றி கமலேஸ்வரன் பின்வரும் தமிழ் கிளை மொழிகளிலிருந்தும் தரவுகளைச் சேகரித்து ஆய்கின்றார்: கோயம்பத்துர் கிளைமொழி, ஜாஃப்னா கிளைமொழி, சென்னைக் கிளைமொழி, நாஞ்சில் நாடு கிளைமொழி, பரவர் கிளைமொழி, பறையர் கிளைமொழி, புதுக்கோட்டை கிளைமொழி, பாண்டிச்சேரி கிளைமொழி, தென் ஆர்க்காடு கிளைமொழி, திருநெல்வேலி கிளைமொழி, தஞ்சாவூர் கிளைமொழி, வைஷ்ணவர் வழக்காறு, கொச்சை வழக்காறு.

வினை ஆக்கப்பெயர்களின் அடிப்படையில் தன் ஆய்வேட்டினை பதினொன்று இயல்களாகப் பிரித்துக்கொண்டு செய்திகளைத் தருகின்றார்.

முதல் இயல் அறிமுகம். இதில் இவர் பெயர்களை இயல்புப் பெயர்கள், ஆக்கப்பெயர்கள் என்ற இரு முதன்மை வகைப்பாடுகளாகப் பிரிக்கின்றார். இயல்புப் பெயர்களை இயல்புப் பால்-எண் பெயர்கள், இடப்பெயர்கள், மூவிடப்பெயர்கள், என்று பிரிக்கிறார். *ஆ, இல், எழில்* என்பவைகள் ஆக்கப்படாதவைகள் ஆதலால் அவைகள் இயல்புப் பெயர்கள் ஆகும். இதுபோல ஆக்கப்பட்ட பெயர்களை பால் இல்லாத ஆக்கப்பட்ட பெயர்கள், ஆக்கப்பட்ட பால்-எண் பெயர்கள் எனப் பிரிக்கிறார். பெயர்களை எல்லா வகுப்புகளிலிருந்தும் ஆக்கலாம் என்கிறார். *ஆடல்* என்ற பெயர் வினையிலிருந்து ஆக்கப்பட்ட பெயர். *பெண்டு* என்பது *பெண்* என்ற இயல்புப் பெயரிலிருந்து ஆக்கப்பட்ட பெயர். ஆக்கப்பட்ட பெயர்களை ஆக்கப்பட்ட பால் இல்லாப்

பெயர்கள், ஆக்கப்பட்ட பால்-எண் பெயர்கள் என்று பிரிக்கின்றார். *பெண்*, *ஆண்* என்பன இயல்பான பால்-பெயர்கள் ஆகும். *மகன், மகள் அரசன்* என்பன ஆக்கப்பட்ட பால்-எண் பெயர்கள் ஆகும். *செய்தல்*, *செய்கை* என்பன ஆக்கப்பட்ட பால் இல்லாப் பெயர்கள். கால்டுவெல்லைப் பின்பற்றி வினையிலிருந்து ஆக்கப்பட்ட *செய்தல்* வகைப் பெயர்களை *செய்கை* வகைப் பெயர்களிலிருந்து பிரிக்கின்றார். செய்தல் வகைப் பெயர்களை வினைப் பெயர்கள் (verbal nouns) என்றும் *செய்கை* வகைப் பெயர்களை வினை ஆக்கப்பெயர்கள் (verbal derivatives) என்று பிரிக்கின்றார். இதற்குப் கீழே தந்துள்ள காரணங்களைச் சுட்டிக்காட்டுகின்றார்.

வினை ஆக்கப்பெயர்களைப் பெயரடைகளாலும் பெயரெச்சத் தொடர்களாலும் அடை செய்ய இயலும். ஆனால் வினப் பெயர்களை அடைகளால் அடை செய்ய இயலாது. எடுத்துக்காட்டாக *நல்ல உணவு* என்பது சாத்தியமான தொடராகும்; ஆனால் நல்ல உண்ணுதல் சாத்தியமான தொடர் அல்ல. செய்கை என்பதை செய்கைகள் எனப் பன்மை ஆக்கம் செய்யலாம்; ஆனால் வினைப் பெயர்களைப் பன்மை ஆக்கம் செய்ய இயலாது. எடுத்துக்காட்டாக, *செய்கைகள்* என்பது சாத்தியம்; ஆனால் *செய்தல்கள்* என்பது சாத்தியம் இல்லை. வினையாக்கப் பெயர்கள் பால்-எண் பின்னொட்டுகளை ஏற்க இயலும்; ஆனால் வினைப் பெயர்கள் பால்-எண் பின்னொட்டுகள் ஏற்காது. எடுத்துக்காட்டாக, *செய்கையாளன்* என்பன சாத்தியமானது; ஆனால் *செய்தலாளன்* என்பது சாத்தியமல்ல.

வினைப் பெயர்களின் ஆக்கம் எளிமையானது. *தல்* அல்லது *த்தல்* என்பதை வினைகளுடன் இணைத்து வினைப்பெயர்களைப் பெறலாம். *த்தல்* வன்மையான

வினைகளுடனும் *தல்* மெல் வினைகளுடனும் இணையும். இவை விளைவாக்கமுள்ள பெயராக்க ஒட்டுக்களாகும். எல்லா வினைகளும் *தல்/த்தல்* என்ற பெயராக்கப் பின்னொட்டுடன் இணைந்து வினைப் பெயர்களை உருவாக்கும்.

வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கங்கள் விளைவாக்கம் உள்ளவை அல்ல. *அல்*, *உள்*, *கை* போன்ற பின்னொட்டுகள் வினைப் பெயராக்கப் பின்னொட்டுக்களாகும்: எ.கா. *செயல், செய்யுள், செய்கை*. இவ்வொடுகள் எல்லா வினைகளுடனும் இணைந்து இத்தகையப் பெயராக்கங்களைச் செய்யும் என்று கூற இயலாது. அதாவது வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கம் விளைவாக்கம் உள்ளன அல்ல. வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கம் எளிமையானதல்ல. இதை மூன்றாக வகைப்பாடு செய்யலாம்:

(1) பூஜிய மாற்றம்: வினை ஆக்கப்பெயர்கள் வினையிலிருந்து அவற்றின் அக மாற்றத்தாலோ பின்னொட்டாலோ ஆக்கப்பெறாதாதது பூஜிய மாற்றமாகும். எடுத்துக்காட்டாக அடிஎன்ற வினையிலிருந்து அடி என்ற பெயரை ஆக்குவது பூஜியமாற்றமாகும்.

(2) அகமாற்றம்: வினை ஆக்கப்பெயர்கள் வினையிலிருந்து அகமாற்றத்தால் (ஒலியனியல் மாற்றத்தால்) விளைவது அகமாற்றமாகும். எ.கா. *எழுத்து* (<*எழுது*) *விரும்பு* (<*விரும்பு*), *பாடு* (<*படு*).

(3) பின்னொட்டாக்கம்: *அல், தி, கை* போன்ற பல பின்னொட்டுளை வினையுடன் இணைத்து பெயர்களை ஆக்குவது பின்னொட்டாக்கம் ஆகும். எ.கா.*செயல்* (<*செய்+அல்*), *செய்தி* (*செய்+தி*), *செய்கை* (*செய்+கை*).

கமலேஸ்வரன் வினைகளிலிருந்து பெயராக்கத்தை விளக்குவதற்கு வேண்டி வினைகளைத் தமிழ் லெக்சிகனைப் பின்பற்றி பதிமூன்று வினைத்திரிபு வகுப்புகளாகப் பிரித்து ஆக்க விளக்கங்களைத் தருகின்றார். மட்டுமன்றி வினைகளின் அசை அமைப்புகளை வகைப்படுத்தியும் வினைகள் இறுதியுறும் ஒலியன்கள் அடிப்படையிலும் வினகளிலிருந்து பெயராக்கத்தை விளக்குகின்றார். வினைகளைச் சங்ககாலத்தைச் சார்ந்தவை பிற்சங்ககாலத்தைச் சார்ந்தவை என்று பிரித்து வரலாற்று மொழியியல் விளக்கம் தருகின்றார்.

2.4.1. பூஜியப் பின்னொட்டு

முதலாவது இயல் பூஜியப் பின்னொடாகும். கமலேஸ்வரன் தமிழ் லெக்சிகனை அடிப்படையாகக் கொண்டு வினைகளைப் பன்னிரண்டு வினைத்திரிபு வகுப்புகளாகப் பிரித்து அதன் அடிப்படையில் வினையில் இருந்து ஆக்கப்படும் பூஜிய ஒட்டாக்கப் பெயர்களை ஆய்கின்றார். ஒவ்வொரு திரிபு வகுப்பில் வரும் வினைகளின் அசை அமைப்பை ஆய்ந்து அவற்றிலிருந்து ஆக்கப்படும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆகின்றார். அவர் பூஜிய ஒட்டாக்கப் பெயர்களின் ஆக்கதின் கட்டுப்பட்டிற்குக் காராணமாக வினைத்திரிபு வகுப்புக் கட்டுப்பாடு, ஒலியனியல் கட்டுப்பாடு, அசையமைப்புக் கட்டுப்பாடு என்பவனவற்றைக் குறிப்பிட்டு பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கங்களை விளக்குகின்றார்.

2.4.1.1. முதல் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

முதல் வினைத்திரிபு வகுப்பில் *ந்* என்பதை இறந்தகாலக் குறியீடாகவும் *வ்* என்பதை எதிர்காலக் குறியீடாகவும் ஏற்கும் பத்து வினைகள் அடங்கி உள்ளன. லெக்சிகன் நான்கு பெயர் வடிவங்கள் இவ்வகுப்பிலிருந்து ஆக்கபட்டதாகத் தந்துள்ளது. இதில் ஒன்று *செய்.* இந்த நான்கே வடிவங்களின் ஆய்வு முதலில் சங்ககாலத்தில் பூஜிய

ஒட்டு பெயராக்கத்திற்காகப் பயன்படுத்தவில்லை என்று காட்டுகின்றது. இது பிற்சங்ககாலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றமாகும். பிற்சங்ககாலத்தில் இவ்வகுப்பைச் சாரும் பின்வரும் மூன்று வினைகள் பூஜிய ஒட்டாக்கத்தால் பெயராக்கம் பெற்றுள்ளன.

பிற்சங்ககாலம்: *எய்* > *எய்* 'அம்பு' (விளை.); *உழு* > *உழு* 'உழவு' (மாலை. வியா); *பொரு*> பொரு 'ஒற்றுமை'

ஆக்கட்டுப்பாடு காரணமாக இவை ஒப்புமையாக்கத்தால் பிற்சங்ககாலத்தில் விளைந்ததாகக் கருத இயலும்.

2.4.1.2. இரண்டாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இவ்வினைகள் *-ள்* என்பதில் இறுதியுறும். இதில் வரும் வினைகள் *ந்த்* என்பதை இறந்தகாலக் குறியீடாகவும் *வ்* என்பதை எதிர்காலக் குறியீடாகவும் ஏற்கும். இவ்வினத்திரிபு வகுப்பு முப்பத்தி ஐந்து வினைகளைக் கொண்டது. பதிமூன்று பெயர்களே இவ்வினகளிருந்தும் ஆக்கப்பட்ட பெயர்கள் ஆகும். இதில் பத்து (C)VCVC அசை அமைப்பையும் மூன்று (C)VVC அமைப்பையும் கொண்டது.

ஐந்து வினைகள் CVC அமைப்பைச் சார்ந்தன. சங்ககாலத்திலோ பிற்சங்ககாலத்திலோ இவ்வினைகளிலிருந்து ஆக்கப்பட்ட பூஜிய ஒட்டுப் பெயர்கள் காணப்படவில்லை.

எழு வினைகள் (C)VVC அசைஅமைப்பைச் சார்ந்தன. இவ்வினைகளிலிருந்த்து *கீள்* 'வழங்கு' என்ற வினை மட்டும் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பெயரை ஆக்கும். தமிழ் லெக்சிகன் சங்ககாலம் இரண்டு பூஜியப் பெயர்களை ஆக்கியுள்ளதாகக் தருகின்றது.

பிற்சங்ககாலம்: *கீள்* 'பகுதி' (சீவ்) , 'துணித்துண்டு' (தேவா.)

சங்ககாலம்: *நீள்* 'நீண்டகாலம்' (கலி.); *சூள்* 'சபதம்' (தொல்.)

இருபத்தி இரண்டு வினைகள் (C)VCVC அசை அமைப்பைச் சார்ந்தன. இவற்றில் எட்டு வினைகள் சங்ககாலத்திலும் இரண்டு வினைகள் பிற்சங்ககாலத்திலும் பூஜிய ஒட்டுப் பெயர்களை ஆக்குகின்றன.

சங்ககாலம்: *உருள்* 'வண்டி, சக்கரம்' (முரு), *இருள்* 'கறுப்பு நிறம்' (மது), *திரள்* 'உருண்டை' (குறு), 'பந்து' (அக); *தெருள்* 'தெளிவான புலனுணர்வு' (கலி); *துவள்* 'வாடுவது' (பரி); *மருள்* 'குழப்பம்' (புற); *வரள்* 'மணல்' (பட்);சுருள் 'curl' (பரி), 'roll' (சில)

பிற்சங்ககாலம்: *திரள்* 'கூட்டம்' , *வெருள்* 'பயப்படு' (வாச்)

2.4.1.3. மூன்றாம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இவ்வகுப்பு *-ல்* இறுதிகொண்ட ஐம்பது வினைகளைக் கொண்டது. இதில் வரும் வினைகள் *ந்த்* என்பதை இறந்தகாலக் குறியீடாகவும் *வ்* என்பதை எதிர்காலக் குறியீடாகவும் ஏற்கும். அசை அடிப்படையில் பெயராக்கங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

நான்கு வினைகள் CVC அசையமைப்பைக் காட்டும். சங்காலத்தில் இவ்வினைகளின் பூஜியப் பின்னொட்டுப் பெயராகங்கள் காணப்படவில்லை. பிற் சங்ககாலத்தில் இரண்டு பூஜியப் பின்னொட்டுப் பெயராகங்கள் காணப்படுகின்றன.

கொல் 'கொலை செய்வது' (தேவா), செல் 'விரைவாக நகர்தல்' (கம்)

பத்து வினைகள் (C)VVC அசையமைப்பின் கண் படும். இவற்றில் இரண்டு வினைகள் சங்ககாலத்திலும் இரண்டு வினைகள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டுப் பெயர்களை ஆக்குகின்றன.

சங்ககாலம்: *மால்* ‘குழப்பம்’ (குறி), *சூல்* ‘கருவுற்றல்’ (புற)

பிற்சங்ககாலம்

ஏல் ‘தோராயம்’ (வாச்), ‘விரோதம்’ (சீவ), *சால்* ‘முழுமை’

முப்பத்தி ஏழு வினைகள் (C)VCVC அசையமைப்பைக் காட்டுகின்றன. பதினொன்று வினைகள் சங்ககாலத்திலும் மேலும் பத்னொன்று வினைகள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டுப் பெயர்களை உருவாக்குகின்றன.

சங்ககாலம்: *அழல்* ‘தீ’ (புற), *அனல்* ‘தீ’ (பரி); *இகல்* ‘வெறுப்பு’ (நற்); *இயல்* ‘பாணி’; *கழல்* ‘சிலம்பு’ (பதிற்); *கானல்* ‘தீ’ (பரி); *குழல்* ‘கூந்தல்’ (குற்); *நிரல்* ‘வரிசை, ஒழுங்கு’ (தொல்); *புகல்* ‘விருப்பம்’ (மலை), ‘புகழ்’ (கலி); *துயில்* ’தூக்கம்’ (தொல்); *உடல்* ‘விரோதம்’ (புற்)

பிற்சங்ககாலம்: *சுழல்* ‘சுருள்’ (கம்), ‘கிளர்ச்சி’ (தேவா); *தழல்* ‘தீ’ (பிங்); *அமல்* ‘முழுமை’ (ஞன); *அகல்* ’இட அளவு’; *சிகல்* ‘தேவை, அழிவு’ (வின்.அக); *துவல்* ‘விரைவு’ (வின்); *நுவல்* ‘சொல்’ (திவா); *முயல்* ‘போர்’ (சது); *குயில்* ‘சொல்’ (திவா), ‘துளை’ (பிங்); *பயில்* ’பயிற்சி’ (வின்.அக), ’அழைக்கும் குறிப்பு’ (விறாலி), ‘இரகசிய மொழி’ (பதினொ)

மூன்றாம் திரிபு வகுப்பைச் சார்ந்த் வினைகளின் பூஜிய ஒட்டுப் பெயராக்கம் சங்காலத்தில் (C)VCVC என்ற அசை அமைப்பில் முதன்மையானதாக இருந்தது. பிற CVC (C)VVC அசை அமைப்புகளில் சீராக இல்லை. பிற்சங்ககாலத்தில் இம்மூன்று அசை அமைப்புகளிலும் இவ்வாக்கம் எப்பொழுதாவது நிகழும் நிகழ்வாக இருந்தது.

2.4.1.4. நான்காம் வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இவ்வகுப்பில் அடங்கும் வினைகள் *இ, உ, ஐ, ஈ,* ஓ என்ற உயிர்களைக் கொண்டோ *ய், ர், ழ்* என்ற மெய்களைக் கொண்டோ இறுதியுறும். இதில் வரும் வினைகள் *ந்த்* என்பதை இறந்தகாலக் குறியீடாகவும் *வ்* என்பதை எதிர்காலக் குறியீடாகவும் ஏற்கும். இவ்வினைகளை இரண்டாகப் பகுக்கலாம்: (1) நான்காம் வினைத்திரிபை மட்டும் சாரும் வினைகள், (2) நான்காம் மற்றும் பத்னொன்றாம் வினைத்திரிபுகளைச் சாரும் வினைகள்

2.4.1.4.1 நான்காம் வினைத்திரிபு வகுப்பில் மட்டும் வரும் வினைகளின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

நற்பத்தி ஐந்து வினைகள் (C)VCஇ என்ற அசையமைப்பைச் சாரும். இவற்றிலிருந்து பத்தொன்பது பெயர்கள் சங்ககாலத்திலும் ஏழு பெயர்கள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டால் உருவாகப்பட்டுள்ளன.

சங்ககாலம்: அணி ‘நகை’ (புற்), ‘அழகு’ (புற்); தடி ‘இறைச்சித் துண்டு’ (புற்); பிழி ‘கள்’ (அக); புரி ‘முறுக்கு’ (சிருப்), ‘கயிறு’ (பெரும்); பொதி ‘கொத்து’, ‘குருத்து’ (மலை), ‘மரபட்டை’ (புற்); மொழி ‘சொல்’ (தொல்), ‘பஷை’ (குற்); வசி ‘பிளவு’ (மலை), ‘வடு’ (பதிற்)

பிற்சங்ககாலம்: அறி ‘அறிவு’ (குறள்); கடி ‘நிராகரிப்பு’ (பிங்); சரி ‘கூட்டம்’; சொறி ‘ஊரல்’ (சில), சொரி ‘ஊரல்’; ஞெரி ‘உடைந்த துண்டு’ (நன்.விரு); ஞெலி ‘உராய்கிற மூங்கீல்’ (அக.உரை); புரி ‘செய்வது’ (சூடா); பொசி ‘கசிவு’, ‘சுரப்பு’ (தேவா); பொலி ‘தானியமாகக் கொடுக்கும் வட்டி’ (வவ), ‘தானியக் குவியல்’ (பிங்); முளி ‘நிறம்மங்கிய நிலை’, ‘உலர்வு’ ; விடி ‘அதிகாலை’; துணி ‘உறுதி’

முப்பத்தாறு வினைகள் (C)VCஐ என்ற அசையமைப்பைச் சாரும். இவற்றிலிருந்து ஏழு பெயர்கள் சங்ககாலத்திலும் ஏழு பெயர்கள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டால் ஆக்கப்பட்டுள்ளன.

சங்ககாலம்: *களை* 'வேண்டாச் செடி' (அக); *மிசை* 'உணவு' (ஐங்); நனை 'மொட்டு' (நற்); *உறை* 'தயிர்' (பெரும்) 'வசித்தல்' (புற்); *அறை* 'கூறுதல்' (பா.தொ)

பிற்சங்ககாலம்: வரை 'வரி, எல்லை' (குறள்); *அறை* 'அடி' (சேது), 'பகட்டு' (சூடா); *மிடை* 'கலவி' (சூளா), 'புதர்' (வின்.அ); *கனை* 'அடர்த்தி, கூட்டம்' (சூளா); *தரை* 'ஆணியின் தலை' (ஜா.கி); *புரை* 'ஒற்றுமை' (பிங்); இடை 'பிரச்சனை' (கோ.சொம்)

ய்-இறுதி வினைகள் பன்னிரண்டு உள்ளன. இவை CVC, (C)VVC, (C)VCVVC, (C)VVCVVC என்ற நான்கு அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன. CVC என்ற அசையமைப்பையும் ய்-இறுதியையும் கொண்ட இரண்டு வினைகள் பிற்சங்ககாலத்தில் பின்வரும் பூஜிய பின்னொட்டுப் பெயர்களை ஆக்கும்.

தொய் 'தவறு, குறைவு' (சீவ்); *பொய்* 'குழல், துளை' (சில), 'மரப்பொந்து (பிங்)

(C)VVC என்ற அசையமைப்பையும் *–ய்* இறுதியையும் கொண்ட ஆறுவினைகள் இரண்டு பூஜியப் பின்னொட்டுப் பெயர்களை ஆக்கும். ஒன்று சங்ககாலத்திலும் மற்றொன்று பிற்சங்ககாலத்திலும் காணப்படுகின்றது.

சங்ககாலம்: *மூய்* 'உறை' (குற்); *மூஉய்* 'பூக்கூடை' (பரி)

பிற்சங்ககாலம்: *பாய்* 'நீட்சி'

ர்-இறுதி வினைகள் அறுபத்தி ஏழு உள்ளன. இவை (C)VVC, (C)VCVC, (C)VCCVVC என்ற மூன்று அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன. இவற்றில் முதல் இரண்டு அசை அமைப்புகள் பெயர்சொற்களை ஆக்கும். இவை சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் காணப்படும். மூன்றாவது அசையமைப்பு வினைகள் பூஜியப் பின்னொட்டுப் பெயர்களை ஆக்கவில்லை.

(C)VVC அசையமைப்புகொண்ட *ர்*-இறுதி வினைகள் ஒன்பது உள்ளன. இவற்றிலிருந்து ஆக்கப்பட பூஜியப் பின்னொட்டுப் பெயர்கள் சங்ககாலத்தில் மூன்றும் பிற்சங்ககாலத்தில் ஐந்தும் காணப்படுகின்றது.

சங்ககாலம்: *ஏர்* 'முன்னேற்றம்' (தொல்); *சார்* 'பக்கம்' (புற்); 'இடக்குறி' (தொல்); *சோர்* 'மழை' (ஐங்)

பிற்சங்ககாலம்: *ஆர்* 'முழுமை' (பிங்), 'அழகு' (ஆனி), *ஊர்* 'சவாரி' (சேது); *நேர்* 'பரிசு' (சூடா); *வார்* 'தோல்' (நாம), *வார்* 'நீளம்' (சூடா), 'வரிசை' (விறாலி)

(C)VCVC அசை அமைப்புகொண்ட *ர்*-இறுதி வினைகள் ஐம்பத்தாறு உள்ளன. இவற்றிலிருந்து முப்பத்தி ஏழு பூஜியப் பின்னொட்டுப் பெயர்கள் ஆக்கப்பட்டுள்ளன. இவற்றில் இருபது சங்காலத்தையும் பதினாறு பிற்சங்ககாலத்தையும் சாரும்.

சங்ககாலம்: *அமர்* 'ஆசை' (அக); *அலர்* 'பூ' (மது); *சிதர்* 'மழைத்துளி' (புற்), 'உதிர்தல்' (சிறுப்); *துளர்* 'களைகள்' (பெரும்); *தொடர்* 'சங்கிலி' (புற்), 'வாக்கியம்' (தொல்); *படர்* 'துக்கம்' (கலி), 'எண்ணம்' (நெடு); *புலர்* 'உலர்தல்' (கலி); *மயர்* 'மனக்குழப்பம்' (கலி); *அவிர்* 'ஒளி' (அக); *எதிர்* 'மறுதலை' (புற); *குளிர்* 'தண்மை' (அக); *புணர்* 'சேர்தல்' (புற); *சுகிர்* 'பிளவு' (புற); *பயிர்* 'விலங்குகளின் அழைப்பு'

(அக); *பிசிர்* ‘மழைத்துளி’ (ஐங்), ‘நார்’ (புற்); *பிதிர்* ‘பொறி’ (நற்); *வகிர்* ‘பிளவு’ (அக); *துயர்* ‘துக்கம்’ (புற்); *துணர்* ‘கொத்து’ (ஐங்); *தடர்* ‘கொத்து’ (சிறுப்) பிற்சங்ககாலம்: *அணர்* ‘மேல்தாடையில் பக்கம்’ (பிங்); *உணர்* ‘உணர்ச்சி’ (வின்.அ); *உயர்* ‘மேன்மை’ (சீவ்); கிளர் ‘வெளிச்சம்’ (பிங்); *குதர்* ‘பிரிவு’ (வி.அ); *தவர்* ‘பலகையில் துளை’; *தளர்* ’தளர்ச்சி’ (வி.அ); *துவர்* ‘துண்டு’ (தி.கி); *பகர்* ‘ஒளிர்வு’’; *ஞிமிர்* ‘மிருதுவான அதிர்வு ஒலி’ (பிங்); *நளிர்* ‘குளிர்’ (தேவா); *பகிர்* ‘பங்கு’ (கம்ப்), ’துண்டு’ (விளை); *மிளிர்* ‘ஒளிர்வு’; வணர் ‘கவிகை’ (வின்.அ)

ழ்-இறுதி வினைகள் இருபத்தி ஐந்து உள்ளன. இவை (C)VVC, (C)VCVC, என்ற இரண்டு அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன. இவ்விரு அசை அமைப்புகளும் சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் பெயர்களை உருவாக்குகின்றன. முதல் அசை அமைப்பு சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் ஒரு பூஜியப் பின்னொட்டுப் பெயரையும் இரண்டாம் அசை அமைப்பு சங்ககாலத்தில் ஏழு பூஜியப் பின்னொடுப் பெயர்களையும் பிற்சங்ககாலத்தில் ஒரு பூஜியப் பின்னொடுப் பெயரையும் ஆக்கும்.

(C)VVC அசை அமைப்பு

சங்ககாலம்: *போழ்* ‘துண்டு’ (பெரும்); பிற்சங்ககாலம்: *போழ்* ‘பிளவு (கல்லா); வாழ் ‘ஒழுங்கு, வரிசைமுறை’ (பிங்)

பிற்சங்ககால வடிவமான *வாழ்* என்பது நிகண்டு வடிவமாகும்; இது இலக்கியத்தில் காணப்படவில்லை. *வாழ்-வு, வாழ்-க்கை* என்பன *வாழ்* என்ற வினையிலிருந்து ஆக்கப்பட்டவை. இவை சங்ககாலத்திலிருந்து தற்காலத்தமிழ் வரை அதிகமாகக் காணப்படுகின்றன.

(C)VCVC அசை அமைப்பு கொண்ட பத்தொன்பது வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து சங்ககாலத்தில் ஆறு பூஜியப் பின்னொடுப் பெயர்களும் பிற்சங்ககாலத்தில் ஒரு பூஜியப் பின்னொடுப் பெயரும் ஆக்கப்பட்டுள்ளன.

சங்ககாலம்: *அகழ்* 'அகழி' (மலை), 'நீர்த்தேக்கம்' (பெரும்); *இகழ்* ' நிந்தை' (புற்); *உறழ்* 'மாற்றம்' (தொல்), 'வாக்குவாதம்' (பட்டி); *கலிழ்* 'சேற்றுவெள்ளம்' (பரி); *கலுழ்* 'சேற்றுவெள்ளம்'; புகழ் 'கீர்த்தி' (புற்); மகிழ் 'மகிழ்ச்சி', 'கள்' (புற்).

பிற்சங்ககாலம்: திகழ் 'பிரகாசம்'

பின்வரும் அட்டவணையில் சங்ககால ஆறு பெயர்களின் பிற்சங்ககால மற்றும் தற்கால இணைகள் தரப்பட்டுள்ளன:

	சங்ககாலம்	பிற்சங்ககாலம்	தற்காலம்
1	புகழ்	புகழ், புகழ்-ச்சி	புகழ், புகழ்-ச்சி
2	இகழ்	இகழ்-ச்சி	இகழ்-ச்சி
3	மகிழ்	மகிழ்-ச்சி	மகிழ்-ச்சி
4	கலிழ், கலுழ், (கலுழ்-இ>) கலுழி	கலுழ்-இ>கலுழி	--
5	உறழ், உறழ்-ச்சி	உறழ்-ச்சி	--
6	அகழ், அகழி (<அகழ்-இ)	அகழி (<அகழ்-இ)	அகழி (<அகழ்-இ)

2.4.1.4.1. நான்காம் மற்றும் பதினொன்றாம் வினைத்திரிபு வகுப்பில் வரும் வினைகளின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

நூற்றி எழுபத்தைந்து வினைகள் இவ்வகுப்பைச் சாரும். பெரும்பாலானா வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினைகளாகவும் செய்படுபொருள் குன்றா

வினைகளாகவும் பயன்படுத்தப்படும். ஒரு பூஜியப் பின்னொடுப் பெயர் ஆக்கப்பட்டால் அது செயப்படுபொருள் குன்றிய வினையைச் சார்ந்ததா அல்லது செய்படுபொருள் குன்றா வினையைச் சார்ந்ததா என்பது கண்டுபிடிக்கப்படவேண்டும். நூற்றி எழுபத்தைந்து வினைகள் நூற்றி மூன்று பெயர்களை ஆக்குகின்றன. பெயர்களின் எண்ணிக்கை இவ்வகுப்பில் படும் வினைகளின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கத்தை விளைவாக்கம் உள்ளதாகக் காட்டுகின்றது. (C)VCu, (C)Vy என்ற அசை அமைப்பொழுங்குகளைத் தவிர பிற எல்லா அசை அமைப் பொழுங்குகளும் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்கின்றன.

சங்ககாலத்தில் அறுத்தி இரண்டு பெயர்களும் பிற்சங்ககாலத்தில் நாற்பத்தி ஒன்று பெயர்களும் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வகுப்பிலிருத்து பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் இவ்விரு காலத்திலும் அதிகமாக உள்ளது.

மூன்று வினைகள் ஈ-இல் இறுதியுறும் (C)VV அசை அமைப்பு கொண்டவை. இவற்றிலிருந்து சங்ககாலத்தில் ஒரு பூஜியப் பின்னொட்டுப் பெயரும் பிற்சங்ககாலத்தில் ஒரு பூஜியப் பின்னொட்டுப் பெயரும் ஆக்கப்பட்டுள்ளன.

சங்ககலம்: *தீ* 'நெருப்பு' (புற்); பிற்சங்ககாலம்: *வீ* 'அழிவு' (சீவ்); 'இறப்பு' (பிங்)

இ-இல் இறுதியுறும் அறுபத்தி இரண்டு வினைகள் (C)VCV அசை அமைப்பு கொண்டவை. இவற்றிலிருந்து சங்ககாலத்தில் ஆறு பூஜியப் பின்னொட்டுப் பெயர்களும் பிற்சங்காலத்தில் பத்தொன்பது பூஜியப் பின்னொட்டுப் பெயர்களும் ஆக்கப்பட்டுள்ளன.

சங்ககாலம்: *இடி* 'மாவு' (மலை); *உரி* 'பட்டை, தோல்' (புற்); *எரி* 'தீ' (அக); ஒலி 'எய்தல்' (அக); *கனி* 'பழம்' (பொருன்); *கிழி* 'துண்டுத் துணி' (நற்); *சுரி* 'சுருள்' (குற்),

‘சுருட்டை’ (கலி); *சுழி* ’சுழற்சி’ (புற்); *திரி* ‘விளக்குத்திரி’ (முல்); துணி ‘துண்டு’ (புற்) ‘மரத்துண்டு’ (சிறுப்); *நெறி* ‘வளைவு’ (புற்), ‘முடியின் சுருட்டை’ (பெரும்); *குழி* ‘குண்டு, பொள்ளல்’; *கரி* (அக); *நொடி* ‘ஓசை’ (அக); ‘சுடக்கு’ (நற்); *பணி* ‘கட்டளை’ (புற்); *பரி* ‘நடக்கும் பாணி’ (குற்), ‘குதிரையின் வேகம்’; *பொடி* ‘சாம்பல்’ (கலி), ‘தூள்’ (சில); பொரி ‘தானியப்பொரி’, ‘பொரிக்கப்பட்ட கறி’ (சீவ்); மடி ‘மடிப்பு’ (புற்); *முடி* ‘முடிச்சு’ (மது); *முரி* ‘குடையானது’ (கலி); *முறி* ‘ஒடிந்த துண்டு’ (புற்); *வரி* ‘கோடு’ (புற்); *விசி* ‘கட்டு’ (பெரும்); *விரி* ‘விரிவு’ (தொல்), ‘துணிவிரிப்பு’ (பா.தொ)

பிற்சங்ககாலம்: *அழி* ‘அழிவு’ (குறள்); *இடி* ‘கண்டனம்’ (குறள்), ‘*அடி*’; ஒளி ‘இரகசியம்’ (பிங்); ‘ஒளித்தல்’ (நானா); *குணி* ‘வளைவு’ (சீவ்), ‘வில்’ (சது); *சரி* ‘சரிவு’ (கோ), ‘வழி’ (பெரிய்); *செறி* ‘அடர்த்தி’ (சூடா); *தறி* ‘வெட்டுதல்’; *திணி* ‘அடர்த்தி’ (வாய்); *துமி* ‘வெட்டு’ (கந்த்); *தெளி* ‘சாறு’ (தேவா), ‘தெளிவு’ (பு.வெ); *நலி* ‘துன்புறுதல்’, ‘மெலிவு’ (வ.வ.); *நெரி* ‘நொறுக்குதல்’; *நொசி* ‘மென்மை’ (அக.நி); *பதி* ‘பதித்தல்’ (சீவ்), ‘நாற்று’; *பறி* ‘கொய்தல்’ (தேவா), *பொளி* ‘துளை’, ’ஓலைக் கப்பல்’ (நாஞ்); *மெலி* ‘மூக்கொலிகள்’ (நன்); *வடி* ‘தேன்’ (சூளா), ‘கள்’ (பிங்); *அவி* ‘சோறு’ (சூடா)

சங்ககாலத்தின் இருபத்தி ஆறு பெயர்களுகளும் முக்கியமான பண்புக்கூறுகளைக் கொண்டுள்ளன. இவற்றில் அரைப் பகுதி பெயர்கள் தற்காலத்தில் பயன்பாட்டில் உள்ளன. *சுழி, திரி, குழி, கரி, எரி, பொடி, பொரி, முடி, வரி, கனி, நொடி, மடி* என்பன தற்காலத் தமிழில் பரந்த பயன்பாட்டில் உள்ளன. மீதி பதிநான்கு ஆக்க வடிவங்களும்

தற்காலத்தில் காணப்படவில்லை. ஆனால் மேற் சொன்ன இருபத்தாறு ஆக்க வடிவங்களும் சங்ககாலத்தில் பரந்த அளவில் பயன்பாட்டில் இருந்தன. இந்த குறிப்பிட்ட விளக்கம் மிக முக்கியமானதாகும். வரலாற்று அடிப்படையில் பிற்சங்ககாலம் முற்சங்ககாலத்திற்குப் பிற்பட்டது என்றாலும் பிற்சங்ககால பூஜிய பினொட்டாக்கப் பெயர்கள் அக்காலத்தில் பரந்த அளவில் பயன்பாட்டில் இல்லை என்பது மட்டுமல்லாமல் அவை தற்காலத் தமிழிலும் காணப்படவில்லை.

பெரும்பாலான பிற்சங்ககாலப் பூஜிய பின்னொட்டாக்கப் பெயர்களுக்கு இணையான ஒரே வினையிலிருந்து ஆக்கப்பட்ட பெயர்கள் பரந்த பயன்பாட்டில் இருந்தன. பின்வரும் அட்டவணை இதைத் தெளிவுபடுத்தும்.

கட்டுப்பட்ட பயன்பாடுள்ள பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள்	பரந்த பயன்பாடுள்ள இணையான பின்னொட்டஆக்கப் பெயர்கள்
ஒளி	ஒளி-வு
சரி	சரி-வு
செறி	செறி-வு
திணி	திணி-வு
நலி	நலி-வு
நொசி	நொசி-வு
பதி	பதி-வு

முதல் நெடுவரிசையிலுள்ள எல்லா ஆக்கப் பெயர்களும் இலக்கியப் பனுவல்களில் உள்ளன.

ஜ-இல் இறுதியுறும் அறுபத்தி ஆறு வினைகள் (C)VV அசை அமைப்பு கொண்டவை. கிட்டத்தட்ட நாற்பது பெயர்கள் இவற்றிலிருந்து பூஜிய ஒட்டாக்கத்தால்

ஆக்கப்பட்டன ஆகும். சங்ககாலம் இருபத்தி ஐந்து பூஜிய ஒட்டாக்கப் பெயர்களையும் பிற்சங்ககாலம் பதினைந்து பூஜிய ஒட்டாக்கப் பெயர்களையும் கொண்டுள்ளன.

சங்ககாலம்: *அசை* 'சோர்வு' (அக); அடை 'மூடல்' (அக); *அணை* 'படுக்கை' (குற்); *அலை* 'காயம்' (தொல்), 'அலை' (பிங்); *இணை* 'சேர்த்தல்' (நெடு), 'இணை' (அக.l); *இனை* 'கடுந்துயரம், துன்பம்' (குற்); *குறை* 'இறைசித்துண்டு' (பெரும்); *சிதை* 'அழிவு' (கலி), 'கெட்டவார்த்தைகள்' (ஏலா); *தகை* 'மாலை' (முரு); *குழை* 'இளம் இலை' (புற்); தழை 'இலைத் தொகுதி' (புற்); தளை 'கட்டு' (அக); திரை 'அலை' (அக); நிரை 'கூட்டம்' (அக); *நிறை* 'முழுமை, *கற்பு'* (அக); *நுழை* 'குறுகிய வழி' (மலை); *பறை* 'முரசு'; *பிணை* 'பலகைகளின் இணைப்பு' (பரி); *புகை* 'ஆவி, புகை' (பெரும்); *புதை* 'புதைத்தல்' (புற); *மலை* 'போர் ஆக்கிரமிப்பு' (மலை); *மரை* 'களவு' (குற்), 'மறைவிடம்' (புற்); *முளை* 'குருத்து' (ஐங்); *முனை* 'போர்' (பதிற்); *வளை* 'காப்பு' (புற்)

பிற்சங்ககாலம்: *அகை* 'உறுப்புப் பகுதி' (சீவ்); *இசை* 'இசைவு' (வி.அ); *அமை* 'உடற்கட்டு, அழகு' (பிங்); *இரை* 'ஓசை' (விளை); *உதை* 'எட்டிமிதித்தல், அடி' (த.வ); *உரை* 'தேய்த்தல்' (சூடா); *உலை* 'கிளர்ச்சி' (நானா); *கரை* 'சொல்' (நான்); *குமை* 'அடி' (வாய்), 'அழிவு' (கம்); *துதை* 'அண்மை' (விஅ); *துவை* 'மிதித்தல்'; *தொலை* 'அழிவு'; *நமை* 'ஊரல்'; *புரை* 'ஒற்றுமை' (பிங்); *விளை* 'வளர்ச்சி' (குறள்); *குழை* 'மிருதுவான களிமண்' (பிங்)

இருபத்தி ஐந்து சங்ககாலப் பெயர்களில், சிலவற்றிற்குத்தான பரந்த பயன்பாடுள்ள இணையான பெயர்கள் உள்ளன: *அசை – அசைவு, சிதை – சிதைவு, நிறை – நிறைவு, குறை – குறைவு, நுழை – நுழைவு*.

பிற்சங்க கால சூழல் வேறுபட்டதாகும். இக்காலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தப்பட்டன; ஆனால் அவற்றிற்கு இணையான பின்னொட்டாக்கப் பெயர்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.

கட்டுப்பாடுத்தப்பட்டப் பயன்பாடுள்ள பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள்	பரவலான பயன்பாடுள்ள பிற பின்னொட்டாகப் பெயர்கள்
இசை	இசை-வு
அமை	அமை-வு
இரை	இரை-ச்சல்
உலை	உலை-வு
துதை	துதை-வு
தொலை	தொலை-வு
விளை	விளை-வு
நமை	நமை-ச்சல்

இவை வரலாற்று அடிப்படையில் பிற்சங்காலத்தைச் சார்ந்தவை ஆனாலும் எந்த சீரான ஆக்கச் செயல்பாட்டால் ஆக்கப்படவையோ விளைவாக்கமுள்ளவையோ அல்ல.

(C)VV*ய்* அசை அமைப்புள்ள எட்டு வினைகளில் *வாய்* ‘உண்மை ஆகு’ மட்டுமே சங்ககாலத்தில் *வாய்* ‘உண்மை’ என்ற பூஜியப் பினொட்டாக்கப் பெயரை உருவாகும். பிற வினைகள் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

வினை	பெயர்
தேய்	தேய்-வு
தோய்	தோய்-வு
மேய்	மேய்-வு

இவ்வினைகளில் பூஜிய பின்னொட்டாக்கம் சீரான செயல்பாடல்ல. பிற்சங்ககாலத்தில் பூஜிய பின்னொட்டாகப் பெயர்கள் ஆக்கப்பெறவில்லை.

(C)VV*ர்* அசை அமைப்புள்ள எட்டு வினைகள் உள்ளன. இவற்றில் மூன்று மட்டுமே பூஜியப் பின்னொட்டாக்க பெயர்களை ஆக்கும். இவை மூன்றும் சங்க காலத்தைச் சார்ந்தவை.

சங்ககாலம்: *கூர்* 'மிகுதி' (புற்); *சேர்* 'வட்டத்தன்மை' (தொல்); *வார்* 'ஒழுக்கு' (அக)

(C)VV*ழ்* அசை அமைப்புள்ள மூன்று வினைகள் இரண்டு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை உருவாக்குகின்றன.

சங்ககாலம்: *வீழ்* 'விழுது' (தொல்); *தாழ்* 'வணங்கு, அஞ்சலி' (புற்)

(C)VCV*ர்* அசை அமைப்புள்ள பத்தொன்பது வினைகளிலிருந்து ஒன்பது பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் ஆக்கப்படுகின்றன. இவற்றில் இரண்டு சங்ககாலத்தைச் சாரும்; பிற எழும் பிற்சங்ககாலத்தைச் சாரும்.

சங்ககாலம்: *மலர்* 'பூ' (அக); *விளர்* 'வெண்மை' (புற)

பிற்சங்ககாலம்: *அடர்* 'அடக்குமுறை' (மணி); *சிதர்* 'பொடி' (பிங்); *தகர்* 'தூள், *பொடி* (திவா), 'துண்டு' (ஜாகிமொ); *நிகர்* 'ஒப்பீடு' (கந்த்) 'சமம்' (நால்); *உதிர்*

‘சிறுதுண்டு, துண்டு’ (கந்த்); திமிர் ‘உடல்பருமன், அகந்தை’ (பேவ); *பொதிர்* ‘நடுங்குதல்’ (சூளா)

(C)VCV*ழ்* அசை அமைப்புள்ள ஐந்து வினைகளிலிருந்து மூன்று பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் ஆக்கப்படுகின்றன. இவற்றில் இரண்டு பெயர்கள் சங்ககாலத்தைச் சாரும்; ஒன்று பிற்சங்ககாலத்தைச் சாரும்.

சங்கக்காலம்: *அவிழ்* ‘சோறு’ (மலை); *இமிழ்* ‘ஓசை, முனங்கொலி’ (அக)

பிற்சங்காலம்: *இமிழ்* ‘தயிர்’ (சீவ), நேரம்’ (ஆனைக்)

சங்ககாலத்தில் *அவிழ்*, *இமிழ்* என்பன சீரான பூஜிய ஒட்டாக்கப் பெயர்கள். இவை பிற்சங்ககாலத் தமிழில் குறிப்பாக தற்காலத் தமிழில் பரவலானப் பயன்பாட்டில் இல்லை.

2.4.1.5. ஐந்தாவது வினைத்திரிபு வகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

உ-வில் இறுதியுறும் ஐந்தாவது வினைத் திரிபு வகுப்பைச் சாரும் வினைகள் *இ-ஐ* இறந்தகாலக் குறியாகவும் *வ்-ஐ* எதிர்காலக் குறியாகவும் எடுக்கும். கிட்டத்தட்ட ஆயிரத்தி இருநூறு வினைகள் இவ்வகுப்பைச் சாரும். இவற்றில் இருநூறுக்கு அதிகமான வினைகள் ஆக்கப்பட்ட (*இயங்கு* என்பது *இயக்கு* என மாறுவது போன்ற) செயப்படுபொருள் குன்றா வினைகளாகும். சங்காலத்தில் பூஜியப் பின்னொட்டுப் பெயர்கள் இவ்வினைகளிலிருந்து ஆக்கப்படவில்லை. *வாழ்த்து* என்ற ஒன்றுதான் விதிவிலக்காகும். சில அதிக வடிவங்கள் மட்டுமே பிற்காலச் சங்கத்தமிழில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக *ஆக்கு* ‘உருவாக்கம்’ (தேவா) இலக்கியப் பனுவலில் மட்டும் நிகழும். இதுபோன்று *திரட்டு* ‘தொகுப்பு’, *சுருட்டு*, *கடத்து* ‘படகு’ போன்றவை இலக்கியப் பனுவல்களிலோ கிளைமொழிகளிலோ காணப்படும்; அவை

உருவாக்கபட்டவையாகவோ பிந்தைய வளர்ச்சியாகவோ இருக்கும். நாம் இந்த ஆக்கப்பட்ட செயப்படுபொருள் குன்றா வினைகளை விலக்கி வைத்தால், கிட்டத்தட்ட ஆயிரம் வினைகள் இருக்கும். அவற்றிலிருந்து கிட்டத்தட்ட முன்னூறு பூஜியப்பின்னொட்டுப் பெயர்கள் சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் ஆக்கப்படுகிறது. சங்கத் தமிழ் எண்பத்தைந்து பூஜியப்பின்னொட்டுப் பெயர்களை மட்டும் ஆக்கும். பெரும்பாலானவை தெளிவான நேர்வுகளாகும்; அவை எல்லா காலத்திலும் சீரான பெயர்களாகும். ஆனால் பெரும்பாலான பிற்சங்க ஆக்கவடிவங்கள் இலக்கியம் சாராதவை கிளைமொழிசார்ந்தவை மற்றும் மிகக் கட்டுப்பாடான பயன்பாடு உள்ளவை. இருநூற்றி முப்பது பெயர்களில், ஐம்பதிலிருந்து அறுபது வரையிலான பெயர்கள் சரியான சீரான பெயர்களாகும். இது பூஜிய ஒட்டாக்கப் பெயர்கள் இத்திரிபு வகுப்பில் விளைவாக்கம் உள்ளவை அல்ல. குறிப்பிட்ட சில அசை அமைப்பொழுங்கு மட்டும் சீரான பெயர்களை உருவாக்கப் பயன்படுத்தப் படுகின்றன. வினகளின் இறுதி அசையில் அடைப்பொலி அல்லாத மெய்கள் இருந்தால் பூஜிய ஒட்டு முக்கியமாகப் பயன்படுத்தப்படும். இதன் அமைப்பொழுங்கு (C)VC$_2$V (இதில் C$_2$ அடைப்பொலி அல்லாததாகும்) ஆகும். இவ்வினை அதன் பூஜிய பினொட்டாகப் பெயர் *நாண்* ‘அவமானம்’ எனபதை ஆக்கும். பழந்தமிழில் உ அடைப்பொலியல்லா மெய்க்கும் பின் வராது; எனவே உ பூஜிய பினொட்டாகப் பெயர் *நாண்* என்பதில் நீக்கப்படும். இதுபோன்று *மின்னு* வகையில் படும் வினகளும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை உருவாக்கும். (C)VPPஉ மற்றும் (C)VVPPஉ (இதில் PP என்பது அடைப்பொலி மயக்கம் ஆகும்) என்ற அமைப்பொழுங்குகள் கொண்ட வினைகள் அவற்றின் பூஜியப்

பின்னொட்டாக்கப் பெயர்களை ஓரவுக்கு ஆக்கும். ஒரே ஒரு கட்டுப்பாடு என்ன வென்றால் இவ்வினைகள் செயப்படுபொருள் குன்றா வினைகளிலிருந்து ஆக்கப்படலாகாது. பிற அமைப்பொழுங்குகளில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயராக்கம் அரிதும் இரண்டாம் தரமானதாகும்.

(C)VVPஉ அமைப்பொழுங்கில் *மாறு* 'விரோதம்', *நாறு* 'நாற்று' என்ற பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களின் ஆக்கமும் (C)VCVNPu என்ற அமைப்பொழுங்கில் புலம்பு 'ஓசை' என்ற பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரின் ஆக்கமும் சிறப்பானதாகும்; ஏனென்றால் மேற்கண்ட வினைகள் இரட்டிப்புச் செயல்பாட்டால் பெயராக்கம் செய்யும்:. *மாற்று/மாற்றம்*, *நாற்று*, *விருப்பு* (*விரும்பு* 'ஆசைப்படு' என்ற வினையிலிருந்து). பூஜிய பினொட்டாக்கம் சங்கத்தமிழில் முந்தைய வளர்ச்சியா பிந்தைய வளர்ச்சியா என்று நமக்குத் தெரியாது. (C)VVPu என்பதற்கு (C)VVகு, (C)VVது, (C)VVடு போன்ற ஆறு துணை அமைப்பொழுங்குகள் உள்ளன. இவற்றில் பூஜிய பின்னொட்டாகப் பெயர் (C)VV*று* என்பதில் மட்டும் ஆக்கப்பட்டுள்ளது (*மாறு* 'விரோதம்'). இதுபோன்று (C)VCVNPஉ என்பதற்கு (C)*VCVங்கு*, (C)*VCVந்து* போன்ற ஆறு துணை அமைப்பொழுங்குகள் உள்ளன. இவ்வற்றில் (C)*VCVம்பு* என்ற அமைப்பொழுங்கை சாரும் *அரும்பு* 'மொட்டாய் உருவாகு' போன்ற வினைகள் மட்டுமே பூஜிய பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன. இக்கட்டுப்பாடு இவ்வினைகளில் பூஜிய பின்னொட்டாக்கப் பெயராக்கம் பிந்தைய வளர்ச்சி என நிரூபிக்கின்றது.

பின்வரும் அட்டவணை ஐந்தாவது திரிபுவகுப்பைச் சார்ந்த வினைகளின் பூஜியப் பெயராக்கத்தை அசை அமைப்பொழுங்கு அடிப்படையில் பட்டியலிட்டுக் காட்டுகின்றது.

அசை அமைப்பொழுங்கு	வினைகளின் எண்ணிக்கை	சங்ககாலத்தில் பூஜியப் பெயர்களின் எண்ணிகை	பிற்சங்ககாலத்தில் பூஜியப் பெயர்களின் எண்ணிகை
(C)VVPV	55	5	15
(C)VNPV	73	-	14
(C)VVNPV	48	1	12
(C)VCVNPV	175	10	18
(C)VCVVNPV	12	-	2
(C)VC_2V	25	9	2
(C)VC_2 C_3V	55	14	12
(C)$VCVC_3V$	28	4	1
(C)VPPV	80	14	50
(C)VVPPV	64	6	22
(C)VCVPV	102	2	19
(C)VC_2PV	31	1	2
(C)VCVPPV	157	3	47
(C)VVCVVPPV	11	1	2
(C)V……V	67	15	13
Total	993	85	231

(P= அடைப்பொலி N = மூக்கொலி C_2, C_3 = அடைப்பொலி அல்லாதன.)

(C)VVPஉ என்ற அசை அமைப்பில் ஐந்து துணை அமைப்பொழுங்குகள் உள்ளன: (C)VVகு, (C)VVசு, (C)VVடு, (C)VVது, (C)VVறு.

(C)VVகு என்ற அசை அமைப்பில் மூன்று வினைகள் உள்ளன: *ஆகு, ஏகு* 'போ', *ஈகு* 'கெட்டியாகு'. இவற்றிலிருந்து இரு காலத்திலும் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்கள் ஆக்கப்படவில்லை

(C)VVசு என்ற அசை அமைப்பில் ஏழு வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்கள் ஆக்கப்படவில்லை. பிற்சங்காலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்கள் ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

பிற்சங்ககாலம்: *ஏசு* 'குற்றம், களங்கம்' (திவா); *பூசு* 'பூச்சு' ; *மூசு* 'திரள்தல்' (சீவ)

(C)VVடு என்ற அசை அமைப்பொழுங்கில் பதினாறு வினைகள் உள்ளன. மூன்று பூஜியப் பின்னொட்டாகப் பெயர்கள் சங்காலத்திலும் இரண்டு பூஜியப் பின்னொட்டாகப் பெயர்கள் பிற்சங்ககாலத்திலும் ஆக்கப்பட்டுள்ளன.

சங்ககாலம்: *கூடு* 'தொகுப்பு, இலை' (புற்); *நீடு* 'நீண்டகாலம்' (அக); *வாடு* 'வாடிய பூக்கள்' (கலி);

பிற்சங்காலம்: *சூடு* 'குடுமி' (விளை); *கோடு* 'கோணல்', 'ஓரவஞ்சனை' (நால)

(C)VVது என்ற அசை அமைப்பொழுங்கில் ஆறு வினைகள் உள்ளன. *ஊது, ஓது* என்ற வினகள் சங்ககாலப் பனுவல்களில் வருகின்றன. இவற்றிலிருந்து பூஜியப் பின்னொட்டாகப் பெயர்கள் சங்காலத்தில் ஆக்கப்படவில்லை. பிற்சங்ககாலத்தில் மூன்று வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களை ஆக்குகின்றன.

பிற்சங்காலம்: *ஊது* 'எக்காளம் ஊது'; மோது 'அறை, *அடி*'; காது 'கொலை' (சூடா)

(C)VV*று* என்ற அசை அமைப்பொழுங்கில் இருபத்தி இரண்டு வினைகள் உள்ளன. இவற்றில் நான்கு சங்ககாலத்திலும் ஏழு பிற்சங்ககாலத்திலும் காணப்படுகின்றன. மேற்சொன்ன ஐந்து அமைப்பொழுங்குகளில் இவ்வகை அமைப்பொழுங்கு தான் சீரான பின்னொட்டாகப் பெயர்களை ஆக்குகின்றன.

சங்ககாலம்: *நாறு* 'சக்தி' (மலை), 'சுண்ணாம்பு' (மது); *பாறு* 'அழிவு' (புற்); *மாறு* 'விரோதம்' (புற்), 'பதில்' (கலி), 'இறப்பு' (புற்); *நாறு* 'நாற்று' (பெரும்)

பிற்சங்காலம்: *ஏறு* 'உயரம்' (பெரிய்); *சீறு* 'கோபம்' (ஏலா); *தூறு* 'பழி' (அருட்); *கீறு* 'கோடு', 'துண்டு'; *தேறு* 'தெளிவு', 'உறுதி' (சூடா); *பீறு* 'கிழிசல்', 'கந்தை' (சங்.அக); *வீறு* 'அடி'.

(C)VNPஉ என்ற அசை அமைப்பொழுங்கில் ஆறு துணை அமைப்பொழுங்குகள் உள்ளன: (C)V*ங்கு*, (C)V*ஞ்சு*, (C)V*ண்டு*, (C)V*ந்து*, (C)V*ம்பு*, (C)V*ன்று*.

(C)V*ங்கு* என்ற அசை அமைப்பொழுங்கில் பன்னிரண்டு வினைகள் உள்ளன. மூன்று வினைகள் பிற்சங்காலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களை ஆக்குகின்றன. இவை இலக்கியச் சொற்கள் அல்ல.

பிற்சங்காலம்: *மங்கு* 'அழிவு, நஷ்டம்'; *தங்கு* 'வசித்தல்' (விஅ); *பொங்கு* 'செழிப்பு', 'அதிர்ஷ்டம்' (ஜாகி)

(C)V*ஞ்சு* அசை அமைப்பொழுங்கில் பதினொன்று வினைகள் உள்ளன. இவற்றில் *மிஞ்சு* 'மிகைபடு' அதன் பூஜியப் பின்னொட்டாகப் பெயரை ஆக்குகின்றது.

பிற்சங்காலம்: *மிஞ்சு* 'அதிகம்'

(C)V*ண்டு* அசை அமைப்பொழுங்கில் பதினைந்து வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து மூன்று பூஜியப் பின்னொட்டாகப் பெயர்கள் ஆக்கம் பெறுகின்றன. ஒன்று மட்டுமே பிற்சங்ககாலப் பனுவலில் காணப்படுகின்றது. ஆனால் மூன்று ஆக்கங்களும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிற்சங்ககாலம்: *மிண்டு* 'வலிமை' (தேவா); 'செருக்கான பேச்சு' (வால); *மண்டு* 'நெருக்குதல்', 'மிகுதி' (விஅ)

(C)Vந்து அசை அமைப்பொழுங்கில் பனிரண்டு வினைகள் உள்ளன. மூன்று வினைகள் மட்டுமே அவற்றின் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களை ஆக்குகின்றன. இவற்றில் *முந்து* மட்டுமே இலக்கியப் பனுவலில் காணப்படுகின்றது. இவ்வசைப்பு பெயர்கள் பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை.

பிற்சங்ககாலம்: *முந்து* 'பழமை', 'தொடக்கம்' (திவா) ; *கொந்து* 'துள்ளல் விளையாட்டு'; *குந்து* 'துள்ளுதல்', 'குந்துகை'.

(C)V*ம்பு* அசை அமைப்பொழுங்கில் பதினைந்து வினைகள் உள்ளன. மூன்று வினைகள் மட்டுமே அவற்றின் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களை ஆக்குகின்றன. இவை யாவும் இலக்கியம் சாராதன.

பிற்சங்ககாலம்: *எம்பு* 'உயர்தல்' (பே.வ); *சிம்பு* 'சுண்டி இழுத்தல்' (கொச்சை); *நெம்பு* 'நெம்புகோலால் தூக்குவது'

(C)V*ன்று* அசை அமைப்பொழுங்கில் ஒன்பது வினைகள் உள்ளன. அவற்றில் *அன்று* 'வெறு, கோப்படு' என்ற வினை பிற்சங்ககால இலக்கியப் பனுவலில் பூஜியப் பின்னொட்டாகப் பெயரை ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: அன்று ‘வேறுபாடு’, ’ஐயம்’ (அருட்)

(C)VVNPஉ என்ற அசை அமைப்பொழுங்குக்கு ஆறு துணை அமைப்பொழுங்குகள் உள்ளன: (C)VV*ங்கு*, (C)VV*ஞ்சு*, (C)VV*ண்டு*, (C)VV*ந்து*, (C)VV*ம்பு*, (C)VV*ன்று*.

(C)VV*ங்கு* அமைப்பொழுங்கில் பன்னிரண்டு வினைகள் உள்ளன. இவற்றுள் ஐந்து வினைகள் உள்ளார்ந்த செயப்படுபொருள் குன்றிய அல்லது குன்றா வினைகளாகும்; ஏழு வினைகள் ஆக்கப்பட்ட செயப்படுபொருள் குன்றிய அல்லது குன்றா வினைகளாகும். உள்ளார்ந்த வகுப்பைச் சார்ந்த வினைகள் பூஜியப் பின்னொட்டாகப் பெயரை ஆக்குகின்றன. இவை யாவும் இலக்கியம் சாரா சொற்களாகும்.

பிற்சங்ககாலம்: *தாங்கு* ‘தாங்குதல்’ (ஜாகிமொ), ’ஆதரவு’ (வ.வ); *தூங்கு* ‘சிறப்பு’ (அக.நிக) ‘மிகுதி’ (வி.அக); *வாங்கு* ‘வளைவு’ (நாமதிப); *வாங்கு* ‘அடி’, ‘மோசடி’

(C)VV*ண்டு* அமைப்பொழுங்கில் ஒன்பது வினைகள் உள்ளன. இவற்றில் மூன்று வினகள் பிற்சங்ககாலத்தில் தமது பூஜியப் பின்னொட்டாகப் பெயரை ஆக்குகின்றன. இவை யாவும் இலக்கியம் சாரா சொற்களாகும்.

பிற்சங்ககாலம்: *ஈண்டு* ‘வேகம்’ (திவா), *தாண்டு* ‘குதி’, ‘அகந்தை’; தூண்டு ’கிளர்ச்சியூட்டுதல்’.

(C)VV*ந்து* அமைப்பொழுங்கில் பத்து வினைகள் உள்ளன. இவற்றில் ஒரு வினை பிற்சங்ககாலத்தில் தனது பூஜியப் பின்னொட்டாகப் பெயரை ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: *நீந்து* ‘கடல்’ (சீவ்)

C)VV*ம்பு* அசை அமைப்பொழுங்கில் பன்னிரண்டு வினைகள் உள்ளன. இவற்றில் ஒரு வினை சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயரை ஆக்குகின்றது; மூன்று வினைகள் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களை ஆக்குகின்றன.

சங்ககாலம்: *கூம்பு* 'மொட்டு' (புற்)

பிற்சங்ககாலம்: *கோம்பு* 'கோபம்' (புக்); *சாம்பு* 'முரசு' (சூடா); *சோம்பு* 'சோம்பல்' (தொல்.உரை), 'மந்தம்' (திருமந்த்)

(C)VV*ன்று* அசை அமைப்பொழுங்கில் இரண்டு வினைகள் உள்ளன. அவற்றில் *ஊன்று* என்ற வினை பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயரை ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: *ஊன்று* 'ஆதாரம், ஆதரவு' (ஞான)

(C)VCVNPஉ அமைப்பொழுங்கில் ஆறு துணை அமைப்பொழுங்குகள் உள்ளன: (C)VCV*ங்கு*, (C)VCV*ஞ்சு*, (C)VCV*ண்ட்*, (C)VCV*ந்த்*, (C)VCV*ம்ப்*, (C)VCV*ன்ற்*.

(C)VCV*ங்கு* அசை அமைப்பொழுங்கில் நூற்றி இரண்டு வினைகள் உள்ளன. இவற்றில் இரண்டு வினைகள் சங்ககாலத்திலும் பதினொன்று வினைகள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களை ஆக்குகின்றன.

சங்ககாலம்: *அணங்கு* 'வலி' (முரு), 'துயரம்' (குற்); *விலங்கு* 'குறுக்காக இருப்பது' (புற்)

பிற்சங்ககாலம்: *இணங்கு* 'ஈடு' (கோ); *இயங்கு* 'இயக்கம்' (சீவ்); *குரங்கு* 'வளைவு' (சில்); *கறங்கு* 'பட்டம்' (கல்), 'ஓசை' (பிங்), 'சுழல்' (திவா); *நொறுங்கு* 'சிறுகல்பொடி' (சூடா), 'தூள்' (சூளா); *நுணுங்கு* 'தூள்' (பிங்); *நுறுங்கு*

‘சிறுகல்பொடிகள்’ (தொல்.சொல்.உரை); *சுணங்கு* ’உடல்மொலிவு’ (வி.அ); *சழங்கு* ‘பலவீனநிலை’; *நுடங்கு* ‘நடுக்கம்’, ’மெல்லியதன்மை’ (யா.அக); *விலங்கு* ‘தளை’ (சூடா)

(C)VCV*ஞ்சு* அசை அமைப்பொழுங்கில் ஐந்து வினைகள் உள்ளன. இதில் ஒரு வினை லெக்சிகனில் பூஜியப் பின்னொட்டாகப் பெயராகப் பொருள் கொள்ளப்படுகின்றது.

சங்ககாலம்: *முரஞ்சு* ‘முதிர்ச்சியடைதல்’ (மலை)

(C)VCV*ண்டு* அசை அமைப்பொழுங்கில் பதிமூன்று வினைகள் உள்ளன. இவற்றில் ஒரு வினை பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்கின்றது. இது சீரான பெயரல்ல.

பிற்சங்ககாலம்: *முரண்டு* ‘எதிர்ப்பு’ (யாப்.உரை)

C)VCV*ந்து* அசை அமைப்பொழுங்கில் பதிநான்கு வினைகள் உள்ளன. இவற்றில் ஒரு வினை பிற்சங்காலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயராக்கம் செய்கின்றது.

பிற்சங்ககாலம்: *அழுந்து* ‘நீரின் ஆழம்’ (திவா)

C)VCV*ம்பு* அசை அமைப்பொழுங்கில் நாற்பது வினைகள் உள்ளன. இவற்றில் ஒன்பது வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களை ஆக்கம் செய்கின்றன. இவற்றில் ஆறு சங்ககாலத்தையும் மூன்று பிற்சங்ககாலத்தையும் சாரும்.

சங்ககாலம்: *அரும்பு* ‘மொட்டு’ (குற்); *அசும்பு* ‘சேறு’ (புற்); *சிலம்பு* “கிலுங்கும் காற்சிலம்பு’ (ஐங்); *செதும்பு* ’மெல்லிய நீரோட்டம்’ (கலி); *புலம்பு* ‘ஓசை’ (குற்); *விதும்பு* ‘விரைவு’ (புற்); *குழம்பு* ‘அடர்த்தியான திரவம்’ (பெரும்.340)

பிற்சங்ககாலம்: *சிதம்பு* ‘இழிநிலை’ (தேவா), ’பதனழிவு’ (ஜாகி); *குழம்பு* ‘கலவை, திரவம்’ (திவ்.இயற்), ‘கறிகுழம்பு’ (பிங்), ‘சேறு’; *விளம்பு* ‘சொல்’ (நன்)

(C)VCV*ன்று* அசை அமைப்பொழுங்கில் இரண்டு வினைகளே உள்ளன. இவை சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டாகப் பெயராக்கம் செய்யவில்லை.

(C)VCVVNPஉ அசை அமைப்பொழுங்கில் ஐந்து துணை அசை அமைப்பொழுங்குகள் உள்ளன: (C)VCVV*ங்கு*, (C)VCVV*ஞ்சு*, (C)VCVV*ண்டு*, (C)VCVV*ந்து*, (C)VCVV*ம்பு*. (C)VCVV*ங்கு* அசை அமைப்பொழுங்கில் ஒரு வினையும் (C)VCVV*ஞ்சு* அமைப்பொழுங்கில் மூன்று வினைகளும் (C)VCVV*ண்டு* அமைப்பொழுங்கில் ஒரு வினையும் (C)VCVV*ந்து* அமைப்பொழுங்கில் இரண்டு வினைகளும் (C)VCVV*ம்பு* அமைப்பொழுங்கில் ஐந்து வினைகளும் உள்ளன. (C)VCVV*ண்டு* அமைப்பொழுங்கைச் சார்ந்த *பிறாண்டு* அதன் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரையும் (C)VCVV*ம்பு* அமைப்பொழுங்கைச் சார்ந்த *குணம்பு* பூஜியப் அதன் பின்னொட்டாக்கப் பெயரையும் பிற்சங்ககாலத்தில் ஆக்கம் செய்யும்.

பிற்சங்ககாலம்: *பிராண்டு* ‘கீறல்’ (திருவிருந்); *குணம்பு* ‘மகிழ்ச்சியான பேச்சு’ (வி.அ)

(C)VC$_2$உ அசை அமைப்பொழுங்கில் ஆறு துணை அசை அமைப்பொழுங்குகள் உள்ளன: (C)V*ணு*, (C)V*னு*, (C)V*ரு*, (C)V*லு*, (C)V*வு*, (C)V*ளு*.

(C)V*ணு* அசை அமைப்பொழுங்கில் நான்கு வினைகள் உள்ளன. இவற்றில் இரண்டு வினகள் சங்ககாலத்தில் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கம் செய்கின்றன.

சங்ககாலம்: *நாணு* 'வெட்கம்' (குறி); *நாண்* 'நாணம்' (தொல்); *கோண்* 'விரோதம்' (அக. 372.15), 'கோணல்' (வாச்)

(C)V*னு* அசை அமைப்பொழுங்கில் ஒரு வினையே உள்ளது. இது அதன் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை சங்ககாலத்தில் ஆக்கம் செய்கின்றது. இது பிற்சங்காலத்திலும் பயன்பாட்டில் இருக்கிறது.

சங்ககாலம்: *கூன்* 'கூனல்' (புற்), பிற்சங்ககாலம்: *கூன்* 'கூன்முதுகு' (சில)

C)V*வ* அசை அமைப்பொழுங்கில் பதினான்கு வினைகள் உள்ளன. இவற்றில் எட்டு வினைகள் அதன் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயராக்கம் செய்கின்றன. ஆறு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் சங்ககாலத்தைச் சார்ந்தவை; இரண்டு பெயர்கள் பிற்சங்ககாலத்தைச் சார்ந்தவை. இறுதி *வ* சங்ககாலத்தில் எல்லாப் பெயர்களிலும் நீக்கப்படுகின்றது.

சங்ககாலம்: *ஏ* 'அம்பு' (அக); *ஏவ* 'அம்பு' (கந்த்); *ஓ* 'நிறுத்துதல்' (மலை); *ஓவ* 'நீக்குதல்' (கந்த்); *கா* 'ஒவ்வொரு முனையிலும் கயிறுகள் தொங்கும் கழி' (பெரும்); கூ 'புலம்பல்' (புற்); *பா* 'பாவு' (அக.293-4); *வா* 'தாவுதல்' (அக.160.10);

பிற்சங்ககாலம்: *தாவ* 'அழிவு' (குறள்); *தாவ* 'குதித்தல்', 'நகர்தல்' (பிங்); *மே* 'ஆசை' (வி.அ)

(C)VC$_2$C$_3$உ அசை அமைப்பொழுங்கில் ஆறு துணை அசை அமைப்புகள் உள்ளன: (C)V*ண்ணு*, (C)V*ம்மு*, (C)V*ன்னு*, (C)V*ல்லு*, (C)V*வ்வு*, (C)V*ள்ளு*.

(C)V*ண்ணு* அசை அமைப்பொழுங்கில் எட்டு வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து சங்ககாலத்தில் நான்கு பின்னொட்டாக்கப் பெயர்கள் ஆக்கப்படுகின்றன. பிற்சங்காலத்தில் இவ்வினைகளின் பூஜியப்பின்னொட்டுப் பெயர்கள் காணப்படவில்லை.

சங்ககாலம்: *எண்* 'எண்ணம்' (புற்); *எண்* 'நம்பர்' (தொல்); *எண்ணு* 'எண்ணுதல்' (மலை); *பண்* 'தயாரித்தல்' (புற்); *பண்ணு*; *மண்* 'கழுவுதல்' (பரி); *மண்ணு* 'அலங்காரம்' (பு.வெ)

(C)V*ம்மு* அசை அமைப்பொழுங்கில் ஒன்பது வினைகள் உள்ளன. இவற்றில் இரண்டு பிற்சங்ககாலத்தில் அவற்றின் பூஜியப்பின்னொட்டுப் பெயர்களை ஆக்கம் செய்கின்றன.

பிற்சங்ககாலம்: *தும்மு* 'தும்முதல்' (குறள்); *விம்மு* 'சுமை', 'எடை' (நாம)

(C)V*ன்னு* அசை அமைப்பொழுங்கில் பதினொன்று வினைகள் உள்ளன. இவற்றில் இரு வினைகள் சங்ககாலத்தி அவற்றின் பூஜியப்பின்னொட்டுப் பெயர்களை ஆக்கம் செய்கின்றன. பிற்சங்காலத்தில் இவ்வினைகள் பூஜியப்பின்னொட்டுப் பெயர்களை ஆக்கம் செய்யவில்லை.

சங்ககாலம்: *மின்*, *மின்னு* 'மின்னல்' (அக); *பின்னு* 'பின்னல்' (புற)

(C)V*ல்லு* அசை அமைப்பொழுங்கில் பத்து வினைகள் உள்ளன. இவற்றில் மூன்று வினகள் மட்டும் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை சங்ககாலத்தில்

உருவாக்குகின்றன. பிற்சங்காலத்தில் இவ்வினைகளின் பூஜியப்பின்னொட்டுப் பெயர்கள் இல்லை.

சங்ககாலம்: *சொல்* 'வார்த்தை' (தொல்); *எல்* 'இரவு' (அக); *புல்லு* 'தழுவுதல்' (கலி 3.13)

(C) *Vவ்வு* அசை அமைப்பொழுங்கில் பத்து வினைகள் உள்ளன. இவற்றில் இரு வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை சங்ககாலத்தில் உருவாக்குகின்றன; ஐந்து வினைகள் அவற்றின் பூஜிய பின்னொட்டாக்கப் பெயர்களை பிற்சங்ககாலத்தில் ஆக்குகின்றன.

சங்ககாலம்: *கவ்வு* 'உண்ணுதல்' (பெரும்); *வவ்வு* 'பிடுங்குதல்' (பரி)

பிற்சங்ககாலம்: *தவ்வு* 'துள்ளுதல்'; *தவ்வு* 'சுருங்குதல்'; *துவ்வு* 'புலன்களின் நிறைவு; (சுட்டா), 'உணவு'; *தெவ்வு* 'பறித்தல்'; *தெவ்* 'பறித்தல்' (பிங்); *நொவ்வு* 'உடல்மெலிவு', 'மெல்லிய தன்மை'

(C)Vள்ளு அசை அமைப்பொழுங்கில் ஏழு வினைகள் உள்ளன. இவற்றில் இரண்டு வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை சங்ககாலத்தில் ஆக்குகின்றன; ஐந்து வினைகள் அவற்றின் பூஜிய பின்னொட்டாக்கப் பெயர்களை பிற்சங்ககாலத்தில் ஆக்குகின்றன.

சங்ககாலம்: *எள்ளு, எள்* 'சிறுமைப்படுத்துதல்' (புற்); *உள்* 'உள்ளம்' (நற்)

பிற்சங்ககாலம்: *அள்ளு, அள்* 'கைபிடி *அளவு'* (சிவ); *கிள்ளு* 'கிள்ளுதல்' ; *தள்ளு, தள்* 'தள்ளுதல்' (தின்); *துள்ளு, துள்* 'குதித்தல்', 'அகந்தை' (அருட்பா); *நுள்ளு* '*கிள்ளு, கடி*'

$(C_1)VCVC_3$உ அசை அமைப்பொழுங்கில் ஆறு துணை அசை அமைப்பொழுங்குகள் உள்ளன: $(C_1)VCV$*ஞ*, $(C_1)VCV$*ன*, $(C_1)VCV$*ண*, $(C_1)VCV$*ம*, $(C_1)VCV$*ல*, $(C_1)VCV$*ள*.

$(C_1)VCV$*ஞ* என்ற அசை அமைப்பில் வரும் ஒரு வினையும் $(C_1)VCV$*ன* என்ற அசை அமைப்பில் வரும் இரு வினைகளும் பூஜியப் பின்னொட்டுப் பெயர்களை உருவாக்கவில்லை. $(C_1)VCV$*ண* அசை அமைப்பொழுங்கில் ஒரு வினை மட்டுமே உள்ளது. இது ஒரு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரைச் சங்ககாலத்தில் ஆக்குகின்றது. இது பிறசங்ககாலத்திலும் தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளது.

சங்ககாலம்: *முரண்* 'மாறுபாடு', 'எதிர்ப்பு' (புற்)

$(C_1)VCV$*ம* என்ற அசை அமைப்பில் பதினைந்து வினகள் உள்ளன. இவற்றில் இரண்டு வினைகள் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை சங்ககாலத்தில் ஆக்குகின்றன. பிற்சங்ககாலத்தில் வினைகள் உள்ளன ஆனால் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் ஆக்கப்படவில்லை. இந்த பூஜியப் பின்னொட்டுப் பெயர்களும் பிற பின்னோட்டாக்கப் பெயர்களால் இடம் பெயர்க்கப்படுகின்றன.

சங்ககாலம்:*இருமு* 'இருமல்' (புற்); *உருமு*, 'இடி' (நற்); *உரும்* 'இடி'

சங்ககால *இருமு* பிற்சங்ககாலத்தில் *இருமல்* எனபதால் இடம்பெயர்க்கப்பட்டுள்ளது.

$(C_1)VCV$*ல* அசை அமைப்பில் ஆறு வினைகள் உள்ளன. இவற்றில் ஒரு வினை பிற்சங்ககாலத்தில் அதன் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: *நுதல்* 'சொல்' (வி.அ)

(C$_1$)VCV*ரு* என்ற அசை அமைப்பில் மூன்று வினைகள் உள்ளன. இவற்றில் ஒரு வினை மட்டும் சங்ககாலத்தில் சீரான பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்குகின்றது.

சங்ககாலம்: *அருள்* 'கருணை' (குற்)

(C)VPP*உ* என்ற அசை அமைப்பொழுங்கு ஆறு துணை அமைப்பொழுங்குகளைக் கொண்டுள்ளது: (C)V*க்கு*, (C)V*ச்சு*, (C)V*ட்டு*, (C)V*த்து*, (C)V*ப்பு*, (C)V*ற்று*.

C)V*க்கு* என்ற அசை அமைப்பொழுங்கு இருபத்தி இரண்டு வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் பதினொன்று பிற்சங்ககாலத்தில் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன. சங்ககாலத்தில் மூன்று வினைகள் உள்ளன: *எக்கு*, *நக்கு*, *விக்கு*. இவைகள் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கவில்லை.

பிற்சங்ககாலம்: *கக்கு* 'கக்குவான்' (புக்); *சிக்கு* 'சிக்கல்' (கம்), 'கண்ணி' (வவ); *சொக்கு* 'மதிமயக்கநிலை' (புக்); *திக்கு* 'திக்குதல்' ; *நுக்கு* 'குழி, துண்டு (விஅ); *நெக்கு* 'தள்ளல்' (பேவ); *மக்கு* 'மந்தத்தன்மை, 'முட்டாள்'; *முக்கு* 'முனைப்பு', 'மூச்சுத்திணறல்'; *வக்கு* 'தீய்தல்' (கம்); *விக்கு* 'விக்கல்' (நிக); *நொக்கு* 'பிளவு' (யாழ்.அ).

(C)V*ச்சு* என்ற அசை அமைப்பொழுங்கு ஐந்து வினகளைக் கொண்டுள்ளது. இவற்றில் மூன்று வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன. இவ்வினைகளும் பெயர்களும் பிற்சங்ககாலத்தைச் சாரும்.

பிற்சங்ககாலம்: *நச்சு* 'பிரச்சனை' (பேவ), 'மழலை' (வி.அ); *மெச்சு* 'பாராட்டு' (வின்.அ); *விச்சு* 'வித்து' (பிங், தேவா)

(C)V*ட்டு* என்ற அசை அமைப்பொழுங்கு பதினாறு வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் ஐந்து வினைகள் சங்ககாலத்தி அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன; பன்னிரண்டு வினைகள் பிற்சங்ககாலத்தில் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன.

சங்ககாலம்: *கட்டு* 'அடர்த்தியான இலைகள்' (புற்); *கட்டு* 'கணிப்பு' (தொல்); *கொட்டு* 'மத்தளம் கொட்டுதல்' (ஐங்); *சுட்டு* 'கருதப்படும் பொருள்' (தொல்), 'சுட்டெழுத்து' (தொல்); *முட்டு* 'தடை' (தொல்); 'குறைவு' (புற்)

பிற்சங்ககாலம்: *கட்டு* 'கற்றை', 'அணைக்கட்டு', 'முடிச்சு'; *எட்டு* 'காலடி' (பேவ); *ஒட்டு* 'தொடர்பு' (புக்), 'ஒப்பீடு' (வாய்), 'தையல் ஒட்டு', 'தாவர ஒட்டு' (பேவ); *ஒட்டு* ' உறுதிமொழி' (அருட்); *கொட்டு* 'ஊற்றுதல்'; *சொட்டு* 'துளி'; *சொட்டு* 'குட்டு'; *தட்டு* 'அடி, அறை' (சில.உரை), 'தடை'; *திட்டு* 'வசை'; *தெட்டு* 'வஞ்சனை' (தாயு), 'பறித்தல்'; *நெட்டு* 'தள்ளுதல், 'தாக்குதல்'; *நொட்டு* 'புணர்தல்'; *வெட்டு* 'வெட்டுதல்'

(C)V*த்து* என்ற அசை அமைப்பொழுங்கு பதினெட்டு வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் ஐந்து வினைகள் சங்ககாலத்தைச் சாரும். *வித்து* என்ற வினை மட்டும் சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும். பன்னிரண்டு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் பிற்சங்ககாலத்தில் ஆக்கப்பட்டுள்ளன.

சங்ககாலம்: *வித்து* 'விதை' (நற்)

பிற்சங்காலம்: *அத்து* 'தையல்'; *எத்து* 'ஏமாற்றுதல்' (திருவா); *ஒத்து* 'தாள ஒற்று'; *கத்து* 'அழுதல்', 'பிதற்றுதல்'; *குத்து* 'கையால் அடித்தல்' (கம்), 'உந்துதல்', 'கருவியால்

குத்துவது'; *கெத்து* 'தந்திரம்', 'தந்திரமான வார்த்தை' (அஷ்ட); *கொத்து* 'கிளறுதல்', 'சிறுதுண்டுகளாய் வெட்டுதல்', 'சிறிய களைக்கோடு' (வவ); *செத்து* 'உளியால் வெட்டல்' (சீவ்.உரை); *தத்து* 'துள்ளுதல்', 'தவறு' (வி.பு); *தொத்து* 'சம்பந்தம்' (திருமந்), 'தொத்துவியாதிக்குணம்'; *பொத்து* 'மூடுதல், நிறுத்துதல்'; *முத்து* 'முத்தம்' (வவ); *மொத்து* 'அடி' (சில)

(C)V*ப்பு* என்ற அசை அமைப்பொழுங்கு எட்டு வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் இரண்டு வினைகள் சங்காலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்; நான்கு வினைகள் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

சங்ககாலம்: *செப்பு* 'விடை' (தொல்); *தப்பு* 'தவறு' (பதிற்)

பிற்சங்காலம்: *ஒப்பு* 'ஒப்புதல்'; *கப்பு* 'இரகசியம் (வவ); 'கவர்ச்சி' (சிபோ); *துப்பு* 'உமிழ்நீர்'; *நொப்பு* 'தடுத்தல்', 'குட்டி முலையில் பால்குடிப்பதை தடுக்கும் ஒரு தடை' , *தப்பு* 'ஒருவகைப்பறை' (ஆழ), 'அடித்தல்'.

(C)V*ற்று* என்ற அசை அமைப்பொழுங்கு பதிமூன்று வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றிலிருந்து சங்ககாலம் ஐந்து பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களையும் பிற்சங்ககாலம் ஏழு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களையும் கொண்டுள்ளன.

சங்ககாலம்: *ஒற்று* 'உளவு' (தொல்); 'உளவாளி' (குறள்); *குற்று* 'குற்றுதல்' (புற்); *சுற்று* 'கால்விரலணி' (கலி); *பற்று* 'ஓய்விடம்' (பரி), 'அன்பு' (அக.நிக); *முற்று* 'முற்றுவினை' (தொல்), 'முதிர்ச்சி' (நற்), 'முற்றுகை' (கலி 67-5)

பிற்சங்காலம்: *எற்று* ‘உதைத்தல்’; *ஒற்று* ‘ஒத்தடம்’; செற்று ’அடர்த்தி’ (பிங்); *துற்று* ‘உணவு’ (பு.வெ), ‘கூட்டம்’ (பிங்); *முற்று* ‘முழுமை’ (தேவா); *வற்று* ‘கடல்நீர் வடிகை’ (வின்.அ); *தொற்று* ’சம்பந்தம்’ (திவ்.), ‘வியாதியின் ஒட்டுத்தொடர்பு’; *தெற்று* ’பின்னுதல்’, ‘செறிவு’ (திருவா), மாறுபாடு (பிங்)

(C)VVPPஉ அசை அமைப்பொழுங்கு உள்ள வினைகளுக்கு ஆறு துணை அசை அமைப்பொழுங்குகள் உள்ளன: (C)VV*க்கு*, (C)VV*ச்சு*, (C)VV*ட்டு*, (C)VV*த்து*, (C)VV*ப்பு*, (C)VV*ற்று*.

(C)VV*க்கு* அசை அமைப்பொழுங்கு ஆறு வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றிலிருந்து சங்ககாலம் ஒரு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரையும் பிற்சங்ககாலம் இரண்டு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களையும் ஆக்கியுள்ளன.

சங்ககாலம்: *நோக்கு* ‘பார்வை’ (பதிற்);

பிற்சங்ககாலம்: *தாக்கு* ‘தாக்கம்’, ‘சண்டை’ (சூடா); *தேக்கு* ‘ஏப்பம்’ (குறள்.உரை)

மற்றொரு (C)VV*க்கு* அசை அமைப்பொழுங்கு எட்டு வினகளைக் கொண்டுள்ளன. இவற்றில் ஒரு வினை பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கியுள்ளது.

ஆக்கு ‘உருவாக்கம்’ (தேவா)

(C)VV*ச்சு* அசை அமைப்பொழுங்கு இரண்டு வினைகளைக் கொண்டுள்ளது. இவை பிற்சங்ககாலத்திலேயே வருகின்றன. இவற்றில் ஒன்று அதன் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: *பீச்சு* ‘பீச்சப்பட்டது’

(C)VV*ட்டு* அசை அமைப்பொழுங்கு ஐந்து வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் நான்கு பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன.

பிற்சங்ககாலம்: *சாட்டு* 'பிறரிடம் சார்த்துகை', 'குற்றஞ்சுமத்துதல்'; *தீட்டு* 'கூர்மையாகுதல்' (பெருங்), 'ஓலைக் குறிப்பு', 'பூச்சு' (வாச்); மாட்டு 'அடி' (பேவ); *மூட்டு* 'முட்டு' (கம்)

மற்றொரு (C)VV*ட்டு* அசை அமைப்பொழுங்கு பதிநான்கு வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் ஐந்து சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களையும் இரண்டு பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களையும் ஆக்கும்.

பிற்சங்ககாலம்: *காட்டு* 'எடுத்துக்காட்டு' (நான்); *நாட்டு* 'நிலை' (சீவ்); *பூட்டு* 'பூட்டு' (பிங்)

சங்ககாலம்: *ஊட்டு* 'ஊட்டுதல்' (அக.); *பூட்டு* 'பூட்டுதல்' (புற்); *மூட்டு* 'மூளச்செய்தல்' (அக); *மூட்டு* 'கட்டுமான மாதிரி' (தொல்); *வாட்டு* 'பொரித்த இறைச்சி'

(C)VV*த்து* அசை அமைப்பொழுங்கு ஐந்து வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் நான்கு வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை பிற்சங்காலத்தில் ஆக்குகின்றன.

பிற்சங்ககாலம்: *ஏத்து* 'புகழ்தல்' (நாலா); *சாத்து* 'அடி' , 'நாற்று' (); பாத்து 'நீக்குதல்' (சீவ்), 'பங்கிடுதல்' (சூடா), 'பங்கு'; பீத்து 'தற்பெருமை பேசுதல்'

(C)VV*ப்பு* அசை அமைப்பொழுங்கு ஏழு வினைகளைக் கொண்டுள்ளது. ஆனால் ஒரே ஒரு வினையான *சோப்பு* 'அடி' அதன் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை பிற்சங்காலத்தில் ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: *சோப்பு* 'அடி' (திவ்.பெரி)

மற்றொரு C)VV*ப்பு* அசை அமைப்பொழுங்கு இரண்டு வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் *கூப்பு* என்ற வினை பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை பிற்சங்காலத்தில் ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: *கூப்பு* 'கைகளைக் கூப்புதல்' (வாய்)

(C)VV*ற்று* அசை அமைப்பொழுங்கு ஆறு வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் நான்கு வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை பிற்சங்காலத்தில் ஆக்குகின்றன.

பிற்சங்ககாலம்: *சாற்று* 'பிரகடனம்', 'ஓசை' (கல்லா); *தாற்று* 'கொழித்தல்'; தூற்று 'பொலி தூற்றுதல்', 'பழிப்பு'; *போற்று* 'புகழ்' (சங்.அக), 'பாதுகாப்பு' (யாழ்.அக)

மற்றொரு (C)VV*ற்று* அசை அமைப்பொழுங்கு பதினொன்று வினைகளைக் கொண்டுள்ளது .இவற்றில் பெரும்பாலானவை சங்ககாலத்தில் காணப்படுகின்றன; ஆனால் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குவதில்லை. இரண்டு வினைகள் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன.

ஞாற்று 'தொங்குதல்' (பிங்); *தேற்று* 'தெளிவித்தல்'

(C)VCVPஉ என்ற அமைப்பொழுங்கு ஐந்து துணை அமைப்பொழுங்குகளைக் கொண்டுள்ளன: (C)VCVகு, (C)VCVசு, (C)VCVடு, (C)VCVது, (C)VCVறு.

(C)VCVகு என்ற அமைப்பொழுங்கு முப்பத்தி ஒன்பது வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் ஒன்று சங்ககாலத்தில் ஒரு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும்; ஒன்பது பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

சங்ககாலம்: *பருகு* 'குடித்தல்' (பெரும்)

பிற்சங்ககாலம்: *அருகு* 'அண்மை' (பாரத); *புளுகு* 'வெளிப்படையான பொய்'; *முடுகு* 'முடுகிச் செல்லும் சந்த வகை' (வின்.அக); *முறுகு* 'கெட்டித்தன்மை' (விருத்.வ்யா); *மெழுகு* 'சாணகம்' (மன்); *திருகு* 'முறுக்கு', 'திருகாணி', 'குற்றம்' (சி.சி); *தனகு* 'உள்ளக்களிப்பு' (சூடா); *பிசகு* 'தவறு' (பண); *செதுகு* 'தீங்கு' (தேவா)

(C)VCVசு என்ற அமைப்பொழுங்கு ஒன்பது வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் ஒரு வினை மட்டும் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும்.

பிற்சங்ககாலம்: *விரசு* 'விரைவு', 'விவரமான கணக்கு'

(C)VCVடு என்ற அமைப்பொழுங்கு ஐந்து வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் மூன்று வினைகள் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும். இவை யாவும் இலக்கியமல்லா சொற்கள்; அவை கிளைமொழிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

நெருடு ‘நிமிண்டுதல்’; *நெருடு* ‘சூது, வஞ்சகம்’ (ஜாகிமொ); *திருடு* ‘திருட்டு, கொள்ளை’

(C)VCV*று* என்ற அமைப்பொழுங்கு நாற்பது வினகளைக் கொண்டுள்ளது. இவற்றில் *தவறு* என்ற வினை மட்டும் சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும். ஐந்து வினைகள் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

சங்ககாலம்: *தவறு* ‘பிழை’ (குற்);

பிற்சங்ககாலம்: *விடறு* ‘நடுங்குதல்’ (மென்); *இடறு* ‘தடை’ (வின்.அக); *குளிறு* ‘ஒலி, கிலுகிலுப்பு ஒலி’ (சூடா), *ஒளிறு* ‘பிரகாசம்’ (கந்த்); *பிளிறு* ‘பேரோசை’ (தேவா)

(C)VC_2P*உ* என்ற அசை அமைப்பொழுங்கு இரண்டு துணை அசை அமைப்பொழுங்குகளைக் கொண்டுள்ளன: (C)VC_2*கு*, (C)VC_2*து*.

(C)VC_2*கு* என்ற அசை அமைப்பொழுங்கு முப்பது வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் *உட்கு* ’பயப்படு’ என்ற வினை சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும். இரண்டு வினைகள் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

சங்ககாலம்: *உட்கு* ‘பயம்’ (குறி)

பிற்சங்ககாலம்: *அக்கு* ‘கசியும் நீர்’ (திவா); *வட்கு* ‘அவமானம்’ (வாய்)

(C)VC_2*து* என்ற அசை அமைப்பொழுங்கு சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்காது

(C)VVCPஉ என்ற அசை அமைப்பொழுங்கு ஒரு அமைப்பொழுங்கை மட்டும் கொண்டுள்ளது. *மூழ்கு* போன்ற வினைகளி இதைச் சாரும். இது நான்கு வினைகளை மட்டும் கொண்டுள்ளன. இவை இரு காலத்திலும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்காது.

(C)VCVVPஉ என்ற அசை அமைப்பொழுங்கு ஒரு அமைப்பொழுங்கை மட்டும் கொண்டுள்ளது. *இடாசு* போன்ற வினைகள் இதைச் சாரும். ஆறு வினைகள் இவ்வமைப்பைச் சாரும். இவை பிற்சங்ககால்த்தில் மட்டும் காணப்படுகின்றன. ஒரு வினை மட்டும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும்.

பிற்சங்ககாலம்: *முழாசு* ‘தீ’ (ஜாகி)

(C)VCVPPஉ என்ற அசை அமைப்பொழுங்கு ஒரு ஆறு துணை அமைப்பொழுங்குகளைக் கொண்டுள்ளது: (C)VCV*க்கு*, (C)VCV*ச்சு*, (C)VCV*ட்டு*, (C)VCV*த்து*, (C)VCV*ப்பு*, (C)VCV*ற்று*.

(C)VCV*க்கு* என்ற அசை அமைப்பொழுங்கு நாற்பத்தி எட்டு வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் மூன்று வினைகள் சங்காலத்திலும் இருபது வினைகள் பிற்சங்ககாலத்திலும் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

சங்ககாலம்: *இழுக்கு* ‘வழுக்கும் தரை’ (குறி); *செருக்கு* ‘எழுச்சி’ (பொருன்); *தருக்கு* ‘பெருமை’ (கலி. 104-72)

பிற்சங்ககாலம்: *அடுக்கு* ‘ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கியது’ (தோயு); *இழுக்கு* ‘குற்றம்’, குறைபாடு’ (குறள்); *உளுக்கு* ‘சுளுக்கு’; கிறுக்கு ‘கிறுக்கல்’, ‘மயக்கம்’; *குலுக்கு* ‘பிலுக்கு’; *சறுக்கு* ‘வழுக்கு, தோல்வி’; *சுருக்கு* ‘முடிச்சு, துக்குக்கயிறு’;

சுளுக்கு 'தசைபிடிப்பு'; செதுக்கு 'செப்பனிடுதல்'; *தடுக்கு* 'தடை'; *தளுக்கு* 'மினுக்கு', ஆடம்பரம்'; *சொடக்கு* 'நெட்டி; கைந்நொடி', 'சோம்பல்'; *துடக்கு* 'சம்பந்தம்', 'தன்னகப்படுத்துவது' (பெருங்); *துவக்கு* 'சங்கிலி' (பிங்), 'கட்டு' (குமர), 'சிக்கல்' (பிங்); *தொடக்கு* 'கட்டு' (பெருங்), 'பாசம்' (திருவா), 'குஞ்சம்' (சீவ); *நருக்கு* 'குட்டுதல்'; *நறுக்கு* 'துண்டு', 'ஓலைசீட்டு'; *பிதுக்கு* 'பிதுங்கச்செய்தல்'; *பிலுக்கு* 'பகட்டு'; பொதுக்கு 'விலக்குதல்', 'மறைப்பு' (சங்.அக); *வழுக்கு* 'சறுக்குதல்', தவறு' (பிங்)

(C)VCV*ச்சு* என்ற அசை அமைப்பொழுங்கு ஏழு வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் நான்கு வினைகள் சங்ககாலத்தைச் சார்ந்தவை. மூன்று பிற்சங்ககாலத்தைச் சார்ந்தவை. இவை பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கவில்லை.

(C)VCV*ட்டு* என்ற அசை அமைப்பொழுங்கு முப்பத்தாறு வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் இருபது வினகள் பிற்சங்ககாலத்தில் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

பிற்சங்ககாலம்: *அதட்டு* 'வெருட்டும் உரத்த சொல்'; *அமட்டு* 'பயமுறுத்துதல்', 'ஏய்ப்பு'; *அரட்டு* 'பயம்'; *அலட்டு* 'வீண்வார்த்தைகளை மேன்மேலும் கூறுதல்', 'உபத்திரவம்' (மச்ச); *இரட்டு* 'ஒலி' (நன்); *இருட்டு* 'இருள்'; *உவட்டு* 'குமட்டுதல்' (வின்.அக); *குமட்டு* 'அருவருப்பினால் வரும் வாந்தி'; *சிமிட்டு* 'இமைப்பு', 'கண்சைகை', 'கைநொடி'; *திரட்டு* 'தொகை நூல்', 'திரட்டுதல்'; *துவட்டு* 'துவட்டுதல்', 'கறிவகை'; *பகட்டு* 'ஆடம்பரம்' (நெடுந்த்), 'பிரகாசம்' (வவ); *புரட்டு* 'கீழ்மேலாகத் திருப்புதல்', 'மாறுபட்ட பேச்சு' (ஆல), 'வஞ்சகம்'; *விரட்டு*

‘துரத்துதல்’; *உருட்டு* ‘உருட்டுதல்’, ‘ஏமாற்றுதல்’, ‘மோதிரம்’ (குலோகோ); *சுருட்டு* ‘புகையிலைச் சுருள்’, ‘சுருட்டுதல்’, ‘தந்திரம்’ (ஜாகி); *தெருட்டு* ‘அறிவிப்பு’, தேற்றுதல்’; *மருட்டு* ‘பயமுறுத்துதல்’ (வி.அக), ‘மயக்குதல்’ (விஅக); *வெருட்டு* ‘பயமுறுத்துகை’ (விஅக), ‘விரைவாக ஓட்டுதல்’; தெவிட்டு ‘உணவில் வெறுப்பு’.

(C)VCV*த்து* என்ற அசை அமைப்பொழுங்கு இருபத்தி நான்கு வினைகளைக் கொண்டுள்ளன. இரண்டு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் இவ்வினகளிலிருந்து பிற்சங்ககாலத்தில் ஆக்கப்பட்டுள்ளன.

பிற்சங்ககாலம்: *கடத்து* ‘படகு’ (வவ), *நிறுத்து* ‘இசைபாட்டின் சிறுபகுதி’ (வவ)

(C)VCV*ப்பு* என்ற அசை அமைப்பொழுங்கு பதிநான்கு வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் இரு வினைகள் பிற்சங்ககாலத்தில் அவற்றின் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன.

பிற்சங்ககாலம்: *உரப்பு* ‘பேரொலி’ (கௌத்), ‘அதட்டு’; *பசப்பு* ‘பாசாங்கு’ (பேவ);

(C)VCV*ற்று* என்ற அசை அமைப்பொழுங்கு இருபத்தி எட்டு வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் ஐந்து மட்டும் அவற்றின் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன. சங்ககாலத்தில் நான்கு உள்ளார்ந்த வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கவில்லை. சங்ககாலத்தைச் சார்ந்த தொல்காப்பியத்தில் *அரற்று* என்ற பின்னொட்டாக்கப் பெயர் காணப்படுகின்றது.

சங்ககாலம்: *அரற்று* ‘உறக்கத்தில் புலம்புதல்’

பிற்சங்ககாலம்: *இயற்று* ‘கருவி, பாத்திரம்’ (ஜாகி) *பிதற்று* ‘அறிவின்றிக் குழறுகை’ (சூடா), (தாயு); *உஞற்று* ‘உற்சாகம்’ (பிங்), ‘முயற்சி’ (இரகு); *சுழற்று* ‘சுழற்றுதல்’

(C)VCVVPPஉ என்ற அசை அமைப்பொழுங்கு மூன்று துணை அசை அமைப்பொழுங்குகளைக் கொண்டுள்ளன: (C)VCVV*ட்டு*, (C)VCVV*த்து*, (C)VCVV*ப்பு*.

இம்மூன்று அசை அமைப்பொழுங்குகளும் பதினொன்று வினைகளைக் கொண்டுள்ளன. இவையாவும் பிற்சங்ககாலத்திலேயே வருகின்றன. (C)VCVV*ட்டு*, (C)VCVV*த்து* அசை அமைப்பு வினைகள் (முறையே இரண்டு, ஐந்து) பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை உருவாக்க வில்லை. (C)VCVV*ப்பு* அசை அமைப்பொழுங்கு நான்கு வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் இரு வினைகள் மட்டுமே கிளைமொழிகளில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன.

பிற்சங்ககாலம்: *இணாப்பு* ’வஞ்சகம்’ (கிமொ); *உலாத்து* ‘உலாவுகை’

(C)VVPPஉ என்ற அசை அமைப்பொழுங்கு இரு துணை அமைப்புகளைக் கொண்டுள்ளன: (C)VV*த்து*, (C)VV*ச்சு*. இவை முறையே ஒன்பது வினைகளையும் இரண்டு வினைகளையும் கொண்டுள்ளன. C)VV*த்து* அசை அமைப்பில் ஒரு வினை சங்ககாலத்திலும் ஒரு வினை பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயராக்கம் செய்கின்றது. *வாழ்த்து* ’புகழ், ஆசீர்வதி’ என்ற வினை இரு காலத்திலும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயராக்கம் செய்கின்றது. *காய்ச்சு* ‘சூடாக்கு’ என்ற வினை பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயராக்கம் செய்கின்றது.

சங்ககாலம்/பிற்சங்ககாலம்: *வாழ்த்து* ‘ஆசி, துதி’

பிற்சங்ககாலம்: *காய்ச்சு* ‘தீயிற் காய்ச்சுகை’

(C)VCVCPPஉ என்ற அசை அமைப்பொழுங்கு ஒரு துணை அமைப்பை மட்டுமே கொண்டுள்ளது: (C)VCVC*த்து*. கிட்டத்தட்ட பதினொன்று வினைகள் இந்த அமைப்பொழுங்கைச் சாரும். இவை இரு காலத்திலும் காணப்படுகின்றன. இவற்றில் எந்த வினையும் இலக்கிய மொழியில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயராக்கம் செய்யவில்லை. *துவர்த்து* ‘ஈரத்தை துடைத்து நீக்கு’ என்ற வினை மட்டும் *துவர்த்து* ‘துவாலை’ (நாஞ்கி) என்ற பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை கிளை மொழியில் ஆக்குகின்றது.

வு-இல் இறுதியுறும் வினைகள் பிற வினைகளிலிருந்து முக்கியமான வழியில் வேறுபடுகின்றன. (C)V……*வு* நான்கு துணை அசை அமைப்பொழுங்குகளைக் கொண்டுள்ளன: (C)VCVவு, (C)VCVV*வு*, (C)VCV*வு* ~ (C)VCVV*வு*, (C)VCV*வு*+(C)VCVV*வு*.

(C)VCV*வு* என்ற அசை அமைப்பொழுங்கு முப்பத்தி ஐந்து வினைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் ஒன்பது வினகள் சங்காலத்திலும் ஒன்பது வினைகள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும்.

சங்ககாலம்: *உயவு* ‘துயரம்’ (ஐங்); *கதவு* ‘கோபம்’ (கலி), *கனவு* ‘கனா’ (புற்); *கவவு* ‘புணர்தல்’ (ஐங்), ’உள்ளீடு’ (மது), *குவவு* ‘திரட்சி’ (புற்)’, ‘கூட்டம்’ (பதிற்); *கெழுவு* ‘நட்பு’ (பரி); *மருவு* ‘சேர்த்தல்’ (குற்); *வெருவு* ‘பயம்’ (தொல்); *கறுவு* ‘கோபம், சினம்’ (முர்)

பிற்சங்ககாலம்: *அலவு* ‘குழப்பம்’ (மணி); *ஒருவு* ‘நிங்குகை’ (ஆனைக்); *குலவு* ‘வளைவு’ (புர்.வெ); *சருவு* ‘சரிவு’; *தழுவு* ‘அணைப்பு’, ’இருகையாலும் அணைக்கும்

அளவு'; *துருவு* 'தேடுதல்' (சூடா), 'துருவுகை' (வவ); *பொருவு* 'ஒற்றுமை' (நெடுந்த்); விரவு 'கலத்தல்'; *வழுவு* 'தவறு'

(C)VCVV*வ* என்ற அசை அமைப்பொழுங்கு பத்து வினைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் *சுலாவு* என்ற வினை மட்டும் பிற்சங்ககாலத்தில் அதன் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும்.

பிற்சங்ககாலம்: *சுலாவு* 'காற்று' (தேவா)

சங்ககால *அசாவு* 'தளர்', *அயாவு* 'துன்புறு', *அவாவு* 'விரும்பு' என்ற வினைகளை முறையே *அசா* 'தளர்ச்சி' (அக.47), *அயா* 'துயரம்' (அக.103-9), *அவா* (புற் 137-3) என்ற பெயர்களுடன் தொடர்புபடுத்தலாம்; இவை வ > ϕ என்ற விதியால் விளைந்ததாகக் கருதலாம்.

(C)VCVV*வ* ~ (C)VCV*வ* என்ற அசை அமைப்பொழுங்கு உள்ள வினைகள் இருபது உள்ளன. இவற்றிலிருந்து ஆக்கப்பட்ட நான்கு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் சங்ககாலத்தையும் ஒன்று பிற்சங்காலதையும் சாரும். இப்பின்னொட்டக்கப் பெயர்களில் -*வ* நீக்கம் பெறுகின்றது.

சங்ககாலம்: *உசா* 'நுட்பமான ஆராய்ச்சி' (தொல்); *உலா* 'பவனி' (அக.இன்); *வினா* 'கேள்வி' (தொல்), 'விசாரணை'; *உயா* 'துயரம்' (தொல்)

C)VCVV*வ* + (C)VCV*வ* என்ற அசை அமைப்பொழுங்கு ஒரே ஒரு வினையை மட்டும் கொண்டுள்ளது. இது பிற்சங்ககாலத்தில் இலக்கியப் பனுவலில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும்.

அளவளாவு 'நெருக்கும்' (குறள்)

இது சீரான பெயரல்ல. இது இலக்கியப் பனுவலில் மட்டும் உருவாக்கப்பட்டுள்ளது.

2.4.1.6. ஆறாவது வினைத்திரிபுவகுப்பின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

ஆறாவது திரிபுவகையில் படும் வினைகளில் இறந்தகாலம் இறுதி அடைப்பொலியின் இரட்டிப்பால் ஆக்கப்படுகின்றது. இவ்வினைகளை மூன்று துணை அசை அமைபொழுங்குகளாக வகைப் படுத்தலாம்: (C)V*கு*, (C)V*டு*, (C)V*று*.

(C)V*கு* என்ற அசை அமைபொழுங்கில் எட்டு வினைகள் உள்ளன.இவற்றில் *இகு* என்ற வினையின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர் தமிழ் லெக்சிகனில் சங்ககாலத்தைச் சார்ந்ததாகத் தரப்பட்டுள்ளது.

சங்ககாலம்: *இகு* ‘வீழ்ச்சி’ (ஐங்)

(C)V*டு* என்ற அசை அமைபொழுங்கில் பத்து வினைகள் உள்ளன. இவற்றில் நான்கு வினைகள் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன. சங்ககாலம் இரண்டு பெயர்களையும் பிற்சங்ககாலம் இரண்டு பெயர்களையும் கொண்டுள்ளன.

சங்ககாலம்: *கெடு* ‘கேடு’ , ’இடையூறு’; (புற்); கூப்பிடு ‘கூப்பிடு தூரம்’ (மலை)

பிற்சங்ககாலம்: *சுடு* ‘சுடுகை’ (சீவ்); *தொடு* ‘தோட்டம்’ (பிங்), ‘வயல்’ (பிங்)

(C)V*று* என்ற அசை அமைபொழுங்கில் ஒன்பது வினைகள் உள்ளன. இவற்றில் மூன்று வினைகள் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குகின்றன. ஒன்று சங்ககாலத்தையும் இரண்டு பிற்சங்காலத்தையும் சார்ந்தன.

சங்ககாலம்: *தெறு* ‘எரிதல்’ (பட்);

பிற்சங்ககாலம்: *செறு* ‘கோபம்’ (திரி); *துரு* ‘கெட்டி’ (திவா), *வெப்புறு* ‘சூடு’ (வி.அ)

2.4.1.7. ஏழாவது வினைத்திரிபுவகுப்பின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இத்திரிபு வகுப்பைச் சார்ந்த வினைகள் வளைநா மூக்கொலியில் (*ண்*) இறுதியுறும் மற்றும் *-த்* என்பதை இறந்தகாலக் குறியீடாகவும் *–ப்* எனபதை இறந்தகாலம் அல்லா குறியீடாகவும் *–அ* என்பதை வினை எச்சக் குறியீடாகவும் பெறும். ஐந்து வினைகள் மட்டுமே இவ்வகுப்பைச் சாரும். இவை மூன்று அசை அமைபொழுங்குகளைக் கொண்டுள்ளன: VC, CVC, CVCVC.

VC என்ற அசை அமைபொழுங்கில் ஒரு வினை மட்டும் உள்ளது. இதிலிருந்து பிற்சங்ககாலத்தில் ஒரு பின்னொட்டாக்கப் பெயர் ஆக்கப்படுகின்றது.

பிற்சங்ககாலம்: *உண்* 'உணவு' (அறனெ)

CVVC என்ற அசை அமைபொழுங்கில் மூன்று வினைகள் உள்ளன: *காண்* 'பார்', *பூண்* 'தரி', *மாண்* 'சிறத்தாக இரு'. இம்மூன்று வினைகளும் வெவேறு வகைகளில் பெயராக்கம் செய்கின்றன. *காண்*, *மாண்* என்ற வினைகள் ஒரு முறையைப் பின்பற்றுகின்றன. அவை *காண்+ச்சி* >*காட்சி*, *மாண்+ச்சி* > *மாட்சி* எனப் பெயராக்கம் செய்கின்றன. *பூண்* என்பது மட்டும் *பூண்* 'ஆபரணம்' என்ற பின்னொட்டாக்கப் பெயரை சங்காலத்தில் ஆக்குகின்றது.

பிற்சங்ககாலம்: *பூண்* 'ஆபரணம்' (மது)

2.4.1.8. எட்டாவது திரிபுவகுப்பின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இத்திரிபு வகுப்பைச் சார்ந்த வினைகள் அண்பல் மூக்கொலியில் இறுதியுறும் மற்றும் *த்* என்பதை இறந்தகாலக் குறியீடாகவும் *ப்* எனப்தை எதிர்காலக் குறியீடாகவும் *அ* என்பதை வினை எச்சக் குறியீடாகவும் ஏற்கும். இவ்வகுப்பில் ஆறு வினைகள் உள்ளன. இவை மூன்று அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன: (C)VC, (C)VVC,

CVCVC. (C)VC என்ற அசை அமைப்பைச் சார்ந்த இரண்டு வினகள் உள்ளன. (C)VVC என்ற அசை அமைப்பைச் சார்ந்த மூன்று வினைகளில் சங்ககலத்தைச் சார்ந்த *ஆன்* குறை வினையாகும்.

CVCVC அசை அமைப்பில் ஆறு வினைகள் உள்ளன. அவற்றில் ஒரு வினையான *கவின்* 'அழகாக இரு' சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்யும். பிற அசை அமைப்புகள் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்யவில்லை.

சங்ககாலம்: கவின் 'அழகு' (ஐங்)

2.4.1.9. ஒன்பதாவது திரிபுவகுப்பின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இவ்வகுப்பில் அடங்கும் வினைகள் வளைநா ஒலியான *ள்* என்பதில் இறுதியுறும் மற்றும் *த்த்* என்பதை இறந்தகாலக் குறியீடகவும் *ப்ப்* என்பதை இறந்தகாலமல்லா குறியீடாகவும் ஏற்கும். இது மூன்று அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன: CVC, (C)VVC.

CVC என்ற அசை அமைப்பில் ஆறு வினைகள் உள்ளன. இவற்றில் ஒன்று மட்டும் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்யும்.

பிற்சங்ககாலம்: *கள்* 'திருடுதல்' (சூடா)

(C)VVC என்ற அசை அமைப்பில் நான்கு வினைகள் உள்ளன. இவற்றில் இரண்டு பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்யும்.

பிற்சங்ககாலம்: *தோள்* 'துளை' (அக.இன்); *வேள்* 'திருமணம்' (பழ), 'ஆசை' (விஅ)

2.4.1.10. பத்தாவது திரிபுவகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இவ்வகுப்பில் அடங்கும் வினைகள் அண்பல் மருங்கொலியான *ல்* என்பதில் இறுதியுறும் மற்றும் *த்த்* என்பதை இறந்தகாலக் குறியீடகவும் *ப்ப்* என்பதை எதிர்காலக் குறியீடாகவும் ஏற்கும். இவ்வகுப்பு ஏழு வினைகளைக் கொண்டுள்ளன. இவ்குப்பு இரண்டு அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன: CVC, (C)VVC.

CVC அசை அமைப்பு மூன்று வினைகளைக் கொண்டுள்ளன. இவை யாவும் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்யாது. (C)VVC அசை அமைப்பு நான்கு வினைகளைக் கொண்டுள்ளன. அவற்றில் மூன்று வினைகள் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம் செய்யும். இவற்றில் ஒன்று சங்ககாலதைச் சாரும்; இரண்டு பிற்சங்காலத்தைச் சாரும்.

சங்ககாலம்: நூல் 'நூலிழை' (புற்)

பிற்சங்ககாலம்: *தோல்* 'தோல்வி' (பிங்), 'துரதிருஷடம்', நஷ்டம்' (வி.அக); *நோல்* 'இரட்சிப்பு அடையும் ஒரு வழி'

2.4.1.11. பதினொன்றாவது திரிபுவகுப்பில் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

த்த் என்பதை இறந்தகாலக் குறியீடகவும் *ப்ப்* என்பதை இறந்தகாலமல்லா குறியீடாகவும் ஏற்கும் வினைகள் இவ்வகுப்பைச் சாரும். இவ்வகுபில் ஆயிரத்து முன்னூறு வினைகள் அடங்கும். இவ்வினைகள் பத்து அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன. இவை அவை இறுதியுறும் உயிரொலிகள் அல்லது மெய்யொலிகள் அடிப்படையில் மேலும் சில துணை அமைப்பொழுங்குகளாகப் பகுக்கப்படும்.

வளண்	அசை அமைப்பு	இறுதி உயிர்/மெய்	வினைகளின் எண்ணிக்கை	சங்ககாலம்	பிற்சங்காலம்
1	CVV	ஆ, ஈ, ஓ	9	1	2
2	(C)V	ஒ, ஐ	5	-	1
3	(C)VC	(C)Vய்	5	2	2
4	(C)VVC	(C)VVய்	5	2	-
		(C)VVர்	5	1	1
		(C)VVழ்	6	2	2
5	(C)VCV	(C)VCஇ	70	20	20
		(C)VCஐ	65	19	11
		(C)VPஉ	26	1	1
		(C)VSஉ	17	-	-
		(C)VCஅ	7	-	-
6	(C)VCVC	(C)VCVர்	18	5	7
		(C)VCVல்	5	2	-
7	(C)VCVVC	(C)VCVVய்	7	-	1
8	VCCVCVVC		1	-	-
9	VCVCCVV		1	-	-
10	CVCVV		1	-	-
	மொத்தம்		253	58	48

ஒவ்வொரு துணை வகுப்பிலும் வரும் வினைகளின் எண்ணிகையும் அவை ஆக்கும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களின் எண்னிக்கையும் கால அடிப்படையில் மேற்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

CVV அசை அமைப்பொழுங்கைச் சார்ந்த ஒன்பது வினைகளில் ஒரு வினை சங்ககாலதிலும் இரண்டு வினைகள் பிற்சங்காலத்திலும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கம் செய்கின்றன.

சங்ககாலம்: *பூ* 'மலர்' (குற்)

பிற்சங்ககாலம்: *கா* 'பாதுகாப்பு' (திவா); *மூ* 'முதுமை' (யா.அக)

(C)V அசை அமைப்பொழுங்கைச் சார்ந்த ஐந்து வினைகளில் ஒரு வினை மட்டும் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கம் செய்கின்றது.

பிற்சங்ககாலம்: *தை* 'அலங்காரம்'; 'தைத்தல் (நிக)

(C)VC அசை அமைப்பொழுங்கைச் சார்ந்த ஐந்து வினைகளில் இரண்டு வினைகள் சங்ககாலத்திலும் இரண்டு வினைகள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் ஆக்கம் செய்கின்றன.

சங்ககாலம்: *பொய்* 'பொய்' (மது); *மொய்* 'நெருக்கம்' (பெரி)

பிற்சங்ககாலம்: *எய்* 'ஏழ்மை' (ஏலா); *துய்* 'உணவு' (கந்த்)

(C)VVC அசை அமைப்பொழுங்கு (C)VV*ய்*, (C)VV*ர்*, (C)VV*ழ்* என்ற துணை அசை அமைப்புகளை உள்ளடக்கும்.

(C)VV*ய்* சார்ந்த ஐந்து வினைகளில் இரண்டு வினைகள் சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களைஆக்கம் செய்கின்றன.

சங்ககாலம்: *காய்* 'விளையாத கனி' (புற்); *வேய்* 'ஒற்றராய் தகவல் சொல்லுதல்' (தொல்)

C)VV*ர்* சார்ந்த ஐந்து வினைகள் உள்ளன: ஆர் 'பேரொலி எழுப்பு', *கார்* 'காரமாக இரு', *பார்* 'காண்', *போர்* 'மூடு', *தேர்* 'கல'. *தேர்* என்ற வினை பூஜிய பின்னொட்டுப் பெயரக்கம் செய்யவில்லை. பிற நான்கும் சங்ககாலத்தில் *-வை, ப்பு,* என்ற பின்னொட்டுகளைக் கொண்டு பெயரக்கம் செய்கின்றன; ஆனால் பூஜிய பின்னொட்டுப் பெயரக்கம் செய்யவில்லை. லெக்சிகன் *போர்* என்பதை *போர்* 'தானியக் குவியல்' என்ற பெயருடன் தொடர்பு படுத்துகின்றது.

(C)VV*ழ்* சார்ந்த ஆறு வினைகளில் இரண்டு வினைகள் சங்காலத்திலும் இரண்டு வினைகள் பிற்சங்ககாலத்திலும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கம் செய்கின்றன.

சங்ககாலம்: *ஊழ்* 'மலர்ச்சி' (கலி); *பாழ்* 'தரிசு நிலம்' (புற்)

பிற்சங்ககாலம்: *காழ்* 'மன வலிமை' (நாலடி); *கூழ்* 'ஐயம்' (இராமனுச); 'குழப்பம்'

(C)VCV என்ற அசை அமைப்பில் (C)VC*இ*, (C)VC*ஐ*, (C)VP*உ*, (C)VS*உ*, (C)VC*அ* என்ற ஐந்து துணை அமைப்புகள் அடங்கும்.

(C)VC*இ* என்ற அசை அமைப்பைச் சாரும் எழுபது வினைகளில் நாற்பத்தி நான்கு வினைகள் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கம் செய்கின்றன. இவற்றில் சங்ககாலம் இருபத்திநான்கு பெயர்களையும் பிற்சங்ககாலம் இருபது வினைகளையும் கொண்டுள்ளன.

சங்ககாலம்: *அரி* 'இடைவிடுகை' (புற்), 'புளித்த மது' (புற்); *அளி* 'கருணை', 'குளிர்ச்சி' (பெரி); *ஒலி* 'சப்தம்' (அக); *கடி* 'ஊறுகாய்' (கலி); *கலி* 'ஒலி' (தொல்); 'அகந்தை' (கலி); *களி* 'மகிழ்ச்சி' (அக); 'கள்' (மது), 'மதுமயக்கம்'; *குறி* 'குறியிடம்' (தொல்), *சொலி* 'மரப்பட்டை'; *தளி* 'மழை' (அக), 'மேகம்' (கலி); *துனி* 'வெறுப்பு' (கலி), 'துயரம்' (தொல்); *துளி* 'மழைத்துளி' (பரி); *தெழி* 'ஓசை' (கலி); *நெறி* 'பூவை

பிய்த்தல்' (அக); *பசி* 'ஏழ்மை' (பெரும்), 'பட்டினி' (மணி); *பழி* 'குற்றச்சாட்டு' (தொல்), 'குற்றம்' (பட்); *பனி* 'பனிக்கட்டி' (புற்), 'குளிர்' (நெடு); *பிடி* 'கைப்பிடி' (புற்), 'லகான்' (நெடு); *பிணி* 'கட்டு' (பரி), 'மொட்டு' (கலி); *புளி* 'புளிப்பு' (புற்); *மிதி* 'யனைக்கான பந்து வடிவ உணவு' (புற); *விழி* 'கண்' (அக); *விளி* 'அழைப்பு' (தொல்); 'ஓலி' (பெரும்); *வெடி* 'சத்தம்' (குறி), 'அழிவு' (மது)

பிற்சங்ககாலம்: *அடி* 'அடி'; *அரி* 'அரிப்பு' (சூடா); *இசி* 'சிரிப்பு' (வின்.அக), 'உரித்தல்' (வின்.அக); *இளி* 'இகழ்ச்சி', 'சிரிப்பு' (குறள்); *குடி* 'மதுபானம்', 'பருகுதல்'; *குதி* 'குதிப்பு', 'துள்ளுதல்' ; *குளி* 'குளித்தல்'; *கெலி* 'பேராசை' (ஜாகிமொ); *கொதி* 'கோபத்தின் உக்கிரம்', 'நீர்சூடாகி குமிழி இடுதல்'; *சிரி* 'சிரிப்பு'; *துடி* 'துடித்தல்', 'விரைவு' (அறப்); *துமி* 'மழைதுளி' (வின்.அக), 'தெளிப்பு' (கம்); *தெறி* 'சிதறுகை', 'இதர வேலைகள்' (நாஞ்); *தொலி* 'தோல்', 'உமி' (ஜாகிமொ); *நொதி* 'அருவருப்பான சேறு', சேறு'; *பொளி* 'உளியாலிட்ட துளை'; *மறி* 'நிறுத்துதல்'; *மிடி* 'வறுமை' (சூடா), 'துன்பம்' (நாலா); *வலி* 'ஒலி'; *வலி* 'வலிப்பு', ' வேதனை' (கம்); *இடி* 'கண்டனம்' (குறள்); 'அடி', 'ஒரு வித வலி'

(C)VCஐ என்ற அசை அமைப்பைச் சாரும் ஆறுபது வினகளிலிருந்து முப்பது பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் ஆக்கம் பெறுகின்றன. இவற்றில் சங்ககாலம் பத்தொன்பது பெயர்களையும் பிற்சங்ககாலம் பதினொன்று பெயர்களையும் கொண்டுள்ளன.

சங்ககாலம்: *அசை* 'அசை' (தொல்); *இசை* 'ஒலி' (மலை), 'புகழ்' (அக), 'சொல்' (தொல்); *இமை* 'கண்ணிமை' (நற்), 'கண்ணிமைத்தல்' (தொல்); *இழை* 'ஆபரணம்' (புற்), 'நூலிழை', 'பின்னல் தையல்' (மலை); *உரை* 'சொல்' (அக), 'போரொலி' (பரி), 'வர்ணனை' (தொல்); *உறை* 'மழை' (அக); *கவை* 'கவைக்கோல்' (அக); *கிளை* 'பூங்கொத்து' (சிறுப்); *குழை* 'முளை' (புற்); *சிலை* 'ஒலி, பேரொலி' (அக); *சினை* 'மரக்கிளை' (புற்), 'விலங்குகளின் கரு' (பரி); *சுவை* 'ருசி' (அக); *துளை* 'துவாரம்' (அக); *நரை* 'நரை முடி' (புற்); *நவை* 'துன்புறுதல்' (அக); *நுரை* 'நுரை' (அக),

'வெண்ணை' (பெரும்); *பிழை* 'தவறு' (பரி); *விசை* 'வேகம்' (அக); *விதை* 'வித்து' (புற்)

பிற்சங்ககாலம்: *அணை* 'அணைக்கட்டு'; *உரை* 'தங்கத்தின் மாற்று'; *உளை* 'அழுகை' (பெரிய்), 'ஓசை' (பிங்); *களை* 'களைப்பு' (கந்த்); *கனை* 'ஓசை' (சூடா); *சுணை* 'அரிப்பு'; *புணை* 'விலங்கு' (சூடா); *திகை* 'திகைப்பு'; *துவை* 'ஓசை' (சூடா); *விடை* 'துயரம்' (யாழ்.அக); *மிறை* 'பிரச்சனை' (குறள்), 'பயம்' (பதிரோ)

(C)VPஉ (P=அடைப்பொலி) அசை அமைப்பில் வரும் இருபத்தியாறு வினகள் வரும். இவை பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கம் செய்வதில்லை. இந்தப் பொதுவான போக்கிற்கு இரண்டு விதிவிலக்குகள் இருப்பதாகத் தோன்றுகின்றது: *கடு* 'கர்பம்' (சூடா), 'கசப்பு', *தடு* 'தடுத்தல் (கொ.கொளு).

(C)VSஉ (S = அடைப்பொலி அல்லதவை) என்ற அசை அமைப்பு பதினேழு வினைக் கொண்டுள்ளன. இவற்றில் பூஜிய ஒட்டுப் பெயராக்கம் சீரான செயல்பாடு அல்ல.

(C)VC*அ* என்ற அசை அமைப்பு ஏழு வினகைகளைக் கொண்டுள்ளன. இவை பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கம் செய்வதில்லை.

(C)VCVC என்ற அசை அமைப்பொழுங்கு இரண்டு துணை அசை அமைப்புகளைக் கொண்டுள்ளன: (C)VCV*ர்*, (C)VCV*ழ்*.

(C)VCV*ர்* என்ற அசை அமைப்பில் வரும் பதினெட்டு வினைகளிலிருந்து பன்னிரண்டு பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்கள் ஆக்கப்படுகின்றன. இவற்றில் ஐந்து சங்ககாலத்தைச் சாரும்; ஏழு பிற்சங்ககாலத்தைச் சாரும்.

சங்ககாலம்: *உயிர்* 'குரல்' (குறி), 'ஆன்மா' (நற்); *செயிர்* 'ஆத்திரம்' (பரி); *தளிர்* 'முளை' (தொல்); *வியர்* 'வியர்வை' (அக), 'சோர்வு' (கலி); *துவர்* 'பாக்கு' (பரி)

பிற்சங்ககாலம்: *அயிர்* 'ஐயம்' (விளை); *திணர்* 'அடர்த்தி' (வாய்); *தெளிர்* 'அதிரும் ஒலி' (திவா); *துளிர்* 'முளை, மொட்டு' (தேவா); *கவர்* 'இரண்டாகப் பிரிந்த கிளை' (S.I.I), 'விலகுதல்' (சீவ); *வெதிர்* 'நடுக்கம்' (கொசிக்); *வெயர்* 'வியர்வை' (பு.வெ.கொளு)

(C)VCV*ழ்* என்ற அசை அமைப்பொழுங்கு கொண்டுள்ள ஐந்து வினைகளில் இரண்டு வினைகள் அவற்றின் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்கும். இவற்றில் சங்ககாலம் ஒன்றையும் பிற்சங்ககாலம் ஒன்றையும் கொண்டுள்ளன.

சங்ககாலம்: *முகிழ்* 'மொட்டு' (குற்)

பிற்சங்ககாலம்: *குமிழ்* 'நீர்குமிழி' (பிங்)

(C)VCVVC என்ற அசை அமைப்பு (C)VCVV*ய்* என்ற அசை அமைப்பைக் கொண்டது. இதில் வரும் ஆறு வினைகளில் *விடாய்* 'தாகமெடு' என்ற வினை மட்டும் பிற்சங்ககாலத்தில் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயரை ஆக்கும்.

பிற்சங்ககாலம்: விடாய் 'தாகம்' (இராம), 'ஏக்கம்' (வவ), 'சோர்வு' (நாமதிப்)

2.4.1.12. பன்னிரண்டாவது திரிபுவகுப்பின் பூஜியப் பின்னொட்டுப் பெயராக்கம்

இவ்வகுப்பில் வரும் வினைகள் *ந்த்* என்பதை இறந்தகாலக் குறியீட்டாகவும் *ப்ப்* என்பதை எதிர்காலக் குறியீட்டாகவும் ஏற்கும். இதில் எழுபத்தி எட்டு வினைகள் அடங்கும். இவ்வகுப்பு அசை அடிப்படையில் ஏழு துணைவகுப்புகளாக வகைப்படுத்தப்படும். பின்வரும் அட்டவணை அசை அமைப்பு வகைகளையும் அவற்றில் வரும் வினைகளின் எண்ணிக்கையையும் அவற்றிலிருந்து ஆக்கப்படும் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களின் எண்ணிக்கையையும் தரும்.

வளண்	அசை அமைப்பு	துணை வகை	வினைகளின் எண்ணிக்கை	சங்காலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களின் எண்ணிக்கை	பிற்சங்காலத்தில் பூஜியப் பின்னொட்டாகப் பெயர்களின் எண்ணிக்கை
1	CVV		1	-	-
	(C)VC		1	-	-

	(C)VCV				
		(C)VCஅ	56	1	-
		(C)VCஉ	1	-	-
	(C)VVCVV		6	-	-
	(C)VCCVV		10	1	-
	(C)VCVCVV		2	-	-
	VCVCVCV		1	-	-

இத்திரிபு வகுப்பில் அடங்கும் வினைகள் பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை ஆக்குவதில்லை. *இர* 'பிச்சை எடுத்தல்' என்பதும் *அல்லா* 'வருந்து' (பரி) என்பதும் விதிவிலக்குகளாகும். இவை முறையே *இர* 'பிச்சை எடுத்தல், அல்லா 'வருந்துதல்' என்ற பூஜியப் பின்னொட்டாக்கப் பெயர்களை உருவாக்கும்.

2.4.2. *நீட்சி*

இரண்டாவது இயல் நீட்சி. வினைகள் அவற்றில் உள்ள உயிர் எழுத்துக்கள் நீட்சியுறுவதால் பெயராக்கம் பெறும் (*கொள் > கோள்*, *உண் > ஊண்*, *பெறு > பேறு*). இவ்வகையிலான வினை ஆக்கப்பெயர்கள் வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையில் வரலாற்றுப் பின்னணியில் விளக்கப்பட்டுள்ளது.

நீட்சி சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் பெயர்களைக் ஆக்கப் பயன்படுத்தப்படுகின்றது; இவை யாவும் சீரான பெயர்களாகும். நீட்சியால் பெயராக்கம் செய்வது சிலகட்டுப்பாட்டிற்கு உட்பட்டது.

1) ஒலியனியல் கட்டுப்பாடு: வளைநா மற்றும் அண்பல் மெய்யொலிகள் இறுதியில் வரும் வினைகள் மட்டுமே நீட்சிப் பெயராக்கம் செய்யும். அடைப்பு

மெய்யொலியாக இருந்தால் அது உ-ஆல் தொடரப்படும். ஆறு அடைப்பு மொய்யொலிகளில் *க், ட், ற்* என்ற மூன்று அடைப்பு மெய்யொலிகள் மட்டுமே வினைகளின் இறுதியில் வரும். இவற்றில் *ட், ற்* இறுதியில் வரும் வினைகள் மட்டுமே நீட்சிப் பெயராக்கம் செய்யும். *பகு, நகு* 'சிரி', *புகு* 'உள்ளேநுழை' என்பன காணப்பட்டாலும் அவை நீட்சிப் பெயராக்கம் செய்வதில்லை.

2) அசையமைப்புக் கட்டுப்பாடு: எல்லா வினைகளிலும் முதல் உயிரொலி குறிலாகும். இறுதி மொய்யொலி அடைப்பொலியாக இல்லாதிருந்தால் அசை அமைப்பொழுங்கு (C)VC ஆகும்; இறுதி மெய்யொலி அடைப்பொலியாக இருந்தால் அசை அமைப்பொழுங்கு (C)VCV ஆகும்.

3) வினைத்திரிபாக்க வகுப்புக் கட்டுப்பாடு: மேற்சொன்ன கட்டுப்பாடுகள் கொண்ட வினைகள் வல்வினைகளாகவும் மெல்வினைகளாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, *கொள்* என்பது மெல்வினையாகும்; ஆனால் *பெள்* 'ஆசைப்படு', *கள்* 'திருடு' என்பன ஒன்பதாவது வினைத்திரிபாக்க வகுப்பைச் சார்ந்த வல்வினைகளாகும். இதுபோன்று *அடு* 'கொல்', *படு* 'துன்பப்படு', *இற* என்பன ஆறாவது வினைத்திரிபாக்க வகுப்பைச் சார்ந்த மெல்வினைகளாகும். ஆனால் அதே அசை அமைப்பைக் கொண்ட *கொடு* 'அளி', *வெறு, படு* என்பன வல்வினைகளாகும். இந்த நேர்விலும் நீட்சியாக்கப் பெயர்கள் மெல்வினை வகுப்பிலேயே (அதாவது முதல் எட்டு வினைத் திரிபாக்க வகுப்புகளிலேயே) காணப்படுகின்றன.

சில நீட்சியாக்கப் பெயர்கள் வேறுபட்ட அசை அமைப்புகள் கொண்ட பிற வினைத்திரிபாக்க வகுப்புகளிலும் காணப்படுகின்றன; ஆனால் அவை விதி விலக்குகளாகும்; அவை சீரற்ற/முறையற்ற வளர்ச்சியாகக் கருதப்படவேண்டும்.

பன்னிரண்டு பெயரக்கங்கள் ஒழுங்கான ஆக்கத்தின் கீழ் வரும். அவை பல வினைத்திரிபாக்க வகுப்புகளைச் சாரும். அவை சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் வருகின்றன.

மூன்றாவது வினைத்திரிபாக்க வகுப்பு:

சங்ககாலம்: *கொள்* > *கோள்* 'எடுத்தல் (பரி)

நான்காவது வினைத்திரிபாக்க வகுப்பு:

சங்ககாலம்: *அடு* >*ஆடு* 'வெற்றி (கலி), 'கொல்லுதல்' (புற்); *இறு* > *ஈறு* 'இறுதி' (தொல்); *உறு* > *ஊறு* 'அணுகுதல்' (பரி); *கெடு* > *கேடு* 'அழிவு' (தொல்); *சுடு* > *சூடு* 'சூடாக்கப்பட்டது' (பட்); *தெறு* > *தேறு* 'குளவியின் கொடுக்கு' (பதிற்); *படு* > *பாடு* 'ஒலி' (மலை), 'அழிவு' (புற்); *பெறு* > பேறு (புற்)

பிற்சங்ககாலம்: *இடு* > *ஈடு* 'இடுகை' (சீவ்); விடு > *வீடு* 'நிங்குதல்', 'மனை'

ஏழாவது வினைத்திரிபாக்க வகுப்பு:

சங்ககாலம்: *உண்* > *ஊண்* 'உணவு' (தொல்)

எட்டாவது வினைத்திரிபாக்க வகுப்பு:

பிற்சங்ககாலம்: *தின்* > *தீன்* 'உணவு', 'உணவுப்பொருட்கள்'

அதே ஒழுங்கான செயல்முறை பின்வரும் கூட்டுகளிலும் காணப்படும்.

சங்ககாலம்: *கையறு* > *கை-ய்-ஆறு* 'செயலறுகை' (கலி)

பிற்சங்ககாலம்: *அழுக்கறு* > *அழுக்காறு* ‘பொறாமை’ (குறள்); *வேசறு* > *வேசாறு* ’துக்கம்’

சில குறிப்பிட்ட பெயர்களின் ஆங்கங்கள் தெளினவை அல்ல: *மின்னு* > (விண்) மீன், *கானல்* > கானல். பின்வரும் ஆக்கங்களும் இவ்வகையைச் சாரும்.

சங்ககாலம்: *மலை* ‘அணி’ > *மாலை*

பிற்சங்ககாலம்: *உளை* ‘ஊளையிடு’ > *ஊளை*; *நுழை* ‘உள்ளே செல்’ > *நூழை* ‘துளை’; *குழை* ‘மென்மையாகு’ > *கூழை* ‘சேறு’; *கடி* > *காடி* ‘ஊறுகாய், கஞ்சி’; *பொத்து* ‘துளையிடு’ > *போத்து* ‘துளை’; *பொங்கு* ‘அதிகரி > *போக்கம் /பொக்கம்* ‘அழகு’; *செத்து* ‘சிந்தனை கொண்டிரு’, ஒத்திரு’ > *சேத்து* ‘ஒன்றுமை’ (திவா), ‘சிந்தனை’; *தொங்கு* > *தோகை* ’தொங்குதிரைகள்’; *நக்கு* > *நாக்கு*;

சங்ககாலம்: *பொரு* ‘யுத்தம் செய்’ > *போர்* ‘யுத்தம்’

சில ஆக்கங்களில் நீட்சி வடிவுகளைத் தொடர்ந்து *இ* வருகின்றது:

சங்ககாலம்: *அஞ்சு* ‘பயப்படு’ > *அஞ்சி* ‘பயம்’ (தொல்); *முரி* ‘ஒடி’ > *மூரி* ‘இறைச்சித் துண்டு’ (புற்)

பிற்சங்காலம்: *பொரு* ‘விரோதியாக இரு’ > *போர்-இ* ‘விரோதி’, ‘சமம்’ (விஅ); என்னு > ஏனி ‘எண்’

பின்வரும் ஆக்கங்களில் நீட்சி இறுதி உயிரொலியில் காணப்படுகின்றது. இவற்றின் அசை அமைப்பு (C)VCVC. சங்ககாலம் இரண்டு நீட்சியாக்கப் பெயர்களையும் பிற்சங்ககாலம் ஒரு நீட்சியாக்கப் பெயரையும் கொண்டுள்ளன.

2.4.3. இரட்டித்தல்

மூன்றாவது இயல் இரட்டித்தல். வினைகள் அவற்றில் உள்ள மெய் எழுத்துக்கள் இரட்டிப்பதால் பெயராக்கம் பெறும் (எ.கா. *பாடு* > *பாட்டு*, *பெருகு* > *பெருக்கு*, *பேசு* > *பேச்சு*, *திருடு* > *திருட்டு*).

எல்லா வினைகளும் இவ்வாறு பெயராக்கம் செய்வதில்லை. இவ்வாக்கம் ஒலியனியல் கட்டுப்பாட்டிற்கும் அசை அமைப்பின் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டது.

மாற்றம்	**எடுத்துக்காட்டுகள்**
கு > க்கு/க்க்-அம் சங்ககாலத்திலும் பின் சங்ககாலத்திலும் காணப்படுகின்றன. சில வடிவங்கள் அம் என்ற பின்னொட்டை ஏற்று வரும்.	சங்ககாலம்: ஒழுகு > ஒழுக்கு (நற்), ஒழுக்க்-அம் (புற்), பெருக்கு > பெருக்கு (பரி), பெருக்கம் (தொல்); மறுகு > மறுக்கு (பரி), மறுக்கம் (பரி) சங்ககாலம்/பிற்சங்காலம்: உருகு > உருக்கு 'நெய்' (புற), உருக்கம்; குறுகு > குறுக்கம் (தொல்), குறுக்கு (தாயு); மெழுகு > மெழுக்கம் (பட்டி), 'மெழுக்கு' (தேவா), 'சாணி' (பெரிய); முறுகு >முறுக்கு (அக), முறுக்கம் பிற்சங்காலம்: அணுகு > அணுக்கு 'அருகாமை' (கோ), அணுக்க்-அம் 'அருக்காமை' (பெரிய), அருகு > அருக்கு 'அரிது' (கோ), அருக்கம் 'சுருக்கம்' (தேவா); இறுகு > இறுக்கு 'இறுக்கம்', இறுக்கம்; முடுகு 'தூண்டு' > முடுக்கு 'துண்டுதல்' 'உயர்ந்த விலை', முடுக்கம் 'துண்டுதல்', 'உயர்ந்த விலை'
சு> ச்சு பிற்சங்ககாலத்தில் மட்டும் காணப்படுகின்றது.	பிற்சங்ககாலம்: ஏசு > ஏச்சு (பெரியாழ்), பேசு > பேச்சு (தேவா), மூசு > மூச்சு, வீசு > வீச்சு 'எறிதல்' (கம்ப), 'அடி', 'மணம்'; வீச்சம் 'மணம்'; கூசு > கூச்சு 'மயிக்கூச்செரிதல்' (பெரியாழ்), *கூச்சம்* 'நாணம்'
டு> ட்ட்-அம்	சங்ககாலம்: கோடு > கோட்ட்-அம் (புற), நாடு > நாட்டம்

(C)VVC அசையமைப்பு வினைகள். சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் -அம் ஏற்று வரும்	’விசாரணை’ (தொல்), ‘கண்’ (தொல்) கண்ணோடு > கண்ணோட்டம் ‘அருள்’ (பதிற்) பிற்சங்ககாலம்: *சாடு* > சாட்டம் ‘அடித்தல்’ (வவ); *நேடு* > *நேட்டம்* ‘நேடிய பொருள்’ (நான்)
டு> ட்டு/ட்ட்-அம் (C)VVC அசையமைப்பு வினைகள். சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும். -அம் ஏற்றும் ஏற்காமலும் வரும்	சங்ககாலம்: ஆடு > ஆட்டு ‘விளையாட்டு’ (மது), ஆட்டம் ‘விளையாட்டு’ (நற்); கூடு > கூட்டு ’மிகுதி’ (மது), கூட்டம் ‘சங்கம்’ (தொல்) பிற்சங்ககாலம்: ஓடு > ஓட்டு ‘தோல்வி’ (குறள்), ஓட்ட்-அம் ‘ஓடுதல்’ (கஞ்சிப்); தேடு > தேட்டு ‘சம்பாதியம்’, ‘ஆசை’ (கம்) தேட்டம் ‘சம்பாதியம்’, ‘ஆசை’; ‘மூடு > மூட்டு/மூட்டம் ‘மூட்டப்பட்டது’, வாடு > வாட்டு ‘துன்பம்’ வாட்ட்-அம் ’துன்பம் (சில) சங்ககாலம்/ பிற்சங்ககாலம்: நீடு> நீட்டம் ‘நீளுதல்’ (தொல்) நீட்டு ‘நீளம்’, ‘தூரம்’
டு> ட்டு (C)VCVCV அசை அமைப்பில் வரும் வினை.	பிற்சங்ககாலம்: திருடு ‘களவாடு’ > திருட்டு ‘களவு’
து > த்து (C)VVC அசையமைப்பு வினைகள்.	சங்ககாலம்: ஓது > ஓத்து ’நூலின் இயல்’ (தொல்), பிற்சங்காலம்: ஊது > ஊத்து ’காற்றுஇசைக்கருவியின் ஒலி’ (நெடுந்த்), ஓது > ஓத்து ’விதி, சட்டம்’ (குறள்), ‘ஓதுதல்’ (தேவா); ஊது > ஊத்து/ ஊத்தம் ‘உடலின் வீக்கம்’,
து > த்து (C)VCVCV	சங்ககாலம்: எழுது > எழுத்து (தொல்); பிற்சங்காலம்: கருது > கருத்து ‘விருப்பம்’ (பாரத்), ‘சங்கற்பம்’

அசையமைப்பு வினைகள்.	(வாய்)
று > ற்று (C)VVC அசையமைப்பு வினைகள் -அம் ஏற்று சங்ககாலதிலும் பிற்சங்காலத்திலும் வரும்.	சங்ககாலம்: *சீறு* > *சீற்ற்-அம்* 'கோபம்' (பதிற்), நாறு > நாற்ற்-அம் 'மணம்' (தொல்); மாறு > மாற்றம் 'பதில், சொல்' (தொல்); ஏறு > ஏற்றம் 'உயரம்' (அக), 'மேம்பாடு' (புற்), 'ஏற்றமரம்' (மந்த்) பிற்சங்ககாலம்: ஏமாறு > ஏமாற்றம் 'குழப்பம்', 'வஞ்சகம்'
று > ற்று (C)VVC அசையமைப்பு வினைகள் -அம் ஏற்று சங்ககாலதிலும் பிற்சங்ககாலத்திலும் ஏற்காதும் வரும்.	சங்ககாலம்: கூறு > கூற்று/கூற்ற்-அம் 'சொல்' (தொல்), மாறு > மாற்று /மாற்றம், *தேறு* > *தேற்றம்* 'உறுதி', 'உறுதிமொழி' (தொல்), *தேற்று* 'தெளிவு' (சிவ.பர) பிற்சங்ககாலம்: நாறு > நாற்று 'நாற்று', நாற்றம் 'தோற்றம்' (சூடா) சங்ககாலம் (கூட்டு): *தடுமாறு* > *தடுமாற்று* 'குழப்பம்', *தடுமாற்றம்* 'குழப்பம்'
று > ற்று (C)VVC அசையமைப்பு வினைகள் -அம் ஏற்காது பிற்சங்ககாலத்தில் மட்டும் வரும்.	பிற்சங்ககாலம்: கீறு > கீற்று 'கோடு' (சீவ), 'துண்டு'; ஊறு > ஊற்று 'நீரூற்று (நாலடி)
று > ற்று (C)VCVCV அசையமைப்பு	சங்ககாலம்: உரறு > உரற்று 'இடி' (புற்) பிற்சங்ககாலம்: கழறு > கழற்று 'கண்டிப்பு' (இறை.உரை); குதறு > குதற்று 'வழிதவறுதல்' (வாய்); பதறு > பதற்றம்

வினைகளில் மூன்றுவினைகள் அம் ஏற்காது ஒன்று அம் ஏற்றும் வரும்	'அவசரம்' (இடு), பதட்டம் 'அவசரம்' (பேவ)

2.4.4. இனமாற்றம்

நான்காவது இயல் இனமாற்றம். வினைகள் அவற்றில் வரும் மெய்கள் இனமாற்றம் அடைவதால் பெயராக்கம் பெறும் (*விரும்பு > விருப்பு, வழங்கு > வழக்கு, விளங்கு > விளக்கு*). இப்பெயர்கள் அம் என்ற பின்னொட்டு ஏற்றும் ஏற்காது வரும் (*இலங்கு > இலக்கு +அம் > இலக்கம், மயங்கு > மயக்கு + அம்* > மயக்கம்). மூன்று வகை இனமாற்றப் பெயராக்கங்களைக் காணலாம். அவை எடுத்துக்காட்டுக்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

மாற்றம்	**எடுத்துக்காட்டுகள்**
ங்கு > க்கு/க்கு-அம்	இலங்கு > இலக்க்-அம் (தொல்), இரங்கு > இரக்க்-அம் (தொல்), மயங்கு > மயக்கு (அக), மயக்க்-அம் (நற்)
ந்த் > த்து /த்த்-அம்	வருந்து > வருத்து (கலி), வருத்த்-அம் (தொல்), அழுந்து > அழுத்து, அழுத்த்-அம், பொருந்து > பொருத்து, பொருத்தம் (கொ)
ம்பு >ப்பு / ப்ப்-அம்	விரும்பு > விருப்பு (நற்), விருப்ப்-அம் (சூடா), நிரம்பு > நிரப்பு (சூடா), நிரப்ப்-அம் (பெருந்)

இவ்விளக்கங்கள் எல்லாம் வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையில் வரலாற்றுப் பின்னணியில் விளக்கப்பட்டுள்ளது.

இனமாற்றத்திற்கு உள்ளாகும் வினைகள் மூன்று அமைப்பொழுங்குகளைக் காட்டும்: (C)VVCCV, (C)VCVCCV, CVCCV. இவை எல்லாவற்றிலும் இறுதி உயிரொலி உ ஆகும் மற்றும் இறுதி மெய்யொலிகள் மூக்கொலியும் அடைப்பொலியும் ஆகும். எனவே வசதிக்காக அசையமைப்பைப் பின்வருமாறு எழுத இயலும்: C)VVNPஉ, (C)VCVNPஉ, CVNPஉ (இதில் N=மூக்கொலி, P=அடைப்பொலி).

C)VVNPஉ என்ற அசை அமைப்பில் உள்ள ங்கு-இல் இறுதியுறும் வினைகள் இரு காலத்திலும் இனமாற்றப் பெயர்களை ஆக்கும்.

பின்வருவன சங்ககாலத்தில் காணப்படும் -அம் ஏற்று வரும் இனமாற்றப் பெயர்களாகும்.

சங்ககாலம்: இலங்கு > இலக்கம் ‘விளிச்சம்’ (தொல்); இரங்கு > இரக்கம் ‘பரிதாபம்’ (தொல்); உயங்கு > உயக்கம் ‘துயரம்’ (அக); அடங்கு > அடக்கம் ‘பணிவு’ (தொல்); ஒடுங்கு > ஒடுக்கம் ‘மறைவிடம்’ (தொல்); சுருங்கு > சுருக்கம் (தொல்) நுணுங்கு > நுணுக்கம் (தொல்)

பின்வருவன சங்ககாலத்தில் காணப்படும் -அம் ஏற்றும் ஏற்காதும் வரும் இனமாற்றப் பெயர்களாகும்.

சங்ககாலம்: வழங்கு > வழக்கு/வழக்கம் ‘பயன்பாடு’ (தொல்); *மயங்கு* > *மயக்கு* ‘சங்கம்’ (அக), *மயக்கம்* ‘சங்கம்’ (நற்); *நுடங்கு* > *நுடக்கு* ‘நடுக்கம்’ (புற்), *நுடக்கம்* ‘நடுக்கம்’ (தொல்); *இயங்கு* > *இயக்கு* ‘இயக்கம்’ (மலை), *இயக்கம்* (நற்); *ஒதுங்கு* > *ஒதுக்கு* ’பாணி’ (புற்), *ஒதுக்கம்* ‘பாணி’ (அக); *மயங்கு* > *மயக்கு* ‘சண்டை’ (கலி), *மயக்கம்* ‘குழப்பம்’ (தொல்); *முழங்கு* > *முழக்கு* ‘பேரொலி’ (அக), *முழக்கம்*

‘பேரொலி’ (பரி); *நுடங்கு* > *நுடக்கு* ‘வளைவு’, *நுடக்கம்* ‘வளைவு’ (பதிற்); *கலங்கு* > *கலக்கு* ’குழப்பம்’ (புற), *கலக்கம்* ‘குழப்பம்’ (தொல்); *விளங்கு* > *விளக்கு* ‘(எரியும்) விளக்கு’ (நற்), *விளக்கம்* ‘பிரகாசம்’ (நற்); *புழுங்கு* > *புழுக்கு* ‘அரிசி’ (புற்), *புழுக்கம்* ’உஷ்ணத்தால் ஏற்படும் புழுக்கம்’ (அக).

பின்வரும் ஆக்கம் –அம் ஏற்காது சங்ககாலத்தில் வரும்; ஆனால் பிற்சங்ககாலத்தில் அம் ஏற்று வரும்.

சங்ககாலம்: வயங்கு > வயக்கு ‘பிரகாசம்’

-அம் ஏற்றும் ஏற்காது வரும் போக்கு பிற்சங்ககாலதிலும் காணப்படுகின்றது.

பிற்சங்ககாலம்: வழங்கு > வணக்கு ‘வளைவு’ (சில), வணக்கம் (குறள்); உணங்கு > உணக்கு ‘உணங்குதல்’ (வாச்), உணக்கம் ‘உணங்குதல்’ (வின்.அக); பிணங்கு > பிணக்கு ’கருத்துவேறுபாடு’, பிணக்கம் ’கருத்துவேறுபாடு’ (தேவா); *நெருங்கு* > *நெருக்கு* ‘நெரிசலான நிலை’, நெருக்கம் ‘அடர்த்தி’ (பிங்); *இணங்கு* >*இணக்கு* ‘ஒப்பீடு’, இணக்கம் ‘பொருத்தம்’; *அழுங்கு* > *அழுக்கு* ‘விரோதம்’ (கம்), அழுக்கம் ‘பதட்டம்’ (விளை); *துயங்கு* > *துயக்கு* ‘மயக்கம்’ (கம்), *துயக்கம்* ‘மயக்கம்’; துலங்கு > துலக்கு ‘மினுக்கு’, *’மெருகு’* (வின்.அக); கயங்கு > *கயக்கு’மனக்குழப்பம்’* (மணி), ’மனக்குழப்பம்’ (மணி)

(C)VCV*ந்து* அசை அமைப்பொழுங்கு பதிமூன்று வினைகளை உள்ளடக்கும். இவற்றின் இனமாற்றுப் பெயராக்கம் சங்ககாலத்தில் ஒன்றும் பிற்சங்ககாலத்தில் இரண்டும் காணப்படுகின்றது.

சங்ககாலம்: *வருந்து* > *வருத்தம்* ‘துன்பம்’ (தொல்), *வருத்து* ‘துன்பம்’ (கலி);

பிற்சங்ககாலம்: *அழுந்து* > *அழுத்தம்* ‘இறுக்கம்’, *அழுத்து* ‘அழுத்துதல்’; *பொருந்து* > *பொருத்தம்* ’செழிப்பு’, *பொருத்து* ‘சேர்த்தல்’; *திருந்து* > *திருத்தம்*, *திருத்து* ‘பயிரடப்பட்ட நிலம்’

(C)VCV*ம்பு* அசை அமைப்பொழுங்கு நாற்பது வினைகளை உள்ளடக்கும். *அம்* ஏற்ற மற்றும் ஏற்காத இனமாற்றுப் பெயராக்கங்கள் சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் காணப்படுகின்றது.

சங்ககாலம்/பிற்சங்ககாலம்: *விரும்பு* >*விருப்பு* ‘ஆசை’ (நற்), *விருப்பம்* ‘ஆசை’ (சூடா); *வெதும்பு* > *வெதுப்பு* ’வெப்பம்’, *வெதுப்பம்* ‘வெப்பம்’; *நிரம்பு* ‘நிறைவு’ (சூடா), *நிரப்பம்* ‘நிறைவு’ (பெருன்); *தளம்பு* > *தளப்பு* ‘காயம்’, *தளப்பம்* ‘கிளர்ச்சி’ (இடு); *திரும்பு* > *திருப்பு* ‘திருப்பம்’ (வின்.அக), *திருப்பம்* (இடு); *கிளம்பு* > *கிளப்பு* ‘உயர்ச்சி’, *கிளப்பம்* ‘வீக்கம்’ (வாய்); *குழம்பு* > *குழப்பு* ‘குழப்பம்’, குழப்பம்.

(C)VCVஞ்சு அசை அமைப்பொழுங்கில் ஐந்து வினைகளும் (C)VCVன்று அசை அமைப்பில் இரண்டு வினைகளும் உள்ளன. இவை இனமாற்று பெயர்களை ஆக்கவில்லை.

C)VVNPஉ அசை அமைப்பில் நான்கு துணை அமைப்புகள் வரும்: C)VV*ங்கு*, C)VV*ண்டு*, C)VVந்து C)VV*ன்று*.

C)VV*ங்கு* அமைப்பொழுங்கில் பன்னிரண்டு வினைகள் உள்ளன. இவற்றில் ஒன்பது இனமாற்று பெயர்கள் பிற்சங்ககாலத்தில் ஆக்கப்பட்டுள்ளன.

பிற்சங்ககாலம்: *வீங்கு* > *வீக்கு* ‘மேன்மை’ (சீவ), *வீக்கம்* ‘வீக்கம்’, ‘கூட்டம்’ (கம்ப்); *நீங்கு* > நீக்கு ‘பிரிப்பு’ (சூடா), *நீக்கம்* ‘பிரிப்பு’ (தொல்.உரை); *தூங்கு* > *தூக்கு*

‘தொங்கற்பொருள்’, *துக்கம்* ‘ஆபரணத்தொங்கல்’, ‘தூக்கம்’; *தேங்கு* > *தேக்கு* ‘நிறைவு’ (அக.உன்), ‘ஏப்பம்’ (குறள்.உரை); *நூங்கு* > *நூக்கு* ‘உயரம்’, *நூக்கம்* ‘உயரம்’ (அக.நி); *ஓங்கு* > *ஓக்கம்* ‘உயரம்’ (சீவ்), *ஏங்கு* > *ஏக்கம்* ‘பேராசை’; *வாங்கு* > *வாக்கு* ‘விளைவு’, ’முறைகேடு’ (வின்.அ); *தாங்கு* > *தாக்கு* ’இணைப்பு’ (நான)

C)VVண்டு அசை அமைப்பில் ஒன்பது வினைகள் உள்ளன. இவற்றில் மூன்று இனமாற்று பெயர்கள் பிற்சங்ககாலத்தில் ஆக்கப்பட்டுள்ளன.

பிற்சங்ககாலம்: *தோண்டு* > *தோட்டம்* (பெருங்); ஈண்டு > *ஈட்டு* ’மந்தை’ (சீவ்), *ஈட்டம்* ‘கூட்டம்’, ’சம்பாத்தியம்’; தீண்டு > தீட்டு ‘மாசு’, தீட்டம் ‘தொடுகை’

(C)VV*ந்து* அசை அமைப்பில் பத்து வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து ஒரு இனமாற்றுப் பெயர் சங்ககாலத்தில் ஆக்கப்பட்டுள்ளது.

சங்ககாலம்: *நீந்து* > *நீத்து* ‘வெளம்’ (அங்க்), *நீத்தம்* ‘வெள்ளம்’ (மந்து)

(C)VVம்பு அசை அமைப்பில் பதினொன்று வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து ஒரு இனமாற்றுப் பெயர் தான் பிற்சங்ககாலத்தில் ஆக்கப்பட்டுள்ளது.

பிற்சங்ககாலம்: *சோம்பு* ’மந்தமாக இரு’ > *சோப்பம்* ‘மந்தம்’

(C)VV*ன்று* அசை அமைப்பில் இரண்டு வினைகள் உள்ளன. அவை இனமாற்று பெயர்களைச் சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் ஆக்கப்பட்டுள்ளன.

தோன்று > *தோற்றம்* (புற); *ஊன்று* > *ஊற்றம்* ‘ஊன்றுகோல்’ (கம்ப்), *ஊற்று* ‘ஆதரவு’, ’ஊழியர்’ (சூடா), ‘வலிமை’ (புற்)

(C)VV*ஞ்சு* அசை அமைப்பில் இரண்டு வினைகள் உள்ளன. இவை இனமாற்றுப் பெயர்களை ஆக்கவில்லை.

(C)V*ங்கு* அசை அமைப்பில் பதினொன்று வினைகள் உள்ளன. இவற்றில் மூன்று வினைகள் இனமாற்றுப் பெயர்களை ஆக்கும்.

பிற்சங்ககாலம்: *தாங்கு* > *தாக்கம்* 'நிலையானதன்மை' (பழ); *தொங்கு* > *தொக்கம்* 'செரிக்காத பொருள்'; *பொங்கு* > *பொக்கம்* 'மிகுதி'

(C)V*ஞ்சு* என்ற அசை அமைப்பில் பதினொன்று வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து நான்கு வினைகள் இனமாற்றுப் பெயர்களை ஆக்கும். சங்ககாலம் மூன்றையும் பிற்சங்ககாலம் ஒன்றையும் கொண்டுள்ளன.

சங்ககாலம் *அஞ்சு* > *அச்சம்* 'பயம்' (மது), *அச்சு* 'பயம்' (பரி); *எஞ்சு* > *எச்சம்* 'மிச்சம்' (புற்), *எச்சில்* 'மிச்சம்' (புற.

பிற்சங்ககாலம்: *மிஞ்சு* > *மிச்சம்* 'அதிகம்' (வின்.அ); *ஒஞ்சு* > *ஒச்சம்* 'நாணம்'

(C)V*ண்டு* அசை அமைப்பில் பதினைந்து வினைகள் உள்ளன. இவற்றிலிருந்து இனமாற்றுப் பெயர்கள் ஆக்கப்படவில்லை.

(C)V*ந்து* என்ற அசை அமைப்பில் பன்னிரண்டு வினைகள் உள்ளன. ஒன்று சங்ககாலத்தில் இனமாற்றுப் பெயராக ஆக்கப்பட்டுள்ளது.

நந்து > *நத்தம்* 'வளர்ச்சி' (குறள்)

(C)V*ம்பு* அசை அமைப்பில் பதிநான்கு வினைகள் உள்ளன. இவற்றில் ஒன்று பெயராக ஆக்கப்பட்டுள்ளது.

சங்ககாலம்: *வெம்பு* > *வெப்பு* 'சூடு' (பதிற்), *வெப்பம்* 'சூடு' (நாலடி)

2.4.5. க்-இல் தொடங்கும் பின்னொட்டுக்கள்

ஐந்தாவது இயலில் *க்*-இல் தொடங்கும் பின்னொட்டுக்களின் இணைப்பால் ஆக்கப்படும் வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கங்கள் வரலாற்று அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன பன்னிரண்டு வினைத்திரிபு வகுப்புகளும் அவற்றின் அசை அமைப்புகளும் இவ்விளக்கங்களுக்கு பின்னணியாய் அமைகின்றன. *க்*-தொடக்கப் பின்னொட்டுக்களாகப் பின்வரும் எட்டு ஒட்டுக்கள் பட்டியலிடப்பட்டுள்ளன: *க்கை, கை, க்கல், கல், க்கம், கம், க்கு, கு*. இவ்வொட்டுகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கம் வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையிலும் அசை அமைப்புகளின் அடிப்படையிலும் வரலாற்றுப் பின்னணியில் சங்ககாலம், பிற்சங்ககாலம் எனப் பிரிக்கப்பட்டும் வரும் நூற்கள் அடையாளப்படுத்தப்படு அவற்றின் பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இடங்கருதி இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

பின்னொட்டுகள்	**எடுத்துக்காடுகள்**
கை	சங்ககாலம்: மருள்-கை > மருட்-கை 'ஆச்சரியம்' (தொல்), மரற்-கை 'ஒலி' இயல்-கை > இயற்-கை (புற),
க்கை	சங்ககாலம்: வாழ்-க்கை (தொல்); வீழ்க்கை (கலி); பிற்சங்ககாலம்: சேர்-க்கை > சேர்-க்கை
க்கல்	பிற்சங்ககாலம்: தெரி-க்கல் (சி.சி), நொது-க்கல் (யாழ்.அக)
க்கம்	கடு-க்கம், துற-க்கம், கல-க்கம்
கம்	பிற்சங்ககாலம்: பதி-கம் (மறைசை), அணி-கம் (சீவ்)
கு	சங்ககாலம்: செது-க்கு (பெரும்) , பிற்சங்ககாலம்: பொ-க்கு (பிங்), சீ-க்கு (யாழ்.அக்), துணு-க்கு, புயக்கு (இடு) பிற-க்கு (அக.நி)

2.4.6. ச்-இல் தொடங்கும் பின்னொட்டுக்கள்

ஆறாவது இயலில் *ச்*இல் தொடங்கும் பின்னொட்டுக்களின் இணைப்பால் ஆக்கப்படும் வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கங்கள் வரலாற்று அடிப்படையில் ஆயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. *ச்*தொடக்கப் பின்னொட்டுகளாகப் பின்வரும் எட்டு பின்னொட்டுகள் பட்டியலிடப்பட்டுள்ளன: *சு, ச்சு, சல், ச்சல், சை, ச்சை, ச்சம், சி, ச்சி*. இவ்வொட்டுகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கம் வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையிலும் வரலாற்றுப் பின்னணியில் சங்ககாலம், பிற்சங்ககாலம் எனப் பிரிக்கப்பட்டும் வரும் நூற்கள் அடையாளப்படுத்தப்படு அவற்றின் பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இடங்கருதி இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

பின்னொட்டுகள்	**எடுத்துக்காட்டுகள்**
சு	தணி-சு, பொடி-சு, அணை-சு (சில.உரை).
ச்சு	வரி-ச்சு (கம்), குழை-ச்சு, விளை-ச்சு (பிங்), கூர்-ச்சு, பிள-ச்சு
சல்	அவி-சல், இடி-சல், கழி-சல், அலை-சல் (திவா), உடை-சல்
யல்/சல்	அலை-யல்/அலை-சல், கடை-யல்/கடை-சல், கரை-யல்/கரை-சல், தே-சல், நோ-சல்
ச்சல்	கழி-ச்சல், தெளி-ச்சல் (நான்), நெளி-சல் (வி.அக.), பிரி-சல் (யாழ்.அக), துணி-ச்சல் (வ.வ), கடை-ச்சல் குடை-ச்சல், பறை-ச்சல் (யாழ்.அக), விளை-ச்சல், தோய்-ச்சல், மேய்-ச்சல், காய்-ச்சல்
சை	பொலி-சை (சீவ), பழி-சை (இலக்.அக),
ச்சை	நே-ச்சை (நான்), வீழ்-ச்சை (நாஞ்), சேர்-ச்சை (நாஞ்)

ச்சம்	சூழ்-ச்சம் (யாழ்.அக), நிரை-ச்சம் (வ.வ.)
சி	தெருட்-சி(சில), மருட்-சி (சில), புரட்-சி, வரட்-சி, அகற்-சி (தொல்), முயற்-சி (ஐங்), சுழற்-சி (தொல்), அழற்-சி (சிவ்), நுவற்-சி (நன்)
ச்சி	தேர்-ச்சி (புற்), வாழ்-ச்சி (தொல்), சூழ்-ச்சி (பெருங்), சேர்-ச்சி (பெருங்), உணர்-ச்சி (தொல்), படர்-ச்சி (தொல்), தொடர்-ச்சி (பெரிய்), பகர்-ச்சி (நன்), மலர்-ச்சி (சூடா)

2.4.7. த்-இல் தொடங்கும் பின்னொட்டுக்கள்

ஏழாவது இயலில் *த்*-இல் தொடங்கும் பின்னொட்டுக்களின் இணைப்பால் ஆக்கப்படும் வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கங்கள் வரலாற்று அடிப்படையில் ஆயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. *த்*-தொடக்கப் பின்னொட்டுகளாகப் பின்வரும் பதினொன்று பின்னொட்டுகள் பட்டியலிடப்பட்டுள்ளன: *து, த்து, தம், த்தம், தை, த்தை, தல், த்தல், தலை, தி, த்தி*. இவ்வொட்டுகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கம் வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையிலும் வரலாற்றுப் பின்னணியில் சங்ககாலம், பிற்சங்ககாலம் எனப் பிரிக்கப்பட்டும் வரும் நூற்கள் அடையாளப்படுத்தப்படு அவற்றின் பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இடங்கருதி இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

பின்னொட்டு	**எடுத்துக்காட்டுகள்**
து	சங்ககாலம்: ஈற்-று (புற, நற்), பிற்சங்ககாலம்: முயற்-று (குறள்),
த்து	பிற்சங்ககாலம்: பிடி-த்து (குறள்), பாய்-த்து (நன்), கை-த்து, எடு-த்து, கட-த்து, சே-த்து

தம்	சங்ககாலம்: ஆய்-தம் (தொல்), பிற்சங்ககாலம்: கிழி-தம் (கொ.உரை), திமிர்-தம் (திருப்), துமி-தம் (பிங்), மிகு-தம் (வின்.அக), தாளி-தம்
த்தம்	சங்ககாலம்: கொற்-றம் (புற), வேட்-டம் (புற), பிற்சங்ககாலம்: சூர்-த்தம் (வாச்.உரை), பிடி-த்தம், மிகு-த்தம், கலி-த்தம் (யாழ்.அக)
தை	சங்ககாலம்: கோ-தை 'மாலை' (அக), பிற்சங்ககாலம்: உருட்-ஐ வண்டி (சேதுபு) , வேட்-ஐ 'ஆசை' (திருப்பு)
த்தை	பிற்சங்ககாலம்: நட-த்தை (வவ)
தல்	பிற்சங்ககாலம்: மாறு-தல், தேறு-தல், கெடு-தல், விடு-தல்
தலை	பிற்சங்ககாலம்: கூடு-தலை, தேறு-தலை (வி.அக.), அலந்-தலை (திவா), நோ-தலை (ஜா.வ)
தி	சங்ககாலம்: செய்-தி (புற, மணி), கொண்-தி (புற), வென்-றி, இறு-தி (புற), உறு-தி (புற), கெடு-தி (தொல்), பிற்சங்ககாலம்: புகுதி (பிங்), பெறு-தி (மணி), அறு-தி (ம.பா)

2.4.8. ப்-இல் தொடங்கும் பின்னொட்டுக்கள்

எட்டாவது இயலில் ப்-இல் தொடங்கும் பின்னொட்டுக்களின் இணைப்பால் ஆக்கப்படும் வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கங்கள் வரலாற்று அடிப்படையில் ஆயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. ப்-தொடக்கப் பின்னொட்டுகளாகப் பின்வரும் ஆறு பின்னொட்டுகள் பட்டியலிடப்பட்டுள்ளன: *பு, ப்பு, ப்பை, ப்பம், ம்பு, ப்பி.* இவ்வொட்டுகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கம்

வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையிலும் வரலாற்றுப் பின்னணியில் சங்ககாலம், பிற்சங்ககாலம் எனப் பிரிக்கப்பட்டும் வரும் நூற்கள் அடையாளப்படுத்தப்படு அவற்றின் பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இடங்கருதி இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

பின்னொட்டு	**எடுத்துக்காட்டுகள்**
பு	சங்ககாலம்: சால்-பு (புற), இயல்-பு (பரி), கவல்-பு (பொருன்), அழி-பு (குறு), இழி-பு (தொல்), நோன்-பு (நற்), மாண்-பு (தொல்), நட்-பு (தொல்), பிற்சங்ககாலம்: ஒழி-பு (நம்பி), தீர்-பு (சேதுபு), ஏர்-பு (பிங்), கேட்-பு (யா.அக), மீட்-பு (யாழ்.அக)
ப்பு	சங்ககாலம்: கா-ப்பு (தொல்), யா-ப்பு (தொல்), செறி-ப்பு (புற), கொழு-ப்பு (அக), வியர்-ப்பு (புற), பிற்சங்ககாலம்: அரி-ப்பு, இடி-ப்பு, சிரி-ப்பு
ப்பை	பிற்சங்ககாலம்: எதிர்-ப்பை (குறள்), துர-ப்பை,பற-ப்பை
ப்பம்	சங்ககாலம்: உரு-ப்பம் (கலி), பிற்சங்ககாலம்: அடை-ப்பம் (பிங்), விய-ப்பம் (விளை), அடர்-ப்பம் (ஜா.வ), பெரு-ப்பம் (வின்.அக)
ம்பு	சங்ககாலம்: உரு-ம்பு (பதிற்), பிற்சங்ககாலம்: குழு-ம்பு (மது), இழி-ம்பு (இடு), திணி-ம்பு (திவ்.இயற்), பர-ம்பு
ப்பி	பிற்சங்ககாலம்: மோ-ப்பி ‘மணம்/ மூக்கு’

முன் மூக்கொலி வரும் வடிவமும் பின் மூக்க்கொலி வரும் வடிவமுமான உரும்பு/உருப்பு என்ற இரு வகையிலான ஆக்கங்கள் சங்க காலத்திலும் *பரம்பு/பரப்பு*, *செழிம்பு/செழிப்பு* என்ற ஆக்கங்கள் பின் சங்காலத்திலும் வருகின்றன. இது போல *வென்றி/வெற்றி* *நண்பு/நட்பு* என்ற வடிவங்களும் காணப்படுகின்றன.

2.4.9. *வ்*-இல் தொடங்கும் பின்னொட்டுக்கள்

ஒன்பதாவது இயலில் *வ்*-இல் தொடங்கும் பின்னொட்டுக்களின் இணைப்பால் ஆக்கப்படும் வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கங்கள் வரலாற்று அடிப்படையில் ஆயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. *வ்*-தொடக்கப் பின்னொட்டுகளாகப் பின்வரும் ஆறு பின்னொட்டுகள் பட்டியலிடப்பட்டுள்ளன: *வு, வை, வி, வல், வம், அவு*. இவ்வொட்டுகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட வின ஆக்கப்பெயர்களின் ஆக்கம் வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையிலும் வரலாற்றுப் பின்னணியில் சங்ககாலம், பிற்சங்ககாலம் எனப் பிரிக்கப்பட்டும் வரும் நூற்கள் அடையாளப்படுத்தப்படு அவற்றின் பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இடங்கருதி இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

பின்னொட்டு	**எடுத்துக்காட்டுகள்**
வு	சங்ககாலம்: இழி-வு (கலி), ஒழி-வு (அக), கழி-வு (தொல்), தணி-வு (பரி), பரி-வு (தொல்), பொலி-வு (புற்), முடி-வு (தொல்), மெலிவு (பதிற்), பிற்சங்ககாலம்: அணி-வு, அரி-வு, எரி-வு, ஒசி-வு, ஒடி-வு, ஒழி-வு
வை	சங்ககாலம்: போர்வை (புற), பார்-வை (பெரும்), அறு-வை (புற), மடர்-

	வை (நற்), பிற்சங்ககாலம்: கோ-வை/கோர்வை (கம்), இரை-வை, வெளு-வை, இழு-வை
வி	சங்ககாலம்: கேள்-வி (புற), வேள்-வி (அக), கல்-வி, தோல்-வி (குறள்), கல-வி (பரி), கிள-வி (தொல்), புல-வி (நற்), பிற்சங்ககாலம்: துற-வி(சில), இற-வி (புகழ்)
வல்	சங்ககாலம்: பார்-வல் (பதிற்),
வம்	பிற்சங்ககாலம்: கள்-வம்
அவு	சங்ககாலம்: கள்-அவு (தொல்), உண்-அவு (புற), உழ-வு (பதிற்), நெச்-அவு (வின்.அ), வச்-அவு, புக்-அவு (ஐங்), உற்-அவு (புற), அற-வு (புற), பிற்சங்ககாலம்: பக்-அவு (குறள்), நட்-அடு (விளை), விட்-அவு (வின்.அ)

2.4.10. பிற உயிர்கள் மற்றும் மெய்களில் தொடங்கும் பின்னொட்டுக்கள்

பத்தாவது இயல் பிற உயிர்கள் மற்றும் மெய்களில் தொடங்கும் பின்னொட்டுக்களின் இணைப்பால் ஆக்கப்படும் வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கங்கள் வரலாற்று அடிப்படையில் ஆயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. பின்வரும் 59 பின்னொட்டுகள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன: *அம், அல், இ, ஐ, மை, மதி, அடம், அணம், ஆணம், உரவு, அனவு, அரவு, காடு, வாய், அகம், அடி, படி, ஆரம், ஆயம், இயம், பாடு, மானம், அர், ஆர், உள், அன், ஆன், ட், ல், ய், மான், இதம், அடை, அரம், அந்தம் ~ வந்தம், வாளம், கண், கடை, அளம், ஆளம், ஆங்கு, அறை, அவம், உவம், ஆச்சி, அணி, இல், உ, உல், அடு, முகம், முகனை, முதல், ஆறு, வாசி, வாதம், சாரம், வாக்கு, தனம்.*

இவ்வொட்டுகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட வினை ஆக்கப்பெயர்களின் ஆக்கம் வினைத் திரிபு வகுப்புகளின் அடிப்படையிலும் வரலாற்றுப் பின்னணியில் சங்ககாலம், பிற்சங்ககாலம் எனப் பிரிக்கப்பட்டும் வரும் நூற்கள் அடையாளப்படுத்தப்படு அவற்றின் பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இடங்கருதி இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

பின்னொட்டு *அம்* எட்டாவது மற்றும் பத்தாவது வினைத்திரிபு வகுப்புதவிர எல்லா வகுப்பு வினைகளுடனும் இணைந்து சங்ககாலத்திலும் பிற்சங்ககாலத்திலும் பொயராக்கம் செய்யும். இது மிக முக்கியமான பெயராக்க ஒட்டாகும்.

பின்னொட்டு	எடுத்துக்காட்டுகள்
அம்	சங்ககாலம்: குய்-அம் (அக), பிற்சங்ககாலம்: விள-அம் (வவ), நீள்-அம் (சீவ, சில), அக-அம் (புற), கவல்-அம் (திருக்கோ), அழன் –அம் (பிங்), உயர்-அம் (சில), சிதர்-அம், பகர்-அம் (திருப்பு), பழ்-அம் (நற்), அவ்வி-ய்-அம் (குறள்), கற்-அம் (ஆல)

சங்ககாலம் பிற்சங்ககால அம் என்பதற்குப் பதிலாக வேறு பின்னொட்டுக்களைக் கொண்டிருந்ததை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

சங்க காலம்	**பின் சங்ககாலம்**
உயர்-ச்சி, உயர்-வு	உயர்-அம்
ஆழ்-ச்சி	ஆழ்-அம்
தாழ்-வு	தாழ்-அம்

விளை	விளை-ய்-அம்
சிதர்	சிதர்-அம்

அல் தொடக்கத்தில் ஒரு வினைப் பெயராகப் பின்னொட்டாக இருந்தது. பின்னர் ஆக்க ஒட்டாக மாறியது. இவ்வாறு இரண்டு செயல்பாடுகளை இது சங்ககாலத்திலிருந்தே கொண்டுள்ளது. எனவே இது மிக முக்கிய பெயராக்கப் பின்னொட்டகும்.

பின்வரும் அட்டவணையில் இவ்வியலில் பட்டியலிடப்பட்டுள்ள பிற பின்னொட்டுகளின் ஆக்கங்கள் எடுத்துக்காட்டுகளுடன் அவை வரும் பனுவல்களை அடையாளப்படுத்தி தரப்பட்டுள்ளன.

பின்னொட்டு	**எடுத்துக்காட்டுகள்**
அல்	சங்ககாலம்: செய்-அல் (தொல்), பெய்-அல் (அக), பிற்சங்ககாலம்: செய்-ய்-அல் (பிங், சூடா), கள்ள்-அல், விள்ள்-அல், மருள்-அல் (வி.அக), இரி-ய்-அல் (பெரும்), தெரி-ய்-அல் (புற), விடி-ய்-அல் (குறு), ஆட்-அல் (பரி), ஊட்-அல் (தொல்), ஏந்-அல் (குறு), தோன் – அல் (புற), தொட்-ஐ-அல் (பொருந)
ஆல்	சங்ககாலம்: அழ்-ஆல் (புற.46), கொள்-ஆல் (தொல்), கழ்-ஆல் (புற), தாழ்-ஆல் (தொல்), உர்-ஆல் (மது), ஒர்-ஆல் (பதிற்)
இ	பிற்சங்ககாலம்: கூள்-இ (பிங்), மூள்-இ (கோ), உருள்-இ (பதிற்ற்), முருள்-இ (கலி), வெகுள்-இ (தொல்), இருள்-இ(திவா),வருள்-இ (சிவதரு), ஆழ்-இ (புற), வார்-இ (புற), அலர்-இ (அக), வல-இ (குறு), பிற-இ (புற) பிற்சங்ககாலம்: நொண்ட்-இ, வேண்ட்-இ, சோம்ப்-இ
ஐ	சங்ககாலம்: வச்-ஐ> வசை, கொள்ள்-ஐ > கொள்ளை (பெரும்)

	‘விலை’ ‘செழுமை, திருட்டு (பாகவ்), உருள்-ஐ > உருளை (பெரும்.188), சுருள்-ஐ > சுருளை, திரள்-ஐ > திரளை, கவல்-ஐ > கவலை (கலி), துவல்-ஐ > துவலை, அமல்-ஐ >அமலை (மலை, தொல்), அழல்-ஐ > அழலை, உழல்-ஐ > உழலை (திலவ), நக்-ஐ > நகை (சிறு), தொக்-ஐ >தொகை (புற), மிக்-ஐ > மிகை (தொல்)
மை	சங்ககாலம்: இருண்-மை , நீண்-மை (சீவ), மடி-மை (தொல்), இசை-மை (பரி), பிற்சங்ககாலம்: எழு-மை (திவா),மொழி-மை (பிங்), தாழ்-மை (பிங்)
மதி	பிற்சங்ககாலம்: இறக்கு-மதி, ஏற்று-மதி, செல்லு-மதி, பெறு-மதி, தரு-மதி
அடம்	பிற்சங்ககாலம்: ஒற்ற்-அடம் > ஒற்றடம் (திவா), ஒத்த்-அடம் > ஒத்தடம்(திவா), கட்ட்-அடம் > கட்டடம், சீவ்-அடம் >சீவடம், கர-வ்-அடம் >கரவடம் (திவா)
அணம்	பிற்சங்ககாலம்: பராவ்-அணம் (தேவா), போக்க்-அணம் > போக்கணம் (வ.வ), துக்க்-அணம் (சங்.அக), தூங்க்-அணம் > தூங்கணம், கொட்ட்-அணம் > கொட்டணம்
ஆணம்	பிற்சங்ககாலம்: இர-வ்-ஆணம் > இரவாணம்
உரவு	பிற்சங்ககாலம்: ஒப்ப்-உரவு > ஒப்புரவு (குறள்), நீ-ப்ப்-உரவு > நீப்புரவு (பெருங்), து-ப்ப்-உரவு > துப்புரவு (நாலடி)
அனவு	பிற்சங்ககாலம்: முற்ற்-அனவு > முற்றனவு (பழ.உரை), கொள்-வ்-அனவு > கொள்வனவு, படி-ப்ப்-அனவு> படிப்பனவு
அனை	பிற்சங்ககாலம்: கொடு-ப்ப்-அனை > கொடுப்பனை, படி-ப்ப்-அனை,கற்-ப்-அனை >கற்பனை, ஒ-ப்ப்-அனை > ஒப்பனை
அரவு	பிற்சங்ககாலம்: கூடி-அரவு> கூடியரவு, தொற்ற்-அரவு> தொற்றரவு (மணி), வாட்ட்-அரவு > வாட்டரவு, பொற்ற்-அரவு >பொற்றரவு

கடவு	சங்ககாலம்: சா-க்-கடவு > சாக்கடவு (தொல்), நோ-க்-அடவு > நோக்கடவு, வே-க்-கடவு > வேக்கடவு, போ-க்-கடவு > போக்கடவு
வாய்	கழு-வாய் (புற), வலு-வாய் (புற), எழு-வாய், இறு-வாய் (தொல்), வரு-வாய் (திரிகடு), தோற்று-வாய் (கோ), மூட்டு-வாய் (இலக்.வி)
அகம்	பின்ன் –அகம் > பின்னகம், அவிழ்-அகம் > அவிழகம் (அக), சூட்-அகம் > சூட்டகம் (பெருங்), உருள்-அகம்>உருளகம் (பிங்), சே-வ்-அகம் > சேவகம் (கம்)
அடி	தியக்க்-அடி > தியக்கடி (வி.அக), விலக்க்-அடி > விலக்கடி (இடு), நெருக்க்-அடி > நெருக்கடி, புழுக்க்-அடி > புழுக்கடி (பேவ), மடக்க்-அடி > மடக்கடி (விஅக)
படி	பிற்சங்ககாலம்: உழறு-படி, குழறு-படி, தள்ளு-படி, நட-படி, கட்டு-படி
ஆறம்	பிற்சங்ககாலம்: துழாவ்-ஆரம் > துழாவாரம் ‘தீங்கான கிசுகிசுப்பு’ ; பொங்க்-ஆரம் > பொங்காரம் ‘ததும்பி வழிதல் அதிகரித்தல்’; இளக்க்+ஆரம் > இளக்காரம்
ஆயம்	பிற்சங்ககாலம்: கட்ட்-ஆயம் > கட்டாயம், தண்ட்-ஆயம் >தண்டாயம், பற்ற்-ஆயம்
இயம்	பிற்சங்ககாலம்: கட்ட்-இயம் > கட்டியம், கறுவ்-இயம்> கறுவியம், செப்ப்-இயம் > செப்பியம், கூர்-இயம் > கூரியம்
பாடு	பிற்சங்ககாலம்: கொடு-பாடு, அருள்-பாடு, சிற-ப்-பாடு. நிற்-பாடு, பிழை-பாடு
மானம்	பிற்சங்ககாலம்: அடை-மானம், அழி-மானம், உடு-மானம்
அர்	முடங்க்-அர் >முடங்கர், வெப்ப்-அர், சுட்-அர் > சுடர், தொட்-அர் > தொடர் (புற), துய்-அர் > துயர் (தொல்)
ஆர்	நக்-ஆர் > நகார் (குறு), புக்-ஆர் > புகார் (புற), சில்-ஆர் > சிலார்
உள்	சங்ககாலம்: கட-வ்-உள் > கடவுள் (பதிற்), செய்ய்-உள்> செய்யுள்,

	விளை-உள் > விளையுள், வெப்ப்-உள் > வெப்புள், இய-வ்-உள்> இயவுள்
அன்	கல-வ்-அன் > கலவன், இட-வ்-அன் > இடவன், சுடு-வ்-அன் > சுடுவன், குதி-ய்-அன் > குதியன்
ஆன்	தொங்-ஆன் >தொங்கான், கல்ல்-ஆன் > கல்லான், கக்கு-வான், நிறு-ப்ப்-ஆன் > நிறுப்பான்
டு	பிற்சங்ககாலம்: சும-டு > சுமடு
டை	சும-டை
டி	புகு-டி
ட்டை	பற-ட்டை
ல்	வெடி-ல், பர-ல், திரி-ல்
ய்	நோ-ய், கடா-ய்
மன்	தடி-மன், பரு-மன்
அனம்/வந்தனம்	ஒப்ப்-அனம் > ஒப்பனம், எரி-வந்தனம், வெரு-வந்தனம்
வாளம்	கடி-வாளம்
கண்	உறு-கண்
கடை	தேறு-கடை,
அளம்	தப்ப்-அளம் > தப்பளம்
ஆளம்	ஏர்-ஆளம் > ஏராளம், வே-க்க்-ஆளம் > வேக்காளம்
ஆங்கு	சுண்ட்-ஆங்கு > சுண்டாங்கு
அறை	சுணங்க்-அறை > சுணங்கறை (பரி)
அவம்	தாண்ட்-அவம் > தாண்டவம்
உவம்	குயில்-உவம் >குயிலுவம்
ஆச்சி	அழு-வ்-ஆச்சி > அழுவாச்சி
அணி	ஊற்-அணி > ஊறணி (யாழ்.அக)

இல்	தொ-ய்-இல் > தொய்யில்
உ	கொள்-உ > கொளு
உல்	மங்க்-உல்> மங்குல்
அடு	சித்-அடு > சிதடு
முகம்	ஏறு-முகம், இறங்கு-முகம், அறி-முகம், தேறு-முகம்
முகனை	எழு-முனகனை
முதல்	கொள்-முதல், பறி-முதல்
ஆறு	வர்-ஆல்-ஆறு >வரலாறு, வழக்க்-ஆறு >வழக்காறு
வாசி	ஏறு-வாசி
வாதம்	பிடி-வாதம்
சாரம்	மின் –சாரம், பொருவு-சாரம், வெப்ப-சாரம்
வாக்கு	செல்-வாக்கு
தனம்	சோம்பு-த்-தனம், சுழி-த்-தனம், கள்ள-த்-தனம், திருட்டு-த்-தனம் சோம்-ஏறி-த்-தனம், நொண்டி-த்-தனம் அறி-ய்-ஆ-த்-தனம் > அறியாத்தனம், தெரிய்-ஆ-த்-தனம் > தெரியாத்தனம்

2.4.11. பால்-எண் பெயர்கள்

பதினொன்றாவது இயல் பால்-எண் பெயர்களாகும். முதலில் பால்-எண் ஏற்கும் இப்பெயர்களின் ஆக்கப் பகுதிகள் அவை ஏற்கும் ஆண்பால், பெண்பால் உயர்திணைப் பன்மை பின்னொட்டுக்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. பின்னொட்டுகளின் எடுத்துக்காட்டுகள் வரலாற்றுத் தகவலுடன் (அவை பனுவல்களில் வரும் இடம் குறித்த தகவலுடன்) தரப்பட்டுள்ளன. இரண்டாவதாகப் பால்-எண் குறிகள் தரப்பட்டுள்ளன. மூன்றாவதாக வரலாற்றுக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

பால்-எண் ஏற்கும் பகுதிகள் 19 வகைகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஏற்கும் ஆண்பால், பெண்பால், உயர்திணைப் பன்மை பின்னொட்டுகள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

முதல் வகுப்புப் பகுதிகள் *அன்* என்ற ஆண்பால் பின்னொட்டை ஏற்கும். இது மேலும் எட்டு வகுப்புகளாக அவை ஏற்கும் பெண்பால் பின்னொட்டுக்கள் அடிப்படையில் பகுக்கப்படுகின்றன: *இ, தி, த்தி, ச்சி, அச்சி, இச்சி, ஐ, அள்.*

ஆண்பால்/ பெண்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**
கட்டுண்ட அடி+அன்/இ	தோழ்-அன் > தோழன்	தோழ்-இ> தோழி
“	கிழ-வ்-அன் > கிழவன்	கிழ-வ்-இ
“	பார்ப்பன் –அன் >பார்ப்பனன்	பார்ப்பன்-இ > பார்ப்பனி
“	கொழுந்த்-அன் > கொழுந்தன்	கொழுந்த்-இ > கொழுந்தி
“	மாம்-அன் > மாமன்	மாம்-இ > மாமி
“	அண்ண்-அன் > அண்ணன்	அண்ண்-இ > அண்ணி
பெயடை அடி + அன்/இ	சிறு-வ்-அன் > சிறுவன்	சிறுவ்-இ > சிறுவி, சிறும்+இ > சிறுமி
“	பொது-வ்-அன் > பொதுவன்	பொது-வ்-இ > பொதுவி
பெயர் அடி + அன்/இ	காதல்-அன் > காதலன்	காதல்-இ > காதலி
“	பாங்க்-அன் > பாங்கன்	பாங்க்-இ > பாங்கி
	அரச்-அன் > அரசன்	அரச்-இ >அ ரசி
	கூத்த்-அன் .கூத்தன்	கூத்த்-இ >கூத்தி
வினை அடி +	திருட்-அன் >திருடன்	திருட்-இ > திருடி

அன்/இ		
கட்டுண்ட அடி + அன்/த்தி	கய-வ்-அன் > கயவன்	கய-த்தி > கயத்தி
	கிழ-வ்-அன்	கிழ-த்தி > கிழத்தி
	குட-வ்-அன் > குடவன்	குட-த்தி > குடத்தி
	குற-வ்-அன் > குறவன்	குற-த்தி > குறத்தி
சுதந்திர அடி + அன்/அத்தி	ஆய்-அன் > ஆயன்	ஆய்-அத்தி > ஆய்த்தி/ஆய்ச்சி
	பேய்+அன் >பேயன்	பேய்-த்தி > பேய்த்தி/பேய்ச்சி
பெயர் அடி + அன்/த்தி	தமி-ய்-அன் > தமியன்	தமி-த்தி
எண் அடி + அன்/த்தி	ஒரு-வ்-அன் > ஒருவன்	ஒரு-த்தி
கட்டுண்ட அடி + அன்/அத்தி	பார்ப்பன்-அன் > பார்ப்பனன்	பார்ப்பன்-அத்தி > பார்ப்பனத்தி
	பாண்-அன் > பாணன்	பாண்-அத்தி > பாணத்தி
பெயர் அடி + அன்/ச்சி	இடை-ய்-அன் > இடையன்	இடை-ச்சி
கட்டுண்ட அடி + அன்/அச்சி	செம்படவ்-அன் >செம்படவன்	செம்படவ்-ச்சி >செம்படவச்சி
	பள்ள்-அன் > பள்ளன்	பள்ள்-அச்சி >பள்ளச்சி
பெயர் அடி + அன்/அச்சி	தமிழ்-அன் > தமிழன்	தமிழ்-அச்சி > தமிழச்சி
கட்டுண்ட அடி +	வேட்டுவ்-அன் > வேட்டுவன்	வேட்டுவ்-அச்சி > வேட்டுவச்சி

அன்/இச்சி		
பெயர் அடி + அன்/இச்சி	கொல்ல்-அன் > கொல்லன்	கொல்ல்-இச்சி >கொல்லிச்சி
கட்டுண்ட அடி + அன்/ஐ	கொற்ற-வ்-அன் > கொற்றவன்	கொற்ற-வ்-ஐ > கொற்றவை
“	பரத்த்-அன் > பரத்தன்	பரத்த்-ஐ >பரத்தை
பெயர் அடி + அன்/ஐ	ஐ-ய்-அன் > ஐயன்	ஐ-ய்-ஐ > ஐயை
கட்டுண்ட அடி + அன்/அள்	மக்-அன் > மகன்	மக்-அள் > மகள்
பெயடை அடி + அன்/அள்	தனி-ய்-அன் > தனியன்	தனி-ய்-அள் > தனியள்
மாற்றுப் பெயர் அடி + அன்/அள்	தம்-அன் >தமன்	தம்-அள் > தமள்
சுட்டு அடி +அன்/அள்	அவ்-அன் > அவன்	அவ்-அள்> அவள்
வினா அடி + அன்/அள்	யா-வ்-அன் >யாவன்	யா-வ்-அள் > யாவள்

ஆண்பால்/ பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
கட்டுண்ட அடி + அன்/அர்	சோழ்-அன் >சோழன்	சோழ்-அர் > சோழர்
“	சேர்-அன் > சேரன்	சேர்-அர் > சேரர்
பெயர் அடி +	ஒற்ற்-அன் >ஒற்றன்	ஒற்ற்-அர் >ஒற்றர்

அன்/அர்		
	மல்-அன் >மல்லன்	மல்-அர் >மல்லர்
பெயடை அடி + அன்/அர்	புல்-அன் >புல்லன்	புல்-அர் > புல்லர்
	தூய்-அன் >தூயன்	தூய்-அர் >தூயர்
திரிபுற்ற அடி + அன்/அர்	விருந்த்-இன் –அன் >விருந்தினன்	விருந்த்-இன்-அர் > விருந்தினர்
திரிபுற்ற மாற்றுப் பெயர் அடி	எம்-அன் >எமன்	எம்-அர் > எமர்
	நும்-அன்> நுமன்	நும்-அர் > நுமர்
அடி + அன்/அர்	மன்ன்-அன் >மன்னன்	மன்ன்-அர் >மன்னர்
	வேந்த்-அன் >வேந்தன்	வேந்த்-அர் > வேந்தர்
அடி+அன்/இர்	கேள்-அன் > கேளன்	கேள்-இர் > கேளிர்
அடி +அன்	சேர்ப்ப்-அன் >சேர்ப்பன்	
	நாட்-அன் > நாடன்	

இரண்டாவது வகுப்புப் பகுதிகள் *ஆன்* என்ற ஆண்பால் பின்னொட்டை ஏற்கும் மற்றும் *ஆத்தி, ஆள், ஆட்டி* என்ற பெண்பால் பின்னொட்டுக்களை ஏற்கும்.

ஆண்பால்/ பெண்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**
கட்டுண்ட அடி +ஆன்/ஆத்தி	வண்ண்-ஆன் > வண்ணான்	வண்ண்-ஆத்தி > வண்ணாத்தி
	நாட்-ஆன்> நாடான்	நாட்-ஆத்தி> நாடாத்தி
கட்டுண்ட அடி +ஆன்/ஆள்	மச்ச்-ஆன் > மச்சான்	மச்ச்-ஆள் > மச்சாள்
திரிபுற்ற அடி +	நாட்ட்-ஆன் >நாட்டான்	நாட்ட்-ஆள்> நாட்டாள்

ஆன்/ஆள்		
	தெற்கத்தி-ய்-ஆன் > தெற்கத்தியான்	தெற்கத்தி-ய்-ஆள் > தெற்கத்தியாள்
கட்டுண்ட அடி +ஆன்/ஆட்டி	பிர்-ஆன் > பிரான்	பிர்-ஆட்டி > பிராட்டி
கட்டுண்ட அடி +ஆன்	மாம்-ஆன் > மாமான்	-
	அத்த்-ஆன் > அத்தான்	
மாற்றுப் பெயர் அடி + ஆன்	தம்-ம்-ஆன் > தம்மான்	-

மூன்றாவது வகுப்புப் பகுதிகள் *ஓன்* என்பதை ஆண்பால் பின்னொட்டாகவும் *ஓள்* என்பதை பெண்பால் ஒட்டாகவும் *ஓர்* என்பதை உயர்திணைப் பன்மை ஒட்டாகவும் ஏற்கும். *ஓன்* என்பதும் *ஆன்* என்பதும் *பின், முன், மாய், மறை* என்ற பகுதிகளின் பின்னர் தனி வேறுபாட்டில் இருக்கும்.

ஆண்பால்/ பெண்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
கட்டுண்ட அடி +ஓன்/ஓள்	மாய்-ஓன் > மாயோன்	மாய்-ஓள் > மாயோள்	மாய்-ஓர் > மாயோர்
“	கிழ-வ்-ஓன் > கிழவோன்	கிழ-வ்-ஓள் > கிழவோள்	கிழ-வ்-ஓர் > கிழவோர்
கட்டுறா அடி + ஓன்/ஓள்	முன்ன்-ஓன் > முன்னோன்	முன்ன்-ஓள்> முன்னோள்	முன்ன்-ஓர்> முன்னோர்
	பின்ன்-ஓன் > பின்னோன்	பின்ன்-ஓள் > பின்னோள்	பின்ன்-ஓள் > பின்னோர்
பெயடை அடி + ஓன்/ஓள்	வேற்ற்-ஓன் >வேற்றோன்	வேற்ற்-ஓள் >வேற்றோள்	வேற்ற்-ஓள் >வேற்றோர்

கட்டுண்ட அடி +ஓன்	புலவ்-ஓன் > புலவோன்	-	
	மறவ்-ஓன் > மறவோன்	-	
திரிபுற்ற அடி + ஆன்/ஆள்	எம்-ம்-ஓன் > எம்மோன்	-	குழல்-ஓர்> குழலோர்
கட்டுறா அடி + ஓன்	குழல்-ஓன்> குழலோன்	-	முதல்-ஓர் > முதலோர்
பெயர் அடி + ஓன்	முதல்-ஓன் > முதலோன்	-	மறை-ஓர் > மறையோர்
	மறை-ஓன் > மறையோன்	-	குழல்-ஓன்> குழலோன்
அடி + ϕ/ஓன்/ஓள்	இறை, இறை-ய்-ஓன் >இறையோன்	இறை-ய்-ஓள் > இறையோள்	இறை-ய்-ஓர் > இறையோர்

நான்காவது வகுப்புப் பகுதிகள் வன் என்பதை ஆண்பால் பின்னொட்டாகவும் *வி* என்பதைப் பெண்பால் பின்னொட்டாகவும் ஏற்கும்.

ஆண்பால்/ பெண்பால்/பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் பின்னொட்டுகள்**
கட்டுண்ட அடி +வன்/வி/-	புதல்-வன் > புதல்வன்	புதல்-வி > புதல்வி	-
“	செல்-வன் > செல்வன்	செல்-வி > செல்வி	-
பெயர் அடி + வன்/வி/-	முதல்-வன் > முதல்வன்	முதல்-வி > முதல்வி	-
	தலை-வன் >தலைவன்	தலை-வி> தலைவி	-
பெயர் அடி+வன்/வர்	கிணைவன்	-	-

	துறை-வன்	-	-
வினை அடி +அன்	அறி-வன்	-	-

ஐந்தாவது வகுப்புப் பகுதிகள் *கன்~க்கன்* என்பதை ஆண்பால் பின்னொட்டாக ஏற்கும். இதில் முதல் துணை வகுப்பு *கன்* என்ற ஆண்பால் பின்னொட்டை ஏற்கும்; பெண்பால் பின்னொட்டையும் உயர்திணைப் பன்மை பின்னொட்டையும் ஏற்காது. இடண்டாவது துணை வகுப்பு *க்கன்* என்ற ஆண்பால் பின்னொட்டை ஏற்கும் மற்றும் *க்கி* என்ற பெண்பால் பின்னொட்டை ஏற்கும். இத்தகைய பகுதி ஒன்றே உள்ளது. மூன்றவது துணை வகுப்பு *க்கன்* என்பதை ஆண்பால் பின்னொட்டாக ஏற்கும்; இது இதற்கு *கன்* என்பதற்கு இணையான பெண்பால் பின்னொட்டை கொண்டிருக்கவில்லை.

ஆண்பால் பின்னொட்டு/பெண்பால் பின்னொட்டு/பலர்பால்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் பின்னொட்டுகள்**
கட்டுண்ட அடி +கன்	சாதுரி-கன் >சாதுரிகன்		
	பாண்டி-கன்>பாண்டிகன்		
பெயர் அடி+கன்	பட்டி-கன்>பட்டிகன்		
	கொண்-கன்		
பெயடை அடி + க்கன்	சிறு-க்கன் > சிறுக்கன்	சிறு-க்கி>சிறுக்கி	
வினை அடி + க்கன்	தொழு-க்கன் > தொழுக்கன்		
	பொழ்-க்கன் > பொழ்க்கன்		
பெயர் அடி+க்கன்	பணி-க்கன்>பணிக்கம்		

ஆறாவது வகுப்புப் பகுதிகள் *நன்* என்ற ஆண்பால் பின்னொட்டை ஏற்கும். இது *கொலை, வினை* என்ற பகுதிகளின் பின்னர் *ஞர்* என்பதுடன் தனிவேறுபாட்டில் வரும். இவ்வகுப்பு *நன்* என்பதற்கு இணையான பெண்பால் ஒட்டை கொண்டிருக்கவில்லை.

ஆண்பால் பின்னொட்டு	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
கட்டுண்ட அடி + நன்	கொழு-நன் >கொழுநன்	-	-
	புளி-நன் >புளிநன்	-	-
	கொலை-நன்>கொலைநன்	-	-
	வனை-நன்>வனைநன்	-	-

ஏழாவது வகுப்புப் பகுதிகள் *ஞன்* என்ற ஆண்பால் பின்னொட்டை ஏற்கும். இது அவன் என்பதுடன் இளை என்ற பகுதிக்குப் பின்னரும் வாணன் என்பதை கலை என்ற பகுதிக்குப் பின்னரும் தனி வேறுபாட்டில் இருக்கும்.

ஆண்பால் பின்னொட்டு	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**
பெயடை அடி + ஞன்/-	இளை+ஞன் >இளைஞன்	-
	சிரி-ஞன் >சிரிஞன்	-
பெயர் அடி +ஞன்/-	கடை+ஞன் >கடைஞன்	-
	கலை+ஞன்>கலைஞன்	-
வினை அடி + ஞன்/-	அறி-ஞன்>அறிஞன்	-
	ஆய்-ஞன்>ஆய்ஞன்	-

எட்டாவது வகுப்புப் பகுதிகள் *மான்* என்ற ஆண்பால் பின்னொட்டை ஏற்கும். இதில் *வேள், கோ* என்ற பகுதிகள் *மாள்* என்பதையும் *பெரு* என்பது *மாட்டி* என்பதையும்

பெண்பால் பின்னொட்டாக ஏற்கும். இணையான உயர்திணைப் பன்மை ஒட்டை ஏற்காது.

ஆண்பால்/ பெண்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக் காட்டு**
பெயர்கள் + மான்/மாள்/-	கோ-மான்>கோமான்	கோ-மாள்>கோமாள்	-
	வேண்-ஆன்>வேண்மான்	வேண்-மாள்> வேண்மாள்	-
பெயர் அடி + மான்/-/-	நெறி-மான்>நெறிமான்	-	-
	வெளி-மான் >வெளிமான்	-	-
கட்டுண்ட அடி +மான்/-	சேர-மான்>சேரமான்	-	-
	மலைய-மான்>மலையமான்	-	-
பெயரடை அடி + மான்/-/-	நெடு-மான்>நெடுமான்	-	-
	கரு-மான்>கருமான்	-	-
பெயரடை அடி + மான்/மாட்டி/-	பெரு-மான்>பெருமான்	பெரு-மாட்டி>பெருமாட்டி	-

ஒன்பதாவது வகுப்புப் பகுதிகள் *காரன் ~ க்காரன்* என்பதை ஆண்பால் பின்னொட்டாகவும் *காரி ~க்காரி* என்பதை பெண்பால் பின்னொட்டாகவும் ஏற்கும். இது விளைவாக்கமுள்ள பெயராக்கப் பின்னொட்டுகளில் ஒன்றாகும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**

கட்டுறா அடி+ காரன்~க்காரன் காரி~க்காரி/ காரர்~க்காரர்	கூலி-க்காரன் >கூலிக்காரன்	கூலி-க்காரி > கூலிக்காரி	-
-	கடை-க்காரன் >கடைக்காரன்	கடை-க்காரி > கடைகாரி	-
-	குருவி-க்காரன் > குருவிக்காரன்	குருவி-க்காரி > குருவிக்காரன்	-
பெயரடி + காரன்~க்காரன் காரி~க்காரி/	கொலை-காரன் > கொலைகாரன்	கொலை-காரி > குருவிக்காரி	-
-	பிணை-காரன் > பிணைக்காரன்	பிணை-காரி	-
-	பொதி-காரன்	பொதி-காரி	-

பத்தாவது வகுப்பு *ஆளன்* என்பதை ஆண்பால் பின்னொட்டாகவும் *ஆளர்* என்பதை உயர்திணைப் பன்மை பின்னொட்டாகவும் ஏற்கும்; சில பகுதிகள் ஆட்டி என்ற இணையான பெண்பால் பின்னொட்டை ஏற்கும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
பெயர் அடி +ஆளன்/ஆட்டி/ஆளர்	இல்-ல்-ஆளன் > இல்லாளன்	இல்-ல்-ஆட்டி > இலாட்டி	-
	நொதுமல்-ஆளன் > நொதுமலாளன்	நொதுமல்-ஆட்டி > மொதுமலாட்டி	-
	கண்-ண்-ஆளன்	கண்-ண்-ஆட்டி >	-

		கண்ணாட்டி	
பெயர் அடி +ஆளன்/ ஆளர்	சீர்-ஆளன் > சீராளன்	-	-
	தள்-ஆளன் > தளாளன்	-	-
	துணை-ய்-ஆளன் >துணையாளன்	-	-
	பங்க்-ஆளன் > பங்காளன்	-	-
பெயரடை அடி + ஆளன்/ ஆளர்	பேர்-ஆளன் > பேராளன்	-	-
	அந்தன்–ஆளன் > அந்தனாளன்	-	-
வினை அடி + ஆளன்	அறி-ய்-ஆளன் > அறியாளன்	-	
ஆக்கப்பட்ட அடி +ஆளன்/ஆளர்	பெண்டிர்-ஆளன் > பெண்டிராளன்	-	-
கட்டுண்ட அடி + ஆளன்/ஆளர்	அண்ண்- ஆளன்>அண்ணாளன்	-	-

பதினொன்றாவது வகுப்புப் பகுதிகள் அவன் என்பதை ஆண்பால் பின்னொட்டாகவும் *அவர்* என்பதை பலர்பால் பின்னொட்டாகவும் ஏற்கும். சில பகுதிகள் *அவள்* என்ற இணையான பெண்பால் பின்னொட்டை ஏற்கும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
பெயர் அடி + அவன்/(அவள்)/அவர்; (சில இடங்களி *அவள்*	பின்-ன்-அவன்	பின்ன்–அவள் > பின்னவள்	

என்பதும் சாத்தியமாகும்)			
“	மேல்-அவன் >மேலவன்	மேல்-அவள் > மேலவள்	
“	கீழ்-அவன்>கீழவன்	கீழ்-அவள் >கீழவள்	
“	முன்ன்-அவன்>முன்னவன்	முன்ன்-அவள்>முன்னவள்	
பெயரடை அடி +அவன்/அவள்/அவர்	இளை-ய்-அவன் > இளையவன்	இளை-ய்-அவள் > இளையவள்	
“	மாய்-அவன் > மாயவன்	மாய்-அவள் > மாயவள்	
பெயர் அடி + அவன்/-/அவர்	பணை-ய்-அவன் > பணையவன்		
“	மறை-ய்-அவன் > மறையவன்		
கட்டுறாத வடிவின் திரிபுற்ற அடி + அவன்/-/அவர்	நாட்ட்-அவன் > நாட்டவன்		
மாற்றுப் பெயர்களின் திரிபுற்ற அடி +அவன்/-/அவர்	என்ன்–அவன் > என்னவன்		
“	தன்ன்–அவன் > தன்னவன்		
“	நம்ம்-அவன் > நம்மவன்		
கட்டுண்ட அடி + அவன்/-/அவர்	தென்ன்–அவன் > தென்னவன்		

இயல்பான பெயர்+அவன்/-/ அவர்	மால்-அவன் > மாலவன்		

பன்னிரண்டாவது வகுப்புப் பகுதிகள் அலன் என்பதை ஆண்பால் பின்னொட்டாகவும் *அலர்* என்பதை உயர்திணைப் பன்மைப் பின்னொட்டாகவும் ஏற்கும். இப்பகுதிகள் இணையான பெண்பால் பின்னொட்டை ஏற்காது.

ஆண்பால்/பெண்பால்/பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
பெயரடி + அலன்/-/அலர்	வம்ப்-அலன் > வம்பலன்	-	வம்ப்-அலர்
	நா-வலன் > நாவலன்	-	நா-வலர் > நாவலர்
	பா-வலன் > பாவலன்	-	பா-வலர் > பாவலர்
	ஆர்வ்-அலன் >ஆர்வலன்	-	ஆர்வ்-அலர் >ஆர்வலர்
வினை அடி + அலன்/-/அலர்	புர-வ்-அலன் > புரவலன்	-	புர-வ்-அலர் > புரவலர்
	அக-வ்-அலன்>அகவலன்	-	அக-வ்-அலர் >அகவலர்

பதிமூன்றாவது வகுப்புப் பகுதிகள் *அகன்* என்பதை ஆண்பால் பின்னொட்டாக ஏற்கும்; இவ்வகுப்பில் மூன்று பகுதிகளே அடங்கும். அதில் *பாடு* என்ற வினைப் பகுதி *அகி* என்பதை பெண்பால் பின்னொட்டாக ஏற்கும். *பெண்ட்-அகன்* என்பதில் *அகன்* என்பதுடன் *அகம்* என்பது தனி வேறுபாட்டில் இருக்கும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
வினை அடி + அகன்/அகி/-	பாட்-அகன் > பாடகன்	பாட்-அகி > பாடகி	-
கட்டுண்ட அடி + அகன்/-/-	சோச்ச்-ய்-அகன் > சோச்சியகன்	-	-
	பெண்ட்-அகன் > பெண்டகன்	-	-
	அண்ண்-அகன் > அண்ணகன்	-	-

பதிநான்காம் வகுப்புப் பகுதிகள் *ச்சன்* என்பதை ஆண்பால் பின்னொட்டாகவும் *ச்சி* என்பதைப் பெண்பால் பின்னொட்டாகவும் ஏற்கும். உயர்திணைப் பன்மை இணை இல்லை. இவ்வகுப்பு இரண்டு பகுதிகளையே உள்ளடக்கும். இடை என்ற பகுதி ஆண்பால் பின்னொட்டை மட்டும் ஏற்கும். இவ்வகுப்பைச்சாரும் மூன்று பகுதிகளும் ஐ-இல் இறுதியுறும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
பெயர் அடி + ச்சன்/ச்சி/-	தலை-ச்சன் > தலைச்சன்	தலை-ச்சி >தலைச்சி	-
பெயர் அடி + ச்சன்	கடை-ச்சன்	கடை-ச்சி >கடைச்சி	-

பதினைந்தாம் வகுப்புப் பகுதிகள் ஆனவன் என்ற ஆண்பால் பின்னொட்டையும் *ஆனவர்* என்ற உயர்திணைப் பன்மைப் பின்னொட்டையும் ஏற்கும். மூன்று வடிவங்கள் தான் இப்பின்னொட்டை ஏற்று வரும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
கட்டுறாத அடி + ஆனவன்/- /ஆனவர்	குடி-ய்-ஆனவன் > குடியானவன்	-	குடி-ய்-ஆனவர் > குடியானவர்
	பண்ண்-ஆனவன் > பண்ணானவன்	-	பண்ண்-ஆனவர் > பண்ணானவர்
	கருக்க்-ஆனவன் > கருக்கானவன்	-	கருக்க்-ஆன்வர் > கருக்கானவர்

பதினாறாவது வகுப்புப்பின் பெயர்கள் *வாணன்* என்ற ஆண்பால் பின்னொட்டையும் *வாணர்* என்ற உயர்திணைப் பன்மைப் பின்னொட்டையும் ஏற்கும். இவ்வகுப்பு இணையான பெண்பால் பின்னொட்டை ஏற்காது. *வாணன்* என்பது *அற*

என்ற பகுதிக்குப்பின் *அன்*, *ஓன்* என்ற பின்னொட்டுகளுடன் தனி வேறுபாட்டில் இருக்கும்; இது *குற*, *மற* என்ற பகுதிகளுக்குப்பின் *அன்* என்பதுடன் மட்டும் தனி வேறுபாட்டில் இருக்கும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
கட்டுறா அடி + வாணன்/-/வாணர்	பா-வாணன் > பாவாணன்	-	பா-வாணர் > பாவாணர்
	கலை-வாணன் > கலைவாணன்	-	கலை-வாணர் > கலைவாணர்
	மலை-வாணன்	-	மலை-வாணர் > மலைவாணர்
	அற-வாணன்	-	அற-வாணர் > அறவாணர்
	மறை-வாணன்	-	மறை-வாணர் > மறைவாணர்
	மன்ற-வாணன்	-	மன்ற-வாணர் > மன்றவாணர்

பதினேழாவது வகுப்புப் பகுதிகள் *இயன்* என்ற ஆண்பால் பின்னொட்டையும் *இயர்* உயர்திணைப் பன்மை ஒட்டையும் ஏற்கும். இது இணையான பெண்பால் ஒட்டை ஏற்காது. மிக குறைவான பெயர்கள் தான் இவ்வகுப்பில் அடங்கும்.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
பெயர் அடி + இயன்/-/இயர்	கம்ம்-இயன் > கம்மியன்	-	கம்ம்-இயர் > கம்மியர்

கட்டுண்ட அடி +இயன்/-/இயர்	கால்-இயன் > காலியன்	-	கால்-இயர் > காலியர்
	செழ்-இயன் > செழியன்	-	செழ்-இயர் > செழியர்

பதினெட்டாவது வகுப்புப் பகுதி பெண்பால் பின்னொட்டையும் உயர்திணைப் பன்மை மட்டும் தான் ஏற்கும். இணையான ஆண்பால் பின்னொட்டை ஏற்காது.

ஆண்பால்/ பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	**ஆண்பால் எடுத்துக்காட்டு**	**பெண்பால் எடுத்துக்காட்டு**	**பலர்பால் எடுத்துக்காட்டு**
கட்டுண்ட அடி + -/இ/-	-	சித்த்-இ > சித்தி	-
	-	செவில்-இ > செவிலி	-
		கும்மால்-இ > கும்மாலி	-
கட்டுறா அடி + -/இ/	-	துடுமல்-இ > துடுமலி	-
கட்டுண்ட அடி + -/ச்சி/-		கொடி-ச்சி	-
		துக்கை-ச்சி	
		பற்றை-ச்சி	
பெண்பாலால் அடையாளப்படுத்தப்பட்ட பெயர்கள் + ச்சி		பாண்-இ-ச்சி	
		தொண்ட்-இ-ச்சி > தொண்டிச்சி	
		மருத்துவ்-இ-ச்சி >மருத்துவிச்சி	
		கட்டுவ்-இ-ச்சி ~ கட்டுவ்-இ-த்தி>	

		கட்டுவித்தி	
இயல்புப் பெயர்கள் + ச்சி		தாய்-ச்சி>தாய்ச்சி	
		ஆய்-ச்சி>ஆய்ச்சி	
		பொட்டை-ச்சி > பொட்டைச்சி	
வினை அடி + -/வி/-		முதுக்குறை-வி >முதுக்குறைவி	
		உறை-வி > உறைவி	
		பாடு-வி > பாடுவி	
		அடு-வி >அடுவி	
		உறு-வி > உறுவி	
		தகு-வி >தகுவி	
கட்டுறா அடி + ஆட்டி		மகவ்-ஆட்டி > மகவாட்டி	
		கற்ப்-ஆட்டி > கற்பாட்டி	
கட்டுறா அடி + ஆள்		இல்ல்-ஆள் > இல்லாள்	
		ஆய்-ஆள் > ஆயாள்	
பெயர் அடி + -/ஓள்/-		பழை-ய்-ஓள் > பழையோள்	
பெயர் அடி + -/த்தை/-		தொழு-த்தை	

பத்தொன்பதாவது வகுப்பில் அடங்கும் பகுதிகள் உயர்திணைப் பன்மை பின்னொட்டு மட்டுமே ஏற்கும். இது இணையான ஆண்பால் பின்னொட்டையோ பெண்பால் பின்னொட்டையோ ஏற்காது.

ஆண்பால்/	**ஆண்பால்**	**பெண்பால்**	**பலர்பால் எடுத்துக்காட்டு**

பெண்பால் /பலர்பால் பின்னொட்டுகள்	எடுத்துக்காட்டு	எடுத்துக்காட்டு	
கட்டுண்ட அடி + - / - அர்	-	-	மாந்த்-அர் > மாந்தர், மாத-அர் >மாதர்
“	-	-	அண்ட்-அர் > அண்டர்
பெயர் அடி + - / -அர்	-	-	பல்-அர் > பலர்
“	-	-	சில்-அர் > சிலர்
கட்டுண்ட அடி + - / - ஆர்-உம்~ ஓர்-உம்	-	-	எல்ல்-ஆர்-உம் > எல்லாரும் எல்ல்-ஓர்-உம் > எல்லோரும்
கட்டுண்ட அடி + - / - ஆர்-வர்ம்-உம்	-	-	அனை-வர்-உம் > அனைவரும்

பதினொன்றாம் இயலின் துணை இயல் பால் பின்னொட்டுகளைப் பற்றி விளக்குகின்றது. இவகையில் படும் மனிதப் பெயர்கள் (உயர்திணைப் பெயர்கள்) ஒருமையில் தனித்தனியான ஆண்பால், பெண்பால் பின்னொட்டுக்களையும் பன்மையில் பொதுவான பின்னொட்டையும் கொண்டிருக்கும்.

அன் என்ற ஆண்பால் உருபனுக்கு பின்வரும் பின்னொட்டுகள் உருபனியல் கட்டுண்ட (morphologically conditioned) மாற்றுருபுகளாகத் தரப்பட்டுள்ளன: *அன், ஓன், வன், கன், க்கன், னன், ஞன், அகன், அலன், ச்சன், இயன், காரன், க்காரன், ஆளன், மான், ஆனவன், வாணன்.*

பெயர்வகை + ஆண்பால் பின்னொட்டு	எடுத்துக்காட்டுகள்
பெயர்1 வகுப்பைச் சாரும் பெயர்கள்+ அன்	தோழ்-அன் > தோழன், சிறு-வ்-அன்> சிறுவன், காதல்-அன் > காதலன், திருட்-அன் > திருடன், குயவ்-அன் > குயவன்
பெயர் 2 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஆன்	வண்ண்-ஆன் > வண்ணான், மச்ச்-ஆன் >மச்சான், நாட்ட்-ஆன் > நாட்டான், பிர்-ஆன் > பிரான், நீக்க்-ஆன் > நீக்கான், எம்ம்-ஆன் > எம்மான்
பெயர் 3 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஓன்	மாய்-ஓன் > மாயோன், முன்ன் –ஓன் > முன்னோன், வேற்ற்-ஓன் > வேற்றோன், அறவ்-ஓன் > அறவோன், பகல்-ஓன் > பகலோன், முதல்-ஓன் > முதலோன்
பெயர் 4 வகுப்பைச் சாரும் பெயர்கள் + வன்	புதல்-வன் > புதல்வன், தலை-வன் >தலைவன், துறை-வன் >துறைவன், கேள்-வன் >கேள்வன், அறி-வன் >அறிவன்
பெயர் 5.1 வகுப்பைச் சாரும் பெயர்கள் + வன்	விரிச்சி-கன் >விரிச்சிகன், சாதுரி-கன் >சாதுரிகன்
பெயர் 5.2, பெயர் 5.3 வகுப்பைச் சாரும் பெயர்கள் + வன்	சிறு-க்கன் >சிறுக்கன், தொழு-க்கன் >தொழுக்கன், பொழு-க்கன் >பொழுக்கன், பணி-க்கன் >பணிக்கன்
பெயர் 6 வகுப்பைச் சாரும் பெயர்கள் + நன்	கொழு-நன் > கொழுநன், புளி-நன் புளிநன், கொலை-நன் > கொலைநன்
பெயர் 7வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஞன்	புளி-ஞன் > புளிஞன், வரி-ஞன் > வரிஞன், கலை-ஞன் > கலைஞன், அறி-ஞன் > அறிஞன்

பெயர் 13 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அகன்	பாட்-அகன் > பாடகன், பெண்ட்-அகன் > பெண்டகன்
பெயர் 12 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அலன்	வம்ப்-அலன் > வம்பலன், ஆர்வ்-அலன் > ஆர்வலன், புர-வ்-அலன் > புரவலன்
பெயர் 14 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ச்சன்	தலை-ச்சன், கடை-ச்சன்
பெயர் 17 வகுப்பைச் சாரும் பெயர்கள் + இயன்	கம்ம்-இயன்> கம்மியன், செழ்-இயன் > செழியன்
பெயர் 9.1 வகுப்பைச் சாரும் பெயர்கள் + க்காரன்	கூலி-க்காரன், வீட்டு-க்காரன்
பெயர் 9.2 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அலன்	கொலை-காரன் > கொலைகாரன், கடன்-காரன் கடன்காரன், கணிய-காரன் > கணியகாரன்
பெயர் 10 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஆளன்	நொதுமல்-ஆளன் > நொதுமலாளன், நன்னர்-ஆளன் > நன்னராளன், அரச்-ஆளன் > அரசாளன், அறி-ய்-ஆளன் > அறியாளன், அண்ண்-ஆளன் > அண்ணாளன்
பெயர் 11 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அவன்	பின்-ன்-அவன்> பின்னவன், இளை-ய்-அவன் > இளையவன், விண்-ண்-அவன் > விண்ணவன், என்-ன்-அவன் > என்னவன்
பெயர் 8 வகுப்பைச் சாரும் பெயர்கள் + மான்	வேள்-மான் > வேள்மான், ஓய்-மான் >

	ஓய்மான், கலவி-மான் கல்விமான், சேர-மான் > சேரமான், மரு-மான் > மருமான்
பெயர் 15 வகுப்பைச் சாரும் பெயர்கள் + மான்	குடி-ய்-ஆன்வன் >குடியானவன், கருக்க்-ஆனவன் > சுருக்கானவன்
பெயர் 16 வகுப்பைச் சாரும் பெயர்கள் + வாணன்	பா-வாணன் > பாவாணன், கொலை-வாணன் > கொலைவாணன், அற-வாணன் > அறவாணன், மன்ற-வாணன் > மன்றவாணன்

இ என்ற பெண்பால் உருபனுக்கு பின்வரும் பின்னொட்டுகள் உருபனியல் கட்டுண்ட (morphologically conditioned) மாற்றுருபுகளாகத் தரப்பட்டுள்ளன: *த்தி, அத்தி, ச்சி, அச்சி, இச்சி, ஐ, த்தை, ஆத்தி, வி, க்கி, அகி, காரி, க்காரி, ஆட்டி, மாட்டி, அள், ஆள், ஓள், அவள், மாள்.*

பெயர்வகை + பெண்பால் பின்னொட்டு	**எடுத்துக்காட்டுகள்**
பெயர்1.1, 18.1 வகுப்பைச் சாரும் பெயர்கள்+ இ	தோழ்-இ > தோழி, மாம்-இ> மாமி, சிறும்-இ > சிறுமி,
பெயர்1.2 வகுப்பைச் சாரும் பெயர்கள்+ த்தி ~ அத்தி	கய-த்தி > கயத்தி, கிழ-த்தி > கிழத்தி, ஆய-த்தி > ஆயத்தி, நள-த்தி > நளத்தி, த-த்தி தத்தி, ஒரு-த்தி > ஒருத்தி
பெயர்1.3 வகுப்பைச் சாரும் பெயர்கள்+ அத்தி	பார்ப்பன்-அத்தி > பார்பனத்தி, பாண்-அத்தி > பாணத்தி
பெயர்1.4, 14.1, 18.2 வகுப்பைச் சாரும் பெயர்கள்+ ச்சி	இடை-ச்சி >இடைச்சி, குட்டை-ச்சி > குடைச்சி, முளை-ச்சி > முளைச்சி
பெயர்1.5 வகுப்பைச் சாரும் பெயர்கள் +	செம்படவ்-அச்சி > செம்படவச்சி, பள்ள்-

அச்சி	அச்சி > பள்ளச்சி, தமிழ்-அச்சி > தமிழச்சி, வேட்-அச்சி > வேடச்சி
பெயர்1.6 வகுப்பைச் சாரும் பெயர்கள் + இச்சி	கொல்-இச்சி > கொல்லிச்சி, தமிழ்-இச்சி > தமிழிச்சி, வேட்டுவ்-இச்சி > வேட்டுவிச்சி
பெயர்1.7 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஐ	கொற்றவ்-ஐ > கொற்றவை, பரத்த்-ஐ > பரத்தை, தொத்-ஐ > தொத்தை,பொது-வ்-ஐ > பொதுவை
பெயர்1.8 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அள்	மக்-அள் > மகள், பிற்-அள் > பிறள், தனி-ய்-அள் > தனியள், தம்-அள் > தமள், அவ்-அள் > அவள்
பெயர் 3.1, 3.4, 18.6 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஓள்	மாய்-ஓள் > மாயோள், முன்ன்-ஓள்> முன்னோள், இறை-ஓள் > இறையோள்
பெயர் 2.2, 18.3 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஆள்	சீய்-ஆள் > சீயாள், மச்ச்-ஆள் > மச்சாள்
பெயர்11.1 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அவள்	பின்ன்-அவள் > பின்னவள், முன்ன்-அவள் > முன்னவள், இளை-ய்-அவள் > இளையவள், மாய்-அவள் > மாயவள்
பெயர் 18.7 வகுப்பைச் சாரும் பெயர்கள் + த்தை	தொழு-த்தை > தொழுத்தை
பெயர்2.1 வகுப்பைச் சாரும் பெயர்கள் + ஆத்தி	வண்ண்-ஆத்தி > வண்ணாத்தி, தட்ட்-ஆத்தி > தட்டாத்தி, நாட்-ஆத்தி > நாடாத்தி
பெயர் 4,18.3 வகுப்பைச் சாரும் பெயர்கள் + வி	புதல்-வி, செல்-வி, முதல்-வி, தலை-வி
பெயர்5.2 வகுப்பைச் சாரும் பெயர்கள் + க்கி	சிறு-க்கி

பெயர்13.1 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அகி	பாட்-அகி > பாடகி
பெயர் 9.2 வகுப்பைச் சாரும் பெயர்கள் + க்காரி	காசு-க்காரி, சட்டை-க்காரி, சண்டை-க்காரி, வீட்டு-க்காரி
பெயர்9.2 வகுப்பைச் சாரும் பெயர்கள் + காரி	கொலை-காரி
பெயர் 8.3 வகுப்பைச் சாரும் பெயர்கள் + மாட்டி	பெரு-மாட்டி
பெயர் 8.1 வகுப்பைச் சாரும் பெயர்கள் + அள்	வேண்-மாள், கோ-மாள்,

2.4.12. வரலாற்றுக் குறிப்புகள்

பதினொன்றாம் இயலின் துணையியலான 'வரலாற்றுக் குறிப்புகள்' என்பதில் வரலாற்று பால்-எண் குறித்த வரலாற்று அடிப்படையிலான சில செய்திகளைக் கமலேஸ்வரன் கூறிச்செல்கிறார்.

தமிழில் 16 ஆண்பால் பின்னொட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் *அன், ஆன், ஓன், வன், கன், ஞன்/நன், அலன், ஆளன், இயன், அவன், மான்* என்ற பதினொன்று பின்னொட்டுகள் சங்ககாலத் தமிழில் காணப்படுகின்றன. இதில் ஆண்பால் பின்னொட்டாக *ஆன்* என்பது தான் பொதுவாக அதிகமாகப் பழந்தமிழில் காணப்படுகின்றது. *அவ்-அன், மக்-அன், தோள்-அன், சிறு-வ்-அன்* என்பன தான் சங்ககாலத்தில் இப்பின்னொட்டின் உருவாக்கத்தின் எடுத்துக்காட்டாகும். *வேந்த்-அன், மன்-ன்-அன், அரச்-அன்* என்பதில் இதன் சேர்ப்பு பிந்தைய உருவாக்கமாகத் தெரிகின்றது; ஏனென்றால் *வேந்து, மன், அரசு* என்பன பின்னொட்டு இல்லாமலேயே பழைய நூல்களின் அதே பொருளின் வருகின்றன. பிற பின்னொட்டுக்களுக்கு

வேறுப்பட்ட அளபுகளில் குறைந்த பயன்பாடு இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, கன் என்பது சங்ககாலத்தில் கொண்-கன் என்ற ஒரே சொல்லில் மட்டும் தான் காணப்படுகின்றது. இந்த போக்கு பின் சங்ககாலத்திலும் காணப்படுகின்றது. பிற்சங்ககாலத்தில் நான்கு சொற்களில் தாம் *கன்* என்ற பின்னொட்டு கொண்டுவருகின்றது: *விரிச்சி-கன், பட்டி-கன்* 'திருடன்'. பிற பின்னொட்டுகளில் அவன், ஆளன் என்பவைகள் தாம் சங்ககாலத்தில் கதிர்-அவன், தென்-ன்-அவன் போன்ற சொற்களில் பதடவை வருகின்றன; பிற்சங்ககாலத்தில் அதிக அளவில்லான சொற்கள் இப்பின்னொட்டுகளுடன் வருகின்றன. *இளை-ய்-அவன், நம்-ம்-அவன்* என்பன எடுத்துக்காட்டுகளாகும். அலன் என்ற பின்னொட்டு கொண்ட குறைந்த எண்ணிக்கையிலான சொற்கள் (எ.கா. *புர-வ்-அலன்*) தாம் சங்ககாலத்தில் வருகின்றன. இந்த குறைந்த எண்ணிக்கையிலான சொற்கள் கூட பிற்சங்ககாலத்தில் காணப்படவில்லை.

ஆன் என்ற பின்னொட்டு பழந்தமிழில் *நீக்-அன்* 'ஊர்தியோட்டி' போன்ற சொற்களிலும் பின் சங்ககாலத்தில் *வண்ண்-ஆன், அத்த்-ஆன், பிர்-ஆன்* என்ற சொற்களில் தனியான பின்னொட்டாக பழங்காலத்திருந்தே பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றினாலும் இது அன் என்ற பின்னொட்டின் மாற்றுருபாகும். *புல-வ்-அன், புல-வ்-ஓன், கிழ-வ்-அன்/கிழ-வ்-ஓன்* என்ற சொற்கள் ஓன் என்பது பிந்தைய உருவாக்கம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. *க்கன், அகன், ச்சன், காரன், ஆனவன், வாணன்* என்பன பின் சங்ககாலத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

கிட்டத்தட்ட 18 பின்னொட்டுகள் பெண்பாலைச் சாரும். இவற்றில் *இ, த்தி, ஐ, வி, ஆட்டி, அள், ஆள், ஓள், அவள், மாள்* என்பன சங்ககாலத்தில் காணப்படுகின்றன. இவற்றில் இ என்பது மட்டும் தான் பெண்பால் பின்னொட்டாக சுதந்திரமாக இரு காலத்திலும் பயன்படுத்தப்பட்டது. பிற பின்னொட்டுகள் மிகக் குறைந்த பயன்பாடு உள்ளவை. எடுத்துக்காட்டாக *அள்* என்பது *மக்-அள், அவ்-அள்* என்ற குறைந்த எண்ணிகையிலான சொற்களில் தான் பயன்படுத்தப்பட்டது. இது போன்று ஐ என்பது சங்ககாலத்தில் *கொற்ற-வ்-ஐ, பரத்த்-ஐ* என்ற இரு சொற்களில் காணப்படுகின்றது மற்றும் பின் சங்ககாலத்தில் *தொத்த்-ஐ, பொது-வ்-ஐ* என்ற சொற்களில் காணப்படுகின்றது. ஆளன் என்பது போன்று அதற்கு இணையான பெண்பால் பின்னொட்டு இரு காலத்திலும் கருதத்தக்க எண்ணிக்கையிலான சொற்களில் வருகின்றன. *நன்னர்-ஆட்டி* 'நற்குணப்பெண்', *நொதுமல்-ஆட்டி* 'அன்னியமான பெண்' என்பன எடுத்துக்காட்டுகளாகும். *மாள்* என்பது இரு சொற்களில் மட்டும் வருகின்றது: *வேண்-மாள்* 'வெளிர் இனப் பெண்', *கோ-மாள்* 'அரசி'. *அவள்* சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டாலும் அது பின் சங்ககாலத்தில் தான் விளைவாக்கமுள்ள பின்னொட்டாக மாறுகின்றது. எந்த பெண்பால் பெயர்களையும் பெயரடை அடிகளிலிருந்து உருவாக்க இயலும். பின்வருவன இவ்வகையிலான ஆக்கத்தின் எடுத்துக்காட்டுகளாகும்: *பெரி-ய்-அவள்* 'அக்காள்', *சிறி-ய்-அவள்* 'தங்கை'. இவ்வெல்லா பின்னொட்டுகளுன் பிற்சங்ககாலத்தில் காணப்படுகின்றன. இவற்றுடன் *அத்தி, ச்சி, அச்சி, இச்சி, த்தை, ஆத்தி, க்கி, அகி, காரி* என்பனவும் பிற்சங்ககாலத்தில் பயன்படுத்தப் படுகின்றன. *காரி* தற்காலத் தமிழில் விளைவாக்கம் உள்ளவையாகத் தெரிகின்றது.

பெண்பாலுக்கும் ஆண்பாலுக்கும் தனித்தனியான பன்மைப் பின்னொட்டுகள் இல்லை. இரண்டுக்கும் ஒரே பின்னொட்டுகள் தாம் பயன்படுத்தப்படுகின்றன. *அர், ஆர், ஓர்* என்பன இரு காலத்திலும் காணப்படும் பன்மைப் பின்னொட்டுகளாகும். தற்காலத் தமிழில் *அர்* என்பதற்குப் பதிலாக ஆர்கள் பயன்படுத்தப்படுகின்றது. *அண்ணன்-மார், தாய்-மார், தம்பி-மார்-கள், மனைவி-மார்-கள்* என்ற சொற்கள் மார், மார்கள் என்ற பன்மைப் பின்னொட்டுக்களுடன் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன.

2.5. தமிழில் தொகைப் பெயராக்கம்

விஜயவேணுகோபால் (1979) தமிழில் தொகைப் பெயராக்கம் (Nominal Composition in Tamil, 1979) என்ற தமது நூலில் தமது காலத்திய மாற்றிலக்கணத்தின் கருத்துக்களைக் கொண்டு தமிழிலுள்ள கூட்டுப் பெயர்களை ஆய்கின்றார். அவர் இக்கூட்டுப் பெயர்களைத் தொகைப் பெயர்கள் எனக் குறிப்பிடுகின்றார். இவர் 1960களில் நிலவிய ஆக்கமுறை மாற்றிலக்கணச் சட்டகம் அடிப்படையில் தமிழ்க் கூட்டுகளை ஆய்கின்றார். இவருடைய கோட்பாட்டு உள்நோக்குகள் லீஸ் (Lees,1960,1970), போத்தா (Botha 1968), ரெய்பெல் (Reibel 1963), ஃபில்மோர் (Fillmore 1968) ஆகியோரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்கோட்பாட்டின் படி கூட்டுகள் எல்லாம் அக அமைப்புகளிலிருந்து மாற்று விதிகளால் ஆக்கப்பட்ட புற அமைப்புகளாகும்; சொற்கள் அடுத்து வருவதால் உருவாகும் இணைப்பாக்கப் பெயர்சொற்கள் என்பது சரியான விளக்கமல்ல. இதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாகக் கூட்டுக்களை இணப்பாக்கங்களாய் எடுத்துக்கொண்டால், அதாவது பெயர் + பெயர் அலகுகளாய் எடுத்துக்கொண்டால்,

பெட்டி மரம் போன்ற கூடுகள் உருவாகலாம்; இதை விட்டிசை இல்லது உச்சரித்தால் எந்தப் பொருளும் தராது; ஆனால் மரப்பெட்டி என்ற இணைப்பு, பொருள் அடிப்படையிலும் இலக்கண அடிப்படையிலும் சரியானதாகும். இது பின்வரும் கருத்துகளைக் காட்டுகின்றது: இரண்டு பெயர்களை அடுத்தடுத்து வைப்பதால் அவை கூட்டாகிவிடாது; அந்த இணைப்பு இலக்கண அடிப்படையில் சரியாக இருக்கவேண்டும்; அதாவது இந்த இணைப்பாக்கங்கள் முறையானதாக இருக்கவேண்டும். இயல் மொழி பேசுவர்களுக்குத்தான் இணைப்புப் பெயர்களில் எது முறையில்லாதது என்பது தெரியும். இயல் மொழி பேசுபவரின் அறிதிறன் இலக்கண விதிகளால் தான் முறைப்படுத்த இயலும் அல்லது வாய்ப்பாட்டின் கீழ் கொண்டுவர இயலும். இவ்விதிகள் கூட்டுகளுக்கு இலக்கண அமைப்புகள் தரும். நல்லாக்க இணைப்புப் பெயர்கள் அல்லது இலக்கண வடிவுகளில் உள்ளடங்கிய கூட்டுகள் மற்றும் அவைகளுக்கிடையே உள்ள உள்ளுறையும் வெளிப்பாட்டில் நிகழ்வதைப் பிரதிபலிக்கும். புற அமைப்புகளாக எடுத்துக் கொள்ளப்படும் கூட்டுகளும் அவற்றில் வெளிப்படுத்தப்படும் சொற்களும் அவைகளுக்கிடையே உள்ள இலக்கண உறவுகளும் வெளிப்படையாகக் குறிப்பீடு செய்யப்படும் அக அமைப்புகளிலிருந்து மாற்று விதிகளால் ஆக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, காட்டு யானை என்ற கூட்டு யானை காட்டில் வாழ்கின்றது என்ற வாக்கியத்திலிருந்து ஆக்கப்படும். கூட்டில் வரும் உறுப்புகளான யானைக்கும் காட்டுக்கும் இடையே உள்ள உறவு இதன் அக அமைப்பாய் வரும் வாக்கியத்தில் காணப்படும் இவ்விரு சொற்களுக்கிடையே உள்ள உறவாகும்; அதாவது பயனிலை-இடப் பொருள் உறவாகும். இம்மாதிரியான கூட்டுகளைப் புற அமைப்புகளாய்க் கருதப் பல பொருண்மை மற்றும் தொடரியல் காரணங்கள் உள்ளன. பொருண்மையைப்

பொறுத்தவரையில் புற அமைப்புகள் பொருள்கோளுக்குத் தேவையான தகுந்த உறவுகளைக் காட்டுவதில்லை என்று வாதிடலாம். *காட்டு யானை* என்ற அமைப்பாய் வரும் கூட்டு இதன் உறுப்புகளுக்கு இடையே தொடரியல் உறவை வெளிப்படையாகக் காட்டவில்லை. பொருண்மையியல் நிலையில் பொருத்தமான பொருள்கோளுக்குத் தொடரியல் செய்தி தேவையானதாகும். அக அமைப்புகளிலிருந்து கூட்டுகள் ஆக்கம் பெறாவிட்டால் புற அமைப்பிலும் அக அமைப்பிலும் காணப்பெறும் இலக்கண உறவுகள் கணிக்கப்பெறாது போய்விடும்.

இரண்டாவதாகப் பல கொள்கருத்துகளின் அடிப்படையிலான மாற்றிலக்கண அணுகு முறையை ஏற்றுகொண்டால் சில கூட்டுகளில் காணப்பெறும் பன்முனைப் பொருள் மயக்கத்தைத் தெரிவிக்க இயலும். இவ்வாறு வேறுபட்ட கொள்கருத்துகளிலிருந்து பொருள் மயக்கத்தைக் கண்டுகொண்டு அவற்றை இலக்கணப்படி விளக்குவது, மொழி பேசுபவர்களின் உருசார்ந்த பண்பாடு பற்றிய அறிவு போன்ற மொழியியலுக்குப் புறம்பான காரணிகளில் தேவையில்லாமல் புகலிடம் தேடுவதிலிருந்து தப்பலாம். எடுத்துக்காட்டாய்த் *துணிப்பை* என்ற கூட்டை எடுத்துக்கொண்டால் அது 'துணியாலான பை' அல்லது 'துணி வைப்பதற்கான பை' என்று பொருள்பட்டு பொருள் மயக்கம் காட்டலாம். சரியான பொருளைத் தீர்மானிக்கப் பொருத்தமான அக அமைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டி வரும். கூட்டுகளை எளிதாகப் பெயர் + பெயர் என்ற இணைப்பு வடிவங்களாகும் என்பது பொருள் மயக்கதைத் தெளிவிக்காது; மட்டுமன்றி விளக்கத்திற்காக மொழியியலுக்குப் புறம்பான காரணிகளைச் சார்ந்திருக்க வேண்டி வரும். அவ்வாறல்லாமல் பொருத்தமான அக அமைப்பிலிருந்து ஒரு கூட்டை ஆக்குவதாயிருந்தால் அது பொருள் மயக்கத்தைத் தெளிவிப்பதோடு, மொழியலுகுப் புறம்பான காரணிகளைத் துணை ஆதாரமாகக் கொள்வதைத் தவிர்க்கச்

செய்யும். மேலும் புற அமைப்புகள் மற்றும் அக அமைப்புகள் இவற்றின் அங்கங்களுக்கு இடையே காணப்படும் உண்மையானதும் சமமானதுமான உறவுகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வழியால் தனிப்பட்ட அமைப்புகளை மெய்யாகக் கொள்வதைத் தவிர்க்கலாம்.

தொடரியல் காரணத்தை எடுத்துக்கொண்டால் மாற்றிலக்கணச் செயற்பாடுதான் *மரப்பெட்டி, பணப்பெட்டி* என்ற கூட்டுகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டை விளக்கும். இந்த இரு கூட்டிலும் *பெட்டி* என்ற சொல் இரண்டாவது அங்கமாகவும் ஒரு பெயர்ச் சொல் முதல் அங்கமாகவும் இருந்தாலும் அவைகளுடைய தொடரியல் பண்புகள் பெரிதும் வேறுபட்டனவாகும். எடுத்துக்காட்டாக, *மரப்பெட்டி* என்பதை *மரத்தால் ஆன பெட்டி* என்று பெயரெச்சத் தொடராக மாற்ற முடியும். ஆனால் *பணப்பெட்டி* என்பதைப் *பணத்தால் ஆன பெட்டி* என்று பெயரெச்சத் தொடராக மாற்ற இயலாது. மாறாக, பணத்துக்குள்ள பெட்டி என்று மாற்ற முடியும். ஆனால் *மரத்துக்குள்ள பெட்டி* என்று மாற்ற இயலாது. இது போலவே *பெட்டியில் பணத்தை வைத்தான்* என்பது இலக்கணத் தன்மையானது. *பெட்டியில் மரத்தை வைத்தான்* என்பது வழுவாகும். *மரப்பெட்டி* என்ற கூட்டு ஒருவன் *மரத்தால் பெட்டியை செய்தான்* என்ற மூல வாக்கியத்திலிருந்து ஆக்கப்பட்டதாகும்; இங்கு மரத்திற்கும் பெட்டிக்கும் இடையே உள்ள தொடரியல் உறவு 'கருவி-செயப்படுபொருள்'ஆகும். ஆனால் *பணப் பெட்டி* என்பது *ஒருவன் பணத்திற்காகப் பெட்டியைச் செய்தான்* என்ற மூல வாக்கியத்திலிருந்து ஆக்கப்பட்டதாகும். பணத்திற்கும் பெட்டிக்கும் இடையே உள்ள உறவு பொருட்டு-செயப்படுபொருள் உறவாகும். இந்த ஆழ்ந்த தொடரியல் உறவு பெயர்+பெயர் என்று கூட்டுச் சொற்களாய் வரும் புற அமைப்பு

நிலையில் பிரதிபலிக்கவில்லை (வெளிப்படவில்லை). எனவே தான் மாற்றிலக்கண அணுகுமுறை விரும்பத் தக்கதாகும்.

2.5.1. கூட்டாக்கம்

கூட்டுகளை உருவாக்கும் விதிகள் வாக்கியங்களையும் உருவாக்கும் விதிகள் என்ற காரணத்தால் அவைகள் ஒரு கூட்டின் உறுப்புகளுக்கு இடையே உள்ள உறவுகளை விளக்குவதோடு மட்டுமன்றி ஆக்கப் பெற்ற கூட்டுகளை வாக்கியத்தின் பொருத்தமான இடத்தில் வைக்கவும் பயன்படுகின்றது. எடுத்துக்காட்டாக, சமநிலைக் கட்டின் கூட்டான கபிலபரணர் என்பது பன்மைப் பெயர்; இது பன்மைப் பெயர் வரும் இடத்தில் தான் வரும்; இவ்வாறு விதிகள் கூட்டு வரும் தலைமை வாக்கியத்திற்கும் கூட்டு ஆக்கப்படும் உட்படு வாக்கியத்திற்கும் பொருந்தும். இவ்வாறு ஆய்வின் விளக்க ஆற்றலை அதிகரிக்கப் பொதுவான விதிகளைக் கைக்கொள்ள இயலும்.

வாக்கியத்தின் உறுப்புகளிலிருந்து கூட்டை ஆக்கவும் தலைமை வாக்கியத்தில் மாற்றீடு செய்வதையும் கீழ் வரும் படத்தால் விளக்கலாம்.

இதில் வா1 என்பது கூட்டு ஆக்கப்பட்ட உறுப்பு வாக்கியத்தைக் குறித்து நிற்கின்றது. பெதொ1 என்பது தலைமை வாக்கியத்தில் பெயரைக் குறித்து நிற்கின்றது. சில நேர்வுகளில் ஒன்றிற்கும் மேற்பட்ட உறுப்புகள் வாக்கியங்களில் பங்கெடுக்கலாம்; இந்த நேர்வுகளில் மாற்று விதிகள் வாக்கியத்தின் மிக ஆழமான உறுப்பு வாக்கியத்தில் பயன்படுத்தப்படும். பின்னர் அதற்கு அடுத்த உயர்ந்த உறுப்பு வாக்கியத்தில் பயன்படுத்தப்படும்; இப்படிப் பயன்பாடு தொடரலாம். பகுப்பாய்வு பற்றி விளக்குகையில்

பின்வரும் நெறிமுறை பின்பற்றப்படும். முதலாவது கூட்டின் உறுப்புகளுக்கு இடையே உள்ள உறவின் வகை தரப்படும். பின்னர் தகுதியுள்ள மூல வாக்கியம் குறித்தும் அக அமைப்பு குறித்தும் விவாதிக்கப்படும். பொருத்தமான மூல வினைகளும் பரிந்துரைக்கப்படும். இதன் பின்னர் அடித்தொடர் வடிவம் மற்றும் தலைமை வாக்கியத்தின் பெயர்த்தொடர் இவற்றை விளக்கும் கிளைப்படத்தில் தொடங்கி ஆக்கச் செயற்பாடுகள் விரிவாக விளக்கப்படும். இம்மாற்று விதிகள் முறையான செயன்மைகளைப் பின்வருமாறு குறிப்பீடு செய்யும்: (1) இச்செயன்மைகள் பயன்படுத்தப்படும் அடிப்படைத் தொடரியல் வடிவங்களின் குழுமத்தைக் கூறும் ஒரு அமைப்பு விளக்கம், (2) முறையான செயன்மைகளின் விளைவான அமைப்பு மாற்றம், (3) ஒரே மாதிரியான பெயர்த் தொடர்களில் ஒன்றை நீக்கம் செய்யும் சமநிகர் பெயர்த்தொடர் நீக்கம்; இது தலைமை வாக்கியத்தில் பொருத்தப்படும்; இச்சமநிகர் பெயர்த்தொடர் நீக்கம் கடைசி நிலையில் தான் பிரயோகிக்கப் படவேண்டும்; ஆரம்ப நிலையில் செய்தால் அது சிக்கலான நிலையை உண்டு பண்ணும்; எனவே மேலும் மாற்றங்களைச் செய்ய அனுமதி கிடைக்காது போகும்.

2.5.2. சிக்கல்கள்

(1) கூட்டாக்கத்தில் சந்திக்கக் கூடிய சிக்கல்களில் ஒன்று சீரற்ற வினை அவாய் நிலையாகும். உறுப்புகளுக்குள் ஒரே உறவுகளைக் காட்டும் கூட்டும் இதன் கீழ் வரும். எடுத்துக்காட்டாக, *பால்மாடு* என்ற கூட்டின் மூல வாக்கியமான *மாடு பால் தருகின்றது* என்பதில் காணப்படும் தருகின்றது என்ற மூல வினை கூட்டாக்கச் செயற்பாங்கின் போது நீக்கப்படும். தகுந்த வினை புற அமைப்பில் காணப்படாத காரணத்தால் ஏன் *பால்மாடு* என்ற கூட்டு தருகின்றது என்ற வினையுள்ள மூல வாக்கியத்தில் மட்டும் இருந்து ஆக்கப்

பெறுகின்றது, ஏன் முறையான வாக்கியங்களான *மாடு பாலை வைத்திருக்கின்றது, மாடு பாலைச் சொரிகின்றது* அல்லது முறையற்ற வாக்கியங்களான மாடு பாலைக் கேட்கின்றது என்பவற்றிலிருந்து ஆக்கப்பெறவில்லை என்ற கேள்விகள் எழும். பல வினைகள் வருவதற்குத் தகுந்தாற் போல் கூட்டுகள் பல வழிகளில் பொருள் மயக்கம் உள்ளதாய் இயல்மொழி பேசுவோர் புரிந்து கொள்வதாய் நாம் எடுத்துகொள்ளலாம்; அல்லது ஒரு மொழியின் இலக்கணமானது இலக்கண வகைப்பாடுகளுடன் கூடிய பொருத்தமான வினைகளை வெளிப்படையாகத் தகுந்த ஒட்டுகளுடன் தொடர்பு படுத்துகிறது. இம்மாதிரியான பல நேர்வுகளில் வினைப் பொருள்கள் (அர்த்தங்கள்) தலைமைப் பெயர்களின் பொருண்மை விளக்கத்துடன் தொடர்புடையதாய் இருக்கின்றது. இவற்றுள் இரண்டாவதான தற்கோள் உண்மை எனத் தோன்றுகின்றது. இவ்வாறு கூட்டுகளின் பொருள்களுக்கும் அவற்றின் அகத்தொடரியல் அமைப்புக்குக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு அறியப்படுகின்றது. இதனால் கூட்டுகளை எல்லையில்லாஅளவிலான பொருள் மயக்கம் உள்ளன என்று இனம் காண்பதைத் தவிர்க்கலாம். பெ.தொ.+பெதொ+இணைப்பு வினை என்ற அமைப்பொழுங்கு உள்ள வாக்கியங்களில் உள்ளது போன்று இவ்வகை வினைத் தொடர்பு இல்லாத சில கூட்டுகள் உள்ளன.

(2) ஆக்கச் செயற்பாங்கில் சந்திக்கும் மற்றொரு சிக்கல் என்னவென்றால் ஒரு அக அமைப்பு இரு புற அமைப்புகளாக விளைவுறலாம். எடுத்துக்காட்டாக, *காட்டு யானை*, *யானைக் காடு* என்ற கூட்டுக்களை எடுத்துக்கொண்டால், இந்தப் புற அமைப்புகள் *யானைக் காட்டில் இருக்கின்றது* என்ற உள்ளுறை வாக்கியத்திலிருந்து ஆக்கப்படலாம். தலைமை வாக்கியத்தின் பெயர்த்தொடரால் ஏவப்பட்ட புற அமைப்புகளைப் பெற இரண்டு வேறுபட்ட ஆக்கச் செயற்பாங்குகள் தேவை. *காட்டு யானை* என்பது

இடப்பொருள் பெயரெச்சத்தை உட்படுத்துகின்றது. *யானைக்காடு* என்பது எழுவயப் பெயரெச்சத்தை உட்படுத்துகின்றது. இதன்படி *காட்டுயானை* என்பதன் ஆக்கம் பின்வருமாறு அமையும்:

யானைக் காட்டில் உள்ளது > காட்டிலுள்ள யானை > காட்டு யானை

யானைக் காடு என்பதன் ஆக்கம் பின்வருமாறு அமையும்:

யானைக் காட்டில் உள்ளது > யானை உள்ள காடு > யானைக் காடு

(3) பெயர்+பெயர் கூட்டை ஒரு தனி நிலைப் பெயரால் இடப்பெயர்ச்சி செய்யலாம் என்ற பொதுக் கொள்கையானது சமநிலை உள்வட்டக் கூட்டால் வரம்பு மீறப்படுகின்றது. இத்தகைய கூட்டுகள் பன்மையைக் காட்டக் கூடுதலான உருபனை அவசியப்படுகின்றது. இத்தனித்தன்மைக்கு (வழக்கம் மீறிய பண்புக்கு) மாறாக ஒருங்கிணைக் கருத்துச் சாயலைச் சமநிலை உள்வட்டக் கூட்டுகள் தெரிவிக்கின்றன.

(4) உவம உருவகக் கூட்டுப் பெயர்களும் மரபுக் கூட்டுப் பெயர்களும் வேறு பெயர்களை ஆக்கும் உறுப்புகளுக்கு இடையே உள்ள ஒத்த பண்புக்கூறுகளின் அடிப்படையில் இவற்றின் அக அமைப்புகள் அமையும்.

உவம உருவகக் கூட்டுப் பெயர்கள் பின்வரும் இரு அமைப்பொழுகுகளில் ஒன்றாக அமையும்:

1. ஒப்புமைப்படுத்தப்படும் பொருள் (உவமானம்) + ஒப்புமைப் படுத்தப்பட்ட பொருள் (உவமேயம்)
2. ஒப்புமைப் படுத்தப்பட்ட பொருள் (உவமேயம்) + ஒப்புமைப்படுத்தப்படும் பொருள் (உவமானம்)

முதல் வகையான பெயர்களை உவமக் கூட்டுப் பெயர்கள் என்றும் இரண்டாவது வகையானவற்றை உருவகக் கூட்டுப் பெயர்கள் என்றும் கூறலாம் என்று தோன்றுகின்றது. முதலாவது வகையான உவமக் கூட்டுப் பெயர்களை ஒற்றுமை வகை கருதி வடிவ அடிப்படையிலோ (எ.கா. *துடியிடை*, *விற்புருவம்*), *வண்ண* (*நிற*) அடிப்படையிலோ (எ.கா.*பால் முகம், பவளவாய்*), செயல் அடிப்படையிலோ (எ.கா. *புலிப் பாய்ச்சல், உடும்புப்பிடி*), மேற் சொன்ன மூன்றும் அல்லாத பண்புக் கூறுகளின் அடிப்படையிலோ (எ.கா. *சர்க்கரைப் பேச்சு, கல்நெஞ்சு*), ஒன்றுக்கும் மேற்பட்ட பண்புக்கூறுகளின் அடிப்படையிலோ (எ.கா. *குவளைக் கண், அரிசிப்பல்*) மேலும் வகைப்பாடு செய்யலாம். உவமை கூட்டுகளுக்கும் உருவகக் கூட்டுகளுக்கும் அக அமைப்புகளைக் கண்டுகொள்வதும் பிறவகைக் கூட்டுகளைப் போலச் சிக்கலானதாகும்.

மரபுக் கூடுகள் உவம உருவகக் கூட்டுகளிலிருந்து வேறுபடுகின்றது. மரபுக் கூட்டுகளின் தலைச்சொல் கூட்டின் உறுப்புச் சொற்களுக்குப் புறம்பாக அமைவதால் இவற்றை வெளி வட்டக் கூட்டுகள் எனலாம். எடுத்துக்காட்டாக, *முந்திரிக்கொட்டை* என்ற கூட்டு மரபில்லாக் கூட்டாக (உள்வட்டக் கூட்டாக) முந்திரி மரத்தின் கொட்டையைக் குறிக்கும். மரபுக்கூட்டாக (வெளிவட்டக்கூட்டாக) 'எதற்கும் முந்திக்கொண்டு நிற்கும் நபர்' என்பதைக் குறித்து நிற்கும். மரபுக் கூட்டுகள் மரபில்லாக் கூட்டுகளிலிருந்து அக அமைப்புகளில் வேறுபடுகின்றன. மரபுக் கூட்டுகள் உவம உருவக் கூட்டுகளில் இருந்து வேறுபடுகின்றன. மரபுக் கூட்டுகளுக்கான அக அமைப்பைக் காண்பதும் சிக்கல் நிறைந்த வேலையாகும்.

கூட்டாக்கச் செயற்பாட்டின் போது நீக்கப் பெற்ற அலகுகள் எதாவது நிலையில் மீளப் பெற வேண்டும். இந்தச் சிக்கலானது சிக்கல் ஒன்றுடன் தொடர்புடையது. புற

அமைப்பு பெறும் முன்பே மூல வினை மீளப் பெற வேண்டியதாகும். இந்த திரும்பப் பெறுகை (மீளப் பெறுகை) நிகழக் கூடியது என நிரூபிக்கலாம் என்று தோன்றுகின்றது.

2.5.3.கூட்டுக்களைப் பாகுபாடு செய்தல்

கூட்டுகளை அவற்றின் அங்கங்களின் அக அமைப்புகளின் வருகையில் பெறும் தொடரியல் உறவுகள் அடிப்படையில் பாகுபாடு செய்யலாம். கீழே இப்பாகுபாட்டின் பட்டியல் எடுத்துக்காட்டுகளுடனும் அவற்றின் மூல வாக்கியங்களுடனும் தரப்பட்டுள்ளது.

1. முதல் அங்கம் செயப்படுபொருளாய் வரும் கூட்டுகள்

வ.எண்	கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்	எடுத்துக்காட்டு	மூல வாக்கியம்
1.1.	எழுவாய் + செயப்படுபொருள்	காக்காய் கூடு	காக்காய் கூடு கட்டியது
1.2.	கருவிப் பொருள் + செயப்படுபொருள்	மண்பொம்மை	ஒருவன் பொம்மையை மண்ணால் செய்தான்
1.3.	நீங்கல் பொருள் + செயப்படுபொருள்	கரும்புச் சாறு	ஒருவன் கரும்பிலிருந்து சாற்றை எடுத்தான்
1.4.	பொருட்டுப் பொருள் + செயப்படுபொருள்	ரசவாளி ‘ரசம் வைக்கும் வாளி/ ரசம் உள்ள வாளி’	ரசம் வைப்பதற்காக ஒருவன் வாளி வைத்திருக்கின்றான். ரசம் வாளியில் இருக்கிறது.
1.5.	இடப்பொருள் + செயப்படுபொருள்	நெற்றிச் சுட்டி	ஒருத்தி நெற்றியில் சுட்டியைக்

			கட்டுகிறாள்.
1.6.	காலப் பொருள் + செயப்படுபொருள்	மதிய உணவு	அவர்கள் மதியத்தில் உணவைக் கொடுக்கின்றார்கள்.
1.7.	வினையடை + செயப்படுபொருள்	தப்புக்கணக்கு	ஒருவன் கணக்குத் தப்பாகப் போட்டான்.
1.8.	வினை (பயநிலை) + செயப்படுபொருள்	குடி தண்ணீர்	ஒருவன் தண்ணீரைக் குடிக்கின்றான்.

2. இரண்டாம் அங்கம் கேண்மைச் செயப்படுபொருளாய் வரும் கூட்டுகள்

வ.எண்	**கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்**	**எடுத்துக்காட்டு**	**மூல வாக்கியம்**
2.1.	எழுவாய் + கேண்மைச் செயப்படுபொருள்	கரடிப்பிடி	கரடி பிடித்தது
2.2.	செயப்படுபொருள் + கேண்மைச் செயப்படுபொருள்	தேனீ வளர்த்தல்	அவன் தேனீயை வளர்க்கின்றான்.
2.3.	கருவிப் பொருள் + கேண்மைச் செயப்படுபொருள்	உடல் உழைப்பு	அவன் உடலால் உழைக்கின்றான்.

3. இரண்டாவது அங்கம் எழுவாயாய் வரும் கூட்டுகள்

வ.எண்	**கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்**	**எடுத்துக்காட்டு**	**மூல வாக்கியம்**
3.1.	செயப்படுபொருள் +	பால் மாடு	மாடு பால் தரும்.

	எழுவாய்		
3.2.	உடநிகழ்ச்சிப் பொருள் + எழுவாய்	நாட்டுப் பற்று	பற்று நாட்டோடு உண்டு
3.3.	கொடைப் பொருள் + எழுவாய்	தேள் கொடுக்கு	கொடுக்கு தேளுக்கு உண்டு.
3.4.	நீங்கல் பொருள் + எழுவாய்	குழாய்த் தண்ணீர்	தண்ணீர் குழாயிலிருந்து வருகின்றது.
3.5.	இடப்பொருள் + எழுவாய்	கடல் மீன்	மீன் கடலில் வாழ்கின்றது.
3.6.	காலம் + எழுவாய்	காலை வெயில்	வெயில் காலையில் அடிக்கும்
3.7.	வினையடை + எழுவாய்	தெளி நீர்	நீர் தெளிவாக இருக்கின்றது
3.8.	காரணப் பொருள் + எழுவாய்	பசிமயக்கம்	பசி ஏற்பட்டதால் மயக்கம் வந்தது.
3.9	பயனிலை + எழுவாய்	ஆடு சதை	சதை ஆடும்.

4. இடப்பொருள் இரண்டாவது அங்கமாய் வரும் கூட்டுகள்

வ.எண்	**கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்**	**எடுத்துக்காட்டு**	**மூல வாக்கியம்**
4.1	எழுவாய் + இடப்பொருள்	பாம்பு புற்று	பாம்பு புற்றில் உள்ளது/ இருக்கிறது/தங்குகிறது.
4.2	செயப்படுபொருள் + இடப்பொருள்	மிட்டாய்க் கடை	ஒருவன் மிட்டாயைக் கடையில் விற்கிறான்.

5. காலம் இரண்டாவது அங்கமாய் வரும் கூட்டுகள்

வ.எண்	கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்	எடுத்துக்காட்டு	மூல வாக்கியம்
5.1	எழுவாய் + காலம்	மழைக்காலம்	மழை ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெய்யும்.
5.2	செயப்படுபொருள் + காலம்	சாப்பாட்டு நேரம்	ஒருவன்குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிட்டான்.

6. பிற வகைகள்

வ.எண்	கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்	எடுத்துக்காட்டு	மூல வாக்கியம்
6.1	குறிப்பானது + பொதுப்படையானது	தென்னைமரம்	இந்த மரம் தென்னை ஆகும்.
6.2.	வினைப் பங்கெடுப்பாளர்கள் அங்கமாய் வரும் கூட்டுகள்:		
	செயப்படுபொருள்+ வினை+ இ அல்லது செயப்படுபொருள் + வினை + (எழுவாய்) இ	ஊரைச் சுற்றி	ஒருவன் ஊரைச் சுற்றுகிறான்.
	இடப்பொருள் + வினை + (எழுவாய்) இ	தெருபொறுக்கி	ஒருவன் தெருவில் பொறுக்குகிறான்.
	செயப்படுபொருள் + வினை (கருவிப் பொருள்)	மண் வெட்டி	ஒருவன் ஒரு கருவியால் மண்ணை வெட்டுகிறான்.

	இ		

7. சமநிலை உள்வட்டக் கூட்டுகள்

வ.எண்	கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்	எடுத்துக்காட்டு	மூல வாக்கியம்
		கபிலபரணர்	அவர் கபிலர் ஆவார். அவர் பரணர் ஆவார்.
		செடிகொடிகள்	அது செடியாகும். அது கொடியாகும்

8. உவம உருவகப் பெயர் கூட்டுகள்

வ.எண்	கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்	எடுத்துக்காட்டு	மூல வாக்கியம்
		விற்புருவம்	புருவம் வில்லைப் போன்றது.
		முகவமதியம்	மதியம் முகம் ஆகும்

9. மரபுப் பெயர் கூட்டுகள்

வ.எண்	கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்	எடுத்துக்காட்டு	மூல வாக்கியம்
		முந்திரிக் கொட்டை	முந்திரிக் கொட்டை போலப் பேச்சில் முன்னால் இருக்கிறவன், முந்திரிக் கொட்டையாவான்

10. பல்பெயர் கூட்டுகள்

வ.எண்	கூட்டின் அங்கங்களின் தொடரியல் உறவுகள்	எடுத்துக்காட்டு	மூல வாக்கியம்
		மாம்பழச் சாறு	மாம்பழத்தில் சாறு இருக்கின்றது
		வடபெருங் கோவில்	வடக்கே பெரிய கோவில் உள்ளது.

2.6. சொல்லியல்: பெயரியல்

தமிழுக்கு மொழியியல் கோடுப்பாடுகளை, குறிப்பாக உருபனியல் அல்லது சொல்லியல் கோட்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டி அகத்தியலிங்கங்கம் அவர்கள் "சொல்லியல்: பெயரியல்" (அகத்தியலிங்கம் 1984), "சொல்லியல்:வினையியல்" என்ற இரு நூல்களை வெளியிட்டார். சொல்லியல் கோட்பாடுகளைத் தமிழ்த் தரவுகள் அடிப்படையில் அவர் இந்நூல்களில் விளக்குகின்றார். இதில் முதலாவது நூலானான 'சொல்லியல்:பெயரியலில்" என்பதில் அகத்தியலிங்கம் கூறுகின்ற பெயரியல் தொடர்பான செய்திகள் இங்குக் கருதத்தக்கன ஆகும்.

இவர் தமது நூலின் இரண்டாவது இயலில் 'பெயரியல்" பற்றி பேசுகின்றார். இத்தலைப்பில் இவர் பெயர்சொல், பெயர் வகைப்பாடு, தமிழ் மொழியில் பெயர்ப் பாகுபாடு, எண்ணுப்பெயர்கள், பின்னங்கள், வரையறையில்லா எண்ணுப்பெயர்கள் என்ற துணைத் தலைப்புகளில் பெயர்கள் குறித்து, குறிப்பாகத் தமிழ்ப் பெயர்கள் குறித்து விளக்குகின்றார். இது விளக்கமொழியியல் அடிப்படையிலான பெயரியல் குறித்த அடிப்படையான ஆய்வாக அமைகின்றது. தமிழ்ப் பெயர்கள் பற்றிய அகத்திலிங்கத்தின் கருத்துக்களும் விளக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

2.6.1. பெயர் வகைப்பாடு

பெயர்ச் சொற்களைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம். அவற்றின் ஆக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்கைப் பெயர்கள் எனவும் ஆக்கப் பெயர்கள் எனவும் பிரிக்கலாம். மேலும் இடுகுறிப் பெயர் காரணப் பெயர் என்றும் பிரிப்பர். மொழியில் பெயர்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதன் அடிப்படையிலும் பெயர்களை வகைப்பாடு செய்யலாம். சிறப்புப் பெயர், பதிலிடு பெயர்கள், இடப்பெயர், பருப்பொருட்பெயர், நுண்பொருட்பெயர், எண்ணுப் பெயர், திரட்பெயர், எண்ணப்படு பெயர், மரப்பெயர், உறவுப் பெயர், தொழிற்பெயர், காலப் பெயர் எனப் பாகுபாடு செய்யலாம்.

2.6.2. பதிலிடு பெயர்களின் வகைகள்

அகத்தியலிங்கம் பதிலிடு பெயர்களைத் தன்மை மூவிடப் பெயர்கள், முன்னிலை மூவிடப் பெயர்கள், படர்க்கை மூவிடப் பெயர்கள் எனப் பகுக்கின்றார். தன்மை மூவிடப் பெயர்கள் தன்மை ஒருமை, தன்மைப் பன்மை என இரண்டாகப் பகுக்கப்படுகின்றது. தன்மை பன்மை மேலும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, விலக்கீட்டுத் தன்மைப் பன்மை என்று இரண்டாகப் பிரியும். முன்னிலை மூவிடப் பெயர் முன்னிலை ஒருமைப் பெயர், முன்னிலைப் பன்மைப் பெயர் என வகைப் படுத்தப்படும். படர்க்கை மூவிடப் பெயர்கள் சுட்டுப் பெயர்கள், உயர்வுப் பதிலிடு பெயர்கள், வினாப் பதிலிடு பெயர்கள், வரையறை இல்லாப் பதிலிடு பெயர்கள், உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள், பகிர்வுப் பதிலிடு பெயர்கள், தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள், பரஸ்பரப் பதிலிடுபெயர்கள், உடமைப் பதிலிடுபெயர்கள் எனப் பகுக்கப்படும். சுட்டுப் பெயர் சேய்மைச் சுட்டுப் பெயர்,

அண்மைச் சுட்டுப் பெயர், இடைச் சுட்டுப் பெயர் எனப் பகுக்கப்படும். உயர்வுப் பதிலிடு பெயர்கள் முன்னிலை உயர்வுப் பதிலிடு பெயர்கள், படர்க்கை உயர்வுப் பதிலிடு பெயர்கள் எனப் பகுக்கப்படும்.

பதிலிடு பெயர்கள்	**முதலடி**	**வேற்றுமையடி**
தன்மை ஒருமை	நான்	என்
உள்ளப்பாடுத் தன்மைப் பன்மை	நாம்	நம்
விலக்கீட்டுத் தன்மை பன்மை	நாங்கள்	எங்கள்
முன்னிலை ஒருமை	நீ	உன்
முன்னிலைப் பன்மை	நீங்கள்	உங்கள்
ஆண்பால் ஒருமை சுட்டுப் பெயர்	இவன் (அண்மை) அவன் (சேய்மை)	இவன், அவன்
பெண்பால் ஒருமை சுட்டுப் பெயர்	இவள் (அண்மை), அவள் (சேய்மை)	இவள், அவள்
அஃறிணை ஒருமை சுட்டுப் பெயர்	இது (அண்மை), அது (சேய்மை)	இது,அது
அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர்	இவை (அண்மை), அவை (சேய்மை)	இவற்ற், அவற்ற்
முன்னிலை உயர்வுப் பதிலிடு பெயர்கள்	நீர், நீங்கள், தாங்கள்	உம், உங்கள், தங்கள்

படர்க்கை உயர்வுப் பதிலிடு பெயர்கள்	அவர், அவர்கள்	அவர், அவர்கள்
வினாப் பதிலிடு பெயர்கள்	யார், ஆர், எவன், எவள், எவர், என்ன, எது, எவை, எத்தனை, எவ்வளவு, எத்துணை,	யார், ஆர், எவன், எவள், எவர், என்ன, எது, எவற்ற் (எவை என்பதன் வேற்றுமையடி), எத்தனை, எவ்வளவு, எத்துணை,
வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள்	யாரோ, எவனோ, எவளோ, எதோ, எவையோ, என்னவோ, எத்தனையோ, எவ்வளவோ, எத்துணையோ	
உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள்	யாரும், எவனும், எவளும், எதுவும், எவையும், என்னவும்,	
பகிர்வுப் பதிலிடிப் பெயர்கள்	ஒவ்வொருவரும், ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும், ஒவ்வொன்றும்	ஒவ்வொருவரும், ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும், ஒவ்வொன்றும்
தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள்	தான், தாம்	தன், தன்
பரஸ்பர பதிலிடு பெயர்கள்	தங்களுக்குள், தமக்குள், ஒருவரை ஒருவர்,	
முழுமைப் பதிலிடு பெயர்கள்	எல்லாரும், எல்லாம், அனைவரும், அனைத்தும்	

உடைமைப் பதிலிடுபெயர்கள்	என்னுடையவன், உன்னுடையவன், அவனுடையவன்	

2.6.3. எண்பால் பகுப்பு

தமிழ் தன்மையிலும் முன்னிலையிலும் ஒருமைப் பன்மை என்ற எண் பகுப்பையே காடுட்டுகின்றது. ஆண், பெண் வேற்றுமையைக் காட்டுவதில்லை. படர்க்கைப் பெயர்கள் ஒருமைப் பன்மை என்ற எண் பகுப்பையும் ஆண், பெண் என்ற பால் பகுப்பையும் காட்டும்.

அகத்தியலிங்கம் ɵ (பூஜியம்), *ன்* ஆகியவற்றைத் தன்மை, முன்னிலை பதிலிடு பெயர்களில் ஒருமையைக் குறிப்பிடும் பின்னொட்டுக்களாகக் காட்டுகின்றார்.

நீ + ɵ > நீ

நா + ன் > நான், எ + ன் > என், தா+ன் > தான், உ+ன் > உன்

ங்கள் என்பதை தன்மை, முன்னிலை பதிலிடுபெயர்களில் பன்மையைக் குறிப்பிடும் பின்னொட்டுகளாகக் காட்டுகிறார்.

நீ+ங்கள் > நீங்கள், எ+ங்கள் > எங்கள், உ+ங்கள் > உங்கள், தா+ங்கள் > தாங்கள்,

ம் என்பதை *நா, ந* என்ற தன்மை ஒருமை அடிகளுடன் இணைக்கப்படும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனக் குறிப்பிடுகின்றார்.

நா+ம் > நாம், ந+ம் > நம்

ங்கள் என்பதை *நா, எ* என்ற தன்மை ஒருமை அடிகளுடன் இணைக்கப்படும் விலக்கீட்டுத் தன்மையைக் காட்டும் பின்னொட்டாகக் கொள்கின்றார்.

உயர்திணைப் பெயர்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால் பெயர்கள் எனப்பகுக்கப்படும்.

2.6.4. ஆண்பால் பெயர்கள்

ஆண்பால் பெயர்களில் ஜாதிப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் தொழில் காட்டும் பெயர்களிலும் ஆண்பால் ஒட்டுகள் காணப்படும். *அன், ஆன், வன், ஞன், மான், காரன், அவன்* ஆகியன ஆண்பால் ஒட்டுகளாகும். பின்வரும் அட்டவணை இதை எடுத்தியம்பும்.

வஎண்	ஆண்பால் பின்னொட்டுகள்	எடுத்துக்காடுகள்
1	அன்	இராமன், கண்ணன், நடராஜன், பாணன், கொல்லன், பள்ளன், இடையன், அண்ணன், மாமன், திருடன், செவிடன், அரசன்
2	ஆன்	கண்ணபிரான், வண்ணான், நாடான், கோனான், மச்சான், அத்தான், நாட்டான்
3	வன்	சிறுவன், முதல்வன், புதல்வன், தலைவன், கிழவன், உழவன்
4	ஞன்	அறிஞன், கலைஞன்
5	காரன்	வேலைக்காரன், பால்காரன், வீட்டுக்காரன்
6	மான்	சேரமான்,கோமான்
7	அவன்	முன்னவன், பின்னவன், தென்னவன்

2.6.5. பெண்பால் பெயர்கள்

பெண்பால் பெயர்களில் ஜாதிப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் தொழில் காட்டும் பெயர்களிலும் பெண்பால் ஒட்டுகள் காணப்படும். *அள், த்தி, ஆத்தி,ச்சி, அச்சி, ஐ, ஆள், ஆட்டி, மாட்டி, காரி, அவள், வி, அம்மாள்* என்பன பெண்பால் ஒட்டுக்களாகும். பின்வரும் அட்டவணை இதை எடுத்தியம்பும்.

வளண்	**பெண்பால் பின்னொட்டுகள்**	**எடுத்துக்காட்டுகள்**
1	அள்	மகள், பிறள்
2	த்தி	குறத்தி, குயத்தி,கிழத்தி,
3	ஆத்தி	நாடாத்தி, பாப்பாத்தி, வண்ணாத்தி
4	ச்சி	ஆய்ச்சி, இடைச்சி, செட்டிச்சி
4	அச்சி	செம்படவச்சி, பள்ளச்சி, வெள்ளாளச்சி, தமிழச்சி, வேடச்சி
5	ஐ	கொற்றவை, பரத்தை, ஆசிரியை, நடிகை
6	ஆள்	மச்சாள், நாட்டாள், வடக்கத்தியாள்
7	ஆட்டி	பிராட்டி, கண்ணாட்டி
8	மாட்டி	பெருமாட்டி
9	காரி	வேலைக்காரி, பால்காரி, வீட்டுக்காரி
10	அவள்	முன்னவள், பின்னவள்
11	வி	செல்வி, புதல்வி, மாணவி, தலைவி, மனைவி
12	அம்மாள்	பொன்னம்மாள், வேலம்மாள், பகவதியம்மாள்

2.6.6. பலர்பால் பெயர்கள்

தமிழில் ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை, ஆண்-பெண்பால் பன்மை ஆகிய மூன்றையும் இணைத்தே பலர்பால் பன்மை என்கின்றோம். முன்னர் குறிப்பிட்டது போன்று ஜாதிப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் தொழில் காட்டும் பெயர்களிலும் பலர்பால் ஒட்டுகள் காணப்படும். *அர், அர்கள், வர், வர்கள், ஞர், ஞர்கள், மார், மார்கள், கள், இர்* ஆகிய ஒட்டுகள் பலர்பால் ஒட்டுகளாகப் பயன்படுகின்றன. பின்வரும் அட்டவணை இதை எடுத்தியம்பும்.

வளண்	**பலர்பால் பின்னொட்டுகள்**	**எடுத்துக்காட்டுகள்**
1	அர்	அரசர், சிறுவர், திருடர், பார்ப்பனர், காதலர், செவிடர், தோழர்
2	அர்கள்	அன்பர்கள், அரசர்கள், தமிழர்கள், பாணர்கள், வேடர்கள், ஆசிரியர்கள், தோழர்கள், பார்பனர்கள், நாயகர்கள், புலையர்கள்
3	வர்	கிழவர், சிறுவர், செல்வர், புதல்வர், முடவர்
4	வர்கள்	கிழவர்கள், சிறுவர்கள், செல்வர்கள், புதல்வர்கள், முடவர்கள்
5	ஞர்	அறிஞர், கலைஞர்
6	ஞர்கள்	அறிஞர்கள், கலைஞர்கள், கொலைஞர்கள், வலைஞர்கள், இளைஞர்கள்
7	மார்	அண்ணன்மார், அண்ணிமார், அத்தான்மார்,

		வெள்ளாளன்மார், தங்கைமார், தம்பிமார், தேவர்மார்
8	மார்கள்	குருக்கள்மார்கள், தேவர்மார்கள், நாக்கன்மார்கள், வெள்ளாளர்மார்கள்
9	கள்	தம்பிகள், தோழிகள், பெண்கள், அரசிகள், ஆண்கள், சிறுமிகள், தந்தைகள், தங்கைகள்
10	இர்	மகளிர், பெண்டிர்

மேலும் அகத்தியலிங்கம் அஃறிணைப் பெயர்களை ஒன்றன் பால் பெயர்கள், பலவின்பால்பெயர்கள் எனப் பகுக்கின்றார். பலவின் பால் பெயர்கள் *கள், க்கள்* ஆகிய ஒட்டுகளைப் பெற்றுவரும். இவை ஒரே உருபனின் மாற்றுருபுகளாகும். இவற்றின் வருகையை வருவதுரைக்க இயலும்.

வளண்	**பலவின்பால் பின்னொட்டுகள்**	**எடுத்துக்காட்டுகள்**
	க்கள்	பசுக்கள், பருக்கள், உருக்கள், வடுக்கள், குழுக்கள், தெருக்கள், கணுக்கள்
	கள்	மாடுகள், ஆடுகள், கற்கள், ஊர்கள், நகரங்கள், சொற்கள்

2.6.7. உயர்வு ஒருமைப் பெயர்கள்

பொதுவாகப் பலர்பால் காட்டும் ஒட்டுகள் உயர்வு ஒருமை காட்டும் ஒட்டுகளாக வருகின்றன. இந்நிலையில் இரட்டைப் பன்மை ஒட்டுக்களாகிய அர்கள், ஆர்கள், வர்கள், ஞர்கள் போன்ற இரட்டைப் பன்மை ஒட்டுகள் தோன்றின. மார் பன்மையைக் காட்டுமேயன்றி உயர்வு ஒருமையைக் காட்டுவதில்லை.

உயர்வு ஒருமையைக் காட்டுவனவாக *அர், ஆர், வர், ஞர், அவர்கள், அம்மையார், அடிகள்* ஆகியவை உள்ளன. இவற்றுள் பின்னைய மூன்றும் தனிச் சொற்களாகக் கருதப்படவேண்டியவை.

வளண்	**உயர்வு ஒருமை பின்னொட்டுகள்**	**எடுத்துக்காட்டுகள்**
	அர்	தோழர், காதலர், பாணர், திருடர், கபிலர்,அரசரி, செவிடர், பரணர், பார்ப்பனர், புலவர்
	ஆர்	அண்ணனார், தங்கையார், அண்ணியார், அரசியார், மனைவியார், புதல்வியார், தம்பியார், தமக்கையார்
	வர்	ஒருவர், புதல்வர், முடவர், அவர், முதல்வர், கிழவர்
	ஞர்	அறிஞர், கலைஞர்
	அவர்கள்	கண்ணன் அவர்கள், ஆசிரியர் அவர்கள்
	அடிகள்	காந்தி அடிகள், இளங்கோ அடிகள்
	அம்மையார்	இந்திரா அம்மையார், திலகவதி அம்மையார்
	அம்மையார் அவர்கள்	இந்திராகாந்தி அம்மையார் அவர்கள்

2.7. ஆட்சிசொல்லுக்குச் சிறப்புக் குறிப்புடன் தற்காலத் தமிழில் சொல்லாக்கம்

மறைமலை (Maramalai 1984) ஆட்சிசொல்லுக்குச் சிறப்புக் குறிப்புடன் தற்காலத் தமிழில் சொல்லாக்கம் (Word-formation in Modern Tamil with special referece to administrative terms) என்ற தமது முனைவர் பட்ட ஆய்வேட்டில் ஆட்சித் துறைச் சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தற்காலத் தமிழின் சொல்லாகத்தை ஆய்கின்றார்.

இவர் முன்னுரை, முடிவுரை நீங்கலாகத் தமது ஆய்வேட்டைச் சொல்லும் சொல்லாக்கமும், சொல்லாக்கச் சிந்தனைகள், ஒட்டுவழிச் சொல்லாக்கம், தொகைச்

சொல்லாக்கம், பல்பெயர்த் தொகைச் சொல்லாக்கம், கூட்டுச் சொல், ஏனைய சொல்லாக்கங்கள், சொல்லாக்கத்தில் வரும் சிக்கல்கள், நிலைபேறாக்கம், சொல்லாக்கமும் மொழிமாற்றமும் எனப் பத்து இயல்களாகப் பகுத்துக் கொண்டு ஆட்சித் துறைச் சொற்கோவைத் தரவு அடிப்படையில் தற்காலத் தமிழின் சொல்லாக்கத்தை விளக்குகின்றார். இது ஒரு வரலாற்று மொழியியல் ஆய்வல்ல; மாறாக வருணனை மொழியியல் ஆய்வாகும். ஆட்சித் துறைச் சொற்கோவையில் இடம் பெற்றுள்ள சொற்கள் வர்ணனை மொழியியல் அடிப்படையில் ஆயப்பட்டு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

"சொல்லும் சொல்லாக்கமும்" என்ற தமது முதல் இயலில் மறைமலை அவர்கள் "சொல் என்றால் என்ன" என்பது குறித்த விளக்கமும் சொல்லாக்கத்திற்கும் இலக்கணதிற்குமுள்ள வேறுபாடுகளையும் விளக்குகின்றார்.

"சொல்லாக்கச் சிந்தனைகள்" என்ற தமது இரண்டாவது இயலில் இவர் சொல்லாக்கம் குறித்த தொடக்க காலச் சிந்தனைகளையும் சொல்லாக்கம் பற்றிய கோட்பாடுகளையும் சொல்லாக்க விதி முறை பற்றிக் கூறியுள்ள பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களையும் தொகுத்துக் கூறியுள்ளார்.

2.7.1. ஒட்டுவழிச் சொல்லாக்கம்

"ஒட்டுவழிச் சொல்லாக்கம்' என்ற தமது மூன்றாவது இயலில் முன்னொட்டுகள் வழிச் சொல்லாக்கம் பின்னொட்டுகள் (விகுதி) வழிச் சொல்லாக்கம் அடிப்படையில் ஆட்சித்துறைச் சொற்களின் ஆக்கங்களை விளக்குகின்றார்.

2.7.1.1. முன்னொட்டு வழிச் சொல்லாக்கம்

“தமிழில் முன்னொட்டுகள் உள்ளனவா? என்ற கேள்விக்கு விடையளிக்கும் முகமாக பல அறிஞர் பெருமக்களின் கருத்துக்களை முன்வைக்கின்றார். வடமொழிகளிலிருந்து கடன் வாங்கிய சொற்களில் முன்னொட்டுகள் பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுகள் தருகின்றார்: *அசந்தர்ப்பம், அனாவசியம், துரதிருஷ்டம், துஷ்பிரயோகம், நிசப்தம், நிராசை. நக்கீரன், நச்செள்ளை, நப்பிள்ளை* என்ற இயல்மொழிச் சொற்களில் ந- என்பது முன்னொட்டாக வருவதையும் *திருக்குறள், திருவாசகம், திருக்கோவை, திருப்பாவை, திருவெம்பாவை* ஆகிய இயல் மொழிச் சொற்களில் *திரு-* என்பது ‘சிறப்பு என்ற பொருளில் முன்னொட்டாக வருவதையும் சுட்டிக்காட்டுகிறார். அகவலைப் படுத்துதல், இடைச் சொருகல், உட்கோள், உடன்பிறப்பு, உழிதகுதல், உழைச்செல்வான், ஊடுருவல், கடைத்தேற்றல், கீழ்ப்படிதல், தலைக்கடன், நடுத்தீர்ப்பு, பிற்போக்கு, புறங்கூறு, மறுமுன் பாய்தல், முன்னேற்றம், மேற்பார்வை, வழிமொழிதல், வெளியிடுதல் என்னும் சொற்களில் முதலிலுள்ள *அகம், இடை, உள், உடன், உழி, உழை, ஊடு, கடை, கீழ், தலை, நடு, பின், புறம், மறு, முன், மேல், வழி, வெளி* என்னும் முன்னொட்டுகள் இடைச் சொல்லாக ஆளப்பெற்ற பிற சொற்களே என்று பாவாணர் குறிப்பிடுவதை முன்வைக்கின்றார்.

ஆட்சித் துறைச் சொற்கோவையில் *முன், பின், மேல்* என்னும் சொற்கள் முன்னொட்டுகள் போன்று செயல்படுகின்றன எனக் குறிப்பிட்டுப் பின்வரும் எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார்.

முன் தணிக்கை, பின் விளைவு, மேல் வாரி

முன் என்னும் சொல் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிட்டு பல எடுத்துகாட்டுகளை முன் வைக்கின்றார். அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

முன் அடைமொழி, முன் ஆய்வு, முன் இருப்பு, முன் உசாவல், முன் எச்சரிக்கை, முன் ஒதுக்கீடு, முன் ஒப்பளிப்பு, முன் குற்றவாளி, முன் கோப்பு, முன் சிறுகுடல்.

முன், பின், மேல் ஆகியன முன்னொட்டுகள் போலச் செயல்பட்டு பல ஆட்சித்துறைச் சொற்களை ஆக்கியளிக்கின்றன என்று கருத்துரைக்கின்றார்.

2.7.1.2. பின்னொட்டுவழிச் சொல்லாக்கம்

மறைமலை "விகுதிகள்" என்ற தலைப்பில் பின்னொட்டு வழிச் சொல்லாகத்தை ஆட்சித் துறைச் சொற்களைக் கொண்டு விளக்குகின்றார். இவர் சொல்லாக்க விகுதிகளை அவை சேரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு மூன்றாகப் பிரிக்கின்றார்:

1) பெயருடன் சேரும் விகுதிகள்
2) வினையுடன்/எச்சத்துடன் சேரும் விகுதிகள்
3) பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

1) பெயருடன் சேரும் விகுதிகள்

அ) காரன், காரர்

வண்டிக்காரன், சதிகாரன், சமையல்காரர், கட்சிக்காரர், வாடிக்கைக்காரர்

ஆ) ஆள், ஆளர்,ஆளி

பணியாள், பதிலாள், மேலாள், ஆணையாளர், கண்காணிப்பாளர், குற்றவாளி, நோயாளி

இ) இயல்

சமூக இயல், தாவர இயல், நிலவியல்

ஈ) தாரர்

விண்ணப்பதாரர், பங்குதாரர்

2) வினையுடன்/எச்சத்துடன் சேரும் விகுதிகள்

அ) நர்

இயக்குநர், மருந்தாக்குநர், ஓட்டுநர், நடத்துநர்

ஆ) மானம்

அடைமானம், அரிமானம், அழிமானம், உடைமானம், கட்டுமானம், செய்மானம், செரிமானம், சேர்மானம், தீர்மானம், தேய்மானம்

3) பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

இதில் வரும் சொல்லாக்க விகுதிகளை அவற்றால் உருவாக்கப்படும் சொற்களின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்துகின்றார்.

1) ஆண்பால், பலர்பால், இருபாற் பொதுப் பெயராக்க விகுதிகள்

2) பொருட் பெயராக்க விகுதிகள்

3) இடப்பெயராக்க விகுதிகள்

4) தொழிற்பெயராக்க விகுதிகள்

1) ஆண்பால், பலர்பால், இருபாற் பொதுப் பெயராக்க விகுதிகள்

1.1. காரன்/காரர்

காரன், காரி, காரர் விகுதிகள் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் செல்வாக்குப் பெற்று விளங்கும் விகுதிகள் ஆகும். இவற்றை உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில் அல்லது ஆகுதல் என்னும் நான்கு பொருள்களுள் அடங்குவதாக வகைப் படுத்தலாம். ஆட்சித்துறை சொற்கோவையில் உடமையைக் குறிக்கும் வகையில்

காரன், காரி, காரர் விகுதிகள் பயன்படுத்தப்படவில்லை. காரி விகுதியைப் பயன்படுத்தி உருவாக்கிய சொற்களும் ஆட்சித்துறைச் சொற்கோவையில் இடம்பெறவில்லை.

பொருள்	எடுத்துக்காட்டு
உரிமை	வாடிக்கைக்காரர்
உறவு அல்லது தொடர்பு	கட்சிக்காரர், சதிகாரன்
தொழில் அல்லது ஆகுதல்	இயந்திரக்காரர், ஒப்பந்தக்காரர், குதிரைக்காரன், காவற்காரர், சமையற்காரர், வண்டிக்காரர், தோட்டக்காரர், தோணிக்காரர்

1.2. ஆள்/ஆளி/ஆளர்

அ) கீழ்க்கண்டவிகுதிகளுடைய தொழில் பெயர்களுடன் 'ஆளர்' விகுதி சேர்கின்றது.

விகுதி	எடுத்துக்காட்டுகள்
சி	ஆட்சியாளர், பயிற்சியாளர், ஆராய்ச்சியாளர்,
அல்	செயலாளர்
தி	செய்தியாளர்
மதி	இறக்குமதியாளர்
வை	நில அளவையாளர், பார்வையாளர்
வு	ஆய்வாளர், தேர்வாளர், வரைவாளர், பதிவாளர்
பு	அமைப்பாளர்,அழைப்பாளர்,கணக்கெடுப்பாளர், கண்காணிப்பாளர், சார்பாளர்

ஆ) சில பிறமொழிச் சொற்களுடன் ஆளர் விதி சேர்க்கப்படுகின்றது

பிறமொழிச் சொற்கள்	ஆளர் விகுதி பெற்றவை
வாடிக்கை	வாடிக்கையாளர்
ஆதரவு	ஆதரவாளர்

இ) சில பொருட்பெயர்களுடன் 'ஆளர்' சேர்ந்து சொற்களை ஆக்குகின்றது

பொருட்பெயர்கள்	ஆளர் விகுதி பெற்றவை
கம்பி	கம்பியாளர்
காசு	காசாளர்
பொறி	பொறியாளர்

பெயருக்கும் விகுதிக்கும் உள்ள உறவு

ஆகுதல் அல்லது இயக்குதல், சிறப்புத்தன்மை, தொழில் ஆகியவற்றை இவ்விகுதி குறிக்கின்றது.

வ.எண்	உறவு	எடுத்துக்காட்டுகள்
அ	ஆகுதல் அல்லது இயக்குதல்	செயலாளர், பொருளாளர், காசாளர், உரிமையாளர், கம்பியாளர், பொறியாளர்
ஆ	சிறப்புத் தன்மை	கொடியாளர், ஆய்வாளர், மொழி பெயர்ப்பாளர்
இ	தொழில்	இறக்குமதியாளர், அட்டவணையாளர், ஏற்றுமதியாளர், கண்காணிப்பாளர், நில அளவையாளர், மேற்பார்வையாளர், புலனாய்வாளர், தயாரிப்பாளர்

கடைநிலைப் பணிகளைக் குறிக்க *'ஆள்'* விகுதி பயன்படுத்தப்படுகின்றது.

கையாள், காவலாள், கும்பாள், எடையாள்

ஒரே பெயருடன் ஆள், ஆளர் விகுதிகள் சேர்க்கப்பட்டால் ஆள் விகுதி கடைநிலைப் பணிகளைக் குறிக்கவும் ஆளர் விகுதி உயர்நிலைப் பணிகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

ஆள்	ஆளர்
உதவியாள்	உதவியாளர்
கப்பாள்	காப்பாளர்
மேலாள்	மேலாளர்

ஆளி விகுதி இருபாற் பொதுப் பெயர்களை உருவாக்கத் துணை புரிகின்றது.

எ.கா. குற்றவாளி, கூட்டாளி, தொழிலாளி, நெசவாளி, நோயாளி, பங்காளி, பயனாளி, முதலாளி, வழக்காளி

ஆள், ஆளர் விகுதிகளும் இருபாற் பொதுபெயர்களை உருவாக்குகின்றன: பெரிதும் *ஆளர்* உயர்நிலைப் பணிகளையும் *ஆள்* கடைநிலைப் பணிகளையும் குறிப்பதற்கென வரையறைப் படுத்தப்பட்டுவிட்டன. ஆனால் *ஆளி* உயர்நிலை, கடைநிலை என்ற சிக்கல் எழாத பொதுத் தன்மை வாய்ந்த சொற்களை உருவாக்கப் பயன்படுகின்றது.

1.3. தாரர்

இஸ்லாமியர் தொடர்பால் தாரர்/தாரி என்னும் விகுதிகள் தமிழில் கலக்கப்பெற்றன.

எ.கா. ஜமீந்தார், ஜமேதார், ஜாகீர்தார், ஸுபேதார், டபேதார், தாசில்தார், மிராஸ்தார்

தார் என்னும் விகுதி தமிழ் *அர்* விகுதி பெற்று *தாரர்* ஆகியது. எனவே *தாரர்* இருமொழி ஒட்டு விகுதிச் சொல் ஆகும்.

எ.கா. அடைமானதாரர், ஆயக்கட்டுத்தாரர், குடிவாரதாரர், தாணாதாரர், பங்குதாரர், பாத்தியதாரர், பிணைதாரர், மனுதாரர், விண்ணப்பதாரர்

1.4. நர்

செய்யும் என்னும் பெயரெச்ச வடிவங்களுடன் *நர்* விகுதி சேர்ந்து *-ம்* கெட பெயராக்கம் செய்யப்படும்.

எ.கா. ஓட்டுநர், திருத்துநர், நட்த்துநர், பயிற்றுநர், விளக்குநர்.

1.5. ஞர்

ஐ, இ என்ற எழுத்துக்களில் முடியும் பெயர்ச் சொற்களுடன் *ஞர்* விகுதி சேர்கின்றது

எ.கா. கலைஞர், கவிஞர், படைஞர், வழிஞர், ஆள்வினைஞர், செயற்பொறிஞர்

இ, ஐ என முடியும் வினைச் சொற்களுடனும் *ஞர்* விகுதி சேர்கின்றது.

எ.கா. உருவி வரைஞர், வழக்கறிஞர், வழக்குரைஞர்

1.6. இ (ஆ)

இகர விகுதி மூன்று நிலைகளில் செயற்படுகின்றது.

அ) அரசி போன்ற சொற்களில் பெண்பால் விகுதியாகவும்

ஆ) மண்வெட்டி போன்ற சொற்களில் கருவிப் பொருட்பெயராகவும்

இ) வாயாடி, ஊர்சுற்றி போன்ற சொற்களில் மனிதர்களைக் குறிக்கும் இருபாற் பொதுப் பெயர் விகுதியாவும்

அம் ஈற்றுச் சொற்களுடன் இகர விகுதி சேர்ந்து சொற்களி உருவாக்குவது இங்கு கருதத்தக்கது.

நிர்வாகம் + இ > நிர்வாகி, பயணம் + இ > பயணி

ஒருவருக்குப் பதிலாக வேலைசெய்யும் மற்றொருவரைக் குறிக்கும் *பதிலி* என்பது பதில்+இ என்ற இணப்பால் உருவானது.

2) பொருட்பெயராக்க விகுதிகள்

2.1. கருவிப் பெயராக்க விகுதிகள்

ஆட்சித்துறைச் சொற்களில் இகரவிகுதி கருவிப் பெயராக்க விகுதியாகப் பயன்படுகின்றது. இது பெயர்+வினையடி+இ என்ற அமைப்பில் வரும்.

எ.கா. மண்வெட்டி, பாக்குவெட்டி, முன்வாங்கி

வினையடி +இ அமைப்பாலும் கருவிப்பெயர்கள் ஆக்கப்படும். இத்தகைய சொற்கள் ஆட்சித்துறை சொல்லாக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவு உள்ளன.

இடுக்கி, இயக்கி, இளக்கி, இறுக்கி, உயர்த்தி, ஊக்கி

பின்வருமாறு தன்வினை வடிவங்களும் கருவிப் பெயர்களை உருவாக்கும்.

உருகி, உறிஞ்சி, ஏந்தி, தாங்கி, திருகி, மாறி

தொழிற் பெயர்களுடன் இகர விகுதி சேர்ந்தும் கருவிப் பெயர்கள் உருவாக்கப்படுகின்றன.

வினை	தொழிற்பெயர்	பெயராக்கம்
அள	அளவு	அளவி
உறை	உறைவு	உறைவி
கல	கலப்பு	கலப்பி
செய்	செயல்	செயலி
சுர	சுரப்பு	சுரப்பி

2.2. துறைச் சொல்லாக்க விகுதிகள்

‘கல்வி’ என்று பொருள்படும் இயல் என்ற logos என்ற சொல் logy என்று விகுதியாகி கல்வித் துறைப் பெயர்களை உருவாக்கப் பயன்படுகின்றது.

வணிகவியல், புள்ளியியல், அறிவியல்

3) **இடப்பெயராக்க விகுதி**

இடப்பெயர்களையும் நிறுவனங்கள், செயலகங்கள் ஆகியவற்றைக் குறிக்கும் பெயர்களும் அகம் என்ற விகுதியால் ஆக்கப்படுகின்றன.

அ	இடப்பெயர்கள்	ஊரகம், படிப்பகம், நூலகம், உணவகம்
ஆ	செயலகங்கள்	தூதரகம், அலுவலகம், இயக்ககம், அமைச்சகம்
இ	நிறுவனங்கள்	நம்பகம்

4) தொழிற் பெயராக்க விகுதிகள்

பு, கை, மானம், வை, மானம், வு ஆகிய தொழிற்பெயர் விகுதிகள் ஆட்சிதுறைச் சொற்களை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தொழிற் பெயர் விகுதி	ஆக்கப்பட்ட சொற்கள்
பு	அடைப்பு, அமைப்பு, அரிப்பு, அழிப்பு, அறிவிப்பு,இணைப்பு, இயைபு, இருப்பு, ஊக்குவிப்பு, ஒத்திவைப்பு, ஒத்துழைப்பு, ஒப்பளிப்பு, ஒருமிப்பு
கை	அறிக்கை, அறிவிக்கை, அனுப்புகை, ஆகுகை, உந்துகை, சேர்க்கை, தள்ளுகை, மாற்றுகை, பற்றுகை, பேணுகை, பொருந்துகை
மானம்	அடைமானம், அரிமானம், அழிமானம், எண்மானம், கட்டுமானம், செரிமானம், சேர்மானம், தீர்மானம், தேய்மானம், பிடிமானம், பெறுமானம், வருமானம்
வை	அரைவை, அளவை, இழுவை, உழுவை, கலவை, கொடுவை, தீர்வை, மிதவை
வு	அகழ்வு, அசைவு, அலைவு, அளவு, ஆய்வு, இசைவு, ஈவு

தல்/அல் விகுதிகளும் நிலைபேறு பெற்றுள்ளன தொழிற்பெயர் சொற்களை உருவாக்குகின்றன.

எ.கா. தேர்தல், மோதல், மாறுதல், தூண்டுதல், தண்டல், ஒப்புதல், காவல், குவியல்

அல் விகுதிக்கு அடுத்தபடியாக அம் விகுதி பின்வருமாறு செயல்படுகின்றது.

அ) பெயர்ச் சொற்களுடன் சேர்ந்து பிதிய பெயர்ச்சொற்களை உருவாகல்.

எ.கா. ஆணையம், காரியம், பச்சையம், வெறியம்

ஆ) வினையுடன் சேர்ந்து வினைப் பெயர்களுடன் சேர்ந்து வினைப் பெயர்களை ஆக்கியளித்தல்.

எ.கா. அழுத்தம், இணக்கம், இயக்கம், இறுக்கம், ஈட்டம், எண்ணம், ஒதுக்கம், ஓட்டம், தேக்கம், தொடக்கம், நாட்டம், நிறுத்தம், நீக்கம், நெருக்கம்

இ) மை-ஈற்றுப் பண்புப் பெயரகள் ஐ கெட்டு அம் விகுதி சேர்வதால் புதிய ஆட்சித்துறைச் சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

உரிமை > உரிமம், குடிமை > குடிமம், தனிமை > தனிமம், நுண்மை > நுண்மம், பெருமை > பெருமம்

ஈ) இவ்வாறு உருவாக்கம் ஏற்பட்டதன் காரணமாக மம் என்ற விகுதி தோன்றி சொல்காக்கம் நடைபெறுகின்றது.

கரை+மம் > கரைமம், கனி+மம் >கனிமம், பாய்+ம்ம்> பாய்ம்ம், மின்+ம்ம் > மின்மம், குழை+மம் > குழைமம்

கூட்டு வினைகளில் உள்ள இடு, படு என்ற வினகள் (வினையாக்கிகள்) முறையே ஈடு, பாடு என்று பெயராக மாறி பெயரக்கம் செய்கின்றன.

வினை	**பெயர்**
இடர்படு	இடர்பாடு

உடன்படு	உடன்பாடு
சமன்படு	சமன்பாடு
பயன்படு	பயன்பாடு
வகைப்படு	வகைப்பாடு
இடையிடு	இடையீடு
ஒப்பிடு	ஒப்பீடு
ஒதுக்கிடு	ஒதுக்கீடு
குறிப்பிடு	குறிப்பீடு
செலவிடு	செலவீடு
தலையிடு	தலையீடு
பங்கிடு	பங்கீடு
மதிப்பிடு	மதிப்பீடு

இவ்வியலின் இறுதியில் மறைமலை எந்தந்த விகுதிகள் எந்தந்த சொல்வகையுடன் (வினை, பெயர்) சேர்ந்து எவ்வகைச் சொற்களை உருவாக்குகின்றன என்பதை அட்டவணைப் படுத்திக்காட்டுகிறார்.

விகுதிகள்	**எவ்வகைச் சொற்களுடன் சேர்கின்றன**	**எவ்வகைச் சொற்களை உருவக்குகின்றன**
அகம்	பெயர், வினை	இடப்பெயர்
அம்/ம்ம்	பெயர், வினை	தொழிற்பெயர், பண்புப் பெயர், நுண்பொருட்பெயர்
ஆள்/ஆளர்/ஆளி	பெயர்	உயர்திணைப்பெயர்
இ, அ	வினை	கருவிப்பெயர்
ஆ	பெயர், வினை, எச்சம்	உயர்திணப் பெயர்
இயல்	பெயர்	துறைப் பெயர்

காரன்/காரர்	பெயர், வினை, எச்சம்	உயர்திணைப் பெயர்
ஓர்	பெயர், வினை, எச்சம்	உயர்திணைப் பெயர்
தாரர்/தாரி	பெயர், வினை, எச்சம்	உயர்திணைப் பெயர்
தீனம்	பெயர், வினை, எச்சம்	கொள்கைப் பெயர்
நர்	பெயர், வினை, எச்சம்	உயர்திணைப் பெயர்
கை, பு, மானம், வை, வு போன்றன	பெயர், வினை, எச்சம்	தொழிற்பெயர்

2.7.2. இருபெயர்த் தொகைச் சொல்லாக்கம்

"இருபெயர்த் தொகைச் சொல்லாக்கம்" என்ற தமது நான்காம் இயலில் மறைமலை மரபிலக்கணங்களில் குறிப்பிட்டுள்ள தொகைச் சொல்லாக்கத்தின் வழிநின்று ஆட்சித் துறைக்கோவையில் இடம் பெற்றுள்ள இருபெயர்த் தொகைச் சொற்களின் ஆக்கத்தை விளக்குகின்றார். மேலும் ஆட்சித்துறைச் சொற்கோவையில் வேற்றுமை, பண்பு, வினை என்பதன் தொகை சொற்கள் பெரும்பான்மையாகவும் உவமை, உம்மை என்பதன் தொகைச் சொற்கள் மிகவும் சிறுபான்மையாகவும் காணப்படுகின்றன என்றும் அன்மொழித் தொகைச் சொல்லாக்க உத்தியைக் கொண்டு சொற்கள் படைக்கப் பெறவில்லை என்று குறிப்பிடுகின்றார்.

எ.கா.

மரகந்தப் பை 'மரகந்தத்தை உடைய பை' - இரண்டாம் வேற்றுமைத் தொகை

மணல் மேடு 'மணலால் அமைந்த மேடு'- மூன்றாம் வேற்றுமைத் தொகை

மக்கள் கல்வி 'மக்களுக்குக் கல்வி' – நான்காம் வேற்றுமைத் தொகை

மழை அளவு 'மழையது அளவு' – ஆறாம் வேற்றுமைத் தொகை

மரப்புழு 'மரத்தின் கண் வாழும் புழு' – ஏழாம் வேற்றுமை தொகை'

கருங்கல் – பண்புத் தொகை

குழல் விளக்கு – உவமைத் தொகை

வரவு செலவு – உம்மைத் தொகை

பொது நோக்கில் நோக்கினால் தொகைச் சொற்கள் எல்லாமே பொருள் மயக்கம் தருவன என்று குறிப்பிட்டுக் கீழ்வரும் எடுத்துக்காட்டு தருகிறார்.

கண்ணன் பாட்டு 'கண்ணனைப் பற்றிய பாட்டு/ கண்ணனால் பாடப்பெற்ற பாட்டு/ கண்ணனுடைய பாட்டு

தொகைச் சொற்களை இடத்திற்கு ஏற்ப விரித்தால் உரிய பொருள் கிடைக்கும் என்ற மரபுக் கொள்கையைப் பின்வரும் எடுத்துக்காட்டால் விளக்குகின்றார்.

கப்பல் வணிகம், கப்பல் விளக்கு

மேற்கண்ட தொகைச் சொற்களுக்கு இன்னது தான் பொருள் என்று வரையறுத்தல் இயலாது. சூழலுக்கு ஏற்றபடி தொகைச் சொல்லுக்குப் பொருள் உரைக்கப்படுகின்றது.

2.7.2.1. தொகைச் சொல்லின் உறுப்புச் சொற்கள்

மறைமலை தொகைச் சொற்களை ஆக்கும் உறுப்புச் சொற்களின் அடிப்படையில் இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபாடு செய்கின்றார்.

1.பெயர் + பெயர் என்ற அமைப்பொழுங்குள்ள தொகைச் சொற்கள்

எ.கா. பாசனத் திட்டம்

2.வினையடி + பெயர் என்ற அமைப்பொழுங்குள்ள தொகைச் சொற்கள்

எ.கா. எரிபொருள்

முதல் பிரிவில் கீழ் வரும் உள்பாகுபாடுகள் வரும்.

1. தனிச் சொல் + தனிச் சொல்

எ.கா. புயல் காற்று, போர்கருவி

2. தனிச் சொல் + ஒட்டுவழிச் சொல்

எ.கா. தொழிற் பயிற்றுநர், கள உதவியாளர், ஆவணக் காப்பாளர்

3. ஒட்டு வழிச் சொல் + தனிச் சொல்

எ.கா. அரசினர் மாளிகை, தொழிலாளர் சட்டம்

4. ஒட்டுவழிச் சொல் + ஒட்டுவழிச் சொல்

எ.கா. அஞ்சலகக் கண்காணிப்பாளர், அலுவலக உதவியாளர்

இரண்டாவது பெரும் பிரிவில் பின்வரும் உள்பாகுபாடுகள் வரும்.

1. தனிவினையடி + பெயர்

எ.கா. எரிபொருள்

2. கூட்டுவினையடி + பெயர்

எ.கா. கறுவுறு வீதம்

2.7.2.2. ஆக தொக்கி நிற்கும் தொகை

பொற்கோவைப் (1973) பின்பற்றி மறைமலை ஆக என்பதை நிலைப் பொருளில் வரும் எழாம் வேற்றுமை உருபென்று கொண்டு பின்வரும் கூட்டுகளை ஏழாம் வேற்றுமைத் தொகைகளாகக் கருதுவதாகத் தெரிகின்றது.

அடிப்படைக் கல்வி < அடிப்படை ஆக விளங்கும் கல்வி

அழைப்பிதழ் < அழைப்பாக விளங்கும் இதழ்

தடுப்புசுவர் < தடுப்பாக விளங்கும் சுவர்

தடைச் சுவர் < தடையாக விளங்கும் சுவர்

குறுக்குச் சட்டம் < குறுக்காக அமைந்த சட்டம்

2.7.2.3. வினைத் தொகை ஒரு பெயரே

மறைமலை பொற்கோவைப் பின்பற்றி பின்வரும் கருத்தைக் கொண்டிருக்கின்றார். வினைத்தொகைகள் காலங்கடந்த பெயரெச்சம் + பெயர் என்ற அமைப்பிற்பட்டதல்ல; ஏனென்றால் வினைத் தொகைகள் எச்சமாக வராது வினைப் பெயராக வருகின்றன; எனவே வினைத் தொகைக் கூட்டுகள் பெயர்+பெயர் என்ற அமைப்பைச் சார்ந்தன. வினைத் தொகையின் முதல் உறுப்பு வினைப் பெயர் என்பதற்குப் பொற்கோ (1981, 1-10) பின்வரும் வாதங்களை முன்வைக்கின்றார்.

1. வினைத் தொகையின் முதல் உறுப்பு காலங்கரந்த பெயரெச்சமல்ல; கொல் யானை என்பது 'கொல்லவல்ல யானை' அல்லது 'கொல்லும் இயல்பினையுடைய யானை' என்றோ 'கொல்லும் யானை' என்றோ பொருள்படாது. கொல்லும் யானை என்பது கொல்யானை என்று தொகைப் பட்டது என்று கொண்டால் நடக்கும் யானை என்பது நடயானை என்று ஏன் தொகைபட இயலவில்லை என்பது நோக்கத்தக்கது. எனவே வினைத்தொகையில் முதல் உறுப்பு பெயரெச்சமல்ல.

2. வினைத் தொகையின் முதல் உறுப்பு வினைவேர் அல்ல; எல்லா வினைவேர்களும் வினைத் தொகையின் முதல் உறுப்பாக அமையாது. எடுத்துக்காட்டாக, சா, பார் முதலாய வினைவேர்கள் வினைத் தொகைகளை அமைப்பதில்லை. வருத்து தொழில், பயிற்று திறன் என்னும் தொகைச் சொற்களில் முதல் உறுப்பாக வரும், பயிற்று முதலிய சொற்கள் வேர்கள் அல்ல. எனவே வேர்கள் அல்லாதவையும் வினைத் தொகையின் முதல் உறுப்பாக அமையும்.

மறைமலை ஆட்சித்துறை கோவையை அடிப்படையாகக் கொண்டு வினைத் தொகை பற்றி பின்வரும் செய்திகளைத் தருகிறார்:

1. வினைத் தொகையின் முதல் உறுப்பு காலம் கரந்த பெயரெச்சம் அல்ல. எடுத்துக்காட்டாக, *எரிபொருள்* என்பது 'எரிந்த பொருள்', 'எரிகிற பொருள்', 'எரியும் பொருள்' என முக்காலத்தையும் காட்டுவதாய்க் கூற இயலாது. 'எரிந்த பொருள்' என்ற பொருளில் எரிந்த சாம்பலையோ மிச்சத்தையோ குறிக்கவில்லை; 'எரிதலாகிய தன்மை உடைய பொருள்' அல்லது 'எரியும் ஆற்றலை உடைய பொருள்' எனப் பொருள் படும். *இழுகம்பி, இழு கயிறு, இழுபாலம், இழுவலை, ஏறுகுடல்* என்பதும் காலம் கரந்ததால் ஆனவை அல்ல என்பது பொருள் விரிக்க புலப்படும்.

2. வேற்றுமை உருபுகளை ஏற்காமல் வேற்றுமைப் பொருளை உணர்த்துகின்றது.

எ.கா.

உறிஞ்சு குழாய் - உறிஞ்சுவதற்குப் பயன்படும் குழாய்

ஊது குழல் – ஊதுவதற்குப் பயன்படும் குழல்

எழுது பொருள் – எழுதுவதற்குப் பயன்படும் பொருள்

ஓடு பாதை – ஓடுவதற்குப் பயன்படும் பொருள்

ஆடலரங்கு – ஆடுவதற்குப் பயன்படும் அரங்கு

நீராடு துறை – நீராடுவதற்கு உரிய துறை

கலந்தறி கட்டணம் – கலந்தறிவதற்குக் கட்டணம்

சுரண்டு கருவி – சுரண்டுவதற்கு உதவும் கருவி

3.செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்துவது போலத் தோற்றமளிக்கிறது.

எ.கா.

கைபற்று நிலம்– கைபற்றப்படும் நிலம்

தள்ளு வண்டி - தள்ளப்படும் வண்டி

உதைப் பந்து – உதைக்கப்படும் பந்து

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளின் புதைநிலை பின்வருமாறு அமையலாம்.

நிலத்தைக் கைப்பற்றுகிறார்கள் > கைப்பற்று நிலம்

வண்டியைத் தள்ளுகிறான் > தள்ளுவண்டி

பந்தை உதைக்கிறான் > உதை பந்து

எறிபந்து, நுகர்பொருள், புதைபொருள் என்பன இது போன்ற மேலும் எடுத்துக்காட்டுகளில் சில.

4.வினைத்தொகையானது பண்புத்தொகையோடு சில இடங்களில் ஒத்து விளக்குகின்றது.

எ.கா.

சாய்கூரை > சாய்வான கூரை

சாய்தளம் > சாய்வன தளம்

அடர் கரைசல் > அடர்த்தியான கரைசல்

அகல் சாலை > அகலமான சாலை

2.7.2.4. இருபெயரொட்டு பண்புத்தொகையின் காலத்திற்கேற்ற மாற்றம்

ஆட்சித்துறை சொற்கோவையில் இருபெயரொட்டு பண்புத்தொகை அமைப்பு காலத்திற்கேற்ப மாறுதல் அடைந்துள்ளன எனக் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக, மருத்துவக்கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளண்மைக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி, சமையற் கல்லூரி என்ற சொற்களில் கல்லூரி என்னும் பொதுப் பெயர் அதன் முன்னதாக இடம் பெறும் பெயர்ச்சொல்லால் தனது பொதுத்தன்மை நீங்கிச் சிறப்புப்பொருள் பயத்தலைக் கூறி இவை வருவதைக் குறிப்பிடுகிறார். இவை மரபு இலக்கண இருபெயரொட்டு பண்புத்தொகையான 'சாரை ஆகிய பாம்பு' என்று விரியும் சாரைப்பாம்பு போன்ற எடுத்துக்காட்டுகளிலிருந்து வேறுபடுகின்றன.

வேறு வைகையான *பெக்மடைட் பாறை, பெசீம் புல், பெர்பியின் காலம், பிட்யூட்டரி சுரப்பி, பாக் வளைகுடா, மன்னார் வளைகுடா, ஹார்ன்பிலெண்ட் தகடு, லம்பரா வலை* என்பன 'சிறப்புப் பெயர்களாக விளங்கும் பிறமொழிச் சொற்கள் + பொதுப் பெயர்கள்' என்னும் அமைப்பில் அடங்குவதையும் குறிப்பிடுகிறார். எனவே 'சிறப்புப் பெயர் + சிறப்புப் பெயர்' என்னும் அமைப்பையும் காலத்தை ஒட்டிய வளர்ச்சியாகக் கருதி இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளில் சேர்க்கவேண்டும் என்கிறார்.

2.7.3. பல்பெயர்த் தொகைச் சொல்லாக்கம்

"பல்பெயர்த் தொகைச் சொல்லாக்கம்" என்ற தமது ஐந்தாவது இயலில் மறைமலை தொல்காப்பிய உரையாசிரியர்களான நச்சினார்க்கினியரும் தொல்காப்பியரும் தொகைச் சொற்களை இரு மொழித்தொடர் என்றும் பன்மொழித் தொடர் என்றும் பிரிப்பதையும் நன்னூல் விரித்தியுரை ஆசிரியர் தொகைச் சொற்களை ஒரு தொடர்த் தொகைச் சொல் என்றும் பல் தொடர்த் தொகைச் சொல் எனவும் பிரித்துப் புலிகொல்யானை, குரங்கெறி விளங்காய் என்பனவற்றை மூன்று பொருளால் மயங்கிய பல தொடர்த் தொகைச் சொற்களுக்கு எடுத்துக்காட்டாய் தருவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

1.பெயர்+பெயரெச்ச மூலம் +பெயர்

எ.கா.

வான் ஊர் மதியம், ஆள் அமர் செல்வன், சினை அலர் வேம்பு, நெஞ்சு அழி துயர்

2. பெயர்+பெயரெச்ச மூலம் + (பெயரடை) + பெயர்

புரி அவிழ் நறும் நிலம், மறம் கொல் இரும் புலி, அன்பு கொல் மடப்பெடை, மகிழ் செய் தேம் மொழி

3. பெயர்+ பெயரெச்ச மூலம் + பெயரெச்ச மூலம் + பெயர்

தோடு அவிழ் கமழ் செல்வி

4. x+ பெயரெச்ச மூலம் + பெயர்

திரிந்து வீழ் தாடி, புலவர் வாடு நா, இனிது அமர் காதலன், முற்றிய முழங்கு அழல் முதல் வாய்ப்பாடு வேற்றுமை சார் வினைத்தொகையாக பெயர்+ வினையடி + பெயர் என்னும் வாய்ப்பாட்டில் அமையும். பல்பெயர்த்தொகை என்னும் பிற வாய்ப்பாட்டின் கீழ் வருவன பல்பெயர்த் தொகைகள் அல்ல என்றும் வாதிடுகின்றார்.

உம்மைத் தொகை தவிர் பிற பெயர்த் தொகைச் சொற்கள் அனைத்தையும் இரு சொல் தொகை என்னும் கூட்டமைப்புக்குள் என்று தெரிகின்றது. ஆட்சித்துறைச் சொற்கோவையில் இடம் பெற்றுள்ள பல்பெயர்த் தொகைகளையும் அவற்றின் வகைப்பாட்டினையும் மறைமலை விரிவாகத் தந்துள்ளார். பின்வருமாறு பல்பெயர்த் தொகைகளை வகைப்பாடு செய்கின்றார்.

2.7.3.1. பல்பெயர் வேற்றுமைத் தொகை

1.1. தொகைச் சொல் + பெயர்சொல்

1.1.1. பண்புத்தொகை + பெயர்

எ.கா.

நெளி குழாய்த் துடைப்பான் – நெளிகுழாய்க்கு உரிய துடைப்பான்

ஊட்ட உணவுத் திட்டம் – ஊட்ட உணவுத் திட்டம்

நடுத்தர வருவாய் வகுப்பு – நடுத்தர வருவாய் உடைய வகுப்பு

1.1.2. வேற்றுமைத் தொகை

எ.கா.

காட்சிக் கூடக்காவலர் – காட்சிகூடத்தினுடைய காவலர்

கால் நடை மருத்துவக் கல்லூரி – கால்நடை மருத்துவத்தைப் பயிற்றுவிக்கும் கல்லூரி

கோழிப் பண்ணை உதவியாளர் – கோழிப் பண்ணையில் பணியாற்றும் உதவியாளர்

1.1.3. வினைத் தொகை + பெயர்

புதையுயிர்த் தடம் – புதையுயிரினுடைய தடம்

சுழல்வேகமானி – சுழல் வேகத்தை அளக்கும் மானி

வெடி பொருள் கிடங்கு – வெடி பொருளுக்குரிய கிடங்கு

1.1.4. பெயர் + பண்புத்தொகை

எ.கா.

நிறம் அடர் படலம் – நிறத்தினது அடர் பலம்

நிறுவன விளக்கப் படம் – நிறுவனத்தைப் பற்றிய விளக்கப்படம்

1.1.5. பெயர் + வேற்றுமைத் தொகை

எ.கா.

வணிகத் தூதுக்குழு – வணிக நிமித்தம் தூதுக்குழு

மாவட்டச் சம்பளச் சுருக்கம் – மாவட்டத்தினுடைய சம்பளச் சுருக்கம்

1.1.6. பெயர் + வினைத் தொகை

எ.கா.

நெருக்கடி ஒதுக்கு நிதி

இயந்திரச் செய் முறை

1.2. தொகைச் சொல் + தொகைச் சொல்

1.2.1. வினைத் தொகை + வினைத் தொகை

உறிஞ்சு குழாய்த் திருகு கோல் – உறிஞ்சிக் குழாயினுடைய திருகோல்

தொற்று நோய் ஒதுக்கிடம் – தொற்று நோய்க்கு உரிய ஒதுக்கிடம்

1.2.2. வேற்றுமைத் தொகை + வேற்றுமைத் தொகை

வேலைவாய்ப்புத் தகவலகம் – வேலைவாய்ப்பு பற்றிய தகவலகம்

மருத்துவச் செலவுப் பதிவேடு – மருத்துவச் செலவு பற்றிய பதிவேடு

1.3. பெயர் + பெயர் + பெயர்

எ.கா.

விடுப்புக் கணக்குப் படிவம்

வட்டாரப் போக்குவரத்து அலுவலர்

நிதி விதித் தொகுப்பு

1.4. தொகை + பெயர் + பெயர்

1.4.1. வேற்றுமைத் தொகை + பெயர் + பெயர்

எ.கா.

ஓய்வூதிய உரிமை மாற்றம்

நீதிமன்றக் கட்டண வில்லை

1.4.2.வினைத் தொகை + பெயர் + பெயர்

எ.கா.

எழுது பொருள் கோப்பு அட்டை

செய் பணி நினைவுக் குறிப்பு

1.5. பெயர் + தொகை + பெயர்

1.5.1. பெயர் + வேற்றுமைத் தொகை + பெயர்

எ.கா.

வடக்குப் பணிமனைக் காப்பாளர்

1.5.2. பெயர் + வினைத் தொகை + பெயர்

எ.கா.

விசை மிதிவண்டி முன்பணம்

வாடகை மிதிவண்டி நிலையம்

நகரக மக்குரத் திட்டம்

2.7.3.2. பல்பெயர் பண்புத் தொகை

எ.கா.

கூர் கோபுர சாரம்

வட்டத் தரக் கலன்

வளைவு நீர்க்குழாய்

நேர்வரை முறைத் தேர்வு

நேர்வீத சமம்

நடுத்தர ஊர்தி வகைகள்

தற்காலிக அரசுப் பணியாளர்

சிறப்பு அணிவகுப்பு

சிறுதொகைக் குறிப்பேடு

2.7.3.3.பல்பெயர் வினைத் தொகை

3.1. வினையடி + தொகைச் சொல்

எ.கா.

சுழல் கண்காட்சி

இயங்குபடக் காட்சி

ஒட்டு முத்திரைத் தாள்

சுழல் அச்சுப் பொறி

3.2.வினையடி + கூட்டுச் சொல்

எ.கா.

உறிஞ்சு காற்றுப் போக்கி

மிதி காற்றாடி

3.3.பெயர்+ வினையடி + பெயர் (வேற்றுமை சார் வினைத் தொகை)

(வேற்றுமைப் பொருள்) (பெயரடை)

நாடாளுமன்றம் – நாட்டை ஆளும் மன்றம்

தீவனப் பெருக்கு அலுவலர் – தீவனத்தைப் பெருக்கும் அலுவலர்

ஆட்கொணர் ஆணை – ஆளைக் கொணதற்குரிய ஆணை

நீதி வழங்கு வங்கி – நீதியை வழங்குவதற்குரிய வங்கி

மை ஒற்று தாள் –மையை ஒற்றும் தாள்

ஐய விளை நிலம் – ஐயத்தால் விளையும் நிலம்

(இவை பெயர் + வினைத் தொகை என்னும் அமைப்பிலிருந்து வேறுபட்டவை: பெயர் + வினைத் தொகை அமைப்பில் வினைத் தொகை தனித்து வழங்கப்படுகின்றது (எ.கா. *இலவச எழுது பொருள், இயந்திரச் செயல்முறை, காப்புச் சுழல் ஏணி*)

3.3.1. பெயர் + கூட்டுவினை + பெயர்

ஆவி உண்டாக்கு கருவி – ஆவியை உண்டாக்கும் கருவி

தொழில் விரிவாக்கு அலுவலர் – தொழிலை விரிவாக்கும் அலுவலர்

தீர்வை கணக்கிடு கருவி – தீர்வையைக் கணக்கிடும் கருவி

கால்நடைக் கருவூட்டு நிலையம் – கால்நடைக்குக் கருவூட்டும் நிலையம்

3.3.2.கூட்டுப்பெயர் + வினை + பெயர்

எ.கா.

ஓய்வூதிய வழங்கு ஆணை – ஓய்வூதியத்தை வழங்குவதற்கு ஆணை

நேர்கோடு வரை கருவி

உணவுப் பொருள் வழங்கு துறை

குடிசைப் பகுதி மாற்று வாரியம்

நுரையீரல் உறை சீழ்

நிழற்பட ஒட்டு பசை

3.3.3.கூட்டுப் பெயர் + கூட்டுவினை + பெயர்

எ.கா.

ஊராட்சி விரிவாக்கு அலுவலர்

3.3.4.பெயர் + வினையடி + கூட்டுப்பெயர்

எ.கா.

நீர்வாழ் உயிரினம்

மலைவாழ் பழங்குடி

3.3.5. பெயர் + வினையடி + வினைத் தொகை

எ.கா.

நீர்பிடி வடிகால்

3.3.6.வினைத் தொகை + வினையடி + பெயர்

எ.கா.

மக்கு எருப்பெருக்கு அலுவலர்

எரிபொருள் ஊட்டு இதழ்

2.7.3.4.பல்பெயர் உம்மைத் தொகை

எ.கா.

சேரசோழ பாண்டியர்

4.2. வேற்றுமைசேர் உம்மைத் தொகை

உம்மைத்தொகை + பெயர்

எ.கா.

ஒலி ஒளி கல்வி – ஒலியாலும் ஒளியாலும் அளிக்கப்படும் கல்வி

இருபெயர் உம்மைத்தொகை + பெயர்

எ.கா.

வரவு செலவுத் திட்டம் – வரவையும் செலவையும் பற்றிய திட்டம்

தட்பவெப்பக் கட்டுப்பாடு – தட்பத்தின் மீதும் வெப்பத்தின் மீதும் செலுத்தப்படும் கட்டுபாடு

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை – நெடுஞ்சாலைக்கும் ஊரகப்பணிக்கும் உரிய துறை

நகராட்சிமன்ற உள்ளாட்சிக் கழக ஆய்வாளர் – நகராட்சி மன்றத்திற்கும் உள்ளாட்சிக் கழகத்திற்கும் உரிய ஆய்வாளர்

பால் உற்பத்திக் கால்நடை மேம்பாட்டு ஆணையர் – பால் உற்பத்திக்கும் கால்நடை மேம்பாட்டிற்கும் உரிய ஆணையர்

இலவசக் கட்டாயக் கல்வி – இலவசமாகவும் கட்டாயமாகவும் அளிக்கப்படும் கல்வி

4.3. இதர அமைப்புகள்

4.3.1. வேற்றுமைசேர் உம்மைத்தொகை + பெயர் சொல்/சொற்கள்

எ.கா.

இந்திய கணக்கு தணிக்கைப் பணியாளர் தொகுதி - இந்திய அரசினுடைய கணக்கிற்கும் தணிக்கைக்கும் உரிய பணியாளரது தொகுதி

மக்கள் பிறப்பு இறப்பு புள்ளி விவரங்கள் – மக்களினுடைய பிறப்பையும் இறப்பையும் பற்றிய புள்ளி விவரங்கள்

தமிழ் நாடு தரை கடல் விமானப் படைவீரர் நலக்கழகம் – தமிழ்நாட்டிற்குரிய தரையிலும் கடலிலும் விமானத்திலும் பணியாற்றும் படை வீரர்களுடைய நலத்திற்கென அமைந்த கழகம்

4.3.2. வினைப் பெயர் + வினைப் பெயர் + பெயர்

எ.கா.

வளர்சிதை மாற்றம் – வளர்ச்சியாலும் சிதைவாலும் ஏற்படும் மாற்றம்

ஏற்று இறக்கு நிதி – ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உரிய நிதி

2.7.4. கூட்டுச் சொல்லாக்கம்

"ஒட்டுவழிச் சொல்லாக்கம்", "தொகைச் சொல்லாக்கம்" என்ற இரண்டிலும் அடங்காது ஒரு சொல் நீர்மைத்தாக வழங்கிவரும் சொற்கள் "கூட்டுச் சொற்கள்" எனப் பெயரிடப்பட்டு ஆறாவது இயலில் ஆயப்படுவதாக மறைமலைக் குறிப்பிடுகின்றார். கூட்டுச் சொல்லைப் பிற சொல் இணைப்பாக்கங்களிலிருந்து மறமலை (1984:149) வேறுபடுத்திக் காண்கின்றார். ஒட்டுவழிச் சொல்லாக்கம், தொகைச் சொல்லாக்கம் என்னும் இரண்டு வகையிலும் சேராது சில சொற்கள் உருவாக்கப் படுகின்றன.

எ.கா.

பற்றாக்குறை, கூட்டுச் சேராக் கொள்கை, வட்டியில்லாக் கடன், தொலை நோக்கி இவற்றைத் தொடர்கள் என்றழைத்தால் பொருந்தாது. "எச்சச் சொற்கள் பெயர்களுடன் சேர்வதாலும் பெயர்ச்சொற்கள் வினையடிகளுடனும் 'இ'கர விகுதியுடனும் சேர்வதாலும் உருவாகும் இவ்வகைச் சொற்களைக் கூட்டுச் சொல் எனப் பெயரிட்டு ஒட்டுவழிச் சொல், தொகைச் சொல் என்னும் இரு பிரிவுக்குள் அடங்காத மூன்றாவது பிரிவாகக் கொள்ளுதல் பொருந்தும்." (மறைமலை 1984: 149). எதிர்மறைப் பெயரெச்சம் + பெயர் என்ற அமைப்பில் அமையும் சொற்கள் பிரித்துப் பார்க்கக் கூடாத வகையில் நிலைபேறு பெற்றுவிட்டன. (எ.கா. வாழாவெட்டி, அடங்காபிடாரி, விடியாமூஞ்சி) இவை வினைத் தொகைக்கு (எ.கா. தூங்கு மூஞ்சி) எதிர்நிலையாக விளங்குகின்றன. இவ்வகையிலான சொற்களைத் தான் கூட்டுச் சொற்கள் என மறைமலை குறிப்பிடுகின்றார்.

அ. ‘பற்றாக்குறை’ போன்ற சொற்கள்

1. தனிவினையின் செய்யா என்னும் எச்சம் + பெயர்

எ.கா.

பகாக்காரன், பற்றாக்குறை, ஈட்டா விடுப்பு, தொடரா மானியம், தொடராச் செலவு, இயங்காக் கப்பி, காணாக் குறியீடு

2. கூட்டுவினையின் செய்யா என்னும் எச்சம் + பெயர்

எ.கா.

எதிர்பாராச் செலவு நிதி, எதிர்பாராச் செலவுக் கணக்கு, முடிவுறா வேலைகள், முடிவாகச் சட்ட மூலம், இடம்பெயராச் சொத்து, உதவிபெறாப் பள்ளி, ஒளிமாறாத் தன்மை, உடன்சேராப் பாறை வெளி, எதிர்பாராச் சம்பளம், இயற்கையகலா இருப்பு, ஏற்புறாத் தொகை, திட்டமிடாஆய்வு, பதனிடாத் தோல், பதிவுறா நிறுவனம், தீராப்பிழைக் குறி

3. எதிர்மறைச் செய்யப்பாட்டு வினைப்பெயரெச்சம் + பெயர்

உடுக்குறி இடப்படா வினா, பயன்படுத்தப்படாக் காரணி, கொடுக்கப்படாச் சம்பளப் பதிவேடு

ஆ. ‘கூட்டுச்சேராக் கொள்கை’ போன்ற சொற்கள்

4. பெயர் + செய்யா என்னும் எச்சம் + பெயர்

எ.கா.

அரசிதழ் பதிவுறா அலுவலர் – அரசிதழின் கண் பதிவுறா அலுவலர்

உள்நாட்டு வற்றா நீர்நிலை – உள்நாட்டில் அமைந்த வற்றா நீர்நிலை

அளவு விஞ்சாவிளைவு – அளவினை விஞ்சா விளைவு

ஒப்புதல் பெறா வராமை – ஒப்புதலைப் பெறா வராமை

இ. 'வட்டியில்லாக்கடன்' போன்ற சொற்கள்

வட்டியில்லாக்கடன், நாளமில்லாச் சுரபி, கம்பி இல்லாத் தந்தி, ஆளில்லாச் சொத்து, சம்பளமில்லா விடுப்பு, அரசிதழ் பதிவிலா அலுவலர், சுங்கவரியில்லா வணிகம், வரம்பிலா உரிமை, வங்கியில்லாக் கருவூலம்.

ஈ. 'தொலை நோக்கி' போன்ற சொற்கள்

6. பெயர் + வினையடி +இ

எ.கா.

பளுதூக்கி (பழுவம் தூக்கும் கருவி), வெப்பம் தாங்கி (வெப்பத்தைத் தாங்கும் கருவி),

திசைகாட்டி (திசையைக் காட்டும் கருவி), படிபெருக்கி (படியைப் பெருக்கும் கருவி) புகை போக்கி, பூச்சிக் கொல்லி, மின் இயக்கி, பால் வடிகட்டி, மின் கடத்தி, மின் தூண்டி, சீர் வெட்டி (சீராக வெட்டும் கருவி), சம செதுக்கி (சமமாகச் செதுக்கும்கருவி), காற்றழுத்தி

கூட்டுப்பெயர் + வினையடி + இ

மின்னாற்றல் மாற்றி, மின்னோட்ட மாற்றி, காந்த இசை இயக்கி, மின்னாற்றல் சுருக்கி, இடைநில நீர்த்தாங்கி, மின்சாரக் குப்பி குறுக்கி.

2.8. செம்மொழித் தமிழின் நோக்கீட்டு இலக்கணம்

ராஜம் அவர்களின் "**செம்மொழித் தமிழின் நோக்கீட்டு இலக்கணம்**" (A reference grammar of Classical Tamil, Rajam 1992) என்ற நூல் இவ்வாய்வேட்டிற்கு முக்கியத் நோக்கீட்டு நூலாகவும் தரவாகவும் அமைகின்றது. செம்மொழித் தமிழின் இலக்கணத் மொழியியல் கோட்பாடு அடிப்படையில் இந்நூல் விரிவாக விளக்குகின்றது. அவர் தமது தரவுகளை ஐங்குறுநூறு, அகநானூறு, சிலப்பதிகாரம், சிற்பாணாற்றுப் படை, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, குறுந்தொகை, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, மணிமேகலை, முல்லைப்பாட்டு, முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுநெல்வாடை, பரிபாடல், பரிபாடல் திரட்டு, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப் படை, புறநானூறு, திருமுருகாற்றுப் படை என்ற இலக்கியங்களிலிருந்து எடுத்துக்கொண்டு செம்மொழித் தமிழுக்கு வருணனை மொழியியல் விளக்கம் தருகின்றார். ராஜம் இந்நூலை எட்டு இயல்களாகப் பகுத்துக்கொண்டு செம்மொழித் தமிழின் இலக்கணத்தை விளக்குகின்றார். பெயரைக் குறித்த மொழியியல் விளக்கங்கள் எல்லா இயல்களிலும் விரவிக்கிடக்கின்றன. எனவே இந்நூல் முழுவதும் குறித்த விளக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.

முதல் இயல் ஓர் அறிமுகம் போல அமைகின்றது. இதில் அறிமுகம், ஆய்வுநெறிமுறை, ஆக்கநுட்பம், ஒலியனியல், உருபொலியனியல், செம்மொழித் தமிழின் கோட்பாடு, ஒலிகளின் நீட்சி (அளபெடை) மற்றும் உயிர்மயக்கங்கள், இட-எண்-பால், ஒருமை-பன்மை என்பன குறித்து விளக்கப்படுகின்றது.

இரண்டாவது இயல் பொதுவாகச் செம்மொழித் தமிழின் பெயர்ச் சொற்களைப் பற்றி வருணனை மொழியியல் கோட்பாடு அடிப்படையில் ஆகின்றது. இவ்வியல்

இவ்வாய்வுக்குத் தேவையான பல தகவல்களையும் தரவுகளையும் கொண்டுள்ளது. இது பெயர்கள், மாற்றுப் பெயர்கள், திரிப்புற்ற பகுதிகள், வேற்றுமை உருபுகள் மற்றும் பின்னுருபுகள், இடைச்சொற்கள், பெயரடைகள் மற்றும் பெயர் விசேடணங்கள், எண்கள், கூடுகள் மற்றும் உலகப்பொதுமைகள், கூட்டுப் பெயர்கள், பெயரடைப்பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்கள் என்பன பற்றி விரிவாக விளக்குகின்றது.

மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய நான்கு இயல்களும் பொதுவாக செம்மொழித் தமிழின் வினைச் சொற்கள் பற்றி வருணனை மொழியியல் கோட்பாடு அடிப்படையில் ஆய்கின்றது.

மூன்றாவது இயல் பொதுவாக வினைப் பகுதிகள் பற்றி விளக்குகின்றது. இது ஒலியனியல் அடிப்படையிலான பகுதி வகைப்பாடு, கூட்டு வினைப் பகுதி, காரணப் பகுதி, செயப்பாட்டுப் பகுதி, இறந்தகாலப் பகுதி, இறந்தகாலமல்லாப் பகுதி என்பன குறித்து விளக்குகின்றது.

நான்காவது இயல் பொதுவாக வினை முற்றுகள் பற்றி ஆய்கின்றது. இறந்தகால மூவிட வினைகள், இறந்தகாலமல்லா மூவிட வினைகள், எதிர்மறை மூவிட வினைகள், இறந்தகால வினையாலணையும் பெயர்கள், இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர்கள், எதிர்மறை வினையாலணையும் பெயர்கள், தொழிற்பெயர்கள், இறந்தகாலமல்லாத் தொழிற்பெயர்கள், எதிர்மறைத் தொழிற்பெயர்கள் என்பன குறித்து ஆய்ந்து விளக்குகின்றது.

ஐந்தாவது இயல் எச்சங்களைப் பற்றிய குறிப்பு, இறந்தகாலப் பெயரெச்சம், இறந்தகாலமல்லாப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், வினையெச்சம், எதிமறை

வினையெச்சம், செயவெச்சம், எதிர்மறை செயவெச்சம், கட்டுப்பாடு, எதிர்மறைக் கட்டுப்பாடு, காரணம், உண்மையின் சலுகை, ஊகத்தின் சலுகை, எச்சமல்லாத எச்சங்கள் என்பன பற்றிவிளக்குகின்றது.

ஆறாவது இயல் வினைப் பாங்கு பற்றிய குறிப்பு, ஏவல்/வியங்கோள், எதிர்மறை ஏவல்/வியங்கோள், சாத்தியம், கேள்வி, அல், இல் எதிமறை, ஆ பற்றிய குறிப்பு, ஆன் பற்றிய குறிப்பு என்பன பற்றி விளக்குகின்றது.

ஏழாவது இயல் வினையடைகள், ஒப்பீடு, ஒலிக்குறிப்புச் சொற்கள், ஆகுபெயர் மற்றும் உருவகம், உதிரிகளைப் பற்றிய குறிப்புகள், சில செய்யுள்களின் பகுப்பாய்வு என்பன பற்றி விளக்குகின்றது.

எட்டாவது இயல் பின்னிணைப்பாகும். இதில் பின்னொட்டுகள் முதலானவை, இடைச் சொற்களின் பட்டியல், மாற்றுப் பெயர்களின் பட்டியல் என்பன தரப்பட்டுள்ளன.

இந்நூலை மறுசீராய்வு செய்வது இவ்வியலின் நோக்கமல்ல. தற்போதைய ஆய்வைப் பொருத்தவரையில் இரண்டாவது இயலும் நான்காவது இயலும் முக்கியமாக அமைகின்றது. இதில் கூறப்படும் செய்திகள் இவ்வாய்வுக்கு உறுதியான அஸ்திவாரமாக அமைகின்றது.

2.9. தமிழில் சொல்லாக்கம்

இராசேந்திரனின் தமிழில் சொல்லாக்கம் (இராசேந்திரன், 2004) தற்போதைய ஆய்வின் முன்னோடியான ஆய்வுநூலாகவும் நோக்கீட்டு நூலாகவும் அமைகின்றது. இது தமிழில் சொல்லாக்கம் குறித்த ஒரு முழுமையான நூலாக அமைகின்றது. பத்து இயல்களில் தமிழில் சொல்லாக்கம் குறித்து விரிவாகப் பேசுகின்றது.

முதல் இயல் முன்னுரையாகும். இதில் முக்கியமாக இவ்வாய்வின் ஊகங்களும் நோக்கங்களும் சொல்லாக்கம் பற்றிய ஒரு சுருங்கிய வரலாறும் விளக்கப்படுகின்றன. இரண்டாவது இயல் "சில அடிப்படை கருத்துகள்" என்பதாகும். இவ்வியல் சொற்களும் சொல்லாக்கமும், சொல், சொல்வடிவு, சொல்லன், உருபன், உருபு, மாற்றுருபு, கட்டுருபு, தனி உருபு, ஒட்டு, வேர், பகுதி, அடி, திரிபும் ஆக்கமும், கூட்டு, உள்வட்ட, வெளிவட்ட, நேரியைபு, உம்மைத் தொகை கூட்டுகள், வகுப்பு காத்தல் மற்றும் வகுப்பு மாற்றல், மாற்றம், சுருக்கம், எல்லைகோடுகளின் பற்றாக்குறை, கூட்டாக்கமும் ஆக்கமும், ஆக்கமும் திரிபும் போன்ற சொல் மற்றும் சொல்லாக்கம் அடிப்படையிலான சில அடிப்படை கருத்துக்களை விளக்குகின்றது.

மூன்றாவது இயல் "சொல் நிலையாக்கம்" பற்றியதாகும். இதில் சொல்லின் வரலாற்றை மீட்டறிதல், திடீர் வடிவாக்கம், அமைப்பு முறைக்கு உட்படுத்தல், சொல் நிலையாக்கம், சொல் நிலையாக்க வகைகள் (ஒலியனியல் சொல் நிலையாக்கம், உருபனியல் சொல் நிலையாக்கம், பொருண்மையியல் சொல் நிலையாக்கம், தொடரியல் சொல் நிலையாக்கம், ஒன்று கலந்த சொல் நிலையாக்கம்) என்பன விளக்கப்படுகின்றன.

நான்காவது இயல் விளைவாக்கம் பற்றியதாகும். இதில் விளைவாக்கம் உள்ளமை, விளைவாக்கமும் படைப்பாக்கமும், ஒரே கால அடிப்படையிலான மற்றும் கால மாற்றம் அடிப்படையிலான விளைவாக்கம், தொடரியல் மற்றும் உருபனியல் விளைவாக்கம், விளைவாக்கம் பற்றிய ஆய்வுகளின் சிக்கல்கள், சாம்ஸ்கியின் விளைவாக்கம், உள்ளமைப்பு, தற்போக்கு, நிரப்பிகள், குறைவிளைவாக்கம், விளைவாக்கத்தில் சில கட்டுப்பாடுகள் என்பன குறித்து பேசப்படுகின்றன.

ஐந்தாவது இயல் "சொல்லாக்கத்தில் ஒலியனியல் பிரச்சினைகள்" என்பது பற்றியதாகும். இதில் கூட்டுகளும் அசை அழுத்தமும், விட்டிசை மற்றும் இடம் விட்டு எழுதுகை, சொல்லசை அமைப்பு, சொல்லாக்கத்தின் கூறு மாறுபாடு (கூட்டாக்கப் புணர்ச்சி விதிகள்), கூட்டாக்கப் புணர்ச்சி விதியும் தொடராக்கப் புணர்ச்சியும்) என்பன குறித்து பேசப்படுகின்றது.

ஆறாவது இயல் "சொல்லாக்கத்தில் தொடரியல் மற்றும் பொருண்மையியல் பிரச்சினைகள்" என்பது பற்றியதாகும். இதில் சொல்லாக்கத்தில் வாக்கியத்தை மூலமாக எடுத்துக்கொள்வது, வினைப்பாங்கு, கூட்டில் அக நிலை வினை, தொடரியல் வரையறைகள், தொடரடி வகைபாடு, சொல்லாக்கத்தில் பொருள் திட்டவட்டம், சொற்பதிவுகள் என்பன பற்றி பேசப்படுகின்றன.

ஏழாவது இயல் தமிழில் சொல்வகைப்பாடு என்பதாகும். இதில் மரபிலக்கணச் சொல் வகுப்புகள், தற்காலத் தமிழுக்கான சொல் வகுப்புகள் என்பன பற்றி விளக்கப்படுகின்றது.

எட்டாவது இயல் தமிழில் சொல்லாக்க வகைப்பாடு என்பதாகும். இதில் கூட்டாக்கம் (கூட்டுப் பெயர்கள், கூட்டுவினைகள், கூட்டுப் பெயர்கள், கூட்டுவினைகள்), முன்னொட்டாக்கம், மாற்றம், பின்னாக்கம், கத்திரிப்பாக்கம், கலப்பாக்கம், தலைப்பெழுத்தனாக்கம், சொல் உருவாக்கம் போன்ற பல்வகையான சொல்லாக்க முறைகள் பற்றி விளக்கப்படுகின்றது.

ஒன்பதாவது இயல் தமிழில் சொல்லாக்கத்தின் பரிமாணம் பற்றியதாகும். இதில் பெயராக்கம், வினையாக்கம், பெயரடையாக்கம், வினையடையாக்கம் என்பன குறித்து விரிவாக விளக்கப்படுகின்றது.

பத்தாவது இயல் முடிவுரை ஆகும். இதில் சொல்லாக்கம் பற்றிய நெறிகள் மற்றும் கோட்பாடுகளில் ஒருமித்த கருத்தின்மை, சொல்லாக்கம் பற்றிய ஆய்வின் தொய்வும் உய்வும், சொல்விளைவாக்கமும் சொல் நிலையாக்கமும், சொல்லாக்கத்தில் பிரச்சினைகள், தமிழில் சொல் வகைப்பாடு, தமிழில் சொல்லாக்க வகைபாட்டு, தமிழில் சொல்வாக்கம் என்பன பற்றி முடிவுரை விளக்கங்கள் தரப்பட்டுள்ளது.

ஒன்பதாவது இயலில் பெயராக்கம் பற்றி இந்நூலில் கூறப்படும் செய்திகள் இவ்வாய்வேட்டிற்கு மிக பயனுள்ளனவாய் அமைகின்றது. இத்தலைப்பில் தமிழில் காணப்படும் பின்னொட்டாக்கம், கூட்டுப் பெயராக்கம் என்பன பற்றி விரிவான விளக்கம் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. கூட்டுப் பெயராக்கத்தில் கூட்டுப் பெயராக்கம் பற்றிய தொல்காப்பியர் அணுகுமுறை, இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்ற தொல்காப்பிய உரையாசிரியர்களின் பார்வை, தொகைகளின் பொருள் விளக்கம் குறித்த ஒட்டுமொத்தமான பார்வை, நன்னூலின் அணுகுமுறை, விஜய வேணுகோபால் பார்வையில் கூட்டுப் பெயராக்கம், சொற்சேர்க்கை குறித்த மறைமலையின் அணுகுமுறை என்பன பற்றி விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெயராக்கம் பற்றிய இவரது சுருக்கவுரை பின்வருமாறு அமைகின்றது.

பெயராக்கத்தைப் பெயர்களை ஆக்கப்படும் சொல் வகைப்பாடுகளின் அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம்.

1) பெயரிலிருந்து பெயராக்கம்.

2) வினையிலிருந்து பெயராக்கம்

3) பெயரடையிலிருந்து பெயராக்கம்

இவற்றுள் வினையிலிருந்தான பெயராக்கம் முக்கியமாகக் கடுத்தத் தக்கது.

பெயராக்கத்தைப் பெயர்கள் ஆக்கப்படும் செயற்பாடு அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம்.

1) பின்னொட்டுப் பெயராக்கம்

2) முன்னொட்டுப் பெயராக்கம்

3) கூட்டாக்கம்

இவற்றுள் கூட்டுப் பெயராக்கம் முக்கியமாகக் கருதத்தக்கது. முன்னொட்டாக்கம் விளைவாக்கம் உள்ளது அல்ல. பெயரிலிருந்தான பெயராக்கத்தில் பின்வருவன முக்கியமான ஆக்கவகைகள்.

1.உயர்திணைப்பெயராக்கம்

1. காரன்/காரி/காரர் ஆகிய ஒரு குழும ஒட்டுகளான ஆக்கம்.

2. ஆளர்/ஆள்/ஆளி ஆகிய ஒரு குழும ஒட்டுகளான ஆக்கம்.

3. தார்/தாரி ஆகிய ஒரு குழும ஒட்டுகளான ஆக்கம்.

2. உயர்திணை அல்லாப் பெயராக்கம்

2. அகம், இயல் ஆகிய கட்டுருபன்களாலான ஆக்கம்

வினைப் பெயராக்கங்களில் *அல்/தல்/கை* ஒட்டாக்கப் பெயராக்கமும் பெயரெச்ச வடிவுகளின் மீதான ஒட்டாக்கங்களும் வினையின் பங்கெடுப்பாளர் அமைப்பை தக்கவைப்பன. இவை வினையடிகளின் தொடரியல் பண்புகளையும் தக்கவைக்கும். எல்லா வினையடிகளும் சீரான ஒட்டுக்களை ஏற்கும். இவ்வொட்டுகளால் ஆக்கப்பட்ட

பெயர்களின் பொருண்மையை முன்கணிப்பு செய்யலாம். வினையிலிருந்து பெயர்களை ஆக்கும் செயல்பாட்டை பின்வருமாறு கிளைப் படத்தில் காணலாம்.



சீரற்ற ஆக்கங்கள் (அதாவது *அம், வ், ப* போன்ற ஒட்டுக்களின் ஆக்கங்களும், ஒலியன் வடிவ மாற்ற ஆக்கங்களும் வடிவம் மாறா ஆக்கங்களும்) பங்கெடுப்பாளர் அமைப்பைத் தக்க வைக்காதவை. மேலும் இவை வினையடிகளின் தொடரியல் பண்புகளையும் தக்கவைக்காதன. சீரற்ற ஒட்டுகள் எல்லா வினையடிகளுடனும் சேராது. இதனால் ஆக்கப்பட்ட பெயர்களின் பொருண்மையை முன்கணிப்பு செய்ய இயலாது.

2.10. சங்க இலக்கியக் கூட்டுச்சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்)

லெட்சுமணன் எழுதி வெளியிட்ட சங்க இலக்கியக் கூட்டுச்சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்) என்ற நூல் இங்கு குறிப்பிடத் தக்க நூலாகும். இவர் நூலின் தலைப்பு சங்க இலக்கிய கூட்டுச் சொற்கள் எனப் பெயரிடப்பட்டிருந்தாலும் இவர் கூட்டுப் பெயர்களை மட்டுமே இந்நூலில் எடுத்துக்கொண்டு விளக்குகின்றார். இவர் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், பிரயோக விளக்கம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்ற இலக்கணங்களையும் அகநானூறு, புற்நானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, நற்றிணை, பரிபாடல் ஆகிய எட்டுதொகை நூல்களையும் திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டிணப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்துப் பாட்டு நூல்களையும் முதன்மைத் தரவுகளாகவும் ஆய்வுப்பொருளுடன் தொடர்புடைய நோக்கீட்டு நூல்கள், நிகண்டுகள், ஆய்வேடுகள் கட்டுரைகள் போன்றவற்றைத் துணைத் தரவுகளாகவும் கொண்டு இந்நூலை எழுதியுள்ளார்.

முன்னுரை, முடிவுரை நீங்கலாக இந்நூல் ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டு செய்திகள் தரப்பட்டுள்ளன. முன்னுரையில் தலைப்புத் தெரிவு, ஆய்வு அணுகுமுறை, ஆய்வுக்களம், ஆய்வுத் தரவுகள், ஆய்வேட்டின் அமைப்பு, இயல் பகுப்பு, இயல் செய்திகள், பின்னிணைப்பு என்பன குறித்த செய்திகள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

இயல் ஒன்று "மரபிலக்கணங்களில் கூட்டுச் சொற்கள்" என்பதாகும். இதில் தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் வரையிலான மரபிலக்கணங்களில் இடம்பெற்றுள்ள

தொகை குறித்த செய்திகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. மரபிலக்கணங்கள் இருவகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம் போன்றன முதல் வகையிலும் வீரசோழியம், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து போன்றன இரண்டாம் வகையிலும் அடங்கும். முதல் வகை இலக்கணக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளும் இரண்டாம் வகை இலக்கணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாராம்சங்களும் மொழியியல் மற்றும் சொற்பொருண்மை நோக்கில் பல்வேறு அணுகுமுறைகளில் விவாக விளக்கப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்விரு இலக்கணங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் வெளிப்படுத்தும்.

எண்	முதல்வகை இலக்கணம்	இரண்டாம் வகை இலக்கணம்
1	வேற்றுமைத் தொகை	தற்புருட சமாசம்
2	பண்புத் தொகை	கன்மதராய சமாசம்
3	உம்மைத் தொகை	துவந்துவ சமாசம்
4	அன்மொழித் தொகை	வெகுவெரீகி சமசம்
5	உவமத்தொகை	-
6	வினைத் தொகை	-
7		அவ்வியய்யீபாவ சமாசம்
8		துவிகு சமாசம்

இருவகை இலக்கணங்களின் கருத்துப்படி பெயரோடு பெயரும் பெயரோடு வினையும் சேர்ந்து ஒரு மொழி (சொல்) போல் நடப்பது தொகையாகும்.

இரண்டாவது இயல் "கூட்டுச் சொற்களின் அமைப்பும் வகைப்பாடும்" என்னும் தலைப்பில் அமைகின்றது. இதில் சொற்பொருண்மை சார்ந்த விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. சொற்பொருண்மைக் கூறுகளான கருத்துப் பொருள், குறிப்புப் பொருள், பயன்பாட்டு எல்லை என்பன எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. சொற்பொருள் உறவுநிலையில் பலபொருள் சொற்கள், ஒருபொருள் பன்மொழிகள், மீச்சொல்-உட்சொல், ஒப்புருச் சொற்கள், புலச் சொற்கள், பொருள் வகைகள் என்பன போன்ற செய்திகள் கூட்டுச் சொல் சான்றுகளுடன் விரிவாகத் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. சொல்திரிபு, ஆக்கம், கூட்டாக்கம் போன்ற சொல்லாக்கங்கள் விரிவாக விளக்கப்பட்டுத் தொடர்புபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. தேவை ஏற்படுமிடத்து சங்க இலக்கியத்துள் காணப்பெறும் கூட்டுச் சொற்கள் விளக்கப்பட்டு ஒப்பாய்வு முறையில் சொற்பொருண்மைக் கூறுகளுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. மேலும் இயல்புச் சொற்சேர்க்கை, கூட்டுச் சொற்சேர்க்கை என்பன குறித்த சுகுஸ்தா வழங்கியுள்ள பன்னிரண்டு வழிமுறைகளும் சுருக்கமாக எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. விசயவேணுகோபாலின் பெயர்க் கூட்டுகள் தொடர்பான செய்திகள் குறிப்பாக வேற்றுமைப் பொருள்கள் செயப்படுபொருளுடன் வரும் தன்மை இவ்வியலின் பிற்பகுதியில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இயல் "சங்க இலக்கிய கூட்டுச் சொற்களின் அமைப்பும் செயல் பாடும்" என்ற தலைப்பில் அமைந்துள்ளது. இதில் சங்க நூற்களில் இடம் பெற்றுள்ள கூட்டுச் சொற்கள் அமைப்பு, இலக்கணம், பொருள் என்னும் நோக்கில் மூன்று பெரும் வகைகளாகப் பிரிக்கப் பெற்று ஆராயப்பட்டுள்ளன. இவ்வியலில் இருசொல், முச்சொல், நான்கு சொல் மற்றும் தொடர்க் கூட்டுச் சொற்கள் என்பன எடுத்துக்காட்டுகளுடன்

விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இலக்கண அடிப்படையிலான வகைப்பாட்டில் கூட்டுச் சொற்களில் இடம்பெறும் தனிச் சொற்களின் இலக்கணக் கூறுகள் கண்டறியப்பட்டு வகை செய்யப்பட்டுள்ளன. கூட்டுச் சொல் இணவுகளாக முன் சொல், பின் சொல், இரு சொல், நடுச் சொல் ஒப்புகளும் அவற்றின் பொருள் விரிவும் சங்க இலக்கிய சான்றுகளுடன் ஆராயப்பட்டுள்ளன. இவ்வியலின் பிற்பகுதியில் கூட்டுச்சொற்கள் அவற்றின் பொருள் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பகுத்துக் காட்டப்பட்டுள்ளன.

நான்காவது இயல் "சங்க இலக்கியக் கூட்டுசொற்களின் பொருள் வெளிப்பாடு" என்ற தலைப்பில் அமையும். இவ்வியலில் கூட்டுச் சொற்களின் பொருள் வகைகள், குறிப்பாக அடிப்படைப் பொருள், நேர் பொருள், தலைமைப் பொருள், சூழல் பொருள், அணிநயப் பொருள், உருவகம், ஆகுபெயர், சிறப்புப் பொருள் என்பன குறித்த ஆய்வுச் செய்திகள் கூட்டுச்சொல் மற்றும் தனிச்சொல் சான்றுகளுடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. கூட்டுச் சொற்களில் இடம் பெறும் தனிச் சொற்கள் முன், பின் சொற் சூழல்களால் பெறும் பொருள் மாற்றங்கள் குறித்த செய்திகள் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது இயல் "சங்க இலக்கியக் கூட்டுச் சொற்களும் பொருள் புலப்பாடும்" என்ற தலைப்பில் அமைகின்றது. இதில் கூட்டுச் சொற்கள் சார்ந்துள்ள பொருட் புலங்கள் விரிவாக வகைப்படுத்தப்பட்டுச் சங்க இலக்கியச் சான்றுகளுடன் ஆராயப்பட்டுள்ளன. தெய்வம், வானியல், கோள்கள், ஐம்பூதங்கள், காலம், தொழில், பறவை-விலங்குகள் தொடர்பான பொருட்புலங்கள் துணைப் புலங்களுடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புலத்திலும் இடம்பெறும் ஒருபொருட் பன்மொழிகள், மீச்சொல் உட்சொல்

என்பன பொருள் மற்றும் வருகை இட எண்ணிக்கையுடன் தொகுத்துப் பட்டியலிடப்பட்டுள்ளன.

முடிவுரையில் இந்நூலில் ஐந்து இயல்களிலிருந்தும் பெறப்பட்ட முடிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இந்நூலின் தரப்பட்டுள்ள மூன்று பின்னிணைப்புகளும் நல்ல தரவு மூலமாக அமைகின்றன. முதல் பின்னிணைப்பில் சங்க இலக்கியக் கூட்டுசொற்கள் இரு சொல் கூட்டு, முச்சொல் கூட்டு, நான்கு சொல் கூட்டு, ஐந்து சொல் கூட்டு மற்றும் தொடர் கூட்டு என்னும் வரிசையில் அகரவரிசைப் படுத்தப்பட்டுத் தரப்பட்டுள்ளன. கூட்டுச் சொற்களின் இலக்கணம் மற்றும் பொருள் வகைபாட்டு எண்களும் வருகை இடங்களும் இப்பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளன. பின்னிணைப்பு இரண்டில் கூட்டுச் சொற்களின் முன் சொற்கள் தரப்பட்டு அவற்றுடன் இணைந்து வரும் பின்சொற்கள் அட்டவணைப் படுத்தப்பட்டு தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பு மூன்றில் பொருட்புலங்களும் அவற்றிற்கான ஒருபொருட் பன்மொழிகளும் வருகை எண்ணிக்கையுடன் வரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

2.11. சுருக்கவுரை

தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய முக்கியமான முன்னோடியான ஆய்வுகளின் சுருக்கம் இவ்வியலில் தரப்பட்டுள்ளது. "தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள்" என்ற தலைப்பில் சண்முகம் அவர்கள் எழுதிய "திராவிடப் பெயர்கள்' என்ற நூல் குறிப்பிடத் தகுந்த முன்னோடியான ஆய்வு நூலாகும். அடுத்தப்படியாகக் கமலேஸ்வரன் அவர்களின் "தமிழில் பெயர்கள்" என்ற முனைவர் பட்ட ஆய்வேடு மிகச் சிறப்பான முன்னோடியான ஆய்வாக அமைகின்றது. இவர் கால அடிப்படையில் தமிழில் பெயர்ச்சொற்களின் ஆக்கத்தை ஆய்கின்றார். வரலாற்று காலத்தைச் சங்ககாலம், பின்

சங்ககாலம் எனப் பிரித்துக்கொண்டு வரலாற்று விளக்கம் தருகின்றார். இவர் சங்க இலக்கியங்களிலிருந்து தற்காலத் தமிழ் நூல்கள் மாற்றும் கிளை மொழிகள் வரையிலான தரவுகளின் அடிப்படையில் தமிழ்ப் பெயர்களின் ஆக்கத்தை ஆய்ந்து விரிவான விளக்கம் தருகின்றார். தமிழில் பெயர்த் தொகை ஆக்கம் என்ற விஜய வேணுகோபால் அவர்களின் நூல் மற்றொரு முக்கியமான முன்னோடியான ஆய்வாகும். இவர் மாற்றிலக்கணக் கோட்பாடு அடிப்படையில் தொகைப் பெயராக்கங்களை ஆய்கின்றார். "சொல்லியல்: பெயரியல்" என்ற அகத்தியிலிங்கம் அவர்களின் நூலும் குறிப்பிடத் தகுந்த முன்னோடியான ஆய்வு நூலாகும். "ஆட்சிச் சொல்லுக்குச் சிறப்புக் குறிப்புடன் தற்காலத் தமிழ்ச் சொல்லாக்கம்" என்ற தலைப்பில் அமையும் மறைமலை அவர்களின் முனைவர் பட்ட ஆய்வேடு தற்காலத் தமிழின் சொல்லாக்கம் (குறிப்பாகப் பெயராக்கம்) குறித்த வருணனை மொழியியல் அடிப்படையில் அமையும் மிக முக்கியமான முன்னோடியான ஆய்வாகும். "தமிழில் சொல்லாக்கம்" என்ற தலைப்பில் அமையும் இராசேந்திரன் அவர்களின் நூல் பெயராக்கம் பற்றிய மிக முக்கியமான ஆய்வுகளில் ஒன்றாகும். இது தற்காலத் தமிழ் விரிதரவுகள் அடிப்படையில் பெயரக்கம் பற்றி விளக்குகின்றது. லட்சுமணன் அவர்களின் "சங்க இலக்கியக்கூட்டுச்சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்)" என்ற ஆய்வு கூட்டுச் சொற்கள் பற்றிய மிக முன்னோடியான ஆய்வுகளில் ஒன்றாகும். இவர் மரபிலக்கணப் பின்னணியில் பெயர்ச்சொற் கூட்டாக்கங்களுக்கு விளக்கம் தருகின்றார்.

இயல் 3

மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்ச்சொற்கள்

3.1. முன்னுரை

தமிழ்ப் பெயர்களை வரலாற்று மொழியியல் அடிப்படையில் ஆய்வதற்கு முன் பழந்தமிழ் தரவுகள் அடிப்படையில் எழுதப்பட்ட மரபிலக்கணங்கள் தமிழ்ப் பெயர்களைப் பற்றி எத்தகைய விளக்கங்களைத் தருகின்றன என்று அறிந்துகொள்வது மிக இன்றியமையாதது ஆகின்றது. இதன் காரணமாக 'மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்கள்" என்ற தலைப்பில் இவ்வியலில் தொல்காப்பியம், நன்னூல் போன்ற சில முக்கியமான மரபிலக்கணங்களிலும் தொடர்புள்ள உரைகளிலும் தமிழ் பெயர்குறித்து தரப்பட்டுள்ள செய்திகளையும் விளக்கங்களையும் இங்கு சுருக்கமாகத் தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

எழுத்துகள் இணைந்து சொல் உண்டாகும். சொல்லை நான்கு வகைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடும். அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன. ஒன்றின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் ஆகும். *கந்தன், ஊர், கண்* என்பவை பெயர்ச்சொற்கள். பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபேற்று வரும். இவை கால ஒட்டுகளை ஏற்கும் வினைச் சொற்களிடம் இருந்து வேறுபடும். இக்கால இலக்கணத்தில் பெயரடைகள், வினையடைகள் என்று குறிப்பிடப்படும் சொற்கள் யாவும் பெயர்களிலிருந்தும் வினைகளிலிருந்தும் ஆக்கப்பட்டவையாகும்.

ஓர் எழுத்து தனித்து நின்றோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்து நின்றோ பொருள் தந்தால் அது சொல் எனப்படும். தமிழில் 'மொழி', 'கிளவி', 'சொல்', 'பதம்' ஆகியவை சொல்லைக் குறிக்கும் வேறு சொற்கள் ஆகும். சொல்லுக்கு வடிவம் உண்டு. சொல் பொருளைக் குறிப்பது. சொல்லின் அமைப்பு இறுக்கம் ஆனது; கட்டுக்கோப்பு

உடையது. சொல் அடிச்சொல்லையும் ஒட்டுகளையும் கொண்டது. சொற்களைக் கொண்டு தொடர் எனப்படும் வாக்கியம் அமைக்கலாம். ஆனால் வாக்கியம் அவ்வளவு இறுக்கம் உடையது அல்ல. ஒரு சொல்லின் பொருள் அவை பயன்படுத்தப்படும் இடத்தை ஒட்டி அமையும். *நான், நீ, அவன்* என்பவை இடத்தை ஒட்டிப் பொருள் தருகின்றன.

சொற்களை உணர்வு நிலையில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று பகுக்கும் முறை தமிழ் இலக்கணங்களில் உள்ளது. தமிழகத்தில் இயல்பாக வழங்கும் சொல் இயற்சொல் ஆகும். *நிலம், நீர், தீ, காற்று, சோறு, கூழ், பால், தயிர், கழுகு* என்பவை எல்லாம் இயற்சொற்களாகும். சொல் முழுவதுமே மாறி ஒலித்தாலும் ஓர் எழுத்து மாறி ஒலித்தாலும் அது திரிசொல்தான். திரிதல் என்றால் 'மாறி அமைதல்' என்று பொருள் தரும். திரிசொல்லை இரண்டு வகையாகத் தொல்காப்பியம் பகுக்கிறது. ஒரு பொருளைப் பற்றி வரும் பல சொல், பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல் என்பனவே அவை. *மலை* என்ற ஒரு பொருளைக் குறிப்பிட *வெற்பு, விலங்கல், விண்டு* என்று பல சொற்கள் வருவதும் *எகினம்* என்ற ஒரே சொல் *அன்னம், கவரிமான், நாய்* என்று பல பொருளைக் குறிப்பதும் இந்த இருவகைத் திரிசொல்லுக்கும் சான்று ஆகும்.

வடசொல் என்பது சம்ஸ்கிருத மொழிச் சொல்லைக் குறிக்கும். அதை அம்மொழி எழுத்தால் எழுதாமல் தமிழ், வடமொழி என்னும் இரண்டுக்கும் பொதுவான எழுத்தால் எழுதுவது வடசொல்.

தமிழ்ச் சொல்		வடசொல்
கடல்	-	வாரி
மலை	-	மேரு

நாளடைவில் ‘கடல்’ என்ற தமிழ்ச் சொல்லும், ‘வாரி’ என்ற வடசொல்லும் கடலைக் குறிக்கப் பயன்படுவதாயின. தொல்காப்பியச் சொல் அதிகாரத்தில் இத்தகு பகுப்பு உள்ளது.

பெயர்கள் வேற்றுமை உருபுகளுக்காகவும் பன்மை எண்ணிற்காகவும் திரிபுறும் என்ற நிலையில் சொல்வகைப்பாட்டின் முக்கிய வகைப்பாடாக அமையும். மரபிலக்கணத்தார் எட்டு வேற்றுமைகளைக் காரண காரிய முறையில் வரிசைபடுத்தி எண்ணுமுறையாலும் உருபுகளின் பெயராலும் பொருள் வகையாலும் பெயர் கொடுத்துள்ளனர். அம்முறை பின்வருமாறு அமையும்:

வேற்றுமை	**உருபு**	**பொருள்**
முதல் வேற்றுமை	அப்பெயரே உருபு	எழுவாய் (கருத்தா)
இரண்டாம் வேற்றுமை	ஐ	செயப்படுபொருள்
மூன்றாம் வேற்றுமை	ஒரு,ஆல்,இன்	கருவி, காரணம், ஏதுபொருள்
நான்காம் வேற்றுமை	கு	கொள்ளுதல், ஏற்றல்
ஐந்தாம் வேற்றுமை	இன்	எல்லை, நீக்கம்
ஆறாம் வேற்றுமை	அது (அ)	உடைமை, கிழமை
எழாம் வேற்றுமை	கண்	இடம்
எட்டாம் வேற்றுமை	வடிவு திரிதல்	விளி-படர்க்கை, முன்னிலையாதல்

3.2. பெயர்ச் சொல்

மரபிலக்கணங்கள் சொல்வகை நான்கில் முதலாவதாகப் பெயர்ச் சொல்லைக் குறிப்பிடுகின்றனர். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், சுட்டு, வினா, ஒப்புருகள் அடிப்படையிலும் உறவு, உடைமை, எண், சாதி அடிப்படையிலும் தோன்றிக் காரணம் பற்றியோ இடுபெயராகவோ மூவிடங்களுள் ஒன்றிற்கு உரியதாக, வேறுபடும் இடத்தில் உருபுகளை ஏற்பனவாக, வினையாலணையும் பெயர் தவிர்த்து எழுவாயாக வரும் போது காலம் தோன்றாதவனவாக, பாலிடங் காட்டும் விகுதிகளைப் பெற்றும் பெறாதும் உயர்திணைக்குரியவனவாகவோ அஃறிணைக்குரியனவாகவோ அவ்விரு திணைக்கும் பொதுவாக நின்று ஓரெழுத்து ஒரு மொழி முதலாக மூவகை மொழிகளுள் ஒன்றாக அமையும் பொருட் குறியீடுகள் பெயர்ச் சொல்களாகும் என மரபிலக்கணங்கள் அடிப்படையில் பெயர்சொல் என்பதற்கு இலக்கணம் தரலாம்.

அம்முறையில் பெயர்கள் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைப் பொதுப் பெயர் அல்லது விரவுப் பெயர் என மூவகைப் படும்.

3.3. உயர்திணைப் பெயர்கள்

மரபிலக்கணங்களின் படி உயர் திணை ஆடூஉ அறிசொல் (ஆண்பால்), மகடூஉ அறிசொல் (பெண்பால்), பல்லோர் அறிசொல் (பலர்பால்) என முப்பாலாக வரும். அவை *அன், ஆன், அள், ஆள், இ, அர், ஆர்* என்னும் விகுதிகளால் மேற் கூறப்பட்ட பெயர் பகுதிகளோடும் சுட்டு வினா ஒப்புருபுகளோடும் கூடித் திரிபின்றி வரும் போது உயர்திணைப் பெயர்கள் ஆகும்.

மேற்கூறப்பட்ட பகுதிகளின் அடிப்படையில் தொல்காப்பியம் உயர்திணைப் பெயர்களைப் பின்வருமாறு வகைப் படுத்துகின்றது.

அவன், இவன்,உவன், அவள், இவள், உவள், அவர், இவர், உவர் எனச் சுட்டுப் பெயராகவும் யான், யாம், நாம் எனத் தன்மைப் பெயராகவும் *யாவன், யாவள், யாவர் என வினாப் பெயராகவும் அன்னன், அன்னள், அன்னார், இன்னன், இன்னள், இன்னார்* என ஒப்புப் பெயராகவும் *ஆண்மகன், பெண்மகள், பெண்டாட்டி, திருவாட்டி, நம்பி, நங்கை, மகள், மக்கள், மாந்தர், அடூஉ, மடூ, பெண்மகள், எல்லோரும், எல்லீரும்* எனப் பொருட் பெயர்களாகவும் *முல்லையான், குறிஞ்சியான், நாடன், ஊரன், சேர்ப்பன், சோழன், சேரன், பாண்டியன், பாணன், பாணத்தி, செவிலி, விறலி, பார்ப்பனி, பார்ப்பனன், அவையத்தார், மன்றத்தார்* எனத் திணை பற்றியும் சாதிபற்றியும் இடம்பற்றியும் வரும் பெயர்களாகவும் *உண்டவன், தின்றவன், கொல்லன், கூத்தன் எனத் தொழில் பற்றிய பெயராகவும் இனியன், நெடியன், தாயர், தந்தையர், குருடர், செவிடர், வெட்சியர், கரந்தையர், இருவர், மூவர், பதின்மர், நூறுவர்* என வருவன உயர்திணைப் பெயர்களாகும். இவற்றைச் தொல்காப்பியம் நூற்பா சொல்.159 விளக்கிக் கூறுகின்றது.

அடுத்துத் தொல்காப்பியர் பல்வேறு நிலைகளில் வரும் உயர்திணைப் பெயர்களைத் நூற்பா சொல். 162-இல் தொகுத்துக் கூறுகின்றார்.

வ எண்	வகை	எடுத்துக்காட்டுகள்
1	நிலப் பெயர்கள்	குறிஞ்சியான், முல்லையான், மருதத்தான், பாலையான், நெய்தலான், ஊரான், நாடான், மதுரையான், கோவூரான், பாக்கத்தான், பட்டிணத்தான், வஞ்சிநாடன், சோழநாடன், பாண்டிநாடன் இவ்வாறு ஏனைய பெண்பால் பலர்பால்

		விகுதிகளோடும் ஏற்குமாறு வரும்.
2	குழுவின் பெயர்கள்	அவையத்தார், மன்றத்தார், ஆயத்தார், கழகத்தார், அத்தி கோசத்தார் இவ்வாறு கழகத்தான், அத்திகோசத்தான் என்ற ஒருமைப் பாலிலும் வரும்.
3	வினைப் பெயர்கள்	உண்டான், தின்றான், கற்றான், உண்டவன், தின்றவன், கற்றவன், கொல்லன், கூத்தன், ஓதுவன்,. இவ்வாறு பெண்பால் விகுதியோடும் பலர்பால் விகுதியோடும் பொருந்துமாறு வரும்.
4	உடைப் பெயர்கள்	குட்டுவன் (குட்ட நாட்டையுடையவன்), குழையன் (குழையை அணிந்தவன்), வேலன் (வேற்படையை உடையவன்). இவ்வாறு ஏனைய பாற் பெயர்களிலும் பொருந்துமாறு வரும்.
5	பண்புகொள் பெயர்கள்	கரியன், செய்யன், கூனன், நெடியன், குறளன், குரியன், தீயன், அன்பன், நல்லன், மாயன், மெய்யன், பொய்யன். இவ்வாறு பிற பாற் பெயர்களிலும் பொருந்துமாறு வரும்.
6	பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர்கள்	தாயர், தந்தையர், தாய்மார், தந்தைமார், அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், தம்பியர், பெயரர்
7	பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்கள்	குருடர், செவிடர், முடவர், வாயினர், கையினர்
8	பல்லோர் குறித்த	முல்லையார், குறிஞ்சியார், பாலையார்,

	திணைநிலைப் பெயர்கள்	கைக்கிளையினர், பெருந்திணையினர், வெட்சியார், காஞ்சியார், வாகையார்
9	கூடிவரு வழக்கில் ஆடியர் பெயர்கள்	மணலைக் கயிறாகத் திரிப்பவன், கடலைக் கையால் முகப்பவன், மலையை உகிராற் பிளப்பவன், யானையைக் கையால் மறைப்பவன்
10	இன்றிவர் என்னும் எண்ணுப் பெயர்கள்	ஏனதி, காவிதி, அரசர், அமைச்சர், தூதுவர், வாயிலோர், அடியார், எவர், தமர், பிறர், பிறள், மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையவர்

நன்னூலாரும் பெயர்களை உயர்திணை ஆண்பாற் பெயர்கள், உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் பலர்பால் பெயர்கள் எனப் பகுப்பார். இவர் பகுப்பு தொல்காப்பியத்திலிருந்து சிறிது வேறுபடும்.

3.4. அஃறிணைப் பெயர்கள்

தொல்காப்பியர் அது, *இது, உது, அஃது, இஃது, உஃது* என்ற ஆறு ஒருமை சுட்டுப் பெயர்களையும் *அவை, இவை, உவை அவ், இவ், உவ்* என்ற ஆறு பன்மை சுட்டுப் பெயர்களையும் *யாது, யாவை* என்ற மூன்று வினாப் பெயர்களையும் கூறிவிட்டு பின்வரும் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களாகப் பட்டியலிடுகின்றார்.

வ எண்	**வகை**	**எடுத்துக்காட்டுகள்**
1	முதல் வகை	பல்ல, பல, சில, உள்ள, இல்ல
2	வினைப் பெயர்க் கிளவி	வருவது, செல்வது, வருபவை, செல்பவை, உண்பது, உண்டன, மண்வெட்டி, கோடரி, இடிதாங்கி,சேர்ந்தாரைக் கொல்லி

3	பண்புகொள் கிளவி	வண்ணம், வடிவு, அளவு,சுவை,குணம் பற்றியவை: கரிது, வெளியது, கரியவை, வெளியவை, கரியன, வெளியன, குறியது, நெடியது, குறியவை, நெடியவை, பெரிது, சிறிது, பெரியவை, சிறியவை, தீயது, தீயவை, இனியது, இனியவை, நல்லது, நல்லவை
4	எண்ணுக்குறிப் பெயர்கள்	ஒன்று, இரண்டு, ஐந்து
5	ஒப்பினமாகிய பெயர்கள்	அன்னது, அன்னவை, ஒத்தது, ஒத்தவை, போல்வது, போல்பவை
6	கள்ளொடு சிவணும் பெயர் பல-அறி சொல்லாக வரும்.	ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் – தொடக்கத்தன. இனத்தைக் குறிக்கும் இவை ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவானவை. தொல்காப்பியல் இவற்றை 'இயற்பெயர்' என்று குறிப்பிடுகிறார். உரையாசிரியர் இளம்பூரணர் இவற்றைச் 'சாதிப்பெயர்' என்று குறிப்பிடுகிறார்.
	பல-அறி சொல்	ஆக்கள், குதிரைகள், மலைகள்
	அன்ன பிற	பிறிது, பிற, மற்றையது, மற்றையவை, பல்லவை, சில்லவை, உள்ளது, இல்லது, உள்ளன, இல்லன –என்னும் தொடக்கத்தன

3.5. அஃறிணை விரவுப்பெயர்கள்

அஃறிணை விரவுப்பெயர் வினையோடு வரும்போது பால் உணர்த்தும்.

ஆ வந்தது, குதிரை வந்தது – ஒருமை

ஆ வந்தன, குதிரை வந்தன – பன்மை

விரவுப்பெயர் (இரு திணையிலும் வரும் பெயர்) வினையொடு வரும்போதுதான் பால் உணர்த்தும்.

சாத்தன் வந்தான், முடவன் வந்தான் – உயர்திணை

சாத்தன் வந்தது, முடவன் வந்தது – அஃறிணை

செயல்படுவதாலும் பால் உணரப்படும்.

சாத்தன் யாழ் இசைக்கும்

சாத்தி சாந்து அரைக்கும்

3.6. பெயர்ச்சொல் வகைப்பாடு

பெயர்ச்சொல் 10 வகைப்படும்: இயற்பெயர் 4, சினைப்பெயர் 4, முறைப்பெயர் 2 (நூற்பா 20 முதல் 25).

நான்கே யியற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர் கிளவி யிரண்டா கும்மே
யேனைப் பெயரே தத்த மரபின.

ஆண்பெயர், பெண்பெயர், ஒன்றன் பெயர், பலவற்றின் பெயர் என இயற்பெயர் 4 வகை ஆண் சினைப்பெயர், பெண் சினைப்பெயர், ஒன்றன் சினைப்பெயர், பலவற்றின் சினைப்பெயர், எனச் சினைப்பெயர் 4 வகை. ஆண் முறைப்பெயர், பெண் முறைப்பெயர் என முறைப்பெயர் 2 வகை.

பெண்பெயர்:

பெண்மைப் பெயர் ஒருத்திக்கும், ஒன்றன் சினைப்பெயருக்கும், ஒன்றன் முறைப்பெயருக்கும் பொது.

சாத்தி வந்தாள், சாத்தி வந்தது - இயற்பெயர்

முடத்தி வந்தாள், முடத்தி வந்தது - சினைப்பெயர்

முடக்கொற்றி வந்தாள், முடக்கொற்றி வந்தது – ஒன்றன் சினைப்பெயர்

தாய் வந்தாள், தாய் வந்தது –ஒன்றன் முறைப்பெயர்

ஆண் பெயர்:

ஆண்மைப் பெயர் ஒருவனுக்கும், ஒன்றன் சினைப் பெயருக்கும், ஒன்றன் முறைப்பெயருக்கும் பொது.

சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது

முடவன் வந்தான், முடவன் வந்தது

முடக்கொற்றன் வந்தான், முடக்கொற்றன் வந்தது

தந்தை வந்தான், தந்தை வந்தது

பன்மைப்பெயர் ஒன்றன்-பாலுக்கும், பலவின்-பாலுக்கும், ஒருவருக்கும் உரிமை பெற்று வரும் .

யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள்

நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங்கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங்கழுத்தல் வந்தாள்

பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள்

ஒருமைச் சுட்டிய பெயர்

ஒருமைச் சுட்டிய பெயர் ஒன்றற்கும், ஒருவர்க்கும் பொருந்தும்.

கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள் - ஒருமை சுட்டிய இயற்பெயர்.

செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் – ஒருமை சுட்டிய சினைப் பெயர்

நெடும்புற மருதி வந்தது, நெடும்புற மருதி வந்தான், நெடும்புற மருதி வந்தாள் – ஒருமை சுட்டிய சினை முதற்பெயர்

பன்மை சுட்டிய பொதுப் பெயர்

தாம்-தான்

தாம் என்பது பன்மைக்கு உரியது .

தாம் வந்தார், தாம் வந்தன

தான் என்பது ஒருமைக்கு உரியது.

தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது.

எல்லாம்

எல்லாம் என்பது மூவிடத்துக்கும் உரியது.

எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார்

உயர்திணையில் தன்னை உள்ளிட்ட பன்மைக்கே இது உரியது. படர்க்கைப் பன்மைக்கு எல்லாம் என்னும் சொல் வரக்கூடாது. (ஆனால் இக்காலத்தில் யானையெல்லாம் வந்தன என்று வழங்கிவருகிறோம்).

நீயிர்-நீ

நீயிர், நீ என்னும் சொற்களுக்குப் பால் இல்லை.

நீயிர் வந்தீர், நீ வந்தாய்

நீ ஒருமைக்கு உரியது. நீயிர் பன்மைக்கு உரியது .

ஒருவர் என்னும் சொல் ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் உரியது. *ஒருவர்* என்னும் சொல் தன்மையை உணர்த்துமானால் அப்போது அது பன்மை. இவற்றையெல்லாம் உன்னிப்பாக முன்னத்தால் உணர்ந்துகொள்ள வேண்டும். *பெண்மகன்* என்னும் சொல் *பெண்மகன் வந்தாள்* என்று சொல்லப்படும். செய்யுளில் ஆன்-ஈறு ஓன்-ஈறு ஆகும்.

வில்லான் – வில்லோன்

இறைச்சிப்பொருள் வரின் வரும் பொதுப்பெயர்

செய்யுளில் இறைச்சிப்பொருளைச் (கருப்பொருளை) சுட்டும் பெயர் உயர்திணையை உணர்த்தாது.

கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை வந்த வன்பறழ்க் குமரி

இதில் கடுவன், முதுமகன், மூலன், குமரி என்னும் சொற்கள் உயர்திணை அன்று. கடுவன் என்பது ஆண் குரங்கையும், மூலன் என்பது பெண்குரங்கையும், குமரி என்பது குரங்குக் குட்டியையும் உணர்த்துகின்றன.

3.7. தெரிநிலை வினையாலணையும் பெயர்கள்

ஒரு கருத்தாவின் வினை காரணமாக, அவ்வினையே காரணப் பெயராக வருவது வினையாலணையும் பெயர் எனப்படும். இரு திணைக் கண்ணும் படர்க்கை வினைகளே, வினையாலணையும் பெயராக அமையும். அவ்வாறு வரும் போது ஈறு திரியாமலும் திரிந்தும் வரும்.

எ.கா.உண்டான், உண்டாள், உண்டார், உண்டது, உண்டன.

உண்டவன், உண்டவள், உண்டவர், உண்டவர், உண்டது, உண்டவை

3.8. குறிப்பு வினையாலணையும் பெயர்கள்

கருத்தாவால் இயற்றப்பெற்ற வினை, பின்னர் அக்கருத்தாவிற்கு காரணப் பெயராக வரும் போது வினையாலணையும் பெயர் எனப்படும். *சாத்தன் பொன்னன்* எனவரும் போது *பொன்னன்* குறிப்பு வினையாகும். *பொன்னனை அழைத்து வா, பொன்னனுக்குக் கொடு* என வரும் போது *பொன்னன்* என்பது குறிப்பு வினையாலணையும் பெயராகும்.

3.9. தொகைப் பெயர்கள்

3.9.1. தொல்காப்பியரின் அணுகுமுறை

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் எச்சவியலில் ஆறு வகையான தொகைகளைப் பற்றிக் கூறுகிறார். இத்தொகைகளை (சில விதிவிலக்கானவற்றைத் தவிர்த்து) நாம் எடுத்துக்கொண்ட கோட்பாட்டு அடிப்படையிலான கலைச்சொல்லின்படி 'கூட்டுகள்' என அழைக்கலாம் என்று தோன்றுகின்றது. அவர் ஆறு வகையான தொகைகளைப் பற்றிப் பேசுகிறார். அவையாவன (1) வேற்றுமைத்தொகை, (2) உவமைத்தொகை, (3) வினையின் தொகை, (4) பண்பின்தொகை, (5) உம்மைத்தொகை, (6) அன்மொழித்தொகை என்பன (சூத்திரம் 406). இவை ஒவ்வொன்றைப் பற்றிய தொல்காப்பியர் கருத்துகளைப் பார்ப்போம்.

3.9.1.1 வேற்றுமைத்தொகை

சூத்திரம் 407–இலிருந்து தொகைகளைப் பற்றி தொல்காப்பியர் ஒவ்வொன்றாகக் கூறுகிறார். அவர் வேற்றுமைத்தொகை என்பதை '...வேற்றுமைத்தொகையே வேற்றுமை இயல்' (சூத்திரம் 407) என்கிறார். அவர் கருத்துப்படி வேற்றுமைத் தொகைக்கு அடிப்படை வேற்றுமைத் தொடர் என்பதாகும். அவர் இவ்வேற்றுமைத் தொடர்களை அறு

வகைப்படுத்துகிறார். அவையாவன: (1) இரண்டாம் வேற்றுமையுறுபு (ஐ) தொக்க வரும் இரண்டாம் வேற்றுமைத் தொகை (எ.கா. *நீர் சிந்தினன் < நீரைச்சிந்தினன்*), மூன்றாம் வேற்றுமையுறுபு (ஓடு என்பன) தொக்க வரும் மூன்றாம் வேற்றுமைத்தொகை (எ.கா. *தாய் மூவர் < தாயொடு மூவர்*), நான்காம் வேற்றுமை உருபு (-*உக்கு*) தொக்க வரும் நான்காம் வேற்றுமைத் தொகை (எ.கா. *கரும்பு வேலி < கரும்புக்கு வேலி*), (4) ஐந்தாம் வேற்றுமையுறுபு (-*இன்* என்பன) தொக்க வரும் ஐந்தாம் வேற்றுமைத் தொகை (எ.கா. *கருவூர்க்கிழங்கு <கருவூரின் கிழங்கு*), (5) ஆறாம் வேற்றுமையுறுபு (*அது* என்பன) தொக்க வரும் ஆறாம் வேற்றுமைத் தொகை (எ.கா. *முருகன் புகழ் < முருகனது புகழ்*), (6) ஏழாம் வேற்றுமையுறுபு (*கண்* என்பன) தொக்க வரும் ஏழாம் வேற்றுமைத் தொகை (எ.கா. *மன்றப் பெண்ணை < மன்றின்கண் பெண்ணை*).

3.9.1.2. உவமைத்தொகை

'உவமத்தொகையே உவம இயல்' (சூத்திரம் 408) என உவமைத்தொகை பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார். அவர் கருத்துப்படி உவம உருபு வரத்தக்க விதத்தில் விரிந்து பொருள்படத்தக்க உவமைத்தொடர் தான் உவமைத் தொகைக்கு அடிப்படையாகும். (எ.கா. *மழை வண்கை <மழை அன்ன வண்கை*, *மலர்முகம் <மலர்போல முகம்*).

3.9.1.3. வினைத்தொகை

'வினையின் தொகுதி காலத்தியலும்' என்று வினைத்தொகை பற்றி தொல்காப்பியர் கூறுகிறார். இவர் கருத்துப்படி வினைத்தொடர் காலம் விரியப் பொருள் தரும். (எ.கா. *புணர் பொழுது <புணர்ந்த பொழுது / புணர்கின்ற பொழுது / புணரும் பொழுது*).

3.9.1.4. பண்புத்தொகை

தொல்காப்பியர் பண்புத்தொகை குறித்து பின்வருமாறு கூறுகிறார்.

'வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்

றன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்ன திதுவென உரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே'

இவர் கருத்துப்படி விஷேடிக்கப்படும் சொல்லும் வண்ணம், வடிவு, அளவு, சுவை இவை போன்ற பிற பண்புகளின் அடிப்படையிலான இதன் விஷேடணமும் பண்புருபு தொக்க வருவது பண்புத் தொகையாகும். இதன்படி 'கருமையான குதிரை எனப்பொருள் கொள்ளத்தக்கக் *கருங்குதிரை* வண்ணப் பண்புத்தொகைக்கும் 'வட்டமான பலகை' எனப்பொருள் தரும் *வட்டப்பலகை* என்பதை வடிவப் பண்புத்தொகைக்கும் 'குறுகலான கோல்' எனப் பொருள்படும் *குறுங்கோல்* என்பதை அளவுப் பண்புத்தொகைக்கும், 'தித்திப்பான கரும்பு' எனப் பொருள் தரும் *தீங்கரும்பு* என்பதைச் சுவைப் பண்புத் தொகைக்கும் எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

3.9.1.5. உம்மைத்தொகை

உம்மைத்தொகைப் பற்றி தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியர் பெயரே நிறைபெயர்க் கிளவி
எண்ணின் பெயரே டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே'

இவர் கருத்துப்படி இருபெயர், பல்பெயர், அளவுப்பெயர், எண்ணியர் பெயர், நிறைபெயர், எண்ணின் பெயர் என்பன உம் தொக்க நிற்பது உம்மைத் தொகையாகும். 'உவ்வாவும் பதினான்கும்' என விரிவும் உவாப்பதினான்கு இருபெயர் உம்மைத்தொகைக்கும், புலியும் வில்லும் கெண்டையும்' என விரியும் *புலவிற்கெண்டை* என்பது பல்பெயர் உம்மைத்தொகைக்கும், 'தூணியும் பதக்கும்' என விரியும் *தூணிப்பதக்கு* என்பது அளவின்

பெயர் உம்மைத்தொக்கும், 'பதின்மரும் ஐவரும்' என விரியும் *பதினைவர்* என்பது எண்ணியர் பெயர் உம்மைத்தொகைக்கும், 'தொடியும் அரையும்' என விரியும் *தொடியரை* என்பது நிறைபெயர் உம்மைத்தொகைக்கும், 'பத்தும் ஒன்றும்' என விரியும் *பதினொன்று* என்பது எண்ணின் பெயர் உம்மைத்தொகைக்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

3.9.1.6. அன்மொழித்தொகை

தொல்காப்பியர் அன்மொழித்தொதாகை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

பண்புத்தொகை வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.

இதன்படி பண்புத்தொகை வரும் சொல்லிலும் உம்மைத் தொக்க பெயரிடத்தும் வேற்றுமை தொக்க பெயரிடத்தும் இறுதிச் சொல்லிடத்தும் நின்று அன்மொழித்தொகை வரும். எடுத்துக்காட்டாக, 'வெண்மையான ஆடை' எனப் பொருள்படும் பண்புத்தொகையான வெள்ளாடை 'வெண்மையான ஆடையுடுத்திய பெண்' என்ற பிறிதொரு பொருளை உணர்த்தவல்லதானால் அது பண்புத்தொகைக் கண்வரும் அன்மொழித்தொகையாகும்: 'தகரமும் ஞாழலும்' எனப் பொருள்படும் தகர ஞாழல் என்ற உம்மைத் தொகை 'தகரமும் ஞாழலும் உடையாள்' என்ற பிறிதொரு பொருளை உணர்த்தவல்லதாதால் அது உம்மைத்தொகைக்கண் வரும் அன்மொழித்தொகையாகும். 'பொன்னாலான தாலி' எனப் பொருள்படும் *பொற்றாலி* என்ற வேற்றுமைத்தொகைப் 'பொன்னால் ஆன தாலி அணிந்தவள்' என்ற பிறிதொரு பொருளை உணர்த்தவல்லதானால் அது வேற்றுமைத் தொகைக் கண் வரும் அன்மொழித்தொகையாகும். தொல்காப்பியர் இங்கு வினைத்தொகைக் *கண்* வரும்

அன்மொழித்தொகையைப் பற்றியும் உவமைத்தொகைக் *கண்* வரும் அன்மொழித்தொகையைப் பற்றியும் பேசவில்லை எனக் குறிப்பிட வேண்டியதாகிறது.

3.9.1.7. தொகைச் சொற்களில் பொருள் சிறக்குமிடம்

தொகைச் சொற்களில் பொருள் சிறக்குமிடங்களைப் பற்றித் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே.

தொகைச் சொற்களின் பொருள் (வலமிருந்து பார்க்கையில்) முன்வரும் சொல்லினின்று பெறப்படவோ பின்வரும் சொல்லினின்று பெறப்படவோ இரண்டினின்றும் பெறப்படவோ இரண்டினுமின்றி பிறிதொரு சொல்லினின்று பெறப்படவோ செய்யலாம் என்ற நால்வகைத் தொகைப் பொருள்களைத் தொல்காப்பியர் கூறுகிறார். எடுத்துக்காட்டாக *வேங்கைப்பூ* என்பதன் பொருள் முதற்சொல்லாகிய பூவினின்று பெறப்படும். *பெண்ணணங்கு* என்பதன் பொருள் 'அணங்கு போலும் பெண்' என பின்வரும் *பெண்* என்ற சொல்லினின்று பெறப்படும்; *உவாப் பதினான்கு, புலிவிற்கெண்டை* போன்ற உம்மைத் தொகைகளின் பொருள் முன்வரும் சொற்களின்றும் பெறப்படும். *வெள்ளாடை, தகரஞாழல், பொற்றொடி* போன்ற அன்மொழித்தொகைகளின் பொருள் முன்பின் என அமையும் சொற்களிலிருந்தல்லாது பிறவற்றாற் பெறப்படும்.

3.9.1.8. தொகைச் சொற்கள் ஒரு சொல் தன்மைய

சூத்திரம் 414 –இல் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

'எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய'

இதன்படி தொகைச் சொற்கள் எல்லாம் ஒரு சொல்லாய் நிற்கும் என பொருள் கொள்ளலாம். இது மிக முக்கியமாய் கவனிக்க வேண்டிய சூத்திரமாகும். இதன் அடிப்படையிலான வாத விளக்கங்களைப் பின்னர் பார்ப்போம்.

3.9.2. தொல்காப்பிய உரையாசிரியர்களின் பார்வை

தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களின் கருத்துகளையும் நாம் ஆய்ந்து பார்க்க வேண்டியதிருக்கிறது.

3.9.2.1. இளம்பூரணர் பார்வை

தொல்காப்பிய உரையாசிரியர்களில் நமக்கு முதலாவதாக அறிமுகமாகிறவர் இளம்பூரணராவர். இவர் கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். அதாவது தொல்காப்பிய சூத்திரங்களின் உரை கிட்டத்தட்ட 15 நூற்றாண்டுகளுக்குப் பின் இவரால் நமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. எனவே இவரால் பல இடங்களில் சரியான விளக்கம் தர இயலாமல் இருப்பது இயற்கையே. தொகை பற்றிய இவரது பார்வையை இரண்டு பெரிய தலைப்புகளில் காணலாம். (1) தொகைகளின் உருவாக்கம், (2) தொகைகளின் பொருள்படுத்தம்.

தொகைகளின் உருவாக்கம்

இளம்பூரணர் தொகைகளை மூவகைச் சேர்ந்து வருகையின் ஒரு வகையாகக் கொள்கிறார். இவர் ஏதேனும் இரு சொற்கள் சேர்ந்து வருகையில் அவை தொகையாகவோ உம்மைத்தொடராகவோ செயப்படுபொருள் பயனிலை உறவிலோ வரும் என்கிறார் (பார்க்க: இளம்பூரணரின் தொல்காப்பியச் சூத்திரம் 1-இன் விளக்கம்).

தமிழில் பெரும்பாலும் தொகைகள் பெயரையும் சேர்க்கையிலோ பெயரையும் வினையையும் சேர்க்கையிலோ உருவாகிறது. எடுத்துக்காட்டாக *நிலம் கண்டான்* என்பது பெயரும் வினையும் சேர்ந்த தொகை. ஆனால் சேனாவரையர் இதைத் தொகையாகக் கொள்வதில்லை. பிறர் இதை எழுவாய்ப் பயனிலைத் தொடராக அதேசமயம் வேற்றுமை மறைந்திருக்கிற தொகையாகக் கொள்வர். இளம்பூரணர் கருத்துப்படி சில வினைகள்,

பெயர் இவற்றின் இணைப்பைத் தொகையாகக் கொள்ளலாம் (தொல்காப்பியச் சூத்திரம் 68-இன் உரை). இவருடைய தீர்மானம் வினைத்தொகை பற்றிய இவரின் பார்வையைப் பொறுத்து அமைகிறது; இவர் கருத்துப்படி வினைத்தொகையில் பெயரெச்சம் உள்ளது. சேனாவரையாப் கருத்துப்படி வினைத்தொகை என்பது வினைவேர், பெயர் இவற்றின் இணைப்பாகும்; வினைவேர் ஏவல் வினை நோக்கைக் காட்டாதபோது வினைப்பெயராகும்; ஆனால் தொகையின் வலியால் தொகை காலத்தைக் காட்டும். இவர் பார்வையில் வினைப் பெயர்+பெயர் இவற்றின் இணைப்பு மட்டும் தான் உண்டு; பெயரெச்சமில்லை. வேறு தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினாக்கினியர் கருத்துப்படி பெயரெச்சமிருக்கிறது, ஆனால் பெயரெச்சப் பொருளிருந்தாலும் பெயரெச்ச வடிவு இல்லை.

இளம்பூரணர் தொகைகளுக்கும் அவற்றிற்கிணையான தொடர்களுக்குமுள்ள உறவைத் தெளிவாக அடையாளம் காண்கிறார். மட்டுமன்றி தொகைகள் சம்மந்தப்பட்ட தொடரிலிருந்து பெறப்பட்டவை என்றும் கொள்கிறார். எடுத்துக்காட்டாகக் *குதிரைத்தேர், குதிரையாற் பூட்டப்பட்ட தேர்* என்பனவற்றுள் முதலாவது இரண்டாமதிலிருந்து *ஆல்* என்ற உருபும் *பூட்டப்பட்டது* என்ற உருபல்லாத ஒன்றும் முதலாவதிலிருந்து விவரிக்கப்பட்டு பெறப்பட்டது என்றும் கூறுகிறார் (தொல்காப்பிய சூத்திரம் 79-இன் விளக்கம்). மேலும் இளம்பூரணர் தன் தொல்காப்பிய சூத்திரம் 407-இன் விளக்க உரையில் ஒரு சாரார் நிலங்கடந்தான், தாய்மூவர் போன்ற வேற்றுமைத் தொகைகளில் வேற்றுமையுருபு புலப்படாது நிற்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று கூறுகிறார். இவர்கள் கருத்துப்படி வேற்றுமை உருபுகளின்றி பெயர்கள் இணைந்து தொகை வருகிறது; தொகை தகுந்த இலக்கண உறவை வெளிப்படுத்துகிறது. சிலர் இதை

ஒத்துக்கொள்வதில்லை என்கிறார் இவர். ஆனால் அவர்களின் கருத்தை விளக்கவில்லை. சேனாவரையர் முதற்கூறிய கருத்தைக் கொண்டவர்.

தொகைகளின் பொருட்படுத்தம்

இளம்பூரணர் வேற்றுமைத் தொகைகளைப் பொறுத்தமட்டில் அவை வேற்றுமை உருபுகள் வருகையில் பெறும் பொருளைப் பெறுவதாகக் கூறுகிறார். தொகை உருவாகுகையில் வேற்றுமை உருபுகள் நீக்கப்படும் என்று கொள்கிறார் (பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 407–இன் உரை). உவமைத்தொகைகளின் பொருட்படுத்தம் பற்றிப் பேசுகையில் அவர் ஆர்வத்தைத் தூண்டும் கேள்வியைக் கேட்கிறார். இவ்வகையான தொகைகளை விரிக்கையில் இவை உவமஉருபுகளை மட்டுமன்றி வேற்றுமை உருபுகளையும் வெளிப்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறார். எடுத்துக்காட்டாகத் *துடிநாடு* என்பது 'துடியை ஒக்கும் நாடு' என விரியும். இவ்வாறு விரிகையில் இதில் வேற்றுமை உருபு வெளிப்படுகிற காரணத்தால் இதை வேற்றுமைத் தொகை என்பதா அல்லது ஒக்கும் என்ற உவமவுருபு வெளிப்படுகிற காரணத்தால் இதை உவமைத்தொகை என்பதா என்ற சிக்கல் வருவதைக் குறிப்பிடுகிறார். வேற்றுமையுருபு, உவமையுருபு இரண்டும் மறைந்து தொகை வரப்பெற்றாலும், தொகைக்கு உவமைப்பொருளே சிறப்புடையதாதலின் இத்தொகையை உவமைத் தொகை என்பதே பொருத்தம் என்று ஒருசாரார் கருதுவர் என்று கூறுகிறார் (பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 408 –இன் உரை). *ஆன* போன்ற உவம உருபுகள் பலயிடங்களில் இரண்டாம் வேற்றுமை பெற்ற பெயருடன் சேர்ந்து வருவதில்லை. எனவே இவ்விடங்களில் உவமையுறவு இருக்கிறதேயன்றி வேற்றுமையுறவு இல்லை என்று சேனாவரையர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால் நச்சினாக்கினியர் இத்தீர்மானத்திலிருந்து பெரிதும் மாறுபடுகிறார். உவமை இடைச்சொற்கள் யாவும் எச்சமாகச் செயல்படுவதால் செயப்படுபொருளின் பயனிலையாகச் செயப்படுகின்றன. அவர் கருத்துப்படி வேற்றுமை உறவு இருக்கிறது;

இருப்பினும் அதற்குப் பிறகு உவமை அல்லது இவ்வகையான தொகைகளை வேறு பிரிக்கும் உவமை உறவு உள்ளது.

வினைத்தொகை பற்றிய இளம்பூரணரின் கொள்கையை முன்னரே பார்த்தோம். இளம்பூரணர் இத்தொதை உருவாகும் போது வினையில் ஏற்படும் முழுமையற்ற நீக்கத்தைப் பற்றிப் பேசுகிறார். எடுத்துக்காட்டாகக் கொல்யானை என்ற தொகையில் (கொல்லும் என்ற மூல வினையிலிருந்து) கொல் நிறுத்தி வைக்கப்பெற்று உம் என்ற ஒட்டு நீக்கப்படுகின்றது என்கிறார்.

பண்புத்தொகை உருவாகுகையில் அடையாய் வரும் சொல்லின் (அதாவது தொகையின் முதல் அங்கத்தின்) ஒரு பாகம் நிறுத்தி வைக்கப் பெற்று மீதி பாகம் நீக்கப்பெறுகிறது என்று இளம்பூரணர் வாதாடுகிறார் (பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 410-இன் உரை). 'கரியது குதிரை' என விரியும் *கருங்குதிரை* என்பதை எடுத்துக்காட்டாக கூறுகிறார். *கரியது குதிரை* என்பதிலிருந்து தொகை உருவாக்கப்படுகையில் *அது* என்ற ஒட்டு *கரியது* என்பதிலிருந்து நீக்கப்பெற்று, *கர்*(உம்) என்பது நிறுத்தி வைக்கப்பெறுகிறது. எனவே இது பண்புத்தொகை என அழைக்கப்பெறுகிறது என்கிறார். உம்மைத்தொகை பற்றிய இவரது கருத்து முக்கியமானதாகும். *கபிலன், பரணன்* என்ற இயற்பெயர்கள் உம்மைத்தொகையாக வரும்போது அது கபிலபரணன் என்று -ன் ஈராக அமைய வருவதில்லை: ஏனென்றால் -ன் வருவதனால் சம்மந்தப்பட்ட வினைமுற்றும் ஒருமை குறியீடான *-ன்* ஈறாக அமைய வரவேண்டியது வரும்; எனவேதான் தொல்காப்பியர் இம்மாதிரியான உம்மைத் தொகைகள் பன்மை ஒட்டு ஈறாக அமைய வரும் (அதாவது *கபிலபரணர்* என்று வரும்) என்று விளக்குவதைக் குறிப்பிடுகிறார். இளம்பூரணர் பயனிலையாக்கம் தொகையின் இரண்டு உறுப்புகளையும் பொறுத்து அமையும் என்று சரியாக அனுமானித்துள்ளார். அன்மொழித்தொகை பற்றி பேசுகையில் இவர் இசையோட்ட அமைப்பொழுங்கைப் பற்றிப் பேசுகிறார். இந்த வகையான தொகைகளில் பொருள் (தலைப்புச் சொல்) அதன் உறுப்புகளில் கிடக்காமல் பிறிதோர்

சொல்லில் கிடக்கின்ற காரணத்தால் தொகை படுத்தலோசையால் உச்சரிக்கப்பெறும் என்கிறார் (பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 412 –இன் உரை). தொல்காப்பியர் வேற்றுமைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை என்பனவற்றின் பின்னணியில் தான் அன்மொழித்தொகை வரும் என்கிறார். ஆனால் இளம்பூரணர் பிற இரு தொகையான உவமைத்தொதை, வினைத்தொதை என்பனபவற்றின் பின்னணியிலும் அன்மொழித்தொகை வரும் என்று சுட்டிக்காட்டுகிறார்.

3.9.2.2. சேனாவரையர் பார்வை

இளம்பூரணருக்கு அடுத்தபடியாக வைத்துக் கருதப்படும் சிறந்த உரையாசிரியர் சேனாவரையராவர். இவர் தர்க்கவியல் மாணவர். தமிழிலும் சமஸ்கிருத மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர். இவருடைய உரையில் இவரது சமஸ்கிருத மொழி அறிவின் தாக்கத்தைக் காணலாம். பிற உரையாசிரியருடன் ஒப்பிடுகையில் இவர் தொகையின் கோட்பாடுகள் பற்றியும் விளக்கம் பற்றியும் கூடுதலாக வாதங்கள் தருகிறார். பிற உரையாசிரியர்களான நச்சினாக்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்பார் இளம்பூரணரையோ சேனாவரையரையோ பின்பற்றுகிறார்கள். (எனவே ஒரே மாதிரியான விவாதங்களை முன்வைப்பதைத் தவிர்க்க தெய்வச்சிலையார் மற்றும் கல்லாடர் உரைகள் பற்றி இங்கு பேசப்படவில்லை; சில விவாத காரணங்களுக்காக நச்சினாக்கினியர் பற்றி சிறிது பேசப்படும்). சேனாவரையர் பார்வையில் தொகைகள் ஒட்டுகளின் (உருபுகளின்) நீக்கத்தால் உருவானவையல்ல.

சேனாவரையர் தொகை பற்றிய இருவகையான கோட்பாடுகளைக் குறிப்பிடுகிறார். இரண்டு குழுக்களாக இலக்கணவியலார்கள் உள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார். ஒரு குழுவைச் சார்ந்தவர் தொகைகள் வேற்றுமை ஒட்டுகள், உவமை இடைச்சொற்கள், -உம் என்ற பின்குறைச்சொல், வினைமுற்றின் ஒட்டு, பண்புப்பெயரில் வரும் ஒட்டு இவற்றின் நீக்கத்தால் ஆக்கப்பெற்றவை என்று கூறுகின்றனர்; பிற

குழுவைச் சார்ந்தவர் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் இடைவெளியோ விட்டிசையோ இன்றி இணைந்து பின்னிப்பிணைந்த ஒரு அலகாகப் பொருத்தமான பொருளை உணர்த்துவதாகக் கூறுகின்றனர். சேனாவரையர் பின்னால் கூறப்பட்ட குழுவின் பார்வையை ஏற்றுக்கொள்கிறார். *வேழக்கரும்பு*, *கேழர்பன்றி* என்ற எடுத்துக்காட்டுகளில் ஒட்டுகள் நீக்கப்படவில்லை என்றாலும் அவை தொகையாய்ச் செயலாற்றுகின்றன என்று குறிப்பிடுகிறார். அவர் தொல்காப்பியரும் இதே கருத்தைத்தான் கொண்டிருப்பதாய் வாதாடுகிறார். தொகையாக வரும் சொற்கள் ஒரு சொல்லாகச் செயலாற்றுவதாகக் கூறுகிறார். இருப்பினும் சொற்களின் சேர்க்கையாலான தொடர்களும் ஓர் இலக்கண அலகாகச் செயலாற்றலாம் என்றும் கூறுகிறார். எனவே தான் இவர் ஒரு தொகையாக வரும் சொற்களுக்கிடையே விட்டிசை இருக்கவேண்டியதைக் கூடுதலான பண்புக்கூறாக வற்புறுத்துகிறார். (தொல்காப்பிய சூத்திரம் 420-இல் 'எல்லாத்தொகையும் ஒருசொல் நடைய' என்று குறிப்பிடுவது இங்கு நினைவுகூறத்தக்கது). கேளர்பன்றி போன்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகைகளில் ஒருசொல்லும் நீக்கப்பெறவில்லை என்று குறிப்பிட்டுத் தொகையாக்கத்தில் ஒட்டுகள் போன்றவை நீக்கம் பெறுவதாகக் கூறுவது ஒப்புக்கொள்ள இயலாது என்று வாதாடுகிறார்; மாறாகத் தொகைகளின் உறுப்புகளே வேற்றுமை ஒட்டுகள் போன்றவற்றின் பொருளைத் தருவதாகக் கூறுகிறார். (பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 412-இன் உரை). சேனாவரையர் பொருண்மைநிலை மாற்றம் அடைந்து ஒருவகைப் பறவையைக் குறிக்கும் செம்போட்டு போன்ற தொகைகளைத்தான் உண்மையான தொகைகளாக (அதாவது கூட்டுகளாக) ஒத்துக்கொள்வதாய் தெரிகிறது; இங்கு செம் என்பது வரையறை செய்யும் அடையாகப் பயன்படாது விஷேடணை செய்யும் அடையாகப் பயன்படுகிறது. *செம்போட்டு* என்பது ஒரு கூட்டாகச் சிவந்த நிறப் பறவையைக் குறிப்பிடாமல் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த பறவையைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு இது ஒரு வகையான மரபுப்பொருளாக மாறியுள்ளது.

3.9.2.3. நச்சினாக்கினியரின் பார்வை

சேனாவரையருக்குப் பின்வரும் நச்சினாக்கினியர் சேனாவரையரின் ஆட்சேபணைகளுக்கு விடையளிக்கத்தக்க விதத்தில் எதிரிடையான கோட்பாட்டைச் சீர்படுத்தியுள்ளார். இவர் எல்லாத் தொகைகளிலும் ஒன்றோ அதற்கு மேற்பட்ட ஒட்டுகள், பின்குறைச் சொற்கள், சொற்கள் ஆகியன குன்றி (நீக்கம் பெற்று) வரலாம் என்று கொள்கிறார். வேற்றுமை உருபுகள், பின்குறைச் சொல்லாகிய *-உம்* மற்றும் வினைத்தொகை மற்றும் பண்புத்தொகையில் விரியும் ஒட்டுகள், அன்மொழித்தொகையில் விரியும் சொற்கள் என்பன தொகைகளில் நீங்கி அல்லது மறைந்து வரும் என்று இருவரும் ஒத்த கருத்தைக் கொள்கின்றனர். இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் (எ.கா *சாரைப்பாம்பு*) ஒரு உருபனோ சொல்லனோ நீக்கம் பெறவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். இங்குகூட இம்மாதிரியான தொகைகளின் இரு சொற்களுகிடையே ஆகிய என்ற உருபு இச்சொற்கள் இரண்டும் வரையறுப்பான் வரையறை செய்யப்படுவான் (determiner–determined) என்ற தொடர்பைக் காட்ட வரும் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார் (பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 412–இன் உரை). தொல்காப்பியச் சூத்திரம் 412-இல் வரும் தொக என்பதைச் சேனாவரையர் 'தொகையாகவரும்' என்று பொருள் கொள்கிறார். ஆனால் பிறர் இதை 'உருபனோ சொல்லோ நீங்கும் போது' எனப்பொருள் கொள்கின்றனர். நச்சினாக்கினியர் *வட்டப்பாறை* என்ற எடுத்துக்காட்டில் வட்டம் என்பதன் ஈற்றில் வரும் *-ம்* என்ற எழுத்து நீங்க *வட்டம் >வட்ட* என மாறும் என்று குறிப்பிடுகிறார். இவர் இந்தப் புணர்ச்சி அடிப்படையிலான கெடுதலைக்கூட தொகையில் வரும் நீக்கமாகக் கொள்கிறார் என்பது புதுமையானதாகும் (பார்க்க: தொல்காப்பியச் சூத்திரம் 416–இன் உரை). இவர் கருத்தைப் புரிந்து கொள்ள நாம் தொகைகளில் பங்குபெறும் சொற்களை நன்றாகப் பின்னப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட இடைவெளியில்லாத சொற்களாகக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இந்த எடுத்துக்காட்டில் கூட அவர் கொள்கைப்படி

வரையறுப்பான்-வரையறை செய்யப்படுவான் உறவைக்காட்டும் ஆகிய என்பது சம்பந்தப்பட்ட சொற்களுக்கிடையிலிருந்த நீக்கப்பெற்றுள்ளதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

3.9.3. தொகைகளின் பொருள் விளக்கம் குறித்த ஒட்டுமொத்தமான பார்வை

தொகைகளைப் பற்றிய மேற்சொன்ன கோட்பாடு தொகைகளின் பொருள் விளக்கம் குறித்தும் விளக்கம் தருகிறது. தொகைகள் ஒரு பெயர்ச்சொல் போல் செயல்படுகிறது. தொகையாக்கம் தமிழ் போன்ற ஒட்டு நிலை (agglutinative) மொழிகளில் ஓர் உருபனியல் செயற்பாங்கு போல் நிகழ்வுறுகிறது. தொகைகளை ஆய்ந்தால் அவற்றையாக்கும் சொற்கள் ஓர் உறுப்பி (constitute) ஆக இருந்த போதிலும் எப்பொழுதும் அண்மை உறுப்புகளாக (immediate constituent) இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தொல்காப்பியரின் 83-ஆவது சூத்திரம் தொகைகள் எவ்வாறு பொருள் தருகின்றன என்பதை விளக்குவதாகக் கருதப்படுகிறது.

‘வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலுந் தொகைவயின் பிரிந்து
பல்லா றாளனகப் பொருள் புணந் திசைக்கும்
எல்லர்ச் சொல்லும் உரிய வென்ப’ (சூத்திரம் 83)

வேற்றுமைத்தொகையை விரித்துக் கூறுகையில் அன்மொழித்தொகையை வேண்டிய சொற்களைக் கொண்டு விரிக்குமாறு போல விரித்துக்கூற வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். எடுத்துக்காட்டாகத் *தாழ்குழல், பொற்றொடி* என்னும் அன்மொழித்தொகைகளைத் ‘தாழ்குழலையுடையாள்’, ‘பொற்றொடியை அணிந்தாள்’ என்று விரிப்பது போலவே *கருங்குழற்கன்னி, பொற்றொடி நங்கை* என்னும் வேற்றுமைத் தொகைகளைக் ‘கருங்குழலையுடைய நங்கை’, பொற்றொடியை அணிந்த நங்கை’ என்று விரித்துப் பொருள் காணல் வேண்டும் என்று இவர் கருதுவதாய் கொள்ளலாம். இவர் குறிப்பாக வேற்றுமைத் தொகைகளைப் பற்றிக் கூறினாலும் இது எல்லாத்

தொகைகளுக்கும் பொருந்துவதாகக் கொள்ளப்படுகிறது. தற்கால இலக்கணவியலாரின் அக அமைப்பு (deep structure), புற அமைப்பு (surface structure) என்ற கருத்தரு அடிப்படையில் கூறினால் பொருண்மையானது அக அமைப்பிலிருந்து பெறப்படுவதாய் இவர் கருதுவதாய் எடுத்துக் கொள்ள இடம் உண்டு. தொல்காப்பியர் தொகைகளின் பொருளை விரித்துணர ஒரு மாறாத (நிலையான) பொருண்மை வாய்ப்பாடு இல்லையென்று கருதுவதாய்த் தெரிகிறது. ஒரு தொகையின் பொருண்மை அமைப்பில் அத்தொகையின் பொருளைப் புரிந்து கொள்ளத் தேவையான செய்திகள் இருக்க வேண்டும் என்று இவர் குறிப்பிடுவதாய்த் தெரிகிறது. உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினாக்கினியரும் இக்கூடுதல் சொற்கள் (மற்றும் உருபுகள்) தொகையாக்கம் செய்யும் சொற்களுக்கு இடையிலோ கடையிலோ தரப்பட வேண்டும் என்று கருதுகின்றனர். அன்மொழித்தொகையில் இக்கூடுதல் சொற்கள் தொகையின் இறுதியில் இணைக்கப்பட வேண்டும்; அதாவது தொகையாக்கச் சொற்களுக்கிடையில் வரவேண்டும்; வேற்றுமைத்தொகைளைப் பொறுத்தவரையில் தொடர்புள்ள வேற்றுமைத் தொடர்களாக விரிய வேண்டும். வெள்ளை வாரணர் (1984) "...இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர் பலரும் கூறிய உரைகள் ஒன்றுக்கொன்று தம்முள் தொடர்பில்லாதன போற் காணப்பட்டாலும் அவர்கள் தம் உரையகத்துக் காட்டிய உதாரணங்களையும் விளக்கங்களையும் ஒப்பவைத்து நோக்குங்கால், "வேற்றுமைத் தொகைச் சொற்களை விரித்துப் பொருள் கொள்ளுமிடத்து உருபேயன்றி அவ்வுருபினை முடித்தற்கு இன்றியமையாதனவாய்ப் பலவற்றானும் பொருள் தொடர்புடையனவாய் வந்து இயையும் எல்லாச் சொல்லும் விரித்தற்குரியன" என்பதே இவ்வுரைகளின் பொதுக்கருத்தாக அமைந்து வேற்றுமைத் தொகைகளின் உருபும் பொருளும் உடன்தொக்கத் தொகையின் இயல்பினை விளக்கி நிற்றல் காணலாம்" என்று விளக்குகிறார்.

சொற்கள் தொகைகளாக இணைக்கப் பெறுவதுடன் தொகைகளாகச் செயல்படும் சொற்களும் மீண்டும் தொகைகளாய் இணைக்கப்பெறுகின்றன எடுத்துக்காட்டாகப் *பவள வாய், போர் அமர்க்கண், பொற்றொடி* என்பதில் வேற்றுமைத் தொகையினின்றும் அன்மொழித் தொகை பெறப்பட்டுத் தலைப்புச் சொல்லாக நிற்கிறது; *பவளவாய்* என்பது ஓர் உவமைத்தொகை; *போர் அமர்க்கண்* என்பது *போர்க்கண்* என்றும் *அமர்க்கண்* என்றும் பிரிக்கப் பெறலாம். முதலாவது ஒரு பண்புத்தொகை; இரண்டாவது வினைத்தொகை; *பவளவாய்* ஒரு அலகாகவும் *போர் அமர்க்கண்* பிறிதொரு அலகாகவும் *பொற்றொடி* மூன்றாவது அலகாகவும் ஒரு உம்மைத்தொகைக் கூட்டை உருவாக்குகின்றன. இதைப் 'பவளவாயையும் போர் அமர்க்கண்ணையும் பொற்றொடியையும் உடைய பெண்' என்று விரித்தால் இரண்டாம் வேற்றுமை உருபு *ஐ*-உம், *-உம்* என்ற குறைச் சொல்லும் *உடைய* என்ற சொல்லுருபும் (பின்னுருபும்) குன்றி வருவது தெளிவுறும்.

சேனாவரையர் கருத்துப்படி ஒரு தொகையின் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டித்தான் அத்தொகையில் இல்லாத மிகைச் சொற்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன, என்பதன்றி, இம்மிகைச் சொற்கள் முன்னரே தொகையில் வந்திருந்து பின்னர் நீக்கம் செய்யப்பெற்றன என்பதல்ல இது தொகையாக்கத்தின் இயல்பின் (வலியின்) பாற்படும். (பார்க்க: தொல்காப்பியச் சூத்திரம் 416–இன் உரை). உரையாசிரியர்கள் தொகையைத் தொகையின் வடிவ நிலை (தொகையாக்க நிலை), பொருண்மை நிலை (பொருள்கோள் நிலை) என்ற இரு நிலைகளில் காண்கின்றனர் என்பது தெளிவு. தொகை அடிப்படையில் தொகை வடிவினைப் புரிந்துகொள்ள வேண்டித்தான் பொருண்மை நிலை தனியாக எடுத்துக்கொள்ளப்படுகிறது; இந்நிலை உண்மையில் முன்னரே உள்ளது என்பதல்ல. சேனாவரையரின் வாதம் இதுதான்.

பிற உரையாசிரியர்கள் ஒரு பொருண்மை நிலை உள்ளது என்றும் அது தொடர்நிலை என்றும் அதனின்றும் தொகைகன் நீக்காதாற் பெறப்படும் என்றும் கருத்துரை செய்கின்றனர். அவர்கள் இடமாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. நச்சினாக்கினியர் வினைத்தொகையைப் பற்றி பேசுகையில் அத்தொகையின் முதல் சொல்லாகிய வினைவேரானது எச்சப்பெயர் என்ற காரணத்தால் அதற்குப் பிறயிடங்களில் வருவதைப் போன்று எச்சயியல்பு (வலு) இருக்கிறது என்கிறார் (பார்க்க: தொல்காப்பியச் சூத்திரம் 415 – இன் உரை). *சாத்தான்கரியன்* என்பது *கரியன்சாத்தான்* என்று வரலாகும்; *கரியன்சாத்தான்* என்பது *கரியசாத்தான்* என்பதைக் குறிப்பிட்டு நிற்கலாம். மரபிலக்கணங்கள் இத்தகைய இடமாற்றத்தைப் பற்றிக் கூறுகின்றன. நச்சினார்க்கினியரும் இவர் கருத்தைப் பங்கிடுவோரும் தொகை பற்றிய அவர்தம் விளக்கங்களில் இடமாற்றம் பற்றி பிரத்தேகமாகக் குறிப்பிடவில்லை. சேனாவரையர் தன்னுடைய நிலைமையை நியாயப்படுத்தத் தொல்காப்பியச் சூத்திரம் 94-இல் உயர்திணைப் பெயரும் உறவுப்பெயரும் தொகையாக வந்து விரிகையில் வேற்றுமை ஒட்டான -*அது* இழப்புற -கு வருவதைக் குறிப்பிடுகிறார்.

“அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகையின்

அதுவென் உருபுகெடக் குகரம் வருமே” (சூத்திரம்:94)

தொகையான சேத்தன்மகன் விரிகையில் கிழமை வேற்றுமை ஒட்டான -*அது* இழப்புற -கு வருவது உருவக வழக்கு என்பது சேனாவரையரின் கருத்தாகும். இந்த நிலையில் கூட -*அது* வழுவான காரணத்தால் கு-ஆல் இடப்பெயர்ச்சியுற வேண்டி அங்கு வரத்தேவையில்லை என்கிறார். விளக்கத்திற்கு வேண்டி -அது கருதிக் கொள்ளப்பட்டு பின்னர் கு-ஆல் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது. எனவே விளக்கநிலை தொகைநிலைக்கு முன்னதாக இருக்க இயலாது. சில தொகைகள் தொல்காப்பியரால் கூடக் குறிப்பிட்ட சொற்களால் பிரிக்க இயலாதவையாய்க் கருதப்படுவதைச்

சுட்டிக்காட்டுகிறார். எடுத்துக்காட்டாக வினைத்தொகையில் முதல் சொல்லான வினைவேர் அல்லது வினைப்பெயர் மூன்று காலங்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பிடலாம். *கொல்யானை* என்பது 'கொல்லும் யானை அல்லது கொன்ற யானை' எனப் பொருள்படலாம்; இது இப்படியென்றால் எவ்வாறு அவற்றைத் திட்டவட்டமாக இரண்டு சொற்களாகப் பிரிக்கலாம் என்பது ஐயத்திற்கிடமாகும். விளக்க நிலையில் தான் சொற்கள் திட்டவட்டமாகப் பிரிக்கப்படலாமேயன்றி அதற்கு முன்பல்ல என்பது சேனாவரையரால் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொல்காப்பியர் பயன்படுத்திய *கெட* என்ற சொல்லின் வலுவை உணர்ந்து கொள்ள சேனாவரையர் தவறிவிட்டார் என நச்சினார்க்கினரியர் குறிப்பிடுகிறார். *அது* என்ற வேற்றுமை ஒட்டை பொறுத்தவரையில், *சேத்தனது* என்ற தொடரில் 'கெடுதல்' என்பது முந்தைய நிலையைக் குறிப்பதாகும்.

கூட்டுகளை உள்வட்டக்கூட்டு (endocentric compound), வெளிவட்டக்கூட்டு (exocentric compound) எனப் பிரிக்கலாம். அம்மொழித்தொகை வெளிவட்டக்கூட்டின் காணப்படும் உள்வட்டக்கூட்டானது பணிநிலை உள்வட்டக்கூட்டாகவோ (subordinate endocentric compound) சமநிலை உள்வட்டக்கூட்டாகவோ (co-ordinate endocentric compound) வரலாம். பணிநிலை உள்வட்டக்கூட்டு இருமைக்கூறுகளாகக் கூறப்படும்; அதாவது இரண்டிரண்டாகக் கூறுபடும். ஆனால் சமநிலை உள்வட்டக்கூட்டு (இரண்டோ இரண்டிற்கு மேற்பட்ட) பல கூறுகளாகக் கூறுபடும். தொல்காப்பியரின் பார்வையில் இந்த வேறுபாடு இருப்பது தெரிகிறது; உரையாசிரியர்கள் இதை உம்மைத்தொகை பற்றி விளக்குகையில் குறிப்பிடுகிறார்கள். பிற தொகைகளில் இரண்டிற்கும் மேற்பட்ட சொற்கள் வந்தாலும் அவைகள் இரண்டு அலகுகளாக, அதாவது அடையாகவும் தலைச்சொல்லாகவும் கூறுபடும். சமநிலை உள்வட்டக்கூட்டில் இரண்டிற்கும் மேற்பட்ட அலகுகள் இணையலாம். கூட்டாக்க நிலையில் முன்னர் வரும் சொற்களின் ஒருமை ஒட்டு

இழப்புற இறுதியில் வரும் சொல்லில் ஒருமை ஒட்டு இழப்புற இறுதியில் வரும் சொல்லில் ஒருமை ஒட்டு பன்மை ஒட்டால் இடப்பெயர்ச்சி செய்யப்படும் (எ.கா. *கபிலரும் பரணரும்>கபிலபரணர்*). இங்கு ஆரம்ப நிலையிலிருந்த ஒருமை ஒட்டுகள் கூட்டுநிலையில் இழப்புற்று பன்மைஒட்டு புதிதாய் ஏற்படுத்தப்படுகிறது.

மரபிலக்கணத்தார் தொகைகளைத் தொகைகளாய்க் காண்பதாய்த் தெரிகிறது. முதல் வகைத் தொகைகளைச் சமநிலை உள்வட்டக் கூட்டுகள் என்றும் இரண்டாம் வகைக் கூட்டுகளை மரபிலக்கணத்தார் நோக்கில் வேற்றுமைத் தொகைக்கூட்டு, வினைத்தொகைக் கூட்டு, பண்புத்தொகைக் கூட்டு, உவமைத்தொகைக் கூட்டு என்று வகைப்படுத்தலாம். மூன்றாம் வகைத்தொகைகளை வெளிவட்டக்கூட்டுகள் என்று கூறலாம். அம்மொழித்தொகைக் கூட்டுக்கள் வெளிவட்டக்கூட்டுகளின் கண்படும்.

3.9.4. நன்னூலின் அணுகுமுறை

நன்னூலின் ஆசிரியரான பவணந்தி நன்னூல் என்ற பிரசித்தி பெற்ற இலக்கணத்தைப் பதிமூன்றாம் நூற்றாண்டில் எழுதினார். அவர் இளம்பூரணரின் தொல்காப்பிய உரையைப் பின்பற்றி இந்த இலக்கண நூலை எழுதியுள்ளதாய்த் தெரிகிறது. தொகை பற்றிய இவரது சூத்திரங்கள் சொல்லதிகாரத்தில் பொதுவியலில் கூறப்பட்டுள்ளது. (சூத்திரம் 316–இல் இருந்து 373 வரை) சூத்திரம் 361-இல் இவர் தொகைகளைப் பற்றி விளக்கம் தருகிறார். "பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை முதலிய பொருளி வைற்றி னுருபிடை எழிய விரண்டு முதலாத் தொடருந்தொரு மொழிபோ டைப்பனதொகைநிலைத் தொடர்ச்சொல்" 'பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் வேற்றுமை வினை பண்பெனப் பின்னர் வகுத்துக்கூறும் அறுவகைப் பொருள் புணர்ச்சிக் கண் அவற்றின் உருபுகள் இடையே தொக்கு நிற்ப இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து, ஒரு மொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொற்கள்' என்பது பவணந்தியின்

தொகை பற்றிய விளக்கமாகும். இவர் கருத்துப்படி ஒரு தொடரில் நிலைமொழியும் (முதலில் நிற்கும் சொல்) வருமொழியும் (வந்து சேரும் சொல்) சேர்கிறபோது, இரண்டுக்கும் இடையில் வேற்றுமை உருபுகளோ பண்பு, வினை, உவமை முதலியவற்றின் உருபுகளோ மறைந்து நிற்குமானால் அத்தொடர்களைத் தொகைநிலைத்தொடர் எனலாம் என்று அறிகிறோம். 'சொற்கள் தொடர்ந்து நிற்கும் சொற்றொடர்களின் சொற்களின் இடையில் வரும் 'உருபுகள்' நீக்கமுறும் போது தொகைப் பெறப்படுகின்றது என்று 'நீக்கம்' அடிப்படையிலான தொகையாக்கத்தை முன்வைக்குதம் இலக்கண ஆசிரியர் குழுவைச் சார்ந்தவராய் இவரும் இருக்கிறார். இவரும் தொல்காப்பியரைப் பின்பற்றி

'வேற்றுமை வினைபண் புபவமை யும்மை

அன்மொழி யெனவத் தொகையாறாகும்'

என்று ஆறு வகையான தொகைகளைக் குறிப்பிடுகிறார்.

'இரண்டு முதலா விடையா றுருபும்

வெளிப்பட வில்லது வேற்றுமைத் தொகையே' (சூத்திரம் 863)

என்றும்,

'காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை'

என்றும்,

'பன்மை விளக்கு மொழிதொக் கனவும்

'ஒருபொருட் கிருபெயர் எற்கவுங் குணத்தொகை'

என்றும்,

'உவம் வுருபில துவமத் தொகையே'

என்றும்,

‘போல புரைய வொப்பவுறழ

மான கடுப்ப வியைய வேய்ப்ப

நேர நிகரவன்ன வின்ன

என்பவும் பிறவு முவமுத்துருமே’

எனவும்,

‘எண்ணலெடுத்தன் தன்முகத்தனீட்டல்

எனுநான் களவுள் உம்மில தத்தொகை’

எனவும்,

ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி,

எனவும் ஆறு தொகைகளுக்கும் விளக்கம் தருகிறார்.

வேற்றுமையுருபுகள் வெளிபட வராத தொடர்கள் வேற்றுமைத்தொகை எனக் கூறும் இவர் இளம்பூரணரின் ‘நீக்கக்கொள்கையை’ ஆதரிக்கிறார். இவரது வினைத்தொகை பற்றிய விளக்கமும் ‘காலமில்லாத பெயரெச்சம் வினைத்தொகை’ என்று இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கருத்தைப் பின்பற்றியே அமைகிறது. இதன்படி வினைத்தொகையில் காலம் காட்டும் ஒட்டும் பெயரெச்ச ஒட்டும் மறைந்து வரும் என்று கொள்ளவேண்டும். பவணந்தி இளம்பூரணரைப் பின்பற்றி பண்புத்தொகை இருவகைப்படும் என்கிறார். 1. ஒருவகைப் பண்புத்தொகையில் பண்பை விளக்கும் ‘மொழிதொக்க வரும்’ 2. பிறிதொன்றில் இரண்டு பெயர் வந்து ஒரு பொருளைத் தரும் இதை மரபிலக்கணத்தார் இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். பவணந்தி இளம்பூரணரைப் போலவே உவமை உருபில்லாது வருவது உவமைத்தொகை என்று குறிப்பிட்டு மேலும் மறைந்து வரும் உவம உருபுகளாகப் *போல, புரைய, ஒப்ப, உறழ,*

மான, கடுப்ப, இயைய, வேய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன போன்றவைகளைக் குறிப்பிடுகிறார். உம் இல்லாது வரும் தொகை உம்மைத்தொகை என்று குறிப்பிடும் பவணந்தி எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்களவைபயின் போது -உம் வராது வருவது உம்மைத்தொகை என்பதை 'வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகை நிலைத்தொடர் மொழிகட்கும் புறத்த அவையல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொகுதல்' என்று விளக்குகிறார். தொல்காப்பியர் மூன்று வகை அன்மொழித்தொகையைக் குறிப்பிடும்போது பவணந்தி இளம்பூரணரைப் பின்பற்றி ஐவகை அன்மொழித்தொகை பற்றிப் பேசுகிறார். தொகைப் பொருள் சிறப்பு தொல்காப்பியரைப் போலவே இவரும் நான்கு இடங்களில் தொகைப் பொருள் சிறப்பதைப் பற்றிக் கூறுகிறார். 'முன்மொழி பின்மொழி பன்மொழி பிறமொழி எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப் பொருள்" (சூத்திரம் 370) தொகைகளில் உருபொனியல் மாற்றம் இவர் இளம்பூரணரைத் தொடர்ந்து தொகைகளில் உருபொனியல் விதிகளைப் பற்றிப் பேசுகிறார். 'வல்லொற்று வரினே யிடத்தொகையாகும் மெல்லொற்று வரினே பெயர்த்தொகையாகும்' (சூத்திரம் 371). இக்கருத்துப்படி பெயர்கள் சேர்ந்து வரும்பொழுது இருவகையான மாற்றங்கள் விளையலாம்: ஒரு நேர்வில் வருமொழியின் முதலில் வரும் புறவுயிர்ப்பு அடைப்பொலி (plosive) இரட்டி இடத்தொகையெனக் காட்டும். பிரிதொரு நேர்வில் இரட்டிப்பதற்கு பதில் நிலைமொழியின் ஈன்றில் வரும் மூக்கொலி வருமொழியின் புறவுயிர்ப்பு அடைப்பொலியைப் பொறுத்து உறுப்பொன்று மூக்கொலியாய் (homorganic nasal) மாறும். எ.கா. *வடுக+கண்ணன்* > *வடுகக் கண்ணன்* 'வடுகநாட்டைச் சார்ந்த கண்ணன்' *வடுகன்* + *கண்ணன்* > *வடுகங்கண்ணன்* 'வடுக இனத்தைச் சார்ந்த கண்ணன்' தொகை நிலைத் தொடர்களின் பொருள் மயக்கம்

நன்னூலார் சூத்திரம் 373-இல் தொகைநிலைத் தொடர்கள் பொருள் மயக்கமுறுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

'தொக்குழி மயங்குற விரண்டு முதலேழ்

எல்லைப் பொருளின் மயங்கு மென்ப'

'தொகைநிலைத் தொடர்கள் உருபு தொக்கு நின்றமையினால் பொருளின் மயங்கும்' என்கிறார் ஆசிரியர். எடுத்துக்காட்டாக, *தெய்வ வணக்கம்* என்பது 'தெய்வத்தை வணங்கும் வணக்கம்' என்றும் 'தெய்வத்திற்கு வணக்கம்' என்றும் விரிந்து பொருள்படலாம். தொல்காப்பியரும் வேற்றுமை மயங்கியலில் பொருள் மயங்கி வரும் கட்டுக்களைப் பற்றி கூறுகின்றார். இவ்வாறு பவணந்தி தொல்காப்பியரை இளம்பூரணாரின் பார்வையில் கண்டு இலக்கணம் கூறுகிறார்.

3.10. சுருக்கவுரை

மரபிலக்கணக்கணங்கள் பெயர்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைப் பொதுப் பெயர் அல்லது விரவுப் பெயர் என முன்றாக வகைப் படுத்தும். தொல்காப்பியர் உயர்திணைப் பெயர்களை நிலப் பெயர்கள், குழுவின் பெயர்கள், வினைப் பெயர்கள், உடைப் பெயர்கள், பண்புகொள் பெயர்கள், பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர்கள், பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்கள், பல்லோர் குறித்த திணைநிலைப் பெயர்கள், இன்றிவர் என்னும் எண்ணுப் பெயர்கள் என பத்தாகப் பகுப்பார். தொல்காப்பியர் ஆறு ஒருமைச் சுட்டுப் பெயர்களையும் ஆறு பன்மைச் சுட்டுப் பெயர்களையும் முன்று வினாப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களாகப் பட்டியலிட்டு வேறு சிலவற்றையும் இதில் உள்ளடக்குகின்றார். அஃறிணை விரவுப் பெயர்களாக வரும் நிலையும் விளக்கப்பட்டுள்ளது.

பெயர்ச் சொற்கள் மேலும் ஆண்பெயர், பெண்பெயர், ஒன்றன் பெயர், பலவற்றின் பெயர் என நான்கு இயற்பெயர்களாகவும் ஆண் சினைப் பெயர், பெண் சினைப் பெயர், ஒன்றன் சினைப் பெயர், பலவற்றின் சினைப் பெயர் என நான்கு சினைப் பெயர்களாகவும் ஆண் முறைப் பெயர், பெண்முறைப் பெயர் என இரண்டு முறைப் பெயர்களாகவும் தொல்காப்பியரால் பகுக்கப்படுகின்றன. வினையாலணையும் பெயர்கள் தெரிநிலை வினையாலணையும் பெயர்கள், குறிப்பு வினையாலணையும் பெயர்கள் என அமைகின்றன.

தொகைப் பெயர்களைப் பற்றி மரபிலக்கணங்கள் விரிவாகப் பேசுகின்றன. தொகைகளை வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என ஆறாகப் பகுத்து தொல்காப்பியம் ஆய்கின்றது. உரையாசிரியர்களும் தொகை பற்றி தங்கங்கள் விளக்கங்களை தருகின்றனர். நன்னூல் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரின் உரையைப் பின்பற்றி தொகைகளை விளக்குவதாகத் தெரிகின்றது.

இயல் 4

தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வு

4.1. முன்னுரை

தமிழ் ஒரு திராவிட மொழி. இம்மொழி வினைச்சொல்லை இறுதியாகக் கொண்ட வாக்கியங்களை உடையதாகும். இம்மொழி இலக்கணச் செயற்பாங்குகளை (அதாவது இலக்கணப் பொருண்மைகளை) உருபனியல் நிலையில் வெளிப்படுத்தும் ஒட்டுக்கள் நிறைந்த மொழியாக விளங்குகிறது. இம்மொழி உள்ள ஒவ்வொரு வேர் உருபனும் ஆயிரக்கணக்கான சொற்களின் உருவாக்கத்திற்கு (அதாவது திரிபு மற்றும் ஆக்க வடிவுகளின் உருவாக்கத்திற்கு) அடிப்படையாக அமைகிறது. தமிழ் வாக்கியங்கள் எழுவாய்தொடரையும் வினையையும் கொண்ட அமைப்பாகவோ எழுவாய்த் தொடரையும் செயப்படுபொருள் தொடரையும் வினையும் கொண்ட அமைப்பாகவோ அமையும். விளக்க மொழியியல் ஆய்வு அடிப்படையில் பெயர்ச் சொற்கள் என்பன வேற்றுமைக்காகவும் பன்மை எண்ணுக்காகவும் திரிபுருவன. பெயர்கள் பெயர்த்தொடர்களின் தலைச் சொல்லாக அமையும். பெயர்த்தொடர்கள் எழுவாயகவோ செயப்படுபொருளாகவோ அல்லது பிற வேற்றுமைத் தொடர்களாகவோ செயல்புரியும். பெயர்ச் சொற்கள் காலத்திற்காகத் திரிபுறுவதில்லை; இருப்பினும் வினையாலணையும் பெயர்கள் கால ஒட்டுக்களைக் கொண்டிருக்கும்.

4.2. பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பு

தமிழ்ச் சொற்களை உருபனியல் அடிப்படையிலும் தொடரியல் அடிப்படையிலும் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை என்ற முக்கியமான சொல் வகுப்புகளாகப் பகுப்பர். இவற்றில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளும் பன்மையை உணர்த்தும் ஒட்டும் ஏற்று வரும். மேலும் பெயர்கள் *ஆக, ஆய், ஆன* என்ற ஒட்டுக்களையும் ஏற்று வரும்.

4.2.1. பெயரின் திரிபு

பெயர்கள் வேற்றுமைக்கும் எண்ணிற்கும் திரிபுறும் எனப் பார்த்தோம். திரிபுற்ற ஒரு பெயர்ச்சொல் பெயர்ப்பகுதி, எண் மற்றும் வேற்றுமை என்ற மூன்று உருபன்களின் ஒலியனியல் உட்படுத்தம் ஆகும். இதைப் பின்வருமாறு வெளிப்படுத்தலாம்:

பெயர் (+ எண்) (+ வேற்றுமை)

ஒலியனியல் நிலையில் திரிபுற்ற பெயர் வடிவம் மேற்சொன்ன மூன்று உருபன்களையும் மெய்ப்படுத்தும் செய்யும் மூன்று உருபுகளை மட்டும் எப்பொழுதும் கொண்டிருப்பதில்லை. ஏனென்றால் பெயர்த் திரிபின் போது இலக்கண உருபன்களை மெய்ப்படுத்தம் செய்யும் எண் மற்றும் வேற்றுமைப் பின்னொட்டுகள் தவிர சொல் அல்லது இலக்கணச் செயல்பாடில்லாத சில ஒலியனியல் ஒட்டுக்களும் வரலாம். இவ்வொலியனியல் பின்னொட்டுகள் வெற்றுருபன்கள் (empty morpheme) எனப்படும். அதாவது அவை ஒரு உருபனை உருப்படுத்தம் செய்யாது. இலக்கண நூல்களில் இவ்வுருபனியல் பின்னொட்டுகள் சாரியைகள் (inflectional increments) எனப்படும். கட்டாய மற்றும் விருப்பு ஒலியனியல் பின்னொட்டுகள்/சாரியைகள் இவற்றுக்கிடையில் வேறுபாட்டைக் கருதலாம். நாம் கட்டாயத் திரிபு சாரியைகளைத் திரிபு (oblique) சாரியைகள் அல்லது திரிபு ஒட்டுகள் என்றும் கூறலாம். விருப்புத் திரிபு சாரியைகளை ஒலி

நிரவல் (euphonic) சாரியை அல்லது ஒலி நிரவல் பின்னொட்டுகள் என்றும் குறிப்பிடலாம்.

உள்ளுறை அமைப்பில் இரு இலக்கண உருபன்கள் (ஒன்று எண்ணாகவும் மற்றொன்று வேற்றுமையாகவும் வரும்) பெயர் உருபனுடன் வரும். ஒலியனியல் நிலையில் நான்கு வகையான உருபுகள் (பின்னொட்டுகள்) பெயர்ப் பகுதியுடன் சேர்ந்து வரும். அவை பின்வருவனவாகும்.

1. பன்மைப் பின்னொட்டு
2. திரிபு பின்னொட்டு (சாரியை)
3. ஒலிநிரவல் பின்னொட்டு (சாரியை)
4. வேற்றுமைப் பின்னொட்டு

இந்நான்கு பின்னொட்டுகளும் பெயர்ப்பகுதியுடன் பின்வருமாறு வரும்:

- பெயர் எண்ணுக்காகத் திரிபுறும்போது பன்மைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியில் சேர்க்கப்படும்.

  பெயர்ப் பகுதி + பன்மைப் பின்னொட்டு

  எ.கா.

  வீடு-கள், எலி-கள்

- பெயர் வேற்றுமைக்காகத் திரிபுறும்போது வேற்றுமைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியுடன் நேரிடையகவோ திரிபுப் பகுதியுடனோ சேர்க்கப்படும்.

பெயரின் திரிபுப் பகுதி பெயருடன் திரிபு ஒட்டைச் சேர்ப்பதனாலோ நிலை மொழியின் இறுதி மெய்யொலியை இரட்டுவதாலோ உருவாக்கப்படும். ஒலி நிரவல் சாரியை *இன்* (சில நேர்வுகளில் *–அன்*) பெயர் அல்லது திரிபுப் பகுதிக்கும் வேற்றுமைப்

பின்னொட்டுக்கும் இடையில் விருப்பாக வரும். இவ்வுருபன் அமைப்பொழுங்கைப் (morphotactics) பின்வருமாறு தரலாம்:

பெயர்ப்பகுதி / திரிபுப்பகுதி + (ஒலிநிரவல் சாரியை) + வேற்றுமைப் பின்னொட்டு

வீடு- கள்(-இன்)- ஐ > வீடுகளை/வீடுகளினை

கை-கள்(-இன்)- ஐ > கைகளை/கைகளினை

பெயர் அல்லது திரிபுப் பகுதியுடன் பன்மை, வேற்றுமை மற்றும் ஒலியன் ஒட்டுகளைச் சேர்க்கும்போது பல உருபொலியனியல் விதிகள் செயல்படும். எடுத்துக்காட்டாக இடைவெளியைத் (hiatus) தவிர்க்க *வ்* அல்லது *ய்* என்ற ஒலியன் வடிவு உடன்படுத்தியாகச் (glide) சொருகப்படும். இதைப்பற்றி பின்னால் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

4.2.2 பெயர்ப் பகுதி

பெயர்ப்பகுதி என்பது திரிபுப் பின்னொட்டுகள் சேர்க்கப்படாத பெயர் வடிவமாகும். இவ்வடிவில்தான் பெயர்கள் அகராதியில் பட்டியலிடப் பட்டுள்ளன. இவை எழுவாய் வடிவிலும் வரும். பெயர்ப்பகுதி தனியாகவோ கலப்பாகவோ வரலாம். பெயர்ப்பகுதி ஒரு பெயர் வேரைக் கொண்டிருக்கும் (எ.கா. *கல்*); ஒரு கலவைப் பெயர்ப்பகுதி ஒரு வேரையும் (எ.கா. ஒரு வினைப் பகுதியும்) ஒரு ஆக்க ஒட்டையும் (எ.கா. பெயராக்கப் பின்னொட்டு *ப்பு*) கொண்டிருக்கலாம்.

[பெ[வி படி] -ப்பு]

அல்லது அது ஒரு வேரையும் பால் பின்னொட்டையும் கொண்டிருக்கலாம்.

மாண-வ்-அன் >மாணவன், மாண-வ்-இ > மாணவி, மாண-வ்-அர் > மாணவர்

தலை-வ்-அன்> தலைவன், தலை-வ்-இ> தலைவி, தலை-வ்-அர் > தலைவர்

இதில் *-அன்* என்பது ஆண்பால் பின்னொட்டாகும். *-இ* என்பது பெண்பால் பின்னொட்டாகும். *-அர்* என்பது பலர்பால் (உயர்வுப் பன்மை) பின்னொட்டாகும். பல பெயர்ப்பகுதிகள் *அ* என்பதில் முடியும் வேரையும் பகுதியை உருவாக்கும் (stem forming) பின்னொட்டான *ம்* என்பதையும் கொண்டிருக்கும்.

மர-ம் > மரம், பழ-ம் > பழம், நில-ம்> நிலம், திட்ட-ம்> திட்டம்

4.2.3 திரிபுப் பகுதி

சில பெயர்கள் பெயர்ப்பகுதியுடன் திரிபுப்பகுதி (oblique stem) என்று அழைக்கப்படும் திரிபுப் பெயர் வடிவத்தையும் கொண்டிருக்கும். சில திரிபுப் பகுதியைக் கொண்டிருக்காது. திரிபுப்பகுதிக்கு நான்கு மடங்கு செயல்பாடும் சூழல் வருகையும் இருக்கும். மேற்சொன்ன எடுத்துக்காட்டில் காட்டியுள்ளது போல் முதலாவது, இப்பெயர் வடிவத்துடன் தான் வேற்றுமைப் பினொட்டுகள் சேர்க்கப்படுகின்றன; இரண்டாவது பெயரின் வடிவம்தான் பெயர் ஒரு அடையாகக் கிழமைச் செயல்பாட்டுடன் தலைமைப் பெயருக்கு முன்னால் வரும் வடிவமாகும்; மூன்றாவது இப்பெயர் வடிவம்தான் சுட்டுப்பெயர் கட்டுமானத்தில் முதல் பெயர்த் தனிமமாக வரும் வடிவமாகும். நான்காவது இப்பெயர் வடிவம்தான் பல பின்னுருபுகளுக்கு முன்வரும் வடிவமாகும். திரிபுப்பகுதியாக வரும். பெயர்கள் திரிபுப் பகுதியாக வருமா வராதா என்பதன் அடிப்படையிலும் திரிபு அடியாக வந்தால் அவற்றின் ஒலியனியல் வடிவம் அடிப்படையிலும் பெயர்களை நான்கு வகுப்புகளாக வேறுபடுத்திக் காட்டலாம்.

1) *த்து* என்ற திரிபு ஒட்டு உடைய திரிபுப் பகுதி
2) *அற்று* என்ற திரிபு ஒட்டுடைய திரிபுப் பகுதி

3) மெய்யொலிகள் இரட்டிப்பால் உருவாக்கப்படும் திரிபுப் பகுதி

4) மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதி

4.2.3.1. *த்து* என்ற திரிபு ஒட்டு உடைய திரிபுப் பகுதி

இவ்வகுப்பில் வரும் பெயர்கள் *அம்* என்ற இறுதி அசையைக் கொண்டிருக்கும் (எ.கா. மரம், நிலம், பழம்). இப்பெயர்கள் அவற்றின் இறுதி ஒலியனான *ம்* என்பதை *த்து* என்ற திரிபு ஒட்டால் இடம்பெயர்த்துத் திரிபுப் பகுதியை உருவாக்கும்.

மர-த்து > மரத்து, பழ-த்து>பழத்து, நில-த்து>நிலத்து, தோட்ட- த்து>தோட்டத்து

இத்திரிபுப்பகுதியின் வருகையின் நான்கு சூழல்கள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   தோட்ட-த்த்-இல் > தோட்டத்தில்

2. திரிபுப்பகுதி + தலைமைப் பெயர்

   தோட்ட-த்து-க் கதவு > தோட்டத்துக் கதவு

3. திரிபுப் பகுதி + பெயர் (பெயர்-பெயர் கூட்டில்)

   தோட்ட-த்து-ப் பூ > தோட்டத்துப் பூ

4. திரிபுப் பகுதி- பின்னுருபு

   தோட்ட-த்து-ப் பக்கம் > தோட்டத்துப் பக்கம்

திரிபு வடிவுகளைத் தொடர்ந்து வரும் பெயர்களின் அல்லது பின்னுருபுகளின் தொடக்க அடைப்பு ஒலிகளாக *க், ச், த், ப்* என்பனவற்றின் அடிப்படையில் முன்னர் வரும் திரிபுப் பகுதி சம்பந்தப்பட்ட அடைப்பொலிக்கு இரட்டித்த ஒலியைக் கொண்டிருப்பதை உணராலாம்.

4.2.3.2. *அற்று* என்ற திரிபு ஒட்டுடைய திரிபுப் பகுதி

இவ்வகுப்பு ஐந்து பெயர்களைக் (மாற்றுப் பெயர்களை) கொண்டிருக்கும். இவை ஒரே திரிபு ஒட்டை ஏற்கும் என்பதன் அடிப்படையில் பொதுவான பண்பைக் கொண்டிருக்கின்றன. இவை பல, சில, அவை, எல்லாம் என்பனவாகும். இப்பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியை *அற்று* என்ற திரிபு ஒட்டு சேர்க்கப்படும்போது உருவாக்கும். எல்லாம் என்பதில் *ம்* என்பது நீக்கப்படும். *இவை, அவை* என்பனவற்றில் *ஐ* என்பது *அ* என சுருக்கப்படும்.

பல-வ்-அற்று > பலவற்று

அ-வ்-அற்று > அவற்று

எல்லா-வ்-அற்று > எல்லாவற்று

இந்த வகையில் படும் திரிபுப் பகுதி வரும் சூழல்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   பல-வ்-அற்-ஓடு > பலவற்றோடு

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   பல- வ்- அற்-இன் விலை > பலவற்றின் விலை

3. திரிபுப் பகுதி + முன்னுருபுத் தொடர்

   பல-வ்- ற்-இன் பக்கம் > பலவற்றின் பக்கம்

இவ்வகையிற்படும் பெயர்களுடன் (மாற்றுப்பெயர்களுடன்) *இன்* என்ற ஒலிநிரவல் சாரியை கட்டாயமாக அற்று என்ற திரிபு ஒட்டுக்குப் பின்னால் அவை பெயர் விசேடணமாக வரும்போதோ அல்லது பின்னுருபால் தொடரப்படும்போதோ வரும்.

4.2.3.3 மெய்யொலிகள் இரட்டிப்பால் உருவாக்கப்படும் திரிபுப் பகுதி

டு அல்லது *று* என்ற அசைகளால் இறுதியுறும் எல்லாப் பெயர்களும் இவ்வகுப்பில் அடங்கும் (எ.கா. *வீடு, நாடு, ஆறு, கிணறு*). இவ்வகுப்பைச் சார்ந்த பெயர்கள் இறுதி அசையின் மெய்யெழுத்துக்கள் இரட்ட திரிபு அடியை உருவாக்கும்.

வீடு > வீட்டு, நாடு > நாட்டு, ஆறு > ஆற்று, கிணறு > கிணற்று

இவ்வகையிற்படும் திரிபு அடியின் வருகைச் சூழல் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   வீட்-ட்-இல்> வீட்டில்

   கிணற்-ற்-இல்>கிணற்றில்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   வீட்-டு-க் கதவு>வீட்டுக் கதவு

   கிணற்-று-ச் சுவர்>

3. திரிபுப் பகுதி + பெயர்

   வீட்-டு வேலை > வீட்டுவேலை

   கிணற்-று-த் தண்ணீர் > கிணற்றுத் தண்ணிர்

4. திரிபுப் பகுதி + முன்னுருபுத் தொடர்

   வீட்-டு-ப் பக்கம் >வீட்டுப் பக்கம்

   கிணற்-று-ப் பக்கம் >கிணற்றுப் பக்கம்

மேற்சொன்ன மூன்று வகுப்பில் படாத பெயர்ச் சொற்கள் யாவும் பெயரின் நான்காவது வகுப்படிச் சாரும். இவைகள்தாம் பெயர்களில் பெரும்பான்மையாகும் பிற வகுப்பைச் சார்ந்த பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியாக வருமிடங்களில் இவை அவற்றின் பெயர்ப் பகுதியாக வரும்.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   தலை-ய்-இல் > தலையில்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   தலை மயிர்

3. திரிபுப் பகுதி + பெயர்

   தலை வலி

4. திரிபுப் பகுதி + பின்னுருபு

   தலை மேல்

4.2.3.4. மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதி

மாற்றுப் பெயர்கள் பெயர்ச்சொல்லின் வகைப்பாட்டின் ஒரு அடைப்பட்ட துணைக் குழுமமாகும். மாற்றுப் பெயர்கள் பெயர்களின் துணைக்குழுமமாகக் குழுமப்படுவதின் காரணம் பெரும்பாலும் தொடரியல் சார்ந்ததாகும். எனவே மாற்றுப் பெயர்கள் தொடரியல் வகைப்பாட்டைச் சார்ந்ததாகக் கருதப்படிகின்றன. ஐந்து வகைப்படும் மாற்றுப் பெயர்களின் ஒரு வகைக்கு அதாவது மூவிட மாற்றுப் பெயர்களுக்குத் திரிபுப்பகுதி இருக்கின்றது. முதலாவது, இரண்டாவது, நான்காவது இடமாற்றுப் பெயர்களும், மூன்றாவது இடப்பன்மை அஃறிணை மாற்றுப் பெயர்களுக்கும் திரிபுப்பகுதி இருக்கின்றது. முதலாவது, இரண்டாவது, நான்காவது மாற்றுப் பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியை அவற்றின் மாற்றுப்பெயர்கள் வடிவின் ஒலியனியல் மாற்றத்தால் உருவாக்கின்றது. படர்க்கை இடப் பன்மை அஃறிணை மாற்றுப்பெயர்களுக்கு அற்று திரிபு ஒட்டுபெற்ற திரிபுப்பகுதி இருக்கின்றது. பின்வரும் அட்டவணை மாற்றுப் பெயர்களையும் அவற்றின் திரிபு வடிவங்களையும் காட்டும்.

இடம்	மாற்றுப்பெயர்	திரிபு வடிவம்
தன்மை ஒருமை	நான்	என் (ன்), என
முன்னிலை ஒருமை	நீ	உன் (ன்), உன்
படர்க்கை ஒருமை ஆண்பால்	இவன்/அவன்	இவன்/அவன்
படர்க்கை ஒருமை பெண்பால்	இவள்/அவள்	இவள்/அவள்
படர்க்கை ஒருமை அஃறிணை	இது/அது	இது/அது
படர்க்கை ஒருமை ஆண்பால் / பெண்பால்	இவர்/அவர்	இவர்/அவர்
தற்சுட்டு ஒருமை	தான்	தன்/தன
தன்மைப் பன்மை	நாங்கள்/நாம்	எங்கள்/ நம்(ம்), நம
முன்னிலைப் பன்மை	நீங்கள்	உங்கள்
படர்க்கைப் பன்மை ஆண்பால்/ பெண்பால்	இவர்கள்/அவர்கள்	இவர்கள்/அவர்கள்
படர்க்கை பன்மை/ அஃறிணை	இவை/அவை இவைகள்/அவைகள்	இவற்று/அவற்று இவைகள்/அவைகள்
தற்சுட்டுப் பன்மை	தாங்கள்	தங்கள்

மேற்சொன்ன அட்டவணைப்படி *நான்* என்ற தன்மைப் பெயருக்கு மூன்று திரிபுப் பகுதி வடிவங்கள் இருக்கின்றன: *என்*, *என்ன்*, *என*. *என* நான்காவது வேற்றுமைப்

பின்னொட்டுக்கு முன்னும், *என்ன்* என்பது *இடம்* என்ற பின்னுருபுக்கு முன்னும், *என்* தலைமைப் பெயருக்கு முன்னும் பிற பின்னுருபுகளுக்கு முன்னும் வரும்.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   என-க்கு > எனக்கு, என்ன்-இடம் > என்னிடம்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   என் வீடு

3. திரிபுப் பகுதி + பின்னுருபு

   என் பக்கம்

4.2 3.5. ஒலி நிரவல் சாரியைகள் *இன், அன்*

முன்னர் *த்து, அற்று* என்ற திரிபுச் சாரியைகளைப் பற்றிப் பார்த்தோம். இவை தவிர *இன், அன்* என்ற ஒலியனியல் பின்னொட்டுக்கள் வடிவத்திலிருக்கும் விருப்புத் திரிபுச் சாரியைகளும் இருக்கின்றன. இவை ஒலி நிரவல் முன்னொட்டுக்கள் என்று அழைக்கப்பெறும். *இன்* என்பது எல்லாப் பெயர்களுடன் மட்டும் வரும். *அன்* என்பது *இது* மற்றும் *அது* என்ற மாற்றுப்பெயர்களுடன் மட்டும் வரும். இவ்வொலி நிரவல் ஒட்டுக்களான *இன்* என்பதும் *அன்* என்பதும் வரும் சூழல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. வேற்றுமைக்காகத் திரிபுற்ற பெயர்களில் ஒலிநிரவல் பின்னொட்டு பெயர்ப்பகுதிக்கும் அல்லது திரிபுப் பகுதிக்கும் அல்லது பன்மை ஒட்டுக்கும் வேற்றுமைப் பின்னொட்டுக்கும் இடையில் வரும்.

   கை(-இன்)-ஆல் > கையால்/கையினால்

   அத்(-அன்)-ஆல் > அதால்/அதனால்

   யுத்த-த்த்(-இன்)-ஆல் > யுத்தத்தால்/யுத்தத்தினால்

கற்-கள்(-இன்)-ஆல் >கற்களால்/கற்களினால்

2. அடையாக வரும் பெயர்களுடன் உடைமை வேற்றுமைச் செயல்பாட்டில் தன்மைப் பெயருக்கு முன் வரும்.

கை(-ய்-இன்) புத்தகம் > கையின் புத்தகம்

மர(-த்த்-இன்) கிளை > மரத்தின் கிளை

பையன்-கள்(-இன்) சட்டை > பையன்களின் சட்டை

3. ஒரு கிளமைப் பின்னொட்டுக்கு முன் விருப்பாக, சில பெயர்களுடன் கட்டாயமாகப் பெயர்ப்பகுதிக்கு அல்லது திரிபுப்பகுதிக்கு அல்லது பன்மை ஒட்டுக்குப் பின் வரும்.

சாவி(ய்-இன்) மூலம் > சாவியின் மூலம்

அத்(-அன்) மூலம் > அதன் மூலம்

மர(-த்த்(-இன்) மூலம் > மரத்தின் மூலம்

ஆணி-கள்(-இன்) மூலம் >ஆணிகளின் மூலம்

4.2.4. எண் குறிப்பு

தமிழில் ஒருமை, பன்மை என்ற இரண்டு எண்கள் இருக்கின்றன. பன்மை ஒட்டு *-கள்/-க்கள்* என்பதால் உருப-ஒலியனியல் அடிப்படையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னர் கூறியபடி பன்மை ஒட்டு பெயர்ப்பகுதியுடன் சேர்க்கப்படுகிறது; பெயரின் திரிபு அடியுடன் சேர்க்கப்படுவதில்லை. பன்மை ஒட்டிற்கு *கள்*, *க்கள்* என்ற இருமாற்றுருபுகள் இருக்கின்றன. அவற்றின் வருகை பின்வருமாறு அமையும்: *க்கள்* நெட்டுயிர் இறுதியில் வரும் எல்லாப் பெயர்களுடனும் இரண்டு குற்றுயிர் உள்ள அசைகளைக் கொண்ட உ

என்ற குற்றுயிரால் இறுதியுறும் பெயர்களுடனும் சேர்ந்து வரும்; பிற இடங்களில் *கள்* வரும்.

ஒருமைப் பெயர்	-	பன்மைப் பெயர்	ஒருமைப்பெயர்	-	பன்மைப் பெயர்
பூ	-	பூ-க்கள்	கண்	-	கண்-கள்
ஈ	-	ஈ-க்கள்	மரம்	-	மரங்-கள்
பசு	-	பசு-க்கள்	வீடு	-	வீடு-கள்
தெரு	-	தெரு-க்கள்	கல்	-	கற்-கள்

4.2.5. வேற்றுமைக் குறியீடு/உருபு

பெயர் அல்லது பெயர்த்தொடருக்கும் வினைக்கும் அல்லது இரண்டு பெயர்களுக்கும் அல்லது பெயர்த்தொடர்களுக்கும் இடையில் வரும் தொடரியல் மற்றும் பொருண்மையியல் உறவுகளை வேற்றுமை வெளிப்படுத்தும். வினைப் பயனிலைகள் ஒரு வாக்கியத்தில் கட்டாய மற்றும் விருப்புப் பங்கெடுப்பாளர்களை எடுக்கும் (எ.கா. எழுவாய்ப் பெயர்த் தொடர்கள், செயப்படுபொருள், பெயர்த்தொடர்கள், வினையடைகள்). இவ்வாறு வேற்றுமைக் குறியீடுகள் (உருபுகள்) பெயர்த்தொடருக்கும் வினைப் பயனிலைக்கும் இடையிலுள்ள தொடரியல் மற்றும் பொருண்மையியல் உறவை வெளிப்படுத்துகிறது. அதாவது அவை ஒரு பங்கெடுப்பாளர் பெயர்த் தொடரின் இலக்கணச் செயன்மையைக் காட்டும் (எ.கா. எழுவாய் செயல்படு பொருள்). மேலும் அவை பயனிலையாக்கத்தில் பங்கெடுப்பாளர் பெயர்த்தொடரின் பொருண்மையியல் பங்களிப்பை வெளிப்படுத்தும் (எ.கா. ஒரு செயலின் அல்லது நிகழ்வின் காரணம், நிகழ்வு அல்லது நிலையின் இடம், இயக்கத்தின் மூலம் அல்லது இலக்கு). உடைமை வேற்றுமை இரண்டு பெயர்த்தொடருக்கு இடையில் உள்ள உறவை வெளிப்படுத்தும்.

உருபனியல், தொடரியல் அடிப்படையில் வேற்றுமைக் குறியீடு இரு வழிகளில் உருப்படுத்தம் செய்யப்படுகிறது.

1. வேற்றுமைப் பின்னொட்டுகளால்

2. பின்னுருபுகளால் (இவற்றில் சில கட்டுண்ட வடிவுகள்)

பின்னொட்டுக்களைப் பொறுத்தவைரையில் வேற்றுமைக் குறிப்பு வேற்றுமை பின்னொட்டு மற்றும் பின்னுருபு இவற்றின் ஒன்றுசேர்க்கையால் உருப்படுத்தம் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாகக் கருவியின் பொருண்மைப் பங்களிப்பு *ஆல்* என்ற பின்னொட்டாலும் (எ.கா. *சாவியால்*) மூலம் என்ற பின்னுருபாலும் (எ.கா. *சாவி மூலம்*) வெளிப்படுத்தலாம் இறுதியாகக் கருவியின் பொருண்மையியல் பங்களிப்பை ஒரு வேற்றுமைப் பின்னொட்டை ஆளும் பின்னுருபால் வெளிப்படுத்தலாம். கொண்டு என்ற பின்னுருபு இரண்டாம் வேற்றுமை உருவான *ஐ*-யை ஆளுகை செய்யும் (எ.கா. *சாவியைக் கொண்டு*). தற்காலத் தமிழில் ஆறு வேற்றுமைப் பின்னொட்டுகள் இருக்கின்றன.

வேற்றுமை	**பின்னொட்டுகள்**
செயப்படுபொருள்	ஐ
கொடைவேற்றுமை	(உ)க்கு
கருவி வேற்றுமை	ஆல்
உடன்நிகழ்ச்சி வேற்றுமை	ஓடு
இட வேற்றுமை	இல்
உடைமைப்பொருள் வேற்றுமை	அது

ஐந்து கட்டுண்ட பின்னுருபுகள் இருக்கின்றன.

கட்டுண்ட வேற்றுமை	**கட்டுண்ட பின்னுருபுகள்**
இடவேற்றுமை	இடம்

உடன்நிகழ்ச்சி வேற்றுமை	உடன்
மூல வேற்றுமை	இருந்து
பயனடை வேற்றுமை	ஆக

மரபு இலக்கணவியலார் வேற்றுமைப் பின்னொட்டுக்களையும் ஆக தவிர பிற கட்டுண்ட பின்னுருபுகளையும் பல இடப் பின்னுருபுகளையும் வேற்றுமை குறிகளாக எடுத்தாண்டனர். இக்குறிகளின் அடிப்படையில் அவர்கள் எட்டு வேற்றுமைகளை வேறுபடுத்தினர். இவைகள் அவற்றின் ஒலியனியல் வடிவத்தாலோ வரிசை எண்ணாலோ அடையாளப்படுத்தப்பட்டன. வேற்றுமைக் குறியீட்டால் குறிப்பிடப்படாத விளி வேற்றுமையும் அவர்கள் சேர்த்துக்கொண்டனர். பின்னர் மேனாட்டு இலக்கணத்தார்கள் இலக்கணத்தின் அல்லது சமஸ்கிருத இலக்கணக் கலைச்சொற்களைப் பயன்படுத்தி வேற்றுமை குறியின் செயல்பாடு அடிப்படையில் எட்டு வேற்றுமைகளை புலக்குறிப்பு செய்தனர்

1. எழுவாய் வேற்றுமை
2. செயல்படு பொருள் வேற்றுமை
3. கொடை வேற்றுமை
4. கருவி வேற்றுமை
5. உடன்நிகழ்ச்சி வேற்றுமை
6. இட வேற்றுமை
7. நீங்கல் வேற்றுமை
8. உடைமை வேற்றுமை
9. விளி வேற்றுமை

வேற்றுமைக் குறிகளின் மேற்சொன்ன புலக்குறிப்புகள் ஒரு வேற்றுமைக் குறியின் பொருண்மையை முழுவதுமாக உருப்படுத்தம் செய்யவில்லை; ஏனென்றால் அவை அவற்றின் செயல்பாடுகளில் ஒன்றைத்தான் வெளிப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாகக் கருவி வேற்றுமைப் பின்னொட்டு என்று புலக்குறிப்பு செய்யப்பட்ட *ஆல்* என்ற வேற்றுமைப் பின்னொட்டு கருவிச் செயல்பாட்டை வெளிப்படுத்துவதுடன் பிற கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன.

வேற்றுமை அடையாளக் குறியீட்டைப் பொருத்தவரையில் பின்வரும் பாகுபாட்டு அடிப்படையில் விளக்கலாம்:

1. வேற்றுமைப் பின்னொட்டு
2. கட்டுண்ட பின்னுருபுகள்
3. பின்னுருபுகள் (சுதந்திரமான வடிவுகள்)

பின்வரும் அட்டவணை வேற்றுமை உருபுகளையும் அவற்றின் வருகை முறைகளையும் அவற்றின் வேறுபட்ட செயல்பாடுகளையும் தரும்:

வேற்றுமை	**பின்னொட்டு/ பின்னுருபு**	**வருகை முறை**	**பொருள்/ செயல்பாடு**
1.எழுவாய் வேற்றுமை	**-Ø**		**எழுவாய்** எ.கா. *ராமன் வந்தான்* **பயனிலை** எ.கா. *குமரன் மாணவன்* **எழுவாய் நிரப்பி** எ.கா. குமரன் *மாணவன்* ஆவான் **செயப்படுபொருள் நிரப்பி** எ.கா. குமரன் *ராமனைத்*

			தலைவன் ஆக்கினான் **செயப்படுபொருள்** எ.கா. குமார் *தண்ணீர்* கேட்டான்
2.செயப்படு பொருள் வேற்றுமை	**-ஐ**		**செயப்படு பொருள்** எ.கா. ராமன் பையனை பார்த்தான்
3.கொடை வேற்றுமை	**-க்கு~ -உக்கு~-கு**	பெயர்களின் மற்றும் மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதியுடன் -க்கு வரும். எ.கா. மரத்து-க்கு பலவற்று-க்கு, ஆற்று-க்கு, என-க்கு இ/ஈ/ஐ/அய் என்று முடியும் பெயரடிகளுடன் க்கு வரும் எ.கா. தம்பிக்கு, ஈக்கு, சட்டைக்கு நாய்க்கு, படிப்புக்கு பிற எல்லாப் பெயரடிகளுக்குப் பின் உக்கு வரும். எ.கா. அம்மா-உக்கு, பால்- உக்கு, தெரு-வ்-உக்கு, பையன்-உக்கு, பெண்ண்-உக்கு	**அயற்செயப்படு பொருள்** எ.கா. குமார் *அப்பாவுக்கு* ஒரு படத்தைக் காட்டினான் **இயக்கத்தின் இலக்கு** எ.கா. குமார் *அப்பாவுக்கு* ஒரு கடிதம் கொடுத்தான் **காரணம்** எ.கா. குமார் *பணத்துக்குத்தான்* வேலை செய்கிறான் **அனுபவிப்பவர்** எ.கா. *குமாருக்கு* ஒரு புத்தகம் இருக்கிறது. **காலத்தின் கூறு** எ.கா. குமார் *ஐந்து மணிக்கு* வருவான் **விகிதம்** எ.கா. மருந்து ஒரு *நாளைக்கு* மூன்று வேளை சாப்பிடு **பகிர்ந்தளிப்புச் செயல்பாடு** எ.கா. *ஆளுக்கு* ஒரு டீ போடு **ஒப்புமை மாதிரி**

		கு ஒலிநிரவல் சாரியை *இன், அன்* என்பனவற்றைத் தொடர்ந்து வரும் எ.கா. பசு+இன்+கு> பசுவிற்கு, அது+அன்+கு அதற்கு	எ.கா. *குமாருக்கு* இவன் நல்லவன் **குறிப்பிடும் இடம்** எ.கா. *மதராசுக்கு* நூறு மைல் பின்னால்
4.பயனடை வேற்றுமை	-க்கு-ஆக ~ -உக்கு-ஆக ~ -கு-ஆக	க்கு-ஆக எ.கா. நாய்-க்கு-ஆக உக்கு-ஆக எ.கா.அவன்-உக்கு-ஆக கு-ஆக எ.கா.பசுவிற்-கு-ஆக	**பயனடைவு** எ.கா. ராஜா தன் பையனுக்காகப் பணம் சேர்த்தான் **காரணம்** எ.கா. ராஜா தன் *அப்பாவுக்காகச்* சீக்கிரம் வீட்டுக்கு வாந்தான்
5.கருவி வேற்றுமை	-ஆல்		**கருவி** எ.கா. குமார் கத்தியால் பழத்தை வெட்டினான் **வழி** எ.கா. குமார் தன் கண்ட *அனுபவத்தால்* இதைக் துளைக்கக் கற்றுக்கொண்டான். **மூலம்/ உருபொருள்** எ.கா. குமார் *மண்ணால்* இந்தப் பந்தைச் செய்தான். **காரணம்-1** எ.கா. *வெயிலால்* குமார்

			வரவில்லை. **காரணம் -2** எ.கா. *மழையால்* பயிர் நன்றாக வளர்ந்தது
6.உடனிகழ்ச்சி வேற்றுமை	-ஓடு/ -உடன்		**உடனிகழ்ச்சி** எ.கா. குமார் தன் *மனைவி-ய்-ஓடு/-உடன்* வந்தான் **முறை** எ.கா. குமார் *அன் ப்-ஓடு/-*உடன் சிரித்தான். **வழி** எ.கா குமார் அப்பாவின் *உதவி-ய்-ஓடு/-*உடன் இதைப் படித்தான். **அதிகப்படி** எ.கா. ராஜா நான்கு *இட்லியோடு* இரண்டு தோசையும் சாப்பிட்டான். **இடம்** எ.கா. குமார் *வீட்டோடு* இருக்கிறான். **திசை** எ.கா. குமார் *தெருவோடு* நடந்தான் **உட்படுதல்** எ.கா. சித்திரை *மாசத்தோடு* தமிழ் வருஷம் ஆரம்பிக்கிறது. **வரையறை**

			எ.கா. இந்த ஊரில் ஒரு *கோயிலோடு* சரி
7.இட வேற்று மை	-இல்		**இடத்தில் இடம்** எ.கா. *குருவி* மரத்தில் உட்கார்ந்திருக்கிறது. **காலத்தின் புள்ளியிடம்** (எதிர்காலத்துடன்) எ.கா. ராஜா *ஒரு வாரத்தில்* வருவான். **கால அளவு** (இறந்த காலத்துடன்) எ.கா. ராஜ ஒருவாரத்தில் இந்த புத்தகத்தைப் படித்தான். **பாங்கு** எ.கா. குமார் தமிழில் பேசினான் **இடைபடு உறவு** எ.கா. அந்த மாம்பழங்களில் சில மல்கோவா. அந்த மாணவர்களில் சிலர் நன்றாக படிப்பவர்கள்.
	-இடம்		**இயக்கத்தின் இலக்கு** எ.கா. ராஜா *அப்பாவிடம்* வந்தான். **கைமாற்றத்தின் மூலம்** எ.கா. ராஜா *மந்திரியிடம்* ஒரு

			பரிசு வாங்கினான். **உணர்ச்சியின் இலக்கு** எ.கா. ராஜா *அப்பாவிடம்* கோபப்பட்டான்.
8.நீக்கல் வேற்றுமை	-இல்/-இடம்– இருந்து, இருந்து	இட வேற்றுமைக்குத் திரிபுற்ற பெயரைத் தொடர்ந்து வரும் . எ.கா. மரத்தில் – இருந்து பையனிடம் – இருந்து நேரடியாக இடப்பகுதியுடன் வரும். எ.கா. அங்க்- இருந்து மேல்- இருந்து *-இல்* என்ற இடவேற்றுமைப் பின்னொட்டிற்குத் திரிபுற்ற விலங்கினப் பெயர்களுடன் வருகையிலும் *-இடம்* என்ற இட வேற்றுமைப் பின்னொட்டிற்குத் திரிபு விலங்கினப் பெயர்களுடன் வருகையிலும் *-இருந்து* அதன் செயல்பாடுகளில்	**இயக்கத்தின் மூலம்** எ.கா. ராஜா *கோவிலிலிருந்து* வந்தான். **உள்ளத்திலிருந்து பிரிதல்** எ.கா. ராஜா தன் அப்பாவை *நெருப்பிலிருந்து/ ஒரு புலியிடமிருந்து* காப்பாற்றினான். **தேர்வின் மூலம்** எ.கா. ராஜா *மாணவர்களிலிருந்து* ஒரு நல்லவனைத் தேர்ந்தெடுத்தான். **தொடர்ச்சியின் தொடக்கம்** எ.கா. *மந்திரியிலிருந்து* எல்லோரும் லஞ்சம் வாங்குகிறார்கள்.

		(பொருள்களில்) வேறுபடும் (பார்க்க அடுத்தப்பக்கத்தில்)	
9.உடைமை வேற்றுமை	**-இன், -உடைய, -அது,** பெயர்திரிபு அடி	**திரிபு வடிவில் பெயர்** எ.கா. மரத்துக்கிளை **பெயர் + ஒலிநிரவல் – *இன்*** எ.கா. *அரசனின்* முடி **பெயர் + உடைமை வேற்றுமை *அது*** எ.கா.அரசனது முடி **பெயர் + இடைநிலை சாரியை + உடைமைப் பின்னொட்டு** எ.கா. *நாயினது* வால் **பெயரடைப் பின்னொட்டு உடைய** எ.கா. *நாயினுடைய* வால்	**பெயரடையாகச் செயல்படுகிறது** எ.கா. பள்ளிக்கூடம் குமாருடையது.

4.2.5.1. வேற்றுமை அடுக்குகள்

பெயர்கள் வேற்றுமைகளுக்காக திரிபுறுவதைக் கருத்தில் கொண்டு இரண்டு பெயர்களின் வேற்றுமை சார் அடுக்குகள் கீழே தரப்பட்டுள்ளன. ஒன்று அஃறிணைக் கால் என்பதற்காகவும் மற்றொன்று பன்மைப் பெயர் பையன் என்பதற்காகவும் வேற்றுமை அடுக்குகள் தரப்பட்டுள்ளன.

வேற்றுமை	**ஒருமை**	**பன்மை**
எழுவாய்வேற்றுமை	கால்	கால்-கள்

செயப்படுபொருள்வேற்றுமை	கால்-ஐ	கால்-கள்-ஐ
கொடை வேற்றுமை	கால்-உக்கு	கால்-கள்-உக்கு
நன்மை வேற்றுமை	கால்-உக்கு-ஆக	கால்-கள்-உக்கு-ஆக
கருவி வேற்றுமை	கால்-ஆல்	கால்-கள்-ஆல்
உடனிகழ்சி வேற்றுமை	கால்-ஓடு, கால்-உடன்	கால்-கள்-ஓடு, கால்கள்-உடன்
இட வேற்றுமை	கால்-இல்	கால்-கள்-இல்
நீங்கல் வேற்றுமை	கால்-இல்-இருந்து	கால்-கள்-இல்-இருந்து
உடைமை வேற்றுமை	கால்-இன் –அது	கால்-கள்-அது

வேற்றுமை	**ஒருமை**	**பன்மை**
எழுவாய்வேற்றுமை	பையன்	பையன்-கள்
செயப்படுபொருள்வேற்றுமை	பையன்-ஐ	பையன்-கள்-ஐ
கொடை வேற்றுமை	பையன்-உக்கு	பையன்-கள்-உக்கு
நன்மை வேற்றுமை	பையன்-உக்கு-ஆக	பையன்-கள்-உக்கு-ஆக
கருவி வேற்றுமை	பையன்-ஆல்	பையன்-கள்-ஆல்
உடனிகழ்சி வேற்றுமை	பையன்-ஓடு, பையன்-உடன்	பையன்-கள்-ஓடு, பையன்கள்-உடன்
இட வேற்றுமை	பையன்-இடம்	பையன்-கள்-இடம்
நீங்கல் வேற்றுமை	பையன்-இல்-இருந்து	பையன்-கள்-இல்-இருந்து
உடைமை வேற்றுமை	பையன்-இன் –அது	பையன்-கள்-அது

4.2.5.2. வேற்றுமை உருபுகளும் சந்தி விதிகளும்

இராசேந்திரன் (Rajendran, 2000) தமது தமிழ் உருபனியல் ஆய்வி உருவாக்கதிற்கு (Tamil Morphological Analyzer) வேண்டி தமிழ்ப் பெயர்ச்சொற்களைச் சந்திவிதிகளைக் கருத்திற்கொண்டு பாகுபாடு செய்கையில் பின்வரும் சந்திவிதிகளைப் பட்டியலிடுகின்றார் (இராசேந்திரன், 1994:47-56). இது பெயர்களை அவற்றின் எண் மற்றும் வேற்றுமைத் திரிபின் அடிப்படையில் வகைபடுத்த உதவும்.

1. *ஆ, ஓ, ஊ* என முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் (உ.வே.பி.) வரும்போது *வ்* என்ற உடன்படுத்தி இடையில் வரும்.

-ஆ/ஓ/ஊ + உ.வே.பி→-ஆ/ஓ/ஊ- வ்- உ.வே.பி.

எ.கா.

கடா + ஐ > கடாவை

கடா + ஆல் > கடாவால்

கடா + ஓடு >கடாவோடு

கடா + உடன் > கடாவுடன்

கடா + உக்கு >கடாவுக்கு

கடா + இன் > கடாவின்

கடா + இல் > கடாவில்

2. *இ, ஈ, ஐ* என்று முடியும் பெயர்கள் -உக்கு தவிர்த்த பிற வேற்றுமைப் பின்னொட்டுகளை ஏற்கும்போது *ய்* என்ற உடன்படுத்தி ஒலி இடையில் வரும்.

-இ/ஈ/ஐ + உக்கு தவிர்த்த உ.வே.பி. →இ/ஈ/ஐ–ய்-உ.வே.பி

எ.கா.

எலி + ஐ > எலியை

எலி + ஆல் > எலியால்

எலி + ஓடு > எலியோடு

எலி + உடன் > எலியுடன்

எலி + இன் > எலியின்

எலி + இல் > எலியில்

3. *இ, ஈ, ஐ, ய்* என்று முடியும் பெயர்கள் முவரும் வேற்றுமைப் பின்னொட்டு -உக்கு என்பதன் உ கெடும்

-இ/ஈ/ஐ/ய் + உக்கு→இ/ஈ/ஐ/ய்-க்கு

எ.கா.

எலி + உக்கு > எலிக்கு

ஈ + உக்கு > ஈக்கு

யானை + உக்கு > யானைக்கு

நெய் + உக்கு > நெய்க்கு

4. உ-வில் முடியும் பெயர்களை அவற்றின் சந்திச் செயல்பாடு அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்

4.1. (C)VV-ட்-உ என்ற அசை அமைப்பக் கொண்ட சொற்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது உ கெட, ட் இரட்டிக்கும்.

(C)VV ட் – உ + உ.வே.பி →(C)VVட்ட் – உ.வே.பி

எ.கா.

காடு+ஐ > காட்டை

காடு+ஆல் > காட்டால்

காடு+ஓடு > காடோடு

காடு+உடன்> காட்டுடன்

காடு+உக்கு > காட்டுக்கு

காடு+இன் > காட்டின்

காடு+இல் > காட்டில்

4.2. *று*-வில் முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது உ கெட *ற்* இரட்டும்.

-று + உ.வே.பி → ற்ற் – உ.வே.பி.

4.3. (C)VCC-உ அல்லது (C)VVC-உ என்ற அசை அமைப்புடைய பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வருகையில் உ கெடும்

(C)VCC-உ + உ.வே.பி. → CVCC-உ.வே.பி

எ.கா.

வண்டு+ஐ > வண்டை

வண்டு+ஆல் > வண்டால்

வண்டு+ஓடு > வண்டோடு

வண்டு+உடன் > வண்டுடன்

வண்டு+உக்கு > வண்டுக்கு

வண்டு+இன் > வண்டின்

வண்டு+இல் >வண்டில்

காது+ ஐ > காதை

காது+ ஆல் > காதால்

காது+ ஓடு > காதோடோடு

காது+ உடன் > காதுடன்

காது+ உக்கு > காதுக்கு

காது+ இன் > காதின்

காது+ இல் > காதில்

4.4 (C)VCV என்ற அசையமைப்பைக் கொண்டு உ-வில் முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமை ஒட்டுகள் வரும்போது வ் என்றஉடன்படுத்தி இடையில் வரும்.

(C)VC-உ + உ.வே.பி.→ (C)VC-உ-வ்-உ.வே.பி.

பசு+ ஐ > பசுவை

பசு+ஆல் > பசுவால்

பசு+உக்கு > பசுவுக்கு

பசு+ ஓடு > பசுவோடு

பசு+உடன் > பசுவுடன்

பசு+இன் > பசுவின்

பசு +இல் > பசுவில்

5. (C)VC என்ற அசை அமைப்புடைய *ண், ல், ள், ன்* என முடியும் பெயர்களைத் (ஓரசைச் பெயர்களை) தொடர்ந்து உயிர் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வர முறையே *ண், ய், ல், ள், ன்* என்பன இரட்டும். (விதிவிலக்கு *ய்* + *உக்கு* > *ய்க்கு*. எ.கா. *நெய்* + *உக்கு* > *நெய்க்கு*)

(C)Vண்/ய்/ல்/ள்/ன் + உ.வே.பி→ (C)Vண்ண்/ய்ய்/ல்ல்/ள்ள்/ன்ன். உ.வே.பி.

கண்+ ஐ > கண்ணை

கண்+ஆல் >கண்ணால்

கண்+உக்கு > கண்ணுக்கு

கண்+ஓடு > கண்ணோடு

கண்+உடன் > கண்ணுடன்

கண்+இன் > கண்ணின்

கண்+உடைய > கண்ணுடைய

கண்+அது > கண்ணது

கண்+இல் > கண்ணில்

நெய்+ ஐ > நெய்யை

நெய்+ஆல் > நெய்யால்

நெய்+உக்கு > நெய்க்கு

நெய்+ஓடு > நெய்யோடு

நெய்+உடன் > நெய்யுடன்

நெய்+இன் > நெய்யின்

நெய் +உடைய > நெய்யுடைய

நெய்+அது > நெய்யது

நெய்+இல் > நெய்யில்

கல்+ ஐ > கல்லை

கல்+ஆல் > கல்லால்

கல்+உக்கு > கல்லுக்கு

கல்+ஓடு > கல்லோடு

கல்+உடன் > கல்லுடன்

கல்+இன் > கல்லின்

கல்+உடைய > கல்லுடைய

கல்+அது > கல்லது

கல்+இல் > கல்லில்

முள்+ ஐ > முள்ளை

முள்+ஆல் >முள்ளால்

முள்+உக்கு >முள்ளுக்கு

முள்+ஓடு >முள்ளோடு

முள்+உடன் > முள்ளுடன்

முள்+இன் > முள்ளின்

முள் + உடைய > முள்ளுடைய

முள்+அது > முள்ளது

முள்+இல் >முள்ளில்

பொன்+ ஐ > பொன்னை

பொன்+ ஆல் > பொன்னால்

பொன்+உக்கு > பொன்னுக்கு

பொன்+ஓடு > பொன்னோடு

பொன்+உடன் > பொன்னுடன்

பொன்+இன் > பொன்னின்

பொன்+உடைய > பொன்னுடைய

பொன்+அது > பொன்னது

பொன்+இல் > பொன்னில்

6. *அம்* ஈற்றுப் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது *ம்* கெட *த்த்* என்ற சாரியை இடையில் வரும்.

-அம் + உ.வே.பி.→-அ-த்த்-உ.வே.பி.

மரம்+ஐ > மரத்தை

மரம்+ஆல் > மரத்தால்

மரம்+உக்கு > மரத்துக்கு

மரம்+ஓடு > மரத்தோடு

மரம்+உடன் > மரத்துடன்

மரம்+இன் > மரத்தின்

மரம்+உடைய > மரத்துடைய

மரம்+அது > மரத்தினது

மரம்+இல் > மரத்தில்

7. அ ஈற்றுப் பெயர்களான *பல, சில* என்பனவற்றைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வரும்போது *அற்ற்* என்ற சாரியை இடையில் வரும்.

பல + உ.வே.பி.(பல-வ்-அற்ற்-உ.வே.பி.

பல+ ஐ > பலவற்றை

பல+ஆல் > பலவற்றால்

பல+உக்கு > பலவற்றுக்கு

பல+ஓடு>பலவற்றோடு

பல+உடன் > பலவற்றுடன்

பல+இன் > பலவற்றின்

பல + உடைய > பலவற்றுடைய

பல + அது > பலவற்றினது

பல + இல் >பலவற்றில்

8. எல்லாம் என்ற பெயரைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது *ம்* கெட *அற்ற்* என்ற சாரியை இடையில் வரும்.

எல்லாம் + உ.வே.பி.→எல்லா-வ்-அற்ற் – உ.வே.பி.

எல்லாம் + ஐ > எல்லாவற்றை

எல்லாம் +ஆல் > எல்லாவற்றால்

எல்லாம் +உக்கு > எல்லாவற்றுக்கு

எல்லாம் +ஓடு>எல்லாவற்றோடு

எல்லாம் +உடன் > எல்லாவற்றுடன்

எல்லாம் +இன் > எல்லாவற்றின்

எல்லாம் +உடைய > எல்லாவற்றுடைய

எல்லாம் +அது > எல்லாவற்றினது

9. 5-ஆம் 6- ஆம் விதிகளுக்கு உட்படாத *ண், ல், ள், ன்* மற்றும் *ர், ழ்* என முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது அவை எந்தவித மாற்றமுமின்றி இணையும் (விதிவிலக்கு: *ய் + உக்கு > ய்க்கு*).

(5-ஆம், 6-ஆம் விதிக்கு உட்படாத) *-ண்/ ல்/ ள்/ ன்/ர்/ ழ்* + உ.வே.பி. (ண்/ ல்/ ள்/ ன்/ர்/ ழ் + உ.வே.பி.

எ.கா

தூண்+ ஐ > தூணை

தூண்+ஆல் >துணால்

தூண்+உக்கு > தூணுக்கு

தூண் +ஓடு >தூணோடு

தூண் + உடன் > தூணுடன்

தூண்+இன் > தூணின்

தூண்+உடைய >தூணுடைய

தூண்+அது > தூணது

தூண்+இல் > தூணில்

நாய்+ ஐ > நாயை

நாய்+ஆல்>நாயால்

நாய்+உக்கு>நாய்க்கு

நாய்+ஓடு>நாயோடு

நாய்+உடன் > நாயுடன்

நாய்+இன் > நாயின்

நாய் + உடைய > நாயுடைய

நாய் + அது > நாயது

நாய் + இல் > நாயில்.

கால் + ஐ > காலை

கால் + ஆல் > காலால்

கால் + உக்கு > காலுக்கு

கால் + ஓடு > காலோடு

கால் + உடன் > காலுடன்

கால் + இன் > காலின்

கால்+உடைய > காலுடைய

கால்+அது > காலது

கால்+இல் > காலில்.

வாள்+ ஐ > வாளை

வாள்+ஆல்>வாளால்

வாள்+ உக்கு > வாளுக்கு

வாள்+ ஓடு >வாளோடு

வாள்+ உடன் > வாளுடன்

வாள்+ இன் >வாளின்

வாள்+ உடைய > வாளுடைய

வாள்+ அது>வாளது

வாள்+ இல்>வாளில்.

மான்+ ஐ > மானை

மான்+ ஆல்>மானால்

மான்+ உக்கு >மானுக்கு

மான்+ ஓடு>மானோடு

மான்+ உடன் >மானுடன்

மான்+ இன்>மானின்

மான்+ உடைய >மானுடைய

மான்+ அது>மானது

மான்+ இல் > மானில்.

சுவர்+ ஐ > சுவரை

சுவர்+ ஆல் > சுவரால்

சுவர்+உக்கு > சுவருக்கு

சுவர்+ஓடு > சுவரோடு

சுவர்+ உடன் > சுவருடன்

சுவர்+ இன் > சுவரின்

சுவர்+ உடைய > சுவருடைய

சுவர்+ அது > சுவரது

சுவர்+இல்>சுவரில்.

இதழ்+ ஐ > இதழை

இதழ்+ஆல்>இதழால்

இதழ்+உக்கு >இதழுக்கு

இதழ்+ஓடு >இதழோடு

இதழ்+உடன் >இதழுடன்

இதழ்+இன் >இதழின்

இதழ்+உடைய >இதழுடைய

இதழ்+அது>இதழது

இதழ்+இல்>இதழில்.

10. *இன்* என்ற சாரியை ஒருமைப்பன்மைப் பெயர்ப்பகுதிகளைத் தொடர்ந்து வேற்றுமை உருபுகளுக்கு முன்னர் விருப்பாக வரும்.

எ.கா.

பசு + ஐ > பசுவினை

பசு + ஆல் > பசுவினால்

பசு + உக்கு > பசுவினுக்கு

பசு + ஓடு > பசுவினோடு

பசு + உடன் > பசுவினுடன்

பசு + உடைய > பசுவினுடைய

பசு + அது > பசுவினது

பசு + இல் > பசுவினில்.

4.3. சுருக்கவுரை

தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய வரலாற்று மொயியல் ஆய்வுக்கு உறுதுணையாக இவ்வியல் தரப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழில் பெயர்சொற்களின் இலக்கண அமைப்பைப் அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழில் பெயர்ச் சொற்களின் இலக்கண அமைப்புடன் ஒப்பிட்டு வரலாற்று அடிப்படையிலான மாற்றங்களைப் புரிந்து கொள்ள இயலும் என்ற அடிப்படையில் இவ்வியலின் செய்திகள் அமைகின்றன. பெயர்சொற்களின் உருபனியல் அமைப்பு பற்றிய சுருக்கமான விளக்கம் தரப்பட்டுள்ளது. பெயர்கள் எண்களுக்கும் வேறுமைக்கும் திரிபுறுவது குறித்தும் வேற்றுமை ஏற்கும் போது பெயர்ப்பகுதிகள் திரிபுறுவது குறித்தும் விளக்கம் தரப்பட்டுள்ளது. வேற்றுமைக்குத் திரிபுறுவதன் காரணமாக பெயர்ப் பகுதி திரிபுற்ற பகுதி, திரிபுறாப் பகுதி என அமையும். பெயர்ப் பகுதியுடன் பன்மைப் பின்னொட்டு, திரிபு பின்னொட்டு, ஒலிநிரவல் பின்னொட்டு, வேற்றுமைப் பின்னொட்டு என்பன இணைவது குறித்து விளக்கம் தரப்பட்டுள்ளது. இறுதியில் பெயரடுக்கள் தரப்பட்டுள்ளன.

இயல் 5

தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வு

5.1 முன்னுரை

இவ்வியலில் தமிழ்ப் பெயர்ச்சொற்கள் வரலாற்று மொழியியல் ஆய்வு அடிப்படையில் ஆயப்படும். தமிழ்மொழியின் வளர்ச்சி காலத்தைப் பொதுவாகப் பழந்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத்தமிழ் எனப் பிரித்து ஆய்வர். சிலர் சங்கத்தமிழ் காலம், சங்கம் மருவிய காலம், தற்காலம் எனப் பிரித்து ஆய்வர். இங்கு நாம் இரண்டு கால கால கட்டங்களையே கணக்கில் எடுத்துள்ளோம்: ஒன்று சங்ககாலத் தமிழ்; மற்றொன்று தற்காலத் தமிழ். தற்காலத் தமிழில் பெயர்களின் ஆக்கமும் அமைப்பும் சங்ககாலத் தமிழினின்றும் எவ்வாறு வேறுபட்டு வரலாற்று மாற்றத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதன் அடிப்படையில் மட்டுமே இங்கு செய்திகள் தரப்பட்டுள்ளன. சங்காலம் மற்றும் தற்காலம் என்ற காலகட்டங்கள் அடிப்படையிலேயே தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வு இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்கத்தமிழின் பெயர்ச் சொற்களின் அமைப்பும் ஆக்கங்களும் எவ்வாறு உள்ளன என்பது மொழியியல் அடிப்படையில் விளக்கப்பட்டு இவை தற்காலத் தமிழில் எவ்வகை மாற்றங்கள் அடைந்துள்ளன என்பதும் இங்கு விரிவாக விளக்கப்படும்.

5.2. சொல்லாக்க நெறிமுறைகள்

5.2.1. சங்கத்தமிழில் சொல்லாக்க நெறிமுறைகள்

சொல் உருவாக்கம் பின்வரும் ஐந்து உருவாக்கும் நெறிமுறையைப் பயன்படுத்துகின்றது:

1. தனிப் பகுதி (bare stem)

2. பகுதி பிறழ்வு (stem mutation)

3. பின்னொட்டாக்கம் (suffixation)

4. நீட்சி (extension)

5. சொற்புறமை (periphrasis)

5.2.1.1. தனிப்பகுதியை பயன்படுத்தும் நெறிமுறை

பல நேர்வுகளில் பெயர்சார் வேரைக் கொண்டிருக்கும் தனிப் பகுதி வடிவாக்கப் பின்னொட்டு கொண்டோ பின்னொட்டு இல்லாதோ ஒரு தரப்பட்ட இலக்கண கருத்துருவை வெளிப்படுத்தும்.

5.2.1.2. பகுதி பிறழ்வு நெறிமுறை

சில இலக்கண வடிவங்கள் பகுதி பிறழ்வால் ஆக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மனித மூவிட மாற்றுப்பெயரின் திரிபு வடிவம் நெட்டுயிரை குற்றுயிராக மாற்றுவதால் பெறப்படும்.

எ.கா. தான் > தன்

5.2.1.3. பின்னொட்டாக்கத்தின் நெறிமுறை

பெயர்சார் வேர்கள் வேறுபட்ட ஒட்டுக்களைச் சேர்க்கும் அடிப்படைகளாகப் பயன்படுகின்றது; சேர்க்கப்படும் ஒட்டுக்கள் வேர்களின் பின்னால் சேர்க்கப்படுவதால் அவை பின்னொட்டுக்களாகும். இந்தப் பின்னொட்டுகள் 'குறிகள்' என்று அழைக்கப்படும்; ஏனென்றால் அவை இலக்கணக் கருத்துருக்களைக் குறிப்பிடும். சங்ககால தமிழில் பகுதிகளுடன் சேர்க்கப்படும் வேறுபட்ட குறிகள் கீழே தரப்பட்டுள்ளன:

பெயர்போன்ற அல்லது பெயர்சார் பகுதியுடன் சேர்க்கப்படும் குறிகள்:

(1) பன்மை குறிகள் +/- வேற்றுமை குறி/பின்னொட்டு

இயம் + கள் > இயங்கள் (மலை: 277)

அரச்(உ)+அர்+கள் > அரசர்கள் (கலி.25:3)

மகள் + இர் +உள்ளும் > மகளிருள்ளும் (பதி.31:27)

(2) அன் அல்லது இன் +/- வேற்றுமைக் குறி

அது + அன் +ஆல் > அதனால் (முல்:17)

கண் + இன் + ஆல் > கண்ணினால் (கலி.108:28)

பரங்குன்று +இன் +கு + உம் > பரங்குன்றிற்கும் (பரி.17:43)

(3) வேற்றுமைக் குறி +/- இடைச்சொல்

அவர் + அ > அவர (புற.15:9)

வயின் + ஆன் + ஏ > வயினானே (பதி.36.1)

(4) இடைச்சொல்

சுற்றம் + உம் > சுற்றுமும் (அக.17:6)

(5) எப்போதாவது *ஆன், ஆத், ஆள், இ, இன்* மற்றும்/அல்லது உடன்படுத்தி (*ஞ், ன், ய்* அல்லது *வ்*) என்பதால் முன் தொடரப்படும் இட-எண்-பால் குறி பெயரடைசார் அல்லது குறிப்புப் பெயரை ஆக்கும்.

கால் + அ > கால (பரி.20:9)

கால் + அன் +அ > காலன (குறு.7:1)

இன் + ஆ(த்)+து > இன்னாது (குறு.245:2)

இன் + ஆத் + அன் + அ > இன்னாதன (குறு.309:7)

சாகாடு +ஆள் + அர் > சாகாட்டாளர் (படி.27:14)

இன் + இ + (உடன்படுத்தி) ய் + அ > இனிய (கலி.53:12)

(அன், இன் என்பன மரபாக சாரியை எனக் கருதப்படுகின்றன)

எருத்து + இன் + அ > எருத்தின (புற. 387:7)

வலை +ஞ் +அர் >வலைஞர் (பெரு: 274)

வினை + ன் +அர் >வினைனர் (பதி.62:16)

மட + (உடன்படுத்தி) வ் + அ >மடவ (குறு.66:1)

(6) ஒரு பெயரடைசார் பெயர் அல்லது தொழிற்பெயருடன் ஆய் சேர்ந்து வினையடை வடிவை ஆக்கும்.

இயல்பிற்றாய் < இயல்பிற்று + ஆய் (பரி.7:78)

இறைச்சியா < இறைச்சி + ய் (உப) + ஆய் (கலி.8:9)

(7) *அல், ஆல், கல், தல்* அல்லது *மை* என இறுதியுறும் தொழில் பெயர்களுடன் *ஆன்* அல்லது *இன்* சேர்ந்து 'பயனாக' எனப் பொருள்படும் காரண வடிவை ஆக்கும்.

ஒழுகல் + ஆன் > ஒழுகலான் (கலி.39:14)

உண்மை +(உடன்படுத்தி) ய் + ஆன் > உண்மையான் (புற,182:9)

தெறுதல் இன் > தெறுதலின் (அக.1:10)

(8) ஒரு பெயரடைசார் பகுதியுடன் இ அல்லது ஒரு பெயரடைசார் பெயருடன் இன் சேர்ந்து வினையடை வடிவை ஆக்கும்.

நன் +இ > நனி (குறி:33)

நுண்ணிது + இன் > நுண்ணிதின் (நெடு:76)

(9) ஒரு பெயர்சார் அல்லது திரிபுப் பகுதியுடன் இல்/இன்(உம்) சேர்ந்து ஒப்பு வடிவை ஆக்கும்.

பிதிர்வு + இல் >பிதிர்வில் (அக.1:8)

உரும் + இன் > உருமின் (புற.366:3)

கூடு+ இன் +உம் > கூடினும் (குறு.374:7)

இடன் +இன் >இடனின் (நற்.322:2)

(10) ஒரு பெயரடைசார் பெயருடன் *உம்* சேர்ந்து வினையடை வடிவை ஆக்கும்.

பெரிது + உம் > பெரிதும் (அக.59:2)

(11)ஒரு போலச்செய்யும் சொல்லுடன் *என* சேரும் போதும் பெயரடைசார் பகுதியுடன் *என* சேரும் போதும் வினையடை போன்று செயல்படும் போலச்செய்யும் சொல் ஆக்கப்பெறும்.

இழும் + என் + சுமை >இழுமென் சுமை (பொரு:65)

மெல் +என > மெல்லென (அக.49:7)

(12) ஒரு பெயரடைசார் பகுதியில் கு சேர்ந்து வினையடை வடிவை ஆக்கும்; பெயர்சார் பகுதியுடன் சேர்ந்து ஒப்பு வடிவை ஆக்கும்.

நல் + கு > நல்கு (மது: 82)

வழியோன்+கு > வழியோற்கு (பரி.2:21)

தனி வினையுடன் நேரடியாகச் சேர்க்க இயலும் குறிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

(1) காரண/செயப்படுபொருண்மை குறி த்த், (ப்)ப்ப் அல்லது வி

நட+ த்த் + அ > நடத்த (பரி.10:43)

பச+ப்பி+த்த்+ஓர் > பசப்பித்தோர் (ஐங்.67:5)

கொள் + ப்பி +த்த் +ஆன் > கொட்பித்தான் (கலி.145:57)

அருகு + வி + த்த் +உ > அருகுவித்து (கலி.142:2)

(2) இட-எண்-பால் குறி சேர்ந்து ஓர் இறந்தகாலமல்லா இட வினை அல்லது எதிர்மறை இட வினை ஆக்கப்பெறும்.

உள் + ஏன் > உள்ளேன் (குறு.310:5)

இல் + அன் > இலன் (அக.147:14)

மாட்டு + ஏன் > மாட்டேன்

(3) இட-எண்-பால் குறி சேர்ந்து ஒரு இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர் அல்லது எதிமறை வினையாலணையும் பெயர் ஆக்கப்பெறும்.

வல் + அர் > வல்லர் (புற.27:18)

சார் + ஆன் > சாரான் (கலி.38:19)

(4) எதிர்மறை *அல்*-உடன் இட-எண்-பால் குறி சேர்ந்து எதிர்மறை இட வினைகள் மற்றும் எதிர்மறை வினையாலணையும் பெயர்களை ஆக்கும்; *க, மின்* என்பன எதிர்மறை *அல்*-உடன் சேர்ந்து எதிர்மறை ஏவலை ஆக்கும்.

வேண்டு + அல் + அம் > வேண்டலம் (புற.205:2)

பொருந்து + அல் + அர் > பொருந்தலர் (அக.266:12)

வார் (*வர்)+ அல் + க > வாரற்க (அக.40:12)

கொள் + அல் + மின் > கொள்ளன்மின் (புற.216:5)

(5) வினைப் பகுதியுடன் ஆ சேர்ந்து எதிர்மறை பெயரெச்சதை ஆக்கும். ஆ-உடன் மல் சேர்ந்து எதிர்மறை வினையெச்சதையும் *மை* சேர்ந்து எதிர்மறை தொழிற்பெயரை ஆக்கும்.

கலங்கு + ஆ > கலங்கா	(புற.230:4)
அறி + (உடன்படுத்தி) ய் + ஆ >அறியா	(நற்ற்.275:4)
தொய்படு + ஆ + மல் > தொய்படாமல்	(மலை:365)
வாழு + ஆ(அ) + மை > வாழாமை	(கலை.2:17)
அறி + (உடன்படுத்தி) ய் + மை > அறியாமை	(பதி.15:14)

(6) எதிர்மறை *ஆத்*-உடன் வினையாலணையும் பெயர் குறி சேர்ந்து எதிர்மறை வினையாலணையும் பெயரை ஆக்கும், பெயரெச்சக் குறி *அ* சேர்ந்து எதிர்மறை பெயரெச்சத்தை ஆக்கும், வினையெச்சக் குறி உ சேர்ந்து எதிமறை வினையெச்சத்தை ஆக்கும், ஏவல், வியங்கோள் குறிகள் *இ, மே, மோ* என்பன சேர்ந்து முறையே எதிர்மறை ஏவல், எதிர்மறை வியங்கோள் வடிவங்களை ஆக்கும்.

உணர் + ஆத் + ஓர் > உணராதோர்	(பதி.51:24)
அறி + (உடன்படுத்தி) ய் + ஆத் + அ > அறியாத	(கலி.30:7)
ஆன் + ஆத் + உ > ஆனாது	(பதி.21:11)
சூழ் + ஆத் + உ/ஏ > சூழாதே	(கலி.6:8)
வருந்து + ஆத் + இ > வருந்தாதி	(கலி.107:30)
செப்பு +ஆத் + ஈ + மே >செப்பாதீமே	(அக.52:15)
அழு +ஆத் + ஈ + மோ > அழாதீமோ	(நற்ற்.13:2)

(7) எதிர்மறை *இல்*-உடன் ஏவல் குறி சேர்ந்து எதிமறை ஏவல் வடிவத்தை ஆக்கும்.

காண் + இல் + இயரோ > காணிலியரோ (பதி.44:8)

(8) எதிர்மறை *ஏல்*-உடன் ஏவல் குறி *க* சேர்ந்து எதிமறை ஏவல் வடிவத்தை ஆக்கும்.

செறு + ஏல் + க > சேறேற்க (பரி.20:68)

(9) வினைப் பகுதியுடன் வினையாலணையும் குறி சேர்ந்து வினையாலணையும் பெயர் வடிவை ஆக்கும்

கெடு + அல் > கெடல் (புற.366:17)

இல் + மை > இன்மை (பதி.68:15)

(10) வினைப் பகுதியுடன் குறிப்பிட்ட பிற குறிகளால் தொடர்ப்படும் இறந்தகால/முடிப்பு அல்லது இறந்தகாலமல்லாத/முடிப்பல்லாத குறி சேர்ந்து தத்தம் வடிவங்களை ஆக்கும்.

சீ + இ > சீஇ (கலி. 101:8)

வேள் + த்த் + ஏம் > வேட்டேம் (ஐங்.6:6)

ஆள் + த் + உ > ஆண்டு (புற.201.10)

புளி + த்த் + அன் + அ > புளித்தன (அக.394:1)

பொரு + த் + உ > பொருது (குறி.:135)

கரி + ந்த் + உ > கரிந்து (அக.169:1)

புகல் + த் + உ > புகன்று (திரு:67)

இர +க்க் + உம் > இரக்கும் (புற.180:11)

காண் + க் + அம் > காண்கம் (நற்ற்.81:9)

எறி + ஞ் + அர் > எறிஞர் (அக.71:12)

புல + த்த் + இ > புலத்தி (அக.39:25)

எண்ணு + த் + இர் > எண்ணுதிர் (அக.5:16)

பிறழ் + ந் + அ > பிறழ்ந (பதி.13:1)

உரை + ப்ப் + அல் > உரைப்பல் (அக.28:2)

காண் + ப் + அல் > காண்பல் (பதி.77:12)

என் + ம் + அன் + ஆர் > என்மனார் (கலி.119:16)

வாழ் + வ் + அல் > வாழ்வல் (புற.245:7)

(11) *உம்* அல்லது *ஊ* சேர்ந்து இறந்தகாலமல்லா பெயரெச்ச வடிவத்தை ஆக்கும்; ஊ சேர்ந்து வினையெச்ச வடிவத்தை ஆக்கும்

ஈ + (உடன்படுத்தி) ய் + உம் > ஈயும் (புற.22:33)

எதிர்கொள் + ஊ > எதிர்கொள்ளூ (கலி.146:38)

காண் + ஊ > காணூ (குறி.230)

(12) வினைப் பகுதியுடன் வினையெச்சக் குறி வினையெச்ச வடிவை ஆக்கும்.

சுற்+அ > சுற்ற (மலை:46)

மறை + (உடன்படுத்தி) ய் + ஆ> மறையா (மலை:210)

பேணி + இயர் > பேணியர் (பதி.21:5)

காண் + ஊஉ > காணூஉ (குறி.230

தணி + மார் > தணிமார் (மலை:303)

(13) வினைப் பகுதியுடன் நிபந்தனை குறி *இன்* நிபந்தனை வடிவை ஆக்கும்.

துணிஞ்சு + இன் > துணிஞ்சின் (அக.122:5)

(14) வினைப் பகுதியுடன் *ஆனும்* (**ஆயினும்*) சேர்ந்து உண்மையின் சலுகை வடிவை ஆக்கும்; இனும் உண்மையின் சலுகை வடிவையோ ஊகத்தின்/கற்பிதத்தின் சலுகை வடிவையோ ஆக்கும்.

என் + ஆனும் > என்னானும்	(கலி.140:13)
சொல் + இனும்> சொல்லினும்	(குறு.306:2)
பெயர் + இனும் > பெயரினும்	(புற.3:14)

(15) வினைப் பகுதியுடன் நேர்மறை அல்லது எதிர்மறை ஏவல்/வியங்கோள் குறி சேர்ந்து தத்தம் வடிவங்களை ஆக்கும்.

சிற + க்க > சிறக்க	(மது:194)
உண் + மின் > உண்மின்	(பதி.18:1)
பெயர் + அல் > பெயரல்	(புற.3:14)

வினையின் இறந்தகால பகுதியுடன் சேர்க்க இயலும் குறிகள் பின்வருமாறு அமையும்:

(1) வினையின் இறந்தகாலப் பகுதியுடன் அன், இசின் அல்லது இன் சேர்க்கப்பட்ட பகுதியுடன் இட-எண்-பால் குறி சேர்ந்து இறந்தகால மூவிட வினையை ஆக்கும்.

செய்த் + அ > செய்த	(ஐங்க்.143:3)
கடிந் + அன் + அம் > கடிந்தனம்	(அக.5:26)
சென்ற் +இசின் +ஓன்	(நற்ற்300:6)
சுருக்கி + இன் + எம் > சுருக்கி +இன் + எம்	(புற.206:10)

(2) இறந்தகால வினைப் பகுதியுடன் *அன், இசின்* அல்லது *இன்* சேர்க்கப்பட்ட பகுதியுடன் இட-எண்-பால் குறி சேர்ந்து இறந்தகால வினையாலணையும் பெயர் வடிவை ஆக்கும்.

நல்கூர்ந்த் + ஆர் > நல்கூர்ந்தார் (கலி.50:14)

மாண்ட் + அன் + அ > மாண்டன (பதி.19:27)

படைத்த்+ இசின் + ஓர் > படைத்திசினோர் (புற.18:23)

வேண்டி + இன் + அர் > வேண்டினர் (பெரு: 444)

(3) இறந்தகால வினைப் பகுதியுடன் எதிர்மறை *இல்* சேர்க்கப்பட்ட பகுதியுடன் இட-எண்-பால் குறி சேர்ந்து எதிர்மறை வினையை அல்லது எதிர்மறை வினையாலணையும் பெயரை ஆக்கும்.

மெலிந்த் + இல் + அள் > மெலிந்திலள் (குறு.182:7)

ஆய்வந்த் +இல் + ஆர் > ஆய்வந்திலார் (பரி.9:25)

(4) இறந்தகால வினைப் பகுதியுடன் தொழில் பெயர் சேர்ந்து தொழில்பெயர் வடிவை ஆக்கும்.

நெகிழ்ந்த் + அதை > நெகிழ்ந்ததை (கலி.132:15)

(5) இறந்தகால வினைப் பகுதியுடன் பெயரெச்சக் குறி சேர்ந்து பெயரெச்ச வடிவை ஆக்கும். எப்போதாவது *இன்* இடையில் வரக்கூடும்.

தொகுத்த் + அ > தொகுத்த (குறு. 372:2)

துவரி + இன் + அ > துவரின (அக.243:1)

(6) இறந்தகால வினைப் பகுதியுடன் வினையெச்சக் குறி *இ* அல்லது *இன்* சேர்ந்து வினையெச்ச வடிவை ஆக்கும்.

வீசு/வீசி + இ > வீசி (மது:752)

தொழுத் + உ > தொழுது (பொரு:150)

(7) இறந்தகால வினைப் பகுதியுடன் நிபந்தனை குறி *ஆல்* அல்லது *ஏல்* சேர்ந்து நிபந்தனை வடிவை ஆக்கும். சில நேர்வுகளில் ஆல் முன் இன் வரும்.

கண்ட் + ஆல் > கண்டால் (புற.390:25)

ஆயின் + ஆல் > ஆனால் (கலி.108:9)

உண்ட் + ஏல் > உண்டேல் (கலி.38:13)

(8) இறந்தகால வினைப் பகுதியுடன் ஒப்பு உருபு *அன்ன* அல்லது *என்ன*, மேற்கோள் உருபு *என*, சில பெயர்கள், இடைச் சொல் *ஆங்கு*, பின்னுருபு *உழி* என்பன சேர்ந்து தத்தம் வடிவங்களை ஆக்கும்.

எழுதி + (உடன்படுத்தி) ய் + அன்ன > எழுதியன்ன (அக.297:13)

வடித்த்+ அன்ன > வடித்தன்ன (அக.172:6)

கான்ற் + அன்ன > கான்றன்ன (மலை.498)

மாய்த்த் + என்ன > மாய்த்தென்ன (அக.297:6)

எடுத்த் + ஏறு > எடுத்தேறு (பதி.41:23)

நின்ற் + ஆங்கு > நின்றாங்கு (புற.35:18)

சென்று + உழி > சென்றுழி (அக.48:6)

(9) இறந்தகாலப் பகுதியுடன் *உம்* சேர்ந்து "என்றாலும்" என்ற பொருளைத் தரும்.

கண்ட் + உம் > கண்டும் (புற.173:9)

அன்றி + (உடன்படுத்தி) ய் + உம் > அன்றியும் (மலை:134)

பின்வரும் குறிகள் (உருபுகள்) இறந்தகாலமல்லாப் பகுதியுடன் நேரடியாகச் சேரும்:

(1) இறந்தகாலமல்லாப் பகுதியுடன் இட-எண்-பால் குறி சேர்ந்து இறந்தகாலமல்லா மூவிட வினையை ஆக்கும். சில நேர்வுகளில் *அன்* இடையில் வரும்.

உள் + அ > உள (கலி.117:8)

சிவக்க் + உம் >சிவக்கும் (குறு.354:1)

உரைப்ப் + அல் >உரைப்பல் (அக.28:2)

தகைப்ப் + அன் + அ > தகைப்பன (கலை.3:17)

காண்ப் +அர் > காண்பர் (கலி.110:22)

என்ம் + அன் + ஆர் > என்மனார் (கலி.119:16)

(2) இறந்தகாலமல்லாப் பகுதியுடன் *ஆல்* அல்லது *அன்* சேர்ந்த பகுதியுடன் இட-எண்-பால் குறி சேர்ந்து இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயரை ஆக்கும்.

பிறழ்ந் + அ > பிறழ்ந (பதி.13:1)

அறி + (உடன்படுத்தி) ய் + ஆள் + அர் > அறியாளர் (புற.393:4)

கொள்வ் + அன் + அ > கொள்வன (கலி.82:19)

(3) *(க்)க்* என இறுதியுறும் இறந்தகாலமல்லாப் பகுதியுடன் எதிர்மறை *அல்* சேர்க்கப்பட்ட பகுதியுடன் இட-எண்-பால் குறி அல்லது ஏவல்/வியங்கொள் குறி சேர்ந்து தத்தம் வடிவங்களை ஆக்கும். சில நேர்வுகளில் எதிர்மறை *ஆத்* இடையில் வர இட-எண்-பால் குறி சேர்க்கப்படவோ பெயரெச்ச குறி சேரக்கப்படவோ செய்யப்படும்.

தீர்க்க் + அல் + ஆர் > தீர்க்கலார் (கலி.140:17)

தருக் + அல் + ஆய் > தருகல்லாய் (கலி.148:17)

அறிக் +அல் + ஆய் > அறிகல்லாய் (கலி.95:26)

தொழுக் + அல் + ஈர் > தொழுகல்லீர் (பரி.15:34)

உரைக்க் + அல் + ஆத் +அவர் > உரைக்கல்லாதவர் (கலி.61:14)

கழிக் + அல் + ஆத் + அ > கழிகல்லாத (கலி.20:21)

(4) இறந்தகாலமல்லாப் பகுதியுடன் தொழிற்பெயர் குறி சேர்ந்து தொழிற்பெயரை ஆக்கும்.

கிழிப்ப் + அது > கிழிப்பது (அக.72:1)

(5) இறந்தகாலமல்லாப் பகுதியுடன் பெயரெச்சக் குறி *அ* சேர்ந்து பெயரெச்ச வடிவை ஆக்கும். *(க்)க்* அல்லது *ப்ப்* என இறுதியுறும் இறந்தகாலமல்லாப் பகுதியுடன் பெயரெச்சக் குறி *உம்* சேர்ந்து பெயரெச்ச வடிவை ஆக்கும்.

சேர்க்கின்ற் + அ > சேர்க்கின்ற (பரி.22:3 5)

கரிக்க் + உம் > கரிக்கும் (குறு.363:2)

எடுப்ப் + உம் > எடுப்பும் (குறு.398:5)

(6) *(க்)க், த், (ப்)ப்*, அல்லது *வ்* என இறுதியுறும் இறந்தகாலமல்லாப் பகுதியுடன் *அ, ஆன்* அல்லது *உ* சேர்ந்து வினையெச்சத்தை ஆக்கும்.

மறக்க் + அ > மறக்க (ஐங்க்.470:5)

புகுத் + அ > புகுத (பரி.22:11)

மறப்ப் + அ > மறப்ப (புற.68:19)

காண்ப் + ஆன் >காண்பான் (கலி.97:7)

குழைவ் + ஆன் > குழைவான் (நற்ற்.229:9)

நினைப் + உ > நினைபு (நற்ற்.208:4)

(7) *(க்)க்,* அல்லது *(ப்)ப்* என இறுதியுறும் இறந்தகாலமல்லாப் பகுதியுடன் இல்/இன் உருபுகள் சேர்ந்து நிபந்தனை வடிவுகளை ஆக்கும்.

கழிக்க் + இல் > கழிக்கில் (ஐங்க்.415:3)

கேட்க் + இன் > கேட்கின் (ஐங்க்.81:5)

கேட்ப் + இன் > கேட்பின் (அக.98:28)

(8) *(ப்)ப்* அல்லது *வ்* என இறுதியுறும் இறந்தகாலமல்லாப் பகுதியுடன் ஒப்புருபு ஆன, சில பெயர்கள், மற்றும் பின்னொட்டுகள் அளவை, உழி என்பன சேர்ந்து தத்தம் வடிவங்களை ஆக்கும்.

காண்ப் + அன்ன > காண்பன்ன (புற.211:3)

பெய்வ் + இடம் > பெய்விடம் (புற.173:5)

முயல்வ் + அளவை > முயல்வளவை (அக.189:10)

கெட்ப் + உழி > கேட்புழி (கலி. 146:30)

(9) *(க்)க்,* அல்லது *(ப்)ப்* என இறுதியுறும் இறந்தகாலமல்லாப் பகுதியுடன் *இனும்* சேர்ந்து "என்றாலும்" என்ற பொருளைத் தரும் வடிவை ஆக்கும்.

ஆக் + இனும் > ஆக்கினும் (புற.216:3)

அளிப்ப் + இனும் > அளிப்பினும் (நற்ற்.35:9)

5.2.1.4. நீட்சி நெறிமுறை

நீட்சி நெறிமுறையில் ஒரு பின்னொட்டின் அல்லது ஆக்க வடிவின் நீட்சிப் பயன்பாடு ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கணக் கருத்துருவை குறிப்பிடும். எடுத்துக்காட்டாக *திறத்தல்* (புற.44:11,12). ஒரு உடன்பாட்டு ஏவல்/வியங்கோளாக இவ்வடிவம் (*திற* +

த்தல்) ஏவலைக் குறிப்பிடும்; ஆனால் உடன்பாட்டு தொழிற்பெயர் ஒரு செயலாக/செயல்பாடாக திறப்பதைக் குறிப்பிடும். இங்கு *திறத்தல்* எனபதற்கு நீட்சிப் பயன்பாடு இருக்கின்றது.

5.2.1.5. சொற்புறமை நெறிமுறை

சில நேர்வுகளில் ஓர் இலக்கண கருத்துரு சொற்களைக் கடந்து பரவும். எடுத்துக்காட்டாக, உடன்பாட்டு/ஏவல் கருத்துருவை வெளிப்படுத்தும் வழிகளில் ஒன்று *அல்* அல்லது *(த்)தல்* என முடிவுறும் தொழில்பெயருடன் தொடர்ந்து *வேண்டும்* என்பதைப் பயன்படுத்துவதாகும்: எ.கா. *ஆங்குப் பெயர்தல் வேண்டும்*. இங்கு பெயர்தல் (<பெயர் +தல்) மற்றும் *வேண்டும்* கலவை ஏவல்/வியங்கோள் பொருளைத் தருகின்றது.

5.2.2. சொல்லாக்க நெறிமுறையில் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழைப் பொறுத்தவரையில் சங்ககாலத் தமிழில் கண்ட ஐந்து நெறிமுறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் தனித்தனியாக ஒவ்வொரு நெறிமுறையையும் சொற்கள் அடிப்படையில் பார்த்தால் சங்ககாலத்தமிழில் செய்யப்பட்ட ஆக்கமுறைகள் தற்காலத் தமிழுக்கு கொண்டு செல்லப்படவில்லை என்று கூறலாம். சொற்களின் ஆக்க வடிவங்கள் சங்ககாலத் தமிழில் நின்றும் தற்காலத் தமிழில் வேறுபடுகின்றன.

5.2.2.1 தனிப்பகுதியைப் பயன்படுத்தும் நெறிமுறையில் வரலாற்று மாற்றம்

சங்ககாலத் தமிழைப் போன்றே பெயர் வேர்களைக் கொண்டிருக்கும் தனிப்பகுதி வடிவாக்கப் பின்னொட்டுக்கொண்டோ பின்னொட்டு இல்லாதோ தரப்பட்ட இலக்கணப் கருத்துருவை வெளிப்படுத்தும். இருப்பினும் காலப் போக்கில் பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தற்காலத் தமிழில் பிரதிபலிக்கும்.

5.2.2.2. பகுதி பிறழ்வு நெறிமுறையில் வரலாற்று மாற்றம்

சங்ககாலத் தமிழில் பிறழ்வால் ஆக்கப்பட்ட சில இலக்கண வடிவங்கள் தற்காலத் தமிழுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக மூவிட மாற்றுப் பெயர்களின் குறிப்பாக தன்மை, முன்னிலை மாற்றுப் பெயர்களின் திரிபு வடிவங்களைக் கூறலாம். இருப்பினும் முன்னர் குறிப்பிட்டது போன்று காலப் போக்கில் பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தற்காலத் தமிழில் பிரதிபலிக்கும்.

5.2.2.3. பின்னொட்டாக்கத்தின் நெறிமுறையில் வரலாற்று மாற்றம்

சங்ககாலத் தமிழில் பின்னொட்டாக்க முறையில் உருவாக்கப்பட்ட பல சொல் வடிவங்கள் தற்காலத்தமிழில் பழக்கத்தில் இருப்பதை நாம் சங்க காலத்தமிழில் பட்டியலிடப்பட்டுள்ள ஆக்கங்கவடிவுகளை அல்லது திரிபு வடிவுகளை கண்டு புரிந்து கொள்ளலாம். இருப்பினும் ஒரு சில வடிவங்கள் தற்காலத் தமிழுக்குக் கொண்டு செல்லப்படாததை நாம் ஒப்பிட்டு உணர முடியும்.

எடுத்துக்காட்டாக வேற்றுமை உருபுக்கு முன்னர் *இன்* சாரியைப் பயன்படுத்தி ஆக்கப்படும் சில சொல்வடிவங்கள் வழக்கிழந்து விட்டன அல்லது வழக்கு குறைந்து விட்டன எனக்கூறலாம். இதற்கு எடுத்துக்காட்டாகக் *கண்ணினால்* < *கண்+இன்+ஆல்* (கலி.108:28) என்பதைக் கூறலாம். இச்சொல்லைத் தற்காலத் தமிழில் பயன்படுத்துவது குறைவு அல்லது வழக்கிழந்து வருகின்றது எனக் கூறலாம். இதற்குப் பதிலாக *கண்ணால்* என வேற்றுமை உருபை இன் சாரியை இல்லாத பகுதியுடன் சேர்ப்பது தற்காலத் தமிழில் வழக்கில் உள்ளது.

சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த *அ* என்ற அஃறிணைப் பன்மை விகுதி வழக்கொழிந்து தற்காலத் தமிழில் *அவை* என்பது அதனிடத்தைப் பிடித்துள்ளது. சங்ககாலத் தமிழில் காணப்பெறும் பின்வரும் ஆக்கங்கள் வழக்கொழிந்துவிட்டன: கால (<

கால் +*அ* (பரி.20:9), *காலன* [< *கால*+*அன்* (சாரியை) + அ] (குறு.7:1), *இனிய* [< *இன்* + *இ* (சாரியை) + *ய்* (உப) +*அ*] (கலி.53:12), *எழுத்தின* [< *எழுத்த்* + *இன்* +அ] (புற.378:7), வனைனர் < வனை+ன்+அர் (பதி.62:16), மடவ [< *மட*+ *வ்* + *அ*] (குறு.66:1). *இனிய* என்பதற்குப் பதிலாக *இனியவை* (*இன்*+*இ*+*ய்*+*அவை*) பயன்படுத்தப்படுகின்றன.

சங்கத்தமிழில் காணப்பெறும் பெயரடைசார் பெயர் அல்லது தொழிற்பெயருடன் *ஆய்* சேர்ந்து வினையடை வடிவை ஆக்கும் பினவரும் வடிவங்கள் தற்காலத் தமிழில் வழகொழிதுவிட்டன: *இயல்பிற்றாய்* (< *இயல்பிற்று* + *ஆய்*) (பரி.7:78), *இறைச்சியா* < (*இறைச்சி* + *ய்* (உப) + *ஆய்*) (கலி.8:9).

சங்கத்தமிழில் காணப்படும் இட-எண்-பால் குறி சேர்ந்து ஒரு இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர் அல்லது எதிர்மறை வினையாலணையும் பெயர் ஆக்கப்பெறும் செயன்முறை தற்காலத்தமிழில் வழக்கொழிந்த்துள்ளது. எடுத்துக்காட்டாக

வல் + *அர்* > *வல்லர்* 'வலிமை இல்லாதவர்' (புற.27:18), *சார்* + *ஆன்* > *சாரான்* 'சாராதவன்' (கலி.38:19) என்ற ஆக்கங்கள் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை.

சங்ககாலத் தமிழில் காணப்படும் இறந்தகால வினைப் பகுதியுடன் *அன்*, *இசின்* அல்லது *இன்* சேர்க்கப்பட்ட பகுதியுடன் இட-எண்-பால் குறி சேர்ந்து இறந்தகால வினையாலணையும் பெயர் வடிவை ஆக்கும் ஆக்க நெறிமுறை வழக்கொழிந்துள்ளது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் இறந்தகால வினையாலணையும் பெயர் வடிவங்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை: (*நல்கூர்ந்த்* + *ஆர்* >) *நல்கூர்ந்தார்* 'நல்லவை எண்ணியவர்' (கலி.50:14), (*மாண்ட்* + *அன்* + அ) > *மாண்டன* 'மாண்டவை'(பதி.19:27), *படைத்த்*+ இசின் + ஓர் > *படைத்திசினோர்* 'படைத்தவர்' (புற.18:23), *வேண்டி* + *இன்* + *அர்* > *வேண்டினர்* 'வேண்டியவர்/கேட்டவர்' (பெரு: 444).

சங்ககாலத் தமிழில் காணப்படும் இறந்தகால வினைப் பகுதியுடன் எதிர்மறை *இல்* சேர்க்கப்பட்ட பகுதியுடன் இட-எண்-பால் பின்னொட்டு சேர்ந்து எதிர்மறை வினையை அல்லது எதிர்மறை வினையாலணையும் பெயரை ஆக்கும் ஆக்கநெறிமுறை தற்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளது. எடுத்துக்காட்டாக, *மெலிந்திலள்* 'மெலியாதவள்' [மெலிந்த் + இல் + அள்]> (குறு.182:7) *ஆய்வந்திலார்* [<ஆய்வந்த் +இல் + ஆர்] (பரி.9:25) என்ற ஆக்கங்கள் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை.

சங்ககாலத் தமிழில் இறந்தகாலமல்லாப் பகுதியுடன் *ஆள்* அல்லது *அன்* சேர்ந்த பகுதியுடன் இட-எண்-பால் பின்னொட்டு சேர்ந்து இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயரை ஆக்கும் ஆக்கநெறிமுறை தற்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளது. எடுத்துக்காட்டாக, *பிறழ்ந* [<பிறழ்ந் + அ] (பதி 13:1), *அறியாளர்* [<அறி + (உடன்படுத்தி) ய் + ஆள் + அர்] (புற.393:4), *கொள்வன* [<கொள்வ் + அன் + அ] (கலி.82:19) என்ற ஆக்கங்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை.

5.2.2.4. நீட்சி நெறிமுறையில் வரலாறு மாற்றம்

நீட்சி நெறிமுறை ஓர் ஒட்டு அல்லது ஓர் ஆக்க வடிவு ஒன்றிற்கும் மேற்பட்ட இலக்கணக் கருத்துருவைக் குறிப்பதை விளக்கி நிற்கும். இத்தகைய சாத்தியங்களும் வரலாற்று அடிப்படையில் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன. எடுத்துக்காட்டாக, *திறத்தல்* என்ற ஆக்க வடிவம் சங்ககாலத் தமிழில் ஏவல்/வியங்கோளை குறிப்பிடுவதுடன் தொழிற்பெயரையும் குறித்து நிற்கும். தற்காலத் தமிழில் இவ்வடிவம் தொழிற்பெயரை மட்டும் குறித்து நிற்கின்றது.

5.2.2.5. சொற்புறமை நெறிமுறையில் வரலாற்று மாற்றம்

இலக்கணக் கருத்து ஒரு சொல்லோடு நின்றுவிடாமல் சொல்லைக் கடந்து பெறப்படுவதை சொற்புறமை நெறிமுறை என்பர். சங்கத்தமிழில் உடன்பாட்டு ஏவல் அல்லது வியங்கோள் *அல்/(த்)தல்* ஈற்று தொழிற்பெயருடன் *வேண்டும்* என்ற துணை வினையைச் சேர்ப்பதால் பெறப்படும் (எ.கா. *பெயர்தல் வேண்டும்*). தற்காலத் தமிழில் *அல்/(த்)தல்* ஈற்று தொழிற்பெயருக்குப் பதிலாகச் *செய்ய* வகை வினையெச்சம் (எ.கா. *பெயர*) பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாகச் *செய்தல் வேண்டும்* என்பதற்குப் பதிலாக *செய்ய வேண்டும்* என்ற தொடர் பயன்படுத்தப்படுகின்றது.

5.3. உருபொலியனியல்

5. 3.1. சங்ககாலத் தமிழில் உருபொலியனியல்

சங்ககாலத் தமிழில் பெயர்சொல் ஆக்கங்கங்களை விளக்கிக்கொள்ள சங்ககாலத் தமிழின் உருபொலியனியல் (morphophonemics or sandhi) விதிகளை அறிந்துகொள்வது இன்றியமையாதது ஆகின்றது. உருபொலியனியல் சொற்களும் ஒட்டுக்களும் சேரும்போது ஏற்படும் மாற்றங்களை விளக்குகின்றது. சங்ககாலத் தமிழில் சொல்லாக்கத்தைப் புரிந்துகொள்ள எவ்வாறு பகுதிகளும் ஒட்டுக்களும் பிற பகுதிகளுடனும் ஒட்டுக்களுடனும் சேர்கின்றது என்பதைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். பகுதியோ ஒட்டோ மற்றொரு பகுதியுடன் அல்லது ஒட்டுடன் சேர்ந்து புதிய சொற்களை ஆக்கும் போது அவற்றின் வடிவத்தில் சில மாற்றங்கள் ஏற்படும்; இம்மாற்றங்களின் செயற்பாங்குகள் “உருபொலியனியனியல்” அல்லது “இணைப்பு” என்று அறியப்படும். மாற்றம் ஏற்படாவிட்டாலும் அது “இணைப்பு” உருபொலியனியல் செயற்பாங்காகக் கருதப்படும். குறிப்பாக அ மற்றும் ஆ என்ற இரு உருப்படிகள்

சேர்க்கப்படும் போது மாற்றங்கள் அ அல்லது/மற்றும் ஆ-இன் பாகத்தில் நிகழும். பின்வரும் மாற்றங்களின் வகைகள் சங்கத்தமிழில் ஏற்படும் சாத்தியங்களாகும்:

அ) ஒரு ஒலி மற்றொரு ஒலியாக மாறும்

ஆ) அ-வுக்கும் ஆ-வுக்கும் இடையில் ஒட்டு செருகப்படும்

இ) அ-வும் ஆ-உம் சேரும் போது அவற்றின் இடையில் அடுத்துவரும் ஒன்றோ அதற்கு மேலோ ஒலிகள் நீக்கப்படும்.

தொல்காப்பியம் இந்த மூவகை மாற்றங்களை மெய் பிறிது ஆதல், மிகுதல், குன்றல் எனக்குறிப்பிடும்.

பின்வரும் பத்திகளில் சங்ககாலத் தமிழில் உய்த்துணரப்பட்ட பெயர்சொல் தொடர்பான பல்வேறுபட்ட உருபொலியனியல் மாற்றங்கள் இரண்டு தலைப்புகளில் விவாதிக்கப்பட்டுள்ளது: பகுதி பிறழ்வு மற்றும் பகுதிகளையும் ஒட்டுக்களையும் கடந்த மாற்றங்கள். இப்பகுதி சங்ககாலத் தமிழில் காணப்படும் பெயர் தொடர்பான சொற்களையும் தொடர்களையும் விவாதிக்கும் நோக்கத்தை மேற்கொண்டுள்ளது; இலக்கணக் கோட்பாடுகளின் வரலாற்று முன்னேற்றத்தை விவாதிப்பதை நோக்கமாகக் கொள்ளவில்லை. எனவே கீழ்வரும் உருபொலியனியல் மாற்றங்கள் பகுதிகளின் வடிவங்கள் அடிப்படையில் அன்றி மாற்றங்களின் அடிப்படையில் விவாதிக்கப்படவில்லை.

5.3.1.1. பகுதிகளின் பண்பு

பெயர் பகுதிகள், பெயரடைப் பகுதிகள், வினைப் பகுதிகள் என்பன சங்கத்தமிழில் பொருண்மையியல் அடிப்படையில் அடையாளங்காணவியலும் மூன்று வகைப் பகுதிகளாகும். ஓர் ஒருமை உருப்படியைக் குறிப்பிடும் ஒருமைப் பெயர்ப் பகுதி பன்மைப்

பெயர்களையும் பெயரடைப் பெயர்களையும் உருவாக்குவதற்கான அடிப்படையாகவும் பெயரடைப் பகுதிகள் பெயரடைப் பெயர்களை உருவாக்குவதற்கான அடிப்படைகளாகவும் வினைப் பகுதிகள் தொழிற் பெயர்களையும் வினையாலணையும் பெயர்களையும் மற்றும் வேறுபட்ட வினை வடிவங்களை உருவாக்கும் அடிப்படைகளாகவும் செயல்படுகின்றன. பெயரடைப் பகுதிகளை பெயர்போன்ற பகுதிகள் என்று எடுத்துக்கொள்ள இயலும்; அடிப்படையான எதிரீடுகள் "பெயர்சார்" மற்றும் "வினைசார்" பகுதிகளுக்கிடையில் செய்யவியலும். தமிழ் பெயரடைகள் வினைகளைப் போன்று வினைத்திரிபாக்கங்களில் ஈடுபவதில்லை என்பதால் அவற்றை பெயர்ப் பகுதிகளுடன் குழும இயலும்.

இப்பகுதிகள் அவற்றின் அடிப்படை வடிவங்கள் அடிப்படையில் மூன்று வகைகளாக பகுக்கப்படும்: தனிப் பகுதி (bare stem) , பிறழ்சியுற்ற பகுதி (mutated stem), ஆக்கப்பட்ட பகுதி (derived stem). தனிப் பகுதி என்பதை "வேர்" (root) என்று கூறலாம்; இவை சிலவேளைகளில் வடிவாக்கப் பின்னொட்டால் (formative suffix) தொடரப்படும். இங்கு "தனி" என்ற சொல் பயனுள்ளதாகும்; ஏனெனில் இதை ஆக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வேறுபடுத்திக் காணலாம். இதை 'அடிப்படை" பகுதி என்றும் அழைக்கலாம். பிறழ்ச்சியுற்ற பகுதி சில இலக்கண காரணங்களுக்காகத் தனது வடிவத்தை மாற்றியுள்ளது. ஆக்கப்பட்ட பகுதி ஒரு தனிப் பகுதியையோ பிறழ்ச்சியுற்ற பகுதியையோ கொண்டிருப்பதுடன் ஓர் இரண்டாவது பகுதியையோ இலக்கண ஒட்டையோ கொண்டிருக்கும். கூட்டுப் பகுதி ஓர் அடிப்படைப் பகுதியையும் ஓர் இரண்டாவது பகுதியையும் கொண்டிருக்கும்; இது ஆக்கப்பட்ட பகுதியாகும்.

இலக்கண அடிப்படையில் இப்பகுதிகளை பின்வருமாறு பகுக்கலாம்:

1. தனிப் பகுதி (bare stem)

2. திரிபுப் பகுதி (oblique stem)

3. திரிபுறாப் பகுதி (non-oblique stem)

4. இறந்தகாலப் பகுதி (past stem)

5. இறந்தகாலமல்லாப் பகுதி (non-past stem)

6. செயப்பாட்டுப் பகுதி (passive stem)

7. காரண/இயங்குப் பகுதி (causative/effective stem)

பல் வேறுபட்ட இலக்கணச் செயல்பாடுகளை நடத்துவதற்காக ஒட்டுக்கள் இப்பகுதிகளுடன் சேர்க்கப்படுகின்றன.

5.3.1.2. பகுதிப் பிறழ்வு

தனிப் பகுதிக்குள் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பிறழ்வு குறிப்பிடும். சங்கத் தமிழில் உய்த்துணரப்பட்ட மாற்றங்களின் வகைகள் இங்கு மூன்று தலைப்புகளில் விளக்கப்படும்:

1. முதல் அசையில் உயிர் நீட்சியடைதல்
2. முதல் அசையில் உயிர் குறுகுதல் அல்லது மெய் குறைதல்
3. மெய்கள் இரட்டித்தல் அல்லது வல்லினமாதல்

5.3.1.2.1. முதல் அசையில் உயிர் நீட்சியடைதல்

இந்த நிகழ்வு வினைப் பகுதிகளிலிருந்து ஆக்கப்பட்ட பெயர்களிலும் உருபொலியனியல் செயற்பாங்கிற்கு உட்படும் பெயரடைப் பகுதிகளிலும் வினைத்திரிபிற்கும் உட்படும் சில வினைப் பகுதிகளிலும் உய்த்துணரப்படுகின்றது.

மறு (வி) > மாறு (பெ.) (மலை:62)

கெடு (வி) > கேடு (பெ.) (நற்.359:6)

பொரு (வி) > போர் (பெ.) (அக.316:7)

வட (பெ.அ.) > வாடை (பெ) (நற்.312:9)

கரு (பெ.அ.) > கார் அணல் (பெ) (நற்.181:1)

வெ (வி) > வேவது (கலி.142:54)

5.3.1.2.2. முதல் அசையில் உயிர் குறுகுதல் அல்லது மெய் குறைதல்

பெரும்பான்மையும் மூவிட மாற்றுப்பெயர்களின் திரிபு வடிவுகளை ஆக்க நெட்டுயிர் குற்றுயிராக மாறும். இம்மாற்றம் வினைத்திரிபில் அரிதாகவே நிகழ்கின்றது. மெய்யின் குறைப்பு சீருக்குரிய காரணத்தால் நிகழ்கின்றது.

எ.கா.

தான் > தன் (புற.36:9)

காண் >கண்டு (அக.16:11)

மன்ன (வி.) > மன (வி) (பரி.20:70)

அன்னை (பெ.) > அனை (ன்ன் > ன்) (ஐங்க்.156:5)

5.3.1.2.3 மெய்கள் இரட்டித்தல் அல்லது வல்லினமாதல்

வல்லினமாக மாறாத ஒரு மெய்யோ இரண்டு அண்மைப்பட்ட மெய்களோ (அதாவது *க்க், ச்ச், ட்ட், த்த், ப்ப்* அல்லது *ற்ற்* அல்லாதன) சில சூழல்களில் வல்லினமாகும். வல்லினமாக மாறாத மற்றும் வல்லினமாக மாறிய மெய்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

வலுவுறாத மெய்கள்	வலுவுற்ற மெய்கள்

க்	க்க்
ங்க்	க்க்
ச்	ச்ச்
ட்	ட்ட்
ண்	ட்ட்
ண்ட்	ட்ட்
த்	த்த்
ந்த்	த்த்
ப்	ப்ப்
ம்	த்த்
ம்	ப்ப்
ம்ப்	ப்ப்
ய்	ற்ற்
ல்	ன்ற்
வ்	ப்ப்
ழ்	ட்ட்
ள்	ட்ட்
ற்	ற்ற்
ன்ற்	ற்ற்

5.3.1.2.3.1. பகுதி வலுவுறும் இடங்கள்

பகுதி வலுவுறும் இடங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது. இங்கு வலுவுறுதல் என்பது இரட்டிப்பதையும் வல்லினமாதலையும் உட்படுத்தும்.

(1) ஓரசை அல்லது ஈரசைப் பகுதிளின் இறுதி மெய் வலுவுறும்.

எ.கா.

வலுவுறாதன	**வலுவுற்றன**
தின் (வி)	தீற்று (வி) ‘தின்னச்செய்/ஊட்டு’
உண் (வி)	ஊட்டு (வி)
காண் (வி)	காட்டு (வி)
பூண் (வி) ‘உடு’	பூட்டு (வி) ‘உடுத்து’
துயில் (வி) ‘தூங்கு’	துயிற்று (வி) ‘தூங்கச்செய்’
உருள் (வி)	உருட்டு (வி)
மூள் (வி) ‘தொடங்கு’	மூட்டு (வி) ‘தொடக்கு’

(2)பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகள் இருந்து இறுதிக்கு முந்திய அசை மூடிய அசையாக இருந்தால் இறுதிக்கு முந்திய மெய் வலுவுறும்.

எ.கா.

வலுவுறாதன	**வலுவுற்றன**
மயங்கு (வி)	மயக்கு (பெ) ‘குழப்பம்
அஞ்சு (வி)	அச்சு (பெ) ‘அச்சம்/பயம்’
வருந்து (வி)	வருத்து (வி) ‘வருந்தச்செய்’
முந்தை ‘முந்திய’	முத்தை ‘முன்பாக’
ஓம்பு (வி) ‘பின்வாங்கு’	ஓப்பு (வி) ‘பின்வாங்கச் செய்; தடு’
தோன்று (வி)	தோற்று (வி)

(3) திறந்த அசைகள் கொண்ட ஓரசையல்லா பகுதிகளின் இறுதி மெய் வலுவுறும்.

வலுவுறாதன	**வலுவுற்றன**
பெருகு (வி) ‘அதிகரி’	பெருக்கு (பெ) ‘மிகுதி’
ஏறு (வி)	ஏற்று (வி) ‘ஏறச்செய்’
சுடு (வி)	சூட்டு (பெ) ‘சுட்ட இறச்சி’
வயிறு (பெ)	வயிற்று

5.3.1.2.3.2. பகுதி வலுவுறும் நிகழ்வுகள்

சில பெயர்கள், பெயரடைப் பகுதிகள், காரண/இயக்கு வினைப் பகுதிகள் இவற்றை ஆக்கவும் மற்றும் கூட்டுப் பெயர்களையும் வேற்றுமை வடிவுகளையும் உருவாக்கவும் மெய் வல்லினமாதல் அல்லது இரட்டித்தல் நிகழும்.

எ.கா.

வலுவுறாதன	**வலுவுற்றன**	
ஏறு (வி)	ஏற்றை (பெ) 'ஆண்விலங்கு'	தொழில் பெயர்
மறு 'பிற'	மற்றையோர் 'பிறர்'	பெயரடைப் பகுதி: மற்ற்
பின்	பிற்றை நிலை 'பின் தங்கிய நிலை'	பெயரடைப் பகுதி: பிற்ற்
துயில் (வி)	துயிற்று 'துயிலச் செய்'	காரண வினைப் பகுதி: துயிற்ற்
மயங்கு(வி)	மயக்கு 'குழப்பம்'	காரண வினைப் பகுதி: மயக்க்
புகு (வி) 'நுழை'	புகு + இல் 'இடம்/வீடு' > புக்க் (திரிபு) +இல் > புக்கில் 'புகுந்த இடம்'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு வினைப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்.
துஞ்சு (வி) 'தூங்கு'	துஞ்சு + இல் 'இடம்/வீடு' > துச்சு (திரிபு) +இல்> துச்சில் 'தங்குமிடம்'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு வினைப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்.
அடு (வி) 'சமை'	அடு + இல் 'இடம்/வீடு' > அட்ட் (திரிபு)+ இல் > அட்டில் 'சமையலிடம்'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு வினைப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்.
பசு 'புது'	பசு + இறா > பச்ச் (திரிபு) + இறா > பச்சிறா 'புதிய இறால்'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு பெயரடைப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்.

புது	புது + அகல் > புத்த் (திரிபு) + அகல் >புத்தகல் 'புதிய ஆழமிலா பாத்திரம்'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு பெயரடைப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்.
குளம்பு	குளம்பு + வழி > குளப்பு (திரிபு)+ வழி > குளப்பு வழி 'குளம்பு சென்ற வழி'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு பெயரடைப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்.
தொல்	தொல் 'பழைய' + இசை >தொன்ற் (திரிபு) + இசை 'புகழ்' > தொன்றிசை 'நிறுவப்பட்ட புகழ்'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு பெயரடைப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்
வயிறு	வயிறு + தீ >வயிற்று (திரிபு) + தீ > வயிற்றுத்தீ	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு பெயர்ப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்
கன்று	கன்று + உரி 'தோல்' > கற்று (திரிபு) + உரி > கற்றுரி 'கன்றின் தோல்'	கூட்டுப் பெயரை ஆக்க வேண்டி ஒரு பெயர்ப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்
மரம்	மரம் + ஆல் (வேற்றுமை உருபு) >மரத்த் (திரிபு) + ஆல் > மரத்தால்	வேற்றுமை வடிவை ஆக்க வேண்டி ஒரு பெயர்ப் பகுதியிலிருந்து திரிபு அடியை உருவாகுதல்

5.3.1.3. பகுதி மற்றும் ஒட்டுகளைக் கடந்த மாற்றங்கள்

பகுதி மற்றும் ஒட்டுகளைக் கடந்த மாற்றங்களைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் விளக்கப்படும்:

(1) பகுதி ஈற்று நெட்டுயிர் உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

(2) பகுதி ஈற்று நெட்டுயிர் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

(3) பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) உயிர்த் தொடக்க உருப்படியால் தொடரப்படும் போது

(4) பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

(5) பகுதி ஈற்று குற்றுயிர் உ உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

(6) பகுதி ஈற்று குற்றுயிர் உ மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

(7) பகுதி ஈற்று மெய் உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

(8) பகுதி ஈற்று மெய் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

5.3.1.3.1. பகுதி ஈற்று நெட்டுயிர் உயிர்த் தொடக்க வருமொழியால் **தொடரப்படும் போது**

பகுதி ஈற்று நெட்டுயிர் உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது ஏற்படும் உருபொலியனியல் மாற்ற வகைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

1. பகுதி ஓரசையுள்ளதும் வினையும் ஆகும். அதைத் தொடர்வது *இ* தொடக்கமில்லாத பின்னொட்டு. தொடரும் பின்னொட்டின் தொடக்க உயிர் நீக்கப்படும் மற்றும் பகுதி ஈற்று உயிர் அளவுக்காக சிலவேளை நீட்சியுறும்.

ஆ + உம் > ஆம்	(கலி.58:21)
சா + உம் > சாம்	(கலி.60:27)
போ + உம் > போம்	(கலி.25:11)
தா + உம் > தாம்	(நற்.79:3)
மே + அ > மே	(பரி.9:79)

2. பகுதி ஓரசையுள்ளதும் வினையும் ஆகும். அதைத் தொடர்வது *இ* தொடக்கப் பின்னொட்டு. பகுதி ஈற்று உயிர் மாறாது. பின்னொட்டு பகுதியுடன் நேரடியாகச் சேர்க்கப்படும்.

சீ + இ > சீஇ (கலி.101:8)

கை +இ > கைஇ (மது:419)

தை + இ > தைஇ (குறி:102)

வை + இய வைஇய (நற்.12:6)

3. பகுதி ஒன்றோ அதற்கு மேலோ அசைகள் உள்ளது வினையாகும். அதைத் தொடர்வது ஒரு பின்னொட்டோ சொல்லோ ஆகும். பகுதி ஈற்று உயிர் ஓரசைப் பகுதியில் சிலவேளை நீட்சியுறும். பெரும்பாலான நேர்வுகளில் ஓர் உடன்படுத்தி பகுதிக்கும் அதைத் தொடரும் உருப்படிக்கும் இடையில் செருக்கப்படும். பகுதி ஈறு *ஆ, ஊ,* அல்லது *ஒள* என்றால் *வ்* என்ற உடன்படுத்திச் செருகப்படும்; பகுதியைத் தொடரும் பின்னொட்டின் தொடக்க உயிர் இ ஆக இருக்கும் போது தவிர பகுதி ஈறு *ஈ* அல்லது ஐ என்றால் *ய்* என்ற உடன்படுத்தி செருகப்படும்; சில நேர்வுகளில் உடன்படுத்தி ஞ் அல்லது ன் பகுதி ஈற்று ஐ-க்கும் அதைத் தொடரும் பின்னொட்டுக்கும் (இ தொடக்கப் பின்னொட்டு தவிர) இடையில் செருகப்படும்; பகுதி ஈற்று உயிர் ஏ என்றால் ய் என்ற உடன்படுத்தி செருகப்படும்; பகுதி ஈற்று உயிர் *ஓ* என்றால் *வ்* செருகப்படும். ஓரசையல்லாத பகுதி ஐ-இல் முடிவுற்றால் உடன்படுத்தி *வ்* ஆகும்; ஓரசைப் பகுதி *ஓ*-இல் முடிவுற்றால் *ய்* செருகப்படும்.

தூ + உ + எக்கர் > தூஉ எக்கர் (பட்.117)

யா + வ் + அது > யாவது (நற்.119:9)

மா + வ் + இலங்கை > மாவிலங்கை (சிறு.119)

கா + வ் + இன் + எம் > காவினெம் (புற.206:10)

பா +வ் + இன்று > பாவின்று (அக.172:18)

ஆ + வ் + உம் > ஆவும் (புற.9:1)

அசா + வ் + ஆது > அசாவாது (குறு.269:1)

தூ + வ் + அ > தூவ (தூவு) (நற்.132:4)

பூ + வ் + உடன் > பூவுடன் (புற.224:15)

வெள + வ் + இ > வெளவி (வெளவு) (மது:149)

ஈ + ய் +ஆ > ஈயா (பதி.19:18)

ஈ + ய் + ஆ + து > ஈயாது (நற்.378:2)

தே + ய் + அம் > தேயம் (அக.383:4)

புலை + ய் + அன் >புலையன் (நற்.77:1)

மனை + ய் + உறை புறாவு > மனையுறை புறாவு (நெடு.45)

பசலை + ய் + ஐ > பசலையை (ஐங்க்.200:4)

மற்றை + ய் +ஓர் > மற்றையோர் (பரி.5:45)

உரை + இ > உரைஇ (பதி.40:9)

கொலை + வ் + அன் > கொலைவன் (புற.152:8)

விலை + வ் + அன் > விலைவன் (புற.152:9)

வலை + ஞ் + அர் > வலைஞர் (பெரு:274)

வினை + ன் + அர் > வினைனர் (பதி.62:16)

கோ + ய் + இல் > கோயில் (நெடு.100)

கோ + வ் + இனத்தார் > கோவினத்தார் (கலி.107:3)

கோ + வ் + ஏ > கோவே (பதி.21:23)

இருத்தலோ + வ் + அரிதே > இருத்தலோவரிதே (புற.210:7)

5.3.1.3.2. பகுதி ஈற்று நெட்டுயிர் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

பகுதி ஈற்று நெட்டுயிர் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது ஏற்படும் உருபொலியனியல் மாற்றங்களின் வகைகள் பின்வருமாறு அமையும்.

1. பகுதி ஓரசையாக இருக்கும். அதைத் தொடர்வது ஒரு பின்னொட்டாக அமையும். பகுதி ஈற்று உயிர் அளவுக்காகச் சிலநேர்வுகளில் நீட்சியுறும். அவ்வாறில்லை என்றால் மாற்றம் ஏற்படாது.

மா(=மரம்) + அ + த்து > மாஅத்து (அக.141:21)

தா + அ + ய் > தாய் (பட்ட்:155)

கூ + உ + ய் > கூஉய் (பொரு:101)

ஏ + எ + ய் > ஏஎய் (புற.341:9)

போ + ஒ + ய் + அ > போஒய (கலி.134:7)

யா + து > யாது (அக.48:13)

மா (=விலங்கு)+ த்த > மாத்த (பதி.67:16)

மா (=மரம்) + த்த் + இன் > மாத்தின் (அக.306:4)

பா + ய் + இன் + து > பாயின்று (அக.85:15)

கூ + ய் > கூய் (கலி.38:8)

பூ + க்க > பூக்க (புற.21:13)

போ + ய் + அ > போய (கலி.143:39)

2. பகுதி ஓரசை உள்ளது; ஆனால் பெயரடை அல்ல. அதைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும்; பின்னொட்டல்ல. பகுதியின் ஈற்றுயிர் அளவு காகாரணமாக நீட்சியுறும். அத்துடன் பகுதி மரமல்லாதவையைக் குறித்து நிற்க அதைத் தொடரும் பெயரின் தொடக்க மெய் இரட்டிக்கும். ஆனால் பகுதியின் (நிலைமொழியின்) ஈற்றுயிர் நீட்சியுற்றோ நீட்சியுறாதோ வந்தாலும் அது மரத்தைக் குறித்து நிற்கவோ அல்லது மூக்கொலியில் தொடங்கவோ நேர்ந்தால் பகுதிக்கும் அதைத் தொடரும் வருமொழிக்கும் இடையில் வருமொழியின் தொடக்க மெய்க்கு இயைந்த ஓரிட/ஓரின மூக்கொலி செருகப்படும்.

பகுதி ஈற்றுயிர் நீட்சியுறாது வந்தால், வருமொழியின் தொடக்க மெய் விருப்பாக இரட்டும்; பகுதியும் (வருமொழியும்) அதைத் தொடரும் வருமொழியும் ஒரு கூட்டுப் பெயரை உருவாக்கினால் இச்செயல்பாடு (தொடக்க மெய் இரட்டுவது) நிச்சயமாக நிகழும்.

மா + அ + ந் + தளிர் > மாஅந்தளிர் (கலி.143:27)

மே + எ + ந் + தோல் > மேஎந்தோல் (அக.3:1)

மே + எ + ந் + தோன்றி > மேஎந்தோன்றி (மது:133)

சே + எ + ச் + செவி > சேஎச்செவி (கலி.103:51)

மா + ந் + தளிர் > மாந்தளிர் (பரி.8:38)

மே + ந் + தோல் > மேந்தோல் (புற.321:2)

மே + ந் + தோன்றி > மேந்தோன்றி (பதி.89:12)

ஆ + க் + குரல் > ஆக்குரல் (புற.362:8)

ஈ + த் + தொறும் > ஈத்தொறும் (பதி.61:13)

தூ + த் + திரை > தூத்திரை (குறு.55:1)

வை + த் + தலை > வைத்தலை (பதி.44:18)

தை + ந் + நீர் > தைந்நீர் (பரி.11:15)

பை + ப் + பய > பைப்பய (அக.106:3)

கை + ம் + மகவு > கைம்மகவு (பரி.15:47)

போ + த் + தந்து > போத்தந்து (நற்.80:4)

தூ + மணல் > தூமணல் (குறு.51:3)

பை + பய > பைபய (நற்.306:1)

போ + தரு(ம்) > போதரு(ம்) (அக.52:8)

3. பகுதி ஓரசை உள்ளதும் பெயரடையும் ஆகும். *மா, தீ, மீ, பூ, தே, பே, ஐ, பை, மை, வை.* அதைத் தொடரும் வருமொழி ஒரு பெயராகும். பகுதியின் ஈற்றுயிர் அளவுக்காக நீட்சியுறும். மேலும் வருமொழியின் தொடக்க மெய் (அது *க், ச், த்* அல்லது *ப்* ஆக இருந்தால்) அளவுக்காக இரட்டும். வருமொழியின் தொடக்க மெய் மூக்கொலியாகவோ அரையுயிராகவோ இருந்தால் இரட்டும் மாற்றம் நிகழாது. பகுதியின் ஈறு நீட்சியுறாவிடில் வேறுபட்ட பெயரடைகள் வேறுபட்டு நடத்தை செய்யும்; பெரும்பாலான நேர்வுகளில் புகுதியைத் தொடரும் வருமொழியின் தொடக்க மெய்க்கு இயைந்த ஓரின/ஓரிட மூக்கொலி பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் செருகப்படும்.

மா + அ + த் + தாள் > மாஅத்தாள் (மது.178)

மா + அ + காவிரி > மா காவிரி (பட்ட்.116)

தூ + உ + நெஞ்சம் > தூஉநெஞ்சம் (குறு.157:2)

பே + எ + விழவு > பேஎவிழவு (பரி.5:14)

மா + க் + கல் > மாக்கல் (அக.392:18)

மா + தவர் > மாதவர் (பரி.5:14)

மா + நிலம் > மாநிலம் (நற்ற்.க.வா.:1)

தீ + ங் + கனி > தீங்கனி (புற.281:1)

தீ + ந் + தயிர் > தீந்தயிர் (அக.87:1)

தீ + ம் + புனல் > தீம்புனல் (நற்ற்.70:7)

தீ + நெஞ்சம் > தீநெஞ்சம் (பரி.5:73)

மீ + க் + கூற்றத்து > மீக்கூற்றத்து (சிற்.:212)

மீ + ப் + பால் > மீப்பால் (பரி.10:79)

மீ + நீர் > மீநீர் (பரி.21:40)

பூ + ங் + குழை > பூங்குழை (பொரு.30)

தே + க் + கொக்கு > தேக்கொக்கு (குறு.26:6)

ஐ + ங் + கை > ஐங்கை (பரி.3:37)

பை + ஞ் + சுனை > பைஞ்சுனை (திரு:253)

பை + ஞ் + ஞிலம் > பைஞ்ஞிலம் (பதி.17:9)

மை + ம் + மீன் > மைம்மீன் (புற.117:1)

வை +ந் + நுதி > வைந்நுதி (புற.288:1)

4. பகுதியில் ஒன்றிற்கும் மேற்பட்ட அசைகள் இருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஓர் ஒட்டாகும். இங்கு எந்த மாற்றமும் நிகழாது.

வாலை + க்கு > வாலைக்கு (அக.126:8)

முதுமை + க்கு > முதுமைக்கு (பரி.2:17-18)

அமை + தி > அமைதி (பரி.4:71)

முதலை +த்து > முதலைத்து (ஐங்.24:2)

5. பகுதியில் ஒன்றிற்கும் மேற்பட்ட அசைகள் இருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு வினையாகும். பகுதி ஈற்றுயிர் ஆ என்றால் அது நீட்சியுறும். எல்லா நேர்வுகளிலும் வருமொழியின் தொடக்க மெய் *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்தால் அது இரட்டும்.

தகா + அ + த் + தகா > தகாஅத்தகா (பரி.8:57)

(தகா என்பது தகு என்பதனின்றும் ஆக்கப்பட்ட பகுதியாகும்; தகா-வில் வரும் ஆ எதிர்மறை பின்னொட்டாகும்.)

மிடா + அ + ச் + சொன்றி > மிடாஅச்சொன்றி (குறு:201)

மாமை + க் + களங்கனி > மாமைக்களங்கனி (மலை.35-36)

நினை + த் + தொறும் > நினைத்தொறும் (குறி.251)

நடலை + ப் + பட்டு > நடலைப்பட்டு (கலி.95:33)

வளை + நரல் > வளைநரல் (நற்ற்.க.வா.1)

5.3.1.3.3. பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது பின்வரும் மாற்ற வகைள் நிகழும்.

1.பகுதி ஓரசை கொண்டிருக்கும் மற்றும் அதைத் தொடரும் வருமொழி ஒரு ஒட்டாகவோ பெயர்சார்ந்ததாகவோ இருக்கும். பகுதி சுட்டிக்காட்டுகிற *அ, இ* அல்லது *எ* என்றால், பகுதிக்கும் அதைத் தொடரும் பின்னொட்டுக்கு இடையில் *வ்* செருகப்படும்; வருமொழி பெயர் என்றால் உடன்படுத்தி *வ்வ்* செருகப்படும். பகுதி சுட்டு இல்லை என்றால் மற்றும் வருமொழி பின்னொட்டாக வினையாலணையும் பெயர் பின்னொட்டாக இருந்தால் இடையில் *ய்ய்* உடன்படுத்தி வரும்; வருமொழி வினையாலனையும் பெயர் பின்னொட்டாக இல்லாவிடில் இடையில் உடன்படுத்தி *வ்வ்* வரும். உடன்படுத்தி *வ்வ்*-ஐ இடையில் செருகுவதற்குப் பதிலாக மற்றொரு வகை மாற்றம் சாத்தியமாகும். அதாவது, பகுதி ஈற்று உயிரை நீட்சிசெய்து உடன்படுத்தி *ய்*-ஐ உயிர் *இ* முன்னும் உடன்படுத்தி *வ்*-ஐ பிற உயிர்கள் முன்னும் செருகுவது மற்றொருவகை சாத்தியமாகும். பகுதியைப் பின்தொடரும் பின்னொட்டு *உம்* என்றால், உடன்படுத்தி வருவதில்லை; மாறாக பின்னொட்டின் தொடக்க உயிர் நீக்கப்படும்.

அ + வ் + அன் > அவன் (பொரு:64)

இ + வ் + அள் > இவள் (குறி. 284)

எ + வ் + அள் > எவள் (பரி.6:91)

அ + வ்வ் + ஆயம் > அவ்வாயம் (கலி.136:7)

இ + வ்வ் + ஆயம் > இவ்வாயம் (குறு.273:7)

செ + ய்ய் + அன்> செய்யன் (திரு:206)

செ + ய்ய் + ஓள் > செய்யோள் (அக.316:13)

வெ + ய்ய் + அன் > வெய்யன் (கலி.75:10)

வெ + ய்ய் + ஓன் > வெய்யோன் (பரி.8:67)

நொ + ய்ய் + ஆர் > நொய்யார் (கலி.24:16)

செ + வ்வ் + ஆன் > செவ்வான் (நற்.277:3)

வெ + வ்வ் + அர் > வெவ்வர் (பதி.41:20)

ஒ + வ்வ் + ஆ > ஒவ்வா (பரி.98:22)

நொ + வ்வ் + அல் > நொவ்வல் (அக.98:22)

நொ + வ்வ் + இயல் >நொவ்வியல் (அக.388:11)

அ + ய் + இடை > ஆயிடை (குறி.137)

செ + ய் + இதழ் > சேயிதழ் (சிறு.75)

செ + ய் + இறா > சேயிறா (நற்.31:2)

நொ + ய் +இயர் > நோயியர் (அக.25:16)

செ + வ் + அடி > சேவடி (அக.89:18)

வெ + வ் + ஐ > வேவை (பொரு:104)

நொ + வ்+ அல்> நோவல் (=வருந்தாதே) (அக.25:16)

நொ +வ் + அல் > நோவல் (=நான் வருந்துகிறேன்) (அக.63:3)

நொ + வ் + ஏன் > நோவேன் (=நான் வருந்தவில்லை) (அக.63:3)

வே + உம் > வேம் (குறு.102:1)

நொ + உம் > நோம் (நற்.118:11)

2. பகுதி குற்றுயிர்கள் கொண்ட இரண்டு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும். அதைப் பின் தொடரும் வருமொழி ஒட்டாகும். பகுதி ஈற்றுயிர் சில நேர்வுகளில் நீட்சியுறும். பகுதி ஈற்று உயிர் *அ* வருமொழியின் தொடக்க *அ/ஆ* முன்னர் வந்தால் *ஆ*-வாக நீட்சியுறும்; தொடக்க *இ* முன்னர் வந்தால் *ஐ* ஆக நீட்சியுறும். இரண்டு சாத்தியங்கள் உள்ளன: உடன்படுத்தி *வ்* நிலைமொழி பகுதிக்கும் வருமொழி பின்னொட்டிற்கும் இடையில் செருகப்படும்; உடன்படுத்தி செருகப்படாமல் நிலைமொழி பகுதியும் வருமொழி பின்னொட்டும் சேர்ந்து உயிர்மயக்கம் விளைவிக்கும்; உடன்படுத்தி செருகப்படாமல் வருமொழியின் தொடக்க உயிர் நீக்கப்படும்.

கட + வ் + அ > கடாவ	(திரு.110)
கட + வ் + ஆ > கடாவா	(பதி.70:6)
பர + வ் + அல் > பராவல்	(பதி.71:22)
துழ + வ்+ உம் >துழாவும்	(கலி.145:43)
மக + அர் > மகாஆர்	(புற.291:1)
மக + அர் > மகாஅர்	(சிறு:56)
வட +அது > வடாஅது	(அக.59:3)
குண + அது > குணாஅது	(அக.90:9)
புத + அம் > புதாஅம்	(புறா.391;16)
புல + அல் > புலாஅல்	(அக.270:2)
கட + இய > கடைஇய	(புற.7:1)
இர + இய > இரைஇய	(பதி.52:11)

கல + இ > கலைஇ (அக.266:5)

துழ + இ > துழைஇ (மலை:181)

சின+இ+ய+அ >சினைஇய (குறி.229)

வின+ இ > வினைஇ (அக.300:15)

குவி + இ > குவைஇ (பெரு:104)

கடி + இயர் > கடீஇயர் (நற்.134:4)

மக + அர் > மகார் (மலை:217)

புல + அல் > புலால் (நற்.202:1)

வய + உம் > வயாஅம் (ஐங்க்.51:2)

மக + க் + இர் > மக்கிர் (புற.388:10)

முடி + ய் + ஆ > முடியா (பரி.8:42)

பரி + ய் + ஊஉ> பரியூஉ (பரி.7:72)

எறி + ய் +அர் > எறியர் (பதி.52:22)

கட + வ் + அ > கடவ (ஐங்க்.237:1)

புல + வ் + அ > புலவ (அக.8:7)

பர + வ் + அல் > பரவல் (பரி.10:116)

புல + வ் + அல் > புலவல் (நற்.63:3)

கிழ + வ் + அன் > கிழவன் (புறா.152)

கட + வ் + ஆத் + ஓர் > கடவாதோர் (அக.279:5)

கல + வ் + ஆத் + உ > கலவாது (பரி.20:19)

கல + வ் + இ > கலவி (பரி.8:119)

சின + வ் + இ + ய் + அ > சினவிய (நற்.100:6)

வின + வ் + இ > வினவி (நற்.365:4)

துழ + வ் + உம்> துழவும் (நற்.267:4)

கிழ + வ் + ஓய் + ஏ > கிழவோயே (பதி.54:17)

3. பகுதி குற்றுயிர்கள் கொண்ட இரு திறந்த அசைகள் கொண்டது மற்றும் இது வினையடை அல்ல. அதைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். பகுதி ஈற்றுயிர் நீக்கப்படும். நீக்கப்பட்ட பகுதி ஈற்றுயிருக்கு முன்னர் வரும் மெய் ட் அல்லது த்-ஆக இருந்தால் இரட்டும்.

மத் + அம் > மத்தம் (பெரு.156)

வடி+ இ >வட்டி (நற்.210:3)

4. பகுதி குற்றுயிர்கள் கொண்ட இரு திறந்த அசைகள் கொண்டது மற்றும் அது பெயரடையாக இருக்கக்கூடும். அதைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும், பின்னொட்டல்ல. பகுதியைத் தொடரும் வருமொழி பெயர்சார்ந்தாய் இருந்தால், பகுதி ஈற்றுயிர் நீட்சியுறும் மற்றும் பின்னர் இரண்டு சாத்தியங்கள் உள்ளன: நீட்சியுற்ற பகுதி ஈற்றுயிர் அளவுக்காக மேலும் நீட்சியடையலாம் மற்றும் பெயர்சார் வருமொழியின் தொடக்க உயிர் நீக்கமுறலாம்; நீட்சியுற்ற பகுதி ஈற்றுயிர் மேலும் நீட்சியடைந்தாலும் இல்லாவிடிலும் பெயர்சார் வருமொழியின் தொடக்க உயிர் நீக்கமடையாமல் உடன்படுத்தி வ் பகுதிக்கும் பெயர்சார் வருமொழிக்கும் இடையில் செருகப்படும். பகுதியைத் தொடரும் வருமொழி பெயராய் இல்லாவிடில் பகுதி ஈற்றுயிர் மாற்றமுறாது மற்றும் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் உடன்படுத்தி வ் செருகப்படும்.

வள + அகம் > வளாகம் (புற.189:1)

முழ + அரை > முழாரை (பதி.பதி.5:14)

வள + அகம் > வளாஅகம் (கலி.146:28)

முழ + வ் + அரை > முழாவரை (புற.85:7)

புல + வ் + அம்பு > புலாஅவம்பு (புற.181:5)

உவ + வ் + இனி > உவவினி (அக.65:7)

5. பகுதி ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளைக் கொண்டிருக்கும். ஈரசைப் பகுதி ஒரு நெட்டுயிரைக் கொண்டிருக்கும் மற்றும்/அல்லது ஒரு மூடிய அசையைக் கொண்டிருக்கும். பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் ஓர் உடன்படுத்தி செருகப்படும். பகுதி ஈற்றுயிர் *அ* என்றால் உடன்படுத்தி *வ்* ஆகும்; பகுதி ஈற்றுயிர் இ என்றால் உடன்படுத்தி *ய்* ஆகும்.

நல்ல + வ் + ஐ > நல்லவை (பரி.20:74)

மேனி+ ய் + ஓடு > மேனியோடு (குறு.33:3)

பிறவி + ய் + ஐ > பிறவியை (பரி.5:12)

வள்ளி + ய் + ஐ > வள்ளியை (பதி.54:1)

6. பகுதி ஒன்றுக்கும் மேற்பட்ட அசையைக் கொண்டிருக்கும். ஈரசைப் பகுதி நெட்டுயிரை மற்றும்/அல்லது மூடிய அசையைக் கொண்டிருக்கும். பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும். பகுதி ஈற்றுயிர் பெரும்பாலும் நீக்கமுறும் அல்லது பகுதிக்கும் அதைத் தொடரும் வருமொழிக்கும் இடையில் உடன்படுத்தி செருகப்படும். பகுதி ஈற்றுயிர் *அ* என்றால் உடன்படுத்தி *வ்* ஆகும்; பகுதி ஈற்றுயிர் இ என்றால் உடன்படுத்தி *ய்* ஆகும்.

வாழ்க + அவன் தாளே > வாழ்கவன் தாளே (புற.70:19)

வயங்க + இட்டு > வயங்கிட்டு (கலி. 55:2)

இறுக + இறுக்கி > இறுகிறுக்கி (பரி.12:59)

என்ற + ஊழ > என்றூழ (ஐங்க்.374:1)

கொள்க + என > கொள்கென (புற.143:1)

தரிக்க + என > தரிக்கென (பரி.5:40)

அருந்த + ஏமாந்த > அருந்தேமாந்த (புற.101:9)

கன்றி + இடின் > கன்றிடின் (பரி.6:98)

அருந்தி + உகள > அருந்துகள (அக14:6)

வாழக + வ் + அவன் கண்ணி > வாழகவவன் கண்ணி (பதி.20:5)

அரிய + வ் + அல்ல > அரியவல்ல (அக.8:5)

வாழ்க + வ் + என்று > வாழ்கவென்று (புற.34:16)

ஊட்டி + ய் + அன்ன > ஊட்டியன்ன (அக.388:24)

அருவி + ய் + இழிதரும் > அருவியிழிதரும் (நற்ற்.347:7)

5.3.1.3.4. பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது பின்வருவன நிகழும்.

1. பகுதி ஓரசை கொண்டிருக்கும். பகுதியைத் தொடர்ந்துவரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். பகுதி சுட்டாக இருந்தால் அல்லது பகுதியைத் தொடரும் வருமொழி

வினையாலணையும் பெயராக இல்லாமல் இருந்தால் எந்த மாற்றமும் நிகழாது. பகுதியைத் தொடரும் வருமொழி வினையாலணையும் பெயராக இருந்தால் இரண்டு மாற்றங்கள் சாத்தியமானதாகும்: பகுதிக்கும் பின்னொட்டுக்கும் இடையில் உடன்படுத்தி *ய்* செருகப்படும் அல்லது பகுதிக்கும் பின்னொட்டிற்கும் இடையில் ஒலித்துணையிர் *இ*-ஆல் தொடரப்படும் உடன்படுதி *வ்வ்* செருகப்படும்.

அ + து > அது (நற்.308:8)

இ +து > இது (குறி.21)

ஒ + த்த் + அன் + இர் > ஒத்தனிர் (அக.26:19)

நொ +ந்த்+உ > நொந்து (நற்.177:8)

வெ+ய்+து > வெய்து (அக.203:14)

நொ+ய்+து>நொய்து (புற.75:10)

செ +வ்வ்+இ+து>செவ்விது (பதி.22:8)

நொ+வ்வ்+இ+து>நொவ்விது (நற்.315:9)

2. பகுதி ஓரசையைக் கொண்டிருக்கும். பின் தொடரும் வருமொழி பெயர் ஆகும். பகுதியைத் தொடரும் பெயரின் தொடக்க மெய் இரட்டிக்கும். *நொ*-வைப் பொருத்தவரையில் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் உடன்படுத்தி *ய்* செருகப்படும்.

அ + க் + கடல் > அக்கடல் (புற.198:19)

அ + ஞ் +ஞான்று > அஞ்ஞான்று (கலி.19:2)

இ + ப் + பணை நல்லுர் > இப்பணை நல்லூர் (புற.315 :12)

எ+ந்+நீரிரோ > எந்நீரிரோ (குறு.219:7)'

நொ+ய் + ந்+நூல் > நொய்ந்நூல் (பரி.10:10)

3. பகுதி குற்றுயிர் கொண்ட இரண்டு அசைகளைக் கொண்டிருக்கும். பின் தொடரும் வருமொழி பின்னொட்டாகும். பின்வரும் பின்னொட்டு ய்-ஆக இருந்தால் உயிர் அ நீட்சியுறும். பிற நேர்வுகளில் மாற்றம் ஏற்படாது.

வள + ய் >வளாய் (பரி.11:105)

வின + ய் >வினாய் (குறி.4)

நட + த்த்+அ >நடத்த (பரி.10:43)

புல+த்தி >புலத்தி (அக.39:25)

கிட +ப்ப்(இ)+இ>கிடப்பி (குறு.114:1)

அணி+க்கு>அணிக்கு (கலி.85:17)

கணி+ச்சி>கணிச்சி (பதி.22:12)

நணி+த்து>நணித்து (பரி.17:25)

உரி+த்து>உரித்து (நற்ற.327:7)

உரி+து>உரிது (நற்ற.322:8)

ஒடி+வை>ஒடிவை (=ஒடிவது) (அக.301:5)

அறி+மதி>அறிமதி (புற.161:25)

4. பகுதி குற்றுயிர் உள்ள இரு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும்; ஆனால் பெயரடையாய் இராது. பின் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும். பகுதி பலா மரம் தவிர பிற மரத்தைக் குறிப்பிட்டால், பகுதிக்கும் அதைத் தொடரும் வருமொழிக்கும் இடையில் வருமொழியின் தொடக்க மெய்யுடன் இயைபுள்ள ஓரின/ஓரிட மூக்கொலி

செருகப்படும். பிற நேர்வுகளில் பகுதி ஈற்றுயிர் நீட்சியுறும் மற்றும் பின் தொடரும் வருமொழியின் தொடக்க மெய் *க், ச், த்* அல்லது *ப்* என்றால் இரட்டிக்கும்.

கள+ங்+கனி >களங்கனி	(மலை:36)
விள+ம்+பழம்> விளம்பழம்	(நற்.12:1)
புளி+ங்+காய் > புளிங்காய்	(ஐக்.51:3)
கட+அ+க்+களிறு>கடாக்களிறு	(கலி.101:36)
சுற+அ+க்+கொடியோன்>சுறாக்கொடியோன்	(கலி.147:42)
பல (=பலாமரம்) + அ+ப்+போல>பலாஅப்போல	(பெரு.408)
கல+அ+த்+தானையன்>கலாஅத்தானையன்	(புற.69:11)

பின்வரும் வருகைகளை கருத்தில் கொள்ளவும்: *விளவின் … வெள்ளில்* (புற.181:1), *சுற* வழங்கும் 'சுறா அலைந்து திரியும்' (பொரு:203), *பலவின் பழத்துள்* 'பலாப்பழத்தினுள்' (அக.292:14).

5. பகுதி இரு குற்றசைகளைக் கொண்டிருக்கும் மற்றும் பெயரடையாக இருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு பெயராகும். பகுதியைப் பின் தொடரும் பெயரின் முதல் மெய் *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்தால் அது இரட்டிக்கும் அல்லது (பெரும்பாலான நேர்வுகளில்) பகுதிக்கும் வருமொழி பெயருக்கும் இடையில் முதல் மெய்யோடு இயையும் ஓரிட/ஓரின மூக்கொலி செருகப்படும். பகுதி *மழ* (=இளம்) என்றால் மாற்றம் ஏற்படுவதில்லை.

மழ+களிறு > மழகளிறு	(நற்.192:2)
மட+க்+கணம் > மடக்கணம்	(நற்.248:8)

தட+க்+கை > தடக்கை (திரு.5)

தட+க்+கோட்டு ஆமான் > தடக்கோட்டு ஆமான் (அக.238:7)

புளி+க்+களா > புளிக்களா (புற.177:9)

புளி+ச்+சுவை > புளிச்சுவை (நற்.87:4)

தட+ங்+கோட்டு ஆமான் > தடங்கோட்டு ஆமான் (நற்.57:1)

பழ+ங்+கயிறு > பழங்கயிறு (நற்.284:10)

நன+ஞ்+சாரல் > நனஞ்சாரல் (கலி.44:1)

நன+ந்+தலை > நனந்தலை (பெரு:291)

தட+ந்+தாள் > தடந்தாள் (நற்.91:4)

இள+ம்+பேடை > இளம்பேடை (புற.326:2)

மட+மயில் > மடமயில் (பரி.15:40)

தட+வரை> தடவரை (பரி.19:23)

6. பகுதி ஒன்றிற்கும் மேற்பட்ட அசைகளைக் கொண்டிருக்கும். ஈரசைப் பகுதி ஒரு நெட்டுயிரைக் கொண்டிருகும் மற்றும்/அல்லது ஒரு மூடிய அசையைக் கொண்டிருக்கும். அதைப் பின் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். மாற்றம் ஏற்படாது.

கூளி+க்கு > கூளிக்கு (கலி.101:26)

குருதி+த்து > குருதித்து (பரி.12:85)

நீட்டி+த்த்+அ>நீட்டித்த (கலி.83:5)

வட்டி+த்த்+உ> வட்டித்து (அக.353:6)

மந்தி+க்கு > மந்திக்கு (நற்.353:6)

7. பகுதி இரண்டோ அதற்கு மேலோ அசைகளைக் கொண்டிருக்கும் மற்றும் அது பெயரடையாக இருக்காது. பகுதியைப் பின்தொடரும் வருமொழி பெயராக இருக்கும், ஆனல் பெயரடையாக இருக்காது. பகுதி ஈற்றுயிர் மாற்றமடையாது. பகுதியோ பின்தொடரும் வருமொழியோ பெயரடைப் பெயராக இல்லாதிருந்தாலோ புவியியல் திசையின் சொல்லாக இருந்தாலோ பகுதியைப் பின்தொடரும் சொல்லின் தொடக்க மெய் *க், ச், த்* அல்லது *ப்* இரட்டிக்கும்.

சீறடி+க்+கணம் கொள் > சீறடிக்கணங்கொள்	(மலை:43:44)
கடந்த+க்+கால் > கடந்தக்கால்	(பரி.3:54)
சொல்ல+த்+தக்கார் > சொல்லத்தக்கார்	(கலி.88:5)
பஞ்சி+ப்+பிசிர் > பஞ்சிப்பிசிர்	(அக.283:14)
காஞ்சி+ப்+பனி முறி > காஞ்சிப்பனி முறி	(புற.344:8)
கடி+ப்+பகை > கடிப்பகை	(மலை:22)
இறடி+ப்+பொம்மல் > இறாடிப்பொம்மல்	(மலை:169)
முள+மா (=விலங்கு) > முளமா	(ஐங்க்.364:1)
கடி+மதில் > கடிமதில்	(பெரு:451)
வஞ்சி+முற்றம் > வஞ்சி முற்றம்	(புற.373:24)
குட+காற்று > குட காற்று	(பெரு:240)
குண+குட+கடல் > குண குட கடல்	(மது.71)
சில+சில > சில சில	(பரி.12:39)
வட+தெற்கு > வட தெற்கு	(பதி.31:16)

மீளி+நெஞ்சு > மீளி நெஞ்சு (அக.379:4)

வேங்கட+நெடுவரை > வேங்கட நெடுவரை (அக.85:9)

பல+பல > பல பல (பரி.12:37)

வட+புலம் > வட புலம் (புற.391:7)

மழ+புலம் > மழ புலம் (அக.61:12)

8. பகுதி இரண்டோ அதற்கு மேலோ அசைகளைக் கொண்டிருக்கும். அதைப் பின் தொடரும் வருமொழி ஒரு வினை வடிவமாகும். பகுதி ஈற்றுயிர் மாற்றமடையாது. பகுதியைப் பின் தொடரும் வருமொழியின் முதல் மெய் *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்தால் அது இரட்டிக்கும். பகுதி ஈற்றுயிர் *இ* என்றால் இரட்டிப்பு விருப்பாக அமையும்.

வாழ+ச்+செய்த நல்வினை > வாழச்செய்த நல்வினை (புற.367:10)

விய+த்+தகு > வியத்தகு (பரி.9:82)

பர+த்+தர > பரத்தர (கலி.106:31)

துமிய+ப்+பண்ணி > துமியப்பண்ணி (அக.45:10)

மொழி+க்+கொளினே > மொழிக்கொளினே (நற்.146:11)

பனி+ப்+பயந்தன > பனிப்பயந்தன (ஐங்.266:4)

மருளி+கொள் > மருளி கொள் (கலி.14:11)

எறி+த்+தரு கதிர் > எறித்தரு கதிர் (கலி.9:1)

எறி+தரும் > எறிதரும் (குறு.110:7)

அடி+ப்+பட > அடிப்பட (அக.209:25)

9. பகுதி இரண்டோ அதற்கு மேற்பட்ட அசைகளைக் கொண்டிருக்கும். அதைப் பின்தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகவோ சொல்லாகவோ இருக்கும். பல நேர்வுகளில் பகுதி ஈற்றுயிரும் அதற்கு முன்வரும் மெய்யும் நீக்கப்படும்; இது சீர்நீக்கம் (haplology) எனப்படும். இரு சூழலிலும் பகுதியைப் பின் தொடரும் வருமொழியின் தொடக்க மெய் இரட்டிக்கும்.

உருவ+க்+குத்தி > உருவக்குத்தி (குறு.255:2)

சாவ+க்+குத்தி > சாக்குத்தி (கலி.101:16)

சாவ+ச்+செய்யார் > சாச்செய்யார் (நற்.226:2)

மக+க்+கள் > மக்கள் (கலி.94:22)

மறைக்க+க்+கொண்ட > மறைக்கொண்ட (புற.60:11)

5.3.1.3..5. பகுதி ஈற்று குற்றுயிர் உ உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

பகுதி ஈற்று குற்றுயிர் உ உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது பின்வருவன நிகழும்.

1. பகுதி ஓரசையைக் கொண்டிருக்கும். அதைப் பின் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். விளையும் வடிவு மாற்றுப்பெயராகவோ எண்ணுப் பெயரடையாகவோ இல்லாவிடில் உடன்படுத்தி வ்வ் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் செருகப்படும்; அப்படியில்லை என்றால் உடன்படுத்தி வ் செருகப்படும். எண்ணுப் பெயரடையின் பகுதி ஈற்றுயிர் நீட்சியுறும்.

து+வ்வ்+ஆ > துவ்வா (துவ்வு) (பதி. 60:12)

உ+வ்+அள் > உவள் (நற்.127:3)

மு+வ்+இர் > மூவிர் (புற.109:2)

2. பகுதி ஓரசையைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி பெயராகும். பகுதி ஈற்றுயிர் நீட்சியுறும் மற்றும் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் உடன்படுத்தி வ் செருகப்படும்.

மு+வ்+உரு > மூவுரு (பரி.13:37)

மு+வ்+இரு (=இருமுறை) > மூவிரு (இருமுறை மூன்று) (திரு.103)

3. பகுதி குற்றுயிர்கள் உள்ள இரண்டு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும். பகுதியைத் தொடர்ந்துவரும் வருமொழி பின்னொட்டாகும். பெரும்பாலான நேர்வுகளில் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் உடன்படுத்தி வ் செருகப்படும். பகுதி ஈற்றுயிருக்கு முன்னர் வரும் மெய் ழ் என்றால் உடன்படுத்தி *(க்)க்* அல்லது *ம்* அரிதாக இடையில் செருகப்படும். பகுதி அஃறிணை மாற்றுப்பெயராகவும் பின்னொட்டு வேற்றுமை உருபாகவோ திரிபுக் குறியாகவோ இருந்தால் பகுதி ஈற்றுயிர் நீக்கப்படும்.

கழு+வ்+அ > கழுவ (அக.272:2)

புது+வ்+அர் > புதுவர் (நற்.393:12)

இரு+வ்+அர் > இருவர் (திரு.178)

கது+வ்+அல் > கதுவல் (அக.8:3)

சிறு+வ்+அர் >சிறுவர் (நற்.330:9)

இரு (‘இரண்டு’)+வ்+ஆம் > இருவாம் (‘நாமிருவர்’) (குறு.237:4)

இரு (‘குத்து’) + வ்+ஆம் > இருவாம் (‘குத்துவோம்’) (கலி.41:3)

கது+வ்+இய > கதுவிய (பெரு: 287)

குழு+வ்+இன்+அ > குழுவின (நற்.367:5)

படு+வ்+இல் > படுவில் (அக.79:3)

கெழு+வ்+உ > கெழுவு (பரி.6:6)

அது +வ்+ஏ (இடைசொல்) > அதுவே (அக.218:17)

புது+வ்+ஓர் > புதுவோர் (மலை:288)

முது+வ்+ஓர் > முதுவோர் (சிறு.231)

மழு+க்+அ > மழுக்க (பரி.6:16)

இழு+க்க்+இ > இழுக்கி (அக.107:14)

இழு+க்+இ > இழுகி (புற.281:3)

மழு+கி+இ > மழுகி (புற.377:12)

குழு+ம்+அ > குழும் (மது:677)

பெரு+ம்+ஆன் > பெருமான் (கலி.82:21)

கெழு+ம்+இன்+அ > கெழுமின (புற.345:2)

அது+அன் > அதன் (குறி:142)

அது+ஐ > அதை (பரி.11:71)

4. பகுதி குற்றுயிர்கள் உள்ள இரு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும். அது வினையாக இருக்கும் அல்லது அரிதாக பெயரடையாக இருக்கும். அதைத் தொடர்ந்துவரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். பெரும்பாலான நேர்வுகளில் பகுதி ஈற்றுயிர் உ நீக்கப்படும் மற்றும் பின்வரும் பின்னொட்டின் தொடக்க உயிர் நெட்டுயிராக இல்லை என்றால் நீட்சியுறும். மேலும் பகுதி ஈற்றுயிரின் நீட்சி சிலவேளை நிகழும். பகுதி ஈற்றுயிர்

உ-ஐப் பின்தொடரும் பின்னொட்டு இ என்றால் அது ஐ-ஆக மாறும் மற்றும் சான்றாக வரும் ஒரே எடுத்துக்காட்டு *வகஈ* ஆகும்.

ஒரு+அல்+இன் > ஒராலின் (பதி.23:17)

நகு+அல்+மின் >நகான்மின் (கலி.145:12)

வழு+ஆத்+உ > வழாது (புற.263:3)

குழு+அம் > குழாஅம் (மது:360

சிறு+அர் > சிறாஅர் (பெரு:223)

பகு+அர் > பகாஅர் (அக.181:22)

விடு+அல் > விடாஅல் (கலி.112:7)

எழு+அல் >எழாஅல் (பொரு:56)

இறு+அல்+இயரோ >இறாஅலியரோ (பதி.40:2)

குழு+அல்+இன் > குழாஅலின் (பதி.29:5)

இடு+ஆ ஏணி > இடாஅ ஏணி (பதி.24:14)

ஒரு+ஆ நீர் > ஒராஅநீர் (பதி.72:9)

மரு+ஆ ஆனை > மராஅ யானை (அக.13:7)

வழு+ஆத்+உ > வழாஅது (திரு.:177)

பெறு+ஆன் > பெறாஅன் (குறி.243)

கெழு+இ > கெழீஇ (பொரு:399)

குழு+இ >குழீஇ (பொரு.:226)

இரு+இ > இரீஇ (திரு:310)

ஒரு+இ > ஒரீஇ (மது:498)

வெரு+இ > வெரீஇ (திரு.310)

விடு+ஈர் > விடீஇர் (குறி.144)

அது + உம் > அதூஉம் (அக.292:6)

கது + உம் >கதூஉம் (குறு.8:2)

கழு+உம் சாரல் > கழூஉம் சாரல் (நற்ற்.63:10)

முகு+ஊஉ > முகூஉ (பரி.16:14)

அடு+ஊஉ நின்று > அடூஉ நின்று (அக.322:3)

வகு+இ >வகைஇ (நற்ற்.120:5)

5. பகுதி குற்றுயிர் உள்ள இரு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும்; பின்னொட்டல்ல. பின்வரும் மாற்றங்கள் சாத்தியங்களாகும்: பகுதி ஈற்றுயிர் நீக்கப்படும் மற்றும் வருமொழியின் தொடக்க உயிர் நெட்டுயிர் இல்லையென்றால் அது நீட்சியுறும்; பகுதி ஈற்றுயிர் நீக்கம்பெறாது, ஆனால் நீட்சியுறும் மற்றும் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் வ் உடன்படுத்தி செருகப்படும். பகுதி ஈற்றுயிர் மாற்றமுறாது மற்றும் உடன்படுத்தி வ்/க் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் செருகப்படும்.

பரு + அரை > பராரை (திரு:10)

பரு + அரை > பராஅரை (பொரு:104)

அது+அன்று > அதாஅன்று (திரு:77)

பரு+ஏர் எறுழ் > பரேர் எறுழ் (கலி.104:18)

இது+ஓர் >இதோர் (கலி.104:18)

ஒரு+ஓர்+கை > *ஒரோஓர்கை > ஒரோஒகை (கலி.18:9)

தழு+வ்+அணி > தழுஉவணி (அக.176:15)

பரு+வ்+உறை > பருஉவுறை (அக.218:4)

அது+வ்+ஆயின் > அதுவாயின் (கலி.24:13)

தழு+வ்+அணி > தழுவணி (குறு.294:2)

சிறு+க்(உ)+இடையார் > சிறுகிடையார் (பரி.10:106)

6. பகுதி குற்றுயிர்களுள்ள இரு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும். அதைத் தொடர்ந்துவரும் வருமொழி ஒரு பின்னொட்டாகவோ பெயராகவோ இருக்கும். பகுதி ஈற்றுயிர் நீக்கமுறும் மற்றும் பகுதியின் முதல் அசையின் உயிர் நீட்சியுறும்.

இடு+ஆ > ஈடா (பரி.8:60)

செறு+ஏல்+க > சேறேற்க (பரி.20:68)

நலம் கெழ்(உ)+அரிவை > நலம் கேழரிவை (குறு.338:8)

பசு+அடை > பாசடை (சிறு:32)

கரு+அணல் > காரணல் (நற்.181:1)

முது+ஊர் > மூதூர் (சிறு:201)

ஒரு+ஊர் > ஓரூர் (குறு.172:5)

பெரு+எழில் > பேரெழில் (புற.293:4)

பொரு+ஏறு > போரேறு (மது:144)

ஒரு+ஒக்கும் > ஓரொக்கும் (புற.189:6)

ஒரு+ஒரு > ஓரொரு (கலி.141:7)

7. பகுதி குற்றுயிர் உள்ள இரு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும் மற்றும் அது ஒரு பெயரடையாக இருக்கும். அதைத் தொடரும் வருமொழி பின்னொட்டாகவோ பெயராகவோ இருக்கும். பின்வரும் மாற்றங்கள் நிகழும்: பகுதி ஈற்றுயிர் முன் வரும் மெய் இரட்டும் அல்லது வலுவுறும் அல்லது பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் உயிர் இ செருகப்படும். இதன் விளைவாக இ-க்கும் வருமொழிக்கும் இடையில் உடன்படுத்தி ய் செருகப்படும். *முது* என்ற பகுதியைப் பொருத்தவரை வேறு வகை மாற்றம் சாத்தியமாகும்: பகுதி ஈற்றுயிர் நீக்கப்பட்டதும், நீக்கப்பட்ட உயிருக்கு முன் வரும் மெய் இரட்டும் மற்றும் முதல் அசையிலுள்ள உயிர் நீட்சியுறும்.

பசு + இறா > பச்சிறா (பெரு.270)

பசு + ஊன் > பச்சூன் (பெரு.283)

நெடு+உருட்டு > நெட்டுருட்டு (பரி.18:42)

மெது + என் > மெத்தென் (நெடு.37)

புது+அகல் > புத்தகல் (அக.86:8)

சிறு+ஆற்று > சிற்றாறு (கலி.108:27)

முது +இ+ய்+ஓள் > முத்யோள் (புற.277:2)

சிறு+இ+ய்+இலை>சிறியிலை (நற்.64:5)

பரு+இ+ய்+அரை >பரியரை (பெரு:7)

பெரு+இ+ய்+அது > பெரியது (கலி.135:8)

முது+ஓர் >மூத்தோர் (அக.90:1)

8. பகுதி குற்றுயிர் உள்ள இரு திறந்த அசைகளைக் கொண்டிருக்கும் மற்றும் அது பெயரடையாக இருக்காது. பகுதியைத் தொடரும் வருமொழி பெயராகப் பின்னொட்டாகவோ பெயராகவோ இருக்கும். பகுதி ஈற்றுயிர் நீக்கப்படும். பகுதி ஈற்றுயிருக்கு முன் வரும் மெய் இரட்டும்.

புகு + இல் > புக்கில் (புற.221:6)

அடு+இல் > அட்டில் (சிறு:132)

தொடு+இ >தொட்டி (பரி.20:51)

செது+ஓர் > செத்தோர் (புற.240:8)

செறு+அம் >செற்றம் (மது:490)

9. பகுதி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அசைகளைக் கொண்டிருக்கும். ஈரசைப் பகுதி ஒரு மூடிய அசையையோ மற்றும்/அல்லது நெட்டுயிரைக் கொண்டிருக்கும். தொடரும் வருமொழி பெயராக்கப் பின்னொட்டாகவோ ஒரு சொல்லாகவோ இருக்கும். பகுதி ஈற்று உயிர் நீக்கமுறும்; பகுதி ஈற்றுயிர் முன் வரும் மெய் இரட்டும் அல்லது வலுவுறும். பகுதி வினையெச்சமாகவோ தொழில் பெயராகவோ இருந்தால் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் இ செருகப்படும்.

ஏகு+அற்ற > ஏகற்ற (அக.39:24)

துஞ்சு+இல் (‘இடம்’) > துச்சில் (பட்ட்:58)

ஓடு+ஐ > ஓட்டை (பரி.12:51)

குவடு+இடையது > குவட்டிடையது (குறு.179:7)

கோடு+இனத்து > கோட்டினத்து (கலி.103:33)

கோடு+ஐ > கோட்டை (புற.392:13)

பாடு + இ (பெயராக்கப் பின்னொட்டு) > பாடி (அக.196:4)

மோடு + அ திரை > மோட்ட திரை (கலி.131:38)

மோடு+இரு வரால் > மோட்டிரு வரால் (அக.196:2)

யாண்டு+ஒரு கால் > யாட்டொரு கால் (கலி.71:26)

ஈந்து+இல்லை > ஈத்தில்லை (பெரு:88)

வேந்து+அவை >வேத்தவை (மலை:39)

வீறு+இரும் கொற்றம் > வேற்றிரும் கொற்றம் (பதி.59:9)

வேறு+அரசு > வேற்றரசு (புற.17:31)

வேறு+ஓர் > வேற்றோர் (புற.367:3)

நோன்பு+இ+ய் (உடன்படுத்தி) +அர்> நோன்பியர் (நற்.22:6)

வென்று+இ+ய் (உடன்படுத்தி) + ஆடிய >வென்றியாடிய (பதி.40:12)

10. பகுதி இரண்டிற்கும் மேற்பட்ட அசைகளைக் கொண்டிருக்கும். பின் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். பகுதி ஈற்றுயிர் நீக்கம்பெறும் மற்றும் பகுதியைத் தொடரும் பின்னொட்டின் முதல் உயிர் அது நெட்டுயிர் இல்லை என்றால் சிலநேர்வுகளில் நீட்சியுறும்.

இன்னது + ஐ > இன்னதை (நற்.71:1)

என்னது +உம்>என்னதூஉம் (புற.172:4)

எனையது + உம் > எனையதும் (நற்.331:10)

11. பகுதி இரண்டிற்கும் மேல் அசைகளைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டல்ல. விளையும் வடிவம் தொழிற்பெயர் கூட்டுப்பெயராகும். பகுதி ஈற்றுயிர் உ நீக்கமுறும். வருமொழியின் முதல் உயிர் அதை தொழிற்பெயராக மாற்ற வேண்டி தேவை என்றால் நீட்சியுறும்.

பகுத்து + உண் > பகுத்தூண் (உண் >ஊண்) (பதி.38:15)

இரந்து + உண் > இரந்தூண்(உண் >ஊண்) (குறு.33:3)

எடுத்து + ஏறு > எடுத்தேறு (பதி.41:23)

12. பகுதி ஒன்றோ அதற்கு மேலோஅசைகளைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகவோ பின்னொட்டாகவோ இருக்கும். பகுதி ஈரசைப் பகுதி என்றால் அதன் ஈற்றுயிர் பின்வரும் கட்டுப்பாட்டில் நீக்கமுறும்: ஈரசை ஒரு வினையாக இருக்கவேண்டும் மற்றும் ஈற்றசையின் முன்னர் வரும் மெய் *க், ட்* அல்லது *ற்*-ஆக இருக்கவேண்டும்.

பிறங்கு + அத்தம் > பிறங்கத்தம் (குறு.66:2)

வேண்டு + அன்னை > வேண்டன்னை (ஐங்க்.208:1)

எடு+அடீரோ > எடடீரோ (புற.388:10)

விறகு+ஆக > விறகாக (புற.16:5)

விளையாடு+ஆயமோடு > விளையாடாயமோடு (நற்ற்.68:1)

பாடாது+ஆயினும் > பாடாதாயினும் (புற.200:10)

நல்கு+இ > நல்கி (பொரு:8:3)

மாறு+இரட்டும் > மாறிரட்டும் (ஐங்க்.450:1)

ஏது+இல > ஏதில் (புற.245:4)

விறகு+ஈமத்து > விறகீமத்து (புற.245:4)

நுகர்கு+என >நுகர்கென (குறி.181)

படு+உம் > படும் (நற்.61:10)

சூடு+உறு > சூடுறு (மது:512)

நிறைவு+உற > நிறைவுற (கலி.146:43)

விறகு+ஒய் மாக்கள் > விறகொய் மாக்கள் (புற.70:17)

படு+வ்+இல் > படுவில் (அக.79:3)

எழு+வ்+இனி > எழுவினி (புற.207:1)

13. பகுதி நான்கு அசைகளைக் கொண்டிருக்கும். பகுதியைப் பின் தொடரும் வருமொழி பகுதியுடன் கூட்டுப் பெயரை ஆக்கும் ஒரு பெயர். பகுதி ஈற்றுயிர் நீக்கபெறும் மற்றும் பகுதி ஈற்றுயிர் முன்னர் வரும் மெய் இரட்டும்.

விளையாடு+ஆயம் >விளையாட்டாயம் (அக.230:6)

5.3.1.3.6. பகுதி ஈற்று குற்றுயிர் உ மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

பகுதி ஈற்று குற்றுயிர் உ மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது பின்வருவன நிகழும்.

1. பகுதி ஓரசை கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு பெயராகும். வருமொழியின் முதல் மெய் இரட்டிக்கும்.

உ+க்+கரை >உக்கரை (புற.357:9)

உ+ப்+பால் > உப்பால் (பரி.11:8)

உ+வ்+வரை >உவ்வரை (பதி.78:2)

மு+க்+கண் > முக்கண் (புற.6:18)

2. பகுதி குற்றுயிர் உள்ள ஈரசைகளைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகவோ ஒரு சொல்லாகவோ இருக்கும். பகுதி ஈற்றசைக்கு முன்னர் வரும் மெய் *ழ்*-ஆகவோ *ர்*-ஆகவோ இருந்தால் ஒற்றை மெய்யில் தொடங்கும் பின்னொட்டுக்கு முன்னர் வரும் பகுதி ஈற்றுயிர் சில நேர்வுகளில் நீட்சியுறும். பகுப் பெயரடையாக இருந்தால் பகுதி ஈற்றுயிரின் முன்னர் வரும் *ர்* நீக்கமுறும் மற்றும் பகுதிக்கும் பின் தொடரும் பெயடைப் பெயர் பின்னொட்டிற்கும் இடையில் ஒலித்துணையுயிர் *இ* செருகப்படும். பிற பெயரடை பகுதிகளில் பகுதியை தொடரும் பெயரின் முதல் மெய் *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்தால் அதனுடன் இயையும் ஓரிட/ஓரின மூக்கொலி பகுதிக்கும் பெயருக்கும் இடையில் செருகப்படும்.

வெரு+தல் > வெரூஉதல் (குறி:137)

ஒரு+ப > ஒரூஉப (பதி.33:12)

எழு+க > எழூஉக (கலி.102:34)

தழு+கம் > தழூஉகம் (நற்.50:3)

எழு+க > எழுக (மது:204)

விடு+கம் > விடுகம் (குறு.106:6)

முழு+து > முழுது (பதி.14:19)

நிறு+மின் > நிறுமின் (புற.152:14)

அரு+இ+து> அரிது (ஐங்க்.235:2)

பெரு+இ+து > பெரிது (நற்ற்.150:11)

பெரு+த்த > பெருட்ட (மாற்றமில்லை) (புற.177:14)

எடு+ப்ப > எடுப்ப (மாற்றமில்லை) (மது:714)

கடு+ஞ்+செலல் > கடுஞ்செலல் (அக.150:6)

கடு+ம்+புனல் > கடும்புனல் (நெடு:18)

கடு+நாள்> கடுநாள் (மாற்றமில்லை) (குறு.380:7)

3. பகுதி குற்றுயிர்கள் உள்ள திறந்த ஈரசைகள் கொண்டதாகும். பெரும்பாலான நேர்வுகளில் பகுதி ஈற்றுயிரின் முன்னர் வரும் மெய் ர்-ஆகவோ ழ்-ஆகவோ இருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு பெயராகும். பகுதி ஈற்றுயிர் பெரும்பாலான நேர்வுகளில் நீட்சியுறும். எல்லா நேர்வுகளிலும் பகுதியைத் தொடரும் பெயரின் முதல் மெய் அது க், ச், த் அல்லது ப்-ஆக இருந்தால் இரட்டும்.

குரு+க்+கண் > குரூஉக்கண் (மலை:169)

குழு+க்+களிற்று > குழூஉக்களிற்று (புற.97:9)

வழு+ச்+சொல் > வழூஉச்சொல் (கலி.106:4)

பரு+த்+திரி > பரூஉத்திரி (நெடு:103)

கடிப்பு இகு+ப்+புண் > கடிப்பிகூஉப்புண் (பதி.40:3-4)

குரு+ப்+புலி > குரூஉப்புலி (மலை:517)

பரு+மயிர் > பரூஉமயிர் (நற்ற்.98:1)

முழு+வள்ளுரம் > முழூஉவள்ளுரம் (புற.219:2)

குரு+க்+கண் > குருக்கண் (கலி.101:15)

விழு+த்+தொடி > விழுத்தொடி (பதி.81:10)

4. பகுதி குற்றுயிர்கள் உள்ள இரண்டு அசைகளைக் கொண்டிருக்கும்.அதைத் தொடரும் வருமொழி ஒரு வினையாகவோ பெயராகவோ இருக்கும். பகுதி ஈற்றுயிர் நீட்சியுறாது, ஆனால் வருமொழியின் தொடக்க மெய் அது க், ச், த் அல்லது ப்-ஆக இருந்தால் பெரும்பாலான நேர்வுகளில் இரட்டும்.

கடு+க்+கலிட்டு எழுந்த > கடுக்கலித்து எழுந்த (மலை:14)

செது+க்+கண்> செதுக்கண் (புற.261:9)

திரு+க்+கிளர் கோயில் > திருக்கிளர் கோயில் (பொரு:90)

குறு+க்+கை > குறுக்கை (ஐங்க்.266:2)

சிறு+க்+கண் > சிறுக்கண் (ஐங்க்.266:1)

பொது +க்+கொண்ட >பொதுக்கொண்ட (கலி.66:11)

மறு+த்+தரல் > மறுத்தரல் (கலி.15:15)

சிறு+கண் > சிறுகண் (ஐங்க்.267:1)

மறு+தரல் > மறுதரல் (அக.333:21)

இடு+தோறும் > இடுதோறும் (பதி.21:11)

புது+நாற்றம் > புதுநாற்றம் (பரி.7:21)

கடு+முனை > கடுமுனை (அக.372:10)

தெறு+வர > தெறுவர (நற்ற்.305:4)

5. பகுதி ஒரு நெட்டுயிர் அல்லது ஒரு மூடிய அசைகொண்ட ஈரசைகளைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு பெயராகும். பகுதி ஈற்றுயிர் நீக்கப்படும். பகுதி ஈற்றுயிர் நீக்கப்பட்ட பின் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் ஒலித்துணை உயிர் அ செருகப்படும்; பின்னர் பகுதியைத் தொடரும் பெயரின் மெய் அது *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்தால் இரட்டும்.

வம்பு+அ+ப்+பதுக்கை > வம்பப்பதுக்கை (புற.3:21)

ஊகு+அ+நுண்கோல் > ஊகநுணுகோல் (புற.324:5)

வம்பு+அ+மாரி > வம்ப மாரி (குறு.66:5)

6. பகுதி இரண்டோ அதற்கு மேலோ அசைகளைக் கொண்டிருக்கும். ஈரசைப் பகுதி ஒரு மூடிய அசையக் கொண்டிருக்கும்; அது நெட்டுயிராகவோஅல்லாதோ இருக்கலாம். பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு வினையாகவோ பெயராகவோ இருக்கலாம். வருமொழியின் முதல் மெய் அது *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்தால் இரட்டும்.

புள்ளு+க்+குரல் > புள்ளுக்குரல் (புற.385:1)

விண்டு+ச்+சேர்ந்த > விண்டுச்சேர்ந்த (பதி.55:15)

வில்லு+ச்+சொரி > வில்லுச்சொரி (பரி.18:40)

உவவு+த்+தலை > உவவுத்தலை (புற.65:6)

பிடவு+த்+தளை > பிடவுத்தளை (நற்.246:8)

காம்பு+த்+தீ > காம்புத்தீ (கலி.150:3)

முழவு+த்+தோல் > முழவுத்தோல் (பதி.31:20)

வல்லு+ப்+போ > வல்லுப்போர் (பரி.18:41)

விசும்பு+மெய் ஆக > விசும்பு மெய் ஆக (நற்.க.வா:3)

7. பகுதி இரண்டோ அதற்கு மேலோ அசைகளைக் கொண்டிருக்கும். ஈரசைப் பகுதி ஒரு நெட்டுயிரையோ மூடிய அசையையோ கொண்டிருக்கும். பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு வினையாகவோ அல்லது ஒரு பெயராகவொ இருக்கும். பகுதி ஈற்றுயிருக்கு முன்னர் வரும் மெய் அது *க், ச், ட், த், ப்* அல்லது ற்-ஆக இருந்தால் இரட்டிக்கவோ வலுவுறவோ செய்யும்.

வெருகு+ப்+பல் > வெருகுப்பல் (குறு.240:3)

ஆறு+ப்+படுப்ப > ஆற்றுப்படுப்ப (சிறு:39)

கயிறு+ப்+புறத்து > கயிற்றுப்புறத்து (அக.128:11)

வெருகு+விடை > வெருக்குவிடை (புற.324:1)

அஞ்சு+வர > அச்சுவர (புற.360:14)

இரும்பு+முகம் > இருப்பு முகம் (புற.370:20)

8. பகுதி இரண்டோ அதற்கு மேலோ அசைகளைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி *ய்* அல்லது ப்-இல் தொடங்கும் பெயர். பகுதி ஈற்றுயிர் நீக்கப்படும். பகுதி ஈற்றுயிர் முன்னர் வரும் மெய் அது *க், ச், ட், த், ப்* அல்லது *ற்* என்றால் இரட்டிக்கவோ வல்லுறவோ செய்யும். பின்னர் பகுதியைத் தொடரும் சொல்லின் தொடக்க மெய் அது ப்-ஆக இருந்தால் இரட்டும். ஈரசை பெயரடைப் பகுதியில் நீக்கப்பட்ட உயிருக்கு முன்னர் வரும் மெய் வலுவுறுவதற்குப் பதிலாக முதல் உயிர் சில நேர்வுகளில் நீட்சியுறும். எல்லா நேர்வுகளிலும் ஒலித்துணை உயிர் மாற்றப்பட்ட பகுதிக்கும் *ய்*-தொடக்க வருமொழிக்கும் இடையில் செருகப்படும்; அப்படி இல்லை என்றால் *ஐ* செருகப்படும்.

நினக்கு+இ+யான் > நினக்கியான் (புற.200:15)

பொருட்கு+இ+யான் > பொருட்கியான் (புற.208:6)

பகடு+இ+யானை > பகட்டியானை (நற்.381:7)

பருக்கொடு+இ+யாழ் > பருக்கோட்டியாழ் (பரி.10:56)

புது+இ+யானை > புத்தியானை (கலி.97:7)

செறித்து+இ+யான் கடவலின் > செறித்தியான் கடவலின் (குறி.12)

களிறு+இ+யானை > களிற்றுயானை (பதி.71:21)

சிறு+இ+யாற்று > சிற்றியாற்று (புற.261:4)

வெறு+இ+யாற்று > வெற்றியாற்று (புற.261:4)

சிறு+இ+ஆல் > சீறியால் (பொரு:109)

பாராட்டு+ஐ+ப்+பால்> பாராட்டைப்பால் (கலி.85:33)

மாடு+ஐ+ப்+பால் > மாட்டைப்பால் (கலி.85:36)

9. பகுதி இரண்டிற்கு மேல் அசையைக் கொண்டிருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாக இருக்கும்; பின்னொட்டல்ல. பகுதி ஈற்றுயிர் மற்றும் அதற்கு முன்வரும் மெய் இவற்றின் சேர்க்கையும் பகுதியைத் தொடரும் சொல்லின் தொடக்க மெய் மற்றும் அதைத் தொடரும் உயிர் இவற்றின் சேர்க்கையும் ஒன்றாக இருந்தால் இந்த சேர்க்கைகளில் ஒன்று சீர் நீக்கச் செயற்பாங்காக நீக்கப்படும்.

கடிப்பு + புடை > கடிப்புடை (பதி.84:1)

கறங்கு+குரல் > கறங்குரல் (ஐங்க்.452:2)

தழங்கு+குரல் > தழங்குரல் (ஐங்க்.448:1)

5.3.1.3.7. பகுதி ஈற்று மெய் உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

பகுதி ஈற்று மெய் உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது பின்வருவன சாத்தியமான மாற்றங்களாகும்.

1. பகுதி குற்றுயிர் உள்ள ஓரசை கொண்டிருக்கும். பகுதி ஈற்று மெய் ர்-ஆகவோ ழ்-ஆகவோ இருக்காது. பகுதியைப் பின் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகும். பகுதி ஈற்று மெய் விருப்பாக இரட்டிக்கும். இரட்டித்தால் பின்வரும் மாற்றங்கள் விளையும்: பின்னொட்டு நேரடியாக பகுதியில் சேர்க்கப்படும் அல்லது மாற்றப்பட்ட பெயரடைப் பகுதிக்கும் பின்னொட்டிற்கும் இடையில் ஒலித்துணை உயிர் செருகப்படும். பகுதி ஈற்று மெய் இரட்டிக்காவிடில் பின்வரும் சாத்தியங்கள் உள்ளன: பின்னொட்டு இரண்டிற்கு மேற்பட்ட அசைகளைக் கொண்டிராவிட்டால் அல்லது பகுதி ஈற்று மெய் வ்-ஆக இல்லாவிடில் தொடக்க உயிர் அளவுக்காக நீட்சியுறும்; உடன்படுத்தி *வ்* பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் செருகப்படும்; பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் ஒலித்துணை உயிர் இ சொருகப்படும்.

தம்+ம்+ஓன் > தம்மொன்	(நற்.88:6)
பெய்+ய்+இன்+உம் > பெய்யினும்	(புற.105:4)
சொல்+ல்+இ > சொல்லி	(நற்.191:6)
நல்+ல்+ஈரே > நல்லீரே	(அக.388:10)
வல்+ல்+ஐ > வல்லை	(புற.27:17)
தெவ்+வ்+இர் > தெவ்விர்	(புற.170:9)
மெல்+ல்+இ+ய் (உடன்படுத்தி + அது> மெல்லியது	(கலி.117:15)

உண்+இ >உணீஇ	(ஐங்க்.268:2)
நில்+இயர் > நிலீஇயர்	(புற.166:34)
கொள்+அல் > கொளாஅல்	(அக.47:10)
கொள்+இ> கொளீஇ	(பொரு:78)
தென்+அது> தேனாஅது	(அக.198:13)
முன்+அது > முனாஅது	(குறு.34:4)
கொள்+அல் >கொளால்	(பதி.16:19)
தன்+அது > தனாது	(நற்ற்.164:1)
முன்+அது > முனாது	(குறு.11:4)
நில்+இயரோ > நில்லியரோ	(புற.2:20)
தெவ்+இ > தெவி	(பரி.11:69)
கள்+வ்+வி > கள்வி	(குறு.312:1)
தம்+இ+ய் (உடன்படுத்தி) +அள் > தம்மியள்	(அக.5:2)
வல்+இ+ய் (உடன்படுத்தி)+ஐ > வலியை	(பதி.84:10)
இன்+இ+ய் (உடன்படுத்தி)+இர் > இனியிர்	(மலை:286)
தன்+இ+ய் (உடன்படுத்தி)+ஏ > தனியே	(நற்ற்.162:4)
இனி+இ+ய் (உடன்படுத்தி)+ஓன் > இனியோன்	(புற.115:6)

2. பகுதி குற்றுயிர் உள்ள ஓரசையைக் கொண்டுள்ளது மற்றும் ர் என்ற மெய்யால் இறுதியுறாது. பகுதியைத் தொடரும் வருமொழி பெயராகும். பகுதி ஈற்று மெய் இரட்டிக்கும்.

நும்+ம்+இறை > நும்மிறை (அக.388:26)

வள்+ள்+உகிர் > வள்ளுகிர் (பதி.12:4)

தன்+ன்+இயல் > தன்னியல் (புற.25:2)

பொன்+ன்+அன்ன > பொன்னன்ன (புற.137:10)

3. பகுதி குற்றுயிர் உள்ள ஓரசை கொண்டுள்ளது மற்றும் ர் என்ற மெய்யில் இறுதியுறும்: *தர்* அல்லது *வர்*. பகுதியைத் தொடரும் வருமொழி உயிர் தொடக்க பின்னொட்டாகும். பின் தொடரும் பின்னொட்டின் தொடக்க உயிர் *இ* என்றால் அது நீட்சியுறும். பின்னொட்டின் தொடக்க உயிர் உ என்றால் இந்த மாற்றம் எப்போதாவது நிகழும். வேறுபட்ட பின்னொட்டு அடிப்படையில் பகுதி மாற்றமடையும். பகுதியைத் தொடரும் பின்னொட்டு குற்றுயிரில் தொடங்கி எதிர்மறையைக் குறிப்பிட்டால் பகுதியிலுள்ள உயிர் நிச்சயமாக நீட்சிசெய்யும். பகுதியைத் தொடரும் பின்னொட்டு நெட்டுயிர் தொடங்கினால் பகுதியிலுள்ள உயிர் எப்போதாவது நீட்சிசெய்யும். பின்னொட்டு ஏவல் உம் என்றால் பகுதியிலுள்ள உயிர் நீட்சியடையும் அல்லது பின்னொட்டின் தொடக்க உயிர் உ நீக்கமுறும்; தொடர்ந்து பகுதி இறுதி *ர்*-ஐ பின்னொட்டின் மீதிப் பாகத்துடன் (ம்) ஒருங்கிணைய அனுமதிக்கும்.

தரி+இ > தரீஇ (சிற்:260)

தர்+இய > தரீஇய் (அக.3:4)

தர்+உம் > தரூஉம் (மலை;170)

வர்+உம் > வரும் (நற்ற்.53:7)

வர்+உம் > வரூஉம் (நற்ற்.37:11)

தர்+அல் > தரல் (குறு.254:6)

தர்+அல் (எதிர்மறை) > தாரல் (குறு.258:1)

வர்+அல் > வரல் (சிறு:3)

வர்+அல் (எதிர்மறை) > வாரல் (அக.92:5)

தர்+ஆய் > தாராய் (நேர்மறை) (அக.165:8)

தர்+ஆ (எதிர்மறை) + அர் > தராஅர் (பதி.71:21)

(அல்லது) தர்+ஆர் > தராஅர்

வர்+உம் > வாரும் (பரி.14:9)

தர்+உம் > தம் (பதி.85:4)

வர்+உம் > வம் (பொரு:101)

4. பகுதி ஒன்றோ அதற்கு மோலோ அசைகள் கொண்டிருக்கும். பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகவோ சொல்லாகவோ இருக்கும். ஓரசைப் பகுதி நெட்டுயிரைக் கொண்டிருக்கும். பகுதி மெய் *ம்* இல்லையென்றால், அது பகுதியைத் தொடர்ந்துவரும் வருமொழியின் தொடக்க உயிருடன் சேர்க்கப்படும். பகுதி ஒன்றிற்கு மேற்பட்ட அசைகளைக் கொண்டிருந்தால் பகுதி ஈற்று மெய் *ம் த்த்*-ஆக மாறும். இருப்பினும் பகுதியின் முதல் அசை மூடியதாய் இருந்தால் இந்த மாற்றம் விருப்பாகும்.

உரிஞ்+அ+>உரிஞ்ச (அக.167:12)

நாண்+இன்+அள் > நாணினள் (நற்.308:3)

வெரிந்+இன் > வெரிநின் (நற்.220:7)

வாய்+அள் > வாயள் (திரு:56)

ஊர்+ஏம் > ஊரேம் (நற்.220:7)

வேல்+இட்டு > வேலிட்டு (பதி.46:11)

உருள்+இழாய் > உருளிழாய் (கலி.59:14)

மரம்+அ>மரத்த (பட்டி:59)

வேழம்+ஐ > வேழத்தை (கலி.97:20)

நெஞ்சம்+ஒடு>நெஞ்சமொடு (குறு.290:4)

நெஞ்சம்+ஓன்> நெஞ்சத்தோன் (புற.377:6)

இருந்தனம்+ஆக > இருந்தனமாக (அக.388:9)

காணாம்+ஆயின் > காணேமாயின் (குறு.290:3)

5.3.1.3.8. பகுதி ஈற்று மெய் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது

பகுதி ஈற்று மெய் மெய்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது விளையும் மாற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன,

1. பகுதி *ந்* அல்லது *வ்*-ஆல் இறுதியுறும். பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு பெயராகும். பகுதி ஈற்று மெய் ந்-ஆக இருந்து வருமொழி பெயராக இருந்தால் உயிர் அ பகுதிக்கும் பெயருக்கும் இடையில் செருகப்படும். பகுதி ஈற்று மெய்யைத் தொடரும் வருமொழி பெயராக இல்லை என்றால் உயிர் உ இடையில் செருகப்படும். இதைத் தொடர்ந்து இரு நேர்வுகளிலும் வருமொழியின் தொடக்க மெய் இரட்டிக்கும். பகுதி ஈற்று மெய் வ் என்றால் அது பின் தொடரும் வருமொழியின் தொடக்க மெய்யை ஒக்கும்.

வெரிந்+அ+த்+தோல் > வெரிநத்தோல் (பரி.21:5)

வெரிந்+உ+ச்+சென்றான்ன > வெரிநுச்சென்றன்ன (அக.65:14)

தெவ்+முனை > தெம்முனை (பதி.80:17)

2. பகுதி *ம்* என்ற மெய்யில் இறுதியுறும் மற்றும் அது பெயராக இருக்கும், பெயரடையாக இராது. பகுதியைத் தொடரும் வருமொழி பின்னொட்டாகவோ பெயராகவோ இருக்கும்.

பகுதி ஒரு மரத்தைக் குறித்து வந்து பகுதியைத் தொடரும் வருமொழி பகுதியுடன் பெயர் கூட்டாக்கம் செய்யும் ஒருசொல்லாக இருந்தால் பகுதி ஈற்று மெய் நீக்கமுறும் மற்றும் அதைத் தொடர்ந்து வரும் வருமொழியின் தொடக்க மெய் அது *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்தால் இரட்டிக்கும். கூட்டு விளையவில்லை என்றால் பகுதி ஈற்று மெய் அதைத் தொடரும் சொல்லின் தொடக்க மெய்க்கு ஏற்ப ஓரிடமூக்கொலியாக மாறும்.

பகுதி ஒரு மாற்றுப்பெயரின் திரிபு வடிவமாக இருந்து அதைத் தொடரும் வருமொழி ஒரு வேற்றுமை பின்னொட்டாக இந்தால் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் ஒலித்துணை உயிர் செருகப்படும். மாற்றுப் பெயர் பகுதியைத் தொடரும் வருமொழியின் தொடக்க மெய் *க், ச், த்* அல்லது *ப்*-ஆக இருந்து ஆனால் பகுதியின் இறுதி மெய்யின் நகலாக இல்லாதிருந்தால் பகுதியின் இறுதி மெய் வருமொழியின் தொடக்க மெய்க்கு இசைவாக ஓரிட மூக்கொலியாக மாறும். மாற்றுப்பெயரின் திரிபு வடிவைத் தொடரும் சொல்லின் தொடக்க மெய் பகுதியின் ஈற்று மெய்யின் நகலாக இருந்தால் பகுதியின் ஈற்றுமெய் நீக்கமுறும் மற்றும் தொடர்ந்துவரும் வருமொழியின் தொடக்க மெய் இரட்டிக்கும்

பிற பகுதிகளில் பின்வரும் மாற்றங்கள் சாத்தியங்கள் ஆகும். பகுதி ஓரசையல்லாதிருந்து முதல் அசை மூடாதிருந்தால் மற்றும் பகுதியைத் தொடரும் வருமொழி பகுதி குறிப்பிடுவதன் ஒரு பாகமாக இருந்தால் பகுதியின் ஈற்றுமெய் ம் என்பது த்த்-ஆக மாறும்; இதன் பின்னர் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில்

ஒலித்துணை உயிர் உ செருகப்படும்; வருமொழியின் தொடக்க மெய் க், ச், த் அல்லது ப் இரட்டும்.

பகுதியைத் தொடரும் வருமொழி ய்-ஆல் தொடங்கியால் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் ஒலித்துணை உயிர் இ செருகப்படும்.

மரம் + க்+கொம்பு > மரக்கொம்பு (அக.345:13)

மரம் + தலை > மரந்தலை (புற.371:2)

யாம்+தனக்கு உறுமுறை > யாந்தனக்கு உறுமுறை (புற.292:2)

உம்+அ+க்கு > உமக்கு (பரி.20:84)

தம்+குடி > தங்குடி (பதி.81:13)

எம்+கோமான் > எங்கோமான் (புற.95:9)

எம்+பதி > எம்பதி (அக.200:6)

எம்+வரை அளவை > எம்வரைஅளவை (அக.200.13)

தம்+முன் > தம்முன் (பரி.15:19)

தம்+நாட்டு > தம் நாட்டு (நற்.183:1)

நும்+நுகம் > நுந்நுகம் (பதி.63:15)

தம்+தம் > தத்தம் (பரி.22:44)

அணம்+கை > அணத்துக்கை (பரி.20:105)

அரையம்+கேடு > அரையத்துக்கேடு (புற.202:8)

கானம்+காக்கை > கானக்காக்கை (புற.342:1)

குளம்+கீழ் > குளக்கீழ் (புற.33:5)

குன்றம்+கீழ் > குன்றக்கீழ் (பரி.19:36)

கணம்+கு > கணக்கு (பரி.19:39)

பழம்+சுளை > பழச்சுளை (அக.288:13)

கொற்றம்+திரு > கொற்றத்திரு (பதி.90:24)

சினம்+போர் > சினப்போர் (பதி.77:1)

நிலம்+மகள் > நிலமகள் (புற.365:10)

சுரம்+முதல் > சுரமுதல் (புற.60:4)

நிலம்+வரை > நிலவரை (நற்.399:5)

கொற்றம்+வேந்தர் > கொற்றவேந்தர் (புற.338:8)

அணையம்+இ+யாம் > அணையமியாம் (ஐங்க்.70:5)

3. பகுதி *ம்*-என்னும் மெய்யில் இறுதியுறும் மற்றும் அது பெயரடையல்ல. பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும், ஒரு பின்னொட்டல்ல. பகுதியோ வருமொழியோ வினையாக இருக்கும்.

பகுதி மாற்றுப்பெயராக இல்லாவிடில் பகுதி ஈற்றுமெய் ம் அதைத் தொடரும் வருமொழியின் தொடக்க மெய்க்கு இசைவாக ஓரிட மூக்கொலியாக மாறும். பகுதி மாற்றுப்பெயராக இருந்தால் பகுதி ஈற்று மெய் ம் நீக்கமடையும் மற்றும் வருமொழியின் தொடக்க மெய் க், ச், த் அல்லது ப்-ஆக இருந்தால் இரட்டும். இரு நேர்வுகளிலும் பகுதி ஓரசயல்லாதிருந்தால் அல்லது நெட்டுயிர் கொண்டிருந்தால் மற்றும் வருமொழி மூக்கொலியில் தொடங்கினால் ஈற்று மெய் ம் நீக்கமுறும்.

கயம்+கலங்கி > கயங்கலங்கி (புற.283:1)

வெம்+காதலி >வெங்காதலி (புற.210:5)

வலம்+திரி மரபு > வலந்திரி மரபு (அக.304:9)

நம்+துறந்து > நத்துறந்து (அக.183:3)

நம்+புணர்ந்து > நப்புணர்ந்து (அக.311:5)

அத்தம்+நண்ணிய > அத்த நண்ணிய (புற.313:1)

மகரம்+மேவ > மகர மேவ (பரி.11:9)

கலம்+மிகுப்ப > கலமிகுப்ப (புற.161:30)

யாம்+மகிழ்தூங்க > யாமகிழ்தூங்க (புற.316:10)

யாம்+வேண்தியாங்கு > யாம் வேண்தியாங்கு (புற.171:5)

4. பகுதி மெய் எ-இல் இறுதியுறும் மற்றும் அது ஒரு பெயரடையாகும். அதைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும். வருமொழி வ்-இல் தொடங்கினால் பகுதி ஈற்று ம்-ஆனது வ்-ஆக மாறும். பகுதியைத் தொடரும் வருமொழி க், ச், அல்லது த்-இல் தொடங்கினால் பகுதி ஈற்று மெய் ம் வருமொழியின் தொடக்க மெய்யுடன் இயையும் படி ஓரிட மூக்கொலியாக மாறும். அவ்வாறில்லை என்றால் மாற்றம் ஏற்படாது.

அம்+வரி > அவ்வரி (நற்.370:5)

அம்+கவடு >அங்கவடு (பதி.23:1)

5. பகுதி *ண், ல், ள்* அல்லது *ன்*-இல் இறுதியுறும் மற்றும் அது ஒரு பெயரடையல்ல. அதைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகவோ சொல்லாகவோ இருக்கும். மாற்றங்கள் பகுதி ஈற்று மெய்யில் மற்றும்/அல்லது வருமொழியின் தொடக்க மெய்யில் நேரும்.

பகுதியைத் தொடரும் வருமொழி க், ச், த், அல்லது ப்-இல் தொடங்கினால் பகுதி ஈற்று மெய் வருமொழியின் தொடக்க மெய்க்கு இணையான வல்லினமாக மாறும். இதன் படி *ண் > ட், ல் > ற், ன் > ற்* எனமாறும். இந்நேர்வுகளில் பகுதியைத் தொடரும் வருமொழியின் முதல் மெய்யில் மாற்றம் ஏற்படாது.

வருமொழியின் தொடக்க மெய் *த்* அல்லது *ந்*-ஆக இருந்தால் மாற்றம் சிக்கலானதாக இருக்க இயலும். அடிப்படையில் *த்* மற்றும் *ந்* என்பன பகுதி ஈற்று மெய்யின் நாவிடத்துடன் தன்மயமாகும் மற்றும் பகுதி ஈற்று மெய்யின் ஒலிப்பிடம் அடிப்படையில் அவற்றின் ஒலிப்பிடத்தை மாற்றும்; இதன் படி பகுதி ஈற்றுமெய் *ள்*-ஆகவோ *ண்*-ஆகவோ இருந்தால் *த் > ட்* எனவும் *ந் > ண்* எனவும் மாறும். பகுதி ஈற்றுமெய் *ல்* அல்லது *ன்*-ஆக இருந்தால் *த் > ற்* எனவும் *ந் > ன்* எனவும் மாறும். மூக்கொலியல்லாத மெய் வல்லின மெய்யாக மாறும்: *ல் > ற், ள் > ட்*. அரிதாக மூக்கொலியல்லாத பகுதி ஈற்றுமெய் (*ல்* அல்லது *ள்*) வருமொழியின் *த்*-ஐ *ற்* மற்றும் *ட்*-ஆக மாற்றிய பின்னர் தொடக்க மெய் ஆய்தமாக (ஃ) மாறும். இச்சூழலில் பகுதி குற்றுயிர் கொண்ட ஓரசைச் சொல்லாக இருக்கும்.

சில வேளைகளில் பகுதி ஈற்றுமெய் பின்வரும் வருமொழியின் தொடக்க மெய்யை ஆயுதம் அல்லாத மெய்யாக மாற்றிய பின்னர் நீக்கமுறும். இந்த மாற்றம் குற்றுயிர் கொண்ட ஓரசை பகுதியில் நிகழ்ந்தால் உயிர் நீட்சியுறும்.

மேற்கூறிய எந்த மாற்றமும் நிகழவில்லை என்றால் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் ஒலித்துணை உயிர் செருகப்படும். பகுதி மாற்றுப் பெயராக இருந்தால் ஒலித்துணை உயிர் *அ*-ஆக இருக்கும்; பகுதியைத் தொடரும் வருமொழி *ய்*-இல் தொடங்காவிடில் ஒலித்துணை உயிர் *உ*-ஆக இருக்கும். குற்றுயிர் உள்ள ஓரசைகொண்ட

பகுதியின் ஈற்று மெய் இரட்டிக்கும். பகுதியைத் தொடரும் பின்னொட்டு வேற்றுமை உருபாகவோ அல்லது ஓரசைப் பகுதியைத் தொடரும் ஒரு சொல்லாக இருந்தால் வருமொழியின் தொடக்க மெய் இரட்டிக்கும்.

கண்+கு >கட்கு (ண் > ட்) (குறு.202:3)

நடுவண்+சிலைப்ப > நடுவட்சிலைப்ப (ண்>ட்) (பதி.54:13)

செண்+புலம் > சேட்புலம் (ண்>ட்) (அக.390:2)

முரண்+பூ > முரட்பூ (ண்>ட்) (பெரு:294)

மாண்+த்+அன்+அ > மாண்டன (த் > ட்) (பதி.19:27)

காண்+த்+ஈ > கண்டீ (த்> ட்; பகுதி உயிர் மாற்றம்) (பரி.6:64)

காண்+த்+இர்>காண்டிர் (த்>ட்) (அக.76:9)

விண்+தோய் > விண்டோய் பிறங்கள் (த் > ட்) (புற.391:2)

கண்+நீர் > கண்ணீர் (ந் > ண்) (நற்.88:8)

கண்+து >கட்டு(ண்>ட்; த்>ட்) (புற.203:10)

தூண்+தடி > தூட்ட்டி (ண்>ட்; த்>ட்) (பரி.4:20)

புண்+தாள் > புட்டாள் (ண்>ட்; த்>ட்) (அக.120:10)

மாண்+நலம் > மாணலம் (ந்>ண்;பகுதீற்றுயிர் நீக்கம்) (ஐங்க்.139:2)

அவண்+நின்றும் > அவணின்றும் (ந்>ண்; பகுதீற்றுயிர் நீக்கம்) (மலை:53)

கண்+உ_+க்கு > கண்ணுக்கு (ஒலித்துணையுயிர் உ_) (புற.67:7)

எண்+உ_+தி>எண்ணுதி (ஒலித்துணையுயிர் உ_) (குறு.63:2)

பேண்+உ_+ப>பேணுப (ஒலித்துணையுயிர் உ_) (நற்.72:1)

நாண்+உ_+க்+குறைவிலள்>நாணுக்குறைவிலள்(ஒலித்துணையுயிர்உ_) (பரி.12:49)

பூண்+க >பூண்க (மாற்றமில்லை) (நற்.81:5)

காண்+மதி > காண்மதி (மாற்றமில்லை) (ஐங்க்.134:1)

உண்+மின்>உண்மின்(மாற்றமில்லை) (பதி.18:1)

கல்+பு>கற்பு (ல்>ற்) (பதி.70:15)

கடல்+கரை>கடற்கரை (ல்>ற்) (ஐங்க்.168:1)

கடல்+படப்பை > கடற்படப்பை (ல்>ற்) (பதி.55:6)

செல்+த்+அன்+அ > சென்றன (ல்>ன்; த்>ற்) (அக.251:1)

செல்+த்+ஈ >சென்றீ (ல்>ன்; த்>ற்) (நற்.360:5)

நில்+த்+ஈ+மோ > நின்றீமோ (ல்>ன்; த்>ற்) (நற்.45:8)

வெல்+தி>வென்றி (ல்>ன்; த்>ற்) (குறு.111:2)

நல்+நாட்டு > நன்னாட்டு (ல்>ன்; ந்>ன்) (பதி.55:6)

செல்+மதி >சென்மடி (ல்>ன்) (அக.288:1)

கல்+மார்>கன்மார் (ல்>ன்) (புற.169:9)

வெல்+மிளை> வென்மிளை (ல்>ன்) (பதி.33:7)

வெல்+வேல் > வென்வேல் (ல்>ன்) (புற.201:18)

வெல்+தி > வெற்றி (ல்>ற்; த்>ற்) (திரு.258)

கல்+த்+உ_ > கற்று (ல்>ற்; த்>ற்) (மது:767)

நில்+தர>நிற்றர (ல்>ற்;த்>ற்) (மது:522)

கடல்+திரை>கடற்றிரை(ல்>ற்; த்>ற்) (ஐங்க். 105:1-2)

பல்+தி >பஃறி (ல்>ஃ; த்>ற்) (பட்ட்:30)

கொல்+தகை > கொஃறகை (ல்>ஃ; த்>ற்) (பரி.5:6)

பல்+தோல் >பஃறோல் (ல்>ஃ; த்>ற்) (பதி.83:3)

உழல்+தல் > உழறல் (த்>ற்; பகுதீறு நீக்கம்) (அக.208:12)

குயில்+நர்>குயினர் (ந்>ன்; பகுதீறு நீக்கம்) (மது:511)

வரம்பில்+தானை >வரம்பிறானை (த்>ற்; பகுதீறு நீக்கம்) (பதி.29:15)

இயல்+தேர் >இய்றேர் (ல்>ற்; பகுதீறு நீக்கம்) (ஐங்க்.104;3)

வால்+நாரை > வானாரை (ந்>ன்; பகுதீறு நீக்கம்) (புற.277:2)

குருசில்+நீ > குருசினீ (ந்>ன்; பகுதீறு நீக்கம்) (பதி.32:1)

வெல்+தல்>வேறல் (த்>ற்; பகுதீறு நீக்கம்; உயிர் நீட்சி) (புற.45:6)

செல்+தி >சேறி (த்>ற்; பகுதீறு நீக்கம்; உயிர் நீட்சி) (நற்ற்.19:7)

சொல்+உ+மதி>சொல்லுமதி (ஒலித்துணையுயிர் உ) (ஐங்க்.479:1)

எழில்+இ+யானை> எழிலியானை (ஒலித்துணையுயிர் இ) (பரி.20:4)

செல்+க > செல்க (மாற்றமில்லை) (பொரு:177)

செல்+ப > செல்ப (மாற்றமில்லை) (நற்ற்.73:6)

இவள்+கு >இவட்கு (ள்>ட்) (ஐங்க்.103:3)

தள்+ப > தட்ப (ள்>ட்) (நற்ற்.94:3)

பெள்+பு>பெட்பு (ள்>ட்) (புற.205:2)

வேள்+கொச்சிறார் >வேட்கொச்சிறார் (ள்>ட்) (புற.32:8)

புள்+பகை > புட்பகை (ள்>ட்) (புற.201:7)

கொள்+த்+ஈ>கொண்டீ (ள்>ண்; த்>ட்)	(கலி.65:14)
நாள்+மகிழ் இருக்கை >நாண்மகிழ் இருக்கை (ள்>ண்)	(பதி.85:8)
கொள்+மதி >கொண்மதி (ள்>ண்)	(புற.200:15)
கேள்+த்+இ>கேட்டி(ள்>ட்; த்>ட்)	(அக.6:8:4)
முள்+தாள்+தாமரை >முட்டாட்டாமரை (ள்>ட்; த்>ட்)	(குறி.80)
கள்+து >கஃடு (ள்>ஃ; த் >ட்)	(புற.319:4)
ஆள்+தல் > ஆடல் (த்>ட்: பகுதீறு நீக்கம்)	(பதி.75:14)
நாள்+தொறும் > நாடோறும் (த் > ட்; பகுதீறு நீக்கம்	(பதி.54:7)
தடந்தாள்+நாரை > தடந்தாணாரை (ந்>ண்; பகுதீறு நீக்கம்	(பதி.29:4)
புள்+உ+க்+குரல்>புள்ளுக்குரல் (ஒலித்துணையுயிர் உ)	(புற.41:7)
என்+கு >எற்கு (ன்>ற்)	(புற.303:9)
காணின்+காதலந்தொழி > காணிற்காதலந்தொழி (ன்>ற்)	(அக.352:11)
நின் வயின் +பிரிந்த > நின்வயிற்பிரிந்த (ன்>ற்)	(பதி.79:4)
தன்+புறம் > தற்புறம் (ன்>ற்)	(புற.383:13)
என்+தி > என்றி (த்>ற்)	(அக.370:7)
தின்+தி >தின்றி (த்>ற்)	(கலி.65:13)
ஆன்+த்+உ > ஆன்று (த்>ற்)	(குறு.155:3)
தின்+த்+உ>தின்று (த்>ற்)	(பொரு.118)
முன்+திணை>முற்றிணை (த்>ற்)	(பதி.85:5)
செவ்வூன்+தோன்ற >செவ்வூன்றோன்ற (த்>ற்)	(பதி.55:7)

பொன்+நேர்>பொன்னேர் (ந்>ன்)	(அக.229:13
என்+துயர்>எற்றுயர் (ன்>ற்; த்>ற்)	(பரி.8:78)
புலம்பன்+தேறி>புலம்பற்றேறி (ன்>ற்; த்>ற்)	(ஐங்க்.166:3)
நிலன்+நெளிய>நிலனெளிய (ந்>ன்)	(புற.345:6)
என்+அ+(க்)கு>எனக்கு (ஒலித்துணையுயிர் அ)	(நற்ற்.128:3)
நின்+அ+(க்)கு >நினக்கு (ஒலித்துணையுயிர் அ)	(பதி.73:2)
தன்+அ+(க்)கு > தனக்கு (ஒலித்துணையுயிர் அ)	(அக.32:18)
மன்+உ+க>மன்னுக (ஒலித்துணையுயிர் அ)	(புற.91:7)
துன்+உ+கம்>துன்னுகம் (ஒலித்துணையுயிர் உ)	(அக.154:15)
மின்+உ+ப்+போல்>மின்னுப்போல் (ஒலித்துணையுயிர் உ)	(பரி.21:54)
இவன்+இ+யார்>இவனியார் (ஒலித்துணையுயிர் இ)	(புற.13:1)
கான்+யாறு >கான்யாறு (ஒலித்துணையுயிர் இல்லை)	(பட்ட்:161)

6. பகுதி *ண், ல், ள்* அல்லது *ன்* மெய்களில் இறுதியுறும் மற்றும் அது பெயரடையாக இருக்கும். அதைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டு அல்லது ஒரு சொல்லாகும். பகுதி ஈற்று மெய் மாற்றம் அடையக்கூடும். பகுதியைப் பின் தொடரும் வருமொழி *க், ச், த்* அல்லது *ப்*-இல் தொடங்கினால் பகுதி ஈற்றுமெய் அவற்றிற்கு இணையான வல்லின ஒலிகளாகவோ மூக்கொலிகளாகவோ மாற்றமடையும். இவ்வாறு *ண்> ட், ல் > ற்* அல்லது *ன், ள் > ட்* அல்லது *ண்* என மாறும்.

பகுதியைத் தொடரும் வருமொழியின் தொடக்க மெய் பல்லினமாக (த் அல்லது ந்) இருந்தால் அது பகுதி ஈற்று மெய்யின் நாவிடத்தில் தன்மயமாகும். இவ்வாறு பகுதி ஈற்று

மெய் ண்-ஆக இருந்தால் *த்* > ட் ஆக மாறும்; ஆனால் பகுதி ஈற்றுமெய் ன்-ஆக இருந்தால் த் > ற் ஆக மாறும்; பகுதி ஈற்றுமெய் ண்-ஆக இருந்தால் *ந்>ண்* ஆக மாறும்; ஆனால் பகுதி ஈற்றுமெய் *ல்*-ஆக இருந்தால் ந்>ன் ஆக மாறும். த்/ந் இவ்வாறு மாற்றம் அடைகையில் முந்தைய பத்தியில் விளக்கப்பட்ட பகுதி ஈற்று மெய்யில் ஏற்படும் இணையான மாற்றங்கள் கட்டாயமாகும்

சில வேளைகளில் பகுதி ஈற்றுமெய் வருமொழியின் தொடக்க மெய்யில் மாற்றம் ஏற்படுத்திவிட்டு நீக்கமடையும். இச்சூழலில் பகுதி ஓரசையல்லாதோ முதல் அசையில் நெட்டுயிர் கொண்டோ காணப்படும்.

மேற்சொன்ன எந்த மாற்றமும் ஏற்படாவிட்டால் பகுதிக்கும் அதைத் தொடரும் வருமொழிக்கும் இடையில் ஒலித்துணையிர் செருகப்படும். இதன் விளைவாக ஓரசை பகுதி ஈற்று மெய் விருப்பாக இரட்டிக்கும் அத்துடன் விளையும் வடிவம் பெயராக இருந்தால் வருமொழியின் தொடக்க மெய்யும் (*க், ச், த்* அல்லது *ப்*) இரட்டிக்கும்.

திண்+ப்(உ)+அம் > திட்பம் (தொழிற்பெயர்) (ண்>ட்) (அக.195:15)

திண்+தேர்>திண்டேர் (த்>ட்) (ஐங்க்.137:2)

தண்+நிழல்>தண்ணிழல் (ன்>ண்) (குறி:106)

தண்+கடல்>தண்கடல் (மாற்றமில்லை) (பெரு:18)

திண்+சுவர்>திண்சுவர் (மாற்றமில்லை) (மது:667)

தண்+பொருனை > தண்பொருனை (மாற்றமில்லை) (புற.11:5)

தண்+இ+து>தண்ணிது (ஒலித்துணையுயிர் இ) (அக.218:15)

சில்+சில >சிற்சில (ல்>ற்) (புற.331:9)

சில்+மின் > சின்மின் (ல்>ன்) (புர.348:3-4)

நல்+து>நன்று (ல்>ன்; த் > ற்) (குறு.38:4)

மெல்+நோக்கு > மேன்னோக்கு (ல்>ன்; ந்>ன்) (கலி.86:23)

அகல்+இ+து>அகலிது (ஒலித்துணையுயிர் இ) (புற.256:6)

நல்+ல்+இ+து > நல்லிது (ஒலித்துணையுயிர் இ) (மலை:80)

தொல்+கவின் >தொல்கவின் (மாற்றமில்லை) (நற்.41:1)

வெள்+குடை > வெண்குடை (ள்>ண்) (சிறு:64)

வள்+கை > வண்கை (ள்>ண்) (மது:442)

வெள்+நரி>வெண்ணரி (ள்>ண்; ந்>ண்) (பதி.22:34)

வாள்+நுதல்>வாணுதல் (ந்>ண்; பகுதி ஈறு நீக்கம்) (பதி.19:14)

வெள்+இ+து >வெளிது (ஒலித்துணையுயிர் இ) (புற.279:8)

வெள்+ஐ+த்+தோடு >வெள்ளைத்தோடு (ஒலித்துணையுயிர் ஐ)(குறு.163:2)

வெள்+யாட்டு > வெல் யாட்டு (மாற்றமில்லை) (பரி.5:62)

இன்+துணை.இன்றுணை (த்>ற்) (அக.352:7)

இன்+நகை > இன்னகை (ந் > ன்) (நற்.81:9)

இன்+சீர் > இன்சீர் (மாற்றமில்லை) (நற்.138:10)

7. பகுதி ஓரசை கொண்டது மற்றும் மெய் ர்-இல் இறுதியுறும்; ஆனால் இது பெயரடையல்ல: *தர்*, *வர்*. அதைத் தொடரும் வருமொழி மெய்யில் தொடங்கும் பின்னொட்டாகும். பின்னொட்டு *த்*, *ட்*, அல்லது *ப்*-இல் தொடங்கினால் ஒலித்துணையுயிர் உ பகுதிக்கும் அதைத் தொடரும் பின்னொட்டிற்கும் இடையில் செருகப்படும். ஆனால் பகுதி ஈற்றுமெய் *ர்* அதைத் தொடரும் பின்னொட்டு இறந்தகால

த்-ஐ கொண்டிருந்தால் அல்லது மூக்கொலியில் தொடங்கினால் பின்னொட்டின் முதல் மெய்யுடன் இயையும் ஓரிட மூக்கொலியாக மாற்றமடையும்

தர்+உ+கம் > தருகம் (அக.21:8)

தர்+உ+தி > தருதி (அக.188:14)

வர்+உ+ நர் > வருநர் (குறி:202)

தர்+உ+ப> தருப (பதி.59:1)

வர்+த்+உ>வந்து (நற்ற்.229:11)

தர்+த்+உ>தந்து (மது:766)

தர்+மின்>தம்மின் (மது:729)

தர்+மின்>தமின் (புற.152:18)

வர்+மின்>வம்மின் (பதி.49:1)

வர்+மோ>வம்மோ (புற.180:9)

8. பகுதி ஓரசையுள்ளதும் மெய் *ர்*-இல் இறுதியுறுவதுமாகும் மற்றும் அது ஒரு பெயரடையும் ஆகும். அதைத் தொடரும் வருமொழி ஒரு சொல்லாகும். பகுதியைத் தொடரும் சொல் *க், ச், த்* அல்லது *ப்*-ஐ தொடக்க மெய்யாகக் கொண்டிருந்தால் அதற்கு இயைந்த ஓரிட மூக்கொலி பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் செருகப்படும். இந்த மாற்றம் ஏற்படவில்லை என்றால் பகுதிக்கும் வருமொழிக்கும் இடையில் (ஒலித்துணையுயிர் *அ*) செருகப்படும். இதன்பயனாக தொடக்க *க், ச், த்* அல்லது *ப்* இரட்டும்.

ஈர்+ங்+காலை >ஈரங்காலை (மலை:207)

ஈர்+ஞ்+சிவல்> ஈரஞ்சுவல் (அக.133:16)

ஈர்+ந்+தடி >ஈர்ந்தடி (நற்.120:5)

ஈர்+ம்+புறத்து >ஈர்ம்புறத்து (நற்.87:7)

ஈர்+ஞெண்டு >ஈர்ஞெண்டு (குறு.117:2)

ஈர்+அ+ச்+செறு> ஈரச்செறு (புற.369:10)

9. பகுதி *ய், ர்*, அல்லது *ழ்* மெய்யில் இறுதியுறும் மற்றும் இது பெயரடை அல்ல. *ர்* அல்லது *ல்*-இல் இறுதியுறும் பகுதி நெட்டுயிரைக் கொண்டிருக்கும் அல்லது இரு அசைகளைக் கொண்டிருக்கும். பகுதியைத் தொடரும் வருமொழி ஒரு பின்னொட்டாகவோ சொல்லாகவோ இருக்கும்.

பகுதியைத் தொடரும் வருமொழியின் தொடக்க மெய் பின்வரும் சூழல்களில் இரட்டும்: வருமொழி ஒரு பெயராக இருக்கவேண்டும்; பகுதியும் வருமொழியும் வேற்றுமை உறவுகொண்டிருக்கவேண்டும். பகுதியைத் பின் தொடரும் பின்னொட்டு *ம்*-இல் தொடங்கினால் இரட்டுவது எப்போதாவது நிகழும். *ர்*-இல் இறுதியுறும் பகுதிக்கும் *ய்*-இல் தொடங்கும் வருமொழியாகிய சொல்லுக்கும் இடையில் *ய்* செருகப்படும். அவ்வாறில்லை என்றால் மாற்றம் ஏற்படுவதில்லை.

மெய்+க்+கலவை > மெய்க்கலவை (பரி.7:10)

துய்+த்+தலை மந்தி > துய்த்தலை மந்தி (புற.158:24)

எறுழ்+த்+தோல் >எறுழ்த்தோல் (மது:729)

வாய்+ப்+பகை > வாய்ப்பகை (அக.101:6)

கீழ்+ப்+பணிந்து > கீழ்ப்பணிந்து (பதி.75:4)

கொய்+ம்+மயிர் > கொய்ம்மயிர் (நற்.81:4)

கூடுநர்+ப்+பிரியலன் > கூடுநர்ப்பிரியலன் (அக.352:8)

அமரர்+ப்+பேணி > அமரர்ப்பேணி (புற.99:1)

செய்+ம்+மார் (வினை எச்ச பின்னொட்டு) > செய்ம்மார் (பதி.54:14)

சேர்+மின் (ஏவல் பின்னொட்டு)> சேர்மின் (புற.9:5)

வீழ்+மின் > வீழ்மின் (புற.262:1)

இமிழ்+மருதின் > இமிழ் மருதின் (பதி.13:7)

இவர்+இ+யார்> இவரியார் (ஒலித்துணையுயிர் இ) (கலி.84:32)

தந்தார் +இ+யார் > தந்தாரியார் (ஒலித்துணையுயிர்இ) (மது:371)

செய்+த்+உ > செய்து (மது:371)

காய்+தல் > காய்தல் (புற.252:11)

காய்+த்த்+உ > காய்த்து (புற.120:8)

சேய்+த்து >சேய்த்து (சிறு:202)

வாய்+புகு கடாம் > வாய் புகு கடாம் (அக.93:17)

சேர்+கம் > சேர்கம் (புற.255:6)

புணர்+ச்சி > புணர்ச்சி (குறி:212)

ஆர்+ந >ஆர்ந (பதி. 13:6)

ஆழ்+க >ஆழ்க (புற.132;2)

ஆழ்+ச்சி > ஆழ்ச்சி (புற.60:8)

பிறழ்+ந>பிறழ்ந (பதி.13:1)

5.3.2. உருபொலியனியலில் வரலாற்று மாற்றம்

5.3.2.1. பகுதிப் பிறழ்வில் வரலாற்றுமாற்றம்

பகுதிகள் திரிபு மற்றும் ஆக்க ஒட்டுக்கள் ஏற்கும் போது திரிபுறும். எல்லா பகுதிகளும் திரிபுறா; சில திரிபுறும். இவ்வாறு திரிபுறுகையில் அல்லது பிறழுறுகையில் அவற்றின் முதல் அசையில் உயிர் நீட்சியுறலாம், முதலசையில் உயிர்கலாம் அல்லது மெய் குறையலாம் அல்லது மெய் இரட்டிக்கலாம் அல்லது வல்லினமாகலாம். இத்தகைய மாற்றங்கள் சங்கத் தமிழில் நிகழ்வதை எடுத்துக்காட்டுகளுடன் பார்த்தோம். சங்கத் தமிழில் நாம் கண்ட பகுதி பிறழ்வு தற்காலத் தமிழுக்கும் எடுத்து வரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக *மறு > மாறு, கெடு > கேடு, பொரு > போர், கரு > கார்* போன்ற பிறழ்ச்சிகளும் *தான் > தம், காண் > கண்* போன்ற பிறழ்ச்சிகளும் *தின் > தீற்று, உண் > ஊட்டு, பூண் > பூட்டு, மூள் > மூட்டு* என்ற பிறழ்வுகளும் *மயங்கு > மயக்கு, வருந்து > வருத்து* என்ற பிறழ்வுகளும், *பெருகு > பெருக்கு, ஏறு > ஏற்று* தற்காலத் தமிழிலும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் தின் என்பதன் காரணவாக்க வடிவான *தீற்று* 'தின்னச் செய்' என்ற சாத்தியமான வினையும், *பூண்* 'உடு' என்பதன் காரணவாக்க வினைவடிவான *பூட்டு* 'உடுக்க செய்' என்ற சாத்தியமான வினையும் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை. மேலும் மயங்கு என்பதன் பிறழ்வுற்ற வடிவான *மயக்கு* ஒரு செயப்படு பொருள் குன்றா வினையாகத்தான் தற்காலத் தமிழில் வழக்கில் உள்ளது. மயக்கு என்பது ஒரு பெயராக 'மயக்கம்' என்ற பொருளில் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை. இதுபோன்று அஞ்சு என்பதன் பிறழ்வுற்ற வடிவான *அச்சு* என்பது 'பயம்' என்ற பொருளில் வழக்கில் இல்லை. *முத்தை* என்பதன் பிறழ்வுற்ற வடிவான முத்தை தற்காலத்

தமிழில் வழக்கில் இல்லை. ஓம்பு என்பதன் பிறழ்வு வடிவான *ஓப்பு* என்பது 'தடு' என்ற பொருளில் வினையாக தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை. *தோன்று* என்பதன் பிறழ்வு வடிவான *தோற்று* 'தோன்றச் செய்' என்பது செயப்படுபொருள் குன்றா வினையாகத் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை. *சுடு* என்பதன் பிறழ்வு வடிவான *சூட்டு* என்பது 'சுடப்பட்ட இறைச்சி' என்ற பொருளில் வழக்கில் இல்லை.

இது தவிர *ஏறு* என்பதன் பிறழ்வு வடிவான *ஏற்றை* என்பது 'ஆண் விலங்கு' என்ற பொருளிலும், *மறு* 'பிற' என்பதன் பிறழ்வு வடிவு அடங்கிய *மற்றையோர்* என்பது 'பிறர்' என்ற பொருளிலும் *பின்* என்பதன் பிறழ்வு வடிவான *பிற்றை* என்பது 'பின்தங்கிய நிலை' என்ற பொருளிலும் *துயில்* என்பதன் பிறழ்வுற்ற வடிவான *துயிற்று* என்பது 'தூங்கச்செய்' என்ற பொருளிலும் வழக்கில் இல்லை.

புகு என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடக்கிய *புக்கில்* (< *புக்க்+இல்*) 'நுழைந்த இடம்' என்பது *துஞ்சு* என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடங்கிய துச்சில் (< *துச்ச்+இல்*) 'ஓய்வகம்' என்பதும் *அடு* என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடங்கிய *அட்டில்* (< *அடு+இல்*) 'சமைக்குமிடம்' என்பதும், *பசு* என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடங்கிய *பச்சிறா* 'புது இறால்' என்பதும் *புது* என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடங்கிய *புத்தகல்* 'புதிய ஆழமற்ற பாத்திரம்' என்பதும் குளம்பு என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடங்கிய *குளப்பு வழி* 'குளம்பு சென்ற வழி' என்பதும் *தோல்* என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடக்கிய *தொன்றிசை* (<*தோன்ற்+இசை*) 'நிறுவப்பட்ட புகழ்' என்பதும் *கன்று* என்பதன் பிறழ்வுற்ற வடிவம் உள்ளடங்கிய *கற்றுரி* 'கன்றின் தோல்' என்பதும் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை.

5.3.2.2.பகுதிகளுக்கும் ஒட்டுக்களுக்குமிடையில் ஏற்படும் உருபனியல் மாற்றத்தின் வரலாற்று மாற்றம்

இத்தலைப்பின் கீழ் சங்ககாலத் தமிழில் உள்ளதென பட்டியலிடப்பட்டுள்ள எல்லா உருபனியல் மாற்று வடிவங்களும் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை. குறிப்பாக அளபெடை வடிவங்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை.

"பகுதி ஈற்று நெட்டுயிர் உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது" என்ற துணைத் தலைப்பின் கீழ் (பார்க்க பக்கம்) பட்டியலிடப்பட்டுள்ள *ஆ + உம் > ஆம்* (கலி.58:21), *சா + உம் > சாம்* (கலி.60:27), *போ + உம் > போம்*, (கலி.25:11), *தா + உம் > தாம்* (நற்.79:3), *மே + அ > மே* (பரி.9:79) என்ற உருபொலியனியல் மாற்றங்களும் *சீ + இ > சீஇ* (கலி.101:8), *கை +இ > கைஇ*, (மது:419), *தை + இ > தைஇ* (குறி:102), *வை + இய > வைஇய* (நற்.12:6) என்ற உருபொலியனியல் மாற்றங்களும் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை.

பகுதியும் பின்னொட்டும் இணையும் போது *ய், வ், ஞ், ன்* என்ற உடன்படுத்திகள் வருவது தற்காலத் தமிழிலும் வழக்கில் இருந்தாலும், சங்கத்தமிழில் காணப்படும் உடன்படுத்திகள் இடையில் வரும் சில ஆக்கங்கள் தற்காலத்தமிழில் வழக்கில் இல்லை. எடுத்துக்காட்டாக பின்வரும் சங்கத்தமிழ் ஆக்கப்பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை: *கொலை + வ் + அன் > கொலைவன்* (புற.152:8), *விலை + வ் + அன் > விலைவன்* (புற.152:9), *வலை + ஞ் + அர் > வலைஞர்* (பெரு:274), *வினை + ன் + அர் > வினைனர்* (பதி.62:16).

பகுதியும் பகுதியும் இணைகையில் அளபெடையும் வருமொழி மெய்க்கு இசைவான மூக்கொலியும் வருவதாய் நாம் கண்ட (பார்க்க பக்கம்) கூட்டுப் பெயர்கள்

அளபெடைக்காரணமாகத் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை. எடுத்துக்காட்டாக பின்வரும் கூட்டுபெயர் வடிவங்களின் சேர்க்கைத் தற்காலத் தமிழில் இருந்தாலும் சங்கத்தமிழில் காணப்படும் அளபெடை உள்ள கூட்டாக்கங்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை: (*மா + அ + ந் + தளிர்* >) *மாஅந்தளிர்* (கலி.143:27), (*மே + எ + ந் + தோல்* >) *மேஎந்தோல்* (அக.3:1), (*மே + எ + ந் + தோன்றி* >) *மேஎந்தோன்றி*, (மது:133), (*சே + எ + ச் + செவி* >) *சேஎச்செவி* (கலி.103:51). அளபெடை இல்லாத சங்ககாலத் தமிழ் கூட்டுப் பெயரான (*மா + ந் + தளிர்* >) *மாந்தளிர்* (பரி.8:38) தற்காலத் தமிழில் வழக்கில் உள்ளது.

பகுதி ஓரசை உள்ளதும் பெயரடையுமான *மா, தீ, மீ, பூ, தே, பே, ஐ, பை, மை, வை.* என்பனவற்றைத் தொடரும் வருமொழியாகப் பெயர் வருகையில் வருமொழியின் மெய் இரட்டும் என்றும் ஓரின மூக்கொலி வரும் என்றும் நிலை மொழிப் பகுதியின் ஈற்றுயிர் அளபுக்காக நீட்சியுறும் என்று விளக்கப்படுள்ள சங்ககாலத் தமிழின் உருபொலியனியல் விதி ஓரளவுக்குத் தற்காலத் தமிழுக்குப் பொருந்தும்; ஆனால் அளபெடை உள்ள வடிவாக்கங்களைத் தற்காலத் தமிழ் அனுமதிக்காது. எடுத்துக்காட்டாக அளபெடை காரணமாகப் பின்வரும் சங்காலத் தமிழ் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை; பகுதி ஓரசை உள்ளதும் பெயரடையும் ஆகும். *மா + அ + த் + தாள்* > *மாஅத்தாள்* (மது.178), மா + அ + காவிரி > மா காவிரி (பட்ட்.116), *தூ + உ + நெஞ்சம்* > *தூஉநெஞ்சம்* (குறு.157:2), *பே + எ + விழவு* > *பேஎவிழவு* (பரி.5:14). ஆனால் பின்வரும் சங்ககாலத் தமிழ் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் வழக்கிலுள்ளவை: மா + க் + கல் > *மாக்கல்* (அக.392:18), *மா + தவர்* > *மாதவர்* (பரி.5:14), *மா + நிலம்* > *மாநிலம்* (நற்ற்.க.வா.:1), *தீ + ங் + கனி* > *தீங்கனி* (புற.281:1), *தீ + ந் + தயிர்* > *தீந்தயிர்* (அக.87:1)

தீ + ம் + புனல் > தீம்புனல் (நற்.70:7), *தீ + நெஞ்சம் > தீநெஞ்சம்* (பரி.5:73), *மீ + க் + கூற்றத்து > மீக்கூற்றத்து* (சிற்.:212), *மீ + ப் + பால் > மீப்பால்* (பரி.10:79), *மீ + நீர் > மீநீர்* (பரி.21:40), *பூ + ங் + குழை > பூங்குழை* (பொரு:30), *தே + க் + கொக்கு > தேக்கொக்கு* (குறு.26:6), *ஐ + ங் + கை > ஐங்கை* (பரி.3:37), *பை + ஞ் + சுனை > பைஞ்சுனை* (திரு:253). இருப்பினும் பின்வரும் சங்ககாலத் தமிழ் வடிவங்கள் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை: *பை + ஞ் + ஞிலம் > பைஞ்ஞிலம்* (பதி.17:9), *மை + ம் + மீன் > மைம்மீன்* (புற.117:1), *வை +ந் + நுதி > வைந்நுதி* (புற.288:1).

"பகுதி ஈற்று குற்றுயிர் (உ தவிர) உயிர்த் தொடக்க வருமொழியால் தொடரப்படும் போது" என்பதன் கீழ் தரப்பட்டுள்ள முதல் வகை மாற்றம் அடிப்படையில் சங்கத் தமிழில் ஓரசை நிலைமொழிக்கும் பெயரயராக வருமொழிக்கும் இடையில் உடன்படுத்தி *வ், வ்வ், ய்* அல்லது *ய்ய்* வருவது குறித்து குறிப்பிடப்பட்டது. இத்தகைய உருபனியல் விதியிலிருந்து தற்காலத் தமிழ் எவ்வாறு மாறுபடுகின்றது என்பது தான் இங்கு வாதப் பொருளாக அமைகின்றது. குறிப்பாகச் செ என்ற பகுதியுடன் உயிர்தொடக்க பெயர் வருமொழி வருகையில் *ய்* அல்லது *வ்* வர *செ* என்பது *சே* என நீளும் உருபனியல் மாற்றத்திலிருந்து இதற்கு இணையான தற்காலத் தமிழ் உருபொலியனியல் மாற்றம் வேறுபடும். இத்தகைய சூழலில் பகுதியின் உயிர் நீட்சியுறாது இடையில் இட்டித்த *வ்வ்* என்ற உடன்படுத்தி வருவதுதான் தற்காலத் தமிழ் பின்பற்றும் உருபொலியனியல் மாற்றம். பின்வரும் அட்டவணை இதனை தெளிவு படுத்தும்

சங்கத்தமிழ்	**தற்காலத்தமிழ்**
செ + ய் + இதழ் > சேயிதழ் (சிறு.75)	செ+இதழ் >செவ்விதழ்
செ + ய் + இறா > சேயிறா (நற்.31:2))	செ+இறா >செவ்விறா
செ + வ் + அடி > சேவடி (அக.89:18)	செ+அடி > செவ்வடி

அ + ய் + இடை > ஆயிடை (குறி.137)	அ+இடை> அவ்விடை

இதே விதியின் கீழ் வினையுடன் பெயரடைப் பெயர் பின்னொட்டோ வினையாலணையும் பெயர் பின்னொட்டோ சேர்க்கப்படுகையில் சங்ககாலத் தமிழில் விளையும் பின்வரும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை: செ + ய்ய் + அன்> செய்யன் (திரு:206), *செ + ய்ய் + ஓள் > செய்யோள்* (அக.316:13), *வெ + ய்ய் + அன் > வெய்யன்* (கலி.75:10), வெ + ய்ய் + ஓன் > வெய்யோன் (பரி.8:67),*நொ + ய்ய் + ஆர் > நொய்யார்* (கலி.24:16).

பகுதி இரண்டு திறந்த அசைகளைக் கொண்டதாகவும் பெயரடை நிலை மொழியாகவும் பெயர் வருமொழியாகவும் வந்து புணருகையில் இடையில் அளபெடை வரும் சங்ககால உருபொலியனியல் விகுதி பின்வரும் ஆக்கம் தற்காலத் தமிழில் இல்லை: வள + அகம் > வளாஅகம் (கலி.146:28), *புல + வ் + அம்பு > புலாஅவம்பு*; அளபெடை இல்லாத பின்வரும் சங்ககால ஆங்கங்கள் தற்காலத் தமிழில் சாத்தியங்களாகும்: *வள + அகம் > வளாகம்* (புற.189:1), *முழ + அரை > முழாரை* (பதி.பதி.5:14), *முழ + வ் + அரை > முழாவரை* (புற.85:7)

உயிரீற்றுப் பகுதியும் உயிர்த்தொடக்கப் பின்னொட்டும் சில கட்டுப்பாட்டில் வ் அல்லது ய் உடன்படுத்தி வரப் புணரும் இச்சங்ககால உருபொலியன் விதி தற்காலத் தமிழுக்கும் தொடர்ந்துள்ளது. பின்வரும் சங்ககால ஆக்கங்கள் தற்காலத் தமிழிலும் சாத்தியங்களாகும்: நல்ல + வ் + ஐ > நல்லவை (பரி.20:74), மேனி+ ய் + ஓடு > மேனியோடு (குறு.33:3), பிறவி + ய் + ஐ > பிறவியை (பரி.5:12), வள்ளி + ய் + ஐ > வள்ளியை (பதி.54:1).

ஓரசைப் பகுதியைத் தொடரும் மெய்த்தொடக்கப் பெயரின் மெய்யிரட்டும் உருப்பொலியன் செயல்பாடு தற்காலத் தமிழுக்கும் தொடர்ந்துள்ளது. பின்வரும்

சங்ககால ஆக்கங்கள் தற்காலத் தமிழிலும் சாத்தியங்கள் ஆகும்; *அ + க் + கடல் > அக்கடல்* (புற.198:19), அ + ஞ் +ஞான்று > அஞ்ஞான்று (கலி.19:2), *இ + ப் + பணை நல்லூர் > இப்பணை நல்லூர்* (புற.315 :12),*எ+ந்+நீரிரோ > எந்நீரிரோ* (குறு.219:7).

இரு பகுதிகள் சில கட்டுப்பாட்டில் (பார்க்க பக்கம்) இணைகையில் நிலைமொழியின் இறுதி உயிர் நீட்சியுறுவதும் வருமொழியின் தொடக்க மெய்க்கு (*க்,ச், த்* அல்லது *ப்*) ஏற்ப இனமூக்கொலி இடையில் வருவதும் அல்லது இரட்டிப்பதும் சங்ககாலத் தமிழில் காணும் உருபொலியனியல் மாற்றமாகும். தற்காலத் தமிழ் இவ்வுருபொலியனியல் விதியிலிருந்து சிறிது விலகிச் செயலாற்றுகின்றது. பின்வரும் அட்டவணை இதை உறுதிபடுத்தும்.

சங்கத்தமிழ்	**தற்காலத் தமிழ்**
கள+ங்+கனி >களங்கனி (மலை:36)	களாக்கனி
விள+ம்+பழம்> விளம்பழம் (நற்.12:1)	விளாம்பழம்
புளி+ங் > புளிங்காய் (ஐங்.51:3)	புளியங்காய்
கட+அ+க்+களிறு>கடாக்களிறு (கலி.101:36)	கடாக்களிறு
சுற+அ+க்+கொடியோன்>சுறாக்கொடியோன் (கலி.147:42)	சுறாக்கொடியோன்

சிலர் தற்கால வடிவைக் கருத்தில் கொண்டு *புளிங்காய்* என்பதை *புளி+அம்* (சாரியை) + *காய்* என்பதிலிருந்து ஆக்குவர்.

ஈரசை கொண்ட பெயரடையும் மெய்தொடக்கப் (க், ச், த் அல்லது ப்) பெயரும் புணர்கையில் வருமொழியின் மெய் இரட்டிக்கவோ அல்லது ஓரின மூக்கொலி இடையில் வரவோ செய்யும் உருபொலியன் மாற்றம் சங்காலத் தமிழில் நிகழ்வது போன்று

தற்காலத்தமிழிலும் நிகழ்கின்றது. பின்வரும் சங்ககால ஆக்கங்கள் தற்காலத்திற்கும் பொருந்துவதை நாம் உணரலாம்: மட+க்+கணம் > மடக்கணம் (நற்ற்.248:8),தட+க்+கை > தடக்கை (திரு.5), *தட+க்+கோட்டு ஆமான்* > *தடக்கோட்டு ஆமான்* (அக.238:7), *புளி+க்+களா* > *புளிக்களா*, (புற.177:9), *புளி+ச்+சுவை* > *புளிச்சுவை* (நற்ற்.87:4), *தட+ங்+கோட்டு ஆமான்* > *தடங்கோட்டு ஆமான்* (நற்ற்.57:1), *பழ+ங்+கயிறு* > *பழங்கயிறு* (நற்ற்.284:10), *நன+ஞ்+சாரல்* > *நனஞ்சாரல்* (கலி.44:1), *நன+ந்+தலை* > *நனந்தலை* (பெரு:291), *தட+ந்+தாள்* > *தடந்தாள்* (நற்ற்.91:4), *இள+ம்+பேடை* > *இளம்பேடை* (புற.326:2), *மட+மயில்* > *மடமயில்* (பரி.15:40). *தட+வரை*> *தடவரை* (பரி.19:23).

மேற்கூறியவாறு சங்ககாலத் தமிழ் வெளிப்படுத்தும் உருபொலியன் மாற்றங்களை ஆய்ந்தால் பெரும்பாலான விதிகள் தற்காலத் தமிழுக்கும் பொருந்தும். இவ்வுருபொலியனியல் விதிகளின் அல்லது மாற்றங்களின் பயன்பாட்டு எல்லை அடிப்படையில் சங்ககாலத் தமிழும் தற்காலத் தமிழும் வேறுபடும்.

எடுத்துக்காட்டாக சங்காலத் தமிழ் ஆக்கங்களான இரு + வ் + அர் > இருவர் (திரு.178), சிறு + வ் + அர் > சிறுவர் (நற்ற்.330:9) என்பன தற்காலத் தமிழிலும் உள்ள ஆக்கங்கள் தாம். ஆனால் பின்வரும் சங்ககாலத் தமிழ் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் வழக்கிழந்தவை அல்லது பயன்படுத்தப்படாதவை எனக் கூறலாம்: புது+வ்+அர் > புதுவர்(நற்ற்.393:12), இரு ('இரண்டு')+வ்+ஆம் > இருவாம் ('நாமிருவர்') (குறு.237:4), புது+வ்+ஓர் > புதுவோர் (மலை:288), முது+வ்+ஓர் > முதுவோர் (சிறு.231)

தற்காலத் தமிழின் இன்றைய நிலையை வரலாற்று மாற்றம் என்பதைவிட வரலாற்று வளர்ச்சி என்று கூறுவது பொருத்தமாக அமையும். தற்காலத் தமிழ் சங்ககாலத்

தமிழின் நீட்சியே அன்றி தொடர்பற்ற நிலையல்ல. எனவே இங்கு வேறுபாடுகளில் அல்லது பயன்பாட்டு எல்லையில் மட்டும் கவனக்குவிப்பு செய்தால் போதுமானது.

5.4. பெயர்

5.4.1. சங்கத்தமிழில் பெயர்

பெயர்களை மாற்றுப்பெயர், எண்கள் அல்லது எண்ணுப் பெயர்கள், குறிப்புப் பெயர் அல்லது பெயரடைப் பெயர்கள், வினையாலணையும் பெயர்கள், மற்றும் தொழிற்பெயர்கள் எனப் பிரித்து ஆயலாம். பெயர்கள் திரிபுறும். அதாவது அவற்றுடன் வேற்றுமை உருபுகளைச் சேர்க்கவியலும். எண்ணுப்பெயர்கள் மற்றும் தொழிற்பெயர்கள் தவிர அவை இடத்திற்காகவும் பாலுக்காகவும் திரிபுறும். குறிப்புப்பெயர்கள் திரிபாக்கம் செய்யும்; ஆனால் பெயரடைகள் திரிபாக்கம் செய்யாது.

எல்லா பெயர்களும் அவற்றின் வேரிலிருந்து வடிவாக்கப் பின்னொட்டைச் சேர்த்து ஆக்கலாம். இருப்பினும் சில பெயர்கள் பொருள் தரக்கூடிய பகுதிகளைக் கொண்டிருக்கும்; பிற அவ்வாறு கொண்டிருப்பதில்லை.

பெயர்களின் எல்லாப் பாகங்களையும் அடையாளம் காண இயலும்:

இன்மை <இல் + மை (தொழிற்பெயர் பின்னொட்டு) (அக.1:14)

முருகன் < முருகு ‘அழகு, இளமை’ + அன் (அக.1:3)

வழங்குநர் < வழங்கு ‘சுற்றித் திரி’ + ந் (இறந்தகாலமல்லா குறி)+ அர் (அக 1:14)

பெயரின் ஒரு பாகத்தை மட்டும் அடையாளம் காண இயலும்:

குதிரை < குதி ‘துள்ளு’ + ர் (உடன்படுத்தி) + ஐ (அக.1:2)

பெயரின் எந்த பாகத்தையும் அடையாளங்காண் இயலாது:

யானை (அக.1;4)

நெல் (அக.1:13)

5.4.2. தற்காலத் தமிழில் பெயர்

பெயர்களைப் பொறுத்தவரையில் உருபன் வருகை முறையில் சங்ககாலத் தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் வேறுபாடு பாராட்ட இயலாது. தற்காலத் தமிழிலும் பெயர்கள் பன்மைப் பின்னொட்டுகளையும் வேற்றுமை உருபுகளையும் பின்னுருபுகளையும் ஏற்கும். வேற்றுமை உருபேற்கும்போது தற்காலத் தமிழிலும் பெயர்கள் திரிபுற்ற பகுதிகளாக (oblique stems) மாறும் (*நான்* என்பது *என்* என மாறும் *ஆறு* என்பது *ஆற்ற்* என மாறும்). தொடரியல் அடிப்படையில் பெயர்கள் பின்னுருத் தொடரின் தலைச் சொல்லாகவும் ஒரு வாக்கியத்தின் எழுவாயாகவோ செயப்படுபொருளாகவோ செயல்பட வல்லன. எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லின் இடம்-எண்-பாலுக்குத் தகுந்தாற்போல் வினையில் வினை முற்றின் இடம்-எண்-பால் விகுதியின் தேர்வு அமையும். மேற்கண்ட தொடரியல் பண்பு சங்ககாலத் தமிழுக்கும் பொருந்தும்.

5.4.3.மாற்றுப் பெயர்

5.4.3.1. சங்கத்தமிழில் மாற்றுப்பெயர்

மாற்றுப்பெயர்கள் பெயர்களை இடம் பெயர்க்கும். சங்கத்தமிழில் மூவிடப்பெயர், சுட்டு மாற்றுப்பெயர், வினாப்பெயர், எண்ணு மாற்றுப்பெயர். சுட்டு மாற்றுப்பெயர் ஓர் இருப்புப் பொருளின் இடத்தை அண்மை, தொலைவு, அப்பால் என பேசுபவர் தன்னை மையமாகக் கொண்டு வேறுபடுத்துவர். வினா மாற்றுப்பெயர் *எ, யா* என்பதைக்

கொண்டிருக்கும் நபர், இடம், காலம் என்பனவற்றை வினவ பயன்படுத்தப்படும். எண்ணு மாற்றுப்பெயர் எண்களிலிருந்து ஆக்கப்பட்டவை.

5.4.3.1.1. மூவிட மாற்றுப்பெயர்கள்

	ஒருமை	**உட்படுத்து பன்மை/உயர்வுப் பன்மை**	**உட்படுத்தாப் பன்மை/உயர்வுப் பன்மை**
தன்மை	நான் (பரி.20:82)	நாம் (குறி:22)	யாம் (மலை:53)
	யான் (குறி:12)		
முன்னிலை	நீ (குறி:8)		நீயிர் (அக.8:17)
			நீர் (மது: 738)
படர்க்கை	தான் 'அவன்' (மலை:559)		தாம் 'அவர்'
	தான் 'அவள்' (நற்.12:9)		தாம் 'அவைகள்' (கலி.9:19)
தேற்றம்	தான் 'அது தான்' (கலி.21:10)		தாம் 'அவை தாம்'
தற்சுட்டு	அது (பரி.15:53)		அவை (பரி.15:7)
	அஃது (அகா.335:3)		
	தான் 'அது' (புற.109:1; 173:3)		தாம் (புற.257:10
	தான் 'அவனது' (கலி.63:17)		
	தன் 'self' (ஐங்க்.303:2)		

5.4.3.1.2. சுட்டு மாற்றுபெயர்கள்

	எண்	**அண்மை**	**சேய்மை**	**அப்பால்**
படர்க்கையிட ஆண்பால்	ஒருமை	இவன் (குறு.229.1)	அவன் (பரி.20:82)	உவன் (பரி.12:55)
	பன்மை/உயர்வுப்பன்மை	இவர் (புற.49:3)	அவர் (பரி.5:40)	

படர்க்கையிட பெண்பால்	ஒருமை	இவள் (குறு.229:1)	அவள் (நற்ற்.159:8)	உவள் (பரி.11:123)
	பன்மை	இவர் (புற.201:1)	அவர் (பரி.7:74)	
படர்க்கையிடம் (அடையாளங் காணப்படாதது	பன்மை	இவர் (நற்ற்.6:6)	அவர் (பரி.4:74)	
படர்க்கையிடம்	ஒருமை அஃறிணை	இது (நற்ற்.47:60)	அது (நற்ற்.24:9)	உது (நற்ற்.96:3)
		இஃது (குறு.158:6)	அஃது (குறு.18:3)	
	பன்மை	இவ் (பரி.4:33)	அவ் (பரி.4:33)	உவ் (பரி.4:33)
		இவை (நற்ற்.12:7)	அவை (புற.257:10)	

5.4.3.1.3. வினா மாற்றுப்பெயர்கள்

	ஒருமை	**உட்படுத்துப் பன்மை/உயர்வுப் பன்மை**	**உட்படுத்தாப் பன்மை/உயர்வுப் பன்மை**
தன்மை			யாரேம் (கலி.82:18)
முன்னிலை	யாரை (நற்ற்.395:1:2		யாவிர் (புற.88.1)
			யாரிர் (புற.141:5)
படர்க்கை பெண்பால்	எவள் (பரி.6:91)		
	என்னள் (நற்றி.312:9)		
	யாரள்		

	(குறு.19:5)		
	யாவள் (ஐங்க்.370:4)		
படர்க்கை ஆண்பால்	என்னன் ‘எவ்வகையான்’ (குறு.33:2)		என்னர் ‘எவ்வகையார்’ (நற்ற்.64:1)
			எவணர் ‘எவ்வித்தார்’ (குறு.126:2)
	யார் (புற.77:6)		
படர்க்கை ஆண்பால் (அடையாளங் காணப்படாதது)			யார் (நற்ற்.269:9)
			யாவர் (பதி.20:21)
படர்க்கை அஃறிணை	எவன் ‘என்ன?’ (நற்ற்.130:9)		
	எவன் ‘என்ன காரணத்தால்’ கலி.60:14)		
	என் ‘ஏன்?’ (நற்ற்.334:9)		
	என்ன		யா

	‘என்ன?’ (அக.371:11)		‘என்ன? (புற.167:9)
	என்ன (நற்ற்.94:7) ‘எவ்வகை?’		யாவை ‘என்ன? (அக.42:7)
	என்னது ‘என்ன வகை? (நற்ற்.219:3)		
	என்னை ‘ஏன்’/’எவ்வாறு’/என்னகாரணம்’		
	எனை ‘என்ன’ (அக.369:1)		என்னை “எத்தனை’ (புற.301:7)
	யாது ‘எவ்வகை/ஏன்’ (பரி.20:44)		
	யாவணது யாவது ‘எந்த வழியில்/எவ்வாறு’ (நற்ற்.331:11)		

யாரிர் என்பது இச்சூழலில் இடைச்சொல் *ஓ*-உடன் *யாரிரோ* என்று வருகின்றது

5.4.3.1.4. சுட்டு மற்றும் வினா மாற்றுவடிவங்கள்

மாற்று வடிவங்கள் என்ற சொல் ஷிப்மானிலிருந்து (Shiffman (1983:39) எடுத்தாளப்பட்டுள்ளது. பெரும்பாலான இவ்வடிவங்கள் வினையடைகளாகச் செயல்படும்.

அண்மை	சேய்மை/அப்பால்	வினா

இங்கு (குறு.175:5)	அங்கு (குறி.97)	எங்கு(ம்) (கலி.144:16)
		எஞ்ஞான்று ‘எப்போது’ (கலி.110:16)
	அத்துணை ‘அவ்வளவு’ (குறி:13)	எத்துணை ‘எவ்வளவு’ (புற.141:13)
இம்பர் ‘இங்கு’ (புற.287:14)	அம்பர் ‘அப்பால்’ (பெரு:117)	
	உம்பர் ‘அப்பால்’ (நற்.198:3)	
இவண் ‘இங்கு’ (நற்.4:5)	அவண் ‘அங்கு’ (சிறு:143)	எவண் ‘எங்கு’ (குறு.126:2)
இனை ‘இவ்வியல்பின்’ (நற்.349:5)	அனை ‘அவ்வியல்பின்’ (நற்.70:6)	எனை ‘எவ்வியல்பு’ (புற.136:15)
		எனை ‘எத்தனை’ (புற.301:7)
இன்று (நற்.48:1)	அன்று (அக.19:1)	என்றும் ‘என்று’ (நற்.1:2)
இன்றை ‘இன்று’	அன்றை (நற்.48:1)	

(குறு.199:6)		
ஈங்கண் ‘இங்கு’ (நற்.70:7)	ஆங்கண் ‘அங்கு’ (பதி.23:24)	யாங்கணும் ‘எங்கும்’ (அக.7:3)
	ஊங்கண் ‘அப்பால்’ நற்.246:1)	
ஈங்கு ‘இங்கு’ (புற.36:11)	ஆங்கு ‘அங்கு’ (பரி.6:104)	யாங்கும் ‘எங்கும்’ (புற.56:15)
	ஆங்கு ‘பின்னர்’ (புற.152:21)	
	ஆங்கே ‘பின்னர்’ (கலி.90:15) ஊங்கு ‘முன்னர்/பின்னர்’ (நற்.101:9)	
ஈங்கு ‘இம்முறையில்’ (நற்.55:12)	ஆங்கு ‘அம்முறையில்’ (கலி.18:7)	யாங்கு ‘எந்த வழியில்’ (நற்.29:6)
		யாங்கனம் ‘எந்த வழியில்/எவ்வாறு’ (புற.30:11)
		யாங்ஙனம் ‘எந்த வழியில்/எவ்வாறு’ (நற்.338:6)
ஈண்டு	ஆண்டு	யாண்டு

‘இங்கு’ (புற.38:16)	‘அங்கு’ (புற.38:16)	‘எங்கு’ (புற.86:3)
		யாண்டு ‘எங்கு/எவ்வாறு’ (நற்.110:9)
ஈண்டை ‘இங்கு’ (குறு.54:1)	ஆண்டை ‘அங்கு’ (கலி:20:16)	யாண்டை ‘எங்கு’ (குறு.379:1)
ஈதோளி ‘இங்கு’ (கலி.117:13)		
ஈன் ‘இங்கு’ (ஐங்க்.401:5)		
	ஞாங்கர் ‘அச்சமயம்’ (பெரு:196)	
	ஞான்று ‘அன்று’ (நற்.218:1)	
	ஞான்றை ‘அன்று’ (நற்.287:7)	

எவண் என்பது *எவணர்* ‘அவன் எங்கே?’ (குறு.126:2) என்பதிலிருந்து பெறப்பட்டது. *என்றும்* என்பது ‘எப்போதும்’ என்று வருகின்றது. *யாங்கு* என்பதன் பெரும்பலான எடுத்துக்காட்டுகள் ‘எம்முறையில்? எவ்வாறு?’ என்றே பொருள்படுகின்றது.

5.4.3.1.5. எண்ணு மாற்றுப்பெயர்

எண்ணு மாற்றுப் பெயர்கள் எண்களின் திரிபு வடிவத்தில் இட-எண்-பால் விகுதியை சேர்ப்பதால் ஆக்கப்படும்.

	தன்மை	**முன்னிலை**	**படர்க்கை**	
ஒன்று	ஒருமை		ஆண்பால்	ஒத்தன் 'ஒருவன்' (கலி.61:1)
				ஒருவன் (அக.110:14)
		ஒரு நீ 'நீ மட்டும்' (திரு:294)		ஒரு தான் 'அவன் மட்டும்' (புற.76:13)
	ஒருவனேன் 'நான் ஒருவன்' கலி.140:12	ஒருவ 'நீ ஒருவன்' (திரு.262)		
			பெண்பால்	ஒத்தி 'ஒருவள்' (கலி.143:8)
	ஓர் யான் 'நான் மட்டும்' (குறு.6:4)			ஒருத்தி 'ஒரு பெண்' (புற.144:11)
	உயர்வு (ப்பன்மை)	ஒருவிர் 'நீங்கள்' (மலை:218)		
இரண்டு	இருவாம் 'நாம் இருவர்'	இருவீர் 'நீங்கள் இருவர்'		இருவர் 'இரு நபர்'

	(குறு.237:4)	(புற.45:5)		(ஐங்க்.64:3)
மூன்று		மூவிர் ‘நீங்கள் மூவர்’		மூவர் ‘மூன்று நபர்’ (அக.86:12)
நான்கு				நால்வர் ‘நான்கு நபர்’
ஐந்து				ஐவர் ‘ஐந்து நபர்’ (திரு:254)
ஆறு				அறுவர் ‘ஆறு நபர்’ (திரு.255)
ஏழு				எழுவர் ‘ஏழு நபர்’ சிறு:113
எட்டு				எண்மர் ‘எட்டு நபர்’ (பரி.8:5)
ஒன்பது				ஒன்பதின்மர் ‘ஒன்பது நபர்’
பத்து				பதின்மர் ‘பத்து நபர்’
பதினொன்று				பன்னொருவர் ‘பதினொன்று நபர்’
முப்பதி மூன்று				பதினொருமூவர் ’33 நபர்’ (திரு:167)

நூறு				ஈரைம்பதின்மர் (100 நபர்'
				நூற்றுவர் 'நூறு பேர்' (கலி.52;2)

சான்றாக வரும் எல்லா எண்ணு மாற்றுப் பெயர்களும் இங்கு தரப்பட்டுள்ளன. *ஒரு நீ* என்பதில் இட-எண்-பால் விகுதி எண்ணின் திரிபு வடிவத்தில் சேர்க்கப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். இட-எண்-பால் விகுதி *ஓர்* என்ற திரிபு அல்லாத பகுதியில் சேர்க்கப்படாத்தைக் கவனிக்கவும்.

5.4.3.2. மாற்றுப் பெயர்களின் வரலாற்றுமாற்றம்

5.4.3.2.1. மூவிட மாற்றுப்பெயர்கள் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் மூவிட மாற்றுப்பெயர்களின் அட்டவணைக் கீழே தரப்பட்டுள்ளது.

	ஒருமை	**உட்படுத்து பன்மை/உயர்வுப் பன்மை**	**உட்படுத்தாப் பன்மை/உயர்வுப் பன்மை**
தன்மை	நான்	நாம்	நாங்கள்
முன்னிலை	நீ		-
	நீர்		நீங்கள்
படர்க்கை	தான்		தாம்
தேற்றம்	தான்		தாம்
தற்சுட்டு	தான்		தாம்

மேற்கண்ட அட்டவணையை முன்னர் சங்கத்தமிழின் கீழ் நாம் பட்டியலிட்ட அட்டவணையுடன் ஒப்பிட்டுப் பார்கையில் இதுவரை நிகழ்ந்துள்ள வரலாற்று மாற்றம் புலப்படும். சங்ககாலத்தில் உட்படுத்தாப் பன்மைபெயராகப் பயன்பட்டுவந்த *யாம்* வழக்கிழந்து தற்காலத் தமிழில் அது *நாங்கள்* (*நான்+கள்* < *நாங்கள்*) என்பதால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டு வரலாற்று மாற்றம் நிகழ்ந்துள்ளது. சங்ககால முன்னிலைப் பன்மைகளான *நீயிர்* என்பது வழக்கிழந்து நீங்கள் என்பதால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டு வரலாற்று மாற்றம் நிகழ்ந்துள்ளது. நீர் என்பது தற்காலத் தமிழில் சில கிளிமொழிகளிலும் இலக்கிய நடைகளிலும் முன்னிலை ஒருமை *நீ*-க்கும் முன்னிலை உயர்வுப் பன்மை நீங்கள் என்பதற்கும் இடைப்பட்ட படிநிலையில் (அந்தஸ்தில்) பயன்படுத்தப்படுகின்றது.

5.4.3.2. 2. சுட்டு மாற்றுபெயர்களின் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் சுட்டு மாற்றுப்பெயர்களின் அட்டவணைக் கீழே தரப்பட்டுள்ளது.

	எண்	**அண்மை**	**சேய்மை**
படர்க்கையிட ஆண்பால்	ஒருமை	இவன்	அவன்
	பன்மை/உயர்வுப் பன்மை	இவர்	அவர்
படர்க்கையிடப் பெண்பால்	ஒருமை	இவள்	அவள்
	பன்மை	இவர்	அவர்
படர்க்கையிட அஃறிணை	ஒருமை	இது	அது

	பன்மை	இவை	அவை

மேற்கண்ட அட்டவணையை சங்கத்தமிழ் சுட்டு மாற்றுப்பெயர்களின் அட்டவணையுடன் ஒப்பிடுகையில் இதுவரை ஏற்பட்டுள்ள மாற்றங்கள் புலப்படும். அண்மை சேய்யமைச் சுட்டுக்களைப் பொறுத்தவரையில் சுட்டு மாற்றுப்பெயர்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. அப்பால் சுட்டு மாற்றுபெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளன. அப்பால் சுட்டுபெயர்களின் செயல்பாடே தற்காலத் தமிழில் இல்லை. ஸ்ரீலங்கா தமிழ் கிளை மொழியில் அப்பால் சுட்டு மாற்றுப் பெயர்கள் பயன்பாட்டில் உள்ளன.

5.4.3.2.3. வினா மாற்றுப்பெயர்களின் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் வினா மாற்றுப் பெயர்கள் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

	ஒருமை	**பன்மை/உயர்வுப் பன்மை**
படர்க்கை பெண்பால்	எவள்	
படர்க்கை ஆண்பால்	எவன்	
	எவர், யார்	எவர்கள்
படர்க்கை அஃறிணை	எது	எவை, எவைகள்
	ஏன்	
	என்ன	
	ஏன்	
		எத்தனை
	எவ்வாறு	

சங்க்கால வினா மாற்றுப் பெயர்களின் அட்டவணையை மேற் சொன்னர் தற்காலத் தமிழ் அட்டவணையுடன் ஒப்பிட்டால் வரலாற்று அடிப்படையிலான மாற்றம் தெரியவரும்.

சங்காலத்தமிழில் காணப்படும் தன்மை மற்றும் முன்னிலை வினா மாற்றுப் பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளன. அதாவது *யாரேம்*, *யாவிர்*, *யாரிர்* என்ற வினா மாற்றுப் பெயர்கள் தற்காலத் தமிழில் இல்லை. மேலும் படர்க்கை பெண்பால் ஒருமை *என்னள்*, *யாவள்* என்பனவும் படர்க்கை ஆண்பால் *என்னன்*, *என்னர்*, *எவணர்* என்பனவும் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை. 'ஏன்?' எனப் பொருள்படும் என் என்ற வினா மாற்றுப்பெயரும் 'என்ன?' எனப் பொருள்படும் *யா*, *யாவை*, *எனை*, *யாது* என்ற வினா மாற்றுப் பெயர்களும் 'எவ்வாறு' எனப் பொருள்படும் *யாவணது*, *யாவது* என்ற வினா மாற்றுப் பெயர்களும் தற்காலத் தமிழில் வழக்கிழந்து விட்டன.

5.4.3.2.4. சுட்டு மற்றும் வினா மாற்று வடிவங்களின் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் சுட்டு மற்றும் வினா மாற்று வடிவங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

அண்மை	**சேய்மை**	**வினா**
இங்கு	அங்கு	எங்கு
இவ்வளவு	அவ்வளவு	எவ்வளவு
இன்று	அன்று	என்று
இப்படி	அப்படி	எப்படி
இவ்வாறு	அவ்வாறு	எவ்வாறு

சங்கத்தமிழின் சுட்டு மற்றும் வினா மாற்று வடிவங்களின் பட்டியலோடு தற்காலத் தமிழின் அட்டவணையை ஒப்பிடுகையில் பல வடிவங்கள் தற்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளதையும் ஒரு சில வடிவங்கள் வேறு சொல்லால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டுள்ளதும் தெரியவரும். 'எப்போது' எனப் பொருள்படும் *எஞ்ஞான்று*,

‘அவ்வளவு’ என்று பொருள்படும் *அத்துணை*, ‘எவ்வளவு’ என்று பொருள்படும் *எத்துணை*, ‘இங்கு’ என்று பொருள்படும் *இம்பர்*, ‘அப்பால்’ எனப் பொருள்படும் *அம்பர்*, *உம்பர்*, ‘இங்கு’ என்று பொருள்படும் *இவண், ஈங்கண், ஈங்கு, ஈண்டு, ஈண்டை, ஈதோளி, ஈன்* ‘அங்கு’ என்று பொருள்படும் *அவண், ஆங்கண், ஆங்கு, ஆண்டு* ‘எங்கு’ என்று பொருள்படும் *எவண், யாங்கணும், யாங்கும், யாண்டு* ‘இவ்வியல்பின்’ எனப் பொருள்படும் *இனை*, ‘அவ்வியல்பின்’ எனப் பொருள்படும் *அனை*, ‘எவ்வியல்பின்’ எனப்பொருள்படும் *எனை*, ‘இம்முறையில்’ எனப்பொருள்படும் *ஈங்கு*, ‘அம்முறையில்’ எனப் பொருள்படும் *ஆங்கு*, ‘எந்த வழியில்’ எனப் பொருள்படும் *யாங்கு, யாங்கனம்*, ‘அன்று’ என்று பொருள்படும் *ஞான்று, ஞான்றை*, ‘அச்சமயம்’ எனப் பொருள்படும் *ஞாங்கர்* என்பன தற்காலத் தமிழில் வழக்கிழத்துள்ளன.

5.4.3.2.5. எண்ணு மாற்றுப்பெயர்களின் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் எண்ணு மாற்றுப் பெயர்கள் கீழே பட்டியலிட்பட்டுள்ளது.

	தன்மை	**முன்னிலை**	**படர்க்கை**	
ஒன்று	ஒருமை		ஆண்பால்	ஒருவன்
	-	-	பெண்பால்	ஒருத்தி
	-	-		இருவர்
மூன்று	-	-		மூவர்
நான்கு	-	-		நால்வர்
ஐந்து	-	-		ஐவர்

ஆறு	-	-		அறுவர்
ஏழு	-	-		எழுவர்
எட்டு	-	-		எண்மர்
ஒன்பது	-	-		ஒன்பதின்மர்
பத்து	-	-		பதின்மர்
பதினொன்று	-	-		-
முப்பதி மூன்று	-	-		-
நூறு	-	-		-

சங்ககால எண்ணு மாற்றுப் பெயர்களின் அட்டவணையை தற்கால எண்ணு மாற்றுப் பெயர்களின் அட்டவணையோடு ஒப்பிடுகையில் எண்ணு மாற்றுப் பெயர்களில் ஏற்பட்டுள்ள வரலாற்று மாற்றம் வெளிப்படும். தன்மை, முன்னிலை எண்ணு மாற்றுப் பெயர்கள் முற்றிலும் தற்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளதை உணரலாம். 'நான் ஒருவன்' எனப்பொருள்படும் *ஒருவனேன்*, 'நான் மட்டும்' எனப்பொருள்படும் 'ஓர் யான்', 'நாம் இருவர்' எனப் பொருள்படும் இருவாம் ஆகிய முன்னிலை எண்ணு மாற்றுப் பெயர்கள் வழக்கிழந்துவிட்டன. இது போன்று 'நீ மட்டும்' எனப் பொருள்படும் *ஒருநீ*, 'நீ ஒருவன்' எனப் பொருள்படும் *ஒருவ*, 'நீங்கள் ஒருவர்' எனப் பொருள்படும் *ஒருவிர்*, 'நீங்கள் இருவர் எனப் பொருள்படும் *இருவீர்*, 'நீங்கள் மூவர்' எனப் பொருள்படும் *மூவிர்* என்ற முன்னிலை எண்ணு மாற்றுப் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. மேலும் 'ஒருவன்' என்று பொருள்படும் *ஒத்தன்*, 'அவன் மட்டும்' எனப் பொருள்படும் *ஒருதான்*, 'ஒருவள்' எனப் பொருள்படுன் *ஒத்தி*, 'ஒன்பது நபர்' எனப் பொருள்படும் *ஒன்பதின்மர்*, 'பத்து நபர்'

எனப் பொருள்படும் *பதின்மர்*, 'பதினொன்று நபர்' எனப் பொருள்படும் *பன்னொருவர்*, 'முப்பத்தி மூன்று நபர்' எனப் பொருள்படும் *பதினொரு மூவர்*, 'நூறு நபர்' எனப் பொருள்படும் *ஈரைம்பதின்மர்*, *நூற்றுவர்* என்பன தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை.

5.4.4. திரிபுப் பகுதி

5.4.4.1. சங்காலத்தமிழில் திரிபுப் பகுதி

ஒரு பெயர்ப் பகுதியுடன் வேற்றுமை உருபு, பின்னொட்டு, இடைச்சொல் அல்லது மற்றொரு பெயர் சேர்க்கப்படுவதற்கும் முன்னர் அது அடையும் வடிவம் திரிபு வடிவம் அல்லது "திரிபுப் பகுதி" (oblique stem) எனப்படும். வேற்றுமை உருபு, பின்னுருபு, இடைச்சொல், அல்லது மற்றொரு பெயருக்கு அடியாக வருவதுடன் திரிபுப் பகுதி பழந்தமிழில் கிழமை வேற்றுமை, செயப்படுபொருள் வேற்றுமை, கருவி வேற்றுமை, இடவேற்றுமைஅல்லது திசைப் பொருளைத் தரும்.

5.4.4.1.1. ஆக்கம்

பன்மைப் பெயரின் திரிபுப் பகுதி அதன் திரிபற்ற பகுதியிலிருந்து வேறுபடுவதில்லை. ஒருமைப் பெயர்களின் திரிபுப் பகுதிகள் அவற்றின் திரிபற்ற பகுதிகளிலிருந்து பெரும்பாலான நேர்வுகளில் வடிவ அடிப்படையில் வேறுபடும். இவ்வடிவங்கள் பொதுவாக தரப்பட்ட சொல் அலகுகளாக எடுத்துக்கொள்ளப்படும் அல்லது பின்வரும் "திரிபுச் சாரியைகள்" ஒன்றை பின்னொட்டி ஆக்கப்படும்: *அக்கு, அத்து, அம், அன், ஆன், இக்கு, இன், ஒன், வற்று* மற்றும் பிற.

மரபிலக்கணங்களில் "திரிபுச் சாரியை" என்பது "சாரியை" என்று அறியப்படும். *அக்கு, அத்து, அம், அன், ஆன், இக்கு, இன், ஒன், வற்று* என்பன தொல்காப்பியத்தில் (எழுத்ததிகாரம், இளம்பூரணம், விதி 120) சாரியைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

நன்னூல் (விதி 244) *அன், ஆன்,இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன்* என்பவைகளைச் சாரியைகளாகப் பட்டியலிட்டுள்ளது. மரபிலக்கணத்தார் திரிபுவடிவங்களை விளக்க திரிபு சாரியைகளைப் பயன்படுத்துகின்றனர்.

இங்கு திரிபுப் பகுதி இரு வழிகளில் ஆக்கப்படுவதாகக் கருத இயலும்.

(1) பகுதிப் பிறழ்வால்: இவ்வகையிலான திரிபுப் பகுதி "பிறழ்வுற்ற திரிபுப் பகுதி" என்று குறிப்பிடப்படும்.

(2) பின்னொட்டால்: அன் அல்லது இன் பெயர்ப் பகுதியுடன் பின்னொட்டப்படும்.

மூவிட மாற்றுப் பெயர்கள் மற்றும் பிற பெயர்களின் திரிபுப் பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

5.4.4.1.2. மூவிட மாற்றுப் பெயர்களின் திரிபுற்ற பகுதிகள்

இவ்வடிவங்கள் ஒருமையையோ பன்மையையோ குறிப்பிட்டு முறையே குற்றுயிர்கள் மற்றும் ன் அல்லது ம்-ஐ கொண்டிருக்கும்.

	திரிபுறாத பகுதி	**திரிபுற்ற பகுதி**
தன்மை ஒருமை	நான் (பரி.20:80)	என் (நற்.355:10)
தன்மை ஒருமை	யான் (குறி.12)	என் (நற்.355:10)
தன்மை உட்படுத்தும் பன்மை	யாம் (மலை:53)	எம் (நற்.150:7)
தன்மை உட்படுத்தாப் பன்மை	நாம் (குறி:22)	நம் (ஐங்க்.39:2)
முன்னிலை ஒருமை	நீ (திரு:64)	நின் 'உன்'(திரு.272)
		உன் (அக.222:2)
		தன் 'உன்'

		(புற.387:14)
முன்னிலைப் பன்மை	நீர் (மது:738)	நும் 'உங்கள்' (பரி.20:85)
	நீயிர் 'நீர்' (அக.8:17)	உம் (பரி.20:84)
படர்க்கை ஒருமை	தான் 'அவன்' (மலை:559)	தன் 'அவனது' (ஐங்க்.480:3)
படர்க்கைப் பன்மை	தாம் 'அவர்கள்' (மது:422)	தம் 'அவர்களது' (புற.153:12)

எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன:

1. தன்மை ஒருமை; கிழமைப் பொருள்:

   என் தோழி மேனி (யான் > என்) (குறி:2)

2. தன்மைப் உட்படுத்தபடாத பன்மை; கிழமைப் பொருள்:

   எம் தொல் பதி (யாம் > எம்) (மலை:567)

3. முன்னிலை ஒருமை; கிழமைப் பொருள்:

   உன் மேனி ஆய் நலம் (நீ > உன்) (அக.222:2-3)

4. முன்னிலை ஒருமை; கிழமைப் பொருள்:

   விறாலியர் நின் புறம் சுற்ற (நீ > நின்) (மலை:46)

5. முன்னிலை உயர்வுப் பன்மை; கிழமைப் பொருள்

   அஃது உம் மனை (உன் > உம்) (அக.56:14)

உம் என்பதை *நீர்* என்பதிலிருந்து ஆக்குவதைவிட உன் என்பதிலிருந்து ஆக்குவது தர்க்கரீதியாகச் சரியாகும்.

6. முன்னிலை பன்மை; கிழமைப் பொருள்

நும் இயம் (*நுன் > நும்) (மலை:232)

நும் (முன்னிலை பன்மை) என்பதை *நீயிர்* (முன்னிலை பன்மை) என்பதிலிருந்து ஆக்குவதை விட **நுன்* (முன்னிலை ஒருமை) என்பது கூடுதல் தர்க்க அடிப்படையிலானது. இருப்பினும் தொல்காப்பியர் நும் (முன்னிலைப் பன்மை) என்பதை *நீயிர்* (முன்னிலைப் பன்மை/உயர்பன்மை) என்பதிலிருந்து ஆக்குகின்றார், (தொல்காப்பியம், எழுத்ததிகாரம் இளம்பூரணம், விதி 327)

7. படர்க்கை ஒருமை: பாலுக்கு குறிப்பிடப்படாதது; கிழமைப் பொருள்:

   யாமை தன் பார்ப்பு ஒம்ப (தான் > தன்) (பொரு:186)

8. படர்க்கை உயர்வுப் பன்மை; கிழமைப் பொருள்; செயப்படுபொருள் வேற்றுமை உருபு ஒடு-வுக்கு அடியாகும்.

   தம் பெயர் தம்மொடு கொண்டநர் மாய்ந்தோர் (மலை:553)

9. படர்க்கை ஆண்பால் ஒருமை; கிழமைப் பொருள்:

   இவன்...கொடும் சொல் ஓம்புமின் (இவன்) (நற்ற்.200:10-11)

பிற வடிவங்கள் *அவன்* 'அவனது' (பதி.56:3) மற்றும் *அவர்* 'அவரது' (குறு.392:2) என்பனவும் வருகின்றன.

10. படர்க்கை பெண்பால் ஒருமை;கிழமைப் பொருள்

    இவள் பனி வார் கண் (இவள்) (அக.77:19)

அவள் (ஐங்க்.378:3) மற்றும் *எவள்* என்பன பிற வடிவங்கள். *எவள்* என்பதன் திரிபு வடிவிற்கு எடுத்துக்காட்டு கிடைக்கவில்லை.

11. படர்க்கை உயர்திணைப் பெயர்; கிழமைப் பொருள்

இவர் மறன் (இவர்) (புற.337:19)

12. படர்க்கை அஃறிணை ஒருமை; கிழமைப் பொருள்

அதன் நிறம் (அதன்< அது+அன்) (கலி.52:3:4)

13. படர்க்கை அஃறிணை பன்மை; பின்னுருபு உள்-க்கு அடி

அவற்றுள் (அவற்ற் <அவை) (பதி.43:4)

5.4.4.1.3. மூவிட மாற்றுப் பெயரலாத பெயர்களின் திரிபுப் பகுதிகள்

மூவிட மாற்றுப் பெயரலாத பெயர்களின் திரிபுப் பகுதிகளிப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்:

(1) *ம்*-இல் இறுதியுறும் ஓரசையல்லாப் பெயர்கள் *த்த்(உ)*-இல் இறுதியுறும் பிறழ்வுற்ற பகுதிகளைக் கொண்டிருக்கும்.

(2) *டு*-வில் இறுதியுறும் பெயர்கள் *ட்ட்(உ)*-இல் இறுதியுறும் பிறழ்வுற்ற திரிபுப் பெயர்களைக் கொண்டிருக்கும்.

(3) *அது, இது* என்ற மாற்றுப் பெயர்கள் முறையே *அதன், இதன்* என்ற திரிபுப் பகுதிகளைக் கொண்டிருக்கும்

(4) அவை என்ற மாற்றுப் பெயர், *ல்*-இல் இறுதியுறும் ஓரசையல்லா பெயர்கள், *று*-வில் இறுதியுறும் பெயர்கள் *ற்று*-இல் இறுதியுறும் பிறழ்வுற்ற திரிபுப் பகுதிகளைக் கொண்டிருக்கும்

(5) சுட்டுப் பெயர்களை உள்ளடக்கியப் பிற பெயர்கள் அவற்றின் திரிபுறாப் பகுதிகளைத் திரிபுப் பகுதிகளாகப் பயன்படுத்தும்.

(6) எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன

பொன் –அம்-கொம்பு (பரி.7:56)

இங்கு *பொன்* என்ற திரிபுப் பகுதி பெயர் பகுதியை ஒத்தே வருகின்றது. இது இடைச் சொல் *அம்* என்பதன் அடியாக வரும்; இது இங்கு ஒப்பீட்டுப் பொருளைத் தருகின்றது.

சேட்டிருங்கோ (புற.201:13)

சேட்ட் என்பது *சேண்* 'நீண்ட, உயர்ந்த' என்பதன் பிறழ்ச்சியுற்ற திரிபுப் பகுதியாகும். *சேட்ட்* என்பது இரு(ம்) 'பெரிய' என்ற பெயரடைக்கு அடியாக வந்து கூட்டுப்பெயரை ஆக்கும்.

ஓர் யாட்டு ஒரு கால் (கலி.71:26)

யாட்டு என்பது *யாண்டு* 'ஆண்டு' என்பதன் பிறழ்ச்சியுற்ற பகுதி.

சொணாடு...உப்பின் கொள்ளை சாற்றி (பட்ட்:28-29)

நாட்டு என்பது *நாடு* என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி. *சோணாட்டு* என்பது இடப்பொருளைத் தருகின்றது.

சென்மோ ... எம்... நாட்டு

நாட்டு என்பது *நாடு* என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதியாகும். *நாட்டு* என்பது திசைப் பொருளைத் தருகின்றது.

அன்னத்து ச் சேவல் (மது:386)

அன்னத்து என்பது *அன்னம்* 'ஆண் வாத்து' என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதியாகும். இது கிழமைப் பொருளைத் தருகின்றது.

காடாத்து அவன் யானை (கலி.57:18)

காடாத்து என்பது *காடா(அ)ம்* 'மதம்' என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதியாகும். இது கிழமைப் பொருளைத் தருகின்றது.

வள்ளத்து ப் பெய்த பால் (கலி.72:3)

வள்ளத்து என்பது *வள்ளம்* 'கிண்ணம்' என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதியாகும். வள்ளத்து இடப் பொருளைத் தருகின்றது.

வேதத்து மறை நீ (பரி.3:66)

வேதத்து என்பது *வேதம்* என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும். வேதத்து என்பது இடப்பொருளைத் தருகின்றது.

உயர்ந்தோர் உலகத்து ப் பெயர்ந்தனன் (புற.174:20)

உலகத்து என்பது *உலகம்* என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும். இது திசைப் பொருளைத் தருகின்றது.

ஏற்று வலன் உயரிய...மணி மிடற்றோன் (புற.56:1-2)

ஏற்று என்பது *ஏறு* 'காளை' என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும். இது செயப்படுபொருள் பொருளைத் தருகின்றது.

பூங் கயிற்று வாங்கி (பரி.19:31)

கயிற்று என்பது *கயிறு* என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும். இது கருவிப் பொருளைத் தருகின்றது.

ஞாயிற்று...வனப்பு (பரி.13:1-2)

ஞாயிற்று என்பது *ஞாயிறு* 'சூரியன்' என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும். இது கிழமைப் பொருளை தருகின்றது.

நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள (பரி.4;25)

ஞாயிற்று என்பது *ஞாயிறு* 'சூரியன்' என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும். இது இடப்பொருளை தருகின்றது.

வெண் மணற்று அக வயின் (நற்.372:6)

மணற்று என்பது *மணல்* என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும். இது இடப் பொருளைத் தருகின்றது.

வயிற்று-த்-தீ (புற.74:5)

வயிற்று என்பது *வயிறு* என்பதன் பிறழ்வுற்ற திரிபுப் பகுதி ஆகும்.

5.4.4.2. திரிபுப் பகுதியின் வரலாற்று மாற்றம்

5.4.4.2.1. மூவிட மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதியில் வரலாற்று மாற்றம்

இயல் நான்கில் நாம் கண்டது போன்று தற்காலத் தமிழிலும் மூவிட மாற்றுப் பெயர்களுக்குத் திரிபுப் பகுதிகள் உள்ளன. இத்திரிபுப் பகுதிகள் திரிபுறா பகுதிகளில் இருந்தும் வேறுபடும். தன்மை மாற்றுப் பெயர்களின் மற்றும் முன்னிலை மாற்றுப் பெயர்களின் திரிபுற்ற பகுதிகள் திரிபுறா பகுதிகளில் இருந்து வேறுபடும். படர்க்கை மாற்றுப் பெயர்களைப் பொருத்தவரையில் ஆண்பால் ஒருமை, பெண்பால் ஒருமை மற்றும் பலர்பால் மாற்றுப் பெயர்கள் இவற்றின் திரிபுறா பகுதிகளும் திரிபுற்ற பகுதிகளும் வேறுபடாது ஒன்றுபோல் இருக்கும். படர்க்கை அஃறிணைமாற்றுப் பெயர்களின் திரிபுறா பகுதிகளும் திரிபுற்ற பகுதிகளும் வேறுபடும். கீழே தந்துள்ள அட்டவணை இதைத் தெளிவுபடுத்தும்.

	திரிபுறாத பகுதி	**திரிபுற்ற பகுதி**
தன்மை ஒருமை	நான்	என்(ன்), என
தன்மை உட்படுத்தும்	நாம்	நம்

பன்மை		
தன்மை உட்படுத்தாப் பன்மை	நாங்கள்	எங்கள்
முன்னிலை ஒருமை	நீ	உன்(ன்), உன
முன்னிலைப் பன்மை	நீங்கள்	உங்கள்
படர்க்கை ஒருமை ஆண்பால்	இவன், அவன்	இவன், அவன்
படர்க்கை ஒருமைப் பெண்பால்	இவள், அவள்	இவள், அவள்
படர்க்கை ஒருமை ஆண்பால்/பெண்பால்	இவர், அவர்	இவர், அவர்
படர்க்கை அஃறிணை ஒருமை	இது, அது	இது, அது
படர்க்கை அஃறிணைப் பன்மை	இவை, அவை	இவற்ற், அவற்ற்

தற்காலத் தமிழ் மூவிட மாற்றுப் பெயர்களின் திரிபுற்ற பகுதிகளின் மேற்கண்ட அட்டவணையை சங்ககாலத் தமிழின் மாற்றுப் பெயர்களின் திரிபுற்ற பகுதிகளின் அட்டவணையோடு ஒப்பிட்டால் வரலாற்று மாற்றம் வெளிப்படும். சங்ககாலத்தமிழில் முன்னிலை ஒருமை *நீ* என்பதற்கு *நின்* என்ற திரிபுற்ற பகுதி காணப்படுகின்றது. தற்காலத் தமிழில் *நின்* என்பதற்குப் பதிலாக உன் என்பதுதான் காணப்படுகின்றது. இது போன்று சங்ககாலத் தமிழில் *நீர்* என்பதன் திரிபுற்ற பகுதியாக 'உங்கள்' எனப் பொருள்படும் *நும்* என்ற திரிபுற்ற பகுதி பயன்படுத்தப்படுகின்றது. தற்காலத் தமிழில் *நும்* என்ற திரிபுற்றப் பகுதி வழக்கிழந்து *உம்* என்ற திரிபுற்ற பகுதியே பயன்படுத்தப்படுகின்றது. மேலும் சங்கத்தமிழில் காணப்படும் 'அவனது' எனப் பொருள்படும் திரிபுற்ற பகுதி *தன்* என்பதும் 'அவர்களது' எனப் பொருள்படும் திரிபுற்ற பகுதி *தம்* என்பதும் மேற்கண்ட பொருள்களில் அல்லாமல் வேறு பொருளில் தற்காலத் தமிழில் படுத்தப்படுகின்றன.

5.4.4.2.2. மூவிட மாற்றுப் பெயரல்லாத திரிபுப் பகுதியில் வரலாற்று மாற்றம்

மூவிட மாற்றுப் பெயரல்லாத பெயர்களின் திரிபுபகுதிகள் சங்ககாலத் தமிழிலிருந்து தற்காலத்தமிழில் ஆங்காங்கே வேறுபடுவதை ஒப்பிட்டு அறியலாம். இயல் நான்கில் திரிபுப் பகுதி என்ற தலைப்பில் தற்காலத் தமிழில் பெயர்கள் எவ்வாறு திரிபுறாப் பெயர்கள் மற்றும் திரிபுற்ற பகுதிகள் என வேறுபடுகின்றன என்றும் திரிபுற்ற புகுதிகளின் ஆக்கங்களின் செயல்பாடுகளும் விரிவாகத் தரப்பட்டுள்ளன. இங்கு தேவைகருதி அவைச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

1) அம் ஈற்றுப் பெயர்கள் *ம்* கெட *த்து* என்ற திரிபு ஒட்டு அல்லது சாரியை ஏற்று திரிபுப் பகுதிகளை உருவாக்கும்.

எ.கா.

மரம் > மரத்த், பழம் > பழத்த், தோட்டம் > தோட்ட

2) பல, சில, இவை, அவை, எல்லாம் என்ற மாற்றுப் பெயர்கள் அற்று திரிபொட்டு அல்லது சாரியை ஏற்று திரிபுறும்.

எ.கா.

பல > பலவற்ற், சில > சிலவற்ற், இவை > இவற்ற், அவை > அவற்ற், எல்லா > எல்லாவற்ற்

3) டு அல்லது *று* என்ற அசைகளால் இறுதியுறும் பெயர்கள் இறுதி உயிர் கெட, ஈற்றயல் மெய்யின் இரட்டிப்பால் திரிபுறும்.

வீடு > வீட்ட், நாடு > நாட்ட், ஆறு > ஆற்ற், கிணறு > கிணற்ற்

4) இன், அன் என்ற விருப்பு சாரிகைகள் பெயர்கள் வேற்றுமை ஒட்டுகள் ஏற்கும் போதோ அடையாக வரும்போதோ சில பின்னுருபுகள் ஏற்கும் போதோ இடையில் விருப்பாக வரும்.

எ.கா.

கை-இன் – ஆல் > கையினால்

அத்-அன் –ஆல் > அதனால்

மரத்த்-இன் கிளை > மரத்தின் கிளை

சாவி-இன் மூலம் > சாவியின் மூலம்

5.4.5. ஒருமையும் பன்மையும்

5.4.5.1. சங்ககாலத் தமிழில் ஒருமையும் பன்மையும்

சங்காலத் தமிழில் இரண்டு இலக்கண எண்கள் உள்ளன: ஒருமை, பன்மை. ஒரு எண்ணிக்கையைக் குறிப்பது ஒருமை; ஒன்றிற்கும் மேற்பட்ட எண்ணிக்கையைக் குறிப்பது பன்மை.

5.4.5.1.1. ஆக்கம்

ஒருமை வடிவங்கள் அடையாளப்படுத்தப்படாதவை; அவைகள் அடிப்படை வடிவாகக் கருதப்படுகின்றன; இதிலிருந்து பன்மை வடிவங்கள் ஆக்கப்படுகின்றன. பெயர்கள் மற்றும் வினைகளின் பன்மைவடிவங்கள் ஒட்டாக்கச் செயற்பாங்கால் ஆக்கப்படுகின்றன; இச்செயற்பாங்கில் பன்மை ஒட்டுக்கள் பொருண்மையியல் அடிப்படையிலும் வடிவ அடிப்படையிலும் ஒருமை எண்ணைக் குறிக்கும் பகுதியுடன் சேர்க்கப்படுகின்றன. அரிதாக கள் என்ற பன்மைப் பின்னொட்டு ஏற்கனவே பன்மைக்காக அடையாளப்படுத்தப்பட்ட பெயருடன் சேர்க்கப்படும். எடுத்துக்காட்டு கீழே

தரப்பட்டுள்ளது. பன்மை ஒட்டுக்கள் ஒருமைப் பெயர்களுக்கு விருப்பாகும், ஆனால் மானிடப் பெயர்களுக்குக் கட்டாயமாகும். பெயர்கள் பன்மைக்காக அடையாளப்படுத்தாத போது அவற்றின் அடைகள் அல்லது வினைகள் அல்லது அவை வரும் சூழல்கள் பன்மையைக் காட்டும். வினைமுற்றுகளில் ஒருமைப் பன்மை வேறுபாடு வெளிப்படையானதாகும்.

பின்வருவன பன்மைப் பின்னொட்டுகள் ஆகும்: *அ, ஆ, ஐ, கள், ம், மர், மார், ர்*. இவைகள் பெயர்களிலும் வினைகளிலும் காணப்படுகின்றன; விதி விலக்காக *கள், மார்* என்பன ஒருமை வடிவங்களிலும் காணப்படும். மேலும் *அ, ர்* என்பன சில உயிர்களின் மாற்றுருக்களால் முன் தொடரப்படும். முன்னொட்டு *அ*-வை முன் தொடரும் எழுத்துக்கள் மற்றும் *ம்* அல்லது *ர்*-ஐ முன் தொடரும் உயிர்கள் உடன்படுத்தி, கால/வினையற்றுவகை குறி, சாரியை அல்லது மூவிடத்தை குறிப்பிடுவனவாய் அமையும்.

5.4.5.1.2. பன்மை ஆக்க நுட்பம்

பகுதி +/- உடன்படுத்தி/அன்/ஈன்+பின்னொட்டு

ஒட்டு	ஒழுங்கமைப்பும் எடுத்துக்காட்டுகளும்	வருமிடம்
அ	பெயரடைப் பகுதி + உடன்படுத்தி +அ மடவ....கொன்றை 'கொன்றை மரங்கள் அப்பாவிகள்' மட 'அப்பாவி/ஏமாறக்கூடிய' ; மடவ < மட+ வ் (உப)+அ	குறு.66:1
	இறந்தகாலப் பகுதி + அ முனிவு செய்த இவள் ... தோளே 'இவளுடைய தோள்கள் துன்பம் செய்தன'	ஐங்.143:3

	செய்; செய்த < செய்த	
	இறந்தகாலமில்லாப் பகுதி +அ அறு குளம் நிறைக்குன்ன போல ‘வற்றிய குளத்தை நிறப்புவது போல நிறை ‘நிரப்பு’; நிறைக்குன்ன< நிறைக்குன் +அ	அக.11:13
ஆ	வெற்றுப் பகுதி +ஆ நாஞ்சில் ஆடா ‘கலப்பகள் நகராது’ ஆடு ‘நகர்’;ஆடா < ஆடு+ ஆ	பதி.25:1
ஐ	இறந்தகாலமல்லாப் பகுதி + அவை உடுப்பவை இரண்டே ‘உடுப்பவை இரண்டு துண்டுத் துணிகள் தான்’ உடு ‘அணி’; உடுப்பவை (இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர்) < உடுப்ப்+அவை	புற.189:5)
கள்	ஒருமைப் பெயர் + கள் நும் இயங்கள் ‘உன் இசைக் கருவிகள்’ இயம் ‘இசைக்கருவி’; இயங்கள் < இயம்+கள்	மலை:277
	ஐவர் என்று உலகு ஏத்தும் அரசர்கள் ‘ஐவர் (அதாவது பாண்டவர்)” என்று அரசர்கள் உலகத்தால் புகழப்பட்டனர்’ அரசன்; அரசர்; அரசர்கள் < அரசர் + கள்	மலை: 277
ம்	மாற்றுப் பெயர் பிரிதும் நாம் நாம் பிரிவோம் நாம்; தன்மை உயர்வுபன்மை	அக.5:28
	உழையம் ‘நாம் (அவள்) அண்மைகளில் இருக்கின்றோம்’	அக.5:27

	உழை ‘அண்மை’; உழையம் < உழை + ய் (உப) அம்	
	கடிந்தனம் செலவே ‘நாம் பயணங்களை விட்டுவிட்டோம்’ கடி ‘விட்டுவிடு’; கடிந்தனம் < கடிந்த்+அன்+அம்	அக.5:26
	இறந்தகாலப் பகுதி +ஆம் கையொடு கோடிபட்டாம் ‘கையோடு பிடிபட்டோம்’ கோட்படு ‘பிடிபடு’; கோடிபட்டாம்<கோட்பட்ட்+ஆம்	கலி.115:3
	இறந்தகாலப் பகுதி +இகும் கேட்டிகும் நாங்கள் கேட்டோம் கேள்; கேட்ட்+இகும்	பதி.52:12
	இறந்தகாலப் பகுதி +உம் கண்ணும் சிவக்கும் கண்கள் சிவக்கும் சிவ; சிவக்கும் < சிவக்க்+உம்	குறு.354:1
	யாம் அவணின்றும் வருதும் ‘நம் அங்கிருந்து வருகின்றோம்’ வர்; வருதும் < வருந்+உம்	சிறு:143
	சுருக்கினேம் கல-ப்பை ‘இசைக்கருவிகளின் பையைச் சுருக்கினோம்’ சுருக்கு; சுருக்கினேம் < சுருக்கி+இன்+ஏம்	புற.206:10
	வெட்டேமே ‘நாம் பிரார்த்தித்தோம்’ வெள்; வேட்ட்+ஏம்	ஐங்.2:6
	புலம்பொடு தெருமரல் உயக்கமும் தீர்க்குவோம் ‘அலைந்த திரிவதிலிருந்து உங்கள் தனிமையையும் துன்பத்தையும் தீர்ப்போம்’	புற.381:15-16

	தீர் ‘நீக்கு’; தீர்க்குவோம் < தீர்க்குவ்+ஓம்	
மர்	திரிபுப்பகுதி + மர் பதின்மர் பத்து; பதின்மர் < பதின்மர் ‘பத்து பேர்’ < பதின் (பத்து என்பதன் திரிபு) + மர்	கலி.108:48
மார்	ஒருமைப் பெயர் + மார் தோழிமாரும் யானும் தோழி; தோழிமார் < தோழிமார் < தோழி + மார்	அக.15:9
ர்	மறவர் மறம் ‘வீரம்’; மறவர் ‘வீரர்கள்’ <மற+வ் (உப)+அர்	நற்.18:6
	பெயர்ப் பகுதி + உப +அர் நகைவர்...பகைவர் நகை; பகை; நகைவர் < நகை+வ்(உப)+அர்; பகைவர் < பகை + வ் (உப) +அர்	புற.398:9
	பெயர்ப் பகுதி + உடன்படுத்தி +அர் ‘வலைஞர்களின் இருப்பிடம்’ வலை; வலைஞர் ‘மீன்பிடிப்பவர்’ < வலை + ஞ் (உப)+ அர்	பெரு:274
	பாடுநர்க்கு...ஈகுநர் ‘பாடுபவர்களுக்குக் கொடுப்பவர்கள்’ ‘ஈ ‘கொடு’; ஈகுநர் ‘கொடுப்பவர்கள்’< ஈகுன்+அர்	புற.235:17
	பொன் உரை காண்மர் ‘பொன்னை உரைத்து மதிப்பிடுபவர்’ காண்; காண்மர் ‘மதிப்பிடுப்பவர்’ <காண்ம் +அர்	மது:513
	இறந்தகாலப் பகுதி + அர் நாகன் கூறினர் ‘நகனைப் பற்றிப் பேசினர்’	புற.179:12

	கூறு ‘சொல்’; கூறினர் < கூறி+இன்+அர்	
	இறந்தகாலமல்லாப் பகுதி+அவர் அதரி கொள்பவர் வைக்கோலை எடுப்பவர் கொள் ‘எடு’; கொள்பவர் < கொள்ப்+அவர்	மது:94
	சாய்த்தார் தலை ‘தலை குனிபவர்’ சாய் ‘குனி’;சாத்தார் < சாய்த்த்+ஆர்	கலி.39:25
	இறந்தகாலமல்லாப் பகுதி+அன்+ஆர் காலை ஆவது அறியார் மாலை என்மனார் மயங்கியோரே ‘காலை என்று அறியாமல் மாலை என்று கூறுபவர்கள் குழம்பியவர்கள்’ என் ‘சொல்’; என்மனார் ‘என்பவர்கள்’ < என்ம் +அன்+ஆர்	கலி:119:15-16
	இறந்தகாலப் பகுதி + இர் முன்னும் கொண்டிர் ‘(பரிசிகளை)முன்னரும் வாங்கினீர்கள்’ கொள் (வி); கொண்டிர் ‘வங்கினீர்’<கொண்ட்+இர்	புற.203:5
	இறந்தகாலப் பகுதி +இர் எல்லீரும் என் செய்தீர் ‘நீர் எலோரும் என்ன செய்தீர்?’ செய் (வி); செய்தீர் < செய்த்+ஈர்	
	இறந்தகாலப் பகுதி + ஓர் செய்தோர் … கூறி ‘அவர் நமது சந்திப்புக்கு (நேரம்) குறித்தார்’ செய் (வி); செய்தோர் < செய்த்+ஓர்	அக.25:13
	இறந்தகாலமல்லாப் பகுதி + ஓர் நினையுமோரே	நற்ற்.104:12

	நினை ‘எண்ணு’;நினையுமோர் < நினையும் +ஓர் நினை: நினையுமோர் < நினையும் +ஓர்	

5.4.5.1.3. பன்மை ஒட்டுகள் இல்லாத பன்மைப் பெயர்கள்

பன்மை ஒட்டு	அமைப்பொழுங்கும் எடுத்துக்காட்டுகளும்	வருமிடம்
0 (இல்லை)	*கள*.... புளித்தன *விள*...பழுனின ‘களப் பழங்கள் புளிப்பாக மாறின; விளப் பழங்கள் கனிந்தன’ கள , விள ‘பழவகைகள்’	அக.394:1
	சினை ப் பூ ‘கிளைகளிலுள்ள பூக்கள்’	புற:11:4
	*பொய்*யும் உளவோ ‘பொய்களும் இருக்கின்றதா?’ பொய் (பெ)	அக.48:19
	முன்னூறு *ஊர்* முன்னூறு ஊர்கள் ஊர் (பெ)	புற.110:4

5.4.5.2. ஒருமைப் பன்மையின் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழைப் பொருத்தவரையில் இரு மாற்றுருபுகள் கொண்ட ஒரேயொரு பன்மை உருபன் தான் பயன்படுத்தப்படுகின்றன: *கள் ~க்கள்*.

எ.கா.

பூ - பூக்கள், கண் –கண்கள், ஈ – ஈக்கள், மரம் – மரங்கள், பசு – பசுக்கள்

சங்ககாலத்தமிழில் பயன்படுத்தப்பட்ட எல்லா பன்மைப் பின்னொட்டுகளும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படவில்லை. அரிதாக சில சூழல்களில் *மார்* பன்மை ஒட்டு பயன்படுத்தப்படுகின்றது.

எ.கா.

அண்ணன் மார், தம்பிமார், தோழிமார்

சங்ககாலத் தமிழில் பெயரடைப் பகுதி+உடன்படுத்தி+*அ*, இறந்தகாலப் பகுதி +அ, இறந்தகாலமில்லாப் பகுதி +அ என்ற அமைப்பொழுங்கில் வரும் *அ* என்ற பன்மை ஒட்டு தற்காலத் தமிழில் இல்லை. இது போல வெற்றுப் பகுதி + ஆ என்ற அமைப்பொழுங்கில் வரும் ஆ என்ற பன்மை ஒட்டு தற்காலத் தமிழில் இல்லை. *மார்* என்பதன் மாற்றுபாகத் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் *மர்* என்ற பன்மைப் பின்னொட்டு தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. சங்ககாலத் தமிழில் பன்மை ஒட்டுகள் இல்லாத பன்மைப் பெயர்கள் பயன்பாட்டில் இருந்தன. தற்காலத் தமிழில் அஃறிணைப் பெயர்கள் கூட பன்மையை உணர்த்த பன்மைப் பின்னொட்டான *கள்* கொண்டிருக்கவேண்டும்.

5.4.6. **வேற்றுமை உருகளும் பின்னுருபுகளும்**

5.4.6.1. *சங்கத்தமிழில்* **வேற்றுமை உருகளும் பின்னுருபுகளும்**

தமிழ் வேற்றுமை உருபுகள் (குறிகள்) (case markers) அல்லது வேற்றுமைப் பின்னொட்டுகளையும் (case suffixes) பின்னுருபுகளையும் (postpositions) ஆங்கிலத்தில் பின்னுருபுகள் பயன்படுத்தப்படுவது போன்று பயன்படுத்துகின்றது. மரபாக ஏழு அல்லது எட்டு இலக்கண வேற்றுமைகளை அடையாளம் காணப்படுகின்றது. ஒவ்வொரு இலக்கண வேற்றுமையும் ஒன்றுக்கும் மேற்பட்ட உருபுகளால் உருப்படுத்தம் செய்யப்படுகின்றன மற்றும் ஒவ்வொரு உருபும் ஒன்றுக்கும் மேற்பட்ட பொருளை

உருப்படுத்தம் செய்யும். வேற்றுமை உருபுகளுக்கும் பின்னொட்டுக்களுக்கும் ஒத்த செயற்பாடுகள் உள்ளன; எனவே அவைகள் ஒரே தலைப்பில் விளக்கப்படுகின்றன. பின்னுருபுகள் வேற்றுமை உருபுகளைப் போலல்லாமல் தனியாகப் பயன்படுத்தப்பட்டாலும் பொருள் தரும். அவை தனியாகப் பயன்படுத்தப்படுகையில் இடப்பொருளையோ காலப் பொருளையோ தரும். சில சமயங்களில் அவைப் பின்தொடரும் பெயரிலிருந்து தனியாக எழுதப்படும். பெரும்பாலான வேற்றுமை உருபுகள் தனியாகப் பயன்படுத்தப்படுகையில் பொருள் தராது; அவை பெயர்களுடன் பின்னொட்டப்படும் மற்றும் அவைகளுடன் சேர்த்து எழுதப்படும். சில விதிவிலக்குகள் கொண்டு, உடன், கண் என்பனவாகும்; அவைகளை பின்னுருபுகளாகக் கருத இயலும். சில நேர்வுகளில் ஒன்றிற்கும் மேற்பட்ட பொருள்கோள்கள் சாத்தியமாகும்.

மரபு இலக்கண வேற்றுமைகளை வேற்றுமை 'வேறுபாடுகாட்டுபவை' எனக் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியம் அடிப்படையில் ஏழு அடிப்படை வேற்றுமைகள் உள்ளன; மற்றும் விளிவேற்றுமை எட்டாவது வேற்றுமையாகக் கருதப்படுகின்றது (சொல்லதிகாரம், விதிகள் 62, 63). வேறுமைகள்: பெயர்/எழுவாய், ஐ (செய்ப்படுபொருள்), *ஒடு* (=கருவி), *கு* (கொடை), *அது* (=கிழமை, உடைமை), *கண்* (=இடம்) மற்றும் விளி. (தொல்காப்பியம் விதி 64)

வேற்றுமைக் குறி (case marker) என்பதற்குப் மரபிலக்கணங்கள் பயன்படுத்தும் சொல் "வேற்றுமை உருபு" அதாவது "வேறுபாடுகளின் அடையாளங்கள்" அல்லது "வேறுபடுத்தும் குறிகள்"என்பதாகும். பின்னுருபுகள் (postpositons) என்பதற்கு மரபிலக்கணச் சொல் இல்லை. ஒரு குழும வேற்றுமை உருபுகளும் பின்னுருபுகளும்

இடைச்சொல் “இடையில் வரும் சொல்” எனக்குறிப்பிடப் படுகின்றன (தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர், 250-ஆம் விதிக்கு உரை).

5.4.6.1.1. ஆக்கம்

வேற்றுமை உருபுகள் பெயருடன் அதன் திரிபுறாப் அல்லது திரிபுற்ற வடிவுடன் பின்னொட்டப்படும். பின்னுருபுகள் ஒரு பெயரை அதன் திரிபுறா வடிவில், திரிபுற்ற வடிவில், செயப்படுபொருள் வேற்றுமை வடிவில் அல்லது கொடைவேற்றுமை வடிவில் தொடரும். அவை பெயரெச்சத்தை மற்றும் அரிதாக வினைப் பகுதியைத் தொடரும். ஒருமை-பன்மை வேறுபாடோ இடம்-எண்-பால் வேறுபாடோ வேற்றுமை உருபாலோ பின்னுருபாலோ செய்யப்படுவதில்லை.

5.4.6.1.2. வேற்றுமை உருபு அடையாளப்படுத்தாத எடுத்துக்காட்டுகள்

எழுவாய் வேற்றுமை

பசித்தன்றம்ம … உரே (புற.318:3)

‘ஊர் பசித்திருந்தது’

தற்காலத் தமிழில் *ஊருக்கு ப் பசித்தது* என்பதை கொடைவேற்றுமையில் உள்ள எழுவாயாகக் கருத இயலும்.

செயப்படுபொருள் வேற்றுமை

சுற்றமும் எம்மும் உள்ளாள் (அக.17:6)

‘அவள் என்னையும் சுற்றங்களையும் நினைக்கவில்லை’

ஒன்னார் க் கடந்து அட்டான் (பரி.15:44-45)

கருவி வேற்றுமை

கை சுட்டி (பரி.9:35)

‘(தன்) கையால் சுட்டிக்காட்டுகின்றான்’

செயப்படுபொருள் வேற்றுமை

கேளிர் த் திளைக்கும் (பரி.11:58)

‘(அவர்கள்) தங்கள் நண்பர்களுடன் குழுமினர்’

இடவேற்றுமை

மேனி த் திரு … அமர்ந்த மார்பினை (பரி.1:7-8)

‘நீ தேவி வசிக்கின்ற மார்பு பரப்பு கொண்டிருக்கின்றாய்’

நீங்கல் வேற்றுமை

வழி நீங்க (பரி.19:32)

‘வழியிலிருந்து நீங்க’

திசை வேற்றுமை

பொருட்பிணி ப் பிரிந்த நீ (அக.79:17)

செல்வத்தின் அதிவிருப்பத்தை நோக்கி நகர்கின்ற நீ’

பெரும்பாலான இந்த எடுத்துக்காட்டுகளில் வல்லின மெய் (*க், ச், த்* அல்லது *ப்*) வேற்றுமை உறவில் உட்படும் இரண்டு வெளிப்பாடுகளுக்கு இடையில் இரட்டிப்பதைக் காணலாம். இந்த வெளிப்பாடுகளில் முதலாவது வேற்றுமை உருபைக் கொண்டிருக்காது; முதலாவது வெளிப்பாட்டைத் தொடரும் இரண்டாவது வெளிப்பாடு முதல் வெளிப்பாட்டுடன் வேற்றுமை உறவு கொண்டிருக்கும் ஒரு வினையாகவோ பெயராகவோ இருக்கும். இரண்டாவது வெளிப்பாட்டின் தொடக்க மெய் (*க், ச், த்* அல்லது *ப்*) முதல் வெளிப்பாட்டுடன் அதன் வேற்றுமை உறவை குறிப்பிட்டு இரட்டும். சூழல் தான் வேற்றுமையின் உறவைத் தீர்மானிக்கும்.

5.4.6.1.3 வேற்றுமை உருபுகளும் பின்னுருபுகளும்

பழந்தமிழில்/செம்மொழித் தமிழில் காணப்படும் வேற்றுமை உருபுகளும் பின்னுருபுகளும் பின்வருவனவாகும்;

அ, அக்கு, அகம், அது, அயல், அளவு, அளவை, அன், ஆங்கண், ஆங்கு, ஆது, ஆயிடை, ஆல், ஆன், ஆறு, இடம்/இடன், இடை, இல், இன், உக்கு, உடன், உடை, உடைய, உம்பர், உழி, உழை, உள், உ(ள்)ளும், உளி, உ(ள்)ளே, ஊங்கண், ஊங்கு, ஊடு, ஊழ், எதிர், எதிரே, எல்லை, ஏ, ஐ, ஒடு, ஓடு, க்(க்)(உ), கடை, கண், கால், காலை, காறும், கீழ், கொண்டு, சார், சிறை, ஞங்கர், ஞான்று, ஞான்றை, தலை, தன், திறம்/திறன், தொறு(ம்), தோறும், நடுவண், நாப்பண், நின்று(ம்), பக்கம், படி, பதம், பாங்கர், பாடு, பால், பின், பின்றை, பின்னர், பின்னும், புடை, பொழுது, போழ்து, மட்டு, மாட்டை, மாண், மாத்திரம், மாத்திரை, மிசை, மீது, மீமிசை, முதல் (முதல்), முறை, முன்(னர்), மேல்(லிருந்து), வயம், வயின், வரை, வழி, வாய், வியல்.

சில வேற்றுமை உருபுகளும் சில பின்னுருபுகளும் அவைகளுக்குள் மாறுருக்களாக இருக்கும்: எ.கா. *ஞான்று* மற்றும் *ஞான்றை*. *மேலிருந்து* போன்ற வடிவங்கள் இரண்டு தனி வெளிப்பாடுகளாகச் செய்யப்பட்டுள்ளன: மேலிருந்து < *மேல்* + *இருந்து*, *மீமிசை* < *மீ* + *மிசை*.

5.4.6.1.4. ஆக்கநுட்பம்

பின்னுருபுகள்	பொருள், எடுத்துக்காட்டு, வருமிடம்
அ: இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது.	கிழமை வேற்றுமையை அல்லது உடைமை வேற்றுமை அவர…கயம் [அவர்] (புற.15:9-10) ‘அவரது குளங்கள்’

	நின்ன கண்ணி (புற.45:3) [நின் என்பது நீ என்பதன் திரிபு வடிவம்] ‘உனது தலை-மாலை’
அகம்: இது பெயருடன் சேர்க்கப்படும். தனியாக இது ‘உள்ளே, அகத்தே’ எனப் பொருள்படும்.	காலம்சார் எல்லை: ‘உள்’ எண்ணிய நாளகம் [நாள்] (ஐங்க்.466:3) ‘குறிப்பிட்ட நாளுக்குள்’ தற்காலத் தமிழில் இது நாளுக்குள் அல்லது நாளுக்குள்ளே என வரும்.
அது: இது பெயருடன் சேர்க்கப்படும்; தனியாக வருகையில் படர்கையிட ஒன்றன்பால் ‘அது’ எனப் பொருள்படும்.	கிழமை வேற்றுமை அல்லது உடமை வேற்றுமை கடவுளது இயற்கை [கடவுள்] (மலை:83) ‘கடவுளின் இயற்கை’ நண்பினது அளவு (நற்.378:12) [நண்பின் என்பது நண்பு என்பதன் திரிபு வடிவம் ஆகும்.] ‘(அவன்) நட்பின் அளவு’
அயல் இது பெயருடன் சேர்க்கப்படும்; இது ‘அருகே, மற்ற பக்கம், அண்டை’ எனப் பொருள்படும். இடவேற்றுமை: ‘பக்கத்தில்’	மலை அயல் [மலை] (நற்.108:1) ‘மலையின் பக்கத்தில்’ நின் கதப்பு அயல் (ஐங்க்.396:1-2) [கதப்பு ‘கூந்தல்] ‘உன் கூந்தலின் ஒருபக்கத்தில்’]
அளவு: இது பெயருடன் அல்லது உடன்பாட்டுப்	இடம்சார் எல்லை: ‘எல்லை வரை’ வையக வரை அளவு (நற்.130:11) [வையகம் ‘உலகம்’; வரை ‘எல்லை, ஓரம்’]

பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும். இது 'அளவை' எனப் பொருள்படும்.	'உலகத்தின் எல்லை வரை' காலம்சார் எல்லை: 'வரை' செய் பொருள் முற்றும் அளவு (கலி.24:12) [முற்றும் (பெயரெச்சம்) < முற்று 'முடி'] 'செல்வம் அடைவது வரையில்'
அளவை இது இறந்தகாலமல்லாத அல்லது முற்றுப்பெறாத பகுதி அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்; இது 'அளவை' என்று பொருள்படும்.	காலம்சார் எல்லை: 'அச்சமயம், முன்னர் (எதிர்மறை எச்சத்தைத் பின்பற்றும் போது) வலிப்பளவை (கலி.17:6) [வலிப்ப் (இறந்தகாலமில்லாப் பகுதி) < வலி 'மேற்கொள்'] '(நீ) மேற்கொள்ளும் போது' முயல்வளவை (கலி.17:10) [முயல்வ் (இறந்தகாலமில்லாப் பகுதி < முயல்] '(நீ) முயலும் போது' சென்று பிறள் ஆகிய அளவை (அக.189:10) [ஆகிய (பெயரெச்சம்) < ஆகு] 'அவள் (என்னையும் பிற சுற்றங்களையும்) விட்டுவிட்டு மற்றொரு பெண்ணாக (அன்னியராக) மாறிய போது' கண்ணியது உணரா அளவை (அக.5:6) [உணரா (எதிர்மறை பெயரெச்சம்)< உணர்] (நான்) என்ன தீர்மானித்தேன் என்பதை உணர்வதற்கு முன்'
அன்: இது பெயருடன் சேர்க்கப்படும்	கிழமை வேற்றுமை அதன் நிறம் (கலி.52:3-4) [அது] 'அதன் மார்பு'
ஆ: இது இடத்தைக்	இடப்பொருள், இடம்சார் தாய் அருகா நின்று (பரி.11:91)

குறிக்கும் பெயருடன் சேர்க்கப்படும். இது இட வினையடையாகச் செயல்படுகின்றது. தற்காலத் தமிழில் இது ஆக எனப்படும். பேச்சுத் தமிழில் ஆ அல்லது ஏ எனப்படும்: ஓரமா (=ஓரம் ஆக); மேலே (< மேல்).	[அருகு 'அண்மை'] '(உன்) தாய் அருகில் நின்று' கரை மேலா (பரி.12:34) [மேல்] 'கரை மேல்'
ஆங்கண்: இது பெயர் அல்லது வினைப் பகுதியுடன் சேர்க்கப்படும். தனியாகப் பயன்படுத்தப்படும் போது இது 'அங்கே' என்று பொருள்படும் இடத்தைக் குறிப்பிடும்; இதன் மாற்றுருபு *அங்கண்* 'உள்'. எ.கா. அங்கண் மன்றம் போந்து 'அங்கு முன் முற்றத்தில் வந்து சேர்ந்து' (பதி.23:24). பூ அங்கண் 'பூவிற்குள்' (கலி.71:2). *ஆங்கண்*	இடம்சார்: 'இல்; மேல்; அங்கு;அருகில்' பொதினி ஆங்கண் (அக.1:4) [போதினி, ஒரு மலையின் பெயர்] 'போதினியில்' அவன் ஆங்கண் சென்று (கலி.143:15-16) [அவன்] 'அவன் அருகில் சென்று இலவத்து ஆங்கண் (அக.25:9) [இலவத்து என்பது இலவம் என்பதன் திரிபு வடிவம்] 'இலவ மரத்தின் மேல்' நிழல் இல் ஆங்கண் (நற்.105:5) [இல் 'இல்லை'] 'நிழல் இல்லா இடத்தில்'

என்பது ஆம் (ஆ என்பதன் பெயரெச்சம்) என்பதிலிருந்து ஆக்கப்படிருக்கக் கூடும்.	
ஆங்கு: இது பெயருடன் சேர்க்கப்படும்.	திசைசார்: 'நோக்கி' நின்னாங்கு வரூஉம் என் நெஞ்சினை என்னாங்கு வாராது ஓம்பினை கொண்மே (கலி.23:18-19) [நின் என்பது நீ என்பதன் திரிபு வடிவம்; என் என்பது யான் என்பதன் திரிபு வடிவம்] 'உன்னை நோக்கி வருகின்ற என் மனதை அது என்னை நோக்கி வராமல் பாதுகாக்கவும்; அதை ஏற்கவும்' இதன் திசைப் பொருள் இயக்க வினை வரு என்பதால் கிடைக்கின்றது.
ஆது: இது அது என்பதன் மாற்றுருபு ஆகும்; இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது.	கிழமை/உடமை புறாவில் தனாது செங்-கதிர்-ச்-செல்வன் தெறுதலின் (நற்ற்.164:1-2) [தன் என்பது தான் என்பதன் திரிபு வடிவம்] 'அதன் செங் கதிரவன் காட்டை எரிக்கின்றது'
ஆயிடை: இது ஆ மற்றும் இடை என்ற இரு சொற்களிக் கொண்டிருக்கின்றது. இது தனியாகப் பயன்படுத்தப்படவோ ஒரு பெயரையோ வேற்றுமை	இடம்சார் : 'இடையில்' இமயம் தென் –ன் –அங்-குமரி-ய்-ஒடு ஆயிடை (பதி.11:23-24) [குமரியொடு < குமரி + (உடன்படுத்தி) ய் + (உடனிகழ்ச்சி உருபு) ஒடு] 'அங்கு இமயத்திற்கும் அழகான தென் குமரிக்கும் இடையில்' ஆயிடை மாயிதழ் கொண்டு(பரி.11:99)

உருபையோ தொடரவோ செய்யும்.	[ஆயிடை ‘அந் நேரம், அதன் பின்’] ‘அதன்பின் (அவள்) கறுத்த (பூ) இதழ் (அவள்) காதில் சூடினாள் மற்றும்..’ (அக.7:13, 15-16) இ-ச்-சுரம் படர்தந்தோளே ஆயிடை... வழி வழி மெய்-த்-தலை-ப்-படுதல் [ஆயிடை ‘அதன் பின்’] ‘அவள் இந்த காடு வழி சென்றாள். அதன்பின்னர் எல்லா இடங்களிலும் ஓடி அவளைப் பின் தொடரவில்லை’
ஆல்/ஆன்: இது பெயருடன் சேர்க்கப்படும்.	(அ) கிழமை ஒள் ஒளி மணி ப் பொறியான் மஞ்ஞ (பரி.18:7) [பொரி ‘புள்ளிகள்’] ‘இரத்தினம் போன்ற புள்ளிகள் கொண்ட மயில்கள்’
“	(ஆ) கருவி: ‘ஆதலால், எனவே’ அறியாமையான் மறந்து துப்பு எதிர்ந்த நின் பகைவர் (பதி.15:14-15) [அறியாமை] ‘தமது அறியாமை காரணமாக உன் பலத்தை மறந்து எதிர்கொண்ட உன் பகைவர்கள்’ நீ அமர்ந்து விளையாடிய போரல் (பரி.5:55-56) [போர் ‘யுத்தம்’] ‘நீ விளையாட்டாக போரிட்ட போர் காரணமாக’ நன்னர் நன் மொழி கேட்டனம் அடனால்...எவ்வம் களை (முல்:17,21) [அதன் என்பது அது என்பதன் திரிபு வடிவம்; அதனால் ‘அதன் காரணமாக’] ‘நாம் நல்ல சொற்களைக் கேட்டோம். எனவே உன் துயரத்தை

	நீக்கு’
	(இ) கருவி: ‘அதன் உதவியால், ஆல்’ அடியை த் தலையினால் தொட்டு (கலி.108:55-56) [தலையின் என்பது தலை என்பதன் திரிபு வடிவம்] ‘(என்) தலையால் (தன்) காலைத் தொட்டு’ கண்ணினால் என் நெஞ்சம்…கொண்டு ஆண்டாய் (கலி.108:28-29) [கண்ணின் என்பது கண் என்பதன் திரிபு வடிவம்] ‘உன் கண்களின் உதவியால் என் இதயத்தைத் பற்றி அரசாண்டாய்’ விடியாற்றல் ஆக்கிய மெய்-க்-கலவை (பரி.7:20) [விதியாற்ற் என்பது வியாற்று என்பதன் திரிபு வடிவம்] ‘விதிகளால் (பின்பற்றி) செய்த நறுமணமிக்க தேகச் சாந்து’

	(ஈ) உடநிகழ்ச்சி வேற்றுமை: ‘ X-உடன்’ மாறு அடு தானியால் திறன் இகந்து வரூஉம் அவர் (பரி.13:30:31) [தானை ‘இராணுவம்’/படை’] ‘நன்னடத்தையை மீறியவர் மற்றும் பகைவரைக் கொல்லும் படையுடன் வருகின்றவர்’ இப்பொருட்கோண்மை மரபு உரையைப் பின்பற்றுவதாகும். தானையால் என்பதை கருவி வடிவிலும் பொருள்கொள்ளவியலும்: ‘பகைவரைக் கொல்லும் தமது படை காரணமாக தமது நன்னடத்தையை மீறியவர்’. சில சொல்லால் பல கேள்வியர் (புற.360:2) [சொல் ‘வார்தைகள்’] ‘கொஞ்சம் சொற்கள் கொண்டு அதிகம் கேட்பவர்’ பறையால் புனல் செறுக்குநர் (பதி.22:28) [பறை ‘மத்தளம்’] ‘பறைகளுடன் வெள்ளப்பெருக்கைத் தடுப்பவர்’
	(உ) இடம்: ‘இல்; மேல்; உள்ளே; நோக்கி; வழியாக’ வீயா யாணர் நின் வயினானே (புற.396:1) [நின் என்பது நீ என்பதன் திரிபு வடிவம் ஆகும்; வயின் ‘இடம்’] ‘தப்பாத மான்யத்துடன் உன் இடத்தில்’ கீழ் நீரான் மீன் வழங்குந்து மீ நீரான்... மலர் பூக்குந்து (புற.396:1-2) [கீழ் நீர் ‘ஆழமான தண்ணீர்’; மீ நீர் ‘உயர்ந்த தண்ணீர்’] ‘மீன் ஆழமான தண்ணீரில் சலனிக்கும்; பூக்கள் உயர்ந்த தண்ணீரில் பூக்கும்’ மரத்தால் களிறு அணைத்து (பதி.33:3)

	[மரத்து என்பது மரம் என்பதன் திரிபு வடிவம்] ‘மரத்துடன் யானைகளைப் கட்டி’ அணை ‘தழுவு, கட்டு’ என்ற வினையைப் புரிந்து கொள்ளும் விதத்தில் இதைக் கருவிப் பயன்பாடாகப் பொருள்கொள்ள இயலும்; குன்றத்தால் … வரவு (கலி.68:16-17) [குன்றத்து என்பது குன்றம் ‘மலை’ என்பதன் திரிபு வடிவம்] ‘மலை வழியாக வருதல்’ சேரியால் சென்று [சேரி ‘அக்கம்பக்கம்’] ‘அக்கம்பக்கம் வழியகச் சென்று’
	(ஊ) இடம்சார்(காலம்சார்/செய்கை): ‘இல், அப்போது’ சிறு மகிழானும் (பதி.19:12) [மகிழ் ‘மகிழ்ச்சி, சந்தோஷம்’] ‘குறுகிய காலத்திலேயே’ அலமரும் பொழுதினான் (கலி.78:7) [பொழுதின் என்பது பொழுது என்பதன் திரிபு வடிவம்] நனவினான் (கலி.68:21) [நனவின் என்பது நனவு ‘விழிப்பு நிலை’] ‘விழித்திருக்கையில்’ கண்குலான் (கலி.66:4) [கண்குல் ‘இரவு’] ‘இரவில்’
	(எ) நீங்கல்: ‘இருந்து’ வாரார் என்னும் புலவி உட்கொளல்…ஒழிக…நின் நெஞ்சத்தானே (நற்.11:4-5)

	[நெஞ்சத்த் என்பது நெஞ்சம் 'இதயம்' என்பதன் திரிபு வடிவம் ஆகும்] 'அவன் (உன் காதலன்) இதுவரை வரவிலை என்பதால் பிணங்காதே. சினம் உன் இதயத்திலிருந்து போகட்டும்' நீக்கல் பொருள் இயங்கு/சலன வினையான ஒழி 'போய்விடு' என்பதால் தூண்டப்படுகின்றது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.
ஆறு: இது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படுகின்றது; இத் 'வழி, முறை'	இட வினையடை தான் வேண்டும் ஆறு (பரி.11.110) [வேண்டும் (பெயரெச்சம்) < வேண்டு 'விரும்பு'; ஆறு 'வழி'] 'விரும்பப்படுகிற இடம்'
இடம்/இடன்: இது பெயரெச்சத்தில் சேர்க்கப்படும். அடிப்படையில் இது 'இடம்' எனப் பொருள்படும்.	இடம்சார்: 'இடம்' மலை சுடர் சேர ப் புலம்பிய இடன் (கலி.126:1-2) [புலம்பிய (பெயரெச்சம்) < புலம்பு 'தனிமைப்படு'] 'சூரியன் மலையை அடையும் போது தனிமைப்படுமிடம்' இடம்சார்: [காலம்சார்]: 'நேரம்' நாம் காக்கும் இடம் (கலி.63:3-4) [காக்கும் (பெயரெச்சம்) <கா 'பாதுகா'] 'நாம் பாதுக்காக்கும் போது நேரம்'
இடை: இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது	(அ) இடப்பொருள் (இடம்சார்): 'இல்; மேல்; இடையில்; உள்; ஊடே; வழியாக' கல் உயர் கடத்திடை (பதி.21:22) [கடத்த் என்பது கடம் 'காடு' என்பதன் திரிபு வடிவம்] 'உயர்ந்த மலைகள் இருக்கும் காட்டில்' கோட்டிடை (கலி.101:17) [கோட்ட் என்பது

	கோடு ‘கொம்பு’ என்பதன் திரிபு வடிவம் ஆகும்.] ‘கொம்புகளுக்கிடையில்’ கடையிடை வைத்தது மெய்யிடை த் திமிரும் கவளம் (நற்ற்.360:8-9) [கை; மெய் ‘உடம்பு’] ‘கையில் (அதாவது யானையின் தும்பிக்கையில்) வைக்கப்பட்ட சோற்றுருண்டை மற்றும் தேகம் முழுவதும் சிதறும்’ கூடலொடு பரன்குங்றினிடை (பரி.17:23-24) [பரங்குன்றின் என்பது பரங்குன்று என்பதன் திரிபு வடிவம்] ‘கூடலுக்கும் பரங்குன்றிற்கும் இடையில்’ தாம் இடை கொண்டது அது ஆயின் (கலி.24:13) ‘நமக்கிடையில் காரணமாக அவன் அதைக் கொண்டிருந்தால்’ ஊரிடை ஓடி (பரி.6:56) [ஊர் ‘நகர்’] ‘நகர் வழியாக ஓடி’
	(ஆ) ‘இடையில்’ எம் இடையே (நற்ற்.395:3) [எம் என்பது யாம் என்பதன் திரிபு வடிவம் ஆகும்.] ‘எங்களுக்குள்’
இல்: இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது. தனியாக இது ‘இடம், வசிக்குமிடம், வீடு’ என்று பொருள்படும். *இல்* என்பது	(அ) இடப்பொருள் (இடம்சார்): ‘இல்; மேல்; கீழ்; அருகில்; இடையில்’ அருகில் கண்டும் அறியார் (புற.207:3) [அருகு ‘பக்கம்; அருகே’] ‘அவர்கள் அருகில் (உன்னை) பார்த்தாலும் (உன்னை) புரிந்துகொள்ளாதவர்கள்’ தந்தை வியன் மார்பில் பாய்ந்தான் (கலி.86:33)

அவ்வப்போது இன் என வருவதால் இதை *இன்* என்பதுடன் குழுமத் தோன்றும். இன் போன்று இது ஒரு உருபொலியனியல் மாற்றத்தால் இது சில வேளைகளில் இற் என உருப்படுத்தப்படும். எனவே *இல்*-க்கும் *இன்*-க்கும் வேறுபாடு காண்பது சிக்கலாகும். *இல்* என்பதன் அடிப்படைப் பொருள் இடப்பொருள் ஆகும்; ஆனால் *இன்* என்பதன் அடிப்படைப் பொருள் கிழமை ஆகும்.	[மார்பு 'நெஞ்சு'] 'அவன் தன் தந்தையின் பரந்த மார்பில் பாய்ந்தான்' துணங்கை ஆடிய மருங்கின் (பதி13:5-6) [மருங்கு 'இடம், தளம், பக்கம்] 'மக்கள் துணங்கை செய்த இடத்தில்' சிலம்பில் துஞ்சும் கவரி (பதி 11:21) [சிலம்பு 'மலை'] 'மலைமேல் தூங்கும் கவரிமான்' சாந்தில் செய்த...இதணத்து (நற்ற்.351:6-7) [சாந்து 'சந்தணம்'] 'சந்தண மரத்தில் கட்டப்பட்ட பரண்' மருப்பில் கடாம் வாரந்து (பதி. 16:6-7) [மரப்பு 'தந்தம்'] 'தந்தங்களிலிருந்து கீழே வழிந்த மதநீர்' நம் சேரியில் போகா...பார்ப்பான் (கலி.65:7-8) [சேரி 'அக்கம்பக்கம்'] 'அக்கம்பக்கம் வழியாகச் செல்லாத பார்ப்பனன்' தானெ அரிது செல் உலகில் சென்றனன் (புற.260:20-21) [உலகு 'உலகம்'] 'அவன் (இறந்தவரின்) முந்தைய உலகிற்குள் சென்றான்' கொடி கொடி தம்மில் பிணங்கியவை போல (கலி.92:52) [தம் என்பது தாம் என்பதன் திரிபு வடிவம் ஆகும்] 'கொடிகள் தமக்குள் பின்னிப்பிணைந்தது போல்' *தம்மில்* என்பது தற்காலத் தமிழில் *தமக்குள்* என வரும். *தம்மில்* மலையாள் மொழியில் பயன்படுத்தப்படுகின்றது.
	(ஆ) இடம்சார் (காலம்சார்/செயல்/முறை): 'இல்'

	குறியில் இனிய கூறி (நற்.204:8) [குறி 'சந்திப்பு'] '(அவன்) நமது சந்திப்பில் இனியவைகள் சொன்னான் மற்றுன்...' எல்லினில் பெயர்தல் (அக 110:4) [எல் 'அந்தி'] 'அந்தியில் போதல்' இரவில் புணர்ந்தோர் (பரி.6:54) [இரவு 'இராத்திரி'] 'இரவில் இணைந்தவர்' ஈதலில் குறை காட்டாது (கலி.27:1) [ஈதல் 'கொடுத்தல்'] 'கொடுப்பதில் குறைவு காட்டாமல்' காலத்தில் தோன்றிய கொண்மூ (கலி.82:2) [காலத்த் என்பது காலம் என்பதன் திரிபு வடிவம் ஆகும்] 'சரியான காலத்தில் தோன்றிய கார் மேகம்' இட்டார்க்கு யாழ் ஆர்த்தும் பாணியில் (பரி.20:7) 'கொடுத்தவர்களுக்கு யாழை (இசையை) அனுபவிக்கச் செய்வதன் முறையில்'

	(இ) கருவி: ‘ஆல்; உதவியுடன்’ காலில் சென்றும் (நற்.349:5) [கால் ‘பாதம்’] ‘பாத்ததால் போயும்’ சொல்லில் தெளிப்பவும் (நற்.164:5) [சொல் ‘வார்த்தைகள்’] ‘(நான்) (என்) சொற்களால் (உன்னக்கு) மீளுறுதி கொடுத்தாலும்’ அம்பியில் தாழ்ப்பிக்கும் ...வையை (பரி.6:75-77) [அம்பி ‘கட்டுமரம்/தெப்பம்’] ‘கட்டுமரத்தின் காரணமாக (நீ) உன்னை காலந்தாழ்த்தும் வையை (ஆறு)’ அறத்தினில் (கலி.96:33) [அறத்த் என்பது அறம் என்பதன் திரிபு வடிவம் ஆகும்] ‘தர்மத்தின் வழியில்
	(ஈ) நீங்கல் பொருள்: ‘இலிருந்து; மூலமாக’ நின்னில் தோன்றிய ... தாமரை (பரி.4:60) [நின் என்பது நீ என்பதன் திரிபு வடிவம்] ‘உன்னிலிருந்து வெளிவந்த தாமரை (பூ)’ ஆதிரை முதல்வனில் களிந்த நாடர் பன்னொருவர் (பரி.8::6-7) [முதல் நபர், முதன்மையானவன்’] ‘அதிரையாகிய முதல் நபரிலிருந்து தொடங்கி (ஒரு குழுவாக) பேசப்பட்ட பதினொன்று தலைவர்கள்’ பக்கத்தில் போகாது (கலி.65:12) ‘அருகில் போகாமல்...’ இதை திசை வடிவமாக ‘நோக்கி’ என்று பொருள்கொள்ளலாம்.

	(உ) முறை வினையடை அறிதினில் தோன்றிய யாக்கை (கலி.141:1) [அரிது ‘சிக்கலானது’] ‘சிக்கலில் உருவான/பிறந்த (மனித) உடல்’
இன்: இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது. இது பயன்படுத்தப்படும் பெரும்பாலான அமைபொழுங்கில் இது கிழமை அல்லது உடமைப் பொருண்மையில் வரும்.	(1) கிழமை/ உடமை: ‘உடைய’ அமைப்பொழுங்கு (அ): x-இன் …Y, இங்கு Y-க்கு x (நற்பண்பு, இடம், பரப்பு, செயல், செய்யப்பட்ட பொருள், பாகம் போன்றன) இருக்கின்றது; Y x-ஐ உட்படுத்துகின்றது. கடலக வரைப்பின்-இ-ப்-பொழில் (பதி.14:19) [வரைப்பு ‘எல்லை’; பொழில் ‘சோலை’] ‘கடல்களின் எல்லைகளைக் கொண்டு இச்சோலைகள் (அதாவது உலகம்)’ உழவின் புல் ஆள் (பதி.15:12) [உழவு ‘உழுதல்’; ஆள் ‘நபர்’) ‘உழவைக் (தொழிலாக) கொண்ட தாழ்ந்த நபர்’ பலவின் பயம் (நற்.201:5) [பலவு ‘பலா மரம்’; பயம் ‘பழம், விளைவு’ ‘பலாவின் பழம்/விளைவு’ அதின் வரவு (பரி.11:36) ‘அதன் (நிலவின்) வளர்சி/தேய்வு’ அமைபொழுங்கு (ஆ): x-இன் Y, இதில் Y x-இன் பாகம்/உறவு; x Y-ஐ உட்படுத்தும். பருந்தின் இரும் இறகு (பதி.12:19) [பருந்து; சிறகு] ‘பருந்தின் பெரிய சிறகுகள்’ இரவின் எல்லை (புற.366:12)

	[இரவு ‘இராத்திரி’ எல்லை] ‘இரவின் எல்லை’ திதியின் சிறார் (பரி.3:6) [திதி ‘திதி என்ற புராண கதாபாத்திரம்’; சிறார் ‘குழதைகள்’] ‘திதியின் குழந்தைகள்’ திருவின் கணவ (பரி.3:90) [திரு ‘செழிப்பு’; கணவன்] ‘ஓ! திருவின் கணவா’ அமைப்பொழுங்கு (இ): x-இன் Y, இங்கு x Y-இன் பாகமாகும். பூவின் தாமரை (பதி.23:23) [பூ; தாமரை] ‘பூக்கள் கொண்ட தாமரை’ அரா உடம்பின் நீ (பரி.5:55) ‘முழுமையுறாத உடம்பை உடைய நீ’ அமைப்பொழுங்கு (ஈ): x-இன் Y, இங்கு Y x-க்காக சிறப்பிக்கப்படுகின்றது. கரும்பின் பாத்தி (பதி.13:3) [கரும்பு; பாத்தி] ‘கரும்புக்குரிய பாத்தி’ கள்ளின் சாடி (நற்.295:7) [கள்; சாடி ‘ஜாடி’] ‘கள் வைத்திருக்கும் ஜாடி’ அமைப்பொழுங்கு (உ): x-இன் Y, இங்கு Y x-ஆல் செய்யப்பட்டது முத்தின் ஆரம் (அக.13:1) [முத்து; ஆரம் ‘மாலை’]

	‘முத்தால் செய்யப்பட்ட மாலை’
	(2) செயப்படுபொருள் நறவின் வாழ்த்தி (புற.297:6) [நறவு ‘மது’; வாழ்த்து ‘புகழ்’] ‘மதுவைப் புகழ்த்தி’
	(3) கருவி: ‘ஆல்; கொண்டு; விளைவாக; காரணத்தால்’ கேழாய் மருப்பின் உழுதோய் (பரி.3:24) [கேழ் ‘பன்றி; மருப்பு ‘தந்தங்கள்’; உழு] ‘பன்றி போன்று தந்தங்களால் உழுத நீ’ மாலை முழக்கின் மான்கணம் பனிப்ப (பதி.50:1) [முழக்கு ‘முழங்கு’; பனி ‘நடுங்கு’] ‘மலையின் முழக்கத்தின் காரணமாக மான்களின் கூட்டம் நடுங்க’ புனலின் கரை கார் ஏற்றன்று (பரி.12:98) [புனல் ‘நீர், வெள்ளப்பெருக்கு’; கார் ‘குளிர்காலம்’; ஏல் ‘ஏற்றுக்கொள், பெறு’] ‘நீர்/வெள்ளப்பெருக்கு காரணமாக கரை குளிர்காலத்தின் பண்பைப் பெற்றது’
	(4) உடனிகழ்ச்சி: ‘உடன் சேர்ந்து’ முழவின் வருவாய் நீ (பரி.20:75) [முழவு ‘மத்தளம்’’ வர்] ‘முழவுகளுடன் கூட நீ வருவாய்’
	(5) இடப்பொருள் (இடம்சார்): ‘இல், மேல், உள்ளே, சேர்ந்து; இடையில்’ செறுவின் … உருளி… மண்ட (பதி.27:10-11) [செறு ‘களம்’; மண்டு ‘விரை’]

	‘(தேரின்) சக்கரங்கள் போர்களத்தில் விரைய’ சாந்தின் தொடுத்த தீந்தேன் (நற்.1:4) [சாந்து ‘சந்தண மரம்’; தொடு ‘கட்டு; தொங்கு’] ‘சந்தண மரங்களில் (கிளைகளில்) சேகரிக்கப்பட்ட இனிய தேன்’ கண்ணின் உவந்து (பதி.20:8) [கண்; உவ ‘மகிழ்’] ‘கண்களால் (கண்டவற்றால்) மகிழ்ந்து’ ‘கண்களில் மகிழ்ச்சியைக் காட்டி’ ஆயத்தின் கூடு (பரி.11:113) [ஆயத்து என்பது ஆயம் ‘நண்பர்கள் குழாம்’; கூடு ‘சேர்’] ‘உங்கள் நண்பர்களின் குழுமத்துடன் சேருங்கள்’ வெரினின்…ஏறினாள் (பரி.12:48) [வெரின் ‘முதுகு’; ஏறு] ‘அவள் (யானையின்) முதுகில் ஏறினாள்’ கெடு வளை பூண்டவள் மேனியிற் கண்டு (பரி.20:34) [மேனி ‘உடம்பு’; கண்டு (வினையெச்சம்) < காண்] ‘அவள் தொலைந்த வளையை பெண்ணின் மேனியில் அதை அணிந்திருப்பதைக் கண்டாள் மற்றும்…’
	(6) இடப்பொருள் (காலம்சார்/செயல்) சேக்கையுள் பாயலின் அறிவாய் நீ புடை பெயர்வாய் ஆயினும் (கலி.10:10-11) [பாயல் ‘உறக்கம்’; புடை பெயர் ‘உருள்’] ‘படுக்கையில் உறங்குகையில் கவனக்குறைவாக உருண்டாலும்’ மறையினின் மணந்து (கலி 53:8)

	[மறையின் என்பது மறை 'இரகசியம்' என்பதன் திரிபு வடிவம்; மண 'மணம்புரி'] 'இரகசியமாக மணம்புரிந்து'
	(7) நீங்கல் பொருள்: 'இருந்து; மூலமாக' நின்னின் பிரியலென் (கலி.21:7) [நின் என்பது நீ என்பதன் திரிபு வடிவம்; பிரி 'விட்டு நீங்கு'] 'நான் உன்னிடமிருந்து நீங்கமாட்டேன்' நின்னின் விடா நிழல் (கலி.61:8) [நின்னின் என்பது நீ என்பதன் திரிபு நின் என்பதன் திரிபு வடிவம்; விடு 'நீங்கு'] 'உன்னை விட்டு நீங்காத நிழல்' தற்காலத் தமிழில் இது நின்னை விடாத என வரும். கற்பினின் வழாஅ (அக.86:13) [கற்பு 'நற்பண்பு'; வழு 'பிறழ்'] 'கற்பிலிருந்து பிறழாமல்' மலையின் இழி அருவி (பரி.16:32) [மலை; இழி 'கீழிறங்கு'] 'மலையிலிருந்து ஒழுகுகின்ற அருவி' மெய்யின் பிரித்து (பரி.5:57) [மெய் 'உடம்பு'; பிரி 'விட்டு நீங்கு'] '(அவன்) உடம்பிலிருந்து (ஒரு பாகத்தை) நீக்கி' முதன்மையின் இகந்த காலம் (பரி.13:24-25) [முதன்மை ; இக 'மிகு; விட்டுச் செல்; மீறிப்போ'] 'தொடக்கதை மீறிச்சென்ற காலம்'
	(8) ஒப்புப் பொருள்: 'போன்று' நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின் அளப்பு அரியையே (பதி.14:1-2)

	[நான்கு; அளப்பு ‘அளத்தல்’; அரு ‘சிக்கலாக இரு’] ‘பூமி, தண்ணீர், காற்று, விண் என்ற நான்கினைப் போன்று நீ சிக்கலாகும்’ மதியின் விளங்கு முகத்தார் (கலி.62:14) [மதி ‘சந்திரன்’; விளங்கு ‘பிரகாசி’] ‘சந்திரன் போன்று பிரகாசிக்கின்ற முகங்கள் கொண்டவர் (பெண்கள்)’ பண்டையின் பாராட்டி (கலி.14:7) [பண்டை ‘கடந்தகலம்’; பாராட்டு ‘புகழ்’] ‘கடந்தகாலத்தைப் போன்று புகழ்ந்து’
	(9) ஒப்புப் பொருள்: ‘கூடுதல்’ இதனின் கொடியது பிறிது இல்லை (நற்.322:2) [இதன் என்பது இது என்பதன் திரிபு வடிவம்; கொடு ‘கொடுமை’] ‘இதை விட கொடியது எதுவும் இல்லை’ நின்னின் சிறந்த நின் தாள் இணை (பரி.4:62) [நின் என்பது நீ என்பதன் திரிபு வடிவம்; சிற ‘மேம்படு; மிஞ்சு’] ‘உன்னைவிட மேம்பட்ட உன் பாதங்கள்’
	(10) பகிர்வுப் பொருள் நாளின் நாளின் … நிலவு ப் பரந்தாங்கு (பரி.11:32-33) [நாள்; பர ‘பரவு’] ‘நாளுக்கு நாள் நிலவின் ஒளி விரிந்து பரவும் போது’ நாளின் நாளின் என்பது தற்காலத் தமிழில் நாளுக்கு நாள் என வரும். காரிகை மது ஒருவரின் ஒருவர் கண்ணின் கவர்புற (பரி.11:68)

	‘ஒவ்வொருவரின் கண்களின் வழி மற்றவரின் அழகின் மகிழ்ச்சியை அனுபவிக்கையில்’ ஒருவரின் ஒருவர் தற்காலத் தமிழில் ஒருவருக்கு ஒருவர் என வரும்.
	(11) திசைப் பொருள்: ‘நோக்கி’ ஈர ச் செறுவின் வித்தோடு சென்ற வட்டி (நற்ற்.210:2-3) [செறு ‘களம்’; செல்] ‘ஈர களத்தை நோக்கி சென்ற (=எடுத்துச் செல்லப்பட்ட) ஆழமற்ற கிண்ணம்’ விழாவின் செலீயர் வேண்டும் (நற்ற்.390:6) [விழவு ‘விழா’; செல்] ‘நீ விழாவுக்குச் செல்லவேண்டும்’
	(12) முறை வினையடை து-வில் இறுதியும் அஃறிணை பெயரடைப் பெயருடன் பின்னொட்டும் போது செவ்விதின் நடந்து (பதி.22:8) [செவ்விது ‘செம்மையானது’; நட ‘ஒழுகு’] ‘சரியான முறையில் நடந்து’ வாலிதின் நூலின் இழையா நுண் மயிர் இழை (பதி.39:9) [வாலிது ‘வெண்மையானது’; இழை ‘புனை’] ‘வெள்ளை நூலால் இழைக்கப்படாத நல்ல மயிர் போன்ற வலை’ விருந்தின் வாழ்க்கை (பதி.71:19 [விருந்து ‘புதுமை’; வாழ்க்கை ‘வாழ்வு’] ‘புதுமையான வாழ்க்கை; ‘புதுமையான முறையில் வாழ்வது’

	இனிதின் புணர்க்குவென் மன்னோ (அக.263:13) [இனிது; புணர் 'சேர்'] 'நான் அவர்களைச் (ஒருவரோடொருவர்) சேர்ந்திருக்க வைத்திருக்கலாம்'
உடன் இது பெயருடன் சேர்க்கப்படும். இது வினைக்கு முன்னால் வந்து வினையடையாகச் செயல்படும். உடன் என்பதற்கு உடங்கு என்ற மாற்றுருபு உள்ளது. எ.கா. உடங்கு அமர் அயம் 'சேர்ந்து வசிக்கும் ஒரு குழும நண்பர்கள்'.	(1) 'முழுவது' யானை காடுடன் நிறைதர (நற்.324:4) 'யானைகள் காடுமுழுவதும் நிறைந்தது' நாடு உடன் விளங்கும்...நல்லிசை (பதி.24:10) [விளங்கு 'பிரகாசி'; நல்லிசை 'நற்புகழ்'] 'நாடுமுழுவதும் பிரகாசிக்கும் நற்புகழ்'
	(2) உடன்நிகழ்ச்சி: 'சேர்ந்து; உடன்' இளையரும் முதியரும் கிளையுடன் குழீஇ (நற்.207:7) [கிளை 'சொந்தம்'; குழு 'குழுமு'] 'தம் சொந்தங்களுடன் சேர்ந்து குழுமியிருக்கிற இளைஞர்களும் முதியவர்களும்' அரைசனோடு உடன் மாயந்த ... செல்வம் போல் (கலி.130:4) [அரைசன் 'அரசன்'; மாய் 'அழி'] 'அரசனுடன் கூடவே அழிந்த செல்வம் போல' ஆயத்துடன் நில்லாள் (பரி.11:111) [ஆயத்த் என்பது ஆயம் 'துணைவர்கள் குழாம்' என்பதன் திரிபு

	வடிவம்; நில் ‘வசி’] ‘அவள் துணைவர்கள் குழாமுடன் வசிக்கவில்லை’
	(3) உட்படு பொருள்: ‘முற்றிலும்; அனைத்து’ சொல் பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்று உடன் போற்றி (பதி.21:1-2) [கேள்வி ‘செவிமடுத்தல்’; பெயர் ‘புகழ்’; நாட்டம் ‘இலக்கு’; போற்று ‘பாராட்டு’] ‘சொற்கள் (தகுதி), புகழ், இலக்கு, கேட்டல் என்பன அனைத்தையும் பாராட்டுதல்’ ஊர் உடன் இரவலர்க்கு அருளி தேர் உடன் முல்லைக்கு ஈந்த …பாரி (புற.201:2-3,5) ‘ஊரெல்லாம் இரவலருக்கும் (தன்) தேரை முல்லைக்கொடிக்கும் கொடுத்த பாரி’
	(4) ‘உடனடியாக; சீக்கிரமாக’ நமர் கொடை நேர்ந்தனர் ஆயின் அவர் உடன் நேர்வர் கொல் (நற்.393:10:11) [நமர் ‘நம் சுற்றத்தார்’; நேர் ‘சம்மதி’] ‘நம் சுற்றத்தார் என்னைக் திருமணச் செய்து கொடுக்க சம்மதித்தால், அவன் உடனே சம்மதிப்பானா?’
உடைய்(ய): இது பெயருடன் சேர்க்கப்படும்.	கிழமை/உடமை முத்து உடை மருப்பு (பதி.32:3) [மருப்பு ‘தந்தங்கள்] ‘முத்துக்கள் உடைய தந்தங்கள்’ இங்கு முத்துக்கள் எனக் குறிப்பிடப் படுவது சிப்பியிலிருந்து உள்ள முத்துக்கள் அல்ல. தந்தங்களில் உள்ள ஒரு கட்டியான வளர்ச்சியைக் குறித்து நிற்கக்கூடும்.

	நின்னுடை வாழ்க்கை (பதி.37:1) [நின் என்பது நீ என்பதன் திரிபு வடிவம்] 'உனது வாழ்க்கை' சீர் உடைய இழை (புற.11:13) [சீர் 'அழகு''; இழை 'ஆபரங்கள்'] 'அழகான ஆபரணங்கள்'
உம்பர்: இது பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடம்சார்): 'அப்பால்' வேங்கடத்து உம்பர் அக.209:9 [வேங்கடத்து என்பது வேங்கடம் 'வேங்கட மலைகள்' என்பதன் திரிபு வடிவம்; உம்பர் 'அப்பால்' 'வேங்கட மலைகளுக்கு அப்பால்'
உழி: இது பெயர், இறந்தகாலமில்லாத/முற்றுப்பெற்ற பகுதி அல்லது இறந்தகால/முற்றுப்பெற்ற பகுதி-இல் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (காலம்சார்: 'எப்போது') வேங்கை கொய்குவம் சென்றுழி (அக.48:6) [சென்ற் என்பது செல் என்பதன் இறந்தகால/முற்றுப்பெற்ற பகுதி; வேங்கை 'வேங்கைப் பூ; கொய் 'பறி'] 'நாம் வேங்கை (பூக்கள்) பறிக்க சென்ற போது' வியல் நகர் செல்வுழி ச் செவுழி (அக.49:14-15) [செல்வ் என்பது செல் என்பதன் இறந்தகாலமற்ற/முற்றுப்பெறாத பகுதி; நகர் 'வீடு'] 'அவள் பெரிய வீடுகளைச் சுற்றி செல்லும்போதெல்லாம்' யானும் உரை கேட்புழி-ய்-எல்லாம் செல்வேன் (கலி.146:29-30) [கேட்ப் என்பது கேள் என்பதன் இறந்தகாலமற்ற/முற்றுப்பறாத பகுதி] 'நான் அவன் இருப்பதைப் பற்றி எங்கெல்லாம் கேட்கிறேனோ (அவ்விடங்களிலெல்லாம்) போவேன்'
உழை	(1)இடப்பொருள் (இடம்சார்: 'கு')

இது பெயருடன் சேர்க்கப்படும். இதன் பொருள் 'பக்கத்தில்' என்பதாகும்.	அவனுளை க் கூய் கூய் (கலி.63:6) [கூ 'கூப்பிடு] '(மீண்டும்மீண்டும்) அவனைக் கூப்பிட்டு'
	(2)திசை: 'கு' ; நோக்கி கேளிருழை ச் சென்று (கலி.61:3) [கேளிர் 'நண்பர்கள்'] '(தன்) நண்பர்களிடம் சென்று' என்னுழை வந்து (கலி.77:15) [என் என்பது யானென்பதன் திரிபுப் பகுதி] 'என் பக்கதில் வந்து'
உள்: இது 'உள்ளே' எனப் பொருள்படும். இது பெயரில் சேர்க்கப்படும். பெயர் பன்மையாக வந்தால் *உள்* ஒரு குழுமத்திலிருந்து ஒரு தனி வெளிப்பாட்டை எடுத்துச் சொல்ல உதவும்.	(1) இடப்பொருள் (இடம்சார்): 'உள்ளே, (சலன வினைகளுடன் சேர்ந்து வருகையில்) வழியாக; (பன்மைப் பெயருடன் சேர்க்கப்பட்டால்) 'இடையில்/ மத்தியில்' கலிங்கத்துள் (கலி.69:3) [கலிங்கத்து என்பது கலிங்கம் 'ஆடை' என்பதன் திரிபுப் பகுதி ஆகும். '(அவள்) ஆடைக்குள்' நாற்றம் உள்ளுள் கரந்து (பரி.7:21) [உள்ளுள் 'உள்ளுக்குள்'; கர 'மறை'] 'நறுமணத்தை ஆழத்தில் மறைத்து' அவருள் ஒருத்தி (பரி.7:53) 'அவர்களில் ஒரு பெண்' இரண்டுள் ஒன்று (புற.344:3) 'இரண்டில் ஒன்று' நம்முள் நகுதல் (கலி.94:35)

	[நம் என்பது நாம் என்பதன் திரிபுப் பகுதி; நகு 'சிரி, மகிழ்] 'நமக்கிடையில் மகிழ்தல்' இரப்போர் கையுளும் போகி... புலவர் நாவில் சென்று வீழ்ந்தன்று அவன் அரு நிறத்து இயங்கிய வேலே (புற.235: 11-15) 'அவன் மார்பில் பட்டு துள்ளிய வேல் இரப்பவர்களின் கைகள் வழிச் சென்று (அவனைப் பாடும்) புலவர்களின் நாவில் விழுந்தது.
	(2) இடப்பொருள் (காலம்சார்/செயல்): 'உள்; அச்சமயத்தில்' கனவினுள் உறையும்...அரிவை (பதி.19:13-14) [உறை 'வாழ்'; அரிவை 'பெண்'] '(என்) கனவில் வாழும் பெண்' ஓர் இரா வைகலுள் (கலி.5:14) 'ஒரு இரவுக்குள்' செல்வத்துள் சேர்ந்து (கலி.25:19) '(அவன்) வளமான காலத்தில் (அவனுடன்) இணைந்து' விழாவினுள் விளையாடும் பொழுது (கலி.35:14) 'விழாவில் விளையாடும் போது'
	(3) உடநிகழ்ச்சிப் பொருள்: 'உடன்' நீயே என்னுள் வருதியோ...சிறு குடியானே (நற்.82:2-3,11) [என் என்பது யான் என்பதன் திரிபுப் பகுதி; குடியான் 'அண்டை'] 'நீ என்னுடன் (எங்கள்) சிறு அண்மையிடதிற்கு வருவாயா?'
உள்ளும்: இது அடிப்படையில் உள்+உம் என்பதாகும்.	'உள்; இடையில்; மத்தியில், எல்லோரிடையில்' விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த செம்மீன் (பதி.31:27:28) 'விண்ணுலகப் பெண்களுள் ஒப்பற்ற செம்மீன் (அருந்ததி

இது பெயருடன் சேர்க்கப்படும்; பன்மைப் பெயருடன் சேர்க்கப்படுகையில் இது ஒரு குழுவிலிருந்து ஒன்றை அல்லது ஒருவரை தனிமைப்படுத்த உதவுகின்றது.	நட்சத்திரம்)' எல்லாருள்ளும் நின் நல் இசை மிகுமே (பதி.38:2) 'செல்வமுள்ள மக்களுள் உன்னுடைய நற்பண்பு விஞ்சி நிற்கும்'
உளி இது பெயருடன் சேர்க்கப்படும்.	முறைமை வினையடை பெரும் பெயர் முறையுளி ப் பெற்ற் புதல்வன் (கலி.75:24-25) [முறை, ஒழுக்கம், உறவு] 'உறவால் (தன் பாட்டன்) பெரும்பேர் பெற்ற மகன்) மரபுளி பாடி (கலி.75:24-25) 'மரபுப்படி (நாங்கள்) பாடி'
உள்ளே இது உள் + ஏ = உள்ளே என்பதாகும். இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது.	இடப்பொருள் [இடம்சார்]: 'உள்ளே' வெண் முத்தம்...நீருளே பிறப்பினும் நீக்கு அவி தாம் என் செய்யும் (கலி.9:15-16) 'வெண் முத்துக்கள் நீருக்குள் பிறந்தாலும் அவை நீருக்கு என்ன செய்ய முடியும்' உள்ளே கனலும் உள்ளம் (அக.305:14) 'உள்ளுக்குள் எரியும் (எனது) உள்ளம்'
ஊங்கண்: இது பெயருடன் அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படுகின்றது. இது 'அப்பால் எனப்	இடப்பொருள் (இடம்சார்): 'அப்பால்' உயர் வரைக்கு ஊங்கண் அஃது எம் ஊர் (அக.38:16:17) 'எங்கள் ஊர் உயர்ந்த மலையகளுக்கு அப்பால்/மறுபுறம் இருக்கின்றது'

பொருள்படும்.	
	இடப்பொருள் (காலம்சார்): 'பின்னால்' உயர் வரைக்கு ஊங்கண் என்பதை உயர் வரை-க்-குஈகன் (நற்ற்.246:1) 'உயர்ந்த மலையிலிருந்து கூப்பிடும் தூரத்தில்' என புகுப்பாய்வு செய்ய இயலும். ஊங்கண் என்பதை ஆங்கண் என்பதுடன் ஒப்பிடவும். ஈடூஉ ஊங்கண் இனிய படூஉம் நற்ற்.246:1 [இடு 'குறுகியிரு'; ஊங்கண் 'பின்னால்'; இடூஉ ஊங்கண் 'அவ்வப்போது'; அடிக்கடி' 'இனியவை அடிக்கடி/அவ்வப்போது நிகழும்'
ஊங்கு: இது பெயருடன் அல்லது எதிர்மறைப் பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	இடப்பெயர் [காலம்சார்]: 'இல்; முன்னால்; இதுவரை' தானை பரவா ஊங்கே (பதி.29:15) [பரவா என்பது பரவு என்பதன் எதிர்மறைபெயரெச்சம்; ஊங்கே < ஊங்கு + ஏ (இடைச்சொல்) 'படை பரவுவதற்கு முன்' அன்றை ஞான்றினொடு இன்றின் ஊங்கும் (புற.376:17) [இன்றின் என்பது இன்று என்பதன் திரிபுற்ற வடிவம் ஆகும்.] 'இன்றிலிருந்து அன்றுவரை' இது "x-இலிருந்து Y-வரை" வகைக் கட்டுமானம் ஆகும்.
ஊடு: இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது.	இடப்பொருள் [இடம்சார்]: வழியாக பல் கால் … நுண் துகில் ஊடு வந்து இமைக்கும்…அல்குல் (நற்ற்.366:1-3) '(அவளது இடை அணியின்) பல இழைகள் அவள் துகில் வழி பிரகாசிக்கும் அவளது அல்குல்'
ஊழ்:	திருப்பிநிகழும் பொருள்: 'தடவை'

இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது.	பல் ஊழ்…என்னை நோக்கும் (கலி.61:5) ‘பலதடவை அவன் என்னைப் பார்ப்பான்’
எதிர்(ஏ): இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது; இத் ‘முன்னால்’ எனப் பொருள்படும்.	இடப்பொருள் [காலம்சார்]: ‘முன்னால்’ இறைஞ்சுக பெரும நின் சென்னி…முனிவர் ஏந்து கை எதிரே (புற.6:19-20) ‘ஐயா, முனிவர்களின் உயர்ந்த கைகளின் முன் உங்கள் தலை குனியட்டும்’
	இடம்சார் [காலம்சார்]: ‘பதிலாக; தொடர்ச்சியாக’ ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று (புற.204:1-2) ‘இரப்பது இழிந்ததாகும். ஆனால் “நான் தரமாட்டேன்” என்று பதிலளிப்பது அதைவிட இளிதாகும்’
எல்லை: இது ‘எல்லை’ எனப்பொருள்படும். இது பெயருடன் அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	காலம்சார் எல்லை: ‘அச்சமயம்; அப்போது; இறுதியில்; அதுவரை’ நெருநல் எல்லை நீ எறிந்தோன் (புற.300:3) [நெருநல் ‘நேற்று’; எறி ‘வீசு, அழி’] ‘நீ நேற்று எறிந்த/அழித்த மனிதன்’ ஞாயிறு எல்லை ஆள்வினைக்கு உதவி இரவின் எல்லை வருவது நாடி (புற.366:11-12) ‘(நாட்டை) ஆளும் செய்கைக்காக பகலில் உதவி செய்வது மற்றும் இரவில் அதன் விளைவை எதிர்பார்ப்பது’ ‘பகலில் நாட்டை ஆள்வதில் ஈடுபடுவது இரவில் என்ன விளைகின்றது என்று கவனிப்பது’ நன்னாள் தலைவரும் எல்லை…தம் நாண் தாம் தாங்குவார் (கலி.39:31-32) ‘(தம் திருமணத்தின்) நன்னாள் வரும் வரை தம் நாணத்தை

	கட்டுப்படுத்துபவர்’
ஏ: இது பெயருடன் சேர்க்கப்படும்.	(1)செயப்படுபொருள் பொன் புனை உடுக்கையோன் புணர்ந்து அமர் *நிலையே* நினைமின் (பரி.15:28-29) [பொன் புனை உடுக்கையோன் ‘பொன்னால் செய்யப்பட்ட ஆடையை அணிந்த ஒருவன்’; திருமால்;விஷ்ணு’] ‘பொன்னால் செய்யப்பட்ட ஆடையைப் புனைந்தவன் (தன் சகோதரனுடன்) சேர்ந்து வீற்றிருக்கும் நிலையை எண்ணிப்பார்’ சிலர் இக்குழும எடுத்துக்காடுகளில் *ஏ* என்பதை ஒரு வேற்றுமை உருபாக கருதுவதில்லை; அனால் தேற்றக்கூற்று இடைச்சொல்லாக எடுத்துக்கொள்கின்றனர். தற்காலத் தமிழில் செயப்படுபொருள் *ஐ* இந்தச் சூழல்களில்வரும். எ.கா. நிலையை நினையுங்கள்; பெயலை ப் போல்; நெய்யை ப் போல். *பெய்யலே* போல் (கலி.55:21) ‘(மழை) மேகம் போல்’ திரி உமிழ் *நெய்யே* போல் தென் பனி உறைக்கும் கால் (கலி.15:21) [நெய் ‘எண்ணெய்’] ‘திரியில் உள்ள எண்ணெய் சொட்டுகள் போல் குளிந்த கண்ணீர்களால் அவளது கண்கள் மறைக்கப்பட்டது’ அறியலனே … மாற்றூர் தேஎத்து மாறிய *வினையே* (பதி.20:6-7) ‘அவன் எதிரியின் இடத்திலிருந்து பின்வாங்கத் தெரியாது’ உண்மின் *கள்ளே* அடுமின் *சோறே (18:1)* ‘கள்ளைக் குடி; சோறு பொங்கு’

	(2) இடப்பொருள் (இடம்சார்): ‘இல்; வழியாக’ அழுதிமோ நொதுமலர் *தாலையே* (நற்.13:2) ‘அந்நியனுக்குச் சொந்தமான இந்த இடத்தில் அழாதே’ இ-வ்-வறநிலை *ஆறே* (புற.263:4) ‘வற்றும் இந்த ஆறு வழியாக’ *பகலே* எம்மோடு ஆடி *இரவே*…நல் இல் நோயொடு வைகுதிஆயின் (அக 370;4-6) ‘நீ பகலில் எனொடு விளையாடி இரவில் உனது நல் வீட்டில் (காதல்) நோயுடன் தங்கினால்’ இறைஞ்சுக பெரும நின் சென்னிசிறந்த நான் மறை முனிவர் ஏந்து கை *எதிரே* (புற.6:19:20) ‘நான்கு வேதங்களை/இரகசியங்களை நன்கு தெரிந்த நல்லோர் மற்றும் கற்றிந்தவர் உயர்திய கைகளின் முன்னர் உன்னுடைய தலை குனியட்டும்’
	(3) விளிப் பொருள் கடுஞ்-சின *வேந்தே* ‘கடுஞ்சினமுள்ள அரசனே’ பாடினி வேந்தே (பதி.17:14} ‘பெண்பாடகிகளின் அரசனே’
	(4) முறை வினையடை பன்றி…மெல்ல மெல்ல ப *பிறக்கே* பெயர்ந்து (நற்.98:2,6) ’மிக மெதுவாக பின்னோக்கி நகரும் பன்றி’

ஐ: இது பெயருடன் சேர்கப்படும்	(1)செயப்படுபொருள்: நேரடி செயப்படுபொருள் + ஐ *துறைவனை நீயே* சொல்லல் வேண்டுமால் (அகல்.170:7,8) [துறைவன் 'துறையைச் சார்ந்தவன்'] 'நீ துறையைச் சார்ந்தவனிடம் நீ கூறவேண்டும்' *கொடிச்சியை … கொண்டனை* செம்மோ (அக.132:7-8) 'கொடிச்சியை (மலைப் பெண்) எடுத்துக்கொண்டே போ' *வெளிவீதியை* ப் போல (அக.147:9) ஒரூஉப நின்னை (பதி.34:1) 'அவர்கள் உன்னை புறக்கணிக்கின்றனர்' வேளை நீ முன்னியை திசை (மலை:94) வேளைப்பற்றி (தலைவன்) நீ எண்ணுகின்ற திசை சென்றோரை ச் சொல்லி க் காட்டி (மலை:78-79) '(அவன் இடத்துக்கு) சென்றதைப் பற்றி தகவல்கூறி மற்றும் அவைகளைப் பார்க்க செய்து' நாடனை வரூஉம் என்றோள் (நற்.65:9) 'நாடன் வருவான் என்று அவள் கூறினாள்' ஊரனை ப் புலத்தல் கூடுமோ (அக.26:4,5) 'ஊரனுடன் பிணங்குவது சாத்தியமாகும்' சேர்ப்பனை யானும் காதலேன் யாயும் நனி வெய்யள் (குறு.51:3-4) [சேர்ப்பன் 'கரை இடத்திலிருந்து வந்த மனிதன்'; காதலென் 'காதலை உடையவன்] கழி த் துரப்போரை … வட்டு வீட்டு எறிவோர் (பரி.11:54-55) [கழி 'மூங்கில் கம்பு'] 'மூங்கில் கம்புகளின் உதவியால் தண்ணீர்ப் பைகளை அவர்கள் மீது வீசி விரைவோரை விரட்டுபவர்கள் அல்லது

	அழிப்பவர்கள்’ உப்பை மாறி வெண்ணெல் தரீஇய (குறு.269;5) ‘வெள்ளை நெல்லைக் கொண்டுவருவதற்காக உப்பை (நெல்லுடன்) பண்டமாற்றம் செய்து’ இவ்வெடுத்துக்காட்டும் இதைத் தொடர்ந்த சில எடுத்துக்காட்டுகளும் செயப்படுபொருள் வேற்றுமை உருபு ஐ அஃறிணைப் பெயர்களுடனும் சேர்க்கப்படும் என்று தெரிகின்றது. கசினை அன்ன…கனி (குறு.274:2) ‘நாணயங்கள் போன்ற பழங்கள்’ செயப்படுபொருள் உருபு ஐ காசின் என்ற திரிபுப் பகுதியுடன் சேர்க்கப்படுள்ளது. இன்னத்தை …இகுளைக்கு உணர்த்து (நற்ற் 71:1-2) ’இதை உன் நண்பனை புரியச் செய்’ வேழத்தை இன்று கண்டாய் போல் (கலி.97:20-21) ‘யானையை இன்று நீ நேரிட்டதைப் போல்’ அம்பலை நாணி [அம்பல் ‘வதந்தி’] ‘வதந்தியைப் பற்றி வெட்கப்பட்டு’ கலிழை…அந்தணர் கலங்கினார் மருண்ட (பரி.6:44-45) [கலிழ் ‘கலங்கிய தண்ணீர்’] ‘அந்தணர்கள் கலங்கிய தண்ணீரால் மருண்டு கலங்கினர்’ தங்கரும் காமத்தை த் தணந்து (கலி 121:7) [தன்கரும் ‘தாங்கவியலாத’; தண ‘விடிடுவிடு] ‘தாங்கவியலாத காமத்தை விட்டுவிட்டு’
	(2) அகச் செயப்படுபொருள் + ஐ *தின்னை* ப் புரை நினைப்பின் (பரி.3:46)

	‘ஒருவர் உன்னுடன் ஒப்பிட்டுவதைப் பற்றி சிந்தித்தால்’ தற்காலத் தமிழில் இது *நினைக்கு ஒப்புமை (அதாவது புரை) நினைத்தால்* என வரும். நின்னைஅம்புலி காட்டல் இனிது (கலி.80:18-19) ‘உனக்கு நிலவைக் காட்டுவது இனிதாகும்’ தற்காலத் தமிழில் இது *நினைக்கு…காடல்* என வரும். அவனால் … முன்னீர் வளாஅகம் எல்லாம்…ஞாயிற்றை நாடு என்றேன் (கலி.146:27-29) ‘கடலால் சூழப்பட்ட செழிப்பான நிலமெல்லாம் அவனை எதிர்பார்க்கும் படி நான் சூரியனிடம் கூறினேன்’ இங்கு *அவனை* மற்றும் *ஞாயிற்றை* என இரட்டைச் செயப்படுபொருள் வருவது குறிப்பிடத் தக்கதாகும்.
ஒடு, ஓடு இது பெயருடன் சேர்க்கப்படும். பெரும்பாலான நேர்வுகளில் ஓடு உயிருக்கு முன் வரும்; ஆனால் ஒடு உயிருக்கோ மெய்க்கோ முன்னர் வரும்.	(1)கிழமைப் பொருள் கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல் எரி சினம் கொன்றோய் (பரி.3:31-32) ‘கூந்தல் என்னும் பெயரைக் கொண்டு (அரக்கன்) கூந்தலின் (கேசியின்) சினத்தை அழித்த நீ’
	(2) செயப்படுபொருள் சேர்ப்பனொடு மணவா ஊங்கே (நற்.31:12) ‘சேர்ப்பனை மணப்பதற்கு முன்னர்’ காதல் நம்மொடு நீங்கா மாறு (நற்.231:91) ‘(அவன் நமக்குத் தந்த) காதல் நம்மை விட்டுப்போகத்தன்

	காரணமாக’ பொய்கையோடு ஒக்கும் நின் குன்றின்…சுனை (பரி.8:15-16) ‘உனது மலையில் உள்ள சுனை (இமயத்தின் மேலுள்ள) பொய்கையை ஒக்கும்’ தற்காலத் தமிழில் இது *பொய்கையை ஒக்கும்* என வரும்.
	(3) உடனிகழ்ச்சிப் பொருள்: ஒன்றுக்கும் மேற்பட்ட எழுவாயோ செயப்படுபொருளோ வரும்; ஆனால் ஒரே ஒரு வினைதான் இருக்கும். இதன் பொருள் ‘உடன்; ஒன்றாக; இணந்து, அனைத்தும்’ அல்லது ‘மற்றும்’. நோயொடு பசி இகந்து (பதி.13:27) ‘பசி மற்றும் நோயிலிருந்து விலகிப் போய்’ கடலொடு புலம்புவோ (கலி.144:68) ‘கடலுடன் சேர்ந்து அழும் அவள்’ மடந்தையொடு வதுவை அயர்ந்தனை (அக.36:11-12) ‘மடந்தையுடன் உன் திருமணத்தைக் கொண்டாடினாய்’ மாஅ மெய்யொடு முரணிய உடுக்கையை (பரி.4:8) ‘உனது பழுப்பு உடம்புடன் முரண்படும் (பொன்) ஆடையை நீ உடுத்தியுள்ளாய்’ வேரொடு மரம் வெம்ப (கலி.9:4) ‘வேருடன் தொடங்கி முழுவது மரங்கள் தங்கள் மரச்சாறை இழக்க’ அவனொடு மாறு உண்டோ…நமக்கு (கலி.62:18-19) கலுழும் கண்ணொடு … அழிந்து எவன் நினைபு வாடுதி (நற்.208:3) ‘உனது கண்ணீர் நிறைந்த கண்களுடன் அழிந்து எதை நினைத்து வாடுகிறாய்?’

	போது அவிழ் மரத்தோடு … கரை கவின் பெற (கலி.26:7) ‘பூத்திருக்கின்ற மரங்களுடன் ஆற்றங்கரை பேரழகைப் பெற’ வித்தோடு சென்ற வட்டி பற்பல மீனோடு பெயரும் (நற்.210:3-4) ‘வித்துக்களுடன் சென்ற வட்டி பல் வகை மீன்களுடன் திரும்பும்’ ‘விற்பவரால் வித்துக்களுடன் எடுத்துச் செல்லப்பட்ட வட்டி மீன்களால் நிரப்பப்பட்டு திரும்பிய ஊர்’
	(4)கருவிப்பொருள்: ‘ஆல்; உதவியால்; வழியாக; காரணமாக’ நாவொடு நவிலா நகை படு தீஞ்சொல் (அக.16:4) [நா ‘நாக்கு’; நவில் ‘பயில்’] ‘நாவால் பயிலப்படாத (குழந்தையின்) இனிய வேடிக்கையான சொற்கள்’ மழைக்கண்ணார் கை வளம்…வடுவொடு காணாய் நீ (பரி.18:16-17) ‘(அவன் உடம்பின் மீதுள்ள) வடுவால் அழகிய கண்ணுள்ள பெண்களின் தாரளமான தழுவலை நீ காண்பாய்’ கடும் சூல் வயவொடு கானல் எய்தாது கழனி ஒழிந்த…பேடை (263:5-6) [வயவு ‘கர்ப்பம் காரணமான பிணிகள்’; கானல் ‘உப்பங்கழிக் கரை’; கழனி ‘வயல்] ‘நிறைகர்ப்பத்தின் பிணி காரணமாக உப்பங்கழியின் கரைகளில் போகாமல் வயல்களைப் போக்கிடமாகக் கொண்ட பெண்பறவை (கொக்கு). *காலொடு* பட்ட மாரி (நற்.2:9) ‘காற்றின் காரணமாக கீழே விழுந்த/சிதறிய மழை’

	நோயொடு புல்லென்ற நுதல் (கலி.3:4) [புல் என் 'பொலிவு/உயிர் இழ; நுதல் 'நெற்றி''] '(காதல்) நோய் காரணமாகப் பொலிவு இழந்த (அவள்) நெற்றி' பிணி கொள்ளும் *கண்ணொடு*...நீ பூ ப் பலி விட்ட கடவுள் (கலி.93:23-24) '(அவளது) அடிமைப் படுத்தும் கண்கள் காரணமாக நீ பூக்களைக் காணிக்கை ஆக்கிய செய்த தேவி' போது அவிழ் மரத்தோடு ... கரை கவின் பெற (கலி.26:7) [கவின் பெறு 'கவர்ச்சியான அழகைப் பெறு'] 'பூத்துக்குலுங்குகின்ற மரங்களின் காரணமாக ஆற்றங்கரை கவர்ச்சியான அழகை பெற'
	(5) கொடைவேற்றுமைப் பொருள்: நேரடியல்லாத செயப்படுபொருள் இத்தலை நின்னொடு வினாவல் (அக.7:16-17) 'நான் இப்பொது உன்னிடம் கேட்பேன்' எம்மொடு சொல்லலும் பழியோ (குறி.:144-145) 'என்னிடம் சொல்வதுகூடப் பிழையோ? (ஒப்பிடுக: துணிந்தநிர்க்கு ஒரு பொருள் சொல்வது உடையேன் (கலி 8:7-8) 'உன்னிடம் கூறுவதற்கு சில இருக்கின்றது ...'; இங்கு *க்கு*-தான் வேற்றுமை உருபு *ஒடு* அல்ல.) பெருந்தகையோடு எவன் பல மொழிகுவம் (கலி.5:8) 'பெருந்தகையோடு நாம் எவ்வாறு பல விசங்களைக் கூறவியலும்?' நின்னொடு தெளித்தனர் (நற்.358:4) 'அவர் உன்னிடம் அதைத் தெளிவாக்கினர்'
	(6)இடப்பொருள் (இடஞ்சார்): 'இல்'

	கொட்டையொடு புகழ் வரம்பு இகந்தோய் (பரி.5:70) [கொட்டை 'தாமரை மொட்டு; தாமரையின் உட்பக்கம்; இக 'அப்பால் போ'] தாமரை மொட்டில் (உன்னுடைய பிறப்பில் கூட) புகழின் எல்லையைத் தாண்டிய நீ'
	(7) எண்ணிக்கைப் பொருள்: இப்படி, இவ்வாறு; அதாவது; என்னவெனில்' நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும் அளந்து (பதி.24:15-16) 'பூமி, தண்ணீர், காற்று, ஆகாயம் என்ற ஐந்தையும் அளந்து' குருகொடு பெயர் பெற்ற மால் வரை (பரி.5:9) 'குருகு என்ற பெயர் பெற்ற பெரிய மலை'
க்(க்)(உ), அக்க்(உ), உக்க்(உ):	(1) எழுவாய் + க்க் நினக்கோ அறியுனள் நெஞ்சே (நற்.44:5) 'என்ற இதயமே, அவள் நீ அறிகின்ற ஒன்றா?' தற்காலத் தமிழில் இது உனக்கு தெரியுமா? அல்லது உன் நெஞ்சுக்கு த் தெரியுமா? என வரும்.
	(2) கிழமைப் பொருள் நினக்கு…வனப்பு (பரி.3:48,50) 'உன்னுடைய அழகு' முதுமைக்கு ஊழி யாவரும் உணரா ஆதி முதல்வ (பரி.2:17-19) 'யாரும் அறியாத எல்லையற்ற தொன்மையான ஆதி முதல்வா'
	(3) செயப்படுபொருள் (நேரடி செயப்படுபொருள்) நாடற்கு க் காதல் செய்தல் (நற்.268:5-6) 'நாடனை காதலித்தல்' தற்காலத் தமிழில் *நாடனை க் காதலிக்கும்* என வரும்

	குடர் கூளிக்கு ஆர்த்துவான் (கலி.101:26) [கூளி 'அரக்கன்'; ஆர்த்து 'உணவு ஊட்டு'] 'காளையின் ஈரலால் கூளி அரக்கனுக்கு உணவு ஊட்டும் அவன்'
	(4) காரணத்தால்; விளைவால் சேர்ப்பற்கு யான் நினைந்து இரங்கேன் (நற்.275:6-7) 'நான் சேர்ப்பனை நினைத்து அவனுக்காக இரங்ககமாட்டேன்' பெயர்வுக்கு இரங்கி (அக.147:13) 'அவனது புறப்பாட்டிற்காக இரக்கப்பட்டு'
	(5) கொடைப் பொருள்: 'ஆக; கு' (நேரடியல்லாப் பொருள்) உரைத்திசின் எமக்கே (அக.200:14) [எம் என்பது யாம் என்பதன் திரிபுப் பகுதி; உரை 'கூறு'] 'என்னிடம் கூறு' துணிந்தனிர்க்கு ஒரு பொருள் சொல்லுவது உடையேன் (கலி.8:7-8) '(போவதற்கு) தீர்மானித்த உனக்குக் கூறுவதற்கு என்னிடம் சில உள்ளன' இங்கு கொடைவேற்றுமை உருபு *க்கு* என்பது *உடையேன்* என்ற வினையைக் கட்டுப்படுத்தும்; *சொல்லவது* என்ற வினையைக் கட்டுப்படுத்தாது. இதை *எம்மொடு சொல்லல்* (குறி144-145) என்பதுடன் ஒப்பிடவும். நினக்கு ஒன்று கூறுவாம் கேள் இனி (கலி.55:5) 'இப்போது கேள். நாங்கள் உன்னிடம் ஒன்று கூறுவோம்' ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது ஈத்து (பதி.15:35-36) 'பூமியில் உயிர்வாழ்வனவற்றிற்கு அயராது கொடுத்து'

	நகைவர்க்கு அரணம் ஆகி (பதி.31:34) [நகைவர் 'நண்பர்கள்'; நட்புநாடுகள்' அரணம் 'பாதுகாப்பு'] 'நண்பர்களுக்கு பாதுகாப்பு ஆகி' பழி நமக்கு எழுக என்னாய் (மது.204) '"பழி நமக்கு வரட்டும்" என்று நீ கூறமாட்டாய்' குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய (அக.2:10) 'எதிர்பார்த்த இன்பம் உனக்கு ஏன் அரிதாகக் கிடைக்கின்றது' கொடிது என நின்னை யான் கழறுதல் வேண்டுமோ...நினக்கே (கலி.100:21-23) [கழறு 'கடி; கண்டி, குற்றங்கூறு'] 'இது உனக்குக் கேடானது என்று நான் உன்னைக் கண்டிக்க வேண்டுமா? கரும்பு கரு முக க் கணக்கு அளிப்போர் (பரி.19:39) [கருமுகக் கணம் 'கருமுகக் குரங்குகளின் கூட்டம்'] 'கருமுகக் குரங்குகளுக்கு கரும்பு அளிபவர்கள்' இங்கு கொடைவேற்றுமை உருபு *க்கு* நேரடியாக *கணம்* என்ற திரிபுறாத பகுதியில் சேர்க்கபட்டிருப்பது நோக்கத்தக்கது ஆகும். *கணம்* என்பதன் திரிபுற்ற பகுதி *கணத்த்* என்பதாகும்.
	(6) 'பொருட்டு; நிமித்தம்; எதிர்பார்ப்பாக; கு-ஆக' பிறர்க்கு என வாழ்தி நீ (பதி.38:16) 'நீ மற்றவர்களுக்காக மட்டும் வாழ்கின்றாய்' அமரர்க்கா ச் சென்ற நின்... (பதி.2:71) (அமரர் 'தேவர்கள்; கடவுள்கள்'] 'தேவர்களுக்காகச் சென்ற நீ' தற்காலத் தமிழில் இது *அமரர்க்காக* என வரும். நின் ...கண் சிவப்பு அஞ்சுவாற்கு துனி நீங்கி ஆடல் தொடங்கு

	(பரி.6:96-97) ‘உன் கண்களில் தெரியும் கோபத்திற்கு அஞ்சும் அவனுக்காக வேண்டி உன் கோபத்தை விட்டுவிட்டு ஆடத்தொடங்கவும்’ பொருட்கு இறத்தி (கலி.10:12) [பொருள் ‘செல்வம்’; இற ‘புறப்படு; விட்டுச் செல்’] ‘பொருளுக்கு வேண்டி நீ புறப்பட்டுச் செல்கின்றாய்’
	(7) ‘ஈடாக’ வாளைக்கு…பாண்மகள்…நெல்லின் முகவை கொள்ளாள்…முத்தமொடு நன்கலம் பெறூஉம் பயங்கெழு வைப்பு (அக.126:8-13) [வாளை ‘வாளை மீன்’; பாண்மகள் ‘மீனவப்பெண்’; முகவை ‘அளவை’] ‘மீனவப்பெண் வாளைமீனுக்குப் பதிலாக நெல்லின் அளவையைப் பெறாத ஆனால் முத்துக்கள் கொண்ட ஆபரணக்களைப் பெறும் அமோக விளைச்சலுள்ள சூழல்’
	(8) ‘பதிலாக; காரணமாக’ வாடு பல் அகல் இலை கோடைக்கு ஒய்யும்… (அக.143:4) [கோடை ‘மேற்குக்காற்று; ஓய் ‘விழு, சிதறு’] ‘கோடைக் காற்று காரணமாக வாடுகின்ற பல பெரிய இலைகள் விழும்’ வண் பெயற்கு அவிழ்ந்த பைங்கொடி முல்லை (அக.124:11) [பெயல் ‘பெய்தல்] ‘கனமழை காரணமாகப் பூத்த இளம் முல்லைக் கொடி’ அமர்க்கு எதிர்ந்த … மறவர் (பதி.22;20) [அமர் ‘போர்’; ‘எதிர் ‘எதிகொள்; நேரிடு’] போரை எதிர்கொண்ட போர்வீரர்கள்’

	கண்…ஒன்னாதார்க்கு அவன் வேலின் சேந்து (கலி.57:9-11) [ஒன்னாதார் ‘பகைவர்கள்’; சேந்து < செ ‘சிவ’] ‘அவன் பகைவர்களுக்கு எதிர்வினையாக சிவந்த அவன் வேல் போன்று உன் கண்கள் சிவந்தன’ சிறிதிற்கு ப் பெரிது உவந்து (புற.398:17) ‘(அவன்) சின்ன விசயத்திற்காகப் பெரிதும் மகிழ்ந்தான்’
	(9) இடப்பொருள் (இடம்சார்): ‘இல்; உள்; (வரிசையாக ஒன்றிற்கும் மேற்பட்ட பெயர் வரும் போது சேர்க்கப்படுகையில் மற்றும் உம்-ஆல் தொடரப்படுகையில்) இடையில்’ அதனால் தங்கின் எவனோ…எம்…ஊர்க்கே (நற்ற்.67:9-12) ‘எனவே, நீ தங்கினால் எங்கள் ஊருக்கு என்ன? மாடக்கு எழுது அணி கடவு (அக.167:14-15) ‘கடவுள் மாடத்தை வரைந்து அலங்கரித்து’ கொடைவேற்றுமை உருபு *க்கு* திரிபுறாத பகுதியான *மாடம்* என்பதுடன் நேரடியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மரபான ஆக்கம் மாடத்துக்கு < மாடம் + அத்து (சாரியை)+ க்கு) என்பதாகும். கிழங்கு மணற்கு ஈன்ற முளை (அக.212:4-5) ‘மணலில் உள்ள கிழங்கால் வெளிவிடப்பட்ட முளை’ பரங்குன்றிற்கும் … வைகைக்கும்… கூடற்கும் கையுழ் தடுமாற்றம் (பரி.17:43-46) ‘பரங்குன்று, வையை, கூடல் இவற்றிற்கு இடையில் சடங்குகளின் தடுமாற்றம் நன்று’ பரங்குன்று, வையை, கூடல் இவற்றிற்கு இடையில் சடங்குகளின் சுழற்சி நன்று’

	(10) இடப்பொருள் (காலம்சார்): ‘இல்’ வாடைக்கு ப் பிரிவோர் மடவர் (நற்ற்.366-11-12) [வாடை ‘குளிர்காலம்’; மடவர் ‘ஏமாறுபவர்கள்’’] ‘குளிர்காலத்தில் பிரிபவர்கள் ஏமாறுபவர்கள்’ கோடைக்கு…மலை வெம்ப (கலி.20:3-5) ‘கோடையில் மலை தமது செழுமையை இழக்கும் போது
	(11) பொருந்தும்; பொருத்தமாக; ஏற்ப மடந்தை … குழைக்கு அமர்த்த நோக்கும் (அக.3:16,17) [குழை ‘காதணிகள்’; அமர் ‘சமனாகு’] ‘தனது காதணிகளுக்குப் பொருத்தமான இளம்பெண்ணின் பார்வை’ வாய்மைக்கு ஏற்ப (நற்ற்.393;9) [வாய்மை ‘உண்மை’; ஏல் ‘பொருந்து’)] ‘உண்மைக்குப் பொருத்தமாக/ஏற்ப’ அணிக்கு அணி (கலி.85:17) ‘அழகுக்குப் பொருந்தமான அழகு’ எனக்கு உரித்து என்னால் நின்ற என்…அஞ்ஞை (அக.145:21-22) [என் என்பது யான் என்பதன் திரிபுப் பகுதி; உரி ‘ஏற்றதாக இரு’) ‘’இது எனக்காக’ என்று கூறாது (என் முன்னால்) நின்ற என் பெண்’ எமக்கு இல் (பதி.39:2) ‘எங்களுக்கு ஒன்றும் இல்லை’ ‘எங்களிடம் ஒன்றும் இல்லை’ நல்லதற்கு உரை (நற்ற்.16:3-4)

	‘நீ நல்லனவற்றிற்கு பொருத்தமாக உள்ளாய்’ ‘நீ நல்லனவற்றிற்குத் தகுதியானவன்’ பல் புகழ் கேட்டற்கு இனிது (பதி.12:8-9) ‘(உனது) பெரும் புகழ் கேட்பதற்கு இனிதாக உள்ளது’ நகுதற்கு ஒன்று (கலி.23:5) ‘சிரிப்பதற்கு என்று ஒன்று’
	12) ’பொறுப்பு’ அணங்குதற்கு யான் தன் அறிவல் (குறு.337:4-5) [அணகுதல் (தொழிற்பெயர்) < அணங்கு ‘துன்புறுத்து] ‘என்னைத் துன்புறுத்துவதற்கு பொறுப்பானவளாக நான் அவளை அறிவேன்’
	(13) முறை வினையடை அருமை நற்கு அறியினும் (பரி.1:33) [நற்கு < நல்] ‘உன்னை வர்ணிப்பதற்கான இடரை நாங்கள் நன்றாக அறிந்திருந்தாலும்’
	(14) திசைப் பொருள்: சலன வினைகளுடன் ‘நோக்கி’ ஊருக்கு ப் போவோய் (நற்.200:7) ‘நீ உன் சொந்த ஊருகுப் போவாய்…’ சிறு களி ஏர் உண்கன் நீர்க்கு விட்டு ஊர்ந்தாயும் நீ (கலி.97:26-27) ‘சிறு கண்கள் உள்ள யனையை ஓட்டி அதைத் தண்ணீர் இருக்கும் இடத்தை நோக்கிப் போக வீட்ட நீ’
	(15) உறவுப்பொருள்: ‘கு; பற்றி; தொடர்பாக; பொறுத்து’ (பரி.2:20-21) வாலியோற்கு அவன் இளையன்

	[வாலி 'வெள்ளையானவன்'; பலராமாமன்'] 'அவன் வாலியோனுக்கு (பலராமனுக்கு) இளையவன்' யாரே நீ எமக்கு (நற்ற்.395:1) 'நீ எங்களுக்கு யார்?' அமரர்க்கு முதல்வன் (பரி.3:53) 'அவன் தேவர்களின்/கடவுள்களின் முதல்வன்' அரவு நுங்கு மதியினுக்கு இவணோர் போல (குறு.395:4) [மதியின் என்பது மதி 'சந்திரன்' என்பதன் திருப்புப் பகுதியாகும்; இவணோர் 'இங்குள்ள மக்கள்'] 'இங்குள்ள (பூமியிலுள்ள) மக்களையும் மற்றும் பாம்பால் விழுங்கப்பட்ட சந்திரனையும் போன்று' 'சந்திர கிரகணத்திற்கு மக்கள் எவ்வாறு மறுபடி தருகின்றனர்'
கடை இது பெயருடன் அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படுகின்றது; இது 'இறுதி, கடைசி' எனப் பொருள்படும்.	இடப்பொருள் (இடம்சார்): 'இறுதி; இல்' புறங்கடை ப் போயினாள் (கலி.115:12) 'அவள் வீட்டின் பின்புறம் போனாள்' பெரும் தேர் ... எம் முன் கடை நிறீஇ ச் சென்றிசினோனெ (நற்ற்.300:5.-6) [முன் கடை 'வீட்டின் முன்புறம்/முற்றம்'; நிறு 'நிறுத்து'] 'அவன் பெரிய தேரை எங்கள் வீட்டின் முன்புறம் நிறுத்திவிட்டு போய்விட்டான்' எம் இள நலம் இற்கடை ஒழிய ச் சேறும் (நற்ற்.295:7-9) 'வீட்டில் எங்கள் இளமை தங்கி இருக்கும்படி நாங்கள் (எங்கள் வீட்டிற்கு) திரும்புவோம்'
	இடப்பொருள் (காலம்சார்): 'எப்பொழுது' புல்லு மற்று எவனோ அன்பு இல்-அம்-கடையே (நற்ற்.174-11) 'ஆனால், அன்பு/காதல் இல்லாத பொழுது தழுவுவது எதற்கு?

	ஊர் உடன் ஆடும்-கடை (பரி.7:76) [ஆடும் (பெயரெச்சம்) <ஆடு ‘நீராடு’) ‘(வையை ஆற்றில்) ஊரின் எல்லா மக்களும் குளிக்கும் போது’ மேவினும் மேவா-க்-கடையும் அஃதெல்லாம் நீல் அறிதி யான் அஃது அறிகல்லேன் (கலி.62:3-4) [மேவா (பெயரெச்சம்) < மேவு ‘சேர்’] என்னுடன் எப்போது சேரவேண்டும் பிரியவேண்டும் என நீ எல்லாம் அறிவாய். நான் அறியமாட்டேன்’
கண்: இது பெயருடனும் பெயரெச்சத்துடனும் சேர்க்கப்படும். இது அடிப்படையில் ‘இடம்’ எனப் பொருள்படும்.	உடநிகழ்ச்சிப் பொருள்: ‘உடன்’ தன்கண் பொரு களிறு (கலி.60:9) ‘அவனுடன் பொருதும் ஆண் யானை’
	இடப்பொருள் (இடம்சார்): ‘இல்; மேல்; நோக்கி’ தெருவின்கண் நின்று ஒருவன் கூறும் சொல் (கலி.60:24-25) [தெருவின் என்பது தெரு என்பதன் திரிபுற்ற பகுதி] ‘தெருவில் நின்றுகொண்டு (இருக்கும் போது) ஒரு மனிதன் கூறும் சொற்கள்’ வேற்றுமை என் கண்ணோ ஓராதி (கலி.88:15) [என் என்பது யான் என்பதன் திரிபுப் பகுதி; ஓர் ‘நினை’] ‘என்னிடம் கருத்து வேற்றுமைகொள்ள எண்ணாதே’ ‘வேற்றுமைகள் உள்ள நபராக என்னை எண்ணாதே’ பின்-ன்-இன்-கண் … அலரி…ஆரல்மீன் தகை ஒப்ப (கலி.64:2-4) [பின் ‘மயிர்ப் பின்னல்’; அலரி ‘பூக்கள்’; ஆரல்மீன் ‘கார்த்திகை

	விண்மீன்கூட்டம்’] ‘பின்னலிட்ட கூந்தல் மீதுள்ள பூக்கள் கார்த்திகை விண்மீன் கூட்டத்தை ஒக்கும்…’
	இடப்பொருள் (காலம்சார்/செயல்/நிலை): ‘இல்; எப்போது; பொழுது/போது’ மடை அடைத்த-க்-கண்ணும் (பரி.6:82) [அடைத்த < அடை ; மடை ‘மதகு’] ‘மடை அடைத்த போதும்’ ஓரை அயரும் அடக்கம் இல் போழ்தின்கண் (கலி.82:9-10) ‘(அவன்) ஓரை(யுடன்) விளையாடிய கட்டுப்பாடில்லாத நேரத்தில்’ தொடங்கற்கண் (கலி.2:1) [தொடங்கல் (தொழிற்பெயர்) < தொடங்கு] ‘தொடங்கும் போது’ நலன் உடையார் மொழிக்கண் (கலி.22:6) ‘அழகானவர்களின் சொற்களில்’ பாடி நின்ற பசி நாள் கண்ணே (புற.237:2) ‘(அவன் வாயிலில்) (அவன் புகழ்) பாடிக்கொண்டு (நான்) நின்ற பசிநாட்களின் போது’
கால்(ஐ) இது பெயருடன் அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடம்சார்): ‘இல்; உள்’ ஊர்-க்-கால் நிவந்த பொதும்பர் (கலி.56:1) [நிவந்த (பெயரெச்சம்) < நிவ ‘உயரமாய் வளர், உயரமாய் நில்’]
	இடப்பொருள் (காலம்சார்): ‘இல்; தடவை’ நீ ஓர் யாட்டு ஒரு-கால் வரவு (கலி.71:25-26) ‘ஆண்டிற்கு ஒருதடவை உன் வரவு’ புது ப் புனல் பல்-கால்-உம் ஆடிய செல்வுழி (கலி.98:34-35)

	‘புதிய நீரில் (ஆற்றில்) குளிப்பதற்காக பல தடவை (நீ) சென்ற போது’ எனக்கே படுங்-கால் பையுள் தீரும் (நற்.209:6-7) [படும் (பெயரெச்சம்) <படு ‘இற, கீழே விழு’] ‘நான் இறக்கும் போது என் துன்பங்கள் தீரும்’ திணி நிலம் கடந்த-க்-கால் (பரி.3:54) [கடந்த (பெயரெச்சம்) < கட] ‘உறுதியான பூமியை நீ கடக்கும் போது நின் குன்றம் குறுகி ச் சிறப்பு உணா-க்-கால் (பரி.19:93-94) [உணா < உண் ‘அனுபவி’] ‘(அவர்கள்) உன்னுடைய மலையை அடையாமல் மற்றும் (உனது) சிறப்பை அனுபவிக்காத போது’ கல்லா வாய் ப் பாணன் புகுதரா-க்-கால் (கலி.70:22-23) [புகுதரா (பெயரெச்சம்) < புகுதர் (கூட்டுப் பகுதி) ‘நுழை’] ‘பக்குவமடையாத/படிப்பறிவில்லாத வாய் கொண்ட கவிஞன் (நமது வீட்டில்) நுழையாத போது’ பிணையல் மொழியினாள் உயிர்த்த-காலை (அக.5:23-24) ‘அவள் (பூக்களின்) மாலையை முகர்ந்து பெருமூச்சு விட்ட போது’
காறும் இது பெயருடன் சேர்க்கப்படும்; இது காலச்சுழலைக் குறிப்பிடும்.	இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது; இது இடையீட்டு ஒழுங்கைக் குறிப்பிடுகின்றது. (தடவை) ஏழ்காறும் மழவீன்று (பரி.11:120-121) ‘ஏழு தடவைகளிலும் குழந்தை ஈன்றெடுத்து’ ‘ஏழு பிறவிகளிலும் குழந்தை ஈன்றெடுத்து’
கீழ்	இடப்பொருள் (இயற்பியல்சார், படிநிலைசார்): ‘கீழ்; பக்கத்தில்’

இது பெயருடன் சேர்க்கப்படும்.	குள-க்-கீழ் விளைந்த … வெண்ணெல் (புற.33:5) ‘குளத்தின் பக்கதில்/கீழ் வளர்ந்த வெள்ளை நெல்’ குன்ற-க்-கீழ் (பரி.19:36) ‘குன்றின் கீழ்’ காஞ்சி-க்-கீழ் (கலி.108:63) ‘காஞ்சி மரத்தின் கீழ்’ மன்னவன்கீழ் க் குடி (கலி.34:14) ‘அரசனின் கீழ் குடிமக்கள்’
	இடப்பொருள் (காலம்சார்): ‘செயலின் கீழ்’ செங்கோலின் செய்தொழிற்-கீழ் (கலி.99:11-12) ‘அரசனின் செங்கோலின் நிறைவேற்றப்பட்ட செயலின் கீழ்’
கொண்டு இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது; இதைத் தனியான வினை எச்சமாகப் பயன்படுத்த இயலும். கொண்டு என்பது கொள் ‘எடு, ஏல், பெறு’ + இறந்தகால/முற்று குறி +உ (வினை எச்சக் குறி) என ஆக்கப்படுகின்றது. வச்சிரம் கொண்டு இகந்து வந்து எறிந்தென (பரி.5:52) .	கருவிப் பொருள்: ‘உடன்; ஆல்’ நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும் (பதி.43:27) ‘தன் மெல்லிய கோலை வைத்துக்கொண்டு (போர்க்)களத்தைப் புகழ்ந்த (அவன்) அன்னால் கொண்டு இறக்கும் இவள் அரும்பெறல் உயிரே (கலி.5:19) ‘அவள் உயிர் அந்த நாள் நீங்கும்’ [தோல் ‘கேடயம்’] தோல் கொண்டு மறைக்கும் சால்பு உடையோன் (புற.311:7) ‘போரில் (தன்) கேடயம் கொண்டு (தனது ஆட்களை) பாதுகாக்கும் பெருந்தன்மை உடைய அவன்’

	2) காரணமாக; இருந்து; அதன் விளைவாக சிறு புறம் கவையின் ஆக அடற்கொண்டு இகு பெயல் மண்ணின் ஞெகிழ்பு அஞர் உற்ற என் உள் (அக.32:9-11) [கவை < கவி 'தழுவு'] 'அவன் என் சின்ன முதுகைத் தழுவினான். அதன்காரணமாக மழையால் நனைந்த மண்போன்று என்னுடைய இதயம் மிருதுவானது மற்றும் துன்பதை அனுபவித்தது' இதற்கொண்டு அறினை (புற.381:20) [இதன் என்பது இது என்பதன் திரிபுப் பகுதி] 'இதிலிருந்து அறிந்துகொள்'
சார்: இது பெயருடன் சேர்க்கப்படும். வினையாக இது 'ஒன்றின் மீது சார்ந்திரு' எனப் பொருள்படும்.	இடப்பொருள் (இடம்சார்): 'பக்கம்; அருகே' காட்டுச்சார் கொய்த சிறு முல்லை (கலி.117:11) [காட்டு என்பது காடு என்பதன் திரிபுப் பகுதி] 'காட்டின் அருகே (அவள்) கொய்த சிறு முல்லை (பூ)'
சிறை: இது பெயருடன் சேர்க்கப்படும். இது 'பக்கம்' எனப் பொருள்படும். இது பறவையின் சிறகுகளைக் குறிப்பிடும்.	இடப்பொருள் (இடம்சார்): 'பக்கம்; அருகே' நெடு நகர் ஒரு சிறை நின்றனென் (அக.162:9) 'நான் ஒரு பெரிய வீட்டின் ஒரு பக்கம் நின்றேன்'
ஞாங்கர்: இது பெயருடன் அல்லது	இடப்பொருள் (இடஞ்சார்): 'இல்; மேல்; அருகே' நெடுங்-கோட்டு ஞாங்கர் (நற்.288:1-2)

பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	‘உயர்ந்த சிகரத்தின் மீது;
	இடப்பொருள் (காலம்சார்): ‘இல்’ நீலம் பகர்பவர் வயல் கொண்ட ஞாங்கர் மலர் சூழ்ந்து ஊர் புகுந்த… (கலி.66:1-2) ‘பூக்களை விற்பவர்கள் நிலத்திலிருந்து அவற்றைப் பறித்து (பூக்களுடன்) ஊருக்கு நுழைந்த போது வண்டு நீலப் பூக்களைச் சுற்றியது’
ஞான்று இது பெயருடன் அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (காலம்சார்): ‘இல்; எப்போது; அந்த நாள்’ மடந்தை..நோக்கம்…விலங்கு ஞான்றே (அக.3:16, 17, 18) ‘இளம் பெண்ணின் பார்வைகள் உன்னைக் கடந்த போது (அதாவது உன் முன்னால் வந்த போது) பிறந்த ஞான்றே (பரி.14:25) ‘நீ பிறந்த போதே’ அன்றை ஞான்றினொடு இன்றின் ஊங்கும் (புற.376:17) ‘அந்த நாளிலிருந்து இந்த நாள் வரை’ ஒரு ஞான்று வந்தானை (கலி.37:14) ‘ஒரு சமயம் வந்த அவன்’
ஞான்றை: இது ஞான்று என்பதன் மாற்றுருபாகும்; இது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படுகின்றது.	இடப்பொருள் (காலஞ்சார்): ‘இல்; எப்போது’ சேர்ப்பன்…வந்த ஞன்றை (நற்.287:5-7) ‘சேர்பன் வந்த போது’
தம்: இது தாம் என்பதன் திரிபுப் பகுதியாகும். இது பெயருடன்	கிழமைப் பொருள் வேந்தர்தம் எயில் (பதி.52:31) ‘அரசர்களின் கோட்டைகள்’ புரையோர்தம் உள் நீர் (கலி.6:3-4)

சேர்கப்படும்.	[புரையோர் 'பெரும் மக்கள், உன்னத மக்கள்'] 'பெருமக்களின் அகப் பண்பு/வலிமை'
தலை: இது அடிப்படையில் 'இடம், ஓரம்' எனப் பொருள்படும். இது பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): 'இல்; எல்லை; அப்பால்' மரந்தலை ச் சேர்ந்து (புற.371:2) 'மரத்தின் அருகே சென்றடைந்து' 'மரத்தின் அடியில் சென்றடைந்து' கடும் தார் துய்த்தலை ச் சென்று (பதி.32:4) [துய் 'ஓரம், முனை'] 'விரைந்து நகரும் முன் படை (பகைவர் நிலத்தின்) ஓரத்திற்குச் சென்றது' 'விரைந்து நகரும் படை (பகைவர் நிலத்தின்) முன்பை அடைந்தது'
	இடப்பொருள் (காலஞ்சார்/செயல்): 'தவிர; கூடுதலாக' சிறந்த காடற்கிழமையும் உடையன் அதன்தலை இன்னதோர் காலை நில்லலன் (புற.216:9-11) 'அவனுக்கு என்னிடம் அதிகக் காதல் இருக்கின்றது. இது தவிர, இந்நேரத்தில் அவன் காலங்கடத்தமாட்டான்' (போலிக்காரணம் கூறி; பற்றி; ஏனெனில்; சலன வினையுடன் 'நோக்கி') கனவின் தலை இட்டு உரையல் (கலி.92:57) 'கனவினைக் காரணங்காட்டி நீ என்ன கூறுகின்றாய்' நின் தலை வருந்தியாள் துயரம் சென்றனை களைமோ (கலி.133:18-19) 'நீ போய் உன் காரணமாக வருந்திக்கொண்டிருக்கின்ற பெண்ணின் துயரத்தை நீக்கு' என் தலை மாலையும் வந்தன்று இனி (கலி.143:40-41)

	‘இப்போது என்னை நோக்கி மலையும் வந்துவிட்டது’
தன் இது தான் என்பதன் திரிபுப் பகுதியாகும். இது பெயருடன் சேர்க்கப்படும்.	தந்தை தன் ஊர் (நற்.198:4-5) ‘அவள் தந்தையின் ஊர்’ தந்தை இறைத்தொடி … இவன் *தன்* கை க் கண் தந்தாரியார்…தன் நலம் பாடுவி (கலி.84:31-32,34) ‘அவன் (சொந்த) கையில் உள்ள அவன் தந்தையின் வளையை யார் கொடுத்தது? புகழ் பாடிய பெண் (அவன் தந்தையின் வைப்பாட்டி) அதைக் கொடுத்தாளா?
திறம்/திறன்: இது பெயருடன் சேர்க்கப்படும்.	(1)இடப்பொருள் (இடஞ்சார்): ‘உள்ளே’; சலன வினையுடன் ‘நோக்கி’ அவர் *திறம்* செல்வேன் கண்டெனென் (அக.14:17) ‘அவனை நோக்கிச் சென்ற நான் கண்டேன்’ வேட்டோர் *திறத்து* (கலி.66:23) [வேட்டோர் ‘விரும்பியவர்’] ‘நீ விரும்பியவரை நோக்கி’ யானை…பிடியொடு ஒரு *திறன்* ஒடுங்க (அக.91:5-6) ‘தன் பெண் யானையுடன் ஒரு பக்கமாக (ஆண்) யானை நகரும் போது’ எவ்வம் மிகுதர என் *திறத்து* (கலி.110:16-17) ‘எனக்குள் துன்பம் அதிகரிக்கும் போது’
	(2)‘பற்றி; குறித்து’ நெடுந்தகை *திறத்து*…இனையள் (கலி.76:3-4) [நெடுந்தகை ‘பெரிய மனிதர்’] ‘நெடுந்தகை குறித்து அவள் அவ்வாறு இருக்கிறாள்’
தொறு(ம்) இது தோறும்	(1) வினியோகப் பொருள் (இடஞ்சார்): ‘ஒவ்வொரு’ சிமைதோறும் (பரி.7:13)

என்பதன் மாற்றுரு. இது பெயருடன் அல்லது வினைப் பகுதியுடன் சேர்க்கப்படும். இது காலச் சுழலை அல்லது வினியோகத்தைக் குறிப்பிடுகின்றது.	‘ஒவ்வொரு சிகரத்தின் மேலும்’
	2) வினியோகப் பொருள் (காலஞ்சார்/செயல்): எப்போதெல்லாம் உள்ளுதொறு உடையும் நின் … நோய் (கலி.35:22) ‘(அவனை) பற்றி நீ நினைக்கும் போதெல்லாம் உன் (காதல்) நோய் குலையும்’ நீ கடி கொண்டார் க் கனைதொறும் யாம் அழ (கலி.72:9) [கனை ‘சேர விரை] ‘(இன்பத்திற்காக) நீ சிறைசெய்துள்ள பெண்ணை நோக்கி நீ விரையும் போதெல்லாம்
தோறும்: இது *தொறும்* என்பதன் மாற்றுரு ஆகும். இது பெயருடன் சேர்க்கப்படும்.	(வினியோகப் பொருள் (இடஞ்சார்): ‘ஒவ்வொரு’ நாள்தோறும் (கலி.53:5) ‘ஒவ்வொரு நாளும்’
நடுவண்: இது ‘நடுவில்’ எனப் பொருள்படும் மற்றும் இது பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): ‘நடுவில்’ செழுநகர் *நடுவண்* (பதி.21:12-13) ‘பெரிய வீட்டின் நடுவில்’

நாப்பண்: இது 'நடுவில்' எனப் பொருள்படும் மற்றும் இது பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): 'நடுவில், மத்தியில்' பாற்கடல் *நாப்பண்* (பரி.13:26) 'பாற்கடலின் நடுவில்' வையெயிற்றவர் *நாப்பண்* (கலி.59:12) [வை 'கூர்மையான'; எயிற்றவர் 'பல் உள்ளவர்கள்'] 'கூர்மையான பல் உள்ள பெண்களின் மத்தியில்'
நின்று(ம்): இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது. இது *நில்* என்ற வினையின் வினையெச்ச வடிவாகக் கருதப்படுகின்றது.	நீங்கல் பொருள்: 'இருந்து' யாம் அவண்-நின்றும் வருதும் (மலை:53) 'நாங்கள் அங்கிருந்து வருகின்றோம்' கரை-நின்று பாய்வார் (பரி.10:108) 'கரையிலிருந்து (நீருக்குள்) குதிப்பவர்'
பக்கம் இது 'அருகில்' எனப் பொருள்படும். இது பெயருடன் சேர்க்கப்படும்.	(1) இடப்பொருள் (காலஞ்சார்): 'இல்' எழிலி இசை படு பக்கம்...மஞ்ஞை ஆட (பரி.21:30-32) [படு 'வீழ், நிகழ்] 'ஆண்மயில் மேகங்களின் ஓசைக்கு ஏற்ப ஆடுகையில்'
	(2) இடப்பொருள் (இடஞ்சார்): 'பக்கம்' பாங்கர்-ப்-*பக்கத்து* ப் பல்லி பட்டென (நற்.98:5) [பாங்கர் 'பக்கம், சமம்] 'பல்லி அதே *பக்கத்திலிருந்து* சப்தமிட்டதால்' யாழ்-ப்-பக்கம் பாடலோடு ஆடல் (பரி.10:56) 'யாழின் கூட பாடுவதும் ஆடுவதும்'
படி: இது பெயரெச்சத்துடன்	முறை வினையடை கவுதமன் சினன் உற க் கல் உரு ஒன்றிய படி இது (பரி.19:51-

சேர்க்கப்படுகின்றது.	52) [ஒன்றிய (பெயரெச்சம்) < ஒன்று 'சேர்'] 'இவ்வாறுதான் (அகலிகை) (தன் கணவன்) கவுதமன் கோபப்பட்டதால் கல்லின் வடிவத்துடன் ஒன்றினாள்' 'இவ்வாறுதான் (அகலிகை) (அவள் கணவன்) கோபப்பட்டதால் கல்லாக மாறினாள்'
பதம்: இது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படுகின்றது.	இடப்பொருள் (காலஞ்சார்): 'நேரம்' தேர் வரு-பதம் (கலி.127:10) 'தேர் வரும் நேரம்'
பாங்கர்: இது 'பக்கம், சமத்துவம்' எனப் பொருள்படும்; இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது.	இடப்பொருள் (இடஞ்சார்): 'அருகில்' சிமய ப் *பாங்கர்* பம்பிய...முசுண்டை வெண் பூ (அக.94:1-2) [சிமயம் 'சிகரம்'; பம்பிய (பெயரெச்சம்) < பம்பு 'கூடு'] 'சிகரத்தின் அருகாமையில் கூடிக்கிடந்த முசுண்டைக் கொடியின் வெண் பூக்கள்'
பாடு: இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது; இது காலச்சுழலைக் குறிப்பிடும்.	வினையடைசார்: 'தடவை' பல் படு (புற.211:20) 'பல தடவைகள்'
பால்: இது 'பக்கம், பிரிவு' எனப் பொருள்படும். இது பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): 'குழுவில்; உடன்; இல்' சிறார்-*பால்* பட்டனள் (நற்.207:12) 'அவள் குழந்தைகள் கூட்டத்தில் சென்றாள்' சிலை-ப்-*பால்* பட்ட முளவுமான் கொழும் குறை (புற.374:11) 'அம்பால் இறந்த முள்ளம்பன்றியின் (முளவுமானின்) கொழுத்த

	இறைச்சி’
	திசைப் பொருள்: ‘கு, இடம், நோக்கி’ பூண் வந்த வழி *நின்பால்* மாயக்களவு அன்றேல் (பரி.20:76-77) ‘(என்) ஆபரணம் உன்னிடம் வந்த வழி போலியான களவு அல்ல என்றால்’
	‘வேண்டி, நிமித்தம், சார்பில்’ நுந்தை *பால்* உண்டி சில (கலி.85:25) [நுந்தை ‘உன் தந்தை’] ‘உன் தந்தைக்கு வேண்டி சிறிது உண்’
பின்(னும்) இது ‘பின்னர், பிறகு’ எனப் பொருள்படும். இது பெயருடனோ இறந்தகால/முற்று பெயரெச்சத்துடனோ சேர்க்கப்படும்.	இடப்பொருள் (காலஞ்சார்): ‘பின்னர்’ பிறகு’ பிறர் கூறும் பழி மாற ப் *பெறுகற்பின்* (கலி.77:11) ‘பிறர் கூறும் பழிச்சொற்களில் மாற்றத்தை அனுபவித்த போது’ நச்சினார்க்கினியர் தனது உரையில் *பெறுகற்பின்* என்பதை நிபந்தனையாகக் கொள்கின்றார். இச்சூழலில் இதற்கு நிபந்தனையின் வலு இருந்தாலும் *பெறுகற்பின்* என்ற வடிவம் நிபந்தனைசார்ந்தது அல்ல. இது *பெறுகல்* என்ற தொழிற்பெயரும் *பின்* என்ற பின்னுருபும் தொடர்ந்து வரும் சேர்க்கையாகும். காதலி … சிறு புறம் முயங்கிய *பின்னே* (அக.19:18-19) [முயங்கிய (பெயரெச்சம்) முயங்கு ‘தழுவு’] ‘என் காதலியின் சிறு முதுகைத் தழுவிய பின்னர்’ பெற்றது உதவுமின் தப்பின்று *பின்னும்*…சேரலாதன் பொய்யலன் நசையே (பதி.18:7,12) ‘உன்னிடம் இருப்பதைப் பிறர்க்குக் கொடு. இருப்பினும் (அரசன்) சேரலாதன் நீ விரும்புவதைத் தருவதில் தவறமாட்டான் (ஆகையால்) இதில் தவறு ஒன்றுமில்லை’

	இடப்பொருள் (இடஞ்சார், படிநிலைசார்): ‘பின்னால்’ அவன் *பின்* தொடரூஉ (பரி.11:111) ‘அவன் பின் போவது’ வேந்தரும் வேளிரும் *பின்* வந்து பணிய (பதி.88:13) ‘அரசர்களும் பிரபுக்களும் உன் பின்னால் வந்து வணங்க’ வீவு இல் *குடிப்பின்* இரும் குடி ஆயர் (கலி.105:7) ‘என்றும் அழியாத குடிக்குப் பின்னர் வந்த ஆயர்களின் பெருங்குடி’
பிற்றை: இது ‘பின்னால், பின்னர்’ எனப் பொருள்படும். இது பெயருடன் அல்லது இறந்தகால/முற்று பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்	இடப்பொருள் (இடஞ்சார்): ‘பின்னால்’ நீர்க்கு இயங்கு இன நிரை ப் பின்றை (அக.225:7) [நிரை ‘கால்நடைகளின் கூட்டம்’] ‘தண்ணீரை நோக்கி நகரும் கால்நடைகளின் கூட்டதிற்குப் பின்னால்’ சிதார் களைந்த பின்றை (பதி.12:20) [களைந்த (பெயரெச்சம்) < களை ‘நீக்கு’; சிதார் ‘துணிகள்’] ‘துணிகளைக் களைந்த பின்னர்’
பின்னர்: இது ‘பின்னால், பிறகு, அப்புறம்’ எனப் பொருள்படும். இது பெயருடனோ பெயரெச்சத்துடனோ சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): ‘பின்னால்’ ஏற்றின் பின்னர் (கலி.20:22) ‘காளையின் பின்னர்’
புடை: இது ‘பக்கம்’ எனப் பொருள்படும் மற்றும்	இடப்பொருள் (இடஞ்சார்): ‘பக்கம்’ கமுகின் *புடை* சூழ் தெங்கு (பெரு:363-364) ‘கமுகு மரங்களின் பக்கங்களைச் சூழ்ந்த தென்னை மரங்கள்’

பெயருடன் சேர்க்கப்படும்.	
பொழுது/போழ்து: இது 'நேரம்' எனப் பொருள்படும் மற்றும் பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (காலஞ்சார்): 'அந்நேரத்தில்; அப்பொழுது' உண்ணும் *பொழுது* (கலி.35:10) 'அனுபவிக்கும் பொழுது' புனல் … பெய்யும் *பொழுது* (பரி.20:106-107) 'நீர் பெய்யும் பொழுது' கனை பெயல் தண் வீசும் *பொழுதில்* குறி வந்தாள் (கலி.90:22) ''விரையும் மழை மேகங்கள் குளிர்ந்த (மழை) துளிகளை சிதறியபோது அவள் நாங்கள் சந்திக்கும் இடத்திற்கு வந்தாள்' வையை வார் அவிர் ஆறல் இடை *போழும்* பொழுதினான் (கலி.28:7) 'வையை நதி நீண்ட (பரந்த) பொலிவான கறுப்பு மண் வழியாக பாயும் நேரத்தில்' வருதும் என்று அவர் தெளித்த *போழ்தே* (அக.194:19) [தெளி 'உறுதிசெய்'] 'எப்போது வருவேன் என்று அவன் உறுதிசெய்த நேரத்தில்' அகன்றவர் துணை தாரா-ப்-*பொழுதின்கண்* (கலி.120:10) [தாரா (பெயரெச்சம்) < தர் 'கொடு'] 'விட்டுச்சென்றவர் துணைதராமல் இருக்கும் நேரத்தில்'
மாட்டு: இது அடிப்படையில் 'கட்டு' என்று பொருள்படும் மற்றும் பெயருடன் சேர்க்கப்படும்.	சார்புப் பொருள்: 'நோக்கி; தொடர்பாக' நின் *மாட்டு* இவளும் இனையள் (அக.2:12-13) 'உன்னிடம் அவளும் இதுபோல்தான்' தமியோர் *மாட்டே* (குறு.162:6) [தமியோர் <தாம்] 'அவர்கள்தம்மை நோக்கி'
மாட்டை:	சார்புப் பொருள்: 'பொறுத்து; நிமித்தம், பொருட்டு'

இது மாட்டு என்பதன் மாற்றுரு ஆகும் மற்றும் இது பெயருடன் சேர்க்கப்படும்.	பருக்கீத்தை …ஞாயர் மாட்டை ப் பால் (கலி.85:35-36) [ஞாயர் 'உன் தாயார்கள்'] 'உன் (செவிலித்) தாய்களுக்காக தயவாய் பால் குடி'
மாண்: இது பெயருடன் சேர்க்கப்படும்.	தடவைகள்; நீண்ட நேரமாக (கலி.92:60-61) பன்-மாண்-உம் கூடி ப் புணர்ந்தீர் பிரியன்மின் 'பல தடவை சேர்ந்த நீங்கள் பிரியாமல் இருப்பீர்'
மாத்திரம் இது வினைப் பகுதியுடன் சேர்க்கப்படும்.	காலஞ்சார் எல்லை: 'அளவிற்கு; அதற்காக' வெளவினன் முயங்கு *மாத்திரம்* வா (கலி.47:21-22) [முயங்கு 'தழுவு'] 'பிடிப்பதற்கும் தழுவுவதற்கும் வா'
மாத்திரை: இது *மாத்திரம்* என்பதன் மாற்றுரு ஆகும் மற்றும் பெயருடன் அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	காலஞ்சார் எல்லை: 'தவிர; அளவிற்கு; இதுவரை; போல்; என்றால்' கை தோயல் *மாத்திரை* அல்லது செய்தி அறியாது அளித்து என் உயிர் கலி.110:18-19 [தோயல் (தொழிற்பெயர்) < தோய் 'முக்கு'] 'என் வாழ்க்கை பரிதாபமானது. அதற்கு (உனது) கைகளில் தோய்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்யத் தெரியவில்லை' சுடரே…பகல் செய்யும் *மாத்திரை* கை விளக்காக க் கதிர் சில தாராய் (கலி.142:41-43) 'சூரியனே, நீ எழுந்து பகல்வெளிச்சத்தை தருவது வரை (உன்) கதிர்களில் சிலவற்றை என் கைவிளக்குக்காகத் தா' இமைத்தோர் விழித்த *மாத்திரை* ஞெரேரென க் குணக்கு எழு திங்கள்…இருள் அகற்ற (புற.376:7-8) 'தங்கள் கண்களை மூடிக்கொண்டிருந்தவர்கள் திறந்தது போன்று கிழக்கில் எழுந்த திங்கள் திடீரென இருளை

	அகற்றியது’ (இம்மாதிரியான சூழலில் *மாத்திரை* என்பது தற்காலத் தமிழில் உள்ள மாதிரி ’போன்று’ ஆகியுள்ளது.)
மிசை: இது ‘மேல், உச்சியில்’ எனப் பொருள்படும் மற்றும் பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): ‘மேல்’ தேர் *மிசை* (பதி.34:5) ‘தேர் மேல்’ குன்றின் மிசை ‘குன்றின் மேல்’
மீது: இது பெயருடன் சேர்க்கப்படும். மீ ‘மேலிரு, மேற்பரபுக்கு எழு’ என்ற வினையின் வினையெச்சமாக இருக்கக்கூடும். தற்காலத் தமிழ் வடிவான *மிகுதி* என்பதிலிருந்து ஆக்கப்படும் *மீதி* என்பதுடன் ஒப்பிடவும்.	இடப்பொருள் (இடஞ்சார்): ‘மேல், மீது’ மலர்மீது (பரி.7:24) ‘மலர்களின் மேல்’
மீமிசை: *மீமிசை* என்பதன் மரபிலக்கண விளக்கம் இரட்டைக்கிளவி என்பதாகும். இது இரண்டு புரியவியலும் கூறுகளைக் கொண்டிருப்பது	இடப்பொருள் (இடஞ்சார்): ‘மேல்; மீது’ துறுகல் *மீமிசை* (நற்.206:3) [துறுகல் ‘கூட்டமான பாறைகள்’] ‘கூட்டமான பாறைகளின் உச்சியில்’

கருதத்தக்கது:*மீ* மற்றும் *மிசை. மீ* என்பதன் ஒப்பிடவியலும் தற்காலத் தமிழ் சொல் *உயரே* என்பதாகும்; *மிசை* என்பதன் ஒப்பிடவியலும் தற்காலத் தமிழ் சொல் *மேலே* என்பதாகும்.	
முதல் (முதல்): இது பெயருடன் சேர்க்கப்படுகின்றது.	இடப்பொருள் (இடஞ்சார்): 'இல்; மேல்'; வேர், மூலம், தொடக்கம், அடி,நோக்கி, உள்ளே, மத்தியில், நியமப்பாதை' *மலைமுதல்* ஆறு (அக.119:20) 'மலையில் தொடங்கும் ஆறு' குட-திசை மாய்ந்து குணமுதல் தோன்றி பாயிருள் அகற்றும்...ஞாயிறு புற.386:21,24 [குட 'மேற்கு; குண 'கிழக்கு'; மாய் 'மறை/அடை') 'மேற்கில் அடைந்து கிழக்கில் தோன்றி பரந்த இருளை அகற்று ஞாயிறு' இது 'x-இலிருந்து Y-க்கு' தொடரமைப்பு வகையாகும். இரவில் முட ப் பனையத்து *வேர்முதலா* க் கடை-க்-குளத்து க் கயம் காய (புற.229:2-4) 'கோணலான பனையின் வடிவிலுள்ள (முதல் விண்மீன்) குழாமிலிருந்து குளம் வடிவிலுள்ள இறுதி விண்மீன் குழாம் வரை எல்லா விண்மீன்களும் இரவில் பிரகாசிக்க' வள்ளியோர் செவி *முதல்* வயங்கு மொழி வித்தி (புற.206:2) 'பெருந்தன்மையுள்ள மக்களின் செவிகளுக்குள்ளே தெளிவான

	சொற்களை இட்டு' சேஎ ச் செவி *முதல்* கொண்டு (கலி.103:51) 'காளையை அதன் செவிகளின் அடியில் பிடித்து' 'காளையின் செவிகளை அடியில் பிடித்து' பதி *முதல்* பழகா ப் பழங்கண் வாழ்க்கை (புற.393:1) 'உறைவிடத்தின் நியமப்பாதைக்கு பழகாத துன்ப வாழ்க்கை' 'ஊரின் ஆழத்திற்கு பழகாத துன்ப வாழ்க்கை' தொலையா நேமி *முதல்* ... புலவர் ... உரைத்த ... குன்றம் பல (பரி.15:3-5) 'நேமி (சக்ரவாள மலை) தொடங்கி புலவர்கள் புகழ்ந்த மலைகள் பல உள்ளன'
	இடப்பொருள் (காலஞ்சார்): 'முதல் தடவை; தொடக்கத்தில்' கலைமான் தலையின் *முதல்* கவர்த்த கோடல் அம் கவட்ட குருங்காள் (அக.151:7-8) 'கலைமானின் தலை (தோன்றுவது) போன்று முதல் தடவையாக வளைந்த மற்றும் பிளவுபட்ட கிளைகள் விட்ட குட்டையான தண்டு உள்ள உழுஞ்சில் மரம்'
முறை: இது 'முறை, வழிமுறை, வழி' எனப் பொருள்படும். இது பெயர் அல்லது வினை பகுதியுடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (காலஞ்சார்/செயல்/சூழல்): 'அடுத்த; வரிசையில்; முறை' மேயாயே போல வினவி வழிமுறை க் காயாமை வேண்டுதல் யான் (கலி.82:6-7) '(முதலில்) நட்புள்ள நபரைப் போன்றும் பின்னர் கோபபட்டும் விசாரிக்கவேண்டாம் என்று நான் உன்னை வேண்டுகிறேன்' வழிமுறை த் தாய் (கலி.82:15) 'அடுத்த தாய்' கண்டார்க்கு இறுமுறை செய்யும் உருவொடு நும் இல்

	செறிமுறை வந்த கடவுளை-கண்டாயோ (கலி.93:18-20) [இறு ‘சிதை, நை’; செறி ‘நெருக்கமாகச் சேர்’] ‘(தன்) உருவத்தால் (தன்னைப்) கண்பவரைச் சிதைத்து உன்னுடன் நெருக்கமாகச் சேர்வதற்காக உன் வீட்டிற்கு வரும் பெண்தெய்வத்தை நீ பார்த்தாயா?
முன்(னும்): இது ‘முன்கூட்டி, முந்தைய’ என்று பொருள்படும் மற்றும் இதற்கு *முன்னை* என்ற மாற்றுரு உண்டு. இது பெயருடன் அல்லது வினையெச்சத்துடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): ‘முன்’ ஏற்றின்முன் ஆடிநின்று (கலி.103:28-29) [ஏற்றின் என்பது ஏறு ‘காளை’ என்பதன் திரிபுப் பகுதியாகும்] ‘காளையின் முன் நின்றுகொண்டு மற்றும் தள்ளாடிக்கொண்டு’ தெவ்வர் சிலை விசை அடக்கிய…தானை மன்னர் இனி யார் உளரோ நின் முன்னும் இல்லை (பதி.45:15-18) ‘இப்போது பகைவர்களின் வேகமான அம்புகளின் முன்னேற்றத்தை கட்டுப்படுத்தும் படையை கொண்ட உன்னைப் போன்ற அரசன் யார் இருக்கப்போகின்றனர்? உனக்கு முன்னும் யாரும் இல்லை’ ஆரத்தாள் மார்பும் நின் மார்பும் ஓர் ஒத்த நீர்மைய கொல் என்னா முன் (பரி.20:64-65) [என்னா (எதிர்மறைப் பெயரெச்சம்) <என் ‘கூறு’] “உன் மார்பும் மாலை அணிந்த பெண்ணின் மார்பும் ஒரே தன்மையானதா?” என்று அவள் கூறுவதை முடிக்குமுன்’ கொய்யா முன்னும் (அக.28:3) ‘கொய்வதற்கு முன்னர்’

பின்வரும் எடுத்துக்காட்டுக்களை நோக்கவும்: *அத்தம் முன் நாள் உம்பர் க் கழிந்த என் மகள்* ‘பல நாட்களுக்கு முன் காட்டுவழியாகச் சென்ற என் மகள்’ (நற்.198:2-3); *முன்னை மரபு* ‘பழைய வழக்கம்’ (பரி.3:47).

முன்னர்: இது முன் என்பதன் மாற்றுரு ஆகும் மற்றும் இது பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): 'முன்' தாய் *முன்னர்* … வளை உகுபவால் (கலி.48:10-11) 'அவளது வளைகள் அவள் தாய் முன்னால் நழுவியது' ஞாயிற்று முன்னர் இருள் போல மாய்ந்தது என் ஆயிழை…துயர் (கலி.145:65-66) 'ஞாயிறு முன் இருள் போல் என் காதலியின் துயர் மறைந்த்து'
மேல்: இது 'மேலே' எனப் பொருள்படும் மற்றும் பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): 'மேல்' யானை…எருத்தம் *மேல்* (பதி.11:18-19) [எருத்தம் 'பிடரி'] 'யானையின் முதுகின் மேல்' *உக்கத்துமேல்* (கலி.94:17) [உக்கத்து என்பது உக்கம் 'இடை/இடுப்பு' என்பதன் திரிபுப் பகுதி] 'இடுப்புக்கு மேல்' மரன் *மேல்* கொண்டு (நற்.111:4) [மரன் 'மரம்'] 'மரத்தின் மேல் கால்பரப்பி நின்றுகொண்டு' *குன்றின்மேல்* (கலி.27:16) 'மலை மேல்' என் மேல் அல்லா விழுந்தாளை (பரி.6:88-89) 'மறதியால்/கவனிக்காமல் என் மேல் விழுந்த பெண்' 'புரிந்துகொள்ளாமல் என் மேல் விழுந்த பெண்' *குறித்ததன்மேல்* (கலி.க.வா:3) 'விருப்பப்பட்ட (பொருளை) நோக்கி'

பின்வரும் சூழலில் மேல் பின்னுருபாக வரவில்லை: 'முன்னால்': அவ்வேற்றின் ஏனிலை மிகல் இகலின் மிடை கழிப்பு இழிப்பு மேல் சென்று…வெள்ளை எருத்தத்து பாய்ந்தானை

(கலி.104:32-35). ‘முந்தைய’: நோக்கின் பிணிக்கும் கண்ணொடு மேல் நாள் நீ பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ (கலி.93:23-24).

மேலிருந்து: இது *மேல்* மற்றும் *இருந்து* என்ற சொற்களைக் கொண்டது. இது பெயருடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): ‘மேலிரு’ ஏற்றின் *மேலிருந்து* ஆடி த் துறை அம்பி ஊர்வான் போல் தோன்றும் அவன் (கலி.103:38-39) ‘காளையின் மேல் இருந்துகொண்டு ஆடும் மற்றும் நீரில் ஓடும் தெப்பத்தை ஓட்டும் ஒருவர் போன்று தோன்றும் அவன்’
வயம்: இது பெயருடன் சேர்க்கப்படும்.	திசைப் பொருள்: ‘நோக்கி; கூட; உடன்’ வையை வயமாக வை (பரி.6:78) ‘உன் ஆர்வத்தை வையை மீது வை’
வயின்: இது ‘பிரிவு, இடம்’எனப் பொருள்படும்.	(1)செயப்படுபொருள்: பொருள்வயின் நினைந்த சொல் (கலி.17:18) ‘செல்வத்தின் மீது ஆசையை வெளிப்படுத்தும் சொல்’
	(2)’ஏனெனில், காரணமாக’ நம் வயின் வருந்தும் (நற்.303:7) ‘எனக்காக (அதாவது எனது புறப்பாட்டிற்காக) அவள் வருந்துவாள்’
	(3)கொடைப் பொருள்: ‘நிமித்தம், பொருட்டு’ *பொருள்வயின்* சென்ற நம் காதலர் (கலி.11:4) ‘செல்வத்திற்காக போய்விட்ட நமது காதலர்’ *புரைவயின்* பெரிய நல்கி (பதி.15:37) [புரை ‘பெருந்தன்மை’] ‘பெருந்தன்மைக்காக கொடுத்து’

	(4)இடப்பொருள் (இடஞ்சார்): ‘இல்; மேல்’ நெடுவயின் ஒளிறும் மின்னு (பதி.24:1) ‘நீண்ட பாதையில் ஒளிரும் மின்னல்’ மனைவயின் பல்லி (கலி.11:20-21) ‘வீட்டில் உள்ள பல்லி’ தம்மோன் கொடுமை நம் வயின் ஏற்றி (நற்.88:6) ‘அவன் கொடுமையை நம்மீது சுமத்தி’ தாழை…கூட வயின் கூம்பு முகை அவிழ (நற்.335:4-5) ‘தாழையின் வீங்கிய பக்கதின் மீது கூம்புவடிவான மொட்டுகள் விரிய’ நின் வலவயின் (பரி.1:11) ‘உன் வலப்பக்கம்’
	(5)திசைப் பொருள் அல்லது சார்புப் பொருள்: ‘கு, நோக்கி’ ஊர்வயின் மீள்குவம் போல (நற்.313;8-9) ‘நம் ஊரை நோக்கி நகர்வது போல்’ மகன்வயின் பெயர்தந்தேனே (அக.26:21) ‘நான் என் மகனை நோக்கி நகர்ந்தேன்’ நம் வயின் என் என நினையும் கொல் … மகளே (நற்.349:9-10) ‘(என்) பெண் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?’ நம் வயின் யானோ காணேன் … நாடன் வரூஉம் ஆறே (நற்.158:1,2,9) ‘நம்மை நோக்கி நாடன் வரும் வழியை நான் காணேன்’ பொருள் வயின் பிரிதல் (நற்.243:9-10) ‘செல்வத்திற்கு/ஐ வேண்டி/நோக்கி நீங்குதல்’ என் வயின் உள்ளாது இருத்தலோ அரிதே (புற.210:6-7)

	‘என்னைப் பற்றி நினையாமல் இருப்பது (அவளுக்கு) கடினம்’ *நின்வயின்* பரந்தவை உரைத்தேம் (பரி.3:10) ‘உன்னிடமிருந்து வெளியே பரவினவர்களைப் பற்றி நான் பேசினேன்’
	(6)நீங்கல் பொருள்: ‘இருந்து’ *வீவயின்* தேன் சோர (பரி.16:42) [வீ ‘பூக்கள்’; சோர் ‘சொட்டு’] ‘பூக்களிலிருந்து தேன் சோர’
வரை: இது ‘எல்லைக்கோடு’ என உண்மையில் பொருள்படும். இது பெயருடனோ வினைப் பகுதியுடனோ சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): எல்லை மலை வரை மாலை அழி பெயல் (பரி.10:1) ‘மாலையில் மலைமீது பெய்த மழை’
	இடப்பொருள் (காலஞ்சார்/செயல்): எல்லை *கடவரை* நிற்குமோ காமம் (பரி.20:94) [கட ‘விஞ்சு, வெல்’] ‘(அதை) வெல்வதுவரை காமம் காத்திருக்குமோ?’ காழ் *வரை* நில்லா …களிற்று ஒருத்தல் யாழ் வரை த் தங்கியாங்கு (கலி.2:26-27) ‘காழில் நிற்காத ஆண் யானை யாழின் (சப்தத்தில்) நின்றது’ என் சொல் *வரை* (கலி.2:28-29) ‘என் சொல்லில்’ மொழியின் உணர்த்தும் *சிறுவரை* அல்லது (அக.13:8)

	‘சொற்களால் (யானையை) (அவன்) பயிற்சி செய்யும் கொஞ்ச நேரம் அல்லாது’
வழி: இது அடிப்படையில் ‘பாதை’ எனப் பொருள்படும். இது வினைப் பகுதியுடனோ பெயரெச்சத்துடனோ சேர்க்கப்படும்.	(1)இடப்பொருள் (இடஞ்சார்): ‘இல்; வழியாக’ வேண்டுவழி நடந்து (பரி.7:19) ‘(வெள்ளப்பெருக்கு) அது விரும்பிய பாதை வழி செல்ன்று’ காய்கதிரோன் போயவழி மாலை மலை மணந்து (பரி.20:6-7) ‘சுட்டெரிக்கும் சூரியன் போன வழி மலையுடன் சேர்ந்து’
	(2)இடப்பொருள் (காலஞ்சார்/செயல்): ‘இல்; உள்; வழி, முறை’ கொடுமையும் செம்மையும் வெண்மையும் தண்மையும் உள்வழி உடையை இல்வழி இலையே (பரி.4:50-51) ‘நீ கொடுமையும் நேர்மையும் வெப்பமும் தட்பமும் இருக்கின்ற இடத்தில் இருக்கின்றாய்; அவை இல்லாத இடத்தில் நீ இருக்கமாட்டாய்.’
வாய் வாய் அடிப்படையில் ‘துளை’ எனப் பொருள்படும் மற்றும் இது பெயர் அல்லது பெயரெச்சத்துடன் சேர்க்கப்படும்.	இடப்பொருள் (இடஞ்சார்): ‘இல்; மேல்’ நின் தாரின்வாய் க் கொண்டு முயங்கி (கலி.95:14-15) [தார் ‘மாலை’; கொள் ‘பிடி’] ‘உன் மார்பிலுள்ள மலையால் உன்னை இழுத்து அணைத்து’ ‘உன் மார்பிலுள்ள மலையைப் பிடித்து உன்னை அணைத்து’ பெடையன்னார்…நோக்கும்வாய் எல்லாம் (கலி.102:15) [நோக்கும் (பெயரெச்சம்) < நோக்கு ‘பார்’] ‘களங்கமில்லாப் பெண்கள் நோக்கும் எல்லா இடங்களிலும்’
வியல்: இது ‘உள்ளே’ எனப் பொருள்படும் மற்றும்	இது பெயரோடு சேர்க்கப்படுகின்றது. (இடப்பொருள் (இடஞ்சார்): ’உள்ளே’) புரிசைவியல் உள்ளோர்(கலி.81:25)

பெயருடன் சேர்க்கப்படும்.	[புரிசை 'கோட்டை'] 'கோட்டைக்குள் வாழுவோர்'

தொல்காப்பியம் (சொல்லதிகாரம், சேனாவரையர், விதி 364) இதை 'அகலம்/வீதி' என்பதைக் குறிப்பிடும் உரிச்சொல் (பெயரடை) எனக் கருதுகின்றது'. திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் (தி.மொ.சொபி.அ. 5404) *வியல்* எனபதற்கு 'அகலம், பெருந்தன்மை' எனப் பொருள் தரப்பட்டுள்ளது.

விளிவேற்றுமை	(1) மாற்றமில்லாமல் அண்ணல் (பரி.1:27) 'உன்னதமானவனே' வேதிர் (புற.367:14) 'அரசர்களே (முன்னிலை)'
	(2) இறுதியில் ஏ அல்லது ஓ சேர்த்து அரு மறை ப் பொருளே (பரி 1:13) [அரு 'அரிய'; மறை 'இரகசியம், வேதங்கள்'] 'மதிப்புமிக்க இரகசியங்களின் பொருளே' மாயோயே (பரி.3:1) [மா(அ)யோய் 'கருமையான நீ'] 'கருமையானவனே' வால் வளை செய்யாயோ (கலி.14:6) [செய்யாய் 'சிவந்த நீ'] 'வெள்ளை வளைகள் கொண்ட சிவந்தவனே'
	(3)அ என்று தொடங்குகின்ற பின்னொட்டின் இறுதி மெய்யின் நீக்கத்தால் திரு மறு *மார்ப* (பரி.1.36) [மார்ப < மார்பன் 'மார்புடையவன்']

	‘திரு (செழுமை) என்ற அடையாளம் உள்ள மார்பை உடையவனே’ தொல் இயல் *புலவ* (பரி.3:86) [புலவ < புலவன் ‘படித்தவன்/புலமை உள்ளவன்’] ‘அங்கீகாரமுள்ள/ஒப்புக்கொள்ளத்தக பண்புகள் கொண்ட புலமை உள்ளவனே’ மாயா *மன்ன* (பரி.3:85) [மன்ன < மன்னன் ‘அரசன்’] ‘இறவா/சிரஞ்சீவியாய அரசனே’
	(4)இறுதி அசையின் உயிரை நீட்டுதல் அடு போர் *அண்ணால்* (பரி.13:15) [அண்ணால் < அண்ணல்] ‘போர்களில் கொல்கின்ற உன்னதமானவனே’ நன்னுதால் (கலி.55:5) [நன்னுதல் ‘அழகான நெற்றி (ஆகுபெயர்) < நன்னுதால்’ ‘அழகான நெற்றி உள்ளவனே’ தகாஅ *மகாஅன்* (பரி.8:57) [மகாஅன் <மகன் ‘மகன், மனிதன்’] ‘(நற்)பண்புகள் உள்ள மனிதனே’ மகாஅஅர் (புற.291:1) [மகாஅஅர் < மகார் ‘குழந்தைகள்’] ‘குழந்தைகளே’ இலங்கு பூண் *மாஅல்* (பரி.1:28) [மாஅல் < மால் ‘கருமையானவன்’] ‘பிரகாசிக்கின்ற ஆபரணங்கள் பூண்ட கருமையானவனே’ வாய் மொழி *புலவீர்* (பரி.9:13)

	[புலவீர் < புலவர்] ‘உண்மையான சொல் பேசும் புலவர்களே’
	(4)இறுதி உயிரை நீட்டுதல் ஒண்டொடீ (கலி.60:18) [ஒண்டொடீ < ஒள் ‘பிரகாசமான’ + தொடி ‘வளை’] ‘பிரகாசமான வளையல்கள் கொண்டவளே’
	(5)இறுதி அசையிலுள்ள ஐ என்பதை ஆய் அல்லது ஓய் என மாற்றல் நேரிழாய் (பரி.8:73) [நேரிழாய் < நேரிளை ‘செம்மையான ஆபரணங்கள் அணிந்தவள்’ < நேர் ‘செம்மை/முழுமை’ + இளை ‘ஆபரணக்கள்’] ‘செம்மையான ஆபரணங்கள் அணிந்தவளே’ ஒளிர் வேலோய் (பரி.8:29) [வேலோய் < வேலை ‘வேலை உடையவன்’ < வேல் + ஐ (இட-எண்-பால் உருபு)’ ‘ஒளிருகின்ற வேலை உடையவனே’ சேவல்-அம்-கொடியோய் (பரி.1:11) [கொடியோய் < கொடியை ‘கொடியை உடையவன்’] ‘சேவல் கொடியை உடையவனே’

5.4.6.2. வேற்றுமை மற்றும் பின்னுருபுகளின் வரலாற்று மாற்றம்

நான்காவது இயலில் தமிழ் வேற்றுமை மற்றும் பின்னுருபுகளின் வருணனை மொழியியல் விளக்கம் தரப்பட்டுள்ளது. இங்கு நாம் சங்ககால வேற்றுமை மற்றும் பின்னுருபுகளை மையமாகக் கொண்டு தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள

வேற்றுமை மற்றும் பின்னுருபுகளுடன் ஒப்பிட்டு ஒரு வரலாற்று மாற்ற விளக்கம் தர முயற்சி செய்யப்பட்டுள்ளது. நாம் அறிமுகப் பகுதியில் கூறியது போன்று நமது ஆய்வு சொற்பிறப்பியல் அடிப்படையான ஆய்வு அல்ல. எவ்வாறு சங்ககாலத் தமிழில் பெயர்கள் எத்தகைய வேற்றுமை உருபுகளையும் பின்னுருபுகளையும் பயன்படுத்தி வந்தது மற்றும் அதிலிருந்து தற்காலத் தமிழ் எத்தகைய மாற்றங்களை நேரிட்டுள்ளது என்பதன் அடிப்படையிலேயே இங்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

சங்ககாலத் தமிழில் கிழமை அல்லது உடைமை வேற்றுமையை உணர்த்தும் *அ* என்ற பின்னுருபு தற்காலத்தமிழில் பயன்பாட்டில் இல்லை. அதற்குப் பதிலாகத் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள இன், *உடைய*, *அது* என்ற கிழமை அல்லது உடைமை வேற்றுமை உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

சங்ககாலத் தமிழில் 'உள்ளே' எனப் பொருள்படும் *அகம்* என்ற பின்னுருபு தற்காலத் தமிழில் பயன்பாட்டில் வழக்கிழந்து விட்டது என்றே கூறலாம். இதற்குப் பதிலாக *உள்* என்ற பின்னுருபு தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது. தற்காலத் தமிழில் அகம் என்பது உணவகம், மருந்தகம் என்பது போன்ற சொல்லாக்கங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

சங்ககாலத் தமிழில் கிழமை அல்லது உடைமை வேற்றுமையை உருப்படுத்தம் செய்யும் அது என்ற பின்னுருபு தற்காலத்தமிழிலும் இதே செயல்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றது.

'அருகில், அண்டையில்' எனப் பொருள்படும் *அயல்* என்ற சங்ககாலத் தமிழ் பின்னுருபு தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. 'எல்லை வரை' எனப் பொருள்படும் *அளவு* என்ற சங்ககாலத் தமிழ் பின்னுருபு கிட்டத்தட்ட அதே பொருளில் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது. *அளவை* என்ற சங்ககாலப் பின்னுருபு அதே பொருளில்

தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. *அன்* என்ற சங்காலப் பின்னொட்டு அதே கிழமை வேற்றுமைப் பொருளில் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது. சங்காலத்தமிழில் இடத்தைக் குறிக்கும் பெயருடன் சேர்க்கப்படும் *ஆ* என்ற ஒட்டு கிட்டத்தட்ட அதே செயல்பாட்டில் தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது.

'இல், மேல், அருகில், அங்கு' எனப் பொருள்படும் *ஆங்கண்*, 'நோக்கி' எனப் பொருள்படும் *ஆங்கு* என்ற பின்னுருபும் கிழமை/உடைமை வேற்றுமைப் பொருளில் வரும் *ஆது* என்ற பின்னுருபும் 'இடையில்' எனப் பொருள்படும் *ஆயிடை* என்பதும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

ஆல்/ஆன் என்பன கிழமை வேற்றுமைப் பொருளிலும் உடனிகழ்ச்சி வேற்றுமைப் பொருளிலும், இடப்பொருளிலும் நீங்கல் பொருளிலும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும் சங்கத்தமிழில் செய்வது போன்று *ஆல்* கருவிப்பொருளில் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றது.

'வழி, முறை' எனச் சங்கத்தமிழில் பொருள்படும் பெயரெச்சத்தில் சேர்க்கப்படும் *ஆறு* என்பதும் 'இடம்' எனச் சங்காலத் தமிழில் பொருள்படும் மாற்றும் பெயரெச்சத்தில் சேர்க்கப்படும் *இடம்* என்பதும் தற்காலத்தமிழிலும் அவ்வாறே பயன்படுத்தப்படுகின்றது. *இடம்* என்பதன் மாற்றுருபான *இடன்* என்பது தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை. 'இல், மேல், இடையில், உள், ஊடே, வழியாக' எனச் சங்ககாலத்தில் பொருள்படும் *இடை* என்ற பின்னொட்டு சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட அதே சூழல்களில் தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது எனக் கூற இயலாது. மட்டுமல்லாமல் தற்காலத் தமிழில் இடை என்பது *இல்* வேற்றுமை உருபு ஏற்று இடையில் அல்லது *ஏ* ஒட்டு எடுத்து இடையே

எனதான் பயன்படுத்தப்படுகின்றது. *இடையில்*, *இடையே* என்பன சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படுவது போன்று 'இடையில்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றன.

எ.கா.

எங்கள் இடையில் எந்த உறவும் இல்லை.

இல் என்பது சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படும் எல்லாச் சூழல்களிலும் அதே பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது என்று கூற இயலாது. சங்காலத் தமிழில் பயன்படுத்தப்படுவது போன்று இடப்பொருளில் *இல்* தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது.

எ.கா.

அவள் அவன் மார்பில் சாய்ந்தாள்.

சரியான காலத்தில் மழை பெய்யவில்லை.

இல் சங்ககாலத்தில் பயன்படுத்தப்பவது போன்று கருவிப் பொருளிலும், நீங்கல் பொருளிலும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படவில்லை.

இன் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இருந்தாலும் சங்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் எல்லா சூழல்களிலும் வேறுபட்ட வேற்றுமைப் பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது எனக் கூற இயலாது. *இன்* தற்காலத் தமிழிலும் கிழமை அல்லது உடைமை வேற்றுமைப் பொருளில் பயன் படுத்தப்படுகின்றது. சங்ககாலத்தில் பயன்படுத்தபடுவது போன்று இன் செயப்படுபொருள் அர்த்தத்திலும், கருவிப் பொருளிலும், உடன்நிகழ்ச்சிப் பொருளிலும், இடப்பொருளிலும், ஒப்புப் பொருளிலும், பகிர்வுப் பொருளிலும் பயன்படுத்தப்படவில்லை.

உடன் என்னும் பின்னுருபு தற்காலத் தமிழில் பயன்படுத்தப்பட்டாலும் சங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட எல்லாச் சூழல்களிலும் அல்லது எல்லாப் பொருள்களிலும் தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது என்று கூற இயலாது. *உடன்* சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படுவது போன்று உடநிகழ்ச்சி பொருளில் தற்காலத்தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படுவது போன்று தற்காலத் தமிழில் *உடன்* என்பது 'முழுவதும்' என்ற பொருளிலும், உட்படு பொருளிலும் பயன்படுத்தப்படவில்லை.

சங்காலத்தில் கிழமை/உடைமைப் பொருளில் பயன்படுத்தப்படும் *உடை* அதே வடிவில் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படாமல் அதன் மாற்றுருபான *உடைய* என்ற வடிவில் அதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

சங்காலத் தமிழில் இடப்பொருளில் 'அப்பால்' என்ற அர்த்ததில் பயன்படுத்தப்படும் *உம்பர்* என்பதும், 'எப்போது' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் *உழி* என்பதும் இடப்பொருளிலும் ('கு') திசைப் பொருளிலும் பயன்படுத்தப்படும் *உழை* என்பதும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படும் *உள்* என்ற பின்னுருபு தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படாலும் சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படும் எல்லாச் சூழலிலும் அல்லது எல்லாப் பொருள்களிலும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகிறது என்று கூற இயலாது. *உள்* சங்ககாலத்தில் பயன்படுத்தப்படும் இடப்பொருளில் ('உள்ளே, வழியாக, இடையில், மத்தியில்') பயன்படுத்தப்பட்டாலும் சங்ககாலத்தில் பயன்பட்ட எல்லாச் சூழலிலும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப் படவில்லை என்று தான் கூற இயலும். எடுத்துக்காட்டாக *அவருள் ஒருத்தி* என்ற சங்கால எடுத்துக்காட்டு தற்காலத் தமிழில் *அவர்களில் ஒருத்தி* என்று தான் வருகின்றது. *அது* போன்று *இரண்டுள் ஒன்று* என்ற

எடுத்துக்காட்டு தற்காலத் தமிழில் *இரண்டில் ஒன்று* என்றுதான் வருகின்றது. சங்ககாலத்தில் பயன்படுத்தப்படும் *உள்ளும்* என்ற பின்னுருபு தற்காலத்தமிழில் அதே சூழலில் அவ்வாறே பயன்படுத்தப்படுகின்றது என்று கூற இயலாது.

உள்ளே என்ற பின்னுருபு தற்காலத் தமிழில் பயன்பட்டாலும் அது நேரடியாயப் பெயருடன் சேர்க்கப்படாமல் நான்காம் வேற்றுமை உருபு கு-வுக்குத் திரிபுற்ற பெயருடன் தான் சேர்க்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக *நீருள்ளே பிறப்பினும்* என்பது *நீருக்குள்ளே பிறந்தாலும்* என்றுதான் தற்காலத் தமிழில் வரும்.

சங்ககாலத் தமிழில் இடப்பொருளில் 'அப்பால், பின்னால்' எனப்பொருள்படும் *ஊங்கண்* என்ற பின்னுருபும், 'இல், முன்னால், இதுவரை' எனப் பொருள்படும் *ஊங்கு* என்ற பின்னுருபும், 'வழியாக' எனப் பொருள்படும் *ஊடு* என்ற பின்னுருபும், 'தடவை' எனப் பொருள்படும் *ஊழ்* என்ற பின்னுருபும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

சங்ககாலத் தமிழில் 'முன்னால்' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் *எதிர்(ஏ)* என்ற பின்னுருபு தற்காலத் தமிழிலும் அதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் *எதிர்* என்பது சங்ககாலத் தமிழில் 'பதிலாக, தொடர்ச்சியாக' என்ற பொருளில் பயன்படுத்துவது போன்று தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படவில்லை.

எல்லை என்ற பின்னுருபு சங்ககாலத் தமிழில் 'அச்சமயம், அப்போது, இறுதியில், அதுவரை' என்ற அர்த்தத்தில் பயன்படுத்துவது போன்று தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

செயப்படு பொருளிலும் இடப்பொருளிலும் ('இல், வழியாக') பயன்படுத்தப்படும் *ஏ* என்ற பின்னொட்டு தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

சங்ககாலத் தமிழில் செயப்படுபொருளை அடையாளப் பயன்படுத்தப்படும் *ஐ* தற்காலத் தமிழிலும் செயப்படுபொருளைப் அடையாளப் படுத்தப்பயன்படுகின்றது. இருப்பினும் அகச் செயப்படுபொருள் + ஐ என்ற சங்ககாலத் தமிழின் பயன்பாட்டிலிருந்து தற்காலத் தமிழ் வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக *நின்னைப் புரை நினைப்பின்* என்பது தற்காலத் தமிழில் *நினக்கு ஒப்புமை (அதாவது புரை) நினைத்தால்* என்றும் *நின்னை அம்புலி காட்டல்* என்பது தற்காலத் தமிழில் *உனக்கு அம்புலி காட்டல்* என *ஐ* வேற்றுமை உருபுக்குப் பதிலாக *கு* வேற்றுமை உருபு வரும்.

ஓடு, ஓடு என்ற பின்னொட்டுக்களில் *ஓடு* என்பது தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை. *ஓடு* என்பது சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படுவது போன்று தற்காலத் தமிழிலும் உடனிகழ்ச்சிப் பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் சங்ககாலத் தமிழில் *ஓடு* என்பது கிழமைப் பொருளிலும், செயப்படுபொருளிலும், கருவிப் பொருளிலும், கொடை வேற்றுமை பொருளிலும், எண்ணிக்கைப் பொருளிலும் பயன்படுத்தப்படுவது போன்று தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படவில்லை.

க்(க்)உ, அக்(உ), உக்க்(உ) (மாற்றுருபுகள்) என சங்ககாலத் தமிழில் உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ள நான்காம் வேற்றுமை உருபை நமது வசதிக்காக *கு* என்பதால் உருப்படுத்தம் செய்வோம். *கு* என்பது சங்ககாலத் தமிழில் கொடைவேற்றுமைப் பொருளில் வருவது போன்று தற்காலத் தமிழிலும் *கு* கொடை வேற்றுமைப் பொருளில் வரும். *கு* வேற்றுமை சங்ககாலத் தமிழில் எழுவாயாக சில வினைகளுடன் பயன்படுத்தப்படுவது போன்று தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக *நினக்கோ அறியுள் நெஞ்சே* என்பது தற்காலத் தமிழில் இது *உனக்குத் தெரியுமா*? அல்லது *உன் நெஞ்சுக்குத் தெரியுமா*? என வரும். இருப்பினும் *கு* என்பது

சங்காலத்தமிழில் பயன்படுத்தப்படுவது போன்று கிழமைப் பொருளில் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்பட்டாலும் சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்படும் எல்லாச் சூழல்களிலும் இது சாத்தியமில்லை. எடுத்துக்காட்டாக *நினக்கு...வனப்பு* என்பது தற்காலத் தமிழில் *உன்னுடைய வனப்பு* எனதான் வரும்; அதுபோல் *முதுமைக்கு ஊழி* என்பது *முதுமையின் ஊழி* எனதான் வரும். கு சங்ககாலத்தமிழில் செயப்படுபொருளை குறிப்பது போன்று தற்காலத் தமிழில் குறிப்பிடாது. எடுத்துக்காட்டாக *நாடற்குக் காதல் செய்தல்* என்பது தற்காலத் தமிழில் *நாடனைக் காதலித்தல்* எனதான் வரும். கு சங்ககாலத் தமிழில் நேரடியல்லாத செயப்படுபொருளைக் குறிப்பது போன்று தற்காலத் தமிழிலும் நேரடியல்லாத செயப்படுபொருளைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக *உரைத்திசின் எமக்கே* என்பது தற்காலத் தமிழில் *எமக்குக் கூறு* என வரலாம். கு சங்ககாலத் தமிழில் 'பொருட்டு' என்ற பொருளில் வரும்; ஆனால் தற்காலத் தமிழில் 'பொருட்டு' என்ற பொருள் கு-ஆக என்பதால் தான் கிடைக்கும். எடுத்துக்காட்டாக *பிறர்க்கு என வாழ்தி நீ* என்பது தற்காலத் தமிழில் '*பிறர்காக* (< பிறர்+கு+ஆக) *நீ வாழ்கின்றாய்* என வரும். இது போல் சங்ககாலத் தமிழில் கு வேற்றுமை 'ஈடாக' பொருளைத் தரும். தற்காலத் தமிழில் 'ஈடாக' என்ற பொருள் கு-ஆக என்பதால் தான் கிடைக்கப் பெறும். எத்துக்காட்டாக *வாளைக்கு...பாண்மகள்...நெல்லின் முகவை கொள்ளாள்* என்பது தற்காலத் தமிழில் *வாளைக்காக பாண்மகள் நெல்லின் முகவையைக் கொள்ளமாட்டாள்* என வரும். இது போல் கு என்பது சங்ககாலத்தமிழில் 'பதிலாக, காரணமாக' என்ற பொருளில் வருவது போன்று தற்காலத் தமிழில் வரும். எடுத்துக்காட்டாக *வண் பெயர்க்கு அவிழ்ந்த பைங்கொடி முல்லை* என்பது தற்காலத் தமிழில் *மழைக்கு (வண்பெயர்) பூத்த (அவிழ்ந்த) பைங்க்கொடி முல்லை* என வர இயலும். சங்க்காலத்தமிழில் கு இடப்பொருளில்

பயன்படுத்துவது போன்று தற்காலத் தமிழிலும் கு என்பதை இடப்பொருளில் பயன்படுத்த இயலும். கு சங்ககாலத்தில் 'பொருத்தும்' எனப் பொருளிலும் திசைப் பொருளிலும் உறவுப் பொருளிலும் வருவது போன்று தற்காலத் தமிழிலும் வரும்.

கடை என்ற பின்னுறுபு சங்ககாலத்தில் 'இறுதியில்' என்ற பொருளில் வரும் சூழலுக்கு இணையான பயன்பாடு தற்காலத் தமிழில் இல்லை. *புறக்கடை* என்பது தற்காலத் தமிழில் ஒரு கூட்டுப் பெயராக வரும் (ஒப்பிடுக சங்ககால எடுத்துக்காட்டு: *புறங்கடைப் போயினாள்; எம் முன் கடை நிறீஇ*)

சங்ககாலத்தமிழில் உடநிகழ்ச்சி பொருளிலும் இடப்பொருளிலும் பயன்படுத்தப்படும் *கண்* என்பதும் இடப்பொருளில் ('இல், உள்')பயன்படுத்தப்படும் *கால்(ஐ)* என்பதும் 'தடவை' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் *காறும்* என்பதும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

சங்ககாலத் தமிழில் *கீழ்* என்பது பெயருடன் நேரடியாகச் சேர்க்கப்பட்டு இடப்பொருளில் 'கீழ், பக்கத்தில்' எனப் பயன்படுத்தப்படும் வழக்குத் (எ.கா. குளக்-கீழ் விளைந்த வெண்ணெல் 'குளத்தின் பக்கத்தில்/கீழ் வளர்ந்த வெள்ளை நெல்') தற்காலத் தமிழில் இல்லை என்றாலும் *இன்* என்ற ஒட்டால் திரிபுற்ற பெயரோடு *கீழ்* சேர்க்கப்பட்டு இடப்பொருள் தருவது தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது (எ.கா. *குளத்தின் கீழ்*).

கொண்டு என்பது சங்ககாலத்தமிழில் கருவிப் பொருளிலும் ('ஆல்') காரணப் பொருளிலும் பயன்படுத்தப்படுவது போன்று தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது (எ.கா. *நுண்கோல் கொண்டு*, *தோல் கொண்டு*) .

சங்கத்தமிழில் இடப்பொருளில் வரும் *சார்* என்ற பின்னுருபும், 'பக்கம், அருகே' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *சிறை* என்ற பின்னுருபும், 'இல், மேல்' என்ற

இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *ஞாங்கர்* என்ற பின்னுருபும், 'இல், எப்போது, அந்நாள்' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *ஞான்று, ஞான்றை* என்ற பின்னுருபுகளும் கிழமைப் பொருளில் பயன்படுத்தப்படும் *தாம்* என்ற பின்னுருபும் 'இல், எல்லை, அப்பால்' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *தலை* என்ற பின்னுருபும் கிழமைப் பொருளில் பயன்படுத்தப்படும் *தன்* என்ற பின்னுருபும் 'நோக்கி' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் *திறம்/திறன்* என்ற பின்னுருபும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

சங்ககாலத் தமிழில் 'ஒவ்வொரு' என்ற வினியோகப் பொருளில் பயன்படுத்தப்படும் *தொறு(ம்), தோறும்* என்ற பின்னுருபுகளும் தற்காலத் தமிழில் பயன்பட்டில் உள்ளன. 'நடுவில்' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *நடுவண்* என்ற பின்னுருபு தற்காலத் தமிழில் வழக்கிழந்து விட்டன. *நடுவண்* என்பது தற்காலத் தமிழில் சாத்தியம் என்றாலும் *நடுவில்* என்பது தான் பெரும்பான்மையும் பயன்படுத்தப்படுகின்றது. 'நடுவில்' என்ற இடப்பொருளில் வரும் *நாப்பண்* என்பது தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. சங்க்காலத்தில் 'இருந்து' என்ற நீங்கல் பொருளில் பயன்படுத்தப்படும் நின்று(ம்) என்ற பின்னுருபும் 'நேரம்' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் பதம் என்ற பின்னுரும் 'தடவை' எனப் பொருள்படும் *பாடு* என்ற பின்னுருபும் 'இடம், உடன்' என்ற இடப்பொருளிலும் 'நோக்கி' என்ற திசைப் பொருளிலும் 'வேண்டி' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படும் *பால்* என்ற பின்னுருபும் தற்காலத் தமிழில் வழக்கிழந்துவிட்டது.

பின் என்பது சங்ககாலத்தமிழில் பெயருக்குப் பின்னர் வந்து 'பின்னால்' என்ற இடப்பொருளை குறித்து நிற்பது போன்று தற்காலத் தமிழிலும் பின் பெயருக்குப்

பின்னால் வந்து 'பின்னால்' என்ற பொருளைக் குறிப்பிடும். சங்காலத் தமிழில் பின் நேரடியாகத் திரிபுறாத பகுதியில் சேர்க்கப்படும்; ஆனால் தற்காலத் தமிழில் பின் பெரும்பான்மையும் நான்காம் வேற்றுமை உருபு கு-வுக்குத் திரிபுற்ற பெயர்ப்பகுதியில் தான் சேர்க்கப்படுகின்றது.

சங்ககாலத் தமிழ் எடுத்துக்காட்டு	**இணையான தற்காலத் தமிழ் எடுத்துக்காட்டு**
அவன் பின் தொடரூ (பரி.11:111)	*அவன்/அவனுக்குப் பின்* போவது
வேந்தரும் வேளியரும் *பின்* வந்து பணிய (பதி.88:13)	அரசர்களும் பிரபுக்களும் *உன்/உனக்குப் பின்* வந்து வணங்க
வீவு இல் *குடிப்பின்* இரும் குடி ஆயர் (கலி.105:7)	என்றும் அழியாத *குடிக்குப் பின்* வந்த ஆயர் குடி

சங்ககாலத் தமிழில் 'பின்னால், பின்னர்' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் பிற்றை தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. சங்ககாலத் தமிழில் 'பின்னால்' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் பின்னர் தற்காலத் தமிழிலும் அப்பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றது.

ஏற்றின் பின்னர் (ச.கா.த. கலி.20:22) – காளையின் பின்னர் (த.கா.த)

சங்ககாலத் தமிழில் 'பக்கம்' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் *புடை* என்ற பின்னுருபும், 'நோக்கி, தொடர்பாக' என்ற சார்புப் பொருளில் பயன்படுத்தப்படும் மாட்டு என்ற பின்னுருபும் 'பொருட்டு' என்ற சார்புப் பொருளில் பயன்பத்தப்படும் *மாட்டை* என்ற பின்னுருபும், 'தடவைகள், நீண்டநேரமாக' எனப் பொருள்படும் *மாண்* என்ற பின்னுருபும், 'அளவிற்கு, அதற்காக' என்ற காலஞ்சார் எல்லைப் பொருளில் பயன்படுத்தப்படும்

மாத்திரம் என்ற பின்னுருபும் காலஞ்சார் எல்லைப் பொருளில் பயன்படுத்தப்படும் *மாத்திரை* என்ற பின்னுருபும் 'மேல்' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் மிசை, மீமிசை என்ற பின்னுருபும் தற்காலத் தமிழ் பயன்படுத்தப்படவில்லை.

சங்ககாலத் தமிழில் 'அந்நேரம், அப்பொழுது' என்ற காலஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் பொழுது தற்காலத் தமிழிலும் அதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. அதன் மாற்றுருபான போழ்து தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை.

சங்ககாலத் தமிழில் 'மேல், மீது' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் மீது தற்காலத் தமிழிலும் அதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. சங்ககாலத் தமிழில் 'இல், மூலம், இருந்து' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் முதல் என்ற பின்னுருபு தற்கால தமிழில் 'இருந்து' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்பட்டாலும் சங்காலத் தமிழில் *முதல்* பயன்படுத்தப்படும் சூழல்கள் தற்காலத் தமிழ் *முதல்* என்பது வருவதற்கு பொருத்தமானதாக இல்லை. பின்வரும் சங்ககாலத்தமிழ் எடுத்துக்காட்டுகளில் வரும் *முதல்* என்பதற்கு இணையான தற்காலத் தமிழ் பின்னொட்டு *இல்* என்பதுதான்.

சங்ககாலத் தமிழ் எடுத்துக்காட்டு	**இணையான தற்காலத் தமிழ் எடுத்துக்காட்டு**
மலைமுதல் ஆறு (அக.119:20)	மலையில் தொடங்கும் ஆறு
குடதிசை மாய்ந்து குணமுதல் தோன்றி (புற.386:21, 24)	மேற்கில் அடைந்து கிழக்கில் தொடங்கி

சங்காலத்தமிழில் 'அடுத்த, வரிசையில், முறை' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *முறை* என்ற பின்னுருபையும் தற்காலத் தமிழில் அதே சூழலில் பயன்படுத்த இயலாது.

சங்காலத் தமிழில் 'முன்' என்ற இடஞ்சார் பொருளில் பயன்படுத்தப்படும் முன் என்ற பின்னுருபு தற்காலத் தமிழில் அதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இது போன்று சங்ககாலத் தமிழில் 'முன்' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *முன்னர்* என்ற பின்னுருபும் தற்காலத் தமிழில் அதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறே சங்ககாலத் தமிழில் 'மேல்' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *மேல்* என்ற பின்னுருபும் தற்காலத் தமிழில் அதே பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறே சங்காலத் தமிழில் 'மேலிருந்து' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *மேலிருந்து* என்ற பின்னுருபு அதே பொருளில் தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது.

சங்கத்தமிழில் 'நோக்கி, கூட, உடன்' என்ற திசைப் பொருளில் பயன்படுத்தப்படும் *வயம்* என்ற பின்னுருபும் செயப்படுபொருள், காரணப்பொருள், கொடைப் பொருள், இடஞ்சார் இடப்பொருள், திசைப்பொருள், நீங்கல்பொருள் என்ற பொருள்களில் பயன்படுத்தப்படும் *வயின்* என்ற பின்னொட்டும் 'இல், மேல்' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *வாய்* என்ற பின்னுருபும் 'உள்ளே' என்ற பொருளில் பயன்படுத்தப்படும் *வியல்* என்ற பின்னுருபும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படவில்லை.

சங்ககாலத் தமிழில் 'எல்லை' என்ற இடஞ்சார் இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *வரை* என்ற பின்னுருபும் 'இல்,வழியாக' என்ற இடப்பொருளில் பயன்படுத்தப்படும் *வழி* என்ற பின்னுருபும் தற்காலத் தமிழில் அதே பொருட்களில் பயன்படுத்தப்படுகின்றன.

சங்காலத் தமிழில் விளி வேற்றுமைக்கு வேண்டி பெயர்கள் திரிபுறுவதற்கும் அல்லது பிறழ்வதற்கும் தற்காலத் தமிழில் விளி வேற்றுமைக்கு வேண்டி பெயர்கள் திரிபுறுவதற்கும் இடையில் கூறத்தக்க வேறுபாடுகள் உள்ளன. சங்கத்தமிழில் மாற்றமில்லாமல் வரும் விளிவேற்றுமை வடிவங்கள், *ஏ* ஏற்றுவரும் விளிவேற்றுமை வடிவங்கள், *ஓ* ஏற்று வரும் விளிவேற்றுமை வடிவுகள், இறுதி உயிர்-மெய்யிலிருந்து மெய் குறைய வரும் விளிவேற்றுமை வடிவங்கள் (*மார்பன்* என்பது *மார்ப* எனக் குறுகுவது), இறுதி அசையின் உயிர் நீட்சியடையும் விளிவேற்றுமை வடிவங்கள், *ஆய்* என்பது *ஓய்* என மாறும் போன்ற விளிவேற்றுமை வடிவங்கள் என பல வகை விளிவேற்றுமை வடிவங்கள் வழக்கில் உள்ளன.

சங்கலகாலத் தமிழைப் போன்று தற்காலத் தமிழில் விளிவேற்றுமை வடிவு பின்வருமாறு மாற்றமின்றி வரும். இசையோட்ட மாற்றம் அல்லது ஒலி அழுத்தம் விளிவேற்றுமைப் பொருளைத் தரும்.

எ.கா.

இராமன்! கண்ணன்!

அன் என்பதில் இறுதியுறும் பெயர்கள் ஆ என மாற்றமடைந்து விளி வேற்றுமைப் பொருளைத் தருவதுண்டு. சங்ககாலத் தமிழில் இச்சூழலில் இறுதி மெய் கெட உயிர் நீட்சியுறாது வருவதைப் பார்த்தோம் (எ.கா. மார்பன் > மார்ப).

-அன் > -ஆ

இராமன் > இராமா, கண்ணன் > கண்ணா,

சங்ககாலத் தமிழைப் போன்று ஏற்றுவரும் விளிவேற்றுமை வடிவுகளும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன.

கோ > கோவே!, கிளி > கிளியே!, பூ > பூவே!, தீ > தீயே!

இறுதி உயிர் இ நீட்சியுற அமையும் விளி வேற்றுமைகளும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன.

இ > ஈ

தோழி > தோழீ!, தம்பி > தம்பீ

5.4.7. கூட்டுப்பெயர்கள்

5.4.7.1. சங்காலத்தமிழில் கூட்டுப் பெயர்கள்

தற்கால மொழியியலாரின் கலைச் சொல்லாக "கூட்டு" என்பது பிரித்துப் பொருள்கொள்ள இயலாத மற்றும் அதன் முழுப்பொருள் (கூட்டுப்பொருள்) அதன் தனித்தனியான பாகங்களின் (தனித்தனி பெயர்களின்) பொருளாக இராது.

தற்போதைய ஆய்வு "கூட்டுப் பெயர்" என்பதற்கும் "பெயர்த்தொடர்" என்பதற்கும் அமைப்பு அடிப்படையில் வேறுபாடு செய்கின்றது. கூட்டுப் பெயர்கள் யாவும் பகுதிகளால் உருவாக்கப்பட்டவை; ஆனால் பெயர்த்தொடர்கள் குறைந்தது எச்சமாக இருக்கிற ஓர் உறுப்பினரைக் கொண்டிருக்கும். கூட்டுபெயர்கள் பெயர்கள் போன்றிருக்கும் எனவே அவைகள் திரிபுறும். அதாவது கூட்டுப்பெயரில் இறுதி உறுப்பினரான கூட்டின் தலைமைப் பெயர் திரிபுறும்.

எ.கா.

கூட்டுகள்

புகர் முக வேழம் ‘சிறு பொட்டுகள் உள்ள யானை’ (அக.12:11)

இங்கு இதன் உறுப்பினர்கள் (புகர் ‘பொட்டு’; வேழம் ‘யானை’) ஒன்றும் எச்சவடிவில் இல்லை.

அணத்து க் கை ‘யானையின் துதிக்கை’ (பரி.20:105)

[அணத்த்(உ) என்பது *அணம் < அண்ணம் ‘வாயின் மோட்டுவளை’ என்பதன் பிறழ்வுற்ற பகுதி; கை]

பகுத்தூண் ‘பங்கிடப்பட்ட உணவு’ (பதி.38:15)

[பகுத்து (இறந்தகாலப் பகுதி) < பகு ‘பிரி/பாகம்வை’]

பெயர்த்தொடர்கள்

நிண்டு அகன்ற கண்ணால்

[நீண்டு (வினையெச்சம்) நீள்; அகன்ற (பெயரெச்சம் < அகல் ‘விரி’; கண்]

‘நீண்ட விரிந்த கண்கள் கொண்ட பெண்’

ஆன்று அவிந்து அடங்கிய செயிர் தீர் செம்மால் (பதி.37:5)

‘அடக்கமான, மனநிறைவுள்ள, தாழ்மையான குற்றமற்ற பெருமகனே’

கூட்டு என்பதன் (தமிழ்) மரபிலக்கணக் கலைச் சொல் “தொகை” என்பதாகும். மேற்கத்திய இலக்கண மரபுப்படி ஆகுபெயர் அடிப்படையில் அமையும் அன்மொழித் தொகையை மட்டும் கூட்டுப் பெயர் என்று கூறவியலும். அன்மொழித்தொகையை சமஸ்கிருத இலக்கணத்தில் பகுவ்ரீஹி என்பர்.

கமில் சுவலபிள் (Zelebil 1967:103) பின்வரும் வாதத்தை முன்வைக்கின்றார்: மரபிலக்கணங்களில் கூட்டுகளின் வகைப்பாடு வடிவமைப்பு மற்றும் பொருண்மையியல் காரணிகளின் கலவை. தொல்காப்பியம் ஆறு வகை கூட்டுக்களைத் தருகின்றது:

வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை. நாம் *பணைத் தோள்* என்ற தொடரை எடுத்துக்கொள்வோம். மரபிலக்கணங்களின் அடிப்படையில் இது உவமைத் தொகையாகும்; அதாவது ஒப்பீட்டை வெளிப்படுத்தும் ஒருவகை கூட்டு. தற்கால மொழியியலார் இது கூட்டு அல்ல என்று நினைத்தனர். முதலில் இந்த தொடரைப் பிரிக்க இயலும்: *பணை மென் தோள்*. இரண்டாவது புதிய பொருள் உருவாக்கப்படவில்லை. இத்தொடரின் பொருள் அதன் இரண்டு பாகங்களின் மொத்தமாகும். சோதனையால் கண்டறியும் புணர்ச்சி மாற்றங்கள் இல்லை *தோள்* என்பதன் *த்* நீட்சியுறவது கூட்டையும் தொடரையும் வேறுபடுத்தும் புணர்ச்சி அல்ல. அவை தொடர்களிலும் கூட்டு போன்ற அலகுகளிலும் சமமாக வரும். மாறாக *புன்கண்* என்பது கூட்டாகும்; ஏனென்றால் அது சுதந்திரமான வடிவாகச் செயல்படுகின்றது. அதைப் பிரிக்க இயலாது. *புன் கடுங் கண்* சாத்தியம் இல்லை. ஆனால் *கடுங்கண்* என்ற தொடரைப் பிரிக்கவியலும். *புன்கண்* என்பது ஒரு கூட்டாக புதிய பொருளைப் பெற்றுள்ளது; இது அதன் இரு கூறுகளின் பொருள்களின் மொத்ததிற்குச் சமமானதல்ல.

கமில் சுவலபிள் (1967:40, 103, 104) தமிழில் "கூட்டுப் பெயர்" என்ற வகைப்பாடு பற்றி தற்கால மொழியியலாரின் தடுமாற்றம் பற்றி விரிவாக விளக்குகிறார். அவர் பின்வருமாறு கூறுகிறார்: பிளாக் மற்றும் டாகர் கூற்றுப்படி கூட்டுகளுக்கும் தொடர்களுக்கும் இடையிலான வேறுபாட்டை நிறுவ வடிவமைப்பு அடிப்படையிலான பண்புக்கூறுகளைக் கண்டுபிடிக்க இயலவில்லை என்றால் அம்மொழியில் தொடர்கள் தான் உள்ளன; கூட்டுகள் இல்லை எனலாம். தமிழில் (குறிப்பாக பழந் தமிழில்) தொடர்கள் பெரும்பாலும் பகுதிகளின் (stems) கட்டுமானங்களாகும் (constructions)

என்பதால் தொடர்களுக்கும் கூட்டுக்களுக்கும் இடையில் தீர்மானமான எல்லையை வரைவது மிகவும் கடினம்.

தமிழ் மரபுப்படி *பணைத்தோள்* மட்டுமன்றி *பணை மென் தோள்* என்பவைகளும் "கூட்டுகள்"-ஆகக் கருதப்படுகின்றன. மரபிலக்கண உரையாசிரியர் ஒருவர் கூட்டிற்கு இதனை ஒக்கும் எடுத்துக்காட்டைத் தருகின்றார்: *மழை வண் கை* (பார்க்க: தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு சேனாவரையர் உரை, விதி 414).

இப்பகுதியில் கூறப்படும் கூட்டுப் பெயர்களைப் பற்றிய விளக்கம் மரபு அடிபடையிலானது.

5.4.7.1.1. கூட்டுப்பெயராகம் ஆக்கம்

கூட்டுப்பெயர்களின் உறுப்பினர்கள் வினைப் பகுதிகள், பெயரடைகள் மற்றும் பெயர்கள் (பெயரடைப் பெயர்கள், வினையாலணையும் பெயர்கள் அல்லது தொழிற்பெயர்கள் போன்ற ஆக்கப் பெயர்கள் மற்றும் ஆக்கப்படாத பெயர்கள்) ஆகும். கூட்டுப் பெயரடையாக்கத்தின் ஒரே கட்டுப்பாடு கூட்டுப் பெயரின் இறுதி உறுப்பினர் பெயராக (ஆக்கபடாத அல்லது ஆக்கப்பட்ட பெயராக) இருக்கவேண்டும் மற்றும் அது கூட்டுப்பெயரின் தலைமைப் பெயராக அமையும்.

செம்மொழித் தமிழில் கூட்டுப்பெயரின் நீளம் அதாவது கூட்டுபெயரை ஆக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறையற்றது ஆகும். சங்க இலக்கியங்களின் தொகுப்பில் காணப்படும் நீண்ட திரிபுறாத கூட்டுப்பெயருக்குப் பத்து உறுப்பினர்கள் உண்டு: *மாந் தளிர் மேனி நெடு மென் பணை த் தோள் குறுந் தொடி மளிர்* 'இளம் மூங்கீல் போன்ற நீண்ட மற்றும் மென்மையான கைகளும் சிறிய வளைகளும் கொண்ட மாந்தளிர் நிற மேனி உள்ள பெண்கள்' (பரி.8:38). திரிபுறாத கூட்டுப் பெயர் என்பது கூட்டு பகுதிகளால் ஆனது மற்றும் தலைமைப் பெயர் இலக்கண வேற்றுமைக்காக

அடையாளப்படுத்தப்படாதது. வரையறுக்கப்படாத நீளமாக இருந்தாலும் இவ்வகையிலான கூட்டின் அமைப்புசார் வேறுபாடு அக்கூட்டிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும். ஆக்கப்படாத பெயர்கள் மற்றும் ஆக்கப்பட்ட பெயர்கள் என்ற இருவகைப் பெயர்கள் தரப்படுகையில் ஒன்று கூட்டின் இறுதி உறுப்பினராக இருக்கும்; கூட்டுப்பெயர்கள் கொண்டிருக்கும் அமைப்பொழுங்குகளின் எண்ணிக்கையை வருவதுரைக்கும் வாய்ப்பாடு $2(4^{n-1})$; இதில் n என்பது கூட்டை உருவாக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகும்.

எடுத்துக்காட்டாக கூட்டுப்பெயர் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்தால் இது பின்வரும் எட்டு அமைப்பொழுங்குகளில் எதாவது ஒன்றைக் கொண்டிருக்கலாம்.

(1)ஆக்கப்படாத பெயர் + ஆக்கப்படாத பெயர்

கழி ப் பூ ‘உப்பங்கழியில் உள்ள பூக்கள்’ (அக.40:1)

(2)பெயரடை+ஆக்கப்படாத பெயர்

வான் பிசிர் ‘நீர்த்துளிகளின் வெண் தெளிப்பு’ (பதி.11:1)

(3)ஆக்கப்பட்ட பெயர்+ஆக்கப்படாத பெயர்

பெயல் மழை ‘பெய்யும் மழை’ (குறு.174:1)

(4)வினைப் பகுதி + ஆக்கபடாத பெயர்

மீ கை ‘உயர்த்தப்பட்ட கை(கள்)’ (பதி.40:12)

(5)ஆக்கப்படாத பெயர்+ஆக்கப்பட்ட பெயர்

கை பிணி ‘கைகளைப் பிடித்தல்’ (அக.32:12)

(6)பெயரடை + ஆகப்பட்ட பெயர்

தீந் தொடை ‘இனிமையான தொடை (பதி.66:1)

(7)ஆக்கப்பட்ட பெயர் + ஆக்கப்பட்ட பெயர்

பரிசிலர் வெறுக்கை 'பரிசிலரின் செல்வம்' (பதி.15:21)

(8)வினைப் பகுதி + ஆக்கப்பட்ட பெயர்

விரி சுடர் 'பரவும் கதிர்கள்' (பரி.19:100)

இந்நேர்வில் வாய்ப்பாடு $2(4^{n-1})$ ஆகும்; இதில் n = 2; இது $[2(4^{2-1})]$ 8-ஐத் தரும். மூன்று உறுப்பினர்கள் உள்ள கூட்டுகளின் அமைபொழுங்கு $[(2(4^{3-1})]$ 32 ஆகும்; நான்கு உறுப்பினர்கள் உள்ள கூட்டுகளின் அமைப்பொழுங்கு $[(2(4^{4-1})]$ 128 ஆகும்; ஐந்து உறுப்பினர்கள் உள்ள கூட்டுகளின் அமைபொழுங்கு $[(2(4^{5-1})]$ 512 ஆகும்.

5.4.7.1.2. கூட்டுப்பெயரின் பொருள்கோள்

கூட்டுப்பெயரின் உறுப்பினர்களுக்கு இடையே உள்ள பொருண்மை உறவுகளை இலக்கண விதிகள் கொண்டு எளிதில் கண்டுபிடிக்க/நிர்ணயிக்க இயலாது. தொடரியல் அடிப்படையில் உறுப்பினர்கள் அவற்றின் வலதுபக்கம் மிக அண்மையிலுள்ள பெயரை பண்படை செய்யும்; இது கட்டாயமல்ல, சாத்தியம் தான். எடுத்துக்காட்டாக ஏழு உறுப்பினர்கள் கொண்ட கூட்டுப்பெயரான *பசை கொல் மெல் விரல் பெரும் தோள் புலைத்தி* 'அகன்ற தோள்களும் (துணியிலுள்ள) கஞ்சிப்பசையைத் தேய்க்கும் மெல்லிய விரல்களும் கொண்ட துணி வெளுக்கும் பெண்' என்பதில் முதல் மூன்று உறுப்பினர்கள் *பசை* 'கஞ்சிப்பசை', *கொல்* 'தேய்', *மெல்* 'மெல்லிய' என்பன அவற்றின் மிக அண்மையிலுள்ள பெயரான *விரல்* என்பதை அடை செய்கின்றன. ஐந்தாவது உறுப்பினரான *தோள்* என்பதை அதன் மிக அண்மையிலுள்ள பெயரான *தோள்* என்பதை அடை செய்கின்றது. நான்காவது உறுப்பினர் விரல் என்பதும் ஆறாவது உறுப்பினர் தோள் என்பதும் சேர்ந்து அவற்றின் வலதுபக்கம் உள்ள இறுதிப் பெயரான புலத்தி என்பதை அடை செய்கின்றன.

மாறாக *இ-ப்-பண்பு-இல்-தாய்* (புற.336:12) என்ற கூட்டுப்பெயர் '(நற்)பண்புகள் இல்லாத இந்தத் தாய்' என்பதில் முதல் உறுப்பினரான *இ* 'இந்த' என்பது அதன் மிக அண்மையில் வரும் பண்பு என்பதை அடை செய்யாது. *இ* 'இந்த', *பண்பு* '(நற்)பண்புகள்', *இல்* 'இல்லாத' என்ற முதல் மூன்று உறுப்பினர்கள் தலைமைப் பெயரான *தாய்* என்பதை அடை செய்யும். முழு அமைப்பின் பொருள் '(நற்)பண்புகள் இல்லாத இந்தத் தாய்' என்பதாகும். மற்றொரு எடுத்துக்காட்டு *பரேர் எறுழ் முழவு த் தோள்* 'பெரிய அழகான வலிமையான முரசு போன்ற தோள்கள்' (பதி.31:20) என்பதாகும். இதில் *பரேர்* 'பெரிய அழகான', *எறுழ்* 'வலிமை', *முழவு* 'ஒரு கொட்டு வாத்தியம்' என்ற எல்லா உறுப்பினர்களும் *தோள்* என்ற தலைமைப் பெயருக்கு முன்னர் வந்து அதை அடைசெய்கின்றன. *முழவு* என்பது ஒரு பெயராக இருந்தாலும் அதன் முன்னர் வரும் உறுப்பினர்கள் அதை அடைசெய்வதில்லை.

கூட்டுப் பெயர்களின் சரியான பொருள்கோளுக்கு நாம் இலக்கிய மரபுகளையோ சூழல்களையோ சாரவேண்டும். எடுத்துக்காட்டாக *பேய் மகள்* (பதி.22:37) என்ற கூட்டுப்பெயரில் முதல் உறுப்பினரான *பேய்* என்பது ஒரு குழுவைக் (பேய்களின் ஒரு குழுவை) குறிப்பிடும்; *மகள்* என்பது அக்குழுவை சாரும். ஆனால் *வளை மகள்* 'வளையல்கள் கொண்ட பெண்' (பதி.23:23) என்பது அமைப்பு அடிப்படையில் *பேய் மகள்* போன்றிருந்தாலும் முதல் உறுப்பினரான *வளை* என்பது இரண்டாவது அல்லது தலைமைப் பெயரான *மகள்* 'பெண்' அணிந்திருக்கும் *வளை*-ஐ குறிப்பிடும். மற்றொரு கூட்டுப்பெயரான *வளை தலை* 'கீழ்நோக்கி வளைந்த தலை' என்பதில் *வளை* என்பது கையில் அணியும் வளையலைக் குறிப்பிடாது 'குனி' என்பதைக் குறிப்பிடும்.

5.4.7.2. கூட்டுப்பெயர்களின் வரலாற்று மாற்றம்

இரண்டாவது இயலில் இதுவரை தமிழ்க் கூட்டுபெயர்கள் குறித்து நடைபெற்ற ஆய்வுகள் பற்றி பார்த்தோம். கூட்டுபெயர்களை மரபிலக்கணத்தாரும் தற்கால மொழியியலாரும் எவ்வாறு ஆய்கின்றனர் என்று பார்த்தோம் (Vijayavenugopal, 1984 சுப்பையா 1984, Maramalai 1984, Rajendran 2004, லெட்சுமணன் 2009). மரபிலக்கணங்கள் பெயர்க் கூட்டுகளைத் தொகை என்று பெயரிட்டு அழைத்து அவ்வற்றின் மூல வடிவ அடிபடையில் அவற்றை வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத் தொகை (அல்லது வினையின் தொகை), உம்மைத் தொகை, அன்மொழித் தொகை எனப் பிரித்து விளக்கம் தருகின்றன. விஜய வேணுகோபால் கூட்டுப்பெயர்களின் ஆக்கத்திற்கு மாற்றிலக்கண அணுகு முறையில் விடை காண்கின்றார். சுப்பையா, மறைமலை மற்றும் லெட்சுமண் ஆகியோர் கூட்டுப்பெயர்களை மரபிலக்கணங்கள் அடிப்படையிலேயே ஆய்கின்றனர். இராசேந்திரன் கூட்டுபெயர் தொடர்பான எல்லா ஆய்வுகளையும் முன்வைத்து கூறி லெவினின் கோட்பாடு அடிப்படையிலும் கூட்டுபெயர்களை ஆய்ந்து விளக்கம் தருகின்றார். மறைமலை நிர்வாகத்திற்குரிய பல சொற்களைச் சேகரித்து மரபிலணக் கோட்பாட்டு அடிப்படையில் அவற்றைப் பிரித்து விளக்கம் தருகின்றார்.

சங்கத்தமிழ் ஆனாலும் தற்காலத் தமிழானாலும் சொற்கள் இணைந்து கூட்டுப் பெயர்களை ஆக்குகின்றன; தலைமைச் சொல் பெயராக இருக்கவேண்டும்; அடையாக வரும் சொற்கள் பெயராகவோ பெயரடையாகவோ வினையாகவோ இருக்கலாம். சங்ககாலத் தமிழில் காணப்படும் கூட்டுப் பெயராக்கதிற்கும் தற்காலத் தமிழில் கூட்டுப்பெயராக்கத்திற்கும் ஆக்கமுறை அடிப்படையில் வேறுபாடுகள் இல்லை. சங்ககாலத்தில் உருவாக்கப்படாத பல கூட்டுப்பெயர்கள் தேவைகருதி புதிதாக உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. புதிதாக உருவாக்கப்பட்ட சொற்களின்

பட்டியலும் வகைபாடும் உருவாக்க முறைகளும் மறைமலையால் விளக்கப்பட்டுள்ளது. லெட்சுமணன் சங்ககாலச் கூட்டுசொற்களைப் பட்டியலிட்டு வகைபடுத்தி ஆய்கின்றார். கூட்டுப்பெயர்களின் வரலாற்றுமாற்றமாக கூட்டுப்பெயர்களின் விளக்கத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்களையும் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுப்பெயர்களையும் தான் கூறவேண்டும். கூட்டுப்பெயராக்கத்தின் விளக்கத்தின் பல பரிமாணங்கள் இரண்டாவது இயலில் விளக்கப்பட்டுள்ளன. புதிதாக உருவாக்கப்படும் கூட்டுபெயர்களின் பட்டியல் ஒரு முடிவில்லாத ஒன்று.

5.4.8. பெயரடைப் பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்கள்

5.4.8.1. சங்ககாலத் தமிழில் பெயரடைப் பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்கள்

பெயர்ப் பகுதிகள் (nominative stems) (அதாவது பெயரடைப் பகுதி, தொழிற்பெயர்ப் பகுதி, வினையாலணையும் பெயர்ப் பகுதி, தனிநிலைப் பெயர்ப் பகுதி, திரிபுப் பகுதி) என்பன இட-எண்-பால் ஒட்டை (விகுதியை) ஏற்று பெயராக்கம் செய்யும்; இவ்வாக்க பெயர்களை நாம் இங்கு 'பெயரெச்சப் பெயர்கள்' (adjectival nouns) என்கின்றோம். அவை அவற்றிற்குரிய பெயரின் "முற்று" அல்லது "முழுமை"-ஐ நிலையைக் குறிப்பிடும். அவை குறிப்பிட்ட காலத்தைக் காட்டாது.

பெயரெச்சப் பெயரடை என்ற செயற்பாங்கு பெயர்களின் (தனிநிலைப் பெயர்களின்) மற்றும் பெயரடைகளின் திரிபாக்கம் (conjucation) என்று சிலரால் விளக்கப்பட்டுள்ளது. இத்திரிப்பாக்கத்தினால் விளைந்த பெயர் வடிவங்களை "மாற்றுப்பெயராக்கம் செய்யப்பட்ட பெயர்கள்" (pronominalized nouns), "மூவிடவிகுதி ஒட்டப்பட்ட பெயர்கள்" (personal nouns) மற்றும் "மூவிடவிகுதி ஒட்டப்பட்ட

பெயரடைகள்” (personal adjectives) என்று குறிப்பிடப்படும் (Zvelebil, 1967:15). அருணாச்சலம் (Arunachalam:329) இவற்றை “குறிப்பு வினைகள்” (appellative verbs) என்கிறார்.

பெயரடைப் பெயர்களை ‘‘X Y-ஐக் கொண்டிரு’ அல்லது ‘Y குணம் கொண்ட X’ என மொழிபெயர்க்கலாம்; இங்கு X என்பது இட-எண்-பால் விகுதியால் குறிப்பிடப்படும்; Y என்பது பெயரடைப் பெயருக்கு அடியாக அமையும் பெயர்ப் பகுதியாகும். பெயரடைப் பெயரை உட்படுத்தும் பெயர்ப் பகுதி இடம் அல்லது புவியியல் திசையைக்குறிப்பிட்டால் பெயரடைப் பெயர் ‘X என்பது Y-ஐச் சார்ந்தது’ அல்லது ‘X என்பது Y-இல் இருக்கின்றது’ எனப் புரிந்துகொள்ளப்படும்.

பெயரடைப் பெயர்களின் எதிர்மறைப் பொருள் பெரும்பான்மையும் பெயர்வடிவின் எதிர்மறை அடையால் வெளிப்படுத்தப்படும்; இதிலிருந்து பெயரெச்சப் பெயர்கள் ஆக்கப்படுகின்றன. இருப்பினும். மிக அரிதாக *ஆ(த்)* பகுதியுடன் சேர்க்கப்பட்டு அதைத் தொடர்ந்து இட-எண்-பால் விகுதி சேர்க்கப்பட்டு எதிர்மறைப் பெயரடைப் பெயர் விளையும். கீழே எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன.

5.4.8.1.1. பெயரடைப் பெயர்களின் ஆக்கம்

பெயரடைப் பெயர்கள் பின்னொட்டாக்கதால் (suffixation) ஆக்கப்படும். இட-எண்-பால் விகுதி பெயர்ப் பகுதியுடன் சேர்க்கப்படும். *இ, (ஆ)த்* அல்லது உடன்படுத்தி (ஞ், ந், ய் அல்லது வ்) தெவைப்படும் போதெல்லாம் பகுதிக்கும் இட-எண்-பால் விகுதிக்கும் இடையில் செருகப்படும். சில நேர்வுகளில் *ஆள், அன்* அல்லது *இன்* என்பது பகுதிக்கும் இட-எண்-பால் விகுதிக்கும் இடையில் குறுக்கீடு/இடையீடு செய்யும்.

5.4.8.1.2. பெயரடைப் பெயர்களுக்கான இட-எண்-பால் விகுதிகள்

பெயரடைப் பெயர்களுக்கான இட-எண்-பால் விகுதிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

பெயரடைப் பெயர்	**இட-எண்-பால் விகுதிகள்**
தன்மை ஒருமை	என், ஏன்
தன்மைப் பன்மை (உயர்வு)	அம், ஆம், ஏம்
முன்னிலை ஒருமை	அவை, ஆய், ஐ, ஓய்
முன்னிலைப் பன்மை (உயர்வு)	அவை, இர், ஈர்
படர்க்கை ஆண்பால் ஒருமை	அவன், அன், ஆன், ஓன்
படர்க்கை பெண்பால் ஒருமை	அவள், அள், ஆள், இ, ஓள்
படர்க்கை உயர்திணைப் பன்மை (உயர்வு)	அர், அவர், ஆர், ஓர்
படர்க்கை அஃறிணை ஒருமை	அஃது, அது, அதை, (த்)து
படர்க்கை அஃறிணைப் பன்மை	அ, அவை

5.4.8.1.3 பெயரடைப் பெயர்களின் ஆக்க நுட்பங்கள்

பெயரடைப் பெயர்கள் பின்வரும் பொதுவான ஆக்க நுட்பத்தைப் பயன்படுத்தி ஆக்கப்படுகின்றன: பெயர்ப் பகுதி + இட-எண்-பால் விகுதி. பின்வரும் அட்டவணை பெயரடைப் பெயராக்கத்தின் வேறுபட்ட ஆக்க நெறிமுறைகளையும் அவைப் பயன்படுத்தும் இட-எண்-பால் பின்னொட்டுக்களையும், ஒழுங்கமைப்புகளையும் எடுத்துக்காட்டுகளையும் அவை வரும் இடங்களையும் பட்டியலிட்டுக் காட்டுகின்றது.

இட-எண்-பால் பின்னொட்டுகள்	**ஒழுங்கமைப்பு, எடுத்துக்காட்டு, வரும் இடம்**
அ	திரிபுறாப் பகுதி + அ

(படர்க்கை அஃறிணைப் பன்மை)	உறு *கால* கான் (பரி.20:9-10) [கால < கால்+அ; உறு 'அதிக'; கால் 'காற்று'; காண் 'காடு'] 'அதிக காற்றுள்ளன காடு'
"	திரிபுறாப் பகுதி + உடன்படுத்தி + அ கண்ணினும் *கதவ* நின் முலையே (ஐங்.316:4) [கதவ <கத+வ்+அ; கத 'உறுதி'] 'உன்னுடைய முலைகள் உன்னுடைய கண்களைக் காட்டிலும் உறுதியானவை'
	வருடை மான் *குழவிய* வள மலை (கலி.43:14) [குளவி 'குட்டி'] 'வருடைமானின் குட்டிகள் உள்ளன வளமான மலை(கள்)
"	*எனவ* கேண்மதி (அக.379:5) [என 'என்னுடைய' < என் + அ வேற்றுமை உருபு; எனவ < என+ உடன்படுத்தி வ்+அ] 'என்னுடைய எண்ணங்களைக் கேள்'
"	திரிபுப் பகுதி + அ நில் தேய்ந்து உலறிய *மரத்த*...காடு (அக..1:11,19) [மரத்த < மரத்த்+அ; மரத்த் என்பது மரம் என்பதன் திரிபுப் பகுதி] 'குறைந்த நிழல் கொண்ட உலர்ந்த மரங்கள் உள்ளன காடுகள்'
"	நச்சினார் ஈபவை...*நும்மவே* (பரி.20:85) நும்ம < நும்+அ; நும் என்பது நீர்/நீயிர் என்பதன் திரிபுப் பகுதி; *நுன் 'உன்னுடைய' என்பதன் பன்மை] 'உன்னை விருப்பியவர் தருபவை எல்லாம் உன்னுடையன'
"	திரிபுறாப் பகுதி + அன் +அ வில்லோன் *காலன* கழலே (குறு.7:1)

	[காலன <கால்+அன்+அ] ‘வீரனின் கழல்கள் வில்லாளியின் கால்களில் இருந்தன’
	பெயரடைப் பகுதி + இ + உடன்படுத்தி+அ *இனிய* செய்து (கலி.53:12) [இனிய < இன்+இ+ய் (உப)+அ] ‘நல்லன செய்து’
	திரிபுப் பகுதி+இ+உடன்படுத்தி + அ மடை மாண் செப்பில் *தமிய* வைகிய பெய்யா ப் பூ (குறு.9:2-3) [தம் என்பது தாம் என்பதம் திரிபுப் பகுதி] ‘அழகான விளிப்புள்ள செப்பில் தாமே இருந்தன சூடாத மலர்கள்
	திரிபுறா பகுதி + இன் + அ பணை *எருத்தின* …பல பகடு (புற.387:7-11) [எருத்தின < எருத்து+இன்+அ; எருத்து ‘கழுத்தின் பின்புறம், பிடரி’] ‘விரிந்த பிடரி உள்ளன பல எருதுகள்’
	பெயரடைப் பகுதி + ஆத்+அன்+அ பெரும நீ எமக்கு *இன்னாதன* பல செய்யினும் நின் இன்று அமைதல் வல்லாம் (குறு.309:6-8) [இன் ‘இனிய’; இன்னாதன < இன் + ஆத்+அன்+அ (எதிர்மறை பெயரடைப் பெயர்)] ‘ஐயா, நீ எங்களுக்கு இனிமையல்லாதவை பல செய்தாலும் நீ இல்லாமல் நாங்கள் அமைதியாக இருக்க இயலாது’

இன்னாதன என்பதை பெயரடைப் பெயராகக் கருதாமல் எதிர்மறை வினையாலணையும் பெயராகக் கருத இயலும். எதிர்மறையைக் குறிப்பிடும் ஆத் என்ற பெரும்பான்மையும் பெயரடை பகுதியில் சேர்க்கப்படுவதில்லை. *பெருத்த* மற்றும் இது போன்ற

பெயரடைகள் போன்று *இன்னாதன* செம்மொழித் தமிழில் பெயரடை என்பது வினைப் பண்பை வெளிப்படுத்தும் என்ற கருத்தை ஆதரிக்கும்.

அது (படர்க்கை அஃறிணை ஒருமை)	திரிபுறாப் பகுதி + அது *யாணது* பசலை (நற்.50:7) [யாணது < யாண்+அது; யாண் 'அழகு'] 'பசலை அழகானது'
"	*மடவது* அம்ம மணி நிற எழிலி (நற்.316:1) [மடவது < மடவ + அது; மடவ 'ஏமாறக்கூடிய, வெகுளி, முட்டாள்'] இரத்தின நிற மேகம் நிச்சயம் சூதறியாதது'
	திரிபுறாத பகுதி + இன்+அது கூர் உகிர் மாண்ட *குளம்பினது* ...குதிரை (கலி.96:25-26) [குளம்பினது < குளம்பு +இன்+அது] 'குதிரை கூர்மையான முழுமையாக வளர்ந்த நகங்களைக் கொண்ட குளம்பை உடையது'

உண்மையில் *அஃது* என்பது *அது* என்பதன் மாற்றுரு ஆகும். கூடுதலான எழுத்தான *ஃ* அது வரும் இவ்வரியில் சீராகச் செயல்படச் செய்கின்றது; அது கொண்டு இது சாத்தியமல்ல. உரையாசிரியர்கள் இதை எழுத்து-ப்-பேறு அளபெடை அல்லது விரித்தல் விகாரம் என்று குறிப்பிடுவர்.

அதை (படர்க்கை அஃறிணை ஒருமை)	திரிபுறா பகுதி + உடன்படுத்தி + அதை *கையதை* ... தொடி கலி.(85:6-7) [கையதை <கை + அதை] '(உன்) கையில் உள்ளது தொடி'
அம் (தன்மைப் பன்மை/உயர்வுப்	திரிபுறா பகுதி+அம் யாமே...இருதலை ப் புள்ளின் ஓர் *உயிரம்மே* (அக.12:4-5)

பன்மை)	[உயிரம் < உயிர் + அம்] ‘இரு தலைகள் கொண்ட பறவை போல் ஓர் உயிர் உள்ள நாம் (மற்றும் இரு உடல்கள்)
	பலம் என்று இகழ்தல் ஓம்புமின் (புற.301:11) [பலம் <பல +அம்] நாம் பலவாய் உள்ளோம் (அவன் ஒருவன்) என்று எண்ணி (அவனை) வெறுப்பதை நிறுத்து
அர் (படர்க்கை பன்மை/ உயர்வுப் பன்மை)	திரிபுறாப் பகுதி + அர் வால் நரை க் *கூந்தலர்* நன்னர் நலத்தர் தொன் முது பெண்டிர் (மது:408-409 [கூந்தலர் <கூந்தல்+அர்] ‘மிக முதுமையான பெண்டிர் நல்லவர் அழகுப் பொலிவுள்ளவர் மற்றும் நீண்ட நரைகூந்தல் உடையவர்’
	சிறார் (அக.107:17) [சிறார் <சிறு+அர்] ‘குழந்தைகள்’
	திரிபுப் பகுதி + அர் வால் நரை க் கூந்தலர் நன்னர் *நலத்தர்* தொன் முது பெண்டிர் (மது:408-409) [நலத்தர் < நலத்த்+அர்; நலத்த் என்பது நலம் என்பதன் திரிபுப் பகுதி] ‘மிக முதுமையான பெண்டிர் நீண்ட நரைகூந்தல் உடையவர் நல்லவர் அழகுப் பொலிவுள்ளவர்’
	மொழி பெயர் *தேத்தர்* (குறு.11:7) [தேத்தர் <தேத்த்+அர்; தேத்த் என்பது தேம் ‘தேசம்’ என்பதன் திரிபுப் பகுதி]

	‘மொழி வேறுபட்டிருக்கின்ற தேசத்தைச் சார்ந்தவர்’
	திரிபுறாப் பகுதி + உடன்படுத்தி + அர் *வலைஞர்* குடி (பெரு:274) [வலைஞர் < வலை+ஞ்+அர்] ‘மீன்பிடிக்கும் வலைகள் உள்ளவர்களின் குடி’
	வன் கை *வினைநர் (* பதி.62:16) வினைநர் < வினை+ந்+அர் ‘வன்மையான கையால் செயல்புரிபவர்’
	*நகைவர்; பகைவர் (*புற.398:9) [நகைவர் < நகை+வ்+அர்; பகைவர் <பகை+வ்+அர் ‘நட்பு உள்ளவர்; பகை உள்ளவர்’
	திரிபுறாப் பகுதி+இ+உடன்படுத்தி+அர் *நோன்பியர் (*நற்ற்.22:6) [நோன்பியர் < நோன்பு+இ+ய்+அர்] ‘நோன்பு செய்பவர்’
	மணி திகழ் *நுதலியர் (*பரி.10:77) [நுதலியர் <நுதல்+இ+அர்; நுதல் ‘நெற்றி’] ‘இரத்தினம் திளங்குகின்ற நெற்றி உள்ளவர்’
	தொழிற்பெயர் பகுதி+உடன்படுத்தி+அர் அருப்பம்…அழிந்த மன க் *கோட்டையர் (*பரி.10:57) [கோட்டையர் < கோடு +ஐ (தொழிற்பெயராகப் பின்னொட்டு)+ய் (உடன்படுத்தி)+அர்; கோடு (வினை) ‘வளை’; கோட்டை ‘வளைவு/சூழ்ச்சி’] ‘வலிமை இழந்த மனச் சூழ்ச்சி உள்ளவர்’

இங்கு நாம் *கோட்டை* என்பதை கோடு ‘வளை’ என்ற வினையிலிருந்து ஆக்கப்பட்ட தொழிற்பெயராகக் கருதுகின்றோம். பொதுவாக *கோட்டை* என்பது அரசர்களின் கோட்டையைக் குறிக்கும்.

	திரிபுப் பகுதி + *ஆள்* + *அர்* *சாக்காட்டாளர்* கம்பலை (பதி.27:14) [சாகாட்ட்(உ) என்பது சாகாடு ‘வண்டி’ என்பதன் திரிபுப் பகுதி; சாக்காட்டாளர் <சாகாட்ட்+ஆள்+அர்] ‘வண்டியுள்ளவர்களின் ஓசை’
	திரிபுறாப் பகுதி+இன்+அர் குழை க் காதினர் (கலி.103:8) [காதினர் <காது+இன்+அர்] ‘குழைகள் அணிந்துள்ள காதுகளை உடையவர்’
	திரிபுப் பகுதி+*இன்*+*அர்* கோடு சுடு *நூற்றினர்’* (மது:401) [நூற்றினர் <நூற்ற்(உ) +இன்+அர்; நூற்ற்(உ) என்பது *நூறு* ‘பொடி’ என்பதன் திரிபுப் பகுதி] ‘சிப்பிகளைச் சுட்டு (தம் தேகத்தில் அதன்) பொடிகள் உள்ளவர்கள்’
அவர் (படர்க்கை பன்மை/உயர்வுப்பன்மை	திருபுறாப் பகுதி + *அவர்* *இல்லவர்* (அக.34:16) ‘இல்லவர் <இல்+அவர்; இல் ‘வீடு’ ‘வீட்டில் வசிப்பவர்கள்
	வினைப் பகுதி+*இன்*+*அவர்* பொய்யாடல் ஆடும் *புணர்ப்பினவர்* (பரி.11:89) புணர்ப்பினர் <புணர்ப்பு+இன்+அவர்’; புணர்ப்பு <புணர்

	(வினை) 'சேர்'+ப்பு (தொழிற்பெயராக்கப் பின்னொட்டு) 'பொய்யாக ஆடல் ஆடும் புணர்வதில் ஈடுபடுபவர்'
அவள் (படர்க்கைப் பெண்பால் ஒருமை)	பெயரடைப் பகுதி+*அவள்* *நல்லவள் (பரி.12:92)* [நல்லவள் <நல் +அவள்]

சிலர் நல்லவள் என்பதை நல்ல + அள் எனபதிலிருந்து ஆக்குவர். பின்வரும் எடுத்துக்காட்டு இவ்விதமான பகுப்பாய்வு சரியல்ல எனக்காட்டும்.

அவள் (படர்க்கைப் பெண்பால் ஒருமை)	திரிபுப் பகுதி+அவள் நின் மருங்கு சாறு கொள் *துறக்கத்தவள்* (பரி.19:5-6) [துறக்கத்தவள் <துறக்கத்து +அவள்; துறக்கத்து என்பது துறக்கம் 'சொர்க்கம்/விண்ணுலகம், விடுதலை' என்பதன் திரிபுப்பகுதி] 'உன் அருகில் இருந்துகொண்டிருக்கும் விண்ணுலகத்தைச் சார்ந்த பெண்'
அவன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	திரிபுறாப் பகுதி + *அவன்* *விறலவன்* புதலவன் தாய் (குறு.359:5-6) [விறலவன் <விறல் +அவன்; விறல் 'வெற்றி' 'வெற்றிபெற்றவனின் மகனின் தாய்'
அவிர் (முன்னிலைப் பன்மை/ உயர்வுப்பன்மை	திரிபுறாப் பகுதி + *அவிர்* வினாவன்மின் *ஊரவிர்* (கலி.147:53) [ஊரவிர் <ஊர்+அவிர்] 'ஊரச்சார்ந்த நீர் என்னிடம் கேட்காதீர்'
அவை (முன்னிலை ஒருமை)	திரிபுறாப் பகுதி + அவை ஆறிரு *தோளவை* பரி.(21:67) [தோளவை <தோள்+அவை]

	‘பன்னிரண்டு தோள்களையுடைய நீ’
	திரிபுறாப் பகுதி + உடன்படுத்தி +அவை வலம்புரி வய *நேமியவை* (பரி.15:59) (நேமியவை < நேமி+ய் (உடன்படுத்தி)+அவை; வயம் ‘வெற்றி’ ‘வலம்புரிச் சங்கும் வெற்றிபெற்ற தட்டுள்ளநீ’
	திரிபுறாப் பகுதி + இன்+அவை வய *அம்பினவை* (பரி.15:60) [அம்பினவை <அம்பு + இன்+அவை] ‘வெற்றிபெற்ற அம்புள்ள நீ’
அவை (படர்க்கை அஃறிணை பன்மை)	திரிபுறாப் பகுதி + அவை *காலவை*...செய்வுறு கிண்கிணி (கலி.85:1,2) [காலவை <கால்+அவை] ‘கால்களில் உள்ளவை நன்கு செய்யப்பட்ட கிண்கிணி’
அள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	பெயரடைப் பெயர் பகுதி+உடன்படுத்தி +அள் ஆனா ச் *சிறுமையள்* (குறி:26) [சிறுமையள் <சிறுமை+ய் (உடன்படுத்தி)+அள்; சிறுமை ‘பணிவு’ <சிறு (பெஅ) +மை (பெயராக்க பின்னொட்டு)] ‘எல்லையற்ற சிறுமையுள்ளவள்/பண்வுள்ளவள்’
	திரிபுப் பகுதி+அள் நன்னுதல் நீத்த *திலகத்தள்* (கலி.143:3) [திலகத்தள் < திலகத்த்+அள்; *திலகத்த்* என்பது *திலகம்* என்பதன் திரிபுப் பகுதி] ‘நெற்றியிலிருந்து நீங்கிய திலகத்தை உடையவள்’

இப்பெயரின் ஆக்கம் கருத்தில் கொள்ளத் தக்கதாகும். இச்சூழலில் பெண்ணின் நெற்றியில் இல்லை. பெயரடைப் பெயரான *திலகத்தள்* முழுத் தொடரிலிருந்தும் அதாவது *நன்னுதல் நீத்த திலகம்* ஆக்கப்பட்டதாகும். இது போன்ற மற்றொரு எடுத்துக்காட்டு சென்று *சேக்கல்லா ப் புள்ள...குளம்* (அக.42:8). இது உண்மையில் 'போய் தங்காத பறவைகள் உள்ள குளங்கள்' எனப் பொருள்படும். இருப்பினும் இது பின்வருமாறு பொருள்கொள்ளப்படும்: குளங்கள் வற்றிவிட்டன; ஆகையால் பறவைகள் அங்கு சென்று தங்குவதில்லை.

	திரிபுப் பகுதி + இன் + அள் திருத்தா ச் சுமட்டினள் (கலி.109:13) [சுமட்டினள் <சுமட்ட்(உ)+இன்+அள்; சுமட்ட்(உ) என்பது சுமடு 'தலைத் திண்டு' என்பதன் திரிபுப் பகுதி' 'சரியாக வைக்காத சுமட்டைக்கொண்டவள்'
அன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	திருபுறாப் பகுதி+உடன்படுத்தி+*அன்* என்றும் இர வரல் *மாலையன்* (குறி.238:239) [மாலை+ய்+அன் <மாலையன்; மாலை 'இயல்பு'] 'என்றும் (சந்திப்புக்காக) இரவில் வரும் இயல்புடையவன்'
	கொலைவன் யார் கொலோ...*வலைவன்* போலான் (புற.152:8,9) 'கொலைசெய்தவன் யார்? இவன் கொள்ளைப் பொருளுள் உள்ளவன் போல இருக்கிறான்'
	திருபுறாப் பகுதி+இன்/உடன்படுத்தி+அன் *கச்சினன் கழலினன் செச்சை கண்ணியன்* (திரு.208) [கச்சினன் <கச்சு 'ஆடை'+இன்+அன்; கழலினன் <கழல் 'வீரர் கால் வளையம்'+இன் +அன்; கண்ணியன் <கண்ணி 'தலை

	மாலை'+ய்+அன் 'அவன் கச்சு அணிந்தவன், (வீரர்தம்) கழல் அணிந்தவன், செச்சை இலைகளால் ஆன கண்ணி அணிந்தவன்.
	தொழிற்பெயர் பகுதி+*அன்* தலை நாள் *பேணலன்* (நற்.332:8) பேணலன் <பேணல்+அன்; பேணல் (தொ.பெ) <பேணு (வி) 'போற்று, பாராட்டு' +அல் (பெயராக்க பின்னொட்டு) '(சந்திக்கும்) முதல் நாளிலேயே பேணுபவன்/ பேணும் இயல்புடைவன்'

இது போன்ற பெயரடைப் பெயர்களில் தொழிற்பெயர் *அல்* என்ற பின்னொட்டு கொண்டிருக்கும். *அல்* ஒப்புரு பின்னொட்டாக எதிர்மறைப் பொருளிலும் வரும். எனவே *பேணலன்* 'பேணும் இயல்புடையவன்' என்பதன் ஒப்புரு மொழியாக (homonym) *பேணலன்* என்பது 'பேணும் இயல்பில்லாதவன்' எனப் பொருள்படும். இரண்டும் வெவ்வேறு சொற்களாகும்.

	தொழிற்பெயர்ப் பகுதி + ஆள்+அன் *நன்னராளன்* (நற்.100:12) [நன்னராளன் <நன்னர் 'நற்பண்பு'+ஆள்+அன் 'நற்பண்புள்ளவன்'
ஆது (படர்க்கை அஃறிணை ஒருமை)	திரிபுறாப் பகுதி+*ஆது* உறந்தை க் *குணாது* (அக.4:14) [குணாது <குண+ஆது; குண 'கிழக்கு' 'உறந்தையின் கிழக்கில் உள்ளது'
ஆம் (தன்மை பன்மை/உயர்வுப்	திரிபுப் பகுதி + உடன்படுத்தி + *ஆம்* *இருவாம்* இடையே (குறு.237:4)

பன்மை)	இருவாம் < இரு+வ் (உப)+ஆம் ; இருவாம் 'நாம் இருவர்' 'நம் இருவர்களுக்கு இடையே'
ஆய் (முன்னிலை ஒருமை)	திரிபுறாப் பகுதி+ஆய் *காதலாய்* (பரி.18:11) காதலாய் <காதல்+ஆய் 'காதல் செய்யும்/உள்ள நீ'
	திரிபுறாப் பகுதி+*இன்*+ஆய் தேன் நாறு *கதுப்பினாய் (கலி 40:9)* [கதுப்பினாய் <கதுப்பு +இன்+அய்] 'இனிய மணம் கமழும் கூந்தலை உடைய நீ'
ஆர் (படர்க்கை பன்மை/உயர்வுப் பன்மை	திரிபுறாப் பகுதி+ஆர் நுடங்கு நொசி நசுப்பார் (பரி.9:49) [நசுப்பார் < நசுப்பு 'இடுப்பு'+ ஆர் 'அசையும் மெல்லிய இடையுடையவர்'
	திரிபுறாப் பகுதி+*இன்*+ஆர் மருப்பு அஞ்சும் *நெஞ்சினார்* (கலி.103:69) [நெஞ்சினார் < நெஞ்சு+இன்+ஆர்] '(எருதின்) கொம்புகளைப் பயப்படும் நெஞ்சுள்ளவர்'
ஆள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	திரிபுறாப் பகுதி+ *ஆள்* ஆடு அகல் அல்குலாள் (கலி.52:16) [அல்குலாள் 'அல்குலை உடையவள்' < அல்குல் 'இடுப்பு' +ஆள்'] 'விரிந்த ஆடும் இடுப்பு உடையவள்'
	திரிபுறாப் பகுதி+இன்+ஆள் சோர்ந்து வீழ் கதுப்பினாள் (கலி. 52:12) [கதுப்பினாள் 'கூந்தலை உடையவள்' < கதுப்பு 'கூந்தல்' +இன்+ஆள்)

	‘அவிழ்ந்து விழும் கூந்தலை உடையவள்’
ஆன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	பெயரடைப் பகுதி+ஆன் *பெருமான்* பரத்தைமை (கலி.82:21) [பெருமான் ‘பெருமைக்குரியவன்’ <பெரும் ‘மேன்மையான+ஆன்] ‘பெருமையானவனின் பரத்தையிடம் உள்ள காதல்’

பெருமான் என்பது *பெருமை+ஆன்* என்பதிலிருந்து ஆக்கப்பட்டதாகக் கருதவியலும். இருப்பினும் உருபொலியனியல் கருதி இங்கு *பெருமான்* என்பது *பெரு+ம்+ஆன்* என்பதிலிருந்து ஆக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

	திரிபுறாப் பகுதி+*ஆன்* துறைவன் தம் *ஊரானே* (குறு.97:3) [ஊரான் ‘ஊரைச் சார்ந்தவன்’ < ஊர்+ஆன்] ‘துறவன் தம் ஊரில் உள்ளவன்’
	திரிபுறாப் பகுதி+*இன்*+*ஆன்* இரங்கும் *முரசினான்* (பரி.21:38) [முரசினான் ‘முரசையுடையவன்’ <முரசு+இன்+ஆன்] ‘மெல்லிய ஓசையிடும் முரசையுடையவன்’
இ (படர்க்கை பெண்பால் ஒருமை	திரிபுறாப் பகுதி+உடன்படுத்தி+*இ* இரண்டு அறி *கள்வி* காதலோளே (குறு.312:1) [கள்வி ‘வஞ்சகம் நிறைந்தவள்’ <கள்’வஞ்சகம்’ +வ் (உ.ப.) +இ] ‘இரண்டு (விதமான நடத்தைகள்) அறிந்த வஞ்சகம் உள்ளவள்/கள்ளி (எனது) காதலி’
	சிறு வன் கண்ணி (அக.385:17) [கண்ணி ‘கண்ணை உடையவள்’ <கண்+இ] ‘சிறிய வன்மையான கண்களை உடையவள்’
இர்	திரிபுறாப் பகுதி+உடன்படுத்தி+*இர்*

(முன்னிலைப் பன்மை/உயர்வுப் பன்மை	*கிழவிர்* போல (மலை:166) [கிழவிர் 'உரிமையுள்ள நீ' < கிழ'உரிமை' +வ்+இர்] 'உரிமையுள்ளவர் போல்'
	திரிபுப் பகுதி+ இர் புலன் உடை *மாந்திர்* (கலி.22:4) மாந்திர் < மாந்த்+இர்; மாந்த் என்பது மாந்தர் என்பதன் திரிபுப் பகுதி' 'அறிவுள்ள மாந்தரான நீர்'

மனிதர் என்பதிலுள்ள பகுதி *மன்* (வினை) 'நிறுவப்பட்டிரு, தொடர்ந்திரு' என்பதாகும். *மாந்திர்* (முன்னிலை) என்பதற்குப் பரிந்துரைக்கப்பட்ட ஆக்கம்: *மாந்திர்* (முன்னிலை) < *மாந்தர்* (படர்க்கை) < *மனிதர்* (*மன்+இ+த்+அர்*); *இ*-ஐ நீக்கி வேர் உயிர் *அ*-வை நீட்டி *மாந்தர்* பெறப்படுகின்றது. தமிழ் லெக்சிகன் *மனிதன்* என்பதை சமஸ்கிருதச் சொல் *மனு-ஜ* (V.3136) என்பதிலிருந்து ஆக்குகின்றது. இது *மாந்தர்* (V.3159) என்பதற்கு ஆக்கம் தரவில்லை.

	என்னை நகுதிரோ *நல்ல நகாஅலிர்* மன் கொலோ யானுற்ற அல்லல் மாய மலர் மார்பு புல்லி ப் புணர ப் பெறின் (கலி.142:15-18) [நகாஅலிர் 'நகையுடைய நீர்' <நகாஅல் +இர்; நகாஅல் 'சிரித்தல்' < நகு 'சிரி' +ஆஅல் (பெயராக்கப் பின்னொட்டு)] நல்ல *நகாஅலிர்* 'நன்றாக நகைத்தல் செய்கிற/உள்ள நீர்'

தற்கால உரையாசிரியர் பி.வி.சோமசுந்தரனார், *நகாஅலிர்* என்பதை எதிர்மறை வியங்கோளாகக் கொள்கின்றார்.

ஈர் (முன்னிலை	திரிபுறாப் பகுதி+ ஈர் *ஊரீர்* போல ச் சுரத்திடை இருந்தனிர் (புற.141:4)

பன்மை/உயர்வுப் பன்மை) இது *இர்* என்பதன் மாற்றுரு ஆகும்.	[ஊரீர் <ஊர்+ஈர்] ‘ஊரீர் (ஊரில்-உள்ள-நீர்) போல நீர் காட்டில் இருந்தீர்’
என் (தன்மை ஒருமை)	திரிபுறாப் பகுதி+ *என்* நின் உள்ளி வந்த…*பரிசிலென்* (புற.211:6-7) [பரிசிலென் <பரிசில்+என்] உன்னை நினைத்து வந்த பரிசில் வேண்டும் நான்’ (இங்கு *பரிசிலென்* என்பது ‘பரிசில் வேண்டும் நான்’ எனப் பொருள்கொள்ளப்படவேண்டும் அல்லது புரிந்துகொள்ளப்படவேண்டும்.)
ஏம் (தன்மைப் பன்மை/ உயர்வுப் பன்மை)	திரிபுறாப் பகுதி+உடன்படுத்தி+*ஏம்* வேந்தன் *பாசறையேமே* (அக.24:18) [பாசறையேம் < பாசறை + ய் (உ.ப.)+ ஏம்] ‘வேந்தனின் பாசறையில் உள்ள நாம்’ ‘நாம் வேந்தனின் பாசறையில் உள்ளோம்’
	திரிபுறாப் பகுதி+இன்+ஏம் பல நாடு *நெஞ்சினேம்* (கலி.35:19) [நெஞ்சினேம் < நெஞ்சு+இன்+ஏம்] ‘பலவற்றை நாடும்/விரும்பும் நெஞ்சுள்ள நாம்’ ‘நாம் பலவற்றை நாடும் நெஞ்சைக் கொண்டுள்ளோம்’
ஏன் (தன்மை ஒருமை)	திரிபுறாப் பகுதி+உடன்படுத்தி+*ஏன்* பொழுது மறுத்து உண்ணும் *உண்டியேன்* (அக.26:26) [உண்டியேன் <உண்டி ‘உணவு’+ய் (உ.ப.)+ஏன் ‘சரியான பொழுதில் அல்லாமல் உண்ணும் உணவு பழக்கம் உள்ள நான்’

	‘எனக்குச் சரியான பொழுதில் உணவு உண்ணும் பழக்கமில்லை’
ஐ முன்னிலை ஒருமை	திரிபுறாப் பகுதி+ *ஐ* நீயும் *தாயை* இவற்கு (அக.16:13) [தாயை < தாய்+ஐ] ‘நீயும் இவர்களுக்குத் தாயாவீர்’
	தவிர்த்த *தேரை* விளர்த்த கண்ணை (புற.353:5) [தேரை <தேர்+ஐ; கண்ணை < கண்+ஐ] கைவிடப்பட்ட தேரை உடைய நீ, வெளிறிய கண்ணை உடைய நீ’ ‘நீ கைவிடப்பட்ட தேரை உடையாய்; நீ வெளிறிய கண்ணை உடையாய்’
	திரிபுப் பகுதி+ *ஐ* உரன் உடை *உள்ளத்தை* (கலி.12:10) ‘வலுவான உள்ளத்தை உடைய நீ ‘நீ வலுவான உள்ளத்தையுடையாய்’
	திரிபுறாப் பகுதி+ ஆள்+அன்+ஐ நீ எமக்கு யாரையும் அல்லை *நொதுமலாளனை* (நற்.395:1-2) [நொதுமலாளனை நொதுமல் ‘அன்னியம் + ஆள் + அன் + ஐ] ‘நீ எங்களுக்கு யாரும் இல்லை; அன்னியராவாய்’
	திரிபுறாப் பகுதி+ *இன்*+ஐ ஆனா *மைந்தினை* [மைந்தினை<மைந்து ‘வலிமை’+இன்+ஐ ‘எல்லையில்லா வலிமையுடையாய்’ ‘நீ எல்லையற்ற வலிமை கொண்டிருகுக்கின்றாய்’
ஓய் (முன்னிலை ஒருமை	திரிபுறாப் பகுதி+ *ஓய்* துறைவனை நீ இனிது முயங்குமதி *காதலோயே* (ஐங்.148:2-3) [காதலோய் < காதல்+ஓய்; துறைவன் ‘துறையைச் சார்ந்தவன்’]

	‘துறைவனை நீ நன்கு தழுவுவாய், காதலுடையாய்’
ஓர் (படர்க்கை பன்மை/ உயர்வுப்பன்மை)	திரிபுறாப் பகுதி+ *ஓர்* *இவணோர்* (குறு.395:4) [இவணோர் <இவண் ‘இங்கு’+ஓர்’ ‘இங்கு உள்ளோர்’ ‘இவ்விடத்தைச் சார்ந்தோர்’
	நம் *காதலோர்* (கலி.36:11) [காதலோர் <காதல் +ஓர்] ‘நம்மிடம் காதலுள்ளவர்’ ‘நம் காதலர்’
	திரிபுப் பகுதி+ ஓர் இரு *நிலத்தோரும்* (பரி.19:4) [நிலத்தோர் < நிலத்த் (திரிபுப்பகுதி) +ஓர்; நிலத்த் என்பது நிலம் என்பதன் திரிபுப்பகுதி] ‘இரு நிலங்களைச் சார்ந்தவரும்’
	பெயரடைப் பகுதி+ ஓர் *நல்லோர்* யார்கொல் (குறு.7:2) [நல்லோர் < நல்+ஓர்] ‘யார் நல்லவர்கள்?’
	பெயரடைப் பகுதி+ உடன்படுத்தி+ஓர் *புதுவோர்* ப் புணருதல் வெய்யன் (கலி.75:10) [புதுவோர் <புது+வ்+ஓர்] ‘புதியவர்களைப் புணருவதில் விருப்பமுள்ளவன்’ ‘அவன் புதியவர்களைப் புணர்வதை விரும்புகின்றான்’
ஓள் (படர்க்கைப்	திரிபுறாப் பகுதி+ உடன்படுத்தி+ஓள்

பெண்பால் ஒருமை)	*மனையோள்* (அக.14:14) மனையோள் <மனை+ய்+ஓள் மனையைச்/வீட்டைச் சார்ந்தவள்
ஓன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	திரிபுறாப் பகுதி+ உடன்படுத்தி+ஓன் மலை *கிழவோன்* (கலி.40:34) கிழவொன் <கிழ 'உரிமை'+வ்+ஓன் 'மலைக்கு உரிமையானவன்'
	திரிபுப் பகுதி+ ஓன் *தம்மோன்* கொடுமை (நற்.88:6) [தம்மோன் <தம் +ஓன்; தம் என்பது தாம் என்பதன் திரிபுப் பகுதி] 'அவனது கொடுமை'
	திரிபுறாப் பகுதி+ இன்+ஓன் சீறரு *முன்பினோன்* (கலி.101:8) [முன்பினோன் <முன்பு 'உடல் வலிமை'+இன்+ஓன்] 'சீற்றத்தால் மறுக்கவியலாத வலிமையுள்ளவன்'
(த்)து படர்க்கை அஃறிணை ஒருமை	பெயரடைப் பெயர்ப் பகுதி+த்து *புதுவோர்த்து* …இவ் அழுங்கல் ஊரே (குறு.385:7) [புதுவோர்த்து <புதுவோர்+த்து; புதுவோர் < புது +வ் +ஓர்] 'புதியவர்கள் கொண்டது இந்த ஆரவாரம் உள்ள ஊர்' 'இந்த ஆரவாரம் உள்ள ஊர் புதியவர்கள் கொண்டது'
	திரிபுறாப் பகுதி+ து (குறு.159:7) கவலை *மாக்கட்டு* இ-ப்-பேதை ஊரே [மக்கட்டு <மாக்கள் +து] 'இப்பேதை ஊர் கவலையுள்ள மக்கள் உடையது/ கொண்டது'
	மல்லற்று … இம் மலை கேழு வெற்பு (நற்.93:4)

	[மல்லற்று < மல்லல் ‘செழிப்பு’+து] ‘மலைகளால் சூழப்பட்ட இந்தப் பள்ளத்தாக்கு செழிப்பானது’
	பெயரடைப் பகுதி + ஆ(த்)+து நனி *இன்னாது* (குறு.245:2) [இன்னாது <இன்+ஆ+து] ‘இது மிக விருபத்தகாதது’
	பெயரடைப் பகுதி + இ+து *வாலிது* (கலி.105:18) [வாலிது <வால் ‘வெண்மை’+இ+து] ‘வெண்மையானது’
	காந்தள் நாள்தோறும் *புதிது* ஈன (கலி.53:5) [புதிது ‘புதியது’ <புது+இ+து] ‘ஒவ்வொரு நாளும் காந்தள் புதியவைகளைப் பூக்க’
	திரிபுறாப் பகுதி+ இன்+து புறவே…*வெங்குறும்பின்று* (புற.386:12,13) [*வெங்குறும்பின்று* கடினமான வாழிடங்கள் உள்ளது’ <வெங்குறும்பு ‘கடினமான வாழ்விடங்கள்’+இன்+து] ‘பயிரப்பட்டாத நிலம் கடினமான வாழ்விடங்கள் உள்ளது’
	பிணை…காட்டு இரலையொடு வதியும் *புரவிற்று* அம்ம …ஊரே (நற்.121:3-5) [புரவிற்று ‘தரிசுநிலங்கள் உள்ளது’<புரவு+இன்+து] ‘பெண்மான் தனது இணையோடு வசிக்கும் பயிரப்படாத நிலமுள்ளது ஊர்’

5.4.8.2. பெயரடைப் பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்களின் வரலாற்று மாற்றம்

சங்ககாலத் தமிழில் பெயரடைப் பெயர்கள் அல்லது குறிப்புப் பெயர்களின் ஆக்க ஒட்டுக்களான இட-எண்-பால் விகுதிகள் எல்லாம் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படாததை நாம் ஒப்பிட்டு அறிந்து கொள்ளலாம். தற்காலத் தமிழைப் பொறுத்தவரையில் தன்மை ஒருமைப் பெயரடைப் பெயர்கள், தன்மைப் பன்மைப் பெயரடைப் பெயர்கள், முன்னிலை ஒருமைப் பெயரடைப் பெயர்கள், முன்னிலைப் பன்மைப் பெயரடைப் பெயர்கள் என்பன தற்காலத் தமிழில் இல்லை எனவே இவற்றை ஆக்கும் தன்மை ஒருமை இட-எண்-பால் ஒட்டுக்களான *என், ஏன்* என்பனவும் தன்மைப் பன்மை இட-எண்-பால் ஒட்டுக்களான அம், ஆம், ஏம் என்பனவும் முன்னிலை ஒருமை இட-எண்-பால் ஒட்டுக்களான *அவை, ஆய், ஐ, ஓய்* என்பனவும் முன்னிலைப் பன்மை இட-எண்-பால் ஒட்டுக்களான அவை, *இர், ஈர்* என்பனவும் தற்காலத் தமிழில் பெயரடைப் பெயர் ஆக்க ஒட்டுக்களாகப் பயன்பாட்டில் இல்லை. படர்க்கை ஆண்பால் ஒருமைப் பெயரடைப் பெயர்களும் படர்க்கைப் பெண்பால் ஒருமைப் பெயரடைப் பெயர்களும் படர்க்கை உயர்திணைப் பன்மைப் பெயரடைப் பெயர்களும் தான் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன.

படர்க்கை அஃறிணைப் பன்மை பெயரடைப் பெயர் ஆக்கத்தில் திரிபுறாபகுதி/திரிபுற்றபகுதி/பெயரடைப்பகுதி +(உப)+ (*அன்/இன்*)+ *அ* என்ற ஆக்கம் சங்ககாலத்தமிழில் பயன்பாட்டில் உள்ளது. தற்காலத் தமிழில் இத்தகைய அமைப்பொழுங்கு அடிப்படையிலான ஆக்கம் இல்லை. எடுத்துக்காட்டாக கால (*கால்+அ*) ‘*காற்றுக்களாவன*’, *கதவ* (< *கத+வ்+அ*) ‘உறுதியானவை’, *எனவ* (*என்+வ்+அ*) ‘என்னுடையன’, *மரத்தன* (*மரத்த்+அன்+அ*) ‘மரமுள்ளன’, *நும்ம* (*நும்+அ*) ‘உன்னுடையன’, *காலன* (*கால்+அன்+அ*) ‘கால்களாவன’, இனிய (இன்+இ+ய்+அ)

‘இனியன’, *எருத்தின* (*எருத்து+இன்+அ*) ‘பிடரியுள்ளன’ என்ற ஆக்கங்கள் தற்காலத்தமிழில் இல்லை. இது போன்று எதிர்மறைப் பெயரடைப் பெயராக்கத்தில் பெயரடைப்பகுதி+*ஆத்+அன்+அ* என்ற அமைப்பொழுங்கால் விளையும் *இன்னாதான* (*இன்+ஆத்+அன்+அ*) என்ற ஆக்கமும் தற்காலத் தமிழில் இல்லை.

படர்க்கை அஃறிணைப் ஒருமை பெயரடைப் பெயர் ஆக்கத்தில் திரிபுறாபகுதி + (*இன்*) + *அது/அதை* என்ற ஆக்கம் சங்ககாலத்தமிழில் பயன்பாட்டில் உள்ளது. தற்காலத் தமிழில் இத்தகைய அமைப்பொழுங்கு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கம் இல்லை. எடுத்துக்காட்டாக *யாணது* (*யாண்+அது*) ‘அழகானது’, *மடவது* (*மடவ்+அது*) ‘ஏமாளி’, *குளம்பினது* (*குளம்பு+இன்+அது*) ‘குளம்புள்ளது’, *கையதை* (*கை+அதை*) ‘கையிலுள்ளது’ என்ற ஆக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை.

தன்மைப் பன்மைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டிலில் உள்ள திரிபுறாப் பகுதி +அம் என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் இல்லை. எடுத்துக்காட்டாக *உயிரம்* (*உயிர்+அம்*) ‘உயிருள்ள நாம்’, *பலம்* (*பல +அம்*) ‘பலவாயுள்ள நாம்’ என்ற பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை.

படர்க்கை உயர்வுப் பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி/தொழிற்பெயர் பகுதி+ (*இ*) + (*இன்*) + (உடன்படுத்தி) +(*ஆள்*)+*அர்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் எல்லாம் தற்காலத் தமிழில் இல்லை. எடுத்துக்காட்டாக *கூந்தலர்* (*கூந்தல்+அர்*) ‘கூந்தலுள்ளவர்’, *நலத்தர்* (*நலத்த்+அர்*) ‘பொலிவுள்ளவர்’, *தேத்தர்* (*தேத்த்+அர்*) ‘தேசத்தர்’ , *வினைநர்* (*வினை+ந்+அர்*) ‘செயல்புரிவர்’, *நகைவர்*

(*நகை+வ்+அர்*), *நோன்பியர்* (*நோன்பு+இ+ய்+அர்*) 'நோன்பு செய்பவர்', *நுதலியர்* (*நுதல்+இ+அர்*) 'நெற்றியுள்ளவர்', *கோட்டையர்* (*கோடு+ஐ+ய்+அர்*) 'சூழ்ச்சியுள்ளவர்', *சாக்காட்டாளர்* (*சாக்காடு+ஆள்+அர்*) 'வண்டியுள்ளவர்' , *நூற்றினர்* (நூற்று+இன்+அர்) என்ற ஆக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை. இருப்பினும் சிறார் (சிறு+அர்), வலைஞர் (வலை+ஞ்+அர்), பகைவர் (பகை+வ்+அர்), *காதினர்* (*காது +இன்+அர்*) என்ற ஆக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன. *தேத்தர்* என்ற ஆக்கம் தற்காலத் தமிழில் இல்லவிடினும் அதற்கு இணையான *தேசத்தர்* (*தேசத்த் + அர்*) என்ற ஆக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது.

படர்க்கை உயர்வுப் பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + (*இன்*) + *அவர்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் எல்லாம் தற்காலத் தமிழில் இல்லை. எடுத்துக்காட்டாக இல்லவர் (*இல்+அவர்*) 'வீட்டில் வசிப்பவர்'. *புணர்ப்பினவர்* (*புணர்ப்பு+இன்+அவர்*) என்ற பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை.

படர்க்கை பெண்பால் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள பெயரடைப்/திரிபுப் பகுதி + *அவள்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்களில் சில தற்காலத் தமிழில் உள்ளன. எடுத்துக்காட்டாக *நல்லவள்* (நல்+அவள்) என்ற பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் *துறக்கத்தவள்* (*துறக்கத்து+அவள்*) 'விண்ணுலகத்தைச் சார்ந்தவள்' என்ற பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் இல்லை.

படர்க்கை ஆண்பால் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + *அவன்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எடுத்துக்காட்டாக *விறலவன்* (*விறல்*+*அவன்*) என்ற பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

முன்னிலைப் பன்மைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + *அவிர்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எடுத்துக்காட்டாக *ஊரவிர்* (*ஊர்*+*அவிர்*) 'ஊரைச்சார்ந்த நீர்' என்ற பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் இல்லை.

முன்னிலை ஒருமை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + (*இன்*) + (*உப*) + *அவை* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எடுத்துக்காட்டாக தோளவை (*தோள்*+அவை) 'தோள்களையுடைய நீ', நேமியவை (*நேமி*+*ய்*+*அவை*) 'தட்டுள்ளநீ', *அம்பினவை* (*அம்பு*+*இன்*+*அவை*) 'அம்புள்ள நீ' என்ற பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை.

படர்க்கை அஃறிணை பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + அவை என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எடுத்துக்காட்டாக காலவை (கால்+அவை) 'கால்களிலுள்ளவை' என்ற ஆக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

படர்க்கை பெண்பால் ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள பெயரடைப்பெயர்/திரிபுப் பகுதி + (*இன்*) + (உப) + *அள்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எடுத்துக்காட்டாக *சிறுமையள்* (*சிறுமை+ய்+அள்*) 'பணிவுள்ளவள்', *திலகத்தள்* (*திலகத்த்+அள்*), *சுமட்டினள்* (*சுமட்டு+இன்+அள்*) 'சுமடு உள்ளவள்' என்ற ஆக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

படர்க்கை ஆண்பால் ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப்/தொழிற்பெயர்ப் பகுதி + (*இன்*) + (உப) + (*ஆள்*) + *அன்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எடுத்துக்காட்டாக *மாலையன்* (*மாலை+ய்+அன்*) 'இயல்புள்ளவன்', *கொலைவன்* (*கொலை+வ்+அன்*) 'கொலைசெய்தவன்', *விலைவன்* (*விலை+வ்+அன்*) 'கொள்ளைப்பொருள் உள்ளவன்', *கச்சினன்* (*கச்சு+இன்+அன்*) 'கச்சு அணிந்தவன்', *கழலினன்* (*கழல்+இன்+அன்*) 'கழலை அணிந்தவன்', *கண்ணியன்* (கண்ணி+ய்+அன்) 'தலைமாலை அணிந்தவன்', *பேணலன்* (பேணல்+அன்) 'பாராட்டுபவன்', *நன்னராளன்* (*நன்னர்+ஆள்+அன்*) 'நற்பண்புள்ளவன்' என்ற பெயரடைப் பெயர் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை.

படர்க்கை அஃறிணை ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + ஆம் என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *இருவாம்* 'நாமிருவர்'.

படர்க்கை உயர்வுப் பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + *ஆம்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: நசுப்பார் 'இடை உடையவர்'.

படர்க்கை பெண்பால் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + (*இன்*) + *ஆள்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *அல்குலாள்* (*அல்குல்* +*ஆள்*) 'அல்குலை உடையவள்'. *கதுப்பினாள்* 'கூந்தலை உடையவள்'. இப்பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை என்றாலும் இத்தகைய ஆக்க முறை தற்காலத் தமிழில் சாத்தியமாகும்: (*மெல்*) *இடையாள்* (*இடை*+*ய்*+*ஆள்*) 'இடையை உடையவள், (*கருங்*) கூந்தலாள் (*கூந்தல்*+*ஆள்*) 'கூந்தலை உடையவள்'

படர்க்கை ஆண்பால் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள பெயரடைப்/திரிபுறாப் பகுதி + (*இன்*) + *ஆன்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராகங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது: *பெருமான்* (*பெரும்*+*ஆன்*) 'பெருமைக்குரியவன்', ஊரான் (ஊர்+ஆன்) 'ஊரைச் சார்ந்தவன்'; இருப்பினும் பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் இல்லை: *முரசினான்* (*முரசு*+*இன்*+*ஆன்*) 'முரசை உடையவன்'.

படர்க்கைப் பெண்பால் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + *இ* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது:

கண்ணி (*கண்+இ*) ‘கண்களை உடையவள்’; ஆனால் பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் இல்லை: *கள்வி* (*கள்+வ்+இ*) ‘வஞ்சகம் நிறைந்தவள்’; இருப்பினும் *கள்ளி* (*கள்+இ*) என்ற உடன்படுத்தி இல்லா பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது.

முன்னிலை உயர்வுப் பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப்/திரிபுப் பகுதி + (உடன்படுத்தி) + *இர்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராகங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *கிழவிர்* ‘உரிமை உடைய நீர்’ (*கிழ+வ்+இர்*), *மாந்திர்* ‘மாந்தரான நீர்’ < *மாந்த்+இர்*), *நகாஅலிர்* (< *நகாஅல் +இர்*) ‘நகைத்தல் செய்கிற நீர்’; இருப்பினும் இத்தகைய ஆக்க முறையைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட படர்க்கை உயர்வுப் பன்மை பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *கிழவர்* (*கிழ+வ்+அர்*), *மாந்தர்* (*மாந்த்+அர்*).

முன்னிலை உயர்வுப் பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப்/திரிபுப் பகுதி + *ஈர்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *ஊரீர்* ‘ஊரிலுள்ள நீர்’; இருப்பினும் இத்தகைய ஆக்க முறையைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட படர்க்கை உயர்வுப் பன்மை பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *ஊரார்* (*ஊர்+ஆர்*) ‘ஊரைச் சார்ந்தவர்கள்’ .

தன்மை ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + *என்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *பரிசிலென்* (*பரிசில்+என்*) ‘பரிசில் வேண்டும் நான்’.

தன்மைப் பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + (இன்) + *ஏம்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *பாசறையேம்* (*பாசறை +ஏம்*) 'பாசறையில் உள்ள நாம்' , நெஞ்சினேம் (நெஞ்சு+இன்+ஏம்) 'நெஞ்சை உடைய நாம்' .

தன்மை ஒருமை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + (உடன்படுத்தி) *ஏன்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: உண்டியேன் (*உண்டி+ய்+ஏன்*)' 'உண்ணும்பழக்கமுள்ள நான்'.

முன்னிலை ஒருமை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப்/திரிபுப் பகுதி + (*இன்*) (*ஆள்*) + (*அன்*) + *ஐ* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: தாயை (*தாய்* + *ஐ*) 'தாயாகிய நீ', *கண்ணை* (*கண்+ஐ*) 'கண்ணை உடைய நீ', *உள்ளத்தை* (*உள்ளத்த்+ஐ*) 'உள்ளத்தை உடைய நீ', *நொதுமலாளனை* (*நொதுமல் +ஆள்+அன்+ஐ*) 'அன்னியராய நீ', *மைந்தினை* (*மைந்து+இன்+ஐ*) 'வலியுடையவராய நீ'

முன்னிலை ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + *ஓய்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *காதலோய்* (*காதல்+ஓய்*) 'காதலுள்ள நீ'.

படர்க்கைப் பன்மை பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப்/திரிபுப்/பெயரடைப் பகுதி + (உடன்படுத்தி) + *ஓர்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *இவணோர்* (இவண் + ஓர்) 'இவ்விடத்தைச் சார்ந்தோர்', *காதலோர்* (*காதல்+ஓர்*) 'காதல் உள்ளவர்', *புதுவோர்* (*புது+வ்+ஓர்*) 'புதியவர்களை விரும்புவோர்'. இருப்பினும் பின்வரும் பெயரடைப் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *நிலத்தோர்* (*நிலத்+ஓர்*) 'நிலங்களைச் சார்ந்தவர்', நல்லோர் 'நல்லவர்கள்'. இத்தகைய பெயரடைப் பெயராக்க முறையைப் பயன்படுத்தி *ஓர்* என்பதற்குப் பதிலாக *அர்* என்ற பின்னொட்டைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட சில பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: காதலர் (காதல்+ அர்).

படர்க்கைப் பெண்பால் ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப் பகுதி + (உடன்படுத்தி) + *ஓள்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *மனையோள்* (*மனை+ய்+ஓள்*) 'மனையைச் சார்ந்தவள்'.

படர்க்கை ஆண்பால் ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள திரிபுறாப்/திரிபுப் பகுதி + (உடன்படுத்தி) + *ஓன்* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *கிழவோன்* (*கிழ+வ்+ஓன்*) 'உரிமையுள்ளவன்', *தம்மோன்* (*தம்+ஓன்*) 'அவன்', *முன்பினோன்* (*முன்பு+இன்+ஓன்*) 'வலிமையுள்ளவன்'.

படர்க்கை அஃறிணை ஒருமைப் பெயரடைப் பெயராக்கத்தில் சங்ககாலத் தமிழில் பயன்பாட்டில் உள்ள பெயரடைப்பெயர்ப்/பெயரடைப்/திரிபுறாப் பகுதி + (உடன்படுத்தி) (*இ*)+ ((*ஆ*(*த்*)) + (*த்*)*து* என்ற ஒழுங்கமைப்பு அடிப்படையிலான பின்வரும் பெயரடைப்

பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *புதுவோர்த்து* (*புதுவோர்+த்து*) ‘புதியவர்கள் உள்ளது’, *மாக்கட்டு* (*மாக்கள்+து*) ‘மனிதர்கள் உள்ளது’, *மல்லாற்று* (*மல்லல்* +து) ‘வளமுள்ளது’, *இன்னாது* (*இன்+ஆ+து*) ‘இனிமையற்றது’, *வாலிது* (*வால்* + *இ* + *து*) ‘வெண்மையானது’, *வெங்குறும்பின்று* (*வெண்குறும்பு+இன்+து*) ‘கொடிய குடிகளுடையது’, *புரவிற்று* (*புரவு+இன்+து*) ‘தரிசுநிலங்கள் உள்ளது’. இருப்பினும் பின்வரும் பெயரடைப் பெயராக்கம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது: *புதிது* (*புத்+இ+து*) ‘புதியது’.

5.4.9. வினையாலணையும் பெயர்கள்

வினையால் குறிப்பிடப்பட்ட செய்தவரையோ (எழுவாயையோ) செயப்படுபொருளையோ குறிப்பிடும் வினைமுற்று வடிவம் வினையாலணையும் பெயர் எனப்படும். குறிப்பாக வினைமுற்று வடிவம் பெயர்போன்று பயன்படுத்தப்பட்டால் அது “வினையாலணையும் பெயர்” எனப்படும். வினையாலணையும் பெயரை “வினை-க்கிற, வினை-த்த, வினை-க்கும் X” எனப் பொருள்கோள் செய்யலாம்; இதில் x என்பது வினையாலணையும் பெயரிலுள்ள இட-எண்-பால் பின்னொட்டால் குறிப்பிடப்படும் மற்றும் “வினை” என்பது வினையாலணையும் பெயரை உட்படுத்தும் வினை ஆகும். வினையாலணையும் பெயர் பிற பெயர்களைப் போன்று செயற்பாடு செய்யும்; இது பிற பெயர்களைப் போன்று பெயர்த்திரிபாக்கம் செய்யும்; அதாவது வேற்றுமை உருபுகளுக்கும் பன்மையொட்டுக்களுக்கும் திரிபுறும். வினைமுற்றுக்கும் வினையாலணையும் பெயருக்கும் வடிவ அடிப்படையில் பெரும்பான்மையும் வேறுபாடில்லை; சில நேர்வுகளில் வினைப்பகுதியுடன் சேர்க்கப்படும் ஒட்டுக்கள்

வினையாலணையும் பெயருக்கு வேறுபடும். கலைநுட்ப அடிபடையில் எந்த வினைமுற்றும் வினையாலணையும் பெயராகச் செயல்படும். எனவே செம்மொழித் தமிழில் அம்மாதிரியான வினை வடிவங்களுக்கு இரண்டு பொருள்கோள்கள் தரப்படுகின்றன: ஒன்று வினைமுற்றாக மற்றொன்று வினையாலணையும் பெயராக. சூழல் மட்டும் தான் சரியான பொருள்கோளைத் தேர்ந்தெடுக்க இயலும்.

மரபிலக்கணக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் இவ்வகையிற்படும் பெயர்களை "வினயாலணையும் பெயர்" (நன்னூல், விதி 285), வினைப் பெயர் (பதி.13:1, 2, 4, 6 பற்றிய பழைய உரை) அல்லது தொழிற்பெயர் (பதி.19:19 பற்றிய பழைய உரை) எனக் குறிப்பிடுகின்றன. நாம் இங்கு வினையாலணையும் பெயர் என்பதை இவ்வகையிற் படும் வினைகளைக் குறிப்பிடக் கலைசொல்லாகப் பயன்படுத்துகின்றோம்.

5.4.9.1. சங்கத்தமிழில் வினையாலணையும் பெயர்கள்

இரண்டு வகையான வினையாலணையும் பெயர்கள் செம்மொழித் தமிழில் காணப்படுகின்றன: உடன்பாட்டு வினையாலணையும் பெயர், எதிர்மறை வினையாலணையும் பெயர்.

சங்கநூல்களின் வினையாலணையும் பெயர்களின் அமைப்பு கருதி இங்கு வினையாலணையும் பெயர்கள் இறந்தகால வினையாலணையும் பெயர்கள், இறந்தகாலமில்லா வினையாலணையும் பெயர்கள், எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் எனப் பிரித்து விளக்கப்பட்டுள்ளன.

5.4.9.1.1 இறந்தகால வினையாலணையும் பெயர்கள்

இறந்தகால வினையாலணையும் பெயர்கள் பின்னொட்டுக்களால் ஆக்கப்படுகின்றன. வினையைச் செய்பவரின் அல்லது அனுபவிப்பவரின் இட-எண்-

பால்-ஐக் குறிப்பிடும் வினையாலணையும் பெயராக்கப் பின்னொட்டு வினையின் இறந்தகால/முற்றுப் பகுதியுடன் சேர்க்கப்படுகின்றது. சில நேர்வுகளில் *அன்*, *இன்*, அல்லது *இசின்* என்பது வினையாலணையும் பெயராக்க ஒட்டைச் சேர்க்கும் முன் இறந்தகால/முற்றுப் பகுதியுடன் சேர்க்கப்படுன்றது.

5.4.9.1.1.1. இறந்தகால வினையாலணையும் பெயராக்கதிற்கான இட-எண்-பால் விகுதிகள்

வ.எண்	இட-எண்-பால் விளக்கம்	இட-எண்-பால் விகுதிகள்
1	தன்மை ஒருமை	என், ஏன்
2	தன்மை பன்மை/உயர்வுப் பன்மை	அம்,ஆம் ஏம்
3	முன்னிலை ஒருமை	ஆய், ஓய்
4	முன்னிலை பன்மை/உயர்வுப் பன்மை	அவி, இர், ஈ(இ)ர்
5	படர்க்கை ஆண்பால் ஒருமை	அன், அவன், ஆன், ஓன்
6	படர்க்கைப் பெண்பால் ஒருமை	அவள், அள், ஆள், ஓள்
7	படர்க்கை உயர்திணைப் பன்மை	அவர், அர், ஆர், ஓர்
8	படர்க்கை அஃறிணை ஒருமை	அது, அதை
9	படர்க்கை அஃறிணைப் பன்மை	அ, அவை

5.4.9.1.1.2. இறந்தகால வினையாலணையும் பெயராக்கதிற்கான ஆக்க நுட்பம்

இதன் ஆக்க நுட்பம் பின்னொட்டாகம் ஆகும். பின்வருவது இதன் ஒழுங் அமைப்பு: இறந்தகாலப் பகுதி +/-*அன்/இன்/இசின்*+இட-எண்-பால் பின்னொட்டு. சிலர் *அவிர்*, *அவன்*, *அவள்*, *அவர்*, *அதை*, அவை என்ற பின்னொட்டுக்களிலிருந்து தொடக்க *அ*-ஐ பிரிக்க விருப்பி அதை பகுதியின் பாகமாகக் கருதுவர். எடுத்துக்காட்டாக, *துறந்தவர்* என்பதை துறந்த் (இறந்தகால/முற்றுப் பகுதி) + *அவர்* (இட-எண்-பால் பின்னொட்டு)

என்பதற்குப் பதிலாக *துறந்தவர்* < *துறந்த* (இறந்தகாலப் பெயரெச்சம்) + *அர்* (இட-எண்-பால் பின்னொட்டு) எனப் பகுப்பர். ஆனால் இறந்தகாலமில்லாத விலையாலணையும் பெயர்களில் பெயரெச்ச வடிவை அடையாளங்காண இயலாது. எடுத்துக்காட்டாக *இருப்பவர்* என்பதில் **இருப்ப* என்பது இறந்தகாலமில்லாத பெயரெச்சம் அல்ல. எனவே *இருப்பவர்* என்பதை **இருப்ப+அர்* அல்லது **இருப்ப+அவர்* என்பதிலிருந்து ஆக்கவியலாது. எனவே இங்கு *இருப்பவர்* என்பது *இருப்ப்* (இறந்தகாலமில்லா/முற்றல்லா பகுதி + *அவர்* (இட-எண்-பால் பின்னொட்டு) எனப் பகுக்கப்பட்டு அதன் ஆக்கம் விளக்கப்படுள்ளது. இது *துறந்தவர்* என்பதை *துறந்த்* (இறந்தகால/முற்றுப் பகுதி) + *அவர்* (இட-எண்-பால் பின்னொட்டு) எனப் பகுத்து அதன் ஆக்கத்தை விளக்குவது போன்று அமையும். இரண்டும் ஒரே போன்ற அமைப்பின் பாற் படும்.

பின்வரும் அட்டவணையில் இறந்தகால வினையாலணையும் பெயர்களின் ஆக்கத்திற்கான இட-எண்-பால் பின் னொட்டுகளும் அவற்றின் ஒழுங்கமைப்புகளும் எடுத்துக்காட்டுகளும் அவை சங்ககால இலக்கியங்களில் வரும் இடங்களும் தரப்பட்டுள்ளன.

இட-எண்-பால் பின்னொட்டு	**அமைப்பும் எடுத்துக்காட்டும் வருமிடமும்**
அ (படர்க்கை அஃறிணைப் பன்மை)	இறந்தகால/முற்றுப் பகுதி+உடன்படுத்தி+அ இரந்தோர் *வேண்டிய* கொடுத்து (குறு.349:5-6) [வேண்டிய <வேண்டு +ய் (உ.ப.) +அ; வேண்டிய செயப்படுபொருளாகும்] ‘இரந்தோருக்கு விருப்பியவற்றைக்/வேண்டியவற்றைக் கொடுத்து’
“	இறந்தகால/முற்றுப் பகுதி+அன்+அ

	மாண்டன பல (பதி.19:27) [மாண்டன < மாள் ‘நேர்த்தியாகவிரு’ +அன்+அ ‘நேர்த்தியாகவிருந்தவை பல (இடங்கள்)
“	இறந்தகால/முற்றுப் பகுதி+உடன்படுத்தி+இன்+அ கூந்தல் *ஒரீஇயின* போல…மழைக்கண் (பதி.21:33-34-35) [ஒரீஇயின < ஒரீஇ + ய் (உ.ப.)+இன்+அ; ஒரு’விலகு’] ‘கூந்தலிலிருந்து விலகிச்சென்றது போன்ற கருணையுள்ள கண்கள்’
அது (படர்க்கை அஃறிணை ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+அது கால் *யாத்தது* (பெரு:133) [யாத்தது <யாத்த்+அது; யா ‘கட்டு’; யாத்தது என்பது செயப்படுபொருள்] ‘காலுடன்/கம்பத்துடன் கட்டப்பட்டது…’
“	குப்பை வேளை உப்பிலி வெந்ததை (சிறு:137) [வெந்ததை < வெந்தது+ஐ (வே.உ); வெந்தது < வெந்த்+அது; வெ ‘வேகு’; வெந்ததை என்பது செயப்படுபொருள்] ‘வேளை இலைகள் உப்பில்லாமல் வெந்தது’
“	இறந்தகால/முற்றுப் பகுதி+உடன்படுத்தி+அது நின் *உள்ளியது* முடித்தோய் (புற.211:9-10) [உள்ளியது <உள்ளி+ய் (உ.ப)+அது; உள்ளு ‘நினை’; உள்ளியது என்பது செயப்படுபொருள்] ‘நீ நினைத்ததை முடித்தவன்’
அதை (படர்க்கை அஃறிணை ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+அதை ஊர்ந்ததை …புகல் சால் வேழம் (பரி.21:1,2) [ஊர்ந்ததை < ஊர்ந்த்+அதை; ஊர் (வி) ‘சவாரிசெய்’; ஊர்ந்ததை என்பது செயப்படுபொருள்] ‘நீ சவாரிசெய்தது புகழ்பெற்ற யானை ஆகும்’

அம் (தன்மை பன்மை/உயர்வுப் பன்மை	இறந்தகால/முற்றுப் பகுதி+அன்+அம் யாம் உமக்கு ச் *சிறந்தனம்* ஆதல் அறிந்தனிர் ஆயின் (கலி.5:4-5) [சிறந்தனம் < சிறந்த்+அன்+அம்; சிற (வி) 'இன்றியமையாதிரு'] 'நாங்கள் உங்களுக்கு இன்றியமையாதிருந்தவர் என்று நீ அறிந்திருந்தால்'
அர் (படர்க்கை உயர்திணைப் பன்மை/ உயர்வுப் பன்மை)	இறந்தகால/முற்றுப் பகுதி+உடன்படுத்தி+அர் பிரிதல் *வல்லியர்* … நத்துறந்தோர் (அக.223:1) [வல்லியர் < வல்லி +ய் (உ.ப.) + அர்; வல் (வி) 'திறன்கொண்டிரு'] 'எங்களைத் துறந்தவர் பிரிவதில் திறன்கொண்டிருந்தவர்'
	இறந்தகால/முற்றுப் பகுதி+இன்+அர் வேண்டுப *வேண்டினர்க்கு* அளி (பெரு:444) வேண்டினர்க்கு < வேண்டினர் +கு (வே.உ.); வேண்டினர் < வேண்டி+இன்+அர்; வேண்டு (வி) 'விரும்பு'] 'தேவைப்பட்டதை எல்லாம் வேண்டினவர்க்கு தேவைப்பட்டதை எல்லாம் அளி'
அவர் (படர்க்கை உயர்திணைப் பன்மை/ உயர்வுப் பன்மை)	இறந்தகால/முற்றுப் பகுதி+அவர் நள் என் கங்குல் நடுங்கு துணை *ஆயவர்* நின் மறந்து உறைதல் யாவது (அக.129:2-3) [ஆயவர் < ஆய் +அவர்; ஆய் (வி) 'இரு'] 'நடுக்கும் இந்நள்ளிரவில் உனக்குத் துணையாக இருந்தவர் உன்னை மறந்து எப்படி (பிரிந்து) தங்கியிருக்க முடிந்தது?'
	துறந்தவர் ஆண்டு ஆண்டு உறைகுவர் கொல்லோ (மது: 131) துறந்தவர் < துறந்த்+அவர்; துற (வி) 'விட்டுவிடு' 'என்னைத் துறந்தவர் (என்னிடமிருந்து விலகி) அங்குமிங்கும்

	தங்கியிருப்பாரா?
	நட்டவர் குடி உயர்க்குவை (மது: 131) நட்டவர் < நட்ட்+அவர்; நள் (வி) 'நட்பாயிரு']
அவள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+அவள் நின் தீமை *காத்தவள்* (கலி.44:19) [காத்தவள் <காத்த்+அவள்; கா 'பாதுகா'] 'உனக்கு (ஏற்பட்ட) தீமையிலிருந்து உன்னைக் பாதுகாத்தவள்'
அவன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+அவன் வருவன் என்ற கோனது பெருமையுமது பழுது இன்றி *வந்தவன்* அறிவும் (புற.217:7-8) [வந்தவன் <வந்த்+அவன்; வரு (வி)' "வருவேன்" என்ற அரசனின் பெருமையையும் தவறாமல் வந்தவனின் அறிவையும்
அவிர் (முன்னிலைப் பன்மை)	இறந்தகால/முற்றுப் பகுதி+அவிர் *சான்றவிர்*...என் துயர் நிலை தீர்த்தல் நும் தலை க் கடனே (கலி.139:33,36-37) [சான்றவிர்<சான்ற்+அவிர்; சால் 'உன்னதமாயிரு'] 'சான்றோர்களே, என் துயரமான நிலையை நீக்குதல் உம்முடைய முதன்மையான கடமையாகும்'
"	கண்டவிர் எல்லாம் கதும் என வந்தாங்கே பண்டு அறியாதீர் போல நோக்குவீர் (கலி.140:1-2) [கண்டவிர் <கண்ட்+அவிர்; காண் (வி) 'என்னைக் கண்டவர்கள்களாகிய நீங்கள் எல்லாம் இங்கு வந்து என்னை முன்னர் அறியாதவர் போல நோக்குவீர்கள்'
அவை (முன்னிலை	இறந்தகால/முற்றுப் பகுதி+அவை மாறு அமர் *அட்டவை* (பரி.21:66)

ஒருமை)	[அட்டவை < அட்ட்+அவை: அடு (வி) 'கொல்' 'போரில் பகைவர்களைக் கொன்றவனாகிய நீ'
அவை (படர்க்கை அஃறிணைப் பன்மை)	இறந்தகால/முற்றுப் பகுதி+உடன்படுத்தி+அவை வரை முதல் *சிதறியவை* (அக.108:3) [சிதறியவை <சிதறி+ய்+அவை; சிதறு (வி) 'மலையின் உச்சியின் மேல் சிதறியவை'
அன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+இன்+அன் முது பார்ப்பான் *அஞ்சினன்* ஆதல் அறிந்து (கலி.65:20) [அஞ்சினன் < அஞ்சி+இன்+அன்; அஞ்சு 'பயப்படு'] 'வயதான அந்தணன் பயந்தவன் என்பதை அறிந்து'
ஆம் (தன்மைப் பன்மை /உயர்வுப் பன்மை)	இறந்தகால/முற்றுப் பகுதி+ஆம் புணர்ந்தாம் போல உணர்ந்த நெஞ்சமொடு (நற்.349:4) புணர்ந்தாம் < புனர்ந்த்+ஆம்; புணர் (வி) 'சேர்'] 'புணர்ந்தவர்/சேர்ந்தவர் நாம் என்பது போல் உணர்ந்த நெஞ்சத்துடன்'
ஆய் (முன்னிலை ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+ஆய் முன்னத்தான் ஒன்று *குறித்தாய்* போல் காட்டினை (கலி.67:7) [குறி 'எண்ணமிடு'; குறித்தாய் 'எண்ணமிட்ட நீ' < குறித்த்+ஆய்] 'எதையோ ஒன்றை விரும்பினாய் நீ என்று காட்டினாய்'
	இறந்தகால/முற்றுப் பகுதி+உடன்படுத்தி+ஆய் நீங்க க் *கருதியாய்க்கு* … துயர் உழப்பவோ (கலி.136:15, 16) [கருதியாய்க்கு < கருதி+ய் (உ.ப)+ஆய்+க்கு (வே.உ.); கருது (வி) 'விரும்பு'] 'நீங்க விரும்பின/கருதிய உனக்கு வேண்டி அவள் துன்பப்படவேண்டுமா?'

ஆர் (படர்க்கை உயர்திணைப் பன்மை/உயர்வுப் பன்மை)	இறந்தகால/முற்றுப் பகுதி+ ஆர் *நல்கூர்ந்தார்* செல்வ மக்கள் (கலி 50:14) [நல்கூர் 'துன்புறு'; நல்கூர்ந்தார் < நல்கூர்ந்த்+ஆர்] 'துன்புற்றவர்களுடைய அன்பான மகள்'
	இறந்தகால/முற்றுப் பகுதி+இன்+ஆர் *ஒன்றினார்* வாழ்க்கையே வாழ்க்கை (கலி 18:11) ஒன்றினார் <ஒன்றி +இன்+ஆர்; ஒன்று 'சேர், இணை' 'வாழ்க்கையில் இசைவுடன் இணந்தவர் வாழ்க்கை தான் (உண்மை) வாழ்க்கை'
ஆள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+ஆள் *ஈன்றாட்கு* ஒரு பெண் இவள் (பரி.8:58) ஈன்றாட்கு <ஈன்ற்+ஆள்+கு (வே.உ.) 'அவளைப் பெற்றவளுக்கு/ஈன்றவளுக்கு இவள் ஒரே மகள் ஆவாள்'
ஆன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	இறந்தகால/முற்றுப் பகுதி+ ஆன் பகை இல் நோய் *செய்தான்* ... மலை (கலி.40:60) [செய்தான்<செய்த்+ஆன்; செய் (வி)] 'பகையில்லாத நோயை (காதல் நோயை) உருவாக்கியவனின் மலை'
	இறந்தகால/முற்றுப் பகுதி+ உடன்படுத்தி+ஆன் *கடீஇயார்க்கு* யாங்கு ஆகுவம் கொல் (நற்.313:5-6) கடீஇயார்க்கு < கடீஇயான் +கு (வே.உ.); கடீஇயான் கடீஇ+ய் (உ.ப.)+ஆன்); கடீஇ 'துற' 'நம்மைத் துறந்தவர்க்கு நாம் நிற்கிறோம்?'
	இறந்தகால/முற்றுப் பகுதி+ உடன்படுதி+இன்+ஆன் எவ்வம் *உறீஇயினான்* குன்று (கலி.42:24)

	உறீஇயினான்< உறீஇ+ய்(உ.ப.)+இன் +ஆன்; உறு (வி) ‘அனுபவி’ ‘துன்பதை அனுபவிக்கச்செய்தவனின் மலை’
இர் (முன்னிலைப் பன்மை/ உயர்வுப் பன்மை)	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ அன்+இர் சுரம் சொல்லாது இறப்ப த் *துணிந்தனிர்க்கு* ஒரு பொருள் சொல்லுவது உடையேன் (கலி.8:6-8) [துணிந்தனிர்க்கு < துணிந்தனிர்+க்கு (வே.உ.); துணிந்தனிர்< துணிந்த்+அன்+இர்; துணி(வி)] ‘(எம்மிடம்) கூறாது காட்டிற்குப் போகத் துணிந்த உனக்கு கூறுவதற்கு ஒன்று இருக்கின்றது’
ஈ(இ)ர் (முன்னிலைப் பன்மை/ உயர்வுப் பன்மை). இது இர் என்பதன் மாற்றுரு ஆகும்.	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ ஈர் பல்சான்றீரே பல்சான்றீரே (புற.195:1) [சான்றீர் <சான்ற்+ஈர்; சால் (வி) ‘ஒழுக்கமாயிரு’] ‘பல நல்லொழுக்ககங்கள் கொண்டவர்களாகிய நீர்’
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ உடன்படுத்தி+ஈர் யாரீரோ எம் *விலங்கியீஇர்* (அக.390:14) விலங்கியீஇர் <விலங்கி+ய்(உ.ப.)+ஈஇர்; விலங்கு ‘இடையீடுசெய்’ ‘எம்மை இடையீடுசெய்தவராகிய நீர் யாரோ?’
என் (தன்மை ஒருமை)	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ அன்+என் நின் ஆடு கொள் வியன் மார்பு *தொழுதனென்* பழிச்சி ச் செல்வல்…யானே (புற.211:15-17) [தொழுதனென் < தொழுத்+அன்+என்; தொழு (வி. ‘வணங்கு’] ‘உன் பரந்த வெற்றி கொண்ட மார்பை தொழுத நான் (உன்னை) விட்டுச் செல்வேன்’

ஏம் (தன்மைப் பன்மை/ உயர்வுப் பன்மை)	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ ஏம் அளி *பெற்றேம்* எம்மை நீ அருளினை (கலி.66:22) [பெற்றேம் <பெற்ற்+ஏம்; பெறு (வி)] ‘உன் இரக்கத்தை பெற்ற எங்களிடம் நீ கருணை காட்டினாய்’
ஏன் (தன்மை ஒருமை)	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ ஏன் தந்தை தன் ஊர் இதுவே *ஈன்றேன்* யானே (நற்.198:11-12) ஈன்றேன் <ஈன்ற்+ஏன்; ஈன் ‘பெறு’ ‘இது அவள் தந்தை ஊர்; அவளை ஈன்றவன் நான்’
	அறத்தோடு நின்றேனை க் கண்டு (கலி.39:20) [நின்றேனை <நின்றேன் + ஐ (வே.உ.); நின்றேன் <நின்ற்+ஏன்; நில் (வி)] ‘அறத்துடன் நின்ற என்னைக் கண்டு’
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ அன்+ஏன் நின்னை *தகைத்தனேன்* அல்லல் காண் (கலி.108:20) [தகைத்தனேன் < தகைத்த்+அன்+ஏன்; தகை ‘நிறுத்து, தடு’] ‘உன்னை தடுத்த என் துன்பத்தைக் காண்’
ஓய் (முன்னிலை ஒருமை)	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ ஓய் தீங்கு செய்தனையே ஈங்கு *வந்தோயே* (அக.112:8) [வந்தோய் < வந்த்+ஓய்; வர் (வி)] ‘இங்கு வந்த நீ தீங்கு செய்தவன்’
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ உடன்படுத்தி+ஓய் குற ப் பிணா க் கொடியை க் *கூடியோய்* (பரி.19:95) [கூடியோய் < கூடி+ ய் (உப)+ஓய்; கூடு (வி) ‘இணை’] ‘முந்திரிக்கொடியைப் போன்ற குறத்தியுடன் இணைந்த நீ’
ஓர்	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ ஓர்

(படர்க்கை உயர்திணைப் பன்மை/உயர்வுப் பன்மை)	பன்மலை இறந்தோர்க்கு (அக.101:17) [இறந்தோர் <இறந்த்+ஓர்; இற (வி)] ‘பல மலைகளைக் கடந்தவனுக்கு’
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ உடன்படுத்தி+ஓர் நீரும் நிலனும் *புணரியோர்* ஈந்து உடம்பும் உயிரும் படைத்திசினோரே (புற.18:22-23) [புணரியோர் < புணரி+ய்(உப)+ஓர்] நீருடனும் நிலத்துடனும் இணைந்தோர் இங்கு (பூமியில்) உடம்பையும் உயிரையும் படைத்தவர்கள்’
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ இசின்+ஓர் தாம் தேரலர் கொல்லோ சேய்நாட்டு … *இறந்திசினோரே* (நற்.302:6-10) [இறந்திசினோரே < இறந்த்+இசின்+ஓர்; இற ‘கடந்து செல்’] ‘வெகுதூரத்திலுள்ள நாட்டிற்குக் கடந்து சென்றவர் யார் என்பது அவனுக்கு நிச்சயமில்லையா?’
	நீரும் நிலனும் புணரியோர் ஈந்து உடம்பும் உயிரும் *படைத்திசினோரே* (புற.18:22-23) படைத்திசினோரே <படைத்த்+இசின்+ஓர்; படை ‘உருவாக்கு’] நீருடனும் நிலத்துடனும் இணைந்தோர் இங்கு (பூமியில்) உடம்பையும் உயிரையும் படைத்தவர்கள்’
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ இன்+ஓர் சென்று தீ நெஞ்சத்து ச் சினம் *நீடினோர்* (பரி.5:73) [நீடினோர் < நீடி+இன்+ஓர்; நீடு ‘நீள்’] ‘அழிக்கும் தீ நெஞ்சத்தில் சினம் நீண்டோர்’
ஓள்	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ ஓள்

(படர்க்கை பெண்பால் ஒருமை)	கன்று புகு மாலை நின்றோள் எய்தி (அக.9:20) ‘கன்றுகள் திரும்பிவரும் மாலைப் பொழுதில் (எனக்கு வேண்டி காத்திருந்து) நின்றவளை சென்றடைந்து’
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+ இசின்+ஓள் வருந்தினாள் அளியள் நீ பிரிந்திசினோளே (குறு.336:6) [பிரிந்திசினோளே < பிரிந் +இசின்+ஓள்; பிரி (வி)] ‘நீ பிரிந்தவள் வருந்தினாள். அவள் இரங்கத்தக்கவள்’
ஓன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	இறந்தகாலப்/முற்றுப் பகுதி+உடன்படுத்தி+ ஓன் நெருனை எம் முன் *தப்பியோன்* தம்பியொடு … நாளை ச் செய்குவன் அமர் (புற.304:4-5,6) [தப்பியோன் <தப்பி+ய்+ஓன்; தப்பு ‘தவறுசெய்’ ‘நேற்று என் அண்ணனுடன் தவறுசெய்தவனின் தம்பியுடன் நான் போர் புரிவேன்’

5.4.9.1.2. இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர்

இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயரை “நிகழ்கால” வினையாலணையும் பெயராகவோ “எதிர்கால” வினையாலணையும் பெயராகவோ உணரலாம்; இரண்டிற்கும் ஒரே வடிவம் தான்; சூழல் எது சரியானது என்பதைத் தீர்மானிக்கும்.

இறந்தகாலமல்லா/முற்றால்லா வினையாலணையும் பெயர்கள் பின்னொட்டாக்கத்தால் ஆக்கப்படுகின்றன. இடம்-எண்-பாலைக் குறிப்பிடும் வினையாலனையும் பெயராகப் பின்னொட்டுகள் இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதியுடன் நெரடியாகவோ *ஆள்* அல்லது *அன்* முன்வரவோ சேர்க்கப்படும்.

5.4.9.1.2.1 இறந்தகாலமல்லா/முற்றால்லா வினையாலணையும் பெயர்களுடன் இணையும் இடம்-எண்-பால் பின்னொட்டுகள்

வ.எண்	இட-எண்-பால் விளக்கம்	இட-எண்-பால் விகுதிகள்
1	தன்மை ஒருமை	என், ஏன்
2	தன்மை பன்மை/உயர்வுப் பன்மை	அம்,ஆம் ஏம்
3	முன்னிலை ஒருமை	ஆய், இ, ஐ, ஓய்
4	முன்னிலை பன்மை/உயர்வுப் பன்மை	ஈர்
5	படர்க்கை ஆண்பால் ஒருமை	அன், அவன், ஆன், ஓன்
6	படர்க்கைப் பெண்பால் ஒருமை	அவள், அள், ஆள், இ, ஓள்
7	படர்க்கை உயர்திணைப் பன்மை	அவர், அர், ஆர், அவர்கள், ஓர்
8	படர்க்கை அஃறிணை ஒருமை	அது, இ
9	படர்க்கை அஃறிணைப் பன்மை	அ, அவை

5.4.9.1.2.2. இறந்தகாலமல்லா/முற்றால்லா வினையாலணையும் பெயர்களின் ஆக்க நுட்பம்

இதன் ஆக்கநுட்பம் பின்னொட்டாக்கம் ஆகும். இதன் ஆக்க அமைப்பு (உருபன் அமைப்பொழுங்கு) பின்வருமாறு அமையும்: இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+ இடம்-எண்-பால் பின்னொட்டு. கீழே தந்துள்ள அட்டவணையில்

இடம்-எண்-பால் பின்னொட்டு	அமைப்பு, எடுத்துக்காட்டுகள் மற்றும் வருமிடம்
அ	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+அ தொறுத்த வயல் ஆரல் *பிறழ்னவும்* ஏறு பொருத செறு உழாது *வித்துனவும்* (பதி.13:1-2)

	பிறழ்ன < பிறழ்ன்+அ; பிறழ் (வி) 'புரள்'; வித்துன <வித்துன்+அ; வித்து (வி) 'விதை'; வித்துன செயப்படுபொருளாகும். ஆரல் மீன் புரளும் உரமிட்ட வயல்கள்; ஏறுகளால் மிதிக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்தாது வித்துகள் விதைக்கப்படும் சேற்று நிலம்.
	நெய்தல் இருங்கண் எருமையின் நிரை *தடுக்குனவும்* (பதி.13:1-2) தடுக்குன <தடுக்குன்+அ; தடு (வி) 'நீர் எருமைகளைத் *தடுப்பன* கரிய கண் போன்ற நெய்தல்மரலர்கள்'
	ஓ மறந்து அறு குளம் *நிறைக்குன்ன* போல அல்கலும் அழுதல் மேவல ஆகி (அக.11:12-14) நிறைக்குன்ன < நிறைக்குன்+அ; நிறை (வி) 'நிரப்பு' '...வற்றிய குளத்தை நிறைப்பது போல (என்னுடைய கண்கள்) நாள்தோறும் கண்ணீர் சிந்துவது...'
	வேண்டுப வேண்டுப வேண்டினார்க்கு அளி (பெரு:444) வேண்டுப < வேண்டுப்+அ; வேண்டுப செயப்ப டுபொருளாகும்; வேண்டு (வி) 'விரும்பு' 'விரும்பியதை விரும்புவர்க்கு அளி'
	நாவாய் *தோன்றுவ* காணாமோ (அக.110:18-19) [தோன்று (வி); தோன்றுவ < தோன்றுவ்+அ; தோன்றுவ செயப்படுபொருளாகும்.] 'நாவாய் தோன்றுவது தெரிகிறாதா?'
	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+அன்+அ உடங்கு *கொட்பன* போல் புகுத்தனர் தொழூஉ (கலி.105:22) [கொட்பன <கொட்ப்+அன்+அ; கொள் 'சுற்று' 'அவர்கள் ஏறுகளை சுற்றுவன பொல் தொழுவத்தில் புகுத்தினர்'
	அரி பரிப்பு *அறுப்பன* (கலி.103:24)

	[அறுப்பன <அறுப்ப்+அன்+அ; அறு (வி) 'வெட்டு'] 'தமது பகைவர்களின் குடல்களை அறுப்பனவாகிய ஏறுகள்/காளைகள்'
	வனப்பு உற க் *கொள்வன* நாடி அணிந்தள் (கலி.82:19) [கொள்வன <கொள்வ்+அன்+அ; கொள்வ் 'ஏல்'] 'வனப்பை பெறுவதற்காக பொருந்துவன நாடி அணிந்தாள்'
அது (படர்க்கை அஃறிணை ஒருமை	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+ அது நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான் எல்லாரும் *உவப்பது* (புற.195:6-8) உவப்பது < உவப்ப்+அது; உவ (வி) 'மகிழ்' 'நீங்கள் நல்லதைச் செய்ய இயலாவிடினும் கெட்டதைச் செய்வதை ஒதுக்குங்கள்; அதுதான் எல்லோரும் மகிழ்வது'
	உண்பது நாழி உடுப்பவை இரண்டே (புற.189:5) உண்பது <உண்ப்+அது; உண் (வி) 'சாப்பிடு' 'ஒருவர் உண்பது நாழி அள்வே; ஒருவர் உண்பது இரண்டு (துண்டு துணி) தான்'
	செல்லுநர்க்கு உறுவது கூறும்…பல்லிய காடு (அக.151:12-13,15) [உறுவது < உறுவ்+அது; உறு (வி) 'சம்பவி'] 'செல்பவர்களுக்கு நடப்பதைக் கூறும் பல்லி உள்ள காடு'
	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+ உடன்படுத்தி+அது தன் கண் கண்டது பொய்க்குவது அன்றே (குறு.26:5) [பொய்க்குவது <பொக்கு+வ்+அது; பொய் (வி)] '(குரங்கு) தன் கண்ணால் கண்டது பொய்ப்பது இல்லை'
	சேர்ந்ததை செலினே *சிதைகுவது* உண்டோ (அக.120:13) [சிதைகுவது <சிதைகு+வ் (உப)+அது; சிதை (வி) 'அழி'] 'நீ தங்கிவிட்டு (பின்னர்) சென்றால் சிதைவது (அழிவது) ஏதேனும்

	உண்ட்டோ?’
அம் தன்னிலை ஒருமை	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+ அம் சென்மோ பெரும எம் விழவு உடை நாட்டு என யாம் தன் *அறியுனம்* ஆக (புற.381:4-6) [அறியுனம் <அறியுன்+அம்; அறி (வி)] ‘நாம் அவனிடம் அறிவிப்பது போல் “நாம் நமது விழா உள்ள நாட்டிற்குச் செல்வோம்”
அர் (படர்க்கை உயர்திணை பன்மை/உயர்வுப் பன்மை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+ அர் அருள் வல்லை ஆகுமதி அருள் இலர் கொடாமை *வல்லர்* ஆகுக … நின் பகை (புற.27:18-17) [வல்லர் <வல்+அர்; வல் (வி.) ‘வலுவாயிரு’] ‘நீர் கொடுப்பதைல் வல்லவர் ஆகுக; உன் பகையவர் கொடாமையில் வல்லவர் ஆகுக’
	கவிழ்ந்த மண்டை *மலர்க்குனர்* யார் (புற.103:3) [மலர்க்குனர் < மலர்க்குன்+அர்; மலர் ‘விரி; திருப்பு’] ‘கவிழ்க்கப்பட்ட நமது (பிச்சை) பாத்திரத்தை திருப்புபவர் யார்?’
	ஆர் அஞ்சர் உறுநர் அரு நிறம் சுட்டி க் கூர் எஃகு *எறிஞர்* (அக.71:11-12) [எறிஞர் < எறிஞ்+அர்; எறி (வி)] ‘மானின் நெஞ்சில் கூர்மையான வேல்களை எறிபவர் ஏற்கனவே கடுமையான துன்பத்தை அனுபவிப்பவர்’
	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி+ அன்+அர் *வரைவனர்* காதலர் புகுதர (கலி.134:26) [வரைவனர் <வரைவ்+அன்+அர்; வரை ‘விரை’] ‘அவரசரப் படுத்தப்படுபவர் போல் அவர் காதலர் வந்துசேர’
	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + உடன்படுத்தி + ஆள் + அர்

	எம் குழிசி மலர்க்கும் கடன் அறியாளர் பிற நாட்டு இன்மையின் (புற.393:4-5) [அறியாளர் < அறி + ய் (உப)+ஆள்+அர்; அறி (வி)] [எம்முடைய குழிசியை திருப்பி அனுப்பும் கடமையை அறிபவர் பிற நாட்டில் இல்லை]
அவர் படர்க்கை உயர்திணை பன்மை/உயர்வுப் பன்மை	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அவர் மனை வயின் இருப்பவர் (அக.389:10) [இருப்பவர் <இருப்ப்+அவர்; இரு (வி)] 'வீட்டில் இருப்பவர்'
	அதரி கொள்பவர் (மது:94) [கொள்பவர் <கொள்ப்+அவர்; கொள் (வி)] 'வைக்கோலைக் கொள்பவர்/எடுப்பவர்'
அவள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அவள் ஊடு மென் சிறு கிளி *உணர்ப்பவள்* (கலி.72:4) [உணர்ப்பவள் <உணர்ப்ப்+அவள்; உணர் (வி)] 'ஊடும் சிறு கிளியை இணங்கச்செய்பவள்'
அவன்	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அவன் அம் மலை எடுக்கல் செலாது உழப்பவன் (கலி.38:4-5) [உழப்பவன் < உழப்ப்+அவன்; உழ (வி)] 'அம்மலையை தூக்க இயலாமல் உழப்பவன்'
	வரைபவன் என்னின் அகலான் (கலி.146:27) [வரைபவன் <வரைப்+அவன்; வரை (வி) 'தேர்ந்தெடு] [என்னைத் தேர்ந்தெடுப்பவன்/வரைபவன் என்னைவிட்டு அகலமாட்டான்'
அவை (படர்க்கை	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அவை உண்பது நாழி உடுப்பவை இரண்டே (புற.189:5)

அஃறிணை ஒருமை)	உடுப்பவை < உடுப்ப்+அவை; உடு (வி) 'அணி' 'ஒருவர் உண்பது நாழி அளவு; ஒருவர் உடுப்பது இரண்டு (துண்டு துணி)'
	உருகுபவை போல் என்பு குளி கொளீஇ (பொரு.78) [உருகுபவை <உருகுப்+அவை; உருகு (வி)] 'உருகுபவை போன்று எலும்புகள் குளிர்ந்து…'
அள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அள் நெடுஞ்சுழி நீட்டம் மண்ணுநள் போல (அக.62:10) [மண்ணுநள் <மண்ணுந்+அள்; மண்ணு (வி) 'கழுவி சுத்தம் செய்'] 'நீண்ட சிற்றலைகளுடன் கழுவுபவள் போல'
	நீள் நகர்…நினையுநள் வதிந்தக்கால் (கலி.126:14) நினையுநள் < நினையுந்+அள்; நினை (வி) 'எண்ணு' 'தன் பெரிய வீட்டில் தங்கியபோது (உன்னைப்பற்றி) நினைப்பவள்'
	அவ் இசை முழை ஏற்று அழைப்ப அழைத்துழி ச் செல்குவள் (பரி.19:63-65) [செல்குவள் <செல்குவ்+அள்; செல் (வி)] 'செல்பவள்'
அன்	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அன் நின் வெய்யன் ஆயின் அவன் வெய்யை நீ ஆயின் (கலி.107:21) [வெய்யன் <வெய்+அன்; வெய் 'விரும்பு'] அவன் நீ விரும்புவன் ஆனால் நீ அவன் விரும்புவள் ஆவாய்'
	காடு முன்னினனே கள் காமுறுநன் (புற.238:5) [காமுறுநன்<காமுறுந்+அன்; காமுறு (வி)] 'கள்ளை விரும்புவன் காட்டை நினைப்பான்'
	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அன்+அன்

	கொழுங்குறை...விரைவனன் சுட்டு ... திம் என த் தருதலின் (புற.150:9, 12 , 13) விரைவனன் <விரைவ்+அன்+அன் 'விரைப்பவன்'
ஆம் (தன்மைப் பன்மை/ உயர்வுப் பன்மை	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஆம் ஐயனை *ஏத்துவாம்* போல (கலி.43:5) ஏத்துவாம் 'புகழும் நாம்' < ஏத்துவ்+ஆம் 'கடவுளை/தலைவனை புகழும் நம்மைப் போல'
ஆய் (முன்னிலை ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஆய் வழங்கா ப் பொழுது நீ கன்று மேய்ப்பாய் போல் வழங்கல் (கலி.112:12-13) [மேய்ப்பாய் < மேய்ப்ப்+ஆய்; மேய் (வி)] 'யாரும் சுற்றிகொண்டிருக்காத பொழுது நீ கன்று மேய்ப்பாய் போல் சுற்றிகொண்டிருப்பது'
ஆர் படர்க்கை உயர்திணை பன்மை/உயர்வுப் பன்மை	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஆர் யாழின் புரி நெகிழ்ப்பார் (பரி.18:36-37) [நெகிழ்ப்பார் < நெகிழ்ப்ப்+ஆர்; நெகிழ் (வி)] 'யாழின் புரியை நெகிழ்ப்பவர்'
	அறிவார் யார் அவர் முன்னியவ்வே (நற்ற்.296:9) [அறிவார் < அறிவ்+ஆர்; அறி (வி)] 'அவன் விரும்பியதை அறிபவர் யார்?'
	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அன்+ஆர் காலை ஆவது அறியார் மாலை என்மனார் மயங்கியோரே (கலி.119:15-16) [என்மனார் < என்ம்+அன்+ஆர்; என் (வி)] 'காலை என்று அறியாமல் மாலை என்று கூறுபவர் மயங்கியவர்

	ஆவார்’
ஆர்(கள்) (படர்க்கை உயர்திணை பன்மை/ உயர்வுப் பன்மை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஆர்[கள்] வாழ்வார்கட்கு (கலி.145:17) வாழ்வார்கட்கு < வாழ்வ்+ஆர்கள் ‘வாழ்பவர்கள்’
ஆள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஆள் பைதல் நோய் உழப்பாளை... நீங்கீன்றால் பசப்பே (கலி.130:18, 21) [உழப்பாளை < உழப்பாள் + ஐ; உழப்பாள் < உழப்ப்+ஆள்; உழ (வி) ‘வருந்து’] ‘காதல் நோயால் வருந்துபவளை பசப்பு நீங்கியது’
	நீ எம்மை எள்ளுதல் மறைத்தல் ஓம்பு என்பாளை (பரி.18:9-10,13) [என்பாளை < என்ப்+ஆள்; என் (வி)] ‘நீ எங்களை வெறுக்கிறாய் என்பதை மறைப்பதை விட்டுவிடு என்பவளை’
	அரங்கின் மேல் ஆடுவாள் அணி நுதல் [ஆடு (வி); ஆடுவாள் (<ஆடுவ்+ஆள்)] ‘அரங்கில் ஆடுபவளின் அழகான நெற்றி’
ஆன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஆன் புது நாண் நுழைப்பான் நுதி மாண் வள் உகிர் (குறு.67:3) [நுழைப்பான் < நுழைப்ப்+ஆன்; நுழை (வி)] ‘புதிய நூலை நுழைப்பவன்...’
	உற்றாரின் நீங்கலம் என்பான் மலை (கலி.40:28-29) [என்பான் <என்ப்+ஆன்; என் (வி)]

	‘நாம் உற்றாரை விட்டு நீங்கவேண்டாம்’ என்பவன் /என்று கூறுபவன் மலை’
இ (முன்னிலை ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + இ எம் உயிர் உடம்பு அடுவி (அக.136:19) [அடு (வி) ‘கொல்’; அடுவி ‘கொல்லும் நீ’ < அடுவ் + இ] ‘என் உயிரையும் உடலையும் கொலும் நீ’
இ (படர்க்கைப் பெண்பால் ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + இ கங்குல் உயவு த் துணை ஆகிய துஞ்சாது உறைவி இவள் (அக.298:22-23) [உறைவி ‘தங்குபவள்’ < உறைவ்+இ; உறை (வி) ‘தங்கு’] ‘அவள் இரவில் நான் கருதும் துணை ஆனவள் மற்றும் தூங்காமல் தங்குபவள்’
ஈர் (முன்னிலை பன்மை/உயர்வுப் பன்மை	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஈர் வருவீர் உளீரோ (குறு.118:4) [வருவீர் ‘வரும் நீர்’ < வருவ்+ஈர்; வர் (வி)] ‘(வீட்டிற்குள்) வருவீர் (=வருபவரகிய நீர்) யாராவது உள்ளனரோ?’
என் (தன்மை ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + என் வா எனக் கூறுவென் போலக் காட்டி மற்று அவன் மே வழி மேவாய் நெஞ்சே (கலி.47:22-24) [கூறுவென் < கூறுவ்+என்; கூறு (வி)] ‘கூறுபவனாகிய நான்’
	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + அன்+என் யான் தன் கரைய வந்து விரைவனென் கவைஇ…நாணி நின்றோள் (அக.16:13-14, 16) விரைவனென் < வரைவ்+அன்+என் ‘விரைபவனாகிய நான்’

ஏம் (தன்மைப் பன்மை/ உயர்வுப் பன்மை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஏம் கன்றொடு செல்வேம் எம் தாம்பின் ஒரு தலை பற்றினை (கலி. 116:1-2) [செல்வேம் 'செல்லும் நாங்கள்' <செல்வ்+ஏம்; செல் (வி)] 'கன்றுகளோடு செல்பவர்களாகிய எங்கள் கயிற்றின் ஒரு நுனியை நீ பற்றியுள்ளாய்'
ஏன் (தன்மை ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஏன் என் நலம் தாராயோ என *தொடுப்பேன்* போல (கலி.128:10-11) [தொடுப்பேன் <தொடுப்ப்+ஏன்; தொடு (வி)] 'என் நலத்தைத் தரமாட்டாயா? என்று (அவனை) தொடுப்பேன் (=எதிர்கொள்பவனாகிய நான்) போல'
	காண்பேற்கு (நற்ற்.332:8) [காண்பேற்கு < காண்பேன்+கு; காண்பேன் < காண்ப்+ஏன்; காண் (வி)] 'காண்பவனாகிய எனக்கு'
ஐ (முன்னிலை ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஐ நின் வெய்யன் ஆயின் அவன் வெய்யை நீ ஆயின் (கலி.107:21) [வெய்யை 'விரும்பும் நீ' < வெய்+ஐ; வெய் 'விரும்பு'] 'அவன் நீ விரும்புவன் ஆனால் நீ அவன் விரும்புவள் ஆவாய்'
	அருள வல்லை ஆகுமதி அருள் இலர் கொடாமை வல்லர் ஆகுக…நின் பகை (புற.27:17-18, 19) [வல்லை 'வல்ல நீ'< வல்+ஐ; வல் (வி)] 'நீ கொடுப்பதில் வல்லவனாகுக; உனது பகைவர் அருள் இல்லாமல் கொடாதவர் ஆகுக'
	பகைவர் பணிந்து திறை பகர க் கொள்ளுனை ஆதலின் (பதி.17:2-3)

	‘உன் பகைவர் பணிந்து திறை செலுத்த உடன்பட ஏற்றுக்கொள்ளும் நீ ஆதலால்’ [கொள்ளுநை (கொள்ளுந்+ஐ) ‘ஏற்கும் நீ’]
ஓய் (முன்னிலை ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஓய் மனைவி மெல் இறை ப் பணைத்தோள் துயில் அமர்போயே (நற்.121:11-12) [அமர்போய் < அமர்ப்+ஓய்; அமர் (வி)] ‘மனைவியின் மெல்லிய உறுதியான தொளில் துயிலுகின்ற நீ’
	பொருள் வயின் செல்வோய் (கலி.12:9) செல்வோய் < செல்வ்+ஓய்; செல் (வி)] ‘பொருளைத் தேடிச் செல்கிற நீ’
ஓர் (படர்க்கை உயர்திணைப் பன்மை/உயர்வுப் பன்மை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஓர் என் இரவல் மண்டை மலர்ப்போர் யார் (புற.179:2-3) மலர்ப்போர் <மலர்ப்ப்+ஓர்; மலர் (வி) ‘என் பிச்சைப் பாத்திரத்தை கவிழ்ப்பவர் யார்?’
	நோற்றோர் மன்ற தொழி…பிர்ந்து உறை காதலர் வர க் காண்போரே (குறு.344:1,8) காண்போர் < காண்ப் +ஓர் ‘காண்பவர்’
	யானே அன்றியும் உளர் கொல்…நோக்கு அரும் சிறு நெறி நினையுமோரே (நற்.104:8,12) [நினையுமோர் ‘நினைப்பவர்’ <நினையும் +ஓர்] ‘காண்பதற்கு அரிய சிறு வழியை நினைப்பவர் என்னைத் தவிர யாரும் உள்ளனரா?’
	தேற்றாம்…கண் கலிழ் உகு பனி அரக்குவோரே (குறு 398:1,8)

	[அரக்குவோர் (அரக்குவ்+ஓர்) ‘துடைப்பவர்] ‘என் கண்களிலிருந்து நிறைந்து வழியும் கண்ணீரை துடைப்பவரை நாங்கள் அறியோம்’
	நிரை மாடம் ஊர்குவோர் (பரி 10:27) [ஊர் (வி) ‘ஏறு’; ஊர்குவோர் ‘ஏறுபவர்’ (<ஊர்குவ்+ஓர்] ‘மேல்மாடங்களின் நிரைகளில் ஏறுபவர்’
	யாங்கு அறிந்தனர் … தோழி…பிரிந்து சேண் உறைதல் வல்லுவோரே (குறு 154.1, 8) [வல்லுவோர் ‘வல்லவர்’ (வலுவ்+ஓர்); வல் ‘வலுவாயிரு’] ‘என்னிடமிருந்து பிரிந்து தொலைவில் வாழ்வதற்கு வல்லவரை எப்படி அறிந்தார்?’
	வள்ளன்மையின் எம் வரைவோர் யார் (புற 393:6) [வரை (வி) ‘தெரிந்தெடு’; வரைவோர் ‘தெரிந்தெடுப்பவர்’ (வரைவ்+ஓர்)] ‘வள்ளன்மையிலிருந்து எம்மை (காக்க) தெரிந்தெடுப்பவர் யார்?’
ஓள் (படர்க்கை பெண்பால் ஒருமை)	இறந்தகாலமல்லா/முற்றல்லாப் பகுதி + ஓள் உழையம் ஆகவும் இணைவோள் பிழையலள்… பிரிதும் நாம் எனினே (அக.5:27-28) [இணையோள் < இணைவ்+ஓள்; இணை ‘வருந்து’] ‘வருந்துபவள்’
ஓன் (படர்க்கைப் பெண்பால்	நீயே முன் யான் அறியுமோனே (புற.137:4) [அறியுமோன் ‘அறிபவன்’ < ஆறியும்+ஓன்] ‘நீ தான் நாம் முன்னர் அறிந்தவன்’

5.4.9.1.3. எதிர்மறைவினையாலணையும் பெயர்

எதிர்மறை வினையாலணையும் பெயர் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் காட்டாது. எனவே இறந்தகால மற்றும் இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர்களுக்கும் ஈடாக ஒரு வகை எதிர்மறை வினையாலணையும் பெயர் மட்டுமே உள்ளது.

5.4.9.1.3.1. எதிர்மறைவினையாலணையும் பெயர்களின் உருவாக்கம்

எதிர்மறை வினையாலணையும் பெயர் பின்னொட்டாக்கத்தால் உருவாக்கப்படுகின்றன.

(1) நெட்டுயிரில் தொடங்கும் இட-எண்-பால் பின்னொட்டு நேரடியாக வெற்று வினைப் பகுதியில் சேர்க்கப்படுகின்றது.

(2) *அல்* அல்லது *ஆத்* வெற்று வினைப்பகுதியில் சேர்க்கப்பட்டு அதனுடன் இட-எண்-பால் பின்னொட்டு சேர்க்கப்படும்.

(3) *அல் க்(க்)*-இல் முடிவுறும் இறந்தகாலமல்லாப்/முடிவுறாப் பகுதியில் சேர்க்கப்பட்டு, சில வேளைகளில் *ஆத்-ஆல்* தொடரப்பட்டு அதனுடன் இட-எண்-பால் பின்னொட்டு சேர்க்கப்படும்.

(4) *இல்* இறந்தகாலப்/முற்றுப் பகுதியில் சேர்க்கப்பட்டு அதனுடன் இட-எண்-பால் பின்னொட்டு சேர்க்கப்படும்.

5.4.9.1.3.2 **எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கச் சேர்க்கப்படும் இட-எண்-பால் பினொட்டுக்கள்**

	இட-எண்-பால் விளக்கம்	**இட-எண்-பால் பின்னொட்டுகள்**
1	தன்மை ஒருமை	ஏன்
2	தன்மைப் பன்மை/உயர்வுப் பன்மை	ஆம், ஏம்

3	முன்னிலை ஒருமை	ஆய், இ, ஓய்
4	முன்னிலை பன்மை/உயர்வுப் பன்மை	ஈர்
5	படர்க்கை ஆண்பால் ஒருமை	அவன், அன், ஓன்
6	படர்க்கைப் பெண்பால் ஒருமை	ஆள், ஓள்
7	படர்க்கை உயர்திணைப் பன்மை	அர், அவர், ஆர், ஓர், மார்
8	படர்க்கை அஃறிணை ஒருமை	அது
9	படர்க்கை அஃறிணைப் பன்மை	அ, ஆ

5.4. 9.1.3.3. ஆக்க நுட்பம்

இதன் ஆக்கநுட்பம் பின்னொட்டாக்கம் ஆகும். இதை பின்வரும் வகைகளாகப் பிரித்து ஆயலாம்:

(1) வெற்று வினைப்பகுதி + நெட்டுயிருடன் இட-எண்-பால் பின்னொட்டு

(2) வெற்று வினைப்பகுதி+ *அல்* அலது *ஆத்* +இட-எண்-பால் பின்னொட்டு

(3) (*க்*)*க்* என முடிவுறும் இறந்தகாலமல்லாப் பகுதி + *அல்*+/-*ஆத்*+ இட-எண்-பால் பின்னொட்டு

(4) இறந்தகாலப் பகுதி + *இல்* + இட-எண்-பால் பின்னொட்டு

அல், ஆத், இல் என்பன எதிமறைப் பின்னொட்டுக்களாகும். பின்வரும் அட்டவணை எதிமறை வினையாலணையும் பெயர்களை ஆக்குவதற்கான பின்னொட்டுக்களையும்,

அமைப்பொழுங்குகளையும் எடுத்துக்காட்டுகளையும் அவை சங்ககால இலக்கியங்களில் இடங்களையும் பட்டியலிட்டு விளக்கம் தருகின்றது.

இட-எண்-பால் பின்னொட்டு	**அமைப்பும் எடுத்துக்காட்டுகளும் வருமிடங்களும்**
அ (படர்க்கை அஃறிணைப் பன்மை)	வெற்றுப் பகுதி+ஆத்+அ செய்யாத சொல்லி ச் சினவல் (கலி.81:27) [செய் (வி); செய்யாத 'செய்யாதன' < செய் + ஆத் + அ; செய்யாத செயப்படுபொருள் ஆகும்] 'நான் செய்யாததைச் சொல்லி கோபப்படாதே'
அது (படர்க்கை அஃறிணை ஒருமை)	வெற்றுப் பகுதி + ஆத் + அது நிழல் போல் திரிதருவாய் என் நீ பெறாதது (கலி.61:8-9) [பெறு (வி); பெறாதது <பெறு+ஆத்+அது] 'நீ (என்) நிழல் போல் திரிந்துகொண்டிருப்பாய்; நீ பெறாதது என்ன?'
அர் (படர்க்கை உயர்திணைப் பன்மை/ உயர்வுப் பன்மை)	வெற்றுப் பகுதி+அல்+அது ஒன்னலர் எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தர (புற.274:4-5) [ஒன் 'சம்மதி, சேர்'; ஒன்னலர் 'பகைவர்' < ஒன் + அல் + அர்] 'உடன்படாதவர்கள்/சேராதவர்கள் 'மற்றும் வேலின் வலிமை உடையவர் தங்கள் குதிரைகளுடன் அலைய'
	பொருந்தலர் அரிமண வாயில் (அக.266:12-13) [பொர்ந்து 'உடன்படு' பொருந்தலர் < பொருந்து+அல்+அர் 'பொருந்தாதவர்களுக்கு அரிமணவாயில்'

அவர்	வெற்றுப் பகுதி+ஆத்+அவர் தொழு துறந்து அருளதவர் போல் (கலி.128:1) [அருள் (வி.); அருளாதவர் < அருள்+ஆத்+அவர்] (என்) தோள்களைத் துறந்து அருள்செய்யாதவர் போல்
	வெற்றுப் பகுதி+அல்+ஆத்+அவர் சொல்லுதல் உற்று உரைக்கலாதவர் (கலி.61:4) [உரை 'கூறு'; உரைக்கலாதவர் < உரைக்க்+அல்+ஆத்+அவர் 'சொல்லுவதற்கு விரும்பி ஆனால் சொல்ல இயலாதவர்'
அவன்	வெற்றுப் பகுதி+ ஆத் +அவன் குரை காண நோயுள் அழுந்தாதவனை ப் புரை தவ க் குறி க் கொடுமை நுவல்வீர் (கலி.146:25-26) [அழுந்து (வி) 'மூழ்கு'; அழுந்தாதவனை <அழுந்து+ஆத்+அவன்] 'எல்லையில்லா (காதல்) நோயில் மூழ்காதவனை...'
ஆ(அ) (படர்க்கை அஃறிணை ஒருமை)	வெற்றுப் பகுதி+ ஆ உடாஅ போரா ஆகுதல் அறிந்தும் படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம் கோ (புற.141:10-11) உடு (வி) 'அணி'; உடாஅ 'அணியாதது' < உடு + ஆ'; போர் (வி); போரா 'போர்த்தாதது' < போர்+ஆ] 'அது (மயில்) (போர்வையை) அணியாதது/போர்த்தாதது என்று அறிந்தாலும் மயிலுக்குப் போர்வை கொடுத்த நமது அரசர்'
	வெற்றுப் பகுதி+ உடன்படுத்தி+ஆ ஒவ்வா யா உள (புற.167:9)

	[ஒவ்வா 'ஒவ்வாதது' < ஒ + வ்வ் (உப)+ஆ] '(உனக்கு) பொருந்தாதது என்ன இருக்கின்றது'
ஆம் (முன்னிலைப் பன்மை/உயர்வுப் பன்மை)	வெற்றுப் பகுதி+ ஆம் அழாஅம் உறைதலும் உரியம் (அக.113>23) [அழு (வி); அழாஅம் < அழு + ஆம் 'அழாத நான்'] 'அழாத நான் தங்குவதற்கு உரிமை இருக்கிறது'
ஆய் (முன்னிலை ஒருமை)	வெற்றுப் பகுதி+ ஆத்+ ஆய் என் நலியும் நோய் மடமையான் உணராதாய் (கலி.58:11-12) [உணர் 'புரி'; உணராதாய் 'உணராத நீ' < உணர் + ஆத் + ஆய்] 'என்னை நலியச்செய்யும் (காதல்) நோயை உணராத நீ'
	வெற்றுப் பகுதி+ அல்+ ஆய் மெய்யை ப் பொய் என்று மயங்கிய கை ஒன்று அறிகல்லாய் பொறி காண் நீ (கலி.95:25-26) [அறி (வி); அறிகல்லாய் 'அறியாத நீ' < அறிக்+அல்(ல்)+ஆய்] 'உண்மையைப் பொய் என்று மயங்கி ஒன்றும் அறியாத நீ …'
ஆர் (படர்க்கை உயர்திணைப் பன்மை/உயர்வுப் பன்மை)	வெற்றுப் பகுதி+ ஆர் அவர் பொய்யார் ஆகுதல் தெளிந்தனம் (கலி.150:21-22) [பொய் (வி); பொய்யார் 'பொய்யதவர்' < போய் + ஆய்] 'அவர் பொய்யாதவர்/பொய்கூறாதவர் என நாம் அறிவோம்'
	என்றும் சான்றோர் சான்றோர் ஆப சாலார் சாலார்

	பலர் ஆகுபவே (புற.218:5-8) [சால் (வி); சாலார் 'சான்றோராயிராதார்' < சால்+ஆர்] 'சான்றோர் சான்றோர்களைச் சார்வர்; சான்றோரல்லாதார் சான்றோரல்லாதவர்களைச் சார்வர்'
	கூற்றத்தனையை ஆகலின் போற்றார் இரங்க விளிவது கொல்லோ (புற.98:17-18) [போற்று (வி); போற்றார் 'புகழாதவர்' < போற்று+ஆர்]
	ஒன்னார் யானை ஓடை ப் பொன்கொண்டு (புற.126:1) [ஒன் (வி) 'சேர், இணை, பொருந்து, உடன்படு'; ஒன்னார் 'உடன்படாதவர்' < ஒன்+ஆர்] 'உடன்படாதவரைச் சார்ந்த யானையிலிருந்து பொன்னை எடுத்து'
	எவ்வி ஏவல் மேவார் நெடு மிடல் (அக.266:11-12) [மேவு (வி); மேவார் 'ஏற்காதவர்' < மேவு+ஆர்] 'எவ்வியின் ஏவலை ஏற்காத நீண்டு நிற்கும் வலிமை'
	இறந்தகாலமல்லாப்/முற்றுறாப் பகுதி + ஆத் + ஆர் நள்ளாதார் மிடல் சாயத்த வல்லாள (புற.125:5-6) [நள் 'நட்பாயிரு'; நள்ளாதார் 'நட்பாயிராதவர்' < நள்+ஆத்+ஆர்] 'உன்னிடம் நட்பாயிராதவரின் வலிமையை தோற்கச்செய்த வல்லவரே'
	இறந்தகாலப்/முற்றுப் பகுதி + இல் + ஆர் தண் தமிழ் ஆய்வந்திலார் கொள்ளார் இக் குன்று பயன் (பரி.9:25-26) [ஆய் (வி); ஆய்வந்திலார் <ஆய்வந்த் +இல் +ஆர்]

	‘தண் தழிழை ஆயாதவர் (பரங்குன்று) மலையின் விளைவை ஏற்றுக்கொள்ளமாட்டார்’
ஆள் (படர்க்கைப் பெண்பால் ஒருமை)	வெற்றுப் பகுதி+ ஆத்+ஆள் நீ நீப்பின் வாழாதாள் முலை (கலி.2:13-14) [வாழ் (வி); வாழாதாள் ‘வாழாதவள்’ <வாழ்+ஆத்+ஆள்] ‘நீ போனால் வாழாதவளின் முலை’
ஆன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	வெற்றுப் பகுதி+ ஆன் அறம் சாரான் மூப்பே போல் அழிதக்காள் (கலி.38:19) [சார் (வி); சாரான் < சார்+ஆன்] ‘அறத்தைச் சாராதவன் மூப்பு போல் அழிகின்றவள்’
	வெற்றுப் பகுதி+ ஆத்+ஆன் ஒறுகத்துள் உதவியார்க்கு உதவாதான் (கலி.149:6) [உதவு (வி); உதவாதான் ‘உதவாதவன்’ < உதவு + ஆத் +ஆன்] ‘ஏழ்மையில் (தனக்கு) உதவியர்க்கு உதவாதவன்’
இ (முன்னிலைப் ஒருமை)	வெற்றுப் பகுதி + இ நாண் இலி நீ (கலி.116:17) [நாண் ‘நாணம்’; இல் (வி) ‘இல்லாதிரு’; இலி ‘இல்லாத நீ’ < இல்+இ] ‘நீ நாணம் இல்லாதவள் ஆவாய்’
ஈர் (முன்னிலைப் பன்மை/உயர்வுப் பன்மை)	வெற்றுப் பகுதி + உடன்படுத்தி+ஆத்+ஈர் என் நீர் அறியாதீர் போல இவை கூறல் (கலி.6:7) [அறி (வி); அறியாதீர் ‘அறியாத நீ’> அறி+ய் (உப) + ஆத்+ஈர்] ‘என் இயல்பை அறியாவனாய் நீ இவற்றைக் கூரினாய்’

ஏம் (தன்மைப் பன்மை/உயர்வுப் பன்மை)	வெற்றுப் பகுதி + ஏம் யாம் முந்துறுதல் செல்லேம் ... சுரத்து அல்கியேம் (அக.261:11-12) [செல் (வி) செல்லேம் 'போகாத நாங்கள்' <செல் +ஏம்] 'விரைந்து செல்லாத நாங்கள்... காட்டில் தங்கினோம்'
ஏன் (தன்மை ஒருமை)	வெற்றுப் பகுதி + ஆத்+ஏன் அஞ்சுவது நோயொடு துஞ்சாதேனே (அக.45:19) [துஞ்சு (வி) 'தூங்கு'; துஞ்சாதேன் 'தூங்காத நான்' <துஞ்சு+ஆத் +ஏன்] '(காதல்) நோயைப் பயந்து தூங்காத நான்'
ஓர் (படர்க்கை உயர்திணைப் பன்மை/உயர்வுப் பன்மை)	வெற்றுப் பகுதி + ஆத்+ஓர் நின் உணராதோரே (பதி.51:24) 'உன்னை உணராதவர்' [உணர் (வி)உணராதோர் 'உணராதவர்' < உணர்+ஆத்+ஓர்]
	இன்னாய் பெரும நின் ஒன்னாதோர்க்கே (புற.94:5) 'ஐயா, உன்னுடன் பொருந்தாதவர்க்கு நீ இனியவன் அல்லன்' [ஒன் (வி) 'உடன்படு, இணை'; ஒன்னாதோர் 'பொருந்தாதவர்' < ஒன்+ஆத்+ஓர்]
ஓள் (படர்க்கைப் பெண்பால் ஒருமை)	வெற்றுப் பகுதி + உடன்படுத்தி+ ஆத் + ஓள் காந்தள் முழ முதல்...இல் உயத்து நடுதலும் கடியாதோளே (குறு.361:4,6) 'காந்தளின் வேர் முதல் கொண்டுவந்து நடுவதையும் கடியாதவள்' [கடி (வி); கடியாதோள் 'கடியாதவள்' < கடி + ய் (உப)

	+ஆத் + ஓள்]
ஓன் (படர்க்கை ஆண்பால் ஒருமை)	வெற்றுப் பகுதி + ஆத்+ஓன் மலை கெழீஇய நாடு உடன் கொடுப்பவும் கொள்ளாதோனெ (புற.232:5-6) ‘முழு மலை நாட்டையும் தந்தாலும் ஏற்காதவன்’ [கொள் (வி) ‘ஏல், எடு’; கொள்ளாதோன் ‘ஏற்காதவன்’ < கொள்+ஆத்+ஓன்]
மார் (படர்க்கை உயர்திணைப் பன்மை)	வெற்றுப் பகுதி + அல்+மார் மகளிர் நெய்தல் கேளன்மார் நெடுங்கடையானே (புற.389:16, 17) ‘உன் பெரிய முற்றத்தில் நிற்கும் பெண்கள் நெய்தல் முரசொலியைக் கேட்காதவர்கள்’ [கேள் (வி); கேளன்மார் ‘கேட்காதவர்கள்’ < கேள்+அல்+மார்]

இங்கு தந்துள்ள *கேளன்மார்* என்பதன் பகுப்பாய்வு மரபுப் பகுபாய்விலிருந்து வேறுபடும். எடுத்துக்காட்டாக, சேனாவரையர் இதுபோன்ற சொல்வடிவான *காணன்மார்* என்பதை ‘காணாதவர்’ என்ற எதிர்மறை வினைமுற்றாகக் கொள்வார் (பார்க்க) தொல்காப்பியம், சொல்லதிகாரம்; 135, விதி 207).

5.4.9.2. வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்

5.4.9.2.1. இறந்தகால வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்

சங்ககாலத் தமிழில் உடன்பாட்டு வினையாலணையும் பெயராக்கத்திற்கான இட-எண்-பால் விகுதிகள் ஒன்பது வகைகளாகப் பிரிக்கப்பட்டு தரப்பட்டுள்ளன. இவற்றில்

பின்வரும் வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை அல்லது சாத்தியமில்லை எனலாம்:

(1) தன்மை ஒருமை **வினையாலணையும் பெயர்கள்**

(2) **தன்மைப் பன்மை வினையாலணையும் பெயர்கள்**

(3) முன்னிலை ஒருமை **வினையாலணையும் பெயர்கள்**

(4) முன்னிலை பன்மை **வினையாலணையும் பெயர்கள்**

தற்காலத் தமிழைப் பொருத்தவரையில் படர்க்கை வினையாலணையும் பெயர்கள் தான் பயன்பாடில் உள்ளன. சங்ககாலத் தமிழ் படர்க்கை ஆண்பால் ஒருமை வினையாலணையும் பெயர் பின்னொட்டுக்களாக *அன், அவன், ஆன், ஓன்* என்பனவற்றைப் பயன்படுத்துகின்றது. இவற்றில் *அன், அவன்* என்ற இரண்டை மட்டுமே தற்காலத் தமிழ் பயன்படுத்துகின்றது. படர்க்கை பெண்பால் ஒருமை வினையாலணையும் பெயராக்க ஒட்டுக்களாக சங்காலத் தமிழ் அவள், அள், ஆள், ஓள் என்பவைகளைப் பயன்படுத்துகின்றது. ஆனால் தற்காலத் தமிழ் அவள், அள் என்ற இரண்டை மட்டுமே பயன்படுத்துகின்றது. படர்க்கை உயர்திணைப் பன்மை வினையாலணையும் பெயராகச் சங்ககாலத் தமிழ் *அவர், அர், ஆர், ஓர்* என்பனவற்றைப் பயன்படுத்துகின்றது. தற்காலத் தமிழ் இவற்றில் *அவர், அர்* என்ற இரண்டை மட்டும் பயன்படுத்துகின்றது. சங்ககாலத் தமிழ் படர்க்கை அஃறிணை ஒருமை வினையாலணையும் பெயராக்கிகளாகப் பயன்படுத்தும் *அது, அவை* என்ற இரண்டும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றது. சங்காலத் தமிழ் பயன்படுத்தும் படர்க்கை அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயராக்கிகள் *அ, அவை* என்ற இரண்டையும் தற்காலத் தமிழ் பயன்படுத்துகின்றது.

அ என்ற படர்க்கை அஃறிணைப் பன்மை இட-எண்-பால் பின்னொட்டைப் பயன்படுத்தி இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + (*இன்*) + (*அன்*) + *அ* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *வேண்டிய* (*வேண்டு+ய்+அ*) 'வேண்டியவை', *மாண்டன* (*மாண்ட்+அன்+அ*) 'நேர்த்தியாக இருந்தவை', *ஒரீஇயின* (ஒரீஇ+ய்+இன்+அ) 'விலகிச் சென்றது'. இருப்பினும் இத்தகைய ஆக்கமுறையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலில் பயன்பாடில் உள்ளன. எடுத்துக்காட்டாக, 'இற' என்ற பொருளில் வரும் *மாள்* என்ற வினையிலிருந்து உருவாகப்பட்ட *மாண்டன* (மாண்ட்+அன்+அ) போன்ற வினையாலணையும் பெயர் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது.

அது என்ற படர்க்கை அஃறிணைப் ஒருமை பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + *அது* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *யாத்தது* (*யாத்த்+அது*) 'கட்டப்பட்டது', *உள்ளியது* (*உள்ளி+ய்+அது*). இருப்பினும் இவ்வாக்க முறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட படர்க்கை அஃறிணைப் ஒருமை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் உள்ளன: இயற்றியது (இயற்றி+ய்+அது), நினைத்தது (நினைத்த்+அது), வெந்தது (வெந்த்+அது), கேட்டது (கேட்ட்+அது),.

சங்ககாலத் தமிழில் அஃறிணை ஒருமை வினையாலணையும் பெயர்களை ஆக்கப் பயன்படுத்தப்படும் *அதை* என்ற வினையாலணையும் பெயராக்கப் பின்னொட்டு தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எனவே இறந்தகாலப் பகுதி +*அது* என்ற ஆக்கமுறையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட பின்வருவது போன்ற சங்கால

வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: ஊர்ந்ததை (ஊர்ந்த்+அதை) 'சவாரிசெய்தது'.

சங்காலத் தமிழில் காணப்படும் தன்மை மற்றும் முன்னிலை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எனவே இறந்தகாலப் பகுதி+(*அன்*)+*அம்* என்ற ஆக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு சங்ககாலத் தமிழில் பயன்படுத்தப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *சிறந்தனம்* (சிறந்த+அன்+அம்) 'சிறந்த நான்'.

அர் என்ற படர்க்கை உயர்திணைப் பன்மைப் பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + அர் என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: வல்லியர் (வல்லி+ய்+அர்), *வேண்டினர்* (*வேண்டி+இன்+அர்*). வேண்டினர் என்ற ஆக்கத்திற்குப் பதிலாக இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + அவர் அன்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வேண்டியவர் (*வேண்டி+ய்+அவர்*) என்ற வினையாலணையும் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளது.

அவர் என்ற படர்க்கை உயர்திணைப் பன்மை பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + *அவர்* அன்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட ஆயவர் (ஆய்+அவர்) 'இருப்பவர்', *நட்டவர்* (*நட்ட்+அவர்*) 'நட்பாயிருப்பவர்' போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை என்றாலும் *துறந்தவர்* (துறந்த்+அவர்) போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும்

பயன்பாட்டில் உள்ளன. இவ்வாக்க முறையைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்ட பல வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இருக்கின்றன: செய்தவர் (*செய்த்+அவர்*), வேண்டியவர் (*வேண்டி+ய்+அவர்*).

அவள் என்ற படர்க்கைப் பெண்பால் ஒருமை பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி + *அவள்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட *காத்தவள்* (*காத்த்+அவள்*) போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் பயன்பாடில் உள்ளன. இவ்வாக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: பாடியவள் (*பாடி+ய்+அவள்*), *படித்தவள்* (*படித்த்+அவள்*).

அவன் என்ற படர்க்கைப் பெண்பால் ஒருமை பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி + *அவன்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட *வந்தவன்* (*வந்த்+அவன்*) போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் பயன்பாடில் உள்ளன. இவ்வாக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: பாடியவன் (பாடி+ய்+அவன்), படித்தவன் (படித்த்+அவன்).

முன்னர் கூறியது போன்று முன்னிலை இட வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை. எனவே *அவிர்* என்ற முன்னிலைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+*அவிர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும்

பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *சான்றவிர்* (சான்ற்+அவிர்) ‘சான்றோர்களாகிய நீங்கள்’, *கண்டவிர்* (கண்ட்+அவிர்) ‘கண்டவர்களாகிய நீங்கள்’.

இது போலவே அவை என்ற முன்னிலைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+*அவை* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: அட்டவை (*அட்ட்+அவை*) ‘கொன்றவனாகிய நீ’.

அவை என்ற படர்க்கைப் அஃறிணைப் பன்மை பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி + (உடன்படுத்தி) + *அவை* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட *சிதறியவை* (சிதறி+ய்+அவை) போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் பயன்பாடில் உள்ளன. இவ்வாக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *திறந்தவை* (*திறந்த்+அவை*), *உடைந்தவை* (உடைந்த்+அவை).

அன் என்ற படர்க்கை ஆண்பால் ஒருமைப் பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி+ (*இன்*) + *அன்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *அஞ்சினன்* (*அஞ்சி+இன்+அன்*) ‘பயந்தவன்’. இதற்குப் பதிலாக இறந்தகாலப் பகுதி+ (*இன்*) + அவன் என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வினையாலணையும் பெயர்கள் தாம் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன. எ.கா. *அஞ்சினவன்* (*அஞ்சி+இன்+அவன்*), *பயந்தவன்* (*பயந்த்+அவன்*).

ஆம் என்ற என்ற தன்மைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+*ஆம்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *புணர்ந்தாம்* (*புணர்ந்த்+ஆம்*).

ஆய் என்ற என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+ (உடன்படுதி) +*ஆய்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: குறித்தாய் (குறித்த்+ஆய்) 'எண்ணமிட்ட நீ', கருதியாய் (கருதி+ய்+ஆய்) 'விரும்பிய நீ'.

ஆர் என்ற படர்க்கை உயர்திணைப் பன்மைப் பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி+ (*இன்*) + *ஆர்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: நல்கூர்ந்தார் (நல்கூர்ந்த்+ஆர்) 'துன்பப்பட்டவர்கள்', ஒன்றினார் (*ஒன்றி*+*இன்*+*ஆர்*) 'ஒன்று சேர்ந்தவர்கள்'.

ஆள் என்ற படர்க்கைப் பெண்பால் ஒருமைப் பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி+ (*இன்*) + *ஆள்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *ஈன்றாள்* (*ஈன்ற்+ஆள்*). இவ்வாக்க நுட்பத்திற்குப் பதிலாக இறந்தகாலப் பகுதி+ *அவள்* என்ற ஆக்க நுட்பம் தான் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றது. எ.கா. *ஈன்றவள்* (*ஈன்ற்+அவள்*), *பெற்றவள்* (*பெற்ற்+அவள்*), *சொல்லியவள்* (*சொல்லி+ய்+அவள்*).

ஆன் என்ற படர்க்கை ஆண்பால் ஒருமைப் பின்னொட்டு கொண்டு இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + (*இன்*) + *ஆள்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: செய்தான் (செய்த்+ஆன்), *கடீஇயான்* (*கடீஇ+ய்+ஆன்*) 'துறந்தவன்', *உறீஇயினான்* (*உறீஇ+ய்+இன்+ஆன்*) 'அனுபவிக்கச் செய்தவன்'. இவ்வாக்க நுட்பத்திற்குப் பதிலாக இறந்தகாலப் பகுதி+ *அவள்* என்ற ஆக்க நுட்பம் தான் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றது. எ.கா. *ஈன்றவள்* (*ஈன்ற்+அவள்*), *பெற்றவள்* (*பெற்ற்+அவள்*), *சொல்லியவள்* (சொல்லி+ய்+அவள்).

இர் என்ற என்ற முன்னிலைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+அன்+*இர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: துணிந்தனிர் (துணிந்த்+அன்+இர்) 'துணிந்த நீங்கள்'.

ஈ(இ)ர் என்ற என்ற முன்னிலைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+ உடன்படுத்தி + *ஈ(இ)ர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *சான்றீர்* (*சான்ற்+ஈர்*) ' ஒழுக்கமாயிருகிற நீங்கள்' , *விலங்கியீஇர்* (*விலங்கி+ய்+ஈர்*) 'இடையீடுசெய்த நீர்'.

என் என்ற என்ற தன்மை ஒருமை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+ உடன்படுத்தி + *(அன்) + என்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *தொழுதெனென்* (*தொழுத்+அன்+என்*) 'தொழுத நான்'

ஏம் என்ற என்ற தன்மைப் பன்மைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+ உடன்படுத்தி + *ஏம்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *பெற்றேம்* (*பெற்ற்+ஏம்*) 'பெற்ற நாங்கள்'.

ஏன் என்ற என்ற தன்மை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+ உடன்படுத்தி + (*அன்*) + *ஏன்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *ஈன்றேன்* (*ஈன்ற்+ஏன்*) 'ஈன்ற நான்', *நின்றேன்* (நின்ற்+ஏன்) 'நின்ற நான்', *தகைத்தனேன்* (*தகைத்த்+அன்+ஏன்*) 'தடுத்த நான்'.

ஓய் என்ற என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + *ஓய்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *வந்தோய்* (*வந்த்+ஓய்*) 'வந்த நீ', *கூடியோய்* (*கூடி+ய்+ஓய்*)

ஓர் என்ற என்ற படர்க்கை உயர்திணைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + *இசின்* + *ஓர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றன: இறந்தோர் (*இறந்த்+ஓர்*); இருப்பினும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை; குறிப்பாக *இசின்* என்ற சாரியை வரும் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் சாத்தியமில்லை: புணரியோர் (புணரி+ய்+ஓர்) 'சேர்ந்தோர்', *இறந்திசினோர்* (*இறந்த்+இசின்+ஓர்*) 'கடந்தோர்', *படைத்திசினோர்* (*படைத்த்+இசின்+ஓர்*) 'படைத்தோர்'.

ஓள் என்ற படர்க்கை பெண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு c என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *நின்றோள்* (*நின்ற்+ஓள்*) 'நின்றவள்', *பிரிந்த்+இசின்+ஓள்* (*பிரிந்த்+இசின்+ஓள்*) 'பிரிந்தவள்'. இதற்குப் பதிலாக இறந்தகாலப் பகுதி+ (உடன்படுத்தி) + *அவள்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திய வினையாலணையும் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன. எ.கா. *நின்றவள்* (*நின்ற்+அவள்*), *பிரிந்தவள்* (*பிரிந்த்+அவள்*).

5.4.9.2.2. இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்

சங்ககாலத் தமிழில் இறந்தகால வினையாலணையும் பெயர்களின் ஆக்கதிற்குத் தந்தது போன்று இறந்தகாலமல்லா வினையாலணையும் பெயர்களின் ஆக்கத்திற்கான இட-எண்-பால் விகுதிகளையும் ஒன்பது வகைகளாகப் பிரித்துத் தரவியலும். இவற்றில் பின்வரும் வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை அல்லது சாத்தியமில்லை எனலாம்: தன்மை ஒருமை வினையாலணையும் பெயர்கள், தன்மைப் பன்மை வினையாலணையும் பெயர்கள், முன்னிலை ஒருமை வினையாலணையும் பெயர்கள், முன்னிலை பன்மை வினையாலணையும் பெயர்கள்

தற்காலத் தமிழைப் பொருத்தவரையில் படர்க்கை வினையாலணையும் பெயர்கள் தான் பயன்பாடில் உள்ளன. சங்ககாலத் தமிழ் படர்க்கை ஆண்பால் ஒருமை வினையாலணையும் பெயர் பின்னொட்டுக்களாக *அன், அவன், ஆன், ஓன்* என்பனவற்றைப் பயன்படுத்துகின்றது. இவற்றில் *அவன்* என்ற பின்னொட்டு மட்டுமே தற்காலத் தமிழ் பயன்படுத்துகின்றது. படர்க்கை பெண்பால் ஒருமை வினையாலணையும் பெயராக்க ஒட்டுக்களாக சங்காலத் தமிழ் *அவள்*, *அள்*, *ஆள்*, *இ*, ஓள் என்பவைகளைப்

பயன்படுத்துகின்றது. ஆனால் தற்காலத் தமிழ் அவள் என்ற பின்னொட்டு மட்டுமே பயன்படுத்துகின்றது. படர்க்கை உயர்திணைப் பன்மை வினையாலணையும் பெயராகச் சங்ககாலத் தமிழ் *அவர்*, *அர்*, *ஆர்*, *அவர்கள்*, *ஓர்* என்பனவற்றைப் பயன்படுத்துகின்றது. தற்காலத் தமிழ் இவற்றில் அவர், அவர்கள் என்ற இரண்டை மட்டும் பயன்படுத்துகின்றது. சங்ககாலத் தமிழ் படர்க்கை அஃறிணை ஒருமை வினையாலணையும் பெயராக்கிகளாகப் பயன்படுத்தும் *அது*, *இ* என்பனவனவற்றில் *அது* என்பதை மட்டும் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றது. சங்காலத் தமிழ் பயன்படுத்தும் படர்க்கை அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயராக்கிகளான *அ*, *அவை* என்ற இரண்டையும் தற்காலத் தமிழ் பயன்படுத்துகின்றது.

அ என்ற படர்க்கை அஃறிணைப் பன்மை பின்னொட்டைப் பயன்படுத்தி இறந்தகாலமல்லாப் பகுதி+ (*அன்*) +*அ* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: பிறழ்ன (பிறழ்ன்+அ) 'புரள்வன', வித்துன (*வித்துன்*+*அ*) 'விதைப்பன', *தடுக்குன* (*தடுக்குன்*+*அ*) 'தடுப்பன', *நிறைக்குன்ன* (*நிறைக்குன்*+*அ*) 'நிறைப்பன', வேண்டுப (*வேண்டுப்*+*அ*) 'வேண்டுவன', *தோன்றுவ* (தோன்றுவ்+அ),

இறந்தகாலமல்லாப் பகுதி +*அ* நெறிமுறைக்குப் பதிலாகத் தற்காலத் தமிழ் இறந்தகாலமல்லாப் பகுதி+*அன்*+*அ* என்ற ஆக்க நெறிமுறையைப் பயன்படுத்தி படர்க்கை அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயர்களை ஆக்குகின்றது. சங்க்காலத் தமிழில் காணப்படும் அறுப்பன (*அறுப்ப்*+*அன்*+*அ*), *கொள்வன* (*கொள்வ்*+*அன்*+*அ*) என்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றன.

பின்வருவன தற்காலத் தமிழில் காணப்படும் மேலும் சில எடுத்துக்காட்டுகளாகும்: *புரள்வன* (*புரள்வ்+அன்+அ*), *விதைப்பன* (*விதைப்+அன்+அ*), *தடுப்பன* (*தடுப்+அன்+அ*), *நிறைப்பன* (*நிறைப்+அன்+அ*), *வேண்டுவன* (*வேண்டுவ்+அன்+அ*), *தோன்றுவன* (*தோன்றுவ்+அன்+அ*).

அது என்ற படர்க்கை அஃறிணைப் ஒருமை பின்னொட்டைப் பயன்படுத்தி இறந்தகாலமல்லாப் பகுதி+ அது என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் பயன்பாட்டில் உள்ளன: உவப்பது (உவப்ப்+அது), *உண்பது* (உண்ப்ப்+அது), *உறுவது* (*உறுவ்+அது*). இருப்பினும் பகுதி+ உடன்படுத்தி + *அது* என்ற வினையாலணையும் பெயராக்க நெறியைப் பயன்படுத்திச் சங்ககாலத்தில் ஆக்கப்பெறும் பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: பொய்க்குவது (*பொய்க்கு+வ்+அது*), *சிதைக்கு+வ்+அது*. இவைகளுக்குப் பதிலாகப் பின்வரும் வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: பொய்ப்பது (பொய்ப்ப்+அது), சிதைப்பது (*சிதைப்ப்+அது*).

அம் என்ற தன்மை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *அம்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *அறியுனம்* (*அறியுன்+அம்*) 'அறியும் நாங்கள்'.

அர் என்ற படர்க்கை உயர்திணைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ (உடன்படுத்தி) + (*ஆள்*)+(*அன்*)+ *அர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும்

பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *வல்லர்* (*வல்+அர்*) 'வல்லவர்', *மலர்க்குனர்* (*மலர்க்குன்+அர்*) 'திருப்புபவர்', *எறிஞர்* (*எறிஞ்+அர்*) 'எறிபவர்', *வரைவனர்* (*வரைவ்+அன்+அர்*) 'விரைபவர்', *அறியாளர்* (*அறி+ய்+ஆள்+அர்*) 'அறிவிப்பவர்'. தற்காலத் தமிழ் இறந்தகாலமல்லாப் பகுதி + அர் என்பதற்குப் பதிலாக இச்சூழல்களில் இறந்தகாலமல்லாப் பகுதி + *அவர்* என்ற பெயராக்க நெறிமுறையைப் பின்பற்றுகின்றது. எ.கா. வல்லவர் (*வல்ல்+அவர்*), *திருப்புபவர்* (*திருப்புப்+அவர்*), *எறிபவர்* (*எறிப்+அவர்*), *வரைபவர்* (*வரைப்+அவர்*), விரைபவர் (*விரைப்+அவர்*), *அறிவிப்பவர்* (*அறிவிப்+அவர்*).

அவர் என்ற படர்க்கைப் உயர்திணைப் பன்மைப் பின்னொட்டு கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + *அவர்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட *இருப்பவர் (இருப்ப்+அவர்)* போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் பயன்பாடில் உள்ளன. இவ்வாக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *பாடுபவர்* (*பாடுப்+அவர்*), *படிப்பவர்* (*படிப்ப்+அவர்*).

அவள் என்ற படர்க்கைப் பெண்பால் ஒருமை பின்னொட்டு கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + *அவள்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட *உணர்ப்பவள் (உணர்ப்ப்+அவள்)* போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாடில் இல்லாவிடினும் இவ்வாக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *உணர்பவள்* (*உணர்ப்+அவள்*), *பாடுபவள்* (பாடுப்+அவள்), *படிப்பவள்* (படிப்ப்+அவள்),

அவன் என்ற படர்க்கை ஆண்பால் ஒருமை பின்னொட்டு கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + *அவன்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட *உழப்பவன் (உழப்ப்+அவன்)* போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாடில் இல்லாவிடினும் இவ்வாக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *உழைப்பவன்* (*உழைப்ப்+அவன்*), *பாடுபவன்* (*பாடுப்+அவன்*), *படிப்பவன்* (*படிப்ப்+அவன்*),

அவை என்ற படர்க்கை அஃறிணை ஒருமை பின்னொட்டு கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + *அவை* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திச் சங்காலத் தமிழில் ஆக்கப்பட்ட உடுப்பவை (*உடுப்ப்+அவை*), *உருகுபவை* (*உருகுப்+அவை*) போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாடில் உள்ளன. இவ்வாக்கமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் உள்ளன: *உழைப்பவை* (*உழைப்ப்+அவைன்*), *பாடுபவை* (பாடுப்+அவை), *படிப்பவை* (*படிப்ப்+அவை*), *வருபவை* (*வருப்ப்+அவை*).

அள் என்ற படர்க்கைப் பெண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ அள் என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *மண்ணுநள்* (*மண்ணுந்+அள்*) 'கழுபவள்', *நினையுநள்* (*நினையுந்+அள்*) 'நினைப்பவள்', *செல்குவள்* (*செல்குவ்+அள்*). தற்காலத் தமிழ் இத்தகைய ஆக்க ஒழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாக இறந்தகாலமல்லாப் பகுதி+ அவள் என்ற ஆக்க ஒழுங்கமைப்பு முறையைப் பயன்படுத்தி இவ்வகையிலான வினையாலணையும்

பெயர்களுக்கு இணையான ஆக்கங்களைச் செய்கின்றது. எ.கா. *கழுபுவள்* (*கழுவுப்+அவள்*), *நினைப்பவள்* (*நினைப்ப்+அவள்*), *செல்பவள்* (*செல்ப்+ அவள்*)

அன் என்ற படர்க்கைப் ஆண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ (*அன்*) + *அன்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *வெய்யன்* (வெய்+அன்) 'விரும்புபவன்', *காமுறுநன்* (*காமுறுந்+அன்*), *விரைவனன்* (*விரைவ்+அன்+அன்*) 'விரைபவன்'. தற்காலத் தமிழ் இத்தகைய ஆக்க ஒழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாக இறந்தகாலமல்லாப் பகுதி+ *அவன்* என்ற ஆக்க ஒழுங்கமைப்பு முறையைப் பயன்படுத்தி இவ்வகையிலான வினையாலணையும் பெயர்களுக்கு இணையான ஆக்கங்களைச் செய்கின்றது. எ.கா. *விரும்புபவன்* (*விரும்புப்+அவன்*), *காமுறுபவன்* (*காமுறுப்+அவன்*), *விரைபவன்* (*விரைப்+ அவன்*)

ஆம் என்ற தன்மைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஆம்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *ஏத்துவாம்* (*ஏத்துவ்+ஆம்*) 'புகழும் நாம்'.

ஆய் என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஆய்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *மேய்ப்பாய்* (*மேய்ப்* ஆய்) 'மேய்க்கும் நீ'. இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும்.

ஆய் என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஆய்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *மேய்ப்பாய்* (*மேய்ப் ஆய்*) 'மேய்க்கும் நீ'. இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும்.

ஆர் என்ற படர்க்கை உயர்திணைப் பன்மைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + (*அன்*) + *ஆர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *நெகிழ்ப்பார்* (*நெகிழ்ப்ப்+ஆர்*) 'தளர்த்துபவர்', *அறிவார்* (*அறிவ்+ஆர்*) 'அறிபவர்', *என்மனார்* (*என்ம்+அன்+ஆர்*) 'என்பவர்'. இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும். தற்காலத் தமிழ் இத்தகைய ஆக்க ஒழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாக இறந்தகாலமல்லாப் பகுதி+ (*அன்*) +*அவர்* என்ற ஆக்க ஒழுங்கமைப்பு முறையைப் பயன்படுத்தி இவ்வகையிலான வினையாலணையும் பெயர்களுக்கு இணையான ஆக்கங்களைச் செய்கின்றது. எ.கா. *நெகிழ்ப்பவர்* (*நெகிழ்ப்+அவர்*), *அறிபவர்* (*அறிப்+அவர்*), *என்பவர்* (*என்ப்+அவர்*).

ஆர்கள் என்ற படர்க்கைப் உயர்திணைப் பன்மைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + *ஆர்கள்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: வாழ்வார்கள் (வாழ்வ்+ஆர்கள்) 'வாழ்பவர்கள். இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும். தற்காலத் தமிழ் இத்தகைய ஆக்க ஒழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாக

இறந்தகாலமல்லாப் பகுதி+ +*அவர்கள்* என்ற ஆக்க ஒழுங்கமைப்பு முறையைப் பயன்படுத்தி இவ்வகையிலான வினையாலணையும் பெயர்களுக்கு இணையான ஆக்கங்களைச் செய்கின்றது. எ.கா. வாழ்பவர்கள் (வாழ்ப்+அவர்கள்).

ஆள் என்ற படர்க்கைப் பெண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + *ஆள்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *உழப்பாள்* (*உழப்ப்*+*ஆள்*) 'துன்பப்படுபவள்', *என்பாள்* 'என்பவள்', *ஆடுவாள்* (*ஆடுவ்*+ஆள்) 'ஆடுபவள்'. இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும். இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும். தற்காலத் தமிழ் இத்தகைய ஆக்க ஒழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாக இறந்தகாலமல்லாப் பகுதி + *அவர்கள்* என்ற ஆக்க ஒழுங்கமைப்பு முறையைப் பயன்படுத்தி இவ்வகையிலான வினையாலணையும் பெயர்களுக்கு இணையான ஆக்கங்களைச் செய்கின்றது. எ.கா. *துன்பப்படுபவள்* (*துன்பப்படுப்*+*அவள்*), *என்பவள்* (*என்ப்*+*அவள்*), *ஆடுபவள்* (*ஆடுப்*+*அவள்*).

ஆன் என்ற படர்க்கை ஆண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி + *ஆன்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *நுழைப்பான்* (*நுழைப்ப்*+*ஆன்*), *என்பான்* (*என்ப்*+*ஆன்*). . இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும். தற்காலத் தமிழ் இத்தகைய ஆக்க ஒழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாக இறந்தகாலமல்லாப் பகுதி + *ஆன்* என்ற ஆக்க ஒழுங்கமைப்பு முறையைப்

பயன்படுத்தி இவ்வகையிலான வினையாலணையும் பெயர்களுக்கு இணையான ஆக்கங்களைச் செய்கின்றது.

இ என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *இ* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: அடுவி (அடுவ்+இ) 'கொல்லும் நீ'.

இ என்ற படர்க்கைப் பெண்பால் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *இ* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: உறைவி (உறைவ்+இ) 'உறைபவள்/தங்குபவள்'. தமிழ் இத்தகைய ஆக்க ஒழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாக இறந்தகாலமல்லாப் பகுதி+ *அவள்* என்ற ஆக்க ஒழுங்கமைப்பு முறையைப் பயன்படுத்தி இவ்வகையிலான வினையாலணையும் பெயர்களுக்கு இணையான ஆக்கங்களைச் செய்கின்றது. எ.கா. *உறைபவள்* (உறைப்+*அவள்*), *தங்குபவள்* (*தங்குப்*+*அவள்*).

ஈர் என்ற முன்னிலை பன்மைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஈர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *வருவீர்* (*வருவ்*+*ஈர்*) 'வரும் நீர்'. இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும்.

என் என்ற தன்மை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ (*அன்*) + *என்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில்

ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *கூறுவென்* (*கூறுவ்+என்*) 'கூறுபவனாகிய நான்', *விரைவனென்* (*விரைவ்+அன்+என்*) 'விரைபவனாகிய நான்'.

ஏம் என்ற தன்மைப் பன்மைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஏம்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: செல்வேம் (*செல்வ்+ஏம்*) 'செல்பவர்களாகிய நாங்கள்'.

ஏன் என்ற தன்மைப் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஏன்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *தொடுப்பேன்* (*தொடுப்ப்+ஏன்*) 'நேரிடும் நான்', *காண்பேன்* (*காண்ப்+ஏன்*)' 'காணும் நான்' *தருவேன்* (*தருவ்+*ஏன்) 'தரும் நான்'. இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும்.

ஐ என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஐ* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: வெய்யை (*வெய்+ஐ*) 'விரும்பும் நீ', *வல்லை* (*வல்+ஐ*) 'வல்ல நீ', *கொள்ளுநை* (*கொள்ளுந்+ஐ*) 'ஏற்கும் நீ'.

ஓய் என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஓய்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும்

பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *அமர்போய்* (*அமர்ப்+ஓய்*) 'அமரும் நீ', *செல்வோய்* (*செல்வ்+ஓய்*) 'செல்லும் நீ'

ஓர் என்ற என்ற படர்க்கை உயர்திணைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ ஓர் என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றன: *காண்போர்* (*காண்ப்+ஓர்*) 'காண்பவர்'. இருப்பினும் சங்ககாலத் தமிழில் காணப்படும் பின்வரும் வினையாலணையும் பெயர் தற்காலத் தமிழில் இல்லை: *மலர்போர்* (*மலர்ப்+ஓர்*) 'கவிழ்ப்பவர்', *நினையுமோர்* (*நினையும்+ஓர்*) 'நினைப்பவர்', *அரக்குவோர்* (அரக்குவ்+ஓர்) 'துடைப்பவர்', *ஊர்குவோர்* (*ஊர்குவ்+ஓர்*) 'ஏறுபவர்', *வல்லுவோர்* (வல்லுவ்+ஓர்) 'வலிமையுள்ளவர்', *வரைவோர்* (*வரைவ்+ஓர்*) 'தெரிந்தெடுப்பவர்'. *மலர்ப்போர், அரக்குவோர், ஊர்குவோர், வல்லுவோர், வரைவோர்* போன்ற வடிவங்கள் சாத்தியமான தற்காலத் தமிழில் சாத்தியமான வடிவங்கள் என்றாலும் *மலர், அரக்கு, ஊர்கு, வல்லு, வரை* என்ற வினைகள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லாததால் இது நிகழ்கின்றது. ஆனால் *நினையுமோர்* போன்ற வடிவங்கள் தற்காலத் தமிழில் இல்லை.

ஓள் என்ற என்ற படர்க்கை பெண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஓள்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்திச் சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழிலும் காணப்படவில்லை: இணையோள் (இணைவ்+ஓள்). இதற்குப் பதிலாகத் தற்காலத் தமிழில் இறந்தகாலமல்லாப் பகுதி+ *அவள்* என்ற ஆக்க நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. எ.கா. *இணைபவள்* (இணைப்+*அவள்*).

சங்ககாலத் தமிழில் இறந்தகாலமல்லாப் பகுதி + *ஓன்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி *ஓன்* என்ற என்ற படர்க்கை ஆண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *அறியுமோன்* (*ஆறியும்+ஓன்*) 'அறிபவன்'. இதற்குப் பதிலாகத் தற்காலத் தமிழில் இறந்தகாலமல்லாப் பகுதி+ அவன் என்ற ஆக்க நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. எ.கா. *அறிபவன்* (அறிப்+அவன்).

5.4.9.2.3. எதிர்மறை வினையாலணையும் பெயர்களின் வரலாற்று மாற்றம்

சங்ககாலத் தமிழில் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் பின்னொட்டாகத்தால் ஆக்கப்படுவதாயும் நான்கு வழிகளில் இது நிறைவேற்றப்படுவதாயும் சங்கால இலக்கியத் தரவுகளில் நின்றும் தெரிய வருகின்றது. மேலும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தன்மை ஒருமை, தன்மைப் பன்மை, முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை படர்க்கை ஆண்பால் ஒருமை, படர்க்கைப் பெண்பால் ஒருமை, படர்க்கை உயர்திணைப் பன்மை, படர்க்கை அஃறிணை ஒருமை, படர்க்கை அஃறிணைப் பன்மை என்று ஒன்பது குழும இட-எண்-பால் பின்னொட்டுக்களால் ஆக்கப்படுகின்றது எனத் சங்ககால இலக்கியத் தரவுகள் காட்டுகின்றன. தன்மை மற்றும் முன்னிலை பின்னொட்டுகள் தற்காலத் தமிழில் வினையாலணையும் பெயராக்கிகளாகப் பயன்படுத்தப்படவில்லை எனத் தற்காலத் தமிழ் பனுவல் தரவுகள் காட்டுகின்றன. படர்க்கை இட பின்னொட்டுக்கள் மட்டுமே வினையாலணையும் பெயர்களை ஆக்கத் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன. சங்ககாலத் தமிழில் *அவன், அன், ஓன்* என்ற பின்னொட்டுகள் படர்க்கை ஆண்பால் ஒருமை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் ஆள், ஓள் என்பன

படர்க்கைப் பெண்பால் ஒருமை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் *அர், அவர், ஆர், ஓர், மார்* என்பன படர்க்கைப் உயர்திணைப் பன்மை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் அது என்பது படர்க்கை அஃறிணை ஒருமை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் *அ, ஆ* என்பன படர்க்கை அஃறிணைப் பன்மை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் பயன்படுத்தப்படுவது சங்க இலக்கியத் தரவுகளில் நின்றும் தெரியவருகின்றது. தற்காலத் தமிழில் அவன் என்பது பின்னொட்டுகள் படர்க்கை ஆண்பால் ஒருமை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் அவள் என்பது படர்க்கைப் பெண்பால் ஒருமை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் *அவர்* (அரிதாக), *மார்* என்பன படர்க்கைப் உயர்திணைப் பன்மை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் அது என்பது படர்க்கை அஃறிணை ஒருமை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் *அ* என்பன படர்க்கை அஃறிணைப் பன்மை எதிர்மறை வினையாலணையும் பெயர்களை உருவாக்கவும் பயன்படுத்தப்படுவது தற்காலத் தமிழ்த் தரவுகளில் நின்றும் தெரியவருகின்றது.

வெற்றுப் பகுதி பகுதி + *ஆத்+ அ* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி*அ* என்ற படர்க்கை அஃறிணைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *செய்யாத* (*செய்*+*ஆத்*+*அ*). வெற்றுப் பகுதி + *ஆத்* + *அ* நெறிமுறைக்குப் பதிலாகத் தற்காலத் தமிழ் வெற்றுப் பகுதி +*ஆத்*+*அது* என்ற ஆக்க நெறிமுறையைப் பயன்படுத்தி படர்க்கை அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயர்களை ஆக்குகின்றது.

வெற்றுப் பகுதி பகுதி + *ஆத்+ அது* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி *அ* என்ற படர்க்கை அஃறிணைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் பயன்பாட்டில் உள்ளன: பெறாதது (*பெற்+ஆத்+அது*).

வெற்றுப் பகுதி பகுதி + *அல்* + *அர்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்திஅர் என்ற படர்க்கை உயர்திணைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *ஒன்னலர்* (*ஒன்+அல்+அர்*) 'சேராதவர்கள்', *பொருந்தலர்* (*பொருந்து+அல்+அர்*). வெற்றுப் பகுதி + *அல்* + *அவர்* நெறிமுறைக்குப் பதிலாகத் தற்காலத் தமிழ் வெற்றுப் பகுதி +*ஆத்+அவர்* என்ற ஆக்க நெறிமுறையைப் பயன்படுத்தி படர்க்கை அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயர்களை ஆக்குகின்றது. எ.கா. சேராதவர் (*சேர்+ஆத்+அவர்*), *உடன்படாதவர்* (*உடன்படு+ஆத்+அவர்*), *பொருந்தாதவர்* (*பொருந்து+ஆத்+அவர்*).

வெற்றுப் பகுதி பகுதி + *ஆத்* + *அவன்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி அவன் என்ற படர்க்கை ஆண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழிலும் பயன்பாட்டில் காணப்படுகின்றன: *அழுந்தாதவன்* (*அழுந்து+ஆத்+ அவன்*) 'மூழ்காதவன்'.

வெற்றுப் பகுதி பகுதி + (உடன்படுத்தி) +ஆ என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி ஆ என்ற படர்க்கை அஃறிணை ஒருமை எதிர்மறைப் பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை

வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *உடாஅ* (*உடு*+*ஆ*), *போரா* (*போர்*+*ஆ*), *ஒவ்வா* (*ஒ*+*வ்வ்*+*ஆ*)

வெற்றுப் பகுதி பகுதி + *ஆம்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி *ஆம்* என்ற தன்மை உயர்வுப் பன்மை பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: அழாஅம் (*அழு*+*ஆம்*) 'அழாத நாம்'.

வெற்றுப் பகுதி பகுதி + *ஆத்/அல்* + *ஆய்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி *ஆய்* என்ற தன்மை முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *உணராதாய்* (*உணர்*+*ஆத்*+*ஆய்*) 'உணராத நீ', *அறிகலாய்* (*அறிக்*+*அல்*(*ல்*)+*ஆய்*) 'அறியாத நீ'

வெற்றுப் பகுதி பகுதி + ஆர் அல்லது இறந்தகாலப் பகுதி + *இல்* + *ஆர்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி ஆர் என்ற படர்க்கை உயர்திணைப் பன்மைப் பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிமறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *பொய்யார்* (*பொய்*+*ஆர்*) 'பொய்யாதவர்', *சாலார்* (*சால்*+*ஆர்*) 'பெருந்தன்மையாயிராதவர்', *போற்றார்* (*போற்ற்*+*ஆர்*) 'பாராட்டாதவர்', *ஒன்னார்* (*ஒன்*+*ஆ*) 'இணையாதவர்', மேவார் (மேவு+ஆர்) 'ஏற்காதவர்', *நள்ளாதார்* (*நள்*+*ஆத்*+*ஆர்*) 'நட்பாயிராதவர்', *ஆய்வந்திலார்* (*ஆய்வந்த்*+*இல்*+*ஆர்*) 'ஆயாதவர்'.

வெற்றுப் பகுதி பகுதி + *ஆத்* + *ஆள்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி *ஆள்* என்ற படர்க்கை பெண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும்

பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *வாழாதாள்* (*வாழ்+ஆத்+ஆள்*) 'வாழாதவள்'. இவ்வொழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாகத் தற்காலத் தமிழ் வெற்றுப் பகுதி +*ஆத்+அவள்* என்ற ஆக்க நெறிமுறையைப் பயன்படுத்தி படர்க்கை பெண்பால் ஒருமை வினையாலணையும் பெயர்களை ஆக்குகின்றது. எ.கா. *வாழாதவள்* (*வாழ்+ஆத்+அவள்*).

வெற்றுப் பகுதி பகுதி + (*ஆத்*) + *ஆன்* என்ற வினையாலணையும் பெயராக்க முறையைப் பயன்படுத்தி ஆன் என்ற படர்க்கை ஆண்பால ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு சங்காலத் தமிழில் ஆக்கப்படும் பின்வரும் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *சாரான்* (*சார்+ஆன்*), *உதவாதான்* (*உதவ்+ஆத்+ஆன்*) . இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும். இவ்வொழுங்கமைப்பு நெறிமுறைக்குப் பதிலாகத் தற்காலத் தமிழ் வெற்றுப் பகுதி +*ஆத்+அவன்* என்ற ஆக்க நெறிமுறையைப் பயன்படுத்தி படர்க்கை பெண்பால் ஒருமை வினையாலணையும் பெயர்களை ஆக்குகின்றது. எ.கா. *சாராதவன்* (*சார்+ஆத்+அவன்*).

இ என்ற முன்னிலை ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு வெற்றுப் பகுதி+ *இ* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற எதிமறை வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *இலி* (*இல்+இ*) 'இல்லாத நீ'.

ஈர் என்ற முன்னிலை பன்மைப் பின்னொட்டைக் கொண்டு வெற்றுப் பகுதி+ (உடன்படுத்தி) + *ஆத்* + *ஈர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற எதிமறை வினையாலணையும் பெயராக்கங்கள்

தற்காலத் தமிழில் இல்லை: *அறியாதீர்* (*அறி+ய்+ஆத்+ஈர்*) 'அறியாத நீர்'. இத்தகைய வினையாலணையும் பெயர்கள் வினைமுற்று வடிவத்தில் இருப்பதைக் கருத்தில் கொள்ளவும்.

ஏம் என்ற தன்மைப் பன்மைப் பின்னொட்டைக் கொண்டு வெற்றுப் பகுதி+ *ஏம்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற எதிர்மறை வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *செல்லேம்* (செல்+ஏம்) 'செல்லாத நாங்கள்'.

ஏன் என்ற தன்மைப் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு வெற்றுப் பகுதி+ ஆத் + *ஏன்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்படும் பின்வருவன போன்ற எதிர்மறை வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் இல்லை: *துஞ்சாதேன்* (*துஞ்சு* +*ஆத்+ஏன்*) 'தூங்காத நான்'.

ஓர் என்ற என்ற படர்க்கை உயர்திணைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு வெற்றுப் பகுதி+ *ஆத்+ ஓர்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற எதிர்மறை வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றன: *உணராதோர்* (*உணர்+ஆத்+ஓர்*). இருப்பினும் பின்வரும் எதிமறை வினையாலணையும் பெயர் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *ஒன்னாதோர்* (*ஒன்+ஆத்+ஓர்*) 'பொருந்தாதவர்'.

ஓள் என்ற என்ற படர்க்கை பெண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு வேற்றுப் பகுதி+ (உடன்படுத்தி) + ஆத் + ஓள் என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி சங்ககாலத் தமிழில் ஆக்கப்பட்ட பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழிலும் காணப்படவில்லை: *கடியாதோள்* (*கடி* + *ய்* +*ஆத்*

+ஓள்). இதற்குப் பதிலாகத் தற்காலத் தமிழில் இறந்தகாலமல்லாப் பகுதி+ *ஆத்* +*அவள்* என்ற ஆக்க நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. எ.கா. *கடியாதவள்* (*கடி+ய்+ஆத்+ஓள்*).

சங்ககாலத் தமிழில் வெற்றுப் பகுதி + *ஓன்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி *ஓன்* என்ற படர்க்கை ஆண்பால் ஒருமைப் பின்னொட்டைக் கொண்டு ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: கொள்ளாதோன் (கொள்+ஆத்+ஓன்).

சங்ககாலத் தமிழில் வெற்றுப் பகுதி + *அல்* + *மார்* என்ற ஆக்கநுட்பத்தைப் பயன்படுத்தி *மார்* என்ற படர்க்கை உயர்திணைப் பன்மை பின்னொட்டைக் கொண்டு ஆக்கப்படும் பின்வருவன போன்ற வினையாலணையும் பெயராக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: *கேளன்மார்* (*கேள்+அல்+மார்*) 'கேட்காதவர்கள்'

5.4.10. தொழிற்பெயர்

செயற்பாங்கு/செயல் அல்லது செயற்பாங்கு/செயலின் விளைவைக் குறிப்பிடும் வினைப் பகுதியிருந்து ஆக்கப்பட்ட பெயர்வடிவங்கள் இங்கு "தொழிற்பெயர்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இவ்விளக்கம் தொழிற்பெயர்களைச் செயல் செய்பவரை (எழுவாயை) அல்லது செயப்படுபொருளைக் குறிப்பிடும் வினையாலணையும் பெயர்களிலிருந்து வேறுபடுத்திக்காட்ட உதவும். தொழிற்பெயரின் எடுத்துக்காட்டாக உணங்கல் (<உணங்கு+அல்) என்பதைக் கருத்தில் கொள்ளவும்; இது உணங்குவது, நீர்வற்றுவது, அல்லது உலர்ந்த அஃறிணைப் பெயரான "மீன்" என்பதைக் குறிப்பிடலாம். இலக்கியச் சூழல் உணங்கல் எதைக் குறிப்பிடுகின்றது என்தைத் தீர்மானிக்கும்.

நாம் இங்கு குறிப்பிடும் வகையிற்படும் பெயர்கள் மரபிலக்கணகளில் தொழிற்பெயர் 'செயற் பெயர்' அல்லது வினைப் பெயர் 'செயலின் பெயர்'

(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணம், விதி 297; நன்னூல், விதி 286). மரபடிப்படையில் வினையாலணையும் பெயரும் தொழிற்பெயர் எனக் குறிப்பிடப்பட்டது (பார்க்க பதி.19:17 மீதான உரை).

தொழிற்பெயர் பெயர் போல் செயல்படும்; தொழிற்பெயர் பெயர்திரிபாக்கம் செய்யும்; அதாவது பன்மை உருபுகளுக்காகவும் வேற்றுமை உருபுகளுக்காகவும் திரிபுறும். இரண்டு அடிப்படையான தொழிற்பெயர்கள் செம்மொழித் தமிழில் காணப்படுகின்றன: உடன்படு தொழிற்பெயர், எதிர்மறைத் தொழிற்பெயர். தொழிற்பெயர் பெரும்பான்மையும் காலத்தைக் குறிப்பிடாது. இருப்பினும் தொழிற்பெயர்கள் ஆக்கப்பட்ட வினைகளால் குறிப்பிடப்பட்ட செயல்களின் முற்று அல்லது முற்றா வினையாற்றுவகையைக் குறிப்பிடும் சில குறிகளை ஒருசில தொழிற்பெயர்கள் கொண்டிருக்கும். முற்று வினையாற்றுவகையைக் காட்டும் தொழிற்பெயர் "இறந்தகாலத் தொழிற்பெயர்" என்றும் முற்றல்லா வினையாற்றுவகையைக் குறிப்பிடும் தொழிற்பெயர் "இறந்தகாலமல்லாத் தொழிற்பெயர்" என்றும் அழைக்கப்படும்.

5.4.10.1. சங்ககாலத்தமிழில் தொழிற்பெயர்கள்

5.4.10.1.1. இறந்தகாலத் தொழிற்பெயர்

5.4.10.1.1.1. இறந்தகாலத் தொழிற்பெயர்களின் ஆக்கம்

தொழிற்பெயர் பின்வரும் வழிகளில் ஆக்கப்படும்:

(1) வெற்று வினைப் பகுதியைச் பயன்படுத்தி

(2) பகுதி பிறழ்வால்

(3) பின்னொட்டாகத்தால்: தொழிற்பெயராக்கப் பின்னொட்டுகளை நேரடியாக வினைப் பகுதியில் சேர்ப்பது

(4) நீட்சியால்: இறந்தகால அஃறிணை ஒருமை வினைமுற்று வடிவைப் பயன்படுத்துவது அல்லது து, தை, அல்லது மை என்ற பின்னொட்டுக்களை இறந்தகால/முற்று பெயரெச்சத்துடன் சேர்ப்பது.

(5) சொற்புறமையால் (periphrasis): *அம்* என்ற ஒட்டு வினையின் இறந்தகால அஃறிணை ஒருமை வினைமுற்று வடிவுடன் சேர்க்கப்படும் மற்றும் இது *இல்*, *உடை* என்ற வினைகளின் வினைத்திரிபாக்க வடிவங்களால் தொடர்ப்படும்.

இந்த ஆக்க நுட்பங்களில் (1)-உம் (2)-உம் தனித்தனியாக அல்லது சேர்ந்து வரும்.

பின்வருவன உடன்பாட்டு தொழிற்பெயர் பின்னொட்டுக்கள் ஆகும்: *அம், அர், அல், ஆல், உ, உள், ஐ, க்கல், (க்)கு, (க்)கை, (ச்)சி, ச்சு, (த்)தல், தி, தை, பாடு, (ப்)பு, மை, வி, வு, வை. த்தல், தல்* தாவிர பிற பின்னொட்டுகளின் வருகையை/வினியோகத்தை வருவதுரைக்க இயலாது: *த்தல்* செயப்படுபொருள் குன்றா/இயங்கு வினைகளுடன் கூடவும் *தல்* செயப்படுபொருள் குன்றிய/இயக்கு வினைகளின் கூடவும் வரும்.

5.4.10.1.1.2. ஆக்கநுட்பம்

5.4.10.1.1.2.1. வெற்று வினையைப் பயன்படுத்தி

அ. வரான் ஒரீஇ *வழங்கு* வாய்ப்ப விடுமதி (புற.382:15-16)

வழங்கு (தொபெ) 'கொடுதல், தருதல்' < வழங்கு (வி)

ஆ. பருந்து *அருந்து* உற்ற தானை (புற.62:6)

அருந்து (தொபெ) 'உண்ணுதல்' < அருந்து (வி) 'உண்'

இ. அவர் நாடு அழிய எயில் வருவி ச் சுற்றமொடு *தூ* அருத்தலின் (மது.186:188)

தூ (தொபெ) ‘வலுவாயிருத்தல்’ < தூ ‘வலுவாயிரு’

ஈ. இரும் இடை மிடைந்த சில சொல் (புற.243:13)

இரும் (தொபெ) ‘இருமுதல்’ < இருமு (வி)

5.4.10.1.1.2.2. பகுதி பிறழ்வு

(1) மெய் இறுதி வினைப் பகுதிகளில் இறுதி மெய் *ய், ர்* அல்லது *வ்* அல்லாவிடில் வலுவுறும். ஓரசைப் பகுதியில் குற்றுயிர் நெட்டுயிராகும்.

அ.*ஊட்டு* அரு மர்பின் அஞ்சுவரு பேஎய்க்கு *ஊட்* டு எதிர்கொண்ட... ஞிமிலி

(அக.142:10-11)

ஊட்டு (தொபெ) ‘ஊட்டுதல்’ < உண் (வி) ‘சாப்பிடு’

ஆ. பூட்டு அறு வில் (அக.96:2)

பூட்டு (தொபெ) < பூண் (வி) ‘பூட்டு’

இ. இவன் மகனே தோழி என்றால் அதன் அளவு உண்டு *கோள்* மதி வல்லோர்க்கே

கோள் ‘புரிதல்’ < கொள் (வி) ‘பிடி, ஏல்’

ஈ. வட்டு உருட்டு வல்லாய்

உருட்டு (தொபெ) ‘உருட்டுதல்’ < உருள் (வி)

(2) இதில் பகுதிகள் ஓரசையல்லாதவை மற்றும் உ-வில் இறுதியுறும்; ஈரசைப் பகுதி ஒரு நெட்டுயிர் மற்றும்/அல்லது ஒரு திறந்த அசை கொண்டிருக்கும். இறுதி மெய் திறந்த அசை கொண்ட பகுதிகளில் வலுவுறும் அல்லது இரட்டும்; அதைத் தொடர்ந்து ஈரசைப் பகுதிகளில் முதல் அசையிலுள்ள குற்றுயிர் நீட்சியுறும்.

அ. தண் மீன் சூட்டு (பெரு:282)

சூட்டு (தொபெ) ‘திறந்த தீயில் சுடப்பட்ட இறைச்சி’ < சூடு (வி)

ஆ.பொய் வளம் பூத்தன பாணா பாட்டு

பாட்டு (தொபெ) ‘பாடுதல்’ < பாடு (வி)

இ. தோள் நெகிழ்ந்ததன் தலையும் மாற்று ஆகின்றே…நட்பே (குறு.377:2-3, 5)

மாற்று (தொழி) ‘மாற்றம், சிகிச்சை, தீர்வு’ < மாறு (வி)

ஈ. வையை ப் பெருக்கு (பரி.7:60)

பெருக்கு (தொபெ) ‘வெள்ளப் பெருக்கு’ < பெருகு (வி) ‘அதிகரி’

உ. மயக்கு ஒரீஇ (புற.362:11)

மயக்கு (தொபெ) ‘குழப்பம்’ < மயங்கு (வி) ‘குழம்பு’

ஊ. அச்சு அற்று ஏம்ம் ஆகி (குறு.394:6)

அச்சு (தொபெ) ‘அச்சம்/பயம்’ < அஞ்சு (வி) ‘பயப்படு’

(7)பகை ஆகின்று அவர் நகை விளையாட்டே (குறு.394:6)

விளையாட்டு (தொபெ) < விளையாடு (வி)

(3) இங்கு பகுதிகள் ஓரசையாகவோ அல்லது உ-வில் இறுதியுறுகிற ஈரசையாக இருக்கும். அசைகள் திறந்தவையாகவும் குற்றுயிர் உள்ளதாகவும் இருக்கும். முதல் அசையிலுள்ள உயிர் நீட்சியுறும்.

அ. யான் உள் நோ உரைப்ப

நோ (தொபெ) ‘துன்புறுதல்/நோதல்’ < நொ (வி) ‘துன்புறு’

ஆ.மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி

மாறு (தொபெ) ‘கருத்துவேறுபாடு’ < மறு ‘வேறுபடு’

இ. பிணி வீடு பெறுக மன்னவன்

வீடு (தொபெ) ‘விடுதலை’ < விடு (வி)

5.4.10.1.1.2.3. பின்னொட்டாக்கம்

வெற்று வினைப் பகுதி + தொழிற்பெயராக்கப் பின்னொட்டு

பிறழ்வுற்ற பகுதி + தொழிற்பெயராக்கப் பின்னொட்டு

பின்னொட்டு	அமைப்பு எடுத்துக்காட்டு மற்றும் வருமிடம்
அம்	பிறழ்வுற்ற பகுதி + அம் வெவ்வர் *ஓச்சம்* (பதி.41:20) ‘(போரின்) வெப்பத்தின் எழுச்சி’ ஓச்சம் (தொபெ) ‘எழுச்சி’ < ஓச்ச்(உ)+அம் < *ஓசு ‘எழு’+ அம்
	தெருமரல் *உயக்கம்* (புற.381:16) ‘அலைசால் வாட்டம்’ உயக்கம் (தொபெ) ‘வாட்டம்’ < உயக்க்(உ) +அம் <உயங்கு (வி) ‘வாடு’+அம்
	வெற்றம் (மது:73) வெற்றம் (தொபெ) ‘வெற்றி’ < வெற்ற் +அம்< வெல் (வி) +அம்
	மூவரும் கூடி அரசவை இருந்த தோற்றம் (பொரு:54-55) தோற்றம் (தொபெ) < தோற்ற்(உ)+அம் < தோன்று (வி) + அம்
அர்	வெற்று வினைப் பகுதி + உடன்படுத்தி +அர் *வெவ்வர்* ஓச்சம் (பதி.41:20) ‘(போரின்) வெப்பத்தின் எழுச்சி’ வெவ்வர் (தொபெ) ‘வெப்பம்’ < வெ (வி) ‘சூடாயிரு’ + வ்வ் (உப) + அர்

அல்	வெற்று வினைப் பகுதி+அல் *கெடல்* அரும் திருவ (புற.366:17) 'அழிவது அரிதான மேன்மையானவன்' கெடல் (தொபெ) 'கெடுவது' < கெடு (வி) + அல்
	ஆக்கப்பட்ட பகுதி + அல் கொல்லை குரல் வாங்கி ஈனா மலை வாழ்நர் அல்ல புரிந்து *ஒழுகலான்* (கலி.39:13-14) ஒழுகல் (தொபெ) 'நடத்தல்' < ஒழுகு (வி) + அல்; ஒழுகு 'நட' <*ஒழு+கு (வடிவாக்க ஒட்டு)
	அவல மறு சுழி மறுகலின் தவலே நன்று மன் (புற.238:18-19) மறுகல் (தொபெ) 'சுற்றுவது' < மறுகு (வி) 'சுற்று'+ அல்; மறுகு < மறு+கு (வடிவாக்க ஒட்டு)
	வெற்றுப் பகுதி+உடன்படுத்தி+அல் அரியல் ஆர்கையர் (அக.184:14) அரியல் (தொபெ) 'காய்ச்சப்பட்ட கள்' < அரி (வி) 'காய்ச்சு' +ய்(உப)+அல்
	புறழ்வுற்ற பகுதி + அல் நிண ச் சுறா அறுத்த உணக்கல் (நற்.45:6) உணக்கல் (தொபெ) 'உணங்கியது' < உணக்க்(உ) < உணங்கு (வி) 'உலர்' + அல்
	பசி போக்கல் (புற.390:27) 'பசியைப் போக்குதல்/நீக்குதல்' போக்கல் (தொபெ) 'நீக்குதல்' < போக்க்(உ) (வி) 'நீக்கு' +அல் < போ(கு) (வி)+அல் < போ +அல்
	இலம்பாடு அகற்றல் (புற.381:15) 'இல்லாமையைப் போக்குதல்'

	அகற்றல் (தொபெ) 'போக்குதல்' < அகற்ற்+அல் < அகல் (வி) +அல்
ஆல் (இது அல் என்பதன் மாற்றுரு)	வெற்றுப் பகுதி + ஆல் பாலும் கொளாலும் வல்லோய் (பதி.16:19) 'நீ பாகிர்வதிலும் பெறுவதிலும் வல்லவன்' கொளால் 'பெறுதல்/பிடித்தல்' > கொள் 'பெறு' +ஆல்
உ	வெற்றுப் பகுதி + உ இப்பின்னுருபை ஏற்கும் பகுதிகள் உ-வில் இறுதியுறும் மற்றும் திறந்த அசைகள் கொண்ட ஈரசைகளால் ஆனவை; மற்றும் இறுதி உயிருக்கு முன் ர் அல்லது ழ் வரும். குழூஉ க் களிற்று (புற. 97:9) 'ஆண் யானைகளின் குழுவின்' குளூஉ (தொபெ) 'குழு, கூட்டம்' < குழு 'குழுமு, ஒன்று கூடு' + உ
உள்	வெற்றுப் பகுதி + உடன்படுத்தி + உள் வேய் ப் பெயல் விளையுள் தேக்கள் தேறல் (மலை: 171) விளையுள் (தொபெ) 'விளைந்தது' < விளை +ய் (உப) + உள்
ஐ	வெற்றுப் பகுதி + ஐ வேனில் ஓதி ப் பாடு நடை வழலை நடை 'நடப்பது; நகர்வது' < நட(வி) 'நட, நகர்' + ஐ
க்கல்	வெற்றுப் பகுதி + க்கல் ஒரு காழ் விரல் முறை சுற்றி மோக்கலும் மொந்தனன் (கலி.54:7-8) மோக்கல் (தொபெ) 'முகர்தல்' < மோ (வி) 'முகர்' + க்கல்
	இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்கல் ஆற்றாக்கல் (கலி.43:26) 'இல்லாமையைக் கூறியவர்க்கு அதை நிறைவேறுவதை செய்ய இயலாதபோது' நிறைக்கல் 'நிறைவேற்றுவது, பூர்த்திசெய்வது' < நிறை 'நிறைவேற்று, பூர்த்திசெய்'

(க்)கு	வெற்றுப் பகுதி + க்கு தொழிற் செருக்கு அனந்தர் (அக.37:6) ‘தொழிலின் பெருமிதம் காரணமாக அசதி’ செருக்கு ‘பெருமிதம்’ < செரு ‘பெருமிதம்கொள், செருக்குகொள்’ +க்கு
	வெற்றுப் பகுதி + இடு இரலை…மெல்கிடு கவுள (அக.34:4, 8) ‘மெல்லப்பட்டது/அசைஊணை மெல்கிடு < மெல்கு ‘அசைஊண்’ + இடு ‘கீழே போடு’; மெல்கு (தொபெ) ‘மெல்லப்பட்டது/அசைஊண்’ < மெல் (வி) ‘சுவை’ + கு
(க்)கை	வெற்றுப் பகுதி + க்கை உயர் சினை முடை நசை இருக்கை ப் பெடை (அக.51:3-4) ‘இறைச்சிக்கான ஆசையுடன் உயர்ந்த கிளையில் உட்கார்ந்திருக்கும் பெண் பறவை’ இருக்கை (தொபெ) ‘இருப்பது’ < இரு (வி) +க்கை
	வெற்றுப் பகுதி + கை தீர்கை விடுக்கும் பண்பு (புற.391:9) ‘நீங்குவதை விட்டுவிடும் பண்பு’ தீர்கை (தொபெ) ‘நீங்குவது’ < தீர் (வி) ‘நீங்கு, மறை’+கை
	சாரிகை மறுத்து த் தண்டா உண்டிகை (பரி.6:36) ‘நகர்வதை விட்டுவிட்ட கட்டுப்படுத்த இயலாத கூட்டம்’ உண்டிகை (தொபெ) ‘கூட்டம்’ < உண்டை + கை; உண்டை < உருண்டை < உருள் (வி) + தை
	வெற்றுப் பகுதி + இ+ கை சாரிகை மறுத்து தண்டா உண்டிகை (பரி.6:36) ‘நகர்வதை விட்டுவிட்ட கட்டுப்படுத்த இயலாத கூட்டம்’ சாரிகை (தொபெ) ‘நகர்வது’ < சார் (வி) ‘நகர்’ +இ+கை

	வெற்றுப் பகுதி + இ+ கை காரிகை நீர் நோக்கினை (பரி.7:65) காரிகை ‘கறுப்பாக இருப்பது’ < கார் ‘கறுப்பு’ (கறு (வி)) + இ +கை
(ச்)சி	வெற்றுப் பகுதி + ச்சி மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி (மலை: 62) ‘அவனது கருதிற்கு மாறாத நல்லதைக் கருதிய திட்டம்’ சூழ்ச்சி (தொபெ) ‘திட்டம் + சூழ் (வி) ‘திட்டமிடு’ + ச்சி
ச்சு	வெற்றுப் பகுதி + ச்சு சாடியின் வழைச்சு அற வளைந்த …நறும் பிழி (பெரு:280, 281) ‘வழுவழுவப்பாக மாறாமல் சாடியில் முதிர்ந்த இனிய சுவையுடைய சாறு’ வழைச்சு (தொபெ) ‘வழுவழுப்பு’ < வழு(வி) ‘வழுவழுவப்பாக மாறு’
(த்)தல்	வெற்றுப் பகுதி + த்தல் நெடும் பெரும் குன்றம் எம்மொடு இரத்தல் (அக.19:5-6) ‘எங்களுடன் உயர்ந்த பெரிய மலையைக் கடத்தல்’ இறத்தல் (தொபெ) ‘க ட த்தல்’ < இற ‘கட’+த்தல்
	வெற்றுப் பகுதி + தல் தன் சிதைவு அறிதல் அஞ்சி…என் மகள் இ-ச்-சுரம் படர்தந்தோளே (அக.19:5-6) ‘அவளது குற்றத்தைப் பற்றி நான் அறிவதை அஞ்சி என் மகள் இந்தக் காட்டிற்கு வந்தாள்’ அறிதல் ‘அறிவது’ < அறி + தல்
தி	வெற்றுப் பகுதி + தி கொண்டி உண்டி (பெரு:454) ’கொள்ளையடித்தது உண்டி’

	கொண்டி (தொபெ) ‘கொள்ளையடித்தது’ < கொள் + தி
	நின் ஆர்வலர் தொழுத கை அமைதியின் அமர்ந்தோயும் நீயே (பரி.4:70-71) ‘உன் ஆர்வலர் தொழுத கைகளின் அமைதியில் அமர்ந்தோய் நீயே’ அமைதி < அமை + தி
	வென்றியொடு வில் அலைத்து உண்ணும் வல் ஆண் வாழ்க்கை (அக.31:12-13) ‘தங்கள் விற்களைப் பயன்படுத்தி வெற்றியுடன் உண்ணும் ஆண்களின் வாழ்க்கை’ வென்றி ‘வெற்றி’ < வெல் +தி
தை	வெற்றுப் பகுதி + தி புலவர் …நவில் புனைந்த நன் கவிதை (பரி.6:7,8) ‘புலவர்கள் புனைந்த நல்ல கவிதை’ கவிதை < கவி ‘விஞ்சு’ +தை
	பிறழ்ந்த பகுதி + தை முடந்தை நெல் (பதி.29:3) ‘வளந்த நெல்’ முடந்தை (தொபெ) < முடம் (பிப) + தை < முட (வி) ‘வளை’ +அம் +தை
பாடு	இது ஒரு பின்னொட்டல்ல. இது ‘அனுபவம்’ என்று பொருள்படும் தொழிற் பெயராகும். இது ஒரு பின்னொட்டு போன்று பெரிய தொழிற்பெயர் உருவாக பெயர்ப் பகுதியில் சேர்க்கப்படுகின்றது. வெறுப்பகுதி + பாடு நீ செல்லா விடுவாயேல் … நெட்டிரும் கூந்தல் கடவுளர் எல்லார்க்கும் முட்டுப்பாடு (கலி.93:33, 35-36) முட்டுப்பாடு (தொபெ) ‘தடை’ < முட்டு (வி) + பாடு
	ஆக்கப்பட்ட பகுதி + பாடு

	ஒண் சுடர் வெளப்பாடு (பரி.2:64) ‘பிரகாசமான தீப்பிளம்புகளின் பெருக்கம்’ வெளப்பாடு (தொபெ) ‘பெருக்கமான நிலை’ < வெளம் ‘பெருக்கம்’ + பாடு
	இலம்பாடு அகற்றல் (புற.381:15) இலம்பாடு (தொபெ) ‘இல்லாதிருக்கும் நிலை’ < இலம் ‘இல்லாமை’ +பாடு; இலம் < இல் (வி) ‘இல்லாதிரு’ +அம் + பாடு
(ப்)பு	வெற்றுப் பகுதி + ப்பு மறப்பு இன்றி (அக.41:11, 12) ‘மறக்காமல்’ மறப்பு (தொபெ) < மற (வி) + ப்பு
மை	செழுநகர் நடுவண் அடுமை ய் எழுந்த அடு நெய் ஆவுதி (பதி.12:12-13) [அடுமை ‘சமையல்’ < அடு ‘சமை, கொல்’+மை
வி	வெற்றுப் பகுதி + வி வேள்வி முற்றிய… வேந்தே (புற. 26:15) ‘வேள்வியை நிறைவேற்றிய வேந்தனே’ வேள்வி (தொபெ) ‘விருப்பம், வேதப் பலி’ < வேள் (வி) ‘விரும்பு’ +வி‘
	ஏழைத்தன்மை (கலி. 55:23) ஏழைத்தன்மை < ஏழை + தன்மை (தன் என்பது தான் என்பதன் திரிபுப் பகுதி)
வு	வெற்றுப் பகுதி + வி அம்பு களைவு (பதி.24:13) ‘அம்பை நீக்குவது’ களைவு (தொபெ) ‘நீக்குவது’ < களை ‘நீக்கு’ (வி) +வு
வை	வெற்றுப் பகுதி + வை வேய்வை காணா விருந்தின் போர்வை (புற.369;20)

	‘வளைதல் காணாத யாழின் புதிய முகம்’ வேய்வை (தொபெ) ‘வளைதல்’ < வேய் ‘வளை; மூடு’ +வை

5.4.10.1.1.2.4. நீட்சி

நீட்சி என்பது இறந்தகால அஃறிணை ஒருமை வினைமுற்று வடிவைப் பயன்படுத்துவதைக் குறிப்பிடும்; அல்லது இறந்தகால/முற்று பெயரெச்சத்தில் து, தல் அல்லது மை-ஐச் சேர்ப்பதைக் குறிப்பிடும். இவ்வகைத் தொழிற்பெயரை “இறந்தகாலத் தொழிற்பெயர்”-ஆகப் பொருள்கொள்ள/விளக்க இயலும்.

பின்னொட்டு	**ஒழுங்கமைப்பும் எடுத்துக்காட்டும் வருமிடமும்**
(அ)து	இறந்தகால/முற்றுப் பகுதி+ அது அல்லது இறந்தகாலப் பெயரெச்சம் + து இனிதாகின்றால் … நீ வந்து நின்றது (அக.184:4-19) ‘நீ வந்து நின்றது இனிதானதாக இருக்கின்றது’ நின்றது (தொபெ) < நில் (வி) + ற் (இகாஒ) + அ (பெஎஒ) + து
(அ)தை	இறந்தகால/முற்றுப் பகுதி + அதை அல்லது இறந்தகாலப் பெயரெச்சம் + தை தேற்றிய சிறப்பன்றோ … நிரை வளை நெகிழ்ந்ததை (கலி.132:13-15) நெகிழ்ந்ததை <நெகிழ் (வி) +ந்த் (இகா.பிஒ) + அ (பெ.எ.பிஒ)+ அதை
	புருவத்து க் கரு வல் கந்தத்தால் தாங்கி உலகம் தந்து அடிப்படுத்ததை நடுவண் ஓங்கிய பலர் புகழ் குன்றினொடு ஒக்கும் (பரி.4:22-24) அடிப்படுத்ததை (தொபெ) ‘காலில் விழுவது’ < அடிப்படு (வி) ‘காலில் விழு’ +த்த் (இகா.பிஒ) + அ (பெ.எபிஒ) + அதை

மை	இறந்தகாலப் பெயரெச்சம் + மை பிழைத்தமை ‘தவறு செய்தது’ (அக.366:15) பிழைத்தமை ‘தவறு செய்தது’ < பிழை (வி) +த்த் (இகா.பிஒ) + அ (பெ.எ.பிஒ) +மை

5.4.10.1.1.2.5. சொற்புறமை (periphrasis)

இதன் ஒழுங்கமைப்பு பின்வருமாறு அமையும்:

இறந்தகாலப்/முற்றுப் பகுதி + அன்/இன்+து+உம்/ஓ

உம் அல்லது ஓ அஃறிணை ஒருமை வினைமுற்றில் சேர்க்கப்படும் மற்றும் து-இல் உள்ள உ அமைப்பிலிருந்து உருபொலியன்னியல் அடிப்படையில் நீக்கப்படும்: இறந்தகாலப்/முற்றுப் பகுதி + அன்/இன்+து+உம்/ஓ. இந்த அமைபொழுங்கு உடை, இல் என்ற வினைகளின் வினைத்திரிபாக்க வடிவங்களால் கட்டாயமாகத் தொடரப்படும். இவ்வகையிலான தொழிற்பெயர் ‘இறந்தகால தொழிற்பெயர்” எனக் கருதப்படும்.

	ஒழுங்கமைப்பும் எடுத்துக்காட்டும் வருமிடமும்
(1)	இறந்தகால/முற்றுப் பகுதி +அன் +து+...ஓ இலம் முனிதகு பண்பு யாம் செய்தன்றோ இலமே (அக.101:18) செய் (வி); செய்தன்றோ < செய்தன்று (தொபெ) ‘செய்தது’ + ஓ (இடைசொல்) செய்தன்று < செய்த் + அன் + து; இது செய்தது போல வரும்.
(2)	இறந்தகால/முற்றுப் பகுதி +அன் +து+உம்+இலம் இளமையின் *இகந்தன்றும்* இல்னே வளமையின் தன் நிலை *தீர்ந்தன்றும்* இலன் (குறி:244-245) ‘இளமையின் காரணமாக வெறுக்கவும் இல்லை; செல்வத்தின் காரணமாக திசைமாறவும் இல்லை’

	இக (வி) 'விரும்பு'; தீர் 'விலகு, திசைமாறு' இகந்தன்றும் (தொபெ) 'வெறுப்பது'< இகந்த் + அன் + து +உம் தீர்ந்தன்றும் (தொபெ) 'திசைமாறுவது' < தீர்ந்த் +அன்+து+உம்
(3)	இறந்தகால/முற்றுப் பகுதி +அன் +து+உம்+இலன் (அக.32:14-16) என் வயின் சொல்ல வல்லிற்றும் இல்னே 'அவன் என்னிடம் பேச இயலவில்லை' வல் (வி) 'இயல்'; வல்லிற்றும் (தொபெ) 'இயல்வது' < வல்லி + இன் + து +உம்
(4)	இறந்தகால/முற்றுப் பகுதி +அன் +து+உம்+இலை நீடினர் என்னும் புலவி உட்கொண்டு ஊடின்றும் இலையோ (நற்.237:4-5) 'திரும்பிவரத் தாமதித்தார் என்ற கோபத்தால் நீ பிணங்கவிலையோ? ஊடு (வி) 'பிணங்கு'; ஊடின்றும் (தொபெ) 'பிணங்குவது' < ஊடி + இன் +து + உம்
(5)	எம்மொடு வருதியோ … என க் *கூறின்றும்* உடையர் (நற்.274:6-7) கூறு 'சொல்'; கூறின்றும் 'கூறுவது' < கூறி + இன்+து+உம்

5.4.10.1.2 இறந்தகாலமல்லா தொழிற்பெயர்

தொழிற்பெயர்கள் பொதுவாக ஒரு குறிப்பிட்ட காலத்தைக் காட்டாது. சில தொழிற்பெயர்கள் செயலின் முற்று அல்லது முற்றல்லா வினையாற்று வகையைக் குறிப்பிடும். இவைகளில், இறந்தகாலமல்லாத் தொழிற்பெயர்களை நிகழ்காலத்தை அல்லது எதிர்காலத்தைக் குறிப்பிடுவதாகக் கருத இயலும். இத்தொழிற்பெயர்கள் நிகழ்காலத்தைக் குறிப்பிடுகின்றதா அல்லது எதிர்காலத்தைக் குறிப்பிடுகின்றதா என்பதைச் சூழல் தான் தீர்மானிக்கும்.

5.4.10.1.2 1 ஆக்கம்

இறந்தகாலமல்லா தொழிற்பெயர்கள் பின்னொட்டாக்கத்தால் ஆக்கப்படுகின்றன. அது அல்லது அதை (ப்)ப் அல்லது வ்-இல் இறுதியுறும் இறந்தகாலமல்லாப்/முற்றல்லாப் பகுதியுடன் சேர்க்கப்படும். மாற்றிக்கூறினால், *அது* அல்லது *அதை* கொண்ட இறந்தகாலமல்லா அஃறிணை பெயரெச்சப் பெயர் பயன்படுத்தப்படும். வினையாலணையும் பெயருடன் ஒப்புமை உடைய இவ்வகையான தொழிற்பெயர் சிலவேளைகளில் அஃறிணை ஒருமை வினை முற்றை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும். எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது.

5.4.10.1.2 2 ஆக்க நுட்பம்

இறந்தகாலமல்லாப்/முற்றல்லாப் பகுதி + அது/அதை

பின்னொட்டு	ஒழுங்கமைப்பும் எடுத்துக்காட்டும் வருமிடமும்
அது	இறந்தகாலமல்லாப்/முற்றல்லாப் பகுதி + அது இருள் கிழிப்பது போல் மின்னி (அக.72:1) ‘இருண்ட வானத்தைக் கிழிப்பது போல் மின்னி’ கிழி(வி); கிழிப்பது (தொபெ) < கிழிப்ப் +அது
	இரவு க் காண்பது போல ப் பெரும் கடல் ஓத நீர் வீங்குபு கரை சேர (கலி.134:5-6) காண் (வி); காண்பது (தொபெ) < காண்ப் + அது
	வருவது நாடி (புற.366:1 2) ‘வருவதை விரும்பி’ வர் (வி) வருவது (தொபெ) < வருவ் + அது
	விசும்பு உரிவது போல் வியல் இடத்து ஒழுகி மங்குல் மா மலை தென்புலம் (அக.24:7-9) உரி (வி); உரிவது (தொபெ) < உரிவ்+அது

	முடிந்ததும் முடிவதும் முகிழ்ப்பதும் அவை மூன்றும் (பரி.13:46) ‘முடிந்ததும் முடிவதும் முகிழ்ப்பதும் ஆகிய் மூன்றும்’ முடி (வி); முடிவது (தொபெ) < முடிவ்+அது முகிழ் (வி); முகிழ்ப்பது (தொபெ)> முகிழ்ப்ப்+அது
	இனிமை எவன் செய்வது பொய்ம்மொழி எமக்கே (அக.6:22) செய்வது (தொபெ) < செய்வ் + அது; செய் (வி)
அதை	இறந்தகாலமல்லாப்/முற்றல்லாப் பகுதி + அதை இனாதே…களிறு இயங்கு ஆரிடை ஈங்கு நீ வருவதை (கலி.49:19, 21) வர் (வி); வருவதை (தொபெ) < வருவ் +அதை

5.4.10.1.3. எதிர்மறைத் தொழிற்பெயர்

5.4.10.1.3.1 ஆக்கம்

எதிர்மறைத் தொழிற் பெயர்கள் ஒட்டாக்கத்தால் ஆக்கப்படுகின்றன; முதலில் வினை ஆ என்பது வெற்று வினைப் பகுதியில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர் தொழிற்பெயராக்கப் பின்னொட்டான மை சேர்க்கப்படும்.

உடன்பாடு-எதிமறை வேறுபாடோ இட-எண்-பால் வேறுபாடோ தொழிற்பெயராக்கப் பின்னொட்டான மை-ஆல் செய்யமாட்டாது. தொழிற்பெயர் தொடரியல் நோக்கத்திற்காக அஃறிணை ஒருமை வினைகளாகக் கருதப்படும்.

5.4.10.1.3.2 ஆக்க நுட்பம்

எதிர்மறைத் தொழிற்பெயர்களின் ஆக்க நுட்பம் பின்னொட்டாக்கம் ஆகும். பின்வரும் அமைபொழுங்குகள் ஆக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

வெற்று வினைப் பகுதி + மை

எதிர்மறை வினை அல் அல்லது இல் + மை

பின்னொட்டு	அமைப்பொழுங்கும் எடுத்துக்காட்டுகளும் வருமிடங்களும்
மை	வெற்றுவினைப் பகுதி + ஆ+ மை (அக.102:17) அவன் நல்காமையின் ஆம்பல் ஆகி ‘அவன் கருணைகாட்டாமையின் காரணமாக வதந்தி ஆகி…’ நல்காமை (தொபெ) < நல்க்(உ) + ஆ + மை; நல்கு (வி)
	வெற்றுவினைப் பகுதி + உடன்படுதி + ஆ+ மை யாணர் ஊரன் காணுநன் ஆயின் வரையாமையோ அரிதே (நற்.390:7-8) வரை (வி) ‘மணம்புரி, தெரிந்தெடு’; வரையாமை (தொபெ) ‘தெரித்தெடுக்காமை’ < வரை + ய் (உப) + ஆ + மை
	எதிர்மறை வினை அல்/இல் +மை அவை நினக்கு இறும்பூது அன்மை நற்கு அறிந்தேம் (பரி.4:3-4) ‘அவை உனக்கு வியப்பு இல்லாமை என்பதை நாங்கள் நன்கு அறிவோம்’ இறும்பூது ‘வியப்பு’ ; அன்மை < அல் (வி) +மை
	பாயல் இன்மையின் பாசிலை ஞெகிழ (பதி.68:15) ‘தூக்கம் இன்மையின் காரணமாக ஒளிரும் அணிகலங்கள் நெகிழ’ பாயல் ‘தூக்கம்’; இன்மை < இல் +மை

5.4.10.2. தொழிற் பெயர்களின் வரலாற்று மாற்றம்

5.4.10.2.1. உடன்பாட்டு/இறந்தகாலத் தொழிற்பெயர்களின் வரலாற்று மாற்றம்

தற்காலத் தமிழும் சங்ககாலத் தமிழ் போன்று வெற்று வினைப்பகுதி, பகுதிப்பிறழ்வு, பின்னொட்டாக்கம், நீட்சி, சொற்புறமை என்ற ஐந்து வழிகளிலும் இறந்தகால/உடன்பாட்டுத் தொழிபெயர்களை ஆக்கும்.

வெற்றுப் பகுதியாக்கம்

வெற்று வினைகளைப் (வினைவேர்களை) பயன்படுத்தி தொழிற்பெயர்களை ஆக்கும் செயல்பாடு தற்காலத் தமிழில் காணப்படுகிறது. சுருக்கமாகக் கூறினால் எல்லா வெற்று வினப்பகுதிகளும் பெயராகச் செயல்பாடு செய்யும். பல சொல்லாக்கம் பெற்று அகராதிகளில் இடம் பெற்றுள்ளன. எ.கா. *கடி* (பெ) < *கடி* (வி), *இடி* (பெ) < *இடி* (வி), *குடி* (பெ) < *குடி* (வி), *பழி* (பெ) < *பழி*, *புகழ்* (பெ) < *புகழ்* (வி). இருப்பினும் சங்ககாலத் தமிழில் காணப்படும் பின்வரும் வெற்றுப் பகுதி தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: வழங்கு 'கொடுத்தல்', அருந்து 'உண்ணுதல்', தூ 'வலுவாயிருத்தல்' , இரும் 'இருமல்' .

பிறழ்வாக்கம்

வினைப் பகுதிகளின் பிறவுகளால் ஆக்கப்படுகின்ற தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழிலில் பயன்பாட்டில் உள்ளன: பாட்டு < பாடு, பாடு < படு, பேறு < பெறு, *பேச்சு* < *பேசு*, *வழங்கு* < *வழக்கு*, *உண்* < ஊண், *கண்* < காண், *வேட்டு* < *வெடி*, சுடு <சூடு. இருப்பினும் பின்வரும் சங்காலத் தமிழ் பிறழ்வு ஆக்கங்கள் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை: சூட்டு 'சுட்ட இறைச்சி' < சூடு, மயக்கும் 'குழப்பம்' <*மயக்கு*. *அச்சு* < *அச்சம்*, *நோ* 'துன்புறுதல்' < *நொ*, *மாறு* 'கருத்துவேறுபாடு', *வீடு* < *விடு* 'விடுதலை. நாம் முன்னர் பார்த்த பின்வரும் பிறழ்வாக்கச் சங்ககாலத் தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கில் உள்ளன:

பாட்டு (தொபெ) 'பாடுதல்' < *பாடு* (வி) (தற்காலத் தமிழில் பாட்டு என்பது பாடும் செயலைக் குறிப்பிடாமல் பாடுதலின் விளைவான பாட்டை குறித்து நிற்கின்றது.)

மாற்று (தொபெ)< *மாற்று* (வி). சங்ககாலத் தமிழில் *மாற்று* என்பது 'மாற்றம், சிகிச்சை, தீர்வு' என்ற பொருட்களில் பயன்படுத்தப் படுகின்றது. அவ்வாறே தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றது எனக் கூற இயலாது.

பெருக்கு (தொபெ) 'வெள்ளப் பெருக்கு' < *பெருகு* (வி)

விளையாட்டு < *விளையாடு* (வி)

பின்னொட்டாக்கம்

சங்காலத்தில் காணப்படுவது போன்று வெற்றுப்பகுதி + தொற்பெயராக்கப் பின்னொட்டு, பிறழ்வுற்ற பகுதி + பிறழ்வுற்ற பகுதி + தொழிற்பெயராக்கப் பின்னொட்டு என்ற இருவித ஆக்கமுறைகளிலும் தற்காலத் தமிழிலும் தொழிற்பெயராக்கங்கள் உள்ளன.

பிறழ்வுற்ற பகுதி + *அம்* என்ற ஆக்கநெறியைப் பயன்படுத்திச் சங்ககாலத்தில் தொழிற்பெயர்கள் உருவாக்கபடுவது போன்று தற்காலத் தமிழிலும் இந்நெறிமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட தொழிற்பெயர்கள் காணப்படுகின்றன.

எ.கா.

தோற்றம் (*தோற்ற்+அம்*); *தோற்ற்* என்பது தோன்று என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

வாட்டம் (*வாட்ட்+அம்*); *வாட்ட்* என்பது *வாடு* என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

முத்தம் (*முத்த்+அம்*); *முத்த்* என்பது *முத்து* என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

இறக்கம் (இறக்க்+அம்); இறக்க் என்பது இறங்கு என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

ஏற்றம் (*ஏற்ற்+அம்*); *ஏற்ற்* என்பது *ஏறு* என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

வணக்கம் (வணங்க்+அம்); வணக்க் என்பது வணங்கு என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

கூச்சம் (*கூச்ச்+அம்*); *கூச்ச்* என்பது *கூசு* என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

நாணம் (*நாண்+அம்*); *நாண்* என்பது *நாணு* என்பதன் பிறழ்வுற்ற பகுதியாகும்.

இவ்வாக்கமுறையில் உருவாக்கப்பட்டு சங்ககாலத்தமிழில் பயன்பாட்டில் உள்ள பின்வரும் தொழிற்பெயர் ஆக்கங்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை:

ஓச்சம் ‘எழுச்சி’ < *ஓச்ச்*(உ) +*அம்*; ஓச்ச் என்பது *ஓசு* ‘எழு’ என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

உயக்கம் ‘வாட்டம்’ < *உயக்க்*(உ)+ *அம்*; *உயக்க்* என்பது *உயங்கு* என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

வெற்றம் ‘வெற்றி’ < *வெற்ற்* + *அம்*; *வெற்ற்* என்பது *வெல்* என்ற வினையின் பிறழ்வுற்ற பகுதியாகும்.

வெற்று வினைப்பகுதி + உடன்படுதி + *அர்* என்ற ஆக்கநெறியைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்டு சங்ககாலத்தில் பயன்பாட்டிலுள்ள பின்வரும் தொழிற்பெயர் தற்காலத் தமிழில் பயன்பாட்டில் இல்லை.

வெவர் ‘வெப்பம்’ < வெ+வ்வ்+அர்

வெற்றுப் பகுதி/ஆக்கப்பட்ட பகுதி/பிறழ்வுற்ற பகுதி + *அல்* என்ற ஆக்கநெறியைப் பயன்படுத்திச் சங்ககாலத்தில் தொழிற்பெயர்கள் உருவாக்கபடுவது போன்று தற்காலத்

தமிழிலும் இந்நெறிமுறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட தொழிற்பெயர்கள் காணப்படுகின்றன. சங்ககாலத் தமிழில் காணப்படும் பின்வரும் தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றன:

கெடல், ஒழுகல், உணக்கல்,போக்கல், அகற்றல்

இருப்பினும் சங்ககாலத் தமிழில் காணப்படும் பின்வரும் தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை:

மறுகல் 'சுற்றல்' < *மறுகு* 'சுற்று'+அல்

அரியல் 'காய்ச்சப்பட்ட கள்' <*அரி* 'காய்ச்சு' +அல்

வெற்றுப் பகுதி + *ஆல்* என்ற ஆக்கநெறிமுறையப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது தற்காலத் தமிழில் இல்லை. இவ்வாக்க முறையில் சங்காலத்தில் பயன்பாட்டில் உள்ள பின்வரும் தொழிற்பெயர் சங்ககாலத் தமிழில் வழக்கில் இல்லை:

கொள்ளால் 'பெறுதல்/பிடித்தல்' < கொள் 'பெறு' + ஆல்

வெற்றுப் பகுதி + உ என்ற ஆக்கநெறிமுறையப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது தற்காலத் தமிழில் இல்லை. இவ்வாக்க முறையில் சங்காலத்தில் பயன்பாட்டில் உள்ள பின்வரும் தொழிற்பெயர் சங்க்காலத் தமிழில் வழக்கில் இல்லை:

குளூஉ 'குழு/கூட்டம் < குழு 'குழுமு)+உ

சங்ககாலத் தமிழில் வெற்றுப் பகுதி + (உடன்படுத்தி) + *உள்* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழில் இல்லை. இவ்வாக்க முறையில் சங்காலத்தில் பயன்பாட்டில் உள்ள பின்வரும் தொழிற்பெயர் சங்ககாலத் தமிழில் வழக்கில் இல்லை:

விளையுள் ‘விளைந்தது’ < *விளை+ய்+உள்*

சங்ககாலத் தமிழில் வெற்றுப் பகுதி + *ஐ* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழில் காணப்படுகின்றது (எ.கா. உடை < *உடு+ஐ*, *விலை* <*வில்+ஐ*, *கொலை* <*கொல்+ஐ*). இவ்வாக்க முறையில் சங்ககாலத்தில் பயன்பாட்டில் உள்ள பின்வரும் தொழிற்பெயர் சங்ககாலத் தமிழில் வழக்கிலும் உள்ளது: *நடை* ‘நகர்வது, *நடப்பது’* < *நட* + *ஐ*.

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *க்கல்* என்ற ஆக்கநெறி முறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழில் காணப்படுகின்றது: *கொடுக்கல்* < *கொடு+க்கல்*). இருப்பினும் பின்வரும் தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை:

மோக்கல் ‘முகர்தல்’ < *மோ* ‘முகர்’ + *க்கல்*

நிறைக்கல் ‘நிறைவேற்றுவது’ < *நிறை* + *க்கல்*

வெற்றுப்பகுதி/பிறழ்வுற்றபகுதி + (*இ*) + (*க்*)கு என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது தற்காலத் தமிழில் காணப்படுகின்றது: இருப்பினும் பின்வரும் தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை:

செருக்கு ‘பெருமிதம்’ < *செரு* ‘பெருமிதப்படு’ +*க்கு*

மெல்கு ‘மெல்லப்பட்டது < *மெல்* ‘சவை’ +கு

வெற்றுப்பகுதி + (*க்*)*கை* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது தற்காலத் தமிழில் காணப்படுகின்றது:

படுக்கை <படு + க்கை

இருக்கை 'இருத்தல்' <*இரு* +*க்கை* (தற்காலத் தமிழில் *இருக்கை* என்பது இருக்கும் நாற்காலி, பெஞ்சு இவற்றைக் குறிக்கும்')

காரிகை 'கறுப்பாக இருத்தல்' < *கார்* 'கறுப்பு' (*கறு* (வி)+*இ*+*கை*)

இருப்பினும் பின்வரும் தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை:

தீர்கை 'நீங்குதல்' < *தீர்* 'முடி, நீங்கு' + கை

உண்டிகை 'குவியல்' < *உண்டை*+*கை*; *உண்டை* < *உருண்டை* < *உருள்* + *தை*

சாரிகை 'நகர்தல்' < *சார்* + *இ* +*கை*

(க்)கை ஒரு விளைவாக்கமுள்ள தொழிற்பெயராக தற்காலத் தமிழில் 'வினை செய்யும் போது' என்ற பொருளில் இல் வேற்றுமை ஒட்டு ஏற்றுவரும்.

எ.கா. *தூங்குகை-யில்* 'தூங்கும் போது', *வருகை-யில்* 'வரும்போது', *இருக்கை-யில்* ' இருக்கும் போது', *படுக்கை-யில்* 'படுக்கும் போது'

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + (*சி*)*சி* என்ற ஆக்கநெறிமுறையப் பயன்படுத்தி செய்யப்பட்ட தொழிற்பெயர்கள் போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது:

சூழ்சி 'திட்டம்/கருத்து' < *சூழ்* 'திட்டமிடு'+ *ச்சி*

காட்சி <*காண்* +*சி*

தற்காலத் தமிழில் இத்தகைய தொழிற்பெயர்கள் பல பயன்பாடில் உள்ளன: *வீழ்ச்சி* < வீழ்+ச்சி, *தேர்ச்சி* < *தேர்*+*ச்சி*, *புகழ்ச்சி* <*புகழ்* +*ச்சி*, *புரட்சி* < *புரள்*+*சி*, *வரட்சி* <*வரள்* +*சி*.

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி +*ச்சு* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது தற்காலத் தமிழில் காணப்படுகின்றது: *முடிச்சு* < *முடி*+*ச்சு*, (*பால்*) *காய்ச்சு* > *காய்*+*ச்சு*. இருப்பினும் சங்ககாலத் தமிழில் காணப்படும் பின்வருவன

போன்ற தொழிற் பெயர்கள் தற்காலத் தமிழில் இல்லை: *வழைச்சு* 'வழுவழுப்பு' < *வழு* (வி) 'வழவழப்பாக மாறு'.

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *த்தல்* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது. இவ்வாக்கம் தற்காலத் தமிழில் விளைவாக்க முள்ள ஆக்கமாகும் (productive formation). சங்ககாலத் தமிழில் காணப்படும் இவ்வாக்க நெறிமுறையால் உருவாக்கப்படும் பின்வரும் தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழிலும்காணப்படுகின்றன: *இறத்தல்* 'கடத்தல்' < *இற* 'கட' +*த்தல்*; தற்காலத் தமிழில் *இற* என்பது 'மாள்' என்ற பொருளிலும் இறத்தல் என்பது 'மாள்தல்' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றது.

அறிதல் < *அறி* + *தல்*

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *தி* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

செய்தி < *செய்*+*தி*

அமைதி < அமை+*தி*

வெற்றி < *வெல்*+*தி*

இருப்பினும் பின்வருவன போன்ற தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் இல்லை:

கொண்டி 'கொள்ளையடித்தல்' < *கொள்* + *தி*

வென்றி < *வெல்* + *தி*

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி/பிறழ்வுற்றபகுதி/ஆக்கப்பட்ட பகுதி + *தை* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

கவிதை < கவி + தை

முடந்தை <முடம் + தை < முட'வளைந்திரு' +அம்+தை

மடந்தை <மடம் + தை <மட 'மடமாயிரு + *அம் +தை* (தற்காலத் தமிழில் *மடந்தை* என்ற தொழிற்பெயர் வழக்கில் இருந்தாலும் *மட* என்ற வினை வழக்கில் இல்லை.)

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி/பிறழ்வுற்றபகுதி + *பாடு* என்ற ஆக்கநெறிமுறையப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

தட்டுப்பாடு 'குறைபாடு' < *தட்டு +பாடு*

குறைபாடு < குறை +பாடு

இருப்பினும் பின்வருவன போன்ற தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் இல்லை:

முட்டுப்பாடு 'தடை' < *முட்டு* 'மோது, *தட்டு'* +பாடு

வளப்பாடு 'செழிப்பு' < *வளம்* + *பாடு*

இலம்பாடு < இலம் +பாடு; இலம்பாடு < இல் 'இல்லாதிரு' +அம் +பாடு

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *(ப்)பு* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

மறுப்பு <மறு +ப்பு

கறுப்பு < கறு+ப்பு

வெளுப்பு < *வெளு+ப்பு*

துடிப்பு < *துடி* + *ப்பு*

இருப்பினும் பின்வருவன போன்ற தொழிற்பெயர்கள் தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை.

மறப்பு < மற + ப்பு

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *மை* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

கறுமை <கறு + மை

பொறுமை < பொறு+மை

சிறுமை < சிறு+மை

இருப்பினும் பின்வருவது போன்ற தொழிபெயர்கள் தற்காலத் தமிழில் இல்லை.

அடுமை < *அடு* '*சமை*'+*மை*

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *வி* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

கேள்வி < கேள்+வி

பிறவி < பிற+வி

துறவி < துற+வி

வேள்வி 'விருப்பம்' <வேள் 'விரும்பு' + வி (தற்காலத் தமிழில் வேள்வி என்ற தொழிற்பெயர் வழக்கில் இருந்தாலும் வேள் என்ற வினை வழக்கில் இல்லை.

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *வ்* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

எ.கா.

விரைவு < விரை+வு

வரவு < வரு+வு

செலவு < செல்+வு

குறைவு < குறை +வு

இருப்பினும் பின்வருவது போன்ற தொழிபெயர்கள் தற்காலத் தமிழில் இல்லை.

களைவு < களை + வு

சங்ககாலத் தமிழில் வெற்றுப்பகுதி + *வை* என்ற ஆக்கநெறிமுறையைப் பயன்படுத்தி தொழிற்பெயராக்கம் செய்வது போன்று தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

நீட்சி

சங்ககாலத் தமிழின் தொழிற் பெயராக்கத்தில் நீட்சி என்பதை இறந்தகால அஃறிணை வினைமுற்று வடிவைப் பயன்படுத்துவதைக் குறிப்பிடவோ இறந்தகால/முற்றுப் பெயரெச்சத்தில் *து, தல்*, அல்லது *மை*-ஐ சேர்பதைக் குறிப்படவோ பயன்படுத்தப்பட்டது. இத்தகைய சாத்தியம் தற்காலத் தமிழிலும் இருக்கின்றது. தற்காலத் தமிழிலும் இறந்தகால அஃறிணை வினைமுற்று வடிவுத் தொழிற்பெயராகப் பயன்படுத்தப்படுகின்றது. சங்ககாலத் தமிழில் கண்ட இத்தொழிற்பெயராக்கம் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

இறந்தகால/முற்றுப் பகுதி + அது அல்லது இறந்தகாலப் பெயரெச்சம் +து என்ற சங்ககாலத்தமிழ் தொழிற்பெயராக்கம் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

நின்றது < நில்(வி)+ற் (இகாபிஒ)+அது (அ.ஒ.)/ நில் + ற் + அ (பெ.எ.ஒ)+து (அ.ஒ)

இறந்தகால/முற்றுப் பகுதி + அதை அல்லது இறந்தகாலப் பெயரெச்சம் +தை என்ற சங்கத்தமிழ் தொழிற்பெயராக்கம் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

நெகிழ்ந்ததை < நெகிழ் (வி)+நித் (இகாபிஒ) + அதை / நெகிழ் (வி)+நித் (இகாபிஒ) + அ (பெ.எ.பிஒ) + தை

இருப்பினும் சங்ககாலத்தில் காணப்படும் பின்வரும் தொழிற்பெயர் தற்காலத்தமிழில் இல்லை.

அடிபடுத்ததை < அடி +படுத்ததை

இறந்தகாலப் பெயரெச்சம் +மை என்ற சங்ககாலத் தமிழ் தொழிற்பெயராக்கம் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

பிழைத்தமை ‘தவறுசெய்தது’ < பிழை (வி)+ த்த் (இகாபிஒ) + அ (பெ.எ.பிஒ) +மை

சொற்புறமை

இறந்தகாலப்/முற்றுப் பகுதி + அன்/இன்+து+உம்/ஓ என்று சங்ககாலத் தமிழில் பயன்படுத்தபடும் தொழிற்பெயராக்கம் தற்காலத் தமிழில் இல்லை.

செய்தன்றோ < செய்தன்று ‘செய்தது’ < செய்த் +அன்+து + ஓ

இகந்தன்றும் < இகந்தன்று < இகந்த் + அன் + து + உம்

தீர்ந்தன்றும் < தீர்ந்தன்று < தீர்ந்த் +அன் + து + உம்

5.4.10.2.2. இறந்தகாலமல்லாத் தொழிற்பெயர்களின் வரலாற்று மாற்றம்

இறந்தகாலமல்லாப்/முற்றல்லாப் பகுதி + அது என்ற சங்ககாலத் தமிழ் தொழிற்பெயராக்கம் தற்காலத் தமிழிலும் காணப்படுகின்றது.

கிழிப்பது < கிழிப்ப் + அது

காண்பது < காண்ப்+அது

வருவது < வருவ்+அது

உரிவது <உரிவ்+அது

முடிவது < முடிவ்+அது

முகிழ்ப்பது < முகிழ்ப் +அது

இறந்தகாலமல்லாப்/முற்றல்லாப் பகுதி + *அதை* என்ற சங்ககாலத் தமிழ் தொழிற்பெயர் ஆக்கம் தற்காலத்தமிழில் இல்லை.

வருவதை < வருவ் +அதை

5.4.10.2.3. எதிர்மறைத் தொழிற்பெயர்களின் வரலாற்று மாற்றம்

வெற்றுவினைப் பகுதி + ஆ+ *மை* என்ற சங்ககாலத் தமிழ் தொழிற்பெயர் ஆக்கம் தற்காலத்தமிழிலும் காணப்படுகிற விளைவாக்கமான தொழிற்பெயராக்கமாகும்.

பொறாமை < பொறு + ஆமை

இயலாமை < இயல் +ஆமை

வராமை < வரு + ஆமை

தீண்டாமை < தீண்டு + ஆமை

பின்வரும் சங்ககாலத் தமிழின் எடுத்துக்காட்டைத் தற்காலத் தமிழிலும் காணலாம்.

நல்காமை < நல்க்(உ) +ஆமை; நல்கு (வி)

பின்வரும் சங்காலத் தமிழ் எடுத்துக்காட்டு தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை.

வரையாமை 'தெரிந்தெடுக்காமை' < வரை + ஆ + மை

வரை என்ற வினை தற்காலத் தமிழில் வழக்கிழந்த்தன் காரணமாக இத்தொழிற்பெயர் தற்காலத் தமிழின் வழக்கில் இல்லை.

எதிர்மறை வினை அல்/இல்+ மை என்ற சங்ககாலத் தமிழ் தொழிற்பெயர் ஆக்கம் தற்காலத்தமிழிலும் காணப்படுகிறது.

இன்மை <இல் +மை

பின்வரும் தொழிற்பெயர் தற்காலத் தமிழில் வழக்கிழந்து விட்டது.

அன்மை < அல் + மை

5.5. முடிவுரை

இவ்வியலில் சங்ககாலத் தமிழில் காணப்படும் ஐந்து நெறிமுறைகளும் தற்காலத் தமிழிலும் பயன்படுத்தப்படுவது ஆயப்பட்டது. இந்நெறிமுறைகளில் ஏற்பட்டுள்ள வரலாற்று மொழியியல் மாற்றங்கள் குறித்து ஆயப்பட்டது. பெயர்சொற்களின் உருபனியல் அமைப்பைப் புரிந்துகொள்ள பெயர்தொடர்பான சங்ககால உருபொலியனியல் விதிகளை ஆய்ந்து அதைத் தற்காலத் தமிழின் பெயர்தொடர்பான உருபனியல் விதிகளுடன் ஒப்பிட்டு மாற்றங்கள் விளக்கப்பட்டன. பெயர்களில் வேறுபட்ட பகுதிகளைப் பட்டியலிடப்பட்டு அவற்றில் நிகழ்ந்த வரலாற்று மாற்றங்கள் விளக்கப்பட்டன. சங்ககால மாற்றுப் பெயர்கள் தற்காலத் தமிழ் மாற்றுப் பெயர்களுடன் ஒப்பிடப்பட்டு வரலாற்று மாற்றங்கள் விளக்கப்பட்டது. சங்க்காலத் திரிபுப் பகுதிகள் தற்காலத் தமிழின் திரிபுப் பகுதிகளுடன் ஒப்பிடப்பட்டு வரலாற்று மொழியியல் மாற்றங்கள் விளக்கப்பட்ட்து. தற்காலத்தமிழ் பெயர்களின் பன்மைத் திரிபு சங்ககாலப்

பெயர்கள் பன்மைக்காக திரிபுறுவதிலிருந்து வரலாற்று மொழியியல் அடிப்படையில் எவ்வாறு வேறுபடுகின்றது என்று விளக்கப்பட்டது. பெயர்கள் சங்ககாலத் தமிழிலும் தற்காலத் தமிழிலும் வேற்றுமைக்காகத் திரிபுறுவதும் பின்னுருபுகள் ஏற்பதும் விளக்கப்பட்டு வரலாற்று அடிப்படையிலான மாற்றங்கள் ஆயப்படன. கூட்டுப்பெயர்களின் ஆக்கம் சங்ககாலத்திலும் தற்காலத் தமிழிலும் காணப்படுவது விளக்கப்பட்டது. சங்ககாலத் தமிழ் பெயரடைப் பெயர்களின் ஆக்கம் விளக்கப்பட்டு அதனுடன் தற்காலத் தமிழின் பெயரடைப் பெயர்களின் ஆக்கம் ஒப்பிடப்பட்டு வரலாற்று மொழியியல் மாற்றங்கள் விளக்கப்பட்டன. சங்ககாலத் தமிழில் வினையாலணையும் பெயர்களின் ஆக்கம் விளக்கப்பட்டு அதனுடன் தற்காலத் தமிழின் வினையாலணையும் பெயர்களின் ஆக்கம் ஒப்பிடப்பட்டு வரலாற்று மொழியியல் மாற்றங்கள் விளக்கப்பட்டது. சங்ககாலத் தமிழின் தொழிற்பெயராக்கம் விரிவாக ஆயப்பட்டு அதனுடன் தற்காலத் தமிழின் தொழிற்பெயராக்கம் ஒப்பிடப்பட்டு வரலற்று மொழியியல் மாற்றங்கள் விளக்கப்பட்டன.

இயல் 6

முடிவுரை

முன்னுரையில் கூறியது போன்று இவ்வாய்வு தமிழ்த் தரவுகளைப் பழந்தமிழ் தரவு, இடைக்காலத் தமிழ் தரவு, தற்காலத் தமிழ் தரவு என்று காலவாரியாகப் பகுத்துக்கொண்டு வரலாற்று அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைத் தர முயலவில்லை. சங்ககாலத் தமிழ்த் தரவை வைத்துக் கொண்டு பெயர்ச் சொற்களின் திரிபையும் ஆக்கத்தையும் ஆய்ந்து பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பை அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழ் தரவு அடிப்படையில் பெறப்பட்ட பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்புடன் ஒப்பிட்டு மாற்றங்களையும் இழப்புகளையும் புதுமைகளையும் வெளிக்கொணரும் அடிப்படையில் தான் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்ப் பெயர்சொற்களின் வரலாற்று மொழியியல் ஆய்வுக்கு உறுதுணையாக முந்தைய இயல்களில் "தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள்", "மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள்", "தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய விளக்கமொழியல் ஆய்வு" என்ற தலைப்புகளில் பெயர்ச்சொற்கள் ஆயப்பட்டன.

'திராவிடப் பெயர்கள்' என்ற தலைப்பில் சண்முகம் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல். அவர் தமிழ்ப் பெயர்கள் மனிதவினப் பெயர்கள், மனிதரல்லாத இனப்பெயர்கள் எனவும் மனிவினப் பெயர்கள் ஒருமைப்பெயர்கள் பன்மைப் பெயர்கள் எனவும் பகுக்கப்படுவதையும் பன்மைப் பெயர்கள் உயர்வுப் பன்மைப் பெயர்களாக உருப்படுத்தம் பெறுவதையும் மனிதரல்லாவினப் பெயர்கள் ஒருமைப் பெயர்கள், பன்மைப் பெயர்கள் எனப் பகுக்கப்படுவதையும் மனிதரல்லாவின ஒருமைப் பெயர்கள் அஃறிணைப்

பெயர்களாகவும் மனிதரல்லாவினப் பன்மைப் பெயர்கள் அஃறிணைப் பன்மைப் பெயர்களாகவும் உருப்படுத்தம் பெறுவதையும் விளக்குகின்றார்.

மேலும் ஆண்பால் ஒருமைப் பின்னொட்டுக்களாக அன், ஆன், வன், நன், ஞன், இயன், ஓன், அனன், அவன், த்தன் என்ற பதினொன்று பின்னொட்டுக்களைப் பட்டியலிட்டு சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றார். இது போன்று அள், இ, த்தி, ச்சி, வி, மி, ஆள், ஓள்,ஆத்தி, ஆட்டி, அனி என்ற பதினொன்று பின்னொட்டுகளைப் பெண்பாலை உணர்த்தும் பின்னொடுட்களாகப் பட்டியலிட்டு சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றார். மேலும் அர், இர், வர், ஞர், அவர், இயர், ஆர், ஓர், மார், அனர், கள் என்ற பின்னொட்டுகளை உயர்திணைப் பன்மைப் பின்னொட்டுகளாகப் பட்டியலிட்டு சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றார். மேலும் தமிழ் மொழியில் மாற்றுப் பெயர்கள், சாரியை, வேற்றுமை பற்றியும் தகவல்கள் தருகின்றார்.

கமலேஸ்வரன் அவர்களின் "தமிழில் பெயர்கள்" என்ற தலைப்பில் கால அடிப்படையில் தமிழில் பெயர்ச்சொற்களின் ஆக்கத்தை ஆய்கின்றார். வரலாற்று காலத்தைச் சங்ககாலம், பின் சங்ககாலம் எனப் பிரித்துக்கொண்டு வரலாறு விளக்கம் தருகின்றார். இவர் சங்க இலக்கியங்களிலிருந்து தற்காலத் தமிழ் நூல்கள் மாற்றும் கிளை மொழிகல் வரையிலான தரவுகளின் அடிப்படையில் தமிழ்ப் பெயர்களின் ஆக்கத்தை ஆய்ந்து விரிவான விளக்கம் தருகின்றார். பெயர்சொல்லாக்கத்தை பூஜிய மாற்றம், அகமாற்றம், பின்னொட்டாக்கம் என மூன்றாகப் பகுத்துக்கொண்டு சங்க இலக்கியத் தரவுகளில் இருந்தும் தற்காலத் தமிழ் (பின் சங்ககாலத் தமிழ்) தரவுகளில் இருந்தும் எடுத்துக்காட்டுகள் தந்து பெயர்ச் சொல் ஆக்கங்களையும் வரலாற்று மாற்றங்களையும்

விளக்குகின்றார். இவர் வினையிலிருந்தான பெயராக்கம், பெயரிலிருந்தான பெயராக்கம், பெயரடைகளிலிருந்தான பெயராக்கம் இவற்றின் அடிப்படையில் பெயராக்கத்தை விளக்குகின்றார். வினைகளைப் பொருத்தவரையில் தமிழ் லெக்சிக்கனை பின்பற்றி அதில் தந்துள்ளது போன்று வினைகளை அவை ஏற்கும் காலப் பின்னொட்டுகளின் அடிப்படையில் பன்னிரண்டு வகுப்புகளாகப் பிரித்துக்கொண்டு வினைப்பெயராக்கத்தை விளக்குகின்றார். பின்னொடுப் பெயராக்கதை விளக்குகையில் பின்னொட்டுகளை க்-இல் தொடங்குவன, ச்-இல் தொடங்குவன, ப்-இல் தொடங்குவன, வ்-இல் தொடங்குவன பிற உயிர்கள் மற்றும் மெய்களில் தொடங்குவன எனப் பிரிந்துக் கொண்டு வினையிலிருந்தான பின்னொட்டுப் பெயராக்கத்தை விளக்குகின்றார். பெயரிலிருந்தான பெயராக்கத்தை பால்-எண் பெயர்கள் எனக் குறிப்பிட்டு பெயரடிகளைப் பத்தொன்பது வகுப்புகளாகப் பகுத்துக்கொண்டு அவை ஆண்பால், பெண்பால், பலர்பால் ஒட்டுக்களை ஏற்றுப் பெயராக்கம் செய்வதை விளக்குகின்றார். இறுதில் அவர் தரும் வரலாற்றுக் குறிப்புகள் முக்கியமான தகவகளை நமக்குத் தருகின்றது.

பதினொன்றாம் இயலின் துணையியலான 'வரலாற்றுக் குறிப்புகள்' என்பதில் வரலாற்று பால்-எண் குறித்த வரலாற்று அடிப்படையிலான சில செய்திகளை கமலேஸ்வரன் கூறிச்செல்கிறார். இரண்டாம் இயலில் கூறப்பட்ட இச்செய்திகள் மீண்டும் இங்கு தரப்பட்டுள்ளன:

தமிழில் 16 ஆண்பால் பின்னொட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் *அன், ஆன், ஓன், வன், கன், ஞன்/நன், அலன், ஆளன், இயன், அவன், மான்* என்ற பதினொன்று பின்னொட்டுகள் சங்ககாலத் தமிழில் காணப்படுகின்றன. இதில் ஆண்பால் பின்னொட்டாக *ஆன்* என்பது தான் பொதுவாக அதிகமாக பழந்தமிழில்

காணப்படுகின்றது. *அவ்-அன், மக்-அன், தோள்-அன், சிறு-வ்-அன்* என்பதான் சங்ககாலத்தில் இப்பின்னொட்டின் உருவாக்கத்தின் எடுத்துக்காட்டாகும். *வேந்த்-அன், மன்-ன்-அன், அரச்-அன்* என்பதில் இதன் சேர்ப்பு பிந்தைய உருவாக்கமாகத் தெரிகின்றது; ஏனென்றால் *வேந்து, மன், அரசு* என்பன பின்னொட்டு இல்லாமலேயே பழைய நூல்களின் அதே பொருளின் வருகின்றன. பிற பின்னொட்டுக்களுக்கு வேறுப்பட்ட அளபுகளில் குறைந்த பயன்பாடு இருக்கின்றது. எடுத்துக்காட்டாக கன் என்பது சங்ககாலத்தில் கொண்-கன் என்ற ஒரே சொல்லில் மட்டும் தான் காணப்படுகின்றது. இந்த போக்கு பின் சங்ககாலத்திலும் காணப்படுகின்றது. பின்சங்ககாலத்தில் நான்கு சொற்களில் தாம் கன் என்ற பின்னொட்டு கொண்டுவருகின்றன: *விரிச்சி-கன், பட்டி-கன்* 'திருடன்'. பிற பின்னொட்டுகளில் அவன், ஆளன் என்பவைகள் தாம் சங்ககாலத்தில் கதிர்-அவன், தென்-ன்-அவன் போன்ற சொற்களில் பதடவை வருகின்றன; பின் சங்ககாலத்தில் அதிக அளவில்லான சொற்கள் இப்பின்னொட்டுகளுடன் வருகின்றன. *இளை-ய்-அவன், நம்-ம்-அவன்* என்பன எடுத்துக்காட்டுகளாகும். அலன் என்ற பின்னொட்டு கொண்ட குறைந்த எண்ணிக்கையிலான சொற்கள் (எ.கா. *புர-வ்-அலன்*) தான் சங்ககாலத்தில் வருகின்றன. இந்த குறைந்த எண்ணிக்கையிலான சொற்கள் கூட பின்-சங்ககாலத்தில் காணப்படவில்லை.

ஆன் என்ற பின்னொட்டு பழந்தமிழில் *நீக்-அன்* 'ஊர்தியோட்டி' போன்ற சொற்களிலும் பின் சங்ககாலத்தில் *வண்ண்-ஆன், அத்த்-ஆன், பிர்-ஆன்* என்ற சொற்களில் தனியான பின்னொட்டாக பழங்காலத்திருந்தே பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றினாலும் இது அன் என்ற பின்னொட்டின்

மாற்றுருபாகும். *புல-வ்-அன், புல-வ்-ஓன், கிழ-வ்-அன்/கிழ-வ்-ஓன்* என்ற சொற்கள் ஓன் என்பது பிந்தைய உருவாக்கம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. *க்கன், அகன், ச்சன், காரன், ஆனவன், வாணன்* என்பன பின் சங்ககாலத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

கிட்டத்தட்ட 18 பின்னொட்டுகள் பெண்பாலைச் சாரும். இவற்றில் *இ, த்தி, ஐ, வி, ஆட்டி, அள், ஆள், ஓள், அவள், மாள்* என்பன சங்ககாலத்தில் காணப்படுகின்றன. இவற்றில் இ என்பது மட்டும் தான் பெண்பால் பின்னொட்டாக சுதந்திரமாக இரு காலத்திலும் பயன்படுத்தப்பட்டது. பிற பின்னொட்டுகள் மிகக் குறைந்த பயன்பாடு உள்ளவை. எடுத்துக்காட்டாக *அள்* என்பது *மக்-அள், அவ்-அள்* என்ற குறைந்த எண்ணிகையிலான சொற்களில் தான் பயன்படுத்தப்பட்டது. இது போன்று ஐ என்பது சங்ககாலத்தில் *கொற்ற-வ்-ஐ, பரத்த்-ஐ* என்ற இரு சொற்களில் காணப்படுகின்றது மற்றும் பின் சங்ககாலத்தில் *தொத்த்-ஐ, பொது-வ்-ஐ* என்ற சொற்களில் காணப்படுகின்றது. ஆளன் என்பது போன்று அதற்கு இணையான பெண்பால் பின்னொட்டு இரு காலத்திலும் கருதத்தக்க எண்ணிக்கையிலான சொற்களில் வருகின்றன. *நன்னர்-ஆட்டி* 'நற்குணப்பெண்', *நொதுமல்-ஆட்டி* 'அன்னியமான பெண்' என்பன எடுத்துக்காட்டுகளாகும். *மாள்* என்பது இரு சொற்களில் மட்டும் வருகின்றது: *வேண்-மாள்* 'வெளிர் இனப் பெண்', *கோ-மாள்* 'அரசி'. *அவள்* சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டாலும் அது பின் சங்ககாலத்தில் தான் விளைவாக்கமுள்ள பின்னொட்டாக மாறுகின்றது. எந்த பெண்பால் பெயர்களையும் பெயரடை அடிகளிலிருந்து உருவாக்க இயலும். பின்வருவன இவ்வகையிலான ஆக்கத்தின் எடுத்துக்காட்டுகளாகும்: *பெரி-ய்-அவள்* 'அக்காள்', *சிறி-ய்-அவள்* 'தங்கை'. இவ்வெல்லா

பின்னொட்டுகளும் பின் சங்ககாலத்தில் காணப்படுகின்றன. இவற்றுடன் *அத்தி, ச்சி, அச்சி, இச்சி, த்தை, ஆத்தி, க்கி, அகி, காரி* என்பனவும் பின் சங்ககாலத்தில் பயன்படுத்தப் படுகின்றன. *காரி* தற்காலத் தமிழில் விளைவாக்கம் உள்ளவையாகத் தெரிகின்றது.

பெண்பாலுக்கும் ஆண்பாலுக்கும் தனித்தனியான பன்மைப் பின்னொட்டுகள் இல்லை. இரண்டுக்கும் ஒரே பின்னொட்டுகள் தாம் பயன்படுத்தப்படுகின்றன. *அர், ஆர், ஓர்* என்பன இருகாலத்திலும் காணப்படும் பன்மைப் பின்னொட்டுகளாகும். தற்காலத் தமிழில் *அர்* என்பதற்குப் பதிலாக ஆர்கள் பயன்படுத்தப்படுகின்றது. *அண்ணன்-மார், தாய்-மார், தம்பி-மார்-கள், மனைவி-மார்-கள்* என்ற சொற்கள் மார், மார்கள் என்ற பன்மைப் பின்னொட்டுக்களுடன் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன.

"தமிழில் பெயர்த் தொகை ஆக்கம்" என்ற தமது ஆய்வு நூலில் விஜய வேணுகோபால் அவர் காலத்திய மாற்றிலக்கணக் கோடுபாடுகள் அடிப்படையில் பெயர்த்தொகை ஆக்கங்களை அதாவது கூட்டுப் பெயர்களை ஆய்கின்றார். கூட்டுப் பெயர்களை வாக்கியங்களிலிருந்து மாற்று விதிகளால் ஆக்கப்பட்டவைகளாகக் கொண்டு கூட்டுப் பெயரக்கத்தை விளக்குகின்றார். மேலும் கூட்டுக்களை முதல் அங்கம் செயப்படுபொருளாய் வரும் கூட்டுகள், இரண்டாம் அங்கம் கேண்மைச் செயப்படுபொருளாய் வரும் கூட்டுகள், இரண்டாவது அங்கம் எழுவாயாய் வரும் கூட்டுகள், காலம் இரண்டாவது அங்கமாய் வரும் கூட்டுகள், பிற வகைகள், சமநிலை உள்வட்டக் கூட்டுகள், உவம உருவகப் பெயர்க் கூட்டுகள், மரபுப் பெயர்க் கூட்டுகள், பல்பெயர்க் கூட்டுகள் எனப் பகுத்துக்கொண்டு விளக்கங்கள் தருகின்றார்.

“சொல்லியல்: பெயரியல்” என்ற தலைப்பில் அகத்தியிலிங்கம் தற்காலத் தமிழ்த் தரவுகளின் அடிப்படையில் பெயர்ச் சொற்களின் வருணனை மொழியியல் ஆய்வைத் தருகின்றார்.

அகத்தியலிங்கம் ɵ (பூஜியம்), ன் ஆகியவற்றைத் தன்மை, முன்னிலை பதிலிடு பெயர்களில் ஒருமையைக் குறிப்பிடும் பின்னொட்டுக்களாகக் காட்டுகின்றார்.

நீ + ɵ > நீ

நா + ன் > நான், எ + ன் > என், தா+ன் > தான், உ+ன் > உன்

ங்கள் என்பதை தன்மை, முன்னிலை பதிலிடுபெயர்களில் பன்மையைக் குறிப்பிடும் பின்னொட்டுகளாகக் காட்டுகிறார்.

நீ+ங்கள் > நீங்கள், எ+ங்கள் > எங்கள், உ+ங்கள் > உங்கள், தா+ங்கள் > தாங்கள்,

ம் என்பதை நா, ந என்ற தன்மை ஒருமை அடிகளுடன் இணைக்கப்படும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனக் குறிப்பிடுகின்றார்.

நா+ம் > நாம், ந+ம் > நம்

ங்கள் என்பதை நா, எ என்ற தன்மை ஒருமை அடிகளுடன் இணைக்கப்படும் விலக்கீட்டுத் தன்மையைக் காட்டும் பின்னொட்டாகக் கொள்கின்றார்.

“ஆட்சிச் சொல்லுக்குச் சிறப்புக் குறிப்புடன் தற்காலத் தமிழ்ச் சொல்லாக்கம்” என்ற தலைப்பில் மறைமலை அவர்கள் வருணனை மொழியியல் கோட்பாட்டைப் பயன்படுத்தி ஆட்சிச் சொற்றொகைத் தரவு அடிப்படையில் பெயராக்கத்தை ஆய்கின்றார். இவர் ஒட்டுவழிப் பெயராக்கத்தை முன்னொட்டு வழிச் சொல்லாக்கம் பின்னொட்டுவழிச் சொல்லாக்கம் என்று பிரித்து ஆட்சிசொற்றொகையில் காணப்படும் ஒட்டாக்கங்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குகின்றார். பெயர்கள் இணைந்து பெயராக்கம்

செய்வதை இருபெயர்த் தொகையாக்கம், பல்பெயர்த் தொகைச் சொல்லாக்கம், கூட்டுச் சொல்லாகம் என மூன்று இயல்களில் விளக்குகின்றார். மேலும் ஏனைய சொல்லாக்கங்கள் என்ற தலைப்பில் வினைதரு பெயர்கள், பெருவழக்குப் பெறாத சில சொல்லாக்கங்கள், கடன் நீட்சி, கடன் ஒட்டு அல்லது கடன் கலவை என்ற ஆக்கங்களை விளக்குகின்றார். இது தவிர சொல்லாக்கத்தில் வரும் சிக்கல்களையும் நிலைபேறாக்கம் பற்றியும் சொல்லாக்கமும் மொழிமாற்றமும் என்பது பற்றியும் விளக்கிச் செல்கின்றார். தற்காலத் தமிழில் பெயராக்கம் பற்றி அறிய நல்ல ஒரு ஆய்வேடாக இது அமைகின்றது.

"தமிழில் சொல்லாக்கம்" என்ற தலைப்பில் அமையும் இராசேந்திரன் அவர்களின் நூல் பெயராக்கம் பற்றி விரிவாகக் கூறுகின்றது. இவர் சொல்லாக்கக் கோட்பாடு பற்றி முதல் ஆறு இயல்களில் ஒரு விரிவான விளக்கம் தருகின்றார். அடுத்து ஏழாவது இயலில் தமிழில் சொல் வகைப்பாடுகள் பற்றி விளக்குகின்றார். எட்டாவது இயலில் தமிழில் சொல்லாக்க வகைப்பாடுகள் பற்றி ஆய்கின்றார். தமிழில்சொல்லாகத்தின் பரிமாணம் என்ற தலைப்பில் பெயராக்கம், வினையாக்கம், பெயரடையாக்கம், வினையடையாக்கம் என்பன பற்றி விரிவாக ஆகின்றார். பெயராக்கத்தைப் பெயரிலிருந்து பெயராக்கம், வினையிலிருந்து பெயராக்கம், பெயரடையிலிருந்து பெயராக்கம் என மூன்றாகப் பகுத்து ஆய்கின்றார். பெயர்களிலிருந்தான ஆக்கத்தை பின்னொட்டுப் பெயராக்கம், முன்னொட்டாக்கம், கூட்டாக்கம் என வகைப் படுத்தி விளக்குகின்றார். வினையிலிருந்தான பெயராக்கதை கிளைப்படமாகத் தந்து விளக்கியுள்ளார்.

லட்சுமணன் அவர்களின் சங்க இலக்கியக்கூட்டுச்சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்) என்ற ஆய்வில் கூட்டுச் சொற்களை மரபிலக்கணப் பின்னணியில் விளக்கம் தருகின்றார்.

தமிழ்ப் பெயர்களை வரலாற்று மொழியியல் அடிப்படையில் ஆய்வதற்கு முன் பழந்தமிழ் தரவுகள் அடிப்படையில் எழுத்தப்பட்ட மரபிலக்கணங்கள் தமிழ்ப் பெயர்களைப் பற்றி எத்தகைய விளக்கங்களைத் தருகின்றன என்று அறிந்துகொள்வது மிக இன்றியமையாதது ஆவதன் காரணமாக 'மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்கள்" என்ற தலைப்பில் இவ்வியலில் தொல்காப்பியம், நன்னூல் போன்ற சில முக்கியமான மரபிலக்கணங்களிலும் தொடர்புள்ள உரைகளிலும் தமிழ் பெயர்குறித்து தரப்பட்டுள்ள செய்திகளும் விளக்கங்களும் இங்கு சுருக்கமாகத் தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மரபிலக்கணக்கணங்கள் பெயர்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைப் பொதுப் பெயர் அல்லது விரவுப் பெயர் என மூன்றாக வகைப் படுத்தும். தொல்காப்பியர் உயர்திணைப் பெயர்களை நிலப் பெயர்கள், குழுவின் பெயர்கள், வினைப் பெயர்கள், உடைப் பெயர்கள், பண்புகொள் பெயர்கள், பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர்கள், பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்கள், பல்லோர் குறித்த திணைநிலைப் பெயர்கள், இன்றிவர் என்னும் எண்ணுப் பெயர்கள் என பத்தாகப் பகுப்பார். தொல்காப்பியர் ஆறு ஒருமைச் சுட்டுப் பெயர்களையும் ஆறு பன்மைச் சுட்டுப் பெயர்களையும் முன்று வினாப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களாகப் பட்டியலிட்டு வேறு சிலவற்றையும் இதில் உள்ளடக்குகின்றார். அஃறிணை விரவுப் பெயர்களாக வரும் நிலையும் விளக்கப்பட்டுள்ளது.

பெயர்ச் சொற்கள் மேலும் ஆண்பெயர், பெண்பெயர், ஒன்றன் பெயர், பலவற்றின் பெயர் என நான்கு இயற்பெயர்களாகவும் ஆண் சினைப் பெயர், பெண் சினைப் பெயர், ஒன்றன் சினைப் பெயர், பலவற்றின் சினைப் பெயர் என நான்கு சினைப் பெயர்களாகவும் ஆண் முறைப் பெயர், பெண்முறைப் பெயர் என இரண்டு முறைப்

பெயர்களாகவும் தொல்காப்பியரால் பகுக்கப்படுகின்றன. வினையாலணையும் பெயர்கள் தெரிநிலை வினையாலணையும் பெயர்கள், குறிப்பு வினையாலணையும் பெயர்கள் என அமைகின்றன.

தொகைப் பெயர்களைப் பற்றி மரபிலக்கணங்கள் விரிவாகப் பேசுகின்றன. தொகைகளை வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என ஆறாகப் பகுத்து தொல்காப்பியம் ஆய்கின்றது. உரையாசிரியர்களும் தொகை பற்றி தங்கங்கள் விளக்கங்களை தருகின்றனர். நன்னூல் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரின் உரையைப் பின்பற்றி தொகைகளை விளக்குவதாகத் தெரிகின்றது.

தமிழ் ஒரு திராவிட மொழி. இம்மொழி வினைச்சொல்லை இறுதியாகக் கொண்ட வாக்கியங்களை உடையதாகும். இம்மொழி இலக்கணச் செயற்பாங்குகளை (அதாவது இலக்கணப் பொருண்மைகளை) உருபனியல் நிலையில் வெளிப்படுத்தும் ஒட்டுக்கள் நிறைந்த மொழியாக விளங்குகிறது. இம்மொழி உள்ள ஒவ்வொரு வேர் உருபனும் ஆயிரக்கணக்கான சொற்களின் உருவாக்கத்திற்கு (அதாவது திரிபு மற்றும் ஆக்க வடிவுகளின் உருவாக்கத்திற்கு) அடிப்படையாக அமைகிறது. தமிழ் வாக்கியங்கள் எழுவாய்தொடரையும் வினையையும் கொண்ட அமைப்பாகவோ எழுவாய்த் தொடரையும் செயப்படுபொருள் தொடரையும் வினையும் கொண்ட அமைப்பாகவோ அமையும்.

“தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வு” என்ற நான்காவது இயலில் தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய வரலாற்று மொயியல் ஆய்வுக்கு உறுதுணையாக தற்காலத் தமிழ் தரவுகள் அடிப்படையில் தற்காலத் தமிழின் பெயர்சொல் பற்றி ஒரு

வருணனை மொழியியல் விளக்கம் தரப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழில் பெயர் சொற்களின் இலக்கண அமைப்பைப் அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழில் பெயர்ச் சொற்களின் இலக்கண அமைப்புடன் ஒப்பிட்டு வரலாற்று அடிப்படையிலான மாற்றங்களைப் புரிந்து கொள்ள இயலும் என்ற அடிப்படையில் இவ்வியலின் செய்திகள் அமைகின்றன. பெயர்சொற்களின் உருபனியல் அமைப்பு பற்றிய சுருக்கமான விளக்கம் தரப்பட்டுள்ளது. பெயர்கள் எண்களுக்கும் வேற்றுமைக்கும் திரிபுறுவது குறித்தும் வேற்றுமை ஏற்கும் போது பெயர்ப்பகுதிகள் திரிபுறுவது குறித்தும் விளக்கம் தரப்பட்டுள்ளது. வேற்றுமைக்குத் திரிபுறுவதன் காரணமாக பெயர்ப் பகுதி திரிபுற்ற பகுதி, திரிபுறாப் பகுதி என அமையும். பெயர்ப் பகுதியுடன் பன்மைப் பின்னொட்டு, திரிபு பின்னொட்டு, ஒலிநிரவல் பின்னொட்டு, வேற்றுமைப் பின்னொட்டு என்பன இணைவது குறித்து விளக்கம் தரப்பட்டுள்ளது. இறுதியில் பெயரொட்டுக்கள் தரப்பட்டுள்ளன.

”தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வு” என்ற இவ்வாய்வேட்டின் தலைப்பு அடிப்படையிலான ஐந்தாவது இயலில் சங்கத் தமிழ் நூற்களில் கையாளப்படும் பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பைத் தற்காலத் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் உருபனியல் அமைப்பைப்புடன் ஒப்பிட்டு அவை திரிபு நிலையிலும் ஆக்கநிலையிலும் எவ்வாறு வேறுபட்டு அல்லது மாற்றத்திற்கு உள்ளாகி நிற்கின்றன என்பது பற்றி ஆய்ந்து கண்டறிந்த செய்திகள் தரப்பட்டுள்ளன.

“ஒரு மொழி வாழும் மொழியாக வழக்கு மொழியாகத் திகழவேண்டுமானால் காலத்திற்கேற்பவும் சமுதாயப் பண்பாட்டு மாற்றங்களுக்கு ஏற்பவும் அம்மொழி மாற்றங்களுக்கு உட்படவேண்டும்” என எட்சுலர் (Hertzler, 1965:141) என்னும் சமுதாய மொழியில் வல்லுநர் கூறுவார். ஒரு சமுதாயத்தில் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படும் தலைச் சிறந்த கருவியாகிய மொழி அச்சமுதாயம் அடையும் பல்வேறு மாற்றங்களாலும்

தாக்கமுறுகின்றது; அதன் விளைவாக அம்மொழியில் ஒலியமைப்பிலும் சொல்லமைப்பிலும் தொடரமைப்பிலும் சொற்களின் பொருள் புலப்பாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதை வரலாற்று அடிப்படையிலான மொழி மாற்றம் எனலாம்.

மொழி மாற்றம் ஒரு மொழியில் சில குறிப்பிட்ட காலங்களில் மிக வேகமாக நடைபெறலாம். மொழி வழங்கும் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களும் அச்சமுதாயதைப் பாதிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளும், செயல்களுமே இம்மாற்றங்களுக்குக் காரணமாக விளங்குகின்றன. அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி, தலைச் சிறந்த அறிஞர்கள், இலக்கியப் படைப்பாக்கங்கள், மொழி சீர்திருத்த இயக்கம், சமுதாய அமைப்பு முறையிலான மாற்றங்கள், புதிய கருத்துக்களின் வளர்ச்சி, நாகரிகமாகக் கருதப்படும் மொழிநடை, பிற மொழி பேசும் மக்களுடன் ஏற்படும் தொடர்பு, நாடுவிட்டு நாடு பெயர்தல், உலகச் சுற்றுப் பயணம், காலணியாதிக்கம், வணிகம், தொழில், புறச் சமயங்களின் ஆதிக்கம் அல்லது சமய மாற்றம், பண்பாட்டு மாற்றம் போன்றவை மொழிமாற்றத்திற்குக் காரணமாக விளங்குகின்றன என்கிறார் எர்ட்சிலர். இவற்றுள் அறிவியல்-தொழிநுட்ப காரணிகளைப் பற்றி விளக்குமிடத்து புதிய சொல்லாக்கம், கடன் வாங்கல், பழைய சொற்கள் வழக்கழிதல் ஆகியவற்றால் இவை மொழி மாற்றத்தை ஏற்படுத்துவதாக அவர் விளக்குகின்றார். இது பெயராக்கமாற்றத்திற்கும் பொருந்தும்.

புதிய சொற்களால் ஏற்படும் மாற்றங்களை பின்வருமாறு வகைப்படுதி விளக்கலாம்:

1. ஒலியமைப்பில் மாற்றம்
2. சொல்லமைப்பில் மாற்றம்

3. தொடரமைப்பில் மாற்றம்

4. பொருட்புலபாட்டில் மாற்றம்

ஒலியமைப்பில் மாற்றம்

தற்காலத் தமிழில் பெயர்சொல்லாக்கத்தில் தமிழுக்குப் பொருந்தாத ஒலியனியல் அமைப்பு நீக்கப்பட்டு வருவதை ஒரு வரலாற்று மாற்றமாகக் காணலாம். எடுத்துக்காட்டாக ரயில் நிலையம் என்பது இரயில் நிலையம் எனமாறி பின்னர் புகைவண்டி நிலையம் என மாறிவிட்டதை அறியலாம். பஸ் நிலையம் என்பது பேரூந்து நிலையம் என மாறிவிட்டது. ர், ல் என்ற ஒலியன்களால் அல்லது எழுத்துக்களால் தொடங்கப்படும் சொற்கள் அதற்கு பொருத்தமான தமிழ்ச் சொற்களால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டுள்ளதை உணரலாம்.

சொல்லமைப்பில் மாற்றம்

பெயர்சொற்கள் பல அவற்றின் சொற்றன்மை இழந்து விகுதிகளாக அல்லது பின்னொட்டுட்டுக்களாகவும் முன்னொட்டுகளாகவும் பயன்படுத்தப்படுவதை வரலாற்று அடிப்படையிலான சொல்லாக்கம் சார் மாற்றமாகக் கருதலாம். எடுத்துக்காட்டாக அகம், இயல் என்ற சொற்கள் விகுதிகள்/பின்னொட்டுக்களாக விளைவாக்கமாகப் பயன்படுத்தப்படுவதைத் தற்காலத் தமிழ்த் தரவு நமக்கு வெளிப்படுத்தும்.

பெயர்+அகம்	அச்சகம், அஞ்சலகம், அமைச்சகம், அலுவலகம், ஆய்வகம், உணவகம், காப்பகம், தூதரதகம், நூலகம், மருந்தகம்
பெயர்+இயல்	அமைப்பியல், அரசியல், அழகியல், அளவியல், அறிவியல், இயக்கவியல், உடலியல், உடற்கூற்றியல், உயிரியல், உளவியல், மொழியியல், நடையியல்

பெயர்+ஆள்	பணியாள், பதிலாள், மேலாள்

முன்னொட்டாக்கம் தமிழால் ஏற்றுக்கொள்ளப்படத் தயங்கும் பெயராக்கம் ஆகும். ஆனால் தற்காலத் தமிழ் தரவுகள் முன்னொட்டாக்கத்தை உறுதி செய்கின்றன.

முன்+பெயர்	முன்-ஆய்வு, முன்-இருப்பு, முன்-எச்சரிக்கை, முன்-அறிவிப்பு, முன்-தணிக்கை, முன்-பணம்
பின்+பெயர்	பின்-விளைவு, பின்-ஏற்பு, பின்-துணை,
மேல்+பெயர்	மேல்-வரி, மேல்-ஆள், மேல்-ஆணை, மேற்-பரப்பு,

தொடரமைப்பில் மாற்றம்

பனைமரம் போன்று சிறப்புப் பெயர் + பொதுப் பெயர் என்ற அமைப்பில் புதிய பெயர்கள் உருவாகியுள்ளது தொடரமைப்பில் ஏற்பட்ட மாற்றமாகக் கருதலாம்.

எ.கா. மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி

ஆங்கிலம் போன்று இணைப்புக் கோடுகளைப் பயன்படுத்தி கூட்டுக்களை ஆக்கும் முறை தற்காலத் தமிழ் தரவில் காணப்படுகின்றது.

பொருள் புலப்பாட்டில் மாற்றம்

பழைய சொற்கள் புதுப் பொருள் பெற்று பயன்படுத்தப்படுவதைத் தற்காலத் தமிழ்த் தரவுகளிலிருந்து அறியலாம். காவல் என்பது வரவேற்கப் பட்ட சொல்லாக தொடக்க காலத்தில் அமையவில்லை. ஆனால் வரலாற்று மாற்றத்தால் காவலர் என்பது போலீஸ் என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இது போன்று பணிமனை என்பது ஆங்கிலச் சொல்லான வர்க்ஷாப் என்பதற்கு இணையாக

ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இது போன்று பல எடுத்துக்காட்டுகளைக் காட்ட இயலும்.

நோக்கீட்டு நூல்கள்

சங்க இலக்கிய நூல்கள்

அகநானூறு களிற்றுயானை நிரை. பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1981.

அநானூறு நித்திலக்கோவை. பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1977.

அகநானூறு மணிமிடைப் பவளம். பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1976.

ஐங்குறுநூறு. பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிவு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1961.

கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை. பொ.வெ.சோமசுந்தரனார் *(விளக்கவுரை).* மறுபதிவு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1981.

குறுந்தொகை. உ.வே.சாமிநாதர் *(உரை).* அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர், 1983.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: இளம்பூரணார் உரை (பதிப்பு 1973), சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை,.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: கல்லாடனார் உரை (பதிப்பு 1964*),* சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: சேனாவரையர் உரை (பதிப்பு 1963), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை,.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: தெய்வச்சிலையார் உரை (பதிப்பு 1974), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: நச்சினார்க்கினியர் உரை (பதிப்பு 1973), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

நற்றிணை நானூறு மூலமும் உரையும். பின்னத்தூர் சு. நாராயணசாமி ஐயர் (உரை), பொ.வெ.சோமசுந்தரனார் (ஆய்வுரை). மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1981.

நன்னூல்: காண்டிகை உரை. ஆறுமுக நாவலர் (உரை). சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1951.

பத்துப்பாட்டு நச்சினார்கினியர். உ.வே.சாமிநாதையர் (குறிப்புரை). நிழற்படப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

பதிற்றுப்பத்து மூலமும் உரையும். ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரை), மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1973.

பரிபாடல் மூலமும் உரையும். பொ.வெ.சோமசுந்தரனார் (உரை). மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1973.

புறநானூறு மூலமும் உரையும். உ.வே.சாமிநாதையர் (உரை), உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1971.

புறநானூறு (1-200). ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (விளக்கவுரை), மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1973.

புறநானூறு (201-400). ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (விளக்கவுரை), மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1972.

பிற நோக்கீடுகள்

அகத்தியலிங்கம், ச. சொல்லியல்:பெயரியல், அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

ஆட்சிச் சொல்லகராதி. தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்நாடு அரசு.

இராசேந்திரன், ச. 1989. தமிழில் சொல்லாக்கம். மொழியியல். 13: 1-4, 14: 1-4, 163-192.

இராசேந்திரன், ச. 2001. தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

இராசேந்திரன், ச.2004. தமிழில் சொல்லாக்கம். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. க்ரியா, சென்னை 1992.

கலைச்சொல் அகராதி. (கணிதம், பௌதிகவியல், வேதியல், தாவரவியல், விலங்கியல், உளவியல், புவியல், வரலாறு, பொருளாதாரம், அரசியல், வாணிகவியல், புள்ளியல், பொறியியல், தொழில் நுட்பவியல்). சென்னை: தமிழ்நாட்டுப் பாடல்நூல் நிறுவனம்.

கருணாகரன், கி, ஜெயா, வி. 1986. தமிழில் புதுச்சொல்லாக்கம். மொழியியல் 8.3, 4:91-116.

கலைச் சொல் அகராதிகள். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

கோதண்டராமன், பொன். 1972. இலக்கிய உலகில் புதிய பார்வை. தமிழ் நூலகம், சென்னை.

கோதண்டராமன், பொன். 1973. இலக்கண உலகில் புதிய பார்வை. தமிழ் நூலகம், சென்னை.

கோதண்டராமன், பொன். 1979. இலக்கிய உலகில் புதிய பார்வை. தமிழ் நூலகம், சென்னை.

கோதண்டராமன், பொன். சொல்லாக்க நெறிமுறைகள். தமிழ் ஆய்வு 7, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

கோதண்டராமன், பொன். 1989. சொல்வகை அல்லது இலக்கணக்கூறுகள். தமிழ் இலக்கணக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

சக்திவேல், எஸ்., இராசேந்திரன், எஸ். 1995. சொற்கள்: வாழ்வும் வரலாறும், மணிவாசகம் பிரிண்டர்ஸ், சென்னை.

சண்முகம், செ.வை. 1986. சொல்லாகக் கோட்பாடு-2. அண்ணாமலை நகர்: அனைத்திந்திய மொழியியற் கழகம்.

சுப்பையா, கோ. 1983. வினையடிப் பெயர்கள், மொழியியல், 7.1 & 2:95-111.

சுப்பையா, கோ. 1984. கூட்டுப் பெயர், மொழியியல், 7.1. & 2: 187-191.

பாலசுந்தரம், ச. 2005. இருபதாம் நூற்றாண்டிற்காகன தமிழிலக்கணம் உரைநடை நூல் – சொற்படலம். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

லட்சுமணன், அ. 2009. சங்க இலக்கியக் கூட்டுச் சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்). இராசையா வெளியீடு, சீனிக்குடிக்காடு, திருவாரூர்.

Agesthialingom, S. 1962. Description of language of patiRRuppattu with transliteration, translation and Index. PhD Dissertation, Kerala University.

Agesthialingom, S. 1964. Tamil nouns. Anthropological linguistics, 6.1.7-12.

Agesthialingom, S. and Shanmugam S.V.1970. The language of inscriptions (1250-1350), Annamalai University.

Andronov,M. The standard grammar of Modern and classical Tamil. New Century Book house Private Ltd., Madras.

Ananthakrishna Pillai, A. 1969. Descriptive Grammar of Early Middle Tamil. PhD Thesis, Poona University.

Arden, A.H. 1954. A progressive grammar of common Tamil. Madras.

Aronoff M. 1976. Word Formation in generative grammar, MIT press, Cambridge, MA

Arunachalam, P. History of Tamil Syntax – the period of Tolka:ppiyam and Sangam. PhD Thesis, Annamalai University.

Bach, E and Harms, R.T. (eds.) Universals in Linguistic Theory. Holt, Rinehar & Winston, New York.

Botha, R.P. 1968. The Function of the Lexicon inTransformational Generative Grammar. Mouton, The Hauge.

Burrow,T and Emenearu 1961. A Dravidian Etymological Dictionary (DED), Oxford.

Burrow,T and Emenearu 1968. A Dravidian Etymological Dictionary: Supplement (DEDS), Oxford.

Caldwell, R. 1956. A comparative grammar of the Dravidian or South Indian Family of languages, Madras.

Chomsky, N. 1970. Remarks on nominalization. In: Jacobs R and Rosenbaum P. (eds) Readings in English transformational grammar. Blaisdell, Waltham, MA.

Dhamotharan, A. 1966. The grammar of Tirukkural with transliteration, translations and Index. Kerala University, Trivandrum.

Emenau, M.B. 1966. “Some South Dravidian” noun-formatives, Indian Linguistics, 27, 21-30.

Filmore, C. 1968. “The case for case”. In Bach and Harms (eds) 1-88.

Ganesan Ambedkar, 1998. Strategies in the formation of word-level equivalence with special reference to Tamil Words. CALTS,University of Hyderabad,Hyderabad.

Gopinathan Nair, B. 2003. Comparative Dravidian Noun Morphology, 61-75,

Isrel, M. 1964. “tolil peyar in tolkaapppiyam”, tenmoli.

Kamaleswaran, K.S. 1974. Nouns in Tamil. PhD thesis submitted to Annamalai Universiy, Chidampabarm.

Kamatchnathan, A. Grammatical study of Narrinai with transliteration, translation and Index, PhD Thesis. Kerala University, Trivandrum.

Kamatchi Srinivasan, 1962. The language of Iraiyanar Akpporul urai (linguistics studies), MLitt. Thesis, Annamalai University.

Kothandaraman, P.1972. Studies in Tamil Linguistics, Tamil nuulakam, Madras.

Lees, R.B. 1963. The Grammar of English Nominalization. The Hague: Mouton.

Lehmann, Thomas. 1989. A Grammar of Modern Tamil. Pondicherry: Pondicherry Institute of Linguistics and Culture.

Levi, J.N. 1978. The Syntax and Semantics of Complex Nominals. Academic Press, New York.

Meenakshisundaram, T.P. 1965. A History of Tamil Language. First edition, Linguistic Society of India, Deccan College, Poona.

Maramalai, I.1984. Word-formation in Modern Tamil with special reference to administrative terms. Unpublished PhD Thesis submitted to University of Madras, Madras.

Murugarathnam, T.1966. A morphological study of ancient Tamil with special reference to akana:nu:Ru. Madras University.

Rajam, V.S. 1992. Reference Grammar of Classical Tamil Poetry. American Philosophical Society, Philadephia.

Natarajan, R. Manimeekalai as an epic (with index). PhD Thesis. Annamalai university.

Nithyakalyani, R. The languages of naRRiNai. MLitt thesis, Annamalai University.

Paramasivam, K. 1971. "Verbal Nouns in Literary Tamil." In: V.I.Subramoniam (ed.) Proceedings of the First Conference of Dravidian Linguists. Trivandrum: Dravidian Linguistic Association.

Parameswari, A.The language of TirukkuRaL. Mlitt thesis. Annamalai University.

Pillai, M. S. 1961. "Derivative Nouns in Modern Tamil". Indian Linguistics 22:145-159.

Rajendran, S. 1997. Grammatical formalism and computational analysis of Nominal Compounds in Tamil. South Asian language Review 7.1, 27-46.

Rajendran, 2000. Types of word formation in Tamil. Asher, R.E. & Harris, R. (ed.) Linguisticoliterary, Pilgram Book Pvt. Ltd.323-343.

Rangan, K and Suseela, M. 2003. Compound formation in Tamil. 4-18.

Rajendran, S. 1983. Semantics of Tamil Vocabulary. (UGC sponsored Postdoctoral Research Work in manuscript). Poona: Deccan College Post Graduate and Research Institute.

Rajendran, S. 1997. "Grammatical Formalism and Computational Analysis of Nominal Compounds in Tamil." South Asian Language Review 7.1: 27-46.

Rajendran, S. 1997. "Aspects of Teaching 'IZATIONS' in Tamil." *tamizhiyiyal*, Journal of Tamil Studies 51 & 52:210-227.

Rajendran, S. 2000. "Types of Word Formation in Tamil". In: Asher, R.E. and Harris, R. (eds). Linguisticoliterary, 323-343. Delhi: Pilgrims Books Pvt. Ltd.

Rajendran, S. 2001. Word formation in Tamil. (UGC sponsored Major Project Report in manuscript). Thanjavur: Tamil University.

Rajendran, S. 2001. "Typology of Nominalization in Tamil." Language in India 1:7, www.langugeinindia.com

Rajendran, S. 2003. "Strategies in the Formation of Nouns in Tamil." Language in India 3:7, www.languageininida.com

Rajendran, S. 2004. "Strategies in the Formation of Compound Nouns in Tamil." Language in India 4:7, www.languageinnida.com

Rajendran, S., Arulmozi, S., Ramesh Kumar S and Viswanathan S. 2003. Computational Morphology of Verbal Complex. 376-396. In Ramakrihsna Reddy (ed.) Word-structure in Dravidian, Dravidian University, Kuppam, 2003.

Reibel, David A. 1963. A Grammatical Index to the Compound Nouns of Old English Verse.Ph. D. dissertation, Indiana University.

Sadhasivam, R. 1961. A Study of *ainkuRunuuRu*. MLitt thesis, Madras University.

Shanmugam, S.V. 1968. The language of Tamil inscriptions (1350 to 1700), PhD thesis, Annmalai University.

Shanmugam, S.V. 1969. “Gender-number suffixes in Old Tamil nouns”, All India Oriental Conference, XXV session, Jadavpur.

Shanmugam, S.V. Dravidian Nouns (A Comparative study), Annamalai University. Annamalainagar.

Sanmugam Pillai, M. 1961. “Descriptive nouns in Modern Tamil”, Indian Linguistics, 22, 145-159.

Shastry, M.B. 1965. “Derivative suffixes”, Seminar on Grammatical theories in Kannada, Annamalai University, Annamalainagar.

Subbaiyya, K.V. 1910-11. A Comparative grammar of Dravidian languages: Nouns-gender and nouns and cases, Indian Antiquary vol. 39-40.

Subrahmaniyan, S. 1966. Pre-pallavan Tamil Index. University of Madras.

Subramaniyan, S.V. 1965. Descriptive grammar of cilappatika:ram with Index, Madras.

Subramaniyan, S.V. 1972. Grammar of AkanaanuuRu with Index. University of Kerala, Trivandrum

Subramoniyam, V.I. Index of puRanaa:nu:Ru. Trivandrum.

Sundaram, Rm. 1964. Grammatical study of pattuppa:ttu (with index, text and translations). PhD Thesis, Kerala University, Trivandrum.

Tamil Lexicon. Volumes 1-6 & Supplement, reprint 1982, University of Madras, Madras.

Thinappan, SP. 1964. Language of pazhamozhi. Mlitt Thesis, Annamlai University.

Varadarajan, M. 1966. “Verbal nouns in grammars”, Seminar on Grammatical theories in Annamlai University, Annamalainagar.

Vijavenugopal, G.1979. Nominal Composition in Tamil. Madurai Kamaraj University, Madurai.

Zvelebil, Kamil. 1957. “Verbal nouns in early old Tamil”, Tamil Culture VI, 2, 87-91.

Zvelebil, Kamil, Yu. Gasov, M. Andronov. 1967. Introduction to the Historical Grammar of Tamil language Part I – Preliminary Textual Analysis, USSR Academy of Sciences, Institute of People of Asia, Nauka Publishing house, Central Department of Oriental Literature, Moscow.

Zvelebil, Kamil, Vachek, Jaroslav, 1970. Introduction to the Historical Grammar of Tamil Language, Oriental Institute of America, Publishing House of the Czechoslovak Academy of Sciences, Prague.